1

# உவமைகளின் மூலம் போதித்தல்!

**(மூலநூல் : பக்கங்கள் 17–27)**

கிறிஸ்து, உலகத்திற்கான தமது ஊழியத்தில் எந்த மூலக் கோட்பாட்டைப் பின்பற்றினாரோ அதே மூலக்கோட்பாடுதான், அவர் உவமைகளின்மூலமாகச் செய்த போதனைகளிலும் காணப்படுகிறது. நாம் அவருடைய தெய்வீகக் குணத்தையும் மேன்மையான ஜீவியத்தையும் கண்டுகொள்ளும்படியாக, அவர் நமது இயல்பை எடுத்து நம் மத்தியில் வாசஞ்செய்தார். மானுடத்திலே தெய்வீகம் வெளிப்பட்டது. காணக்கூடிய மானிட உருவத்திலே காணக்கூடாத மகிமை வெளிப்பட்டது. தெரிந்த காரியங்களின்மூலமாக தெரியாத காரியங்களை மக்கள் கற்றுக்கொள்ளத் தக்கதாக பூமிக்கடுத்த காரியங்கள்மூலமாகப் பரலோகக் காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டன. மானிட சாயலிலே தேவன் வெளிப்படுத்தப்பட்டார். கிறிஸ்துவின் போதனையிலும் அவ்வாறே இருந்தது. அதாவது, தெரிந்த காரியங்களின்மூலமாகத் தெரியாத காரியங்கள் விளக்கப்பட்டன. மக்களுக்கு நன்கு பழக்கப்பட்ட பூலோகப் பொருட்களின் மூலமாகத் தெய்வீக சத்தியங்கள் விளக்கப்பட்டன. (1)

**“இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்; ... என் வாயை உவமைகளினால் திறப்பேன்; உலகத்தோற்ற முதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது”** (மத்தேயு 13:34,35) என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. இயற்கையில் காணப்படும் பொருட்கள் ஆவிக்குரிய காரியங்களுக்கு ஊடகங்களாக அமைந்தன. எழுதப்பட்ட வார்த்தைகளின் சத்தியங்களோடு, இயற்கையில் காணப்படும் பொருட்களும் அவரது பிரசங்கத்தைச் செவிமடுத்தவர்களுடைய வாழ்க்கை அனுபவமும் இணைக்கப்பட்டன. இவ்வாறு இயற்கையின் இராஜ்யத்திலிருந்து ஆவிக்குரிய இராஜ்யத்திற்கு வழிகாட்டுவதின்மூலம், கிறிஸ்துவின் உவமைகள் மனிதனை தேவனோடும், பூமியைப் பரலோகத்தோடும் இணைக்கின்ற சத்தியமென்னும் சங்கிலியின் கண்ணிகளாக இருக்கின்றன. (2)

இயற்கையின் பொருட்களிலிருந்து மனிதனுக்கு உபதேசம்பண்ணும்போது, அவர் தமது சொந்தக் கரங்கொண்டு சிருஷ்டித்த படைப்புகளின் மூலமாகப் பேசினார். இத்தகைய இயற்கையின் பொருட்களிலே அவர்தாமே வழங்கிய இயல்புகளும் வல்லமைகளும் இருந்தன. படைக்கப்பட்ட அனைத்தும் தொடக்கமுதலேயுள்ள பூரணத்துவத்தோடு, தேவனுடைய சிந்தையின் ஒரு வெளிப்பாடாகவும் அமைந்திருந்தது. ஏதேன் வீட்டில் வாழ்ந்த ஆதாமிற்கும் ஏவாளிற்கும் இயற்கை தேவனைப்பற்றிய முழு அறிவோடும் தெய்வீகப் போதனையோடும் நிரம்பியிருந்தது; ஞானம் கண்ணிற்கு விருந்தாகயிருந்து, இதயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஏனெனில், தேவனால் படைக்கப்பட்ட பொருட்களின்மூலமாக அவர்கள் அவரோடு உரையாடி மகிழ்ந்தார்கள். உன்னதமானவருடைய பிரமாணத்தை இந்த பரிசுத்த தம்பதிகள் மீறினவுடனே இயற்கையின் முகத்தோற்றத்திலிருந்த தேவனுடைய முகத்தினின்று வெளிப்பட்ட பிரகாசம் விலகிவிட்டது. பாவத்தின்நிமித்தம் பூமி தற்போது பழுதடைந்து மாசுபட்டுள்ளது; எனினும், இந்த கேடடைந்த நிலையிலும், இயற்கை இன்னும் அழகாகவே காட்சியளிக்கிறது. இயற்கையின்மூலமாக தேவன் மனிதனுக்குக் கற்பிக்க விரும்பிய பொருட்பாடங்கள் இன்னும் முற்றிலுமாக அழிக்கப்படவில்லை. நாம் சரியாகப் புரிந்துகொண்டால், இயற்கை தனது சிருஷ்டிகரைக்குறித்து இப்பொழுதும் பேசுகிறது. (3)

கிறிஸ்து மானிட அவதாரத்தில் உலகில் வாழ்ந்தபோது, இயற்கை வெளிப்படுத்தக்கூடிய பாடங்களை மனிதன் நோக்காமல் மறந்திருந்தான். தேவனுடைய படைப்புகளின்மூலம் அவரைப்பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்வதைக் கிட்டதிட்ட மக்கள் கைவிட்டிருந்தனர். மனுக்குலத்தின் பாவம் அவரது படைப்பின் அழகிய தோற்றத்தின்மீது ஒரு பிணச்சீலையைப் போர்த்திவிட்டது. தேவனை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, அவரையே மறைத்துப்போடுகின்ற ஒரு தடை வேலியாக அவரது படைப்புகள் மாறிவிட்டன. “சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள்.” இவ்வாறு அஞ்ஞானிகள் “தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்” (ரோமர் 1:25,21). இஸ்ரவேல் நாட்டிலே, தேவனுடைய போதனைகள் இருந்த இடத்திலே அவைகளுக்குப் பதிலாக மானிடப் போதனைகள் வைக்கப்பட்டன. தன்னை வெளிப்படுத்தும்படியாக தேவன் ஏற்படுத்திய இயற்கையில் காணப்படும் பொருட்களையும், பலிமுறைகளையும், வேத வாக்கியங்களையும் மனிதன் தவறாகப் பயன்படுத்தியதின் விளைவாக, அவைகள் தேவனை மறைக்கும் சாதனங்களாக மாறின. (4)

சத்தியத்தை இருட்டடித்துபோட்ட காரியங்களை அகற்றிப்போட கிறிஸ்து வகைதேடினார். படைக்கப்பட்ட அனைத்தும் பிரதிபலிக்கவேண்டியிருந்த ஆவிக்குரிய மகிமையை பார்வைக்குக் கொண்டுவரும்படி, இயற்கையின்மீது பாவம் விரித்திருந்த திரையை நீக்குவதற்காக அவர் வந்தார். இயற்கை மற்றும் வேதத்தின் போதனைகளை அவருடைய வார்த்தைகள் ஒரு புதிய கண்ணோட்டத்தில் வைத்து, புதிய வெளிப்படுத்துதலாக அமைத்துக் கொடுத்தது. (5)

இயேசு அழகான லீலி மலரைப் பறித்து, அதை அங்குள்ள குழந்தைகள் மற்றும் வாலிபர் கையிலே கொடுத்தார். அவரது பிதாவின் முகப்பிரகாசத்தினின்று ஒளிரும் புத்தம்புது சூரிய ஒளி பிரகாசிப்பது போன்ற அவரது இளமை ததும்பும் முகத்தை அவர்கள் நோக்கிப்பார்க்கும்போது, **"காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; (மிகவும் எளிமையான இயற்கை அழகோடு); அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை"** என்ற பாடத்தைக் கற்றுக்கொடுத்தார். பின்னும் தொடர்ந்து: "அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?" என்று கூறி, ஒரு இனிமையான நம்பிக்கையையும் முக்கியமான ஒரு பாடத்தையும் கற்றுக்கொடுத்தார்.(6)

மலைப்பிரசங்கத்தின்போது இந்த வார்த்தைகள் சிறுவருக்கும் வாலிபருக்கும் மட்டுமல்லாது பிறருக்கும் பேசப்பட்டது. அந்த வார்த்தைகள் பேசப்பட்டிருந்த கூட்டத்துள் கவலைகளினாலும், குழப்பங்களாலும், ஏமாற்றம் மற்றும் துக்கத்தாலும் புண்பட்டிருந்த ஆண்களும் பெண்களும் இருந்தார்கள். பின்னும் இயேசு "ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" என்றார். பின்னர் சூழ்ந்திருந்த திரளான மக்களை நோக்கி, தமது கரங்களை விரித்தவராய்: "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:28–33) என்றார். (7)

காட்டு புஷ்பங்களுக்கும் புல்லிற்கும் தாமே கொடுத்திருந்த செய்தியை கிறிஸ்து இவ்வாறாக விளக்கினர். ஒவ்வொரு லீலி மலரிலும் புல்லிலும் நாம் இந்தப் பாடங்களை வாசித்தறிய வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவரது

வார்த்தைகள் முற்றிலும் நம்பிக்கை நிறைந்தவைகளாக தேவனிடத்தில் உறுதியான நம்பிக்கையை நிலைநாட்டுவதாக இருக்கின்றன. (8)

சத்தியத்தைக்குறித்த கிறிஸ்துவின் பார்வை மிகவும் அகன்றதாயும், அவரது போதனை மிகவும் பரந்து விரிந்ததாயும் இருந்தபடியால், அதை விளக்கிக் கூறுவதற்காக இயற்கையின் ஒவ்வொரு வளர்ச்சிப்படியையும் பயன்படுத்தினார். கண்பார்வையில் நித்தமும் படக்கூடிய காட்சிகள் அனைத்தும் ஆவிக்குரிய சில உண்மைகளோடு இணைக்கப்பட்டிருந்ததால், எஜமானின் உவமைகளால் இயற்கை போர்த்தப்பட்டிருக்கிறது. (9)

தங்களை இரட்சிப்பிற்கேற்ற ஞானமுள்ளவர்களாக்கும்படியான சத்தியங்களை நன்றாகப் பற்றிப்பிடித்துக்கொள்ளத்தக்கதாக, தமது பிரசங்கத்தை செவிமடுத்தவர்களுக்கு இயேசு தமது ஆரம்பகால ஊழியத்தின்போது தெளிவான எளிய வார்த்தைகளில் பேசினார். ஆனாலும், பல இதயங்களில் சத்தியம் வேரூன்றாமல் விரைவில் அகற்றப்பட்டுவிட்டது. எனவே, இயேசு: “அவர்கள் கண்டும் காணதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்துகொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால் அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள்” (மத்தேயு 13:13–15) என்றார். (10)

அறியவேண்டுமென்ற ஆவலை மனிதனில் விழிப்படையச் செய்ய இயேசு வாஞ்சித்தார். அக்கறையற்ற மக்களை எழுப்பி, அவர்களது இதயத்திலே சத்தியத்தைப் பதிக்க வகைதேடினார். உவமைகளின்மூலம் போதனை செய்யும் முறை யூதர்கள் மத்தியில் மாத்திரமல்ல, மற்ற தேசத்தவர் மத்தியிலும் பிரபலமானதாயும், மிகவும் மதிப்பிற்குரியதாயும், கவனத்தை ஈர்க்கக்கூடியதாயும் இருந்தது. அதைவிட ஆற்றல் வாய்ந்த வேறு எந்த பயிற்றுவிக்கும் முறையையும் அவர் பயன்படுத்தியிருக்க முடியாது. அவரைக் கேட்டிருந்தவர்கள் தெய்வீகக் காரியங்களைக்குறித்த அறிவை வாஞ்சித்திருந்தால், அவருடைய வார்த்தைகளை விளங்கியிருப்பார்கள். ஏனெனில், உண்மையாக அறியவேண்டுமென்ற வாஞ்சையுள்ளவர்களுக்கு விளக்கிச்சொல்ல அவர் எப்போதும் விருப்பமுள்ளவராயிருந்தார். (11)

மக்களுக்கு வழங்குவதற்கு கிறிஸ்துவிடம் சத்தியங்கள் இருந்த போதிலும், அவைகளைப் பெற்றுக்கொள்ளவோ விளங்கிக்கொள்ளவோ அவர்கள் ஆயத்தமாக இல்லை. இதினிமித்தமும் அவர் உவமைகளால் அவர்களுக்கு உபதேசித்தார். தன்னுடைய போதனைகளை வாழ்க்கைக் காட்சிகளோடும், அனுபவங்களோடும், இயற்கையோடும், சம்பந்தப்படுத்திப் பேசியதால், அவர் மக்களுடைய கவனத்தை ஈர்த்து, அவர்கள் இருதயங்களைக் கவர்ந்தார். உபதேசத்திற்காக இயேசு பயன்டுத்திய பொருட்களைப் பின்னர்

அவர்கள் பார்த்தபோது, தெய்வீக ஆசிரியர் உபயோகித்த வார்த்தைகள் அவர்கள் ஞாபகத்திற்கு வந்தது. பரிசுத்த ஆவியானவருக்கு திறந்திருந்த மனங்களுக்கு, இரட்சகருடைய உபதேசங்களின் ஆழம் அதிகமதிகமாக வெளிப்பட்டது. மறைபொருட்கள் தெளிவாயின; விளங்குவதற்குக் கடினமான காரியங்களும் இலகுவாயின. (12)

இயேசு ஒவ்வொரு இருதயத்திற்கான வழியையும் காண வகை தேடினார். பலதரப்பட்ட எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துவதின் மூலமாக சத்தியத்தை அதின் பல்வேறுபட்ட வளர்ச்சிப்படிகளில் மக்கள்முன் வைத்ததுமல்லாமல், தம்முடைய பிரசங்கத்தை செவிமடுத்துக்கொண்டிருந்த பலதரப்பட்ட மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்தார். அவர்களது அன்றாட வாழ்க்கையிலே அவர்களைச் சுற்றிலும் காணப்படுகின்ற பொருட்களின் மூலமாக அவர்களது ஆர்வம் தூண்டிவிடப்பட்டது. கூட்டத்தில் அமர்ந்திருந்து மீட்பரின் பேச்சைக் கேட்டவர்களில் எவரும் தாங்கள் அலட்சியம் செய்யப்பட்டதாகவோ, மறக்கப்பட்டுவிட்டதாகவோ நினைக்கமுடியாது. மிகவும் எளிய மக்களும் மிகுந்த பாவத்தில் வாழ்ந்தவர்களும் அவருடைய போதனையில் மென்மையான அனுதாபமிக்க ஒரு குரல் அவர்களிடம் பேசுவதைக் கேட்டார்கள். (13)

கிறிஸ்து உவமைகளால் போதித்ததற்கு மற்றுமொரு காரணம் இருந்தது. அனைத்துக் காரியங்களுக்கும்மேலாக அவருக்கு எதிராக ஏதாவதொரு குற்றம் கண்டுபிடிக்கவேண்டுமென்று வாஞ்சித்திருந்த ஆசாரியர்களும், ரபிமார்களும், வேதபாரகர்களும், மூப்பர்களும், ஏரோதியர்களும், அதிபதிகளும், உலகப் பற்றுள்ளவர்களும், மதவெறி கொண்டவர்களும், பேராசையுள்ள மனிதர்களும் அவரைச் சூழ்ந்திருந்த திரள்கூட்டத்தினரின் மத்தியிலே காணப்பட்டிருந்தனர். அவரை கண்டனம் செய்யும் வார்த்தையை அவருடைய உதடுகளிலிருந்தே பிடித்து, உலகத்தையே தம்பின்னால் இழுத்துச் செல்லும் அவரை என்றைக்குமாக மௌனமாக்கிவிட, அவர்களுடைய ஒற்றர்கள் தினமும் அவரைப் பின்தொடர்ந்தனர். இந்த மனிதர்களின் குணத்தை இரட்சகர் நன்கு அறிந்திருந்தார். சனகரீம் சங்கத்திற்குமுன்பாக அவருடைய காரியத்தை எடுத்துச் செல்லுவதற்கேதுவான எதுவும் இல்லாதவகையில் சத்தியத்தை மக்கள்முன் எடுத்துவைத்தார். சமூகத்தில் உயர்பதவி வகித்தவர்களின் மாய்மாலத்தையும், துன்மார்க்கமான செயல்களையும் அவர் உவமைகளின்மூலம் கண்டித்து, நேரடியாகப் பேசப்பட்டிருந்தால், செவிமறுக்கப்பட்டு, அவருடைய ஊழியத்திற்குத் துரிதமாக ஒரு முடிவைக் கொண்டுவந்திருக்கும் பிளக்கும் தன்மையுள்ள சத்தியத்தை, உருவக மொழியிலே போர்த்தி, மக்களுக்கு எடுத்துரைத்தார். ஒற்றர்களை தவிர்த்த அதே நேரத்தில் உண்மையை மிகவும் தெளிவாக்கியதால் தவறு

வெளிப்பட்டது. இதயத்தில் நேர்மையானவர்கள் அவருடைய உபதேசங்களால் நன்மை பெற்றனர். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட பொருட்களின்மூலமாக, தெய்வீக ஞானமும் எல்லையற்ற தேவ கிருபையும் தெளிவாக்கப்பட்டது. இயற்கையின்மூலமாகவும் வாழ்க்கை அனுபவங்களின்மூலமாகவும் மக்கள் தேவனைக்குறித்து கற்றுக்கொண்டனர். "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை"—ரோமர் 1:20. (14)

இரட்சகர் உவமைகளின்மூலமாகக் கொடுத்திருந்த போதனைகளில் எது உண்மையான "உயர்நிலைக் கல்வி" என்பது காட்டப்பட்டது. கிறிஸ்து விஞ்ஞானத்தின் (அறிவியலின்) ஆழமான உண்மைகளை மனிதருக்கு வெளிப்படுத்திக்காட்டியிருக்கலாம். பல நூற்றாண்டுகளின் உழைப்பையும் ஆராய்ச்சியையும் ஊடுருவக்கூடிய விஞ்ஞான இரகசியங்களை எளிதில் வெளிப்படுத்தியிருக்கலாம். சிந்தனைக்கு உணவளித்து, கடைசிக்கால புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கமளிக்கும் வண்ணம் அறிவியல் வழிமுறைப்படி ஆலோசனை வழங்கியிருக்கலாம்; ஆனால், அவர் அதைச் செய்யவில்லை. உலக மேன்மைக்காகக் கதவுகளைத் திறந்துவைப்பதின்மூலம் ஆவலை பூர்த்திசெய்யவோ அல்லது மனிதனின் பேராவலை திருப்திப்படுத்தவோ அவர் ஒன்றும் கூறவில்லை. தமது அனைத்துப் போதனைகளிலும், கிறிஸ்து மனிதனுடைய மனதை எல்லையற்ற பரம்பொருளாகிய தேவனுடைய மனதோடு தொடர்புகொள்ளச்செய்தார். தேவனைக்குறித்தும், தமது வார்த்தையைக்குறித்தும், தமது கிரியைகளைக்குறித்தும் மனிதர்கள் வெளியிட்டுள்ள கோட்பாடுகளை மக்கள் படிக்கும்படியாக அவர் வழிநடத்தவில்லை. அவரது கிரியைகளிலும், அவரது வார்த்தைகளிலும் அவரது அருட்செயல்களின்மூலமாகவும் வெளிப்படுத்தப்பட்டவைகளிலே அவரை நோக்கிப்பார்க்கும்படியாக மக்களுக்கு கற்றுக்கொடுத்தார். (15)

கருத்தியல்பான கொள்கைகளில் தொடர்புகொள்ளாமல், குணத்தை முன்னேற்றுவிப்பதற்கு அவசியமான காரியங்களிலும், தேவனைக்குறித்து அறியும் திறன் பெருகும்படியாகவும் கிறிஸ்து பேசினார். வாழ்வின் நடத்தை நெறிகளையும் நித்தியத்திற்கான வழிகளையும் நோக்கும்படி கூறினார். (16)

இஸ்ரவேல் மக்களுடைய கல்வியை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதான் நடத்தினார். கற்பனைகளையும் சடங்குகளையுங்குறித்து: "நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும்,

படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப் பேசி, அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக" (உபாகமம் 6:7–9) என்றார். இந்த கட்டளையை எவ்வாறு நிறைவேற்ற முடியும் என்பதை கிறிஸ்து தம்முடைய உபதேசங்களிலே காட்டினார். தேவனுடைய ராஜ்யத்தின் பிரமாணங்களும் கொள்கைகளும், அவைகளின் அழகும் மேன்மையான மதிப்பும் வெளிப்படத்தக்கதாக அதற்கேற்றமுறையில் மக்கள்முன்பாக வைக்கப்படவேண்டும். இஸ்ரவேல் மக்கள் தம்முடைய தனிச்சிறப்பு வாய்ந்த பிரதிநிதிகளாக மாறும்படியாக அவர்களுக்குப் பயிற்சிகொடுக்கையில், குன்றுகளுக்கும், பள்ளத்தாக்கு களுக்கும் மத்தியிலே வாழும்படியான வீடுகளை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களுடைய வீட்டு வாழ்விலும், சமய வழிபாட்டிலும், இயற்கையோடும், தேவனுடைய வார்த்தையோடும் தடங்கலற்ற தொடர்பு ஏற்படச்செய்தார். ஆகவேதான், கிறிஸ்து தன் சீடர்களுடன் ஏரிக்கரைகளிலும், மலையடி வாரங்களிலும், வயல்களிலும், தோட்டங்களிலும் அமர்ந்து பேசி, அவர்கள் இயற்கைக் காட்சிகளைக் காணவும், தாம் கற்பிக்க விரும்பிய பாடங்களை கற்றுக்கொள்ளவும் செய்தார். கிறிஸ்துவை அவர்கள் கற்றுக்கொண்டபோது, அவரது ஊழியத்திலே அவரோடு ஒத்துழைப்பதின்மூலம் தாங்கள் பெற்றுக்கொண்ட அறிவைப் பயன்படுத்தினார்கள். (17)

எனவே, நாமும்கூட படைப்பின் மூலமாக படைத்தவரோடு நம்மை அறிமுகப்படுத்திக்கொள்ளவேண்டும். இயற்கை என்னும் புத்தகம் ஒரு மாபெரும் பாடப் புத்தகமாகும். அதை வேதாகமத்தோடு இணைத்து, தேவனுடைய குணத்தைக்குறித்து மற்றவர்களுக்கு உபதேசம்பண்ணவும், காணாமல்போன ஆட்டை தேவ மந்தையிலே சேர்ப்பதற்கும் வழிநடத்த வேண்டும். தேவனுடைய கிரியைகளை ஆராயும்போது, பரிசுத்த ஆவியானவர் மனதிலே உணர்வைத் தூண்டுகிறார். இந்த உணர்வு தர்க்கசாஸ்திர ரீதியிலும் விவாத அடிப்படையிலும் எழுகின்ற உணர்வல்ல; தேவனை அறிய இயலாதபடி மனம் இருளடையாதபட்சத்தில், அவரைக் காணக்கூடாதபடி கண் மங்காதபட்சத்தில், அவருடைய குரலை கேட்கக்கூடாதபடி காதுகள் செவிடாகாதபட்சத்தில், உள்ளம் ஆழமான பொருளைப்பற்றிப் பிடித்துக்கொள்ளும். எழுதப்பட்ட வார்த்தையின் தனிச்சிறப்பு வாய்ந்த ஆவிக்குரிய சத்தியங்கள் இதயத்தில் உணர்த்தப்படும். (18)

இயற்கையிலிருந்து நேரடியாக கற்றுக்கொள்ளும் இந்தப் பாடங்கள் எளிமையானதாகவும் தூய்மையானதாகவும் இருக்கின்றபடியால் அவைகள்

உயரிய மதிப்புக்கொண்டவை. இயற்கையின் மூலப்பொருள்களிலிருந்து நாம் பெறும் இந்தப் பாடங்கள் அனைவருக்கும் தேவையானதாகும். இயற்கையின் அழகு ஆத்துமாவை பாவத்திலிருந்தும், உலக ஈர்ப்பு களிலிருந்தும் மீட்டு, பரிசுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் தேவனுக்கும் நேராக வழிநடத்தும். பெரும்பாலும் மாணவருடைய மனங்கள் அறிவியல் தத்துவம் என்ற பெயர்களாலும், பொய்யாக அழைக்கப்படும் மனிதரின் கொள்கைகளாலும், எதிர்காலக் கனவுகளாலும் நிறைந்திருக்கிறது. இத்தகையவர்கள் இயற்கையோடு நெருங்கிய தொடர்புகொள்ளத்தக்கதாகக் கொண்டுவரப்படவேண்டியது அவசியம். படைப்பிற்கும், கிறிஸ்தவத்திற்கும், தேவன் ஒருவரே என்பதை அவர்கள் கற்றுக்கொள்ளட்டும். இயற்கைக்கும் ஆன்மீகத்திற்கும் உள்ள ஒற்றுமையை அவர்கள் கற்றுக்கொள்ளச் செய்யவேண்டும். அவர்கள் கண்கள் பார்க்கிற ஒவ்வொரு பொருளும், கைகள் தொடுகிற ஒவ்வொரு பொருளும், குணக்கட்டுமானத்தின் ஒரு பாடமாக ஆக்கப்படவேண்டும். அவ்வாறு செய்யப்படும்போது, மனதின் சக்திகளும், குணமும் மேம்பாடடையும், முழு ஜீவியமும் கண்ணியப் படுத்தப்படும். (19)

கிறிஸ்து உவமைகளைப் பயன்படுத்தி, உபதேசித்ததின் நோக்கம் ஓய்வுநாளைக்குறித்த நோக்கத்தோடு நேரடித் தொடர்பைக் கொண்டிருந்தது. மனிதன் தமது கரங்களின் கிரியைகளை தெளிவாகப் புரிந்துகொள்ளும்படி, தமது படைப்பின் வல்லமையின் நினைவுச்சின்னமாக தேவன் மனிதனுக்கு ஓய்வுநாளைக் கொடுத்தார். படைத்தவரின் மகிமையை அவரது படைப்பின் கிரியைகளில் நாம் காணத்தக்கதாக ஓய்வுநாள் நம்மை அழைக்கிறது. இதன் காரணமாக, இயேசு தம்முடைய அருமையான உபதேசங்களை இயற்கையின் அழகுப்பொருட்களால் மூடினார். மற்ற நாட்களைக்காட்டிலும், பரிசுத்த ஓய்வுநாளிலே தேவன் இயற்கைமூலமாக நமக்கு எழுதியிருக்கின்ற தூதுகளை நாம் அதிகமாக கற்றுக்கொள்ளவேண்டும். நம்முடைய இரட்சகரின் உவமைகளை, அவர் பேசிய இடங்களாகிய வயல்கள், தோட்டங்கள், திறந்தவெளி, மலர்கள், பசும்புல் தரைகள் இருக்கும் இடங்களுக்கு மத்தியில் கற்றறிய வேண்டும். நாம் இயற்கையின் இதயத்தினருகே நெருங்கிவரும் போது, கிறிஸ்து தம்முடைய பிரசன்னத்தை நமக்கு அருளி, தம்முடைய சமாதானத்தையும் அன்பையும் நாம் உணரும்படியாகச் செய்வார். (20)

கிறிஸ்து தம்முடைய உபதேசத்தை ஓய்வுதினத்தோடுமாத்திரம் சம்பந்தப்படுத்தாமல், கடின உழைப்பில் ஈடுபடக்கூடிய வாரத்தின் மற்ற நாட்களோடும் சம்பந்தப்படுத்தினார். உழுது விதை விதைக்கிறவர்களுக்கும் அவர் தமது ஞானத்தை அருளுகிறார். உழுவதிலும், விதைப்பதிலும்,

அறுப்பதிலும், இருதயத்தின்மேல் கிருபை செய்கிற வேலையின் விளக்கத்தைப் பார்க்கும்படி நமக்குக் கற்றுக்கொடுக்கிறார். இவ்வாறாக, ஒவ்வொரு உபயோகமான தொழிலிலிருந்தும், வாழ்க்கையின் ஒவ்வொரு தொடர்புகளிலும் தெய்வீக உண்மையின் ஒரு பாடத்தை நாம் காணவேண்டுமென்று அவர் விரும்புகிறார். அப்படிச் செய்யும்போது, நம்முடைய அன்றாட உழைப்பு நம்முடைய கவனத்தை ஈர்த்து தேவனை மறக்கடிக்காது; அது எப்போதும் நம்மைப் படைத்தவரையும் மீட்டவரையும் நினைவூட்டும். நம் வீட்டுவேலைகளிலும் தொழில்களிலும், தேவனைக் குறித்த சிந்தனை ஒரு தங்கநூல்போன்று வந்துகொண்டேஇருக்கும். அவருடைய முகத்தின் மகிமை மீண்டும் இயற்கையின் முகத்தில் தங்குவதை நாம் காணலாம். நாம் எப்போதும் தெய்வீகச் சத்தியங்களைக்கொண்ட புதிய பாடங்களை கற்கிறவர்களாகவும், அவருடைய பரிசுத்த சாயலிலே வளர்கிறவர்களாகவும் காணப்படுவோம். இவ்விதமாக, நாம் “கர்த்தரால் போதிக்கப்பட்டவர்களாகவும்” அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கிறவர்களாகவும் காணப்படுவோம் – ஏசாயா 54:13; 1 கொரி. 7:24. (21) ★

# 2

# விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்!

**(மூலநூல் : பக்கங்கள் 17–27)**
**மத்தேயு 13:1–9; மாற்கு 4:1–20; லூக்கா 8:4–15**

### விதைக்கிறவரும் விதையும்

விதை விதைக்கும் உவமையின்மூலம் பரலோக இராஜ்யத்தைக் குறித்தும், தம்முடைய ஜனத்திற்காக மகா விவசாயியாகிய அவர் செய்யும் மாபெரும் சேவையைக்குறித்தும் கிறிஸ்து விளக்கிச்சொல்கிறார். நிலத்திலே விதையை விதைத்த விவசாயியைப்போன்று, அவர் சத்தியம் என்னும் பரலோக விதையைப் பரப்பும்படியாக வந்தார். தம்முடைய உவமை உபதேசம் என்ற விதையின்மூலமாக, விலைமதிப்புமிக்க சத்தியங்களை அவர் விதைத்தார். எளிமையின்நிமித்தமாக விதைப்பவனைக்குறித்த உவமை அதற்குரிய மதிப்பைப் பெறுவதில்லை. நிலத்தில் விதைக்கப்பட்ட இயற்கையான விதையிலிருந்து, சுவிசேஷ விதைக்கு கிறிஸ்து நமது மனங்களைத் திருப்புகிறார். அப்படி விதைக்கப்படும் விதை தேவனுக்கு உண்மையாக இருக்க மனிதனைக் கொண்டுவருகிறது. சிறிய விதையின் உவமையை விளக்கினவர், பரலோக அரசராவார். பூமியின் விதை விதைப்பிலே இருக்கும் அதே விதிகள்தான் சத்திய விதை விதைப்பிற்கும் உண்டு. (1)

ஆர்வத்தோடு எதிர்பார்த்திருந்த கூட்டம், கலிலேயாக் கடலருகே இயேசுவைக் காணும்படியாகவும், அவர் வார்த்தைகளைக் கேட்கும்படியாகவும் கூடியிருந்தது. பாயிலே படுத்திருந்த பிணியாளிகள் தங்களுடைய காரியங்களை அவர்முன் வைப்பதற்காகக் காத்திருந்தனர். நோயினால் துன்பப்பட்டுக்கொண்டிருந்த பாவ மனுக்குலத்தை குணமாக்குவது, கிறிஸ்துவிற்கு தேவனால் கொடுக்கப்பட்ட உரிமையாயிருந்தது. அவர் வியாதிகளைக் கடிந்துகொண்டு, தம்மைச் சுற்றிலும் அமர்ந்திருந்த

நோயாளிகளுக்கு ஜீவனையும் ஆரோக்கியத்தையும் சமாதானத்தையும் அருளினார். (2)

மக்கள் கூட்டம் அதிகரித்துக்கொண்டேயிருந்தது. இன்னும் ஏற்றுக் கொள்வதற்கு இடமில்லாமல் போகும்மட்டும் கிறிஸ்துவைச் சுற்றிலும் மிகவும் அதிகமாக மக்கள் நெருங்கி வந்தனர். பின்பு அவர் மீன்பிடிக்கும் படகுகளிலிருந்த மனிதர்களிடம் ஒரு வார்த்தை பேசிவிட்டு, ஏரியைக் கடந்துசெல்வதற்காக அவரை அழைத்துச் செல்ல காத்திருந்த படகில் ஏறினார். கரையிலிருந்து சற்று தூரத்திற்கு படகைச் செலுத்தும்படியாகத் தமது சீடர்களிடம் கேட்டுக்கொண்டார். பின்னர் கரையில் கூடியிருந்த மக்களிடம் பேசினார். (3)

கடலுக்கு அருகில் அழகான கெனெசரேத் சமவெளி பரந்துவிரிந்து காணப்பட்டது. அதற்குமப்பால் குன்றுகள் உயர்ந்து காணப்பட்டன. குன்று களின் சரிவுகளிலும் சமவெளிகளிலும், விதைப்பவர்களும் அறுப்பவர்களும் விதைகளைத் தூவுவதிலும், அறுப்பதிலுமாக சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தனர். அந்த காட்சியை நோக்கியவராக கிறிஸ்து: (4)

“கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது. சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது; மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது. வெயில் ஏறினபோதோ, தீய்ந்துபோய், வேரில்லாமையால் உலர்ந்துபோயிற்று. சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது. சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது”–மத்தேயு 13:3–8. (5)

கிறிஸ்துவின் ஊழியத்தைப்பற்றி அவர் காலத்து மக்கள் விளங்கிக் கொள்ளவில்லை. இவ்வுலகிற்கு அவரது வருகையின் தன்மை (பிறப்பு–முதலாம் வருகை) அவர்கள் எதிர்பார்ப்புகளின்படி இல்லை. யூதர்களுடைய வாழ்வாதாரத்தின் அஸ்திபாரமாக கர்த்தராகிய இயேசு இருந்தார். அவர்களுடைய மகிமைபொருந்திய ஆராதனைகள் அனைத்தும் தேவனால் ஏற்படுத்தப்பட்டவை. இந்தச் சடங்காச்சாரங்கள், யார் குறிப்பிட்ட நேரத்தில் வருவாரென்பதை மக்களுக்குப் போதிக்க திட்டமிடப்பட்டிருந்தன. ஆனால், யூதர்களோ முறைமைகளையும் சடங்குகளையும் உயர்த்தி, அவை சுட்டிக்காட்டிய பொருளைக் காணத்தவறிவிட்டனர். தேவன் அவர்களுக்கு தெரிவிக்கவேண்டுமென்றிருந்த பாடங்களை, பாரம்பரியங்களும், கோட்பாடு களும், மனிதக் கட்டுப்பாடுகளும், மறைத்துப்போட்டன. உண்மையான

மார்க்கத்தைப் புரிந்துகொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு மனித பாரம் பரியங்களும், கோட்பாடுகளும் தடையாக அமைந்தன. கிறிஸ்துவின் அவதாரத்திலே அந்த மெய்யான தேவன் வந்தபோது, அனைத்து மாதிரிப் படிவங்களின் (Types) நிறைவேறுதலாகவும், அனைத்து நிழலாட்டமான காரியங்களின் பொருளாகவும் அவர் வந்தாரென்பதைக் கண்டுகொள்ளத் தவறிவிட்டார்கள். அவர்கள் நிஜத்தைப் புறக்கணித்து, மாதிரிப்படிவங்களையும் பயனற்ற சடங்குகளையும் பற்றிப்பிடித்துக்கொண்டனர். தேவனுடைய குமாரன் வந்துவிட்டபோதிலும் அவர்கள் தொடர்ந்து ஒரு அடையாளத்தைக் கேட்டுக்கொண்டிருந்தனர். "மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித் திருக்கிறது" என்ற தூதை அவர்கள் கேட்டபோது. ஒரு அற்புதத்தை நிகழ்த்திக்காட்டுமாறு கோரிக்கை வைத்தனர் (மத்தேயு 3:2). இரட்சகருக்குப் பதிலாக அடையாளங்களைக் காண்பிக்குமாறு அவர்கள் கேட்டதினால், கிறிஸ்துவின் சுவிசேஷம் அவர்களுக்கு ஒரு தடுக்கலின் கல்லாக மாறியது. இவ்வுலக இராஜ்யங்களின் இடிபாடுகளுக்குமேலாக, பலத்த மாபெரும் வெற்றிச் செயல்களினால் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து, தாம் மேசியா என்று உரிமை கோருவதை அவர் நிரூபிக்க வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்த்தனர். இந்த எதிர்பார்த்தலுக்குப் பதில் கொடுக்கும்படி கிறிஸ்து விதைப்பவனின் உவமையைக் கூறினார். ஆயுத பலத்தைக்கொண்டும் வன்முறைசார்ந்த குறுக்கீடுகளினாலும் அல்ல, ஒரு புதிய கொள்கையை மனிதரின் இதயங்களிலே நாட்டுவதின்மூலமாகத்தான், அவர் தேவனுடைய இராஜ்யத்தை நிலைப்படுத்தி மேலோங்கச் செய்யமுடியும். (6)

"நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன்" (மத்தேயு 13:37). கிறிஸ்து அரசராக வராமல், விதைப்பவராக வந்தார்; இராஜ்யங் களைத் தகர்த்தெறிய அல்ல, விதையைத் தூவவே வந்தார்; தம்மைப் பின் பற்றியவர்களுக்கு உலக வெற்றிகளையும் மேன்மைகளையும் சுட்டிக்காட்ட வராமல், பொறுமையான உழைப்பின்மூலமாகவும், சில சந்தர்ப்பங்களில் நஷ்டங்களின்வாயிலாகவும் ஏமாற்றங்களின்வாயிலாகவும் கிடைக்கக்கூடிய ஆத்தும அறுவடையைச் சுட்டிக்காட்டவே வந்தார். (7)

கிறிஸ்துவினுடைய உவமையின் அர்த்தத்தை உணர்ந்த பரிசேயர்கள் அந்தப் பாடத்தை வரவேற்கவில்லை. அவர்கள் புரிந்துகொள்ளாதவர்கள்போல நடித்தார்கள். அவருடைய வார்த்தைகள் கூடியிருந்த திரள்கூட்டத்தின் இருதயத்தை மிக விசித்திரமாக அசைத்து, அவர்களின் ஆசைகளுக்கு மிகவும் கசப்பான ஏமாற்றத்தை கொண்டுவந்திருந்தபோதிலும், அந்த புதிய ஆசிரியரின் நோக்கம் அவர்களுக்கு ஒரு பெரிய இரகசியமாகவே இருந்தது. சீடர்களும் அந்த உவமையை விளங்கிக்கொள்ளவில்லை. இருப்பினும்

அவர்களின் ஆர்வத்தை அது தூண்டியது. அவர்கள் இயேசுவினிடத்தில் தனியாக வந்து, அந்த உவமையின் அர்த்தத்தைக் கேட்டனர். (8)

அதிகத் திட்டமான போதனையைக் கொடுக்கத்தக்கதாக, அத்தகைய விருப்பத்தை அவர்களிலே தூண்டிவிடத்தக்கதாக கிறிஸ்து விரும்பினார். உண்மையுள்ள இதயத்தோடு தம்மைத் தேடுகிற அனைவருக்கும் தமது வார்த்தையை எப்படித் தெளிவாக விளக்கி கூறுவாரோ அதேபோன்று அவர்களுக்கும் அந்த உவமையை அவர் விளக்கிக் கூறினார். பரிசுத்த ஆவியானவரின் அறிவு ஒளிக்கு இதயங்களைத் திறந்தவர்களாய், தேவனுடைய வார்த்தையைப் படிப்பவர்கள் அதன் அர்த்தத்தை விளங்க இயலாதபடி இருளில் விட்டுவிடப்படமாட்டார்கள். “அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டா யிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்வான்” (யோவான் 7:17) என்று இயேசு சொன்னார். சத்தியத்தைக்குறித்த தெளிவான அறிவைப் பெறும்படி கிறிஸ்துவினிடத்தில் வரும் அனைவரும் அதைப் பெறுவார்கள். பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களை அவர்களுக்கு அவர் வெளிப்படுத்துவார். சத்தியத்தை அறிந்துகொள்ளும் வாஞ்சையுள்ள இருதயத்தால் இந்த இரகசியங்கள் புரிந்துகொள்ளப்படும். ஒரு பரலோக ஒளி ஆத்தும ஆலயத்தில் பிரகாசித்து, இருளான பாதையில் ஒளிருகிற பிரகாசமான விளக்கைப்போன்று மற்றவர்களுக்கு வெளிப்படும். (9)

“விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்”—மத்தேயு 13:3. கிழக்கு நாடுகளிலே மிகவும் அமைதியற்ற நிலைமை நிலவியது. கலவரங்களால் ஏற்படும் மாபெரும் ஆபத்துகளால் மக்கள் பெரும்பாலும் மதில்சூழ்ந்த பட்டணங்களில் வாழ்ந்துவந்தார்கள். விவசாயத் தொழிலில் ஈடுபட்டவர்கள் தினமும் மதில்களுக்கு வெளியே சென்று வேலைசெய்தனர். அதைப்போன்று பரலோகத்தினின்று விதைப்பவராக வந்த கிறிஸ்து விதைப்பதற்காகப் புறப்பட்டுச் சென்றார். அவர் பாதுகாப்பும் சமாதானமும் நிறைந்த தமது பரலோக வீட்டைவிட்டு, உலகத் தோற்றத்திற்குமுன்னரே பிதாவோடு தமக்கிருந்த மகிமையைவிட்டு, அண்ட சராசரத்தின் சிங்காசனத்தின்மேலிருந்த தமது பதவியைவிட்டு இந்தப் பாழ் உலகத்திற்கு வந்தார். பாவத்தில் விழுந்துபோன இந்த உலகிற்காக அவர் பாடனுபவித்தவராக—சோதிக்கப்பட்ட ஒரு மனிதராக—தனிமையாக திரிந்தலைந்து—கண்ணீரோடே விதை விதைத்து, ஜீவனாகிய விதையின்மீது தமது இரத்தத்தை நீராகப் பாய்ச்சினார். (10)

அவருடைய ஊழியக்காரர்களும் அதேவிதமாக விதைப்பதற்காக வெளியே புறப்பட்டுச்செல்ல வேண்டும். சத்தியத்தின் விதையை

விதைப்பவராக மாறும்படி ஆபிரகாமிற்கு: "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" (ஆதியாகமம் 12:1) என்று கட்டளை கொடுத்தார். "தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்"—எபிரெயர் 11:8. அந்தப் பிரகாரமாகவே எருசலேமின் தேவாலயத்தில் ஜெபித்துக்கொண்டிருந்த அப்போஸ்தலனாகிய பவுலிற்கும்: "நீ போ, நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன்" (அப்போஸ்தலர் 22:21) என்ற தேவனுடைய தூது வந்தது. அப்படியே, கிறிஸ்துவோடு இணையும்படியாக அழைக்கப்பட்டவர்கள், அவரைப் பின்பற்றத்தக்கதாக தங்களுக்குரிய எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும். பழைய தொடர்புகள் கண்டிப்பாக முறிக்கப்படவேண்டும். வாழ்க்கைக்கான திட்டங்கள் கைவிடப்படவேண்டும். இந்த பூமிக்குரிய நம்பிக்கைகள் ஒப்புக் கொடுக்கப்படவேண்டும். கடின உழைப்பிலும், கண்ணீரிலும், தனிமையிலும், தியாகத்திலும் விதை விதைக்கப்பட வேண்டும். (11)

விதைக்கிறவன் வேதவசனத்தை விதைக்கிறான். கிறிஸ்து இவ்வுலகிலே சத்தியத்தை விதைக்க வந்தார். மனிதன் பாவத்தில் விழுந்ததுமுதல் சாத்தான் பொய்யின் விதைகளை விதைத்துக்கொண்டிருக்கிறான். அவன், பொய்யின்மூலம்தான் முதலாவது மனிதனைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தான். பூமியிலே தேவனுடைய இராஜ்யத்தைத் தோற்கடிக்கவும், தன்னுடைய வல்லமைக்கு கீழ் மனிதரைக் கொண்டுவரவும் அவ்வாறாகவே இன்றும் தொடர்ந்து வேலை செய்துகொண்டிருக்கிறான். மேலுலகிலிருந்து விதைப்பவராக வெளிப்பட்ட கிறிஸ்து, சத்திய விதைகளை விதைக்கும்படி வந்தார். தேவனுடைய மன்றங்களிலே, நித்திய பிதாவின் மகா பரிசுத்த ஸ்தலத்திலே வாழ்ந்திருந்த அவரால், சத்தியத்தின் தூய்மையான கொள்கைகளை மனிதருக்கு கொண்டுவரமுடியும். மனிதனின் விழுகை யிலிருந்து கிறிஸ்து இந்த உலகத்திற்கு சத்தியத்தை வெளிப்படுத்து பவராகவே இருந்தார். அவர்மூலமாக "என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்து..." (1 பேதுரு 1:23) மனிதருக்கு அளிக்கப்பட்டது. ஏதேனில் விழுந்துபோன நம் மனுக்குலத்திற்குக் கொடுக்கப்பட்ட அந்த முதல் வாக்குத்தத்தத்திலே கிறிஸ்து சுவிசேஷ விதையை விதைத்தார். மனிதர் நடுவே அவர் செய்த ஊழியத்திற்கும் இவ்வாறு அவர் ஏற்படுத்திய சுவிசேஷப் பணிக்கும் விதைக்கிறவனின் உவமை சிறப்பானவிதத்தில் பொருத்திக் காட்டப்பட்டிருக்கிறது. (12)

தேவனுடைய வார்த்தை விதையாயிருக்கிறது. ஒவ்வொரு விதையும் துளிர்விடும் சக்தியை தன்னிலே பெற்றுள்ளது. அதற்குள் செடியின் ஜீவன்

அடங்கியிருக்கிறது. அப்படியே, தேவனுடைய வார்த்தையிலே ஜீவன் இருக்கிறது. "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது"–யோவான் 6:63; "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு" (யோவான் 5:24) என்று கிறிஸ்து சொல்கிறார். தேவனுடைய வார்த்தையிலுள்ள ஒவ்வொரு கட்டளையும் ஒவ்வொரு வாக்குத்தத்தமும் வல்லமையுள்ளதாக—தேவனுடைய ஜீவனுள்ளதாக இருந்து, கட்டளையை நிறைவேற்றுவதற்கும், வாக்குத்தத்தத்தை செயற்படுத்துவதற்கும் உதவுகிறது. விசுவாசத்தினாலே வார்த்தையைப் பெற்றுக்கொள்கிறவன் தேவனுடைய குணத்தையும் அவருடைய ஜீவனையும் பெற்றுக்கொள்ளுகிறான். (13)

ஒவ்வொரு விதையும் அதன் வகைக்கேற்ப கனியைக் கொடுக்கிறது. சரியான சூழ்நிலைகளுக்கடியில் விதையை விதையுங்கள். விதைத்தால், அந்தச் செடியிலே அதற்கேயுரிய ஜீவனை அது வளரச்செய்யும். விசுவாசத் தினாலே அழிவில்லாத வித்தாகிய வேதவசனத்தை ஆத்துமாவிலே ஏற்றுக் கொண்டால், தேவனுடைய ஜீவனுக்கும் அவருடைய குணத்திற்கும் ஒத்த ஒரு ஜீவனையும் குணத்தையும் அது கொண்டுவரும். (14)

இஸ்ரவேல் மக்கள் மத்தியிலிருந்த போதகர்கள் தேவனுடைய வார்த்தையாகிய விதையை விதைத்துக்கொண்டிருக்கவில்லை. சத்தியத்தை உபதேசிப்பவராகிய கிறிஸ்துவின் ஊழியத்திற்கும், அவர் காலத்தில் வாழ்ந்த மற்ற போதகர்களின் ஊழியத்திற்கும் குறிப்பிட்டவிதத்தில் முக்கியமான வேறுபாடுகள் இருந்தன. அவர்கள் பாரம்பரியங்கள், மானிட கொள்கைகள், யூகங்கள் ஆகியவைகளைப் பின்பற்றி வந்தனர். பெரும்பாலும் வேதவசனங்களைப்பற்றி மனிதனால் கற்பிக்கப்பட்ட, எழுதப்பட்ட காரியங்களை வேதவசனத்திற்குப்பதிலாக வைத்தார்கள். அவர் களுடைய உபசேத்திலே ஆத்துமாவை உயிர்ப்பிக்கக்கூடிய வல்லமை யில்லை. கிறிஸ்து கற்றுக்கொடுத்த பிரசங்கித்தவைகளின் ஆதாரப் பொருள் தேவனுடைய வார்த்தையாகவே இருந்தது. தம்மிடம் கேள்வி கேட்பவர்களிடம், "என்று எழுதியிருக்கிறதே" என்றும், "வேதவாக்கி யங்கள் என்ன சொல்கின்றன" என்றும், "நீ எப்படி வாசிக்கிறாய்?" என்றும் எளிமையாக பதிலுரைத்தார். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நண்பனாலோ அல்லது தம்மை விரோதித்தவர்களாலோ ஆர்வம் தூண்டிவிடப்பட்ட பொழுது, வேதவசனமென்னும் வார்த்தைகளை விதைத்தார். வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவும், தாமே ஜீவவார்த்தையாகவுமிருந்த அவர், வேதவாக்கியங்களைச் சுட்டிக்காட்டி: "என்னைக்குறித்துச் சாட்சி கொடுக் கிறவைகளும் அவைகளே" (யோவான் 5:39) என்று கூறுகிறார்; "மோசே

முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்''—லூக்கா 24:27. (15)

கிறிஸ்துவின் ஊழியர்களும் அதே வேலையைச் செய்யவேண்டும். முந்தைய நாட்களைப்போல் நம் நாட்களிலும் மனித வாதங்களுக்காகவும், யூகங்களுக்காவும், தேவவார்த்தையின் முக்கியமான உண்மைகள் ஒதுக்கிவைக்கப்படுகின்றன. பகிரங்கமாக தங்களை சுவிசேஷ ஊழியர்களாகக் கூறிக்கொள்ளும் பலர், முழுவேதாகமும் தேவஆவியானவரால் அருளப்பட்டிருக்கிறதென்று ஏற்றுக்கொள்கிறதில்லை. ஒரு ஞானி வேதத்தின் ஒரு பகுதியை தள்ளிவைக்க, மற்றொருவர் வேறொரு பகுதியைக்குறித்து கேள்வி எழுப்புகிறார். அவர்கள் தங்கள் கருத்தை தேவவார்த்தையைக்காட்டிலும் மேலானதாகக் கருதுகின்றனர். வேதாகமத்திலிருந்து அவர்கள் போதிக்கும் பகுதியை அவர்களுடைய அதிகாரத்திற்குட்பட்டதாக மாற்றிவிடுகின்றனர். வேதப்பகுதியின் தெய்வீக அதிகாரம் அழிக்கப்படுகின்றது. இவ்விதமாக, அவநம்பிக்கையின் விதைகள் விதைக்கப்பட, பரப்பப்பட, மக்கள் எதை நம்புவதென்று தெரியாமல் குழப்பமடைகின்றனர். சிந்திப்பதற்கு மனதிற்கு எந்த உரிமையும் இல்லாத அநேக விசுவாசக் கொள்கைகள் இருக்கின்றன; கிறிஸ்துவின் நாட்களில், அநேக வேதாகமப் பகுதிகளை, கட்டாயமான இரகசிய கட்டுப்பாடுகள் உடையதாக ரபிமார்கள் காண்பித்தனர். தேவ வசனத்தின் எளிமையான போதனைகள் அவர்கள் பழக்கங்களைக் கண்டித்ததால், அவர்கள் அதன் வலிமையை அழிக்க முயற்சித்தனர். அதே காரியம் இன்றும் செய்யப்படுகின்றது. தேவனுடைய பிரமாணத்தை மீற, சாக்குப்போக்கு உண்டாகும்படி, தேவனுடைய வசனம் விளங்கிக்கொள்ள முடியாத இரகசியம்போன்றும், தெளிவற்றதென்றும் காட்டப்படுகிறது. இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை கிறிஸ்து தம் நாளிலேயே கண்டித்தார். வேதவசனம் அனைவராலும் விளங்கிக்கொள்ளப்படமுடியும் என்று அவர் போதித்தார். கேள்விக்கப்பாற்பட்ட அதிகாரத்தை உடையவைகளாக வேதவாக்கியங்களை அவர் சுட்டிக்காட்டினார். நாமும் அவ்வாறே செய்யவேண்டும். வேதாகமம் சகல விசுவாசத்தின் அஸ்திவாரமாகவும், சகல சர்ச்சைகளுக்கும் முடிவுகாண்கிற இடமாகவும், எல்லையற்ற பரம்பொருளாகிய தேவனுடைய வார்த்தையாகவும் மக்கள்முன் வைக்கப்படவேண்டும். (16)

வேதாகமத்தின் வல்லமை கொள்ளையிடப்பட்ட நிலையில் இருப்பதால், ஆவிக்குரிய ஜீவியத்தின் தன்மையில் தாழ்ச்சி ஏற்பட்டிருப்பதின் விளைவுகளைக் காணலாம். இன்றைய நாட்களில் அநேக மேடைகளிலே

செய்யப்படும் பிரசங்கங்களில் மனச்சாட்சியை விழிப்படையச்செய்து, ஆத்துமாவிற்கு ஜீவனைக்கொண்டுவரும் தெய்வீக வெளிப்படுத்தல்கள் இல்லை. பிரசங்கத்தை கேட்பவர்கள் “வழியிலே அவர் நம்முடனே பேசி, வேதவாக்கியங்களை நமக்கு விளக்கிக்காட்டினபொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா?” (லூக்கா 24:32) என்று கூறமுடியாது. அநேகர் ஜீவனுள்ள தேவனுடைய தெய்வீக பிரசங்கத் திற்காக ஏக்கத்தோடு கதறுகின்றனர். தத்துவ கோட்பாடுகளும், இலக்கியக் கோட்பாடுகளும் எவ்வளவுதான் அறிவுடையதாக இருந்தாலும், இதயத்தை திருப்திப்படுத்த இயலாது. மனித கண்டுபிடிப்புகளும் வலியுறுத்தல்களும் பயனற்றவை. தேவனுடைய வார்த்தை மக்களிடத்தில் பேசட்டும். பாரம்பரியங்கள், மானிட கொள்கைகள், பழமொழிகள் ஆகியவைகளை மட்டுமே கேட்பவர்கள், நித்திய ஜீவனுக்கேதுவாக ஆத்துமாவை புதுப்பிக்கும் வல்லமையுடைய வார்த்தை பேசும் அவரது குரலைக் கேட்கட்டும். (17)

தந்தைக்குரிய மென்மை, தேவனுடைய ஏராளமான கிருபை ஆகியவைகளைப்பற்றி பேசுவதே கிறிஸ்துவின் விருப்பத்திற்கு உரிய பொருளாக இருந்தது. அவரது குணம், அவரது பிரமாணம் ஆகியவைகளின் பரிசுத்தத்தைக்குறித்து அவர் அதிகமாகப் பேசினார். அவர் தம்மையே மக்களுக்கு வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவும் வெளிப்படுத்தினார். கிறிஸ்துவின் ஊழியக்காரர்களுக்கும் இவைகளே ஆய்வுக்குரிய தலைப்புகளாயிருக்கட்டும். சத்தியத்தை, இயேசுவில் இருப்பதுபோலவே மக்களுக்குமுன்பாக வைக்கவேண்டும். பிரமாணம், சுவிசேஷம் ஆகியவை விடுக்கும் கோரிக்கைகளை மக்களுக்கு தெளிவாக்குங்கள். தம்மைத்தாமே வெறுத்து தியாகபலியாக ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவின் மரணத்தையும், அவரது உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும், தேவனுடைய பரலோக மன்றங்களிலே நமக்காக அவர் பரிந்துபேசுவதையும், “நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்” (யோவான் 14:3) என்ற அவருடைய வாக்குத்தத்தத்தையும் மக்களுக்கு எடுத்துச்சொல்லுங்கள். (18)

தவறான கோட்பாடுகளைக்குறித்து தர்க்கம்பண்ணுதல் அல்லது சுவிசேஷத்தை எதிர்ப்பவர்களை எதிர்க்க வகைதேடுதல் ஆகியவற்றை விடுத்து, கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றவேண்டும். தேவனுடைய பொக்கிஷ அறையிலிருந்து வெளிவரும் புதிய சத்தியங்களினால் நம் வாழ்வு ஒளிவீசட்டும். “திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு” (2 தீமோ. 4:2); “நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்” (ஏசாயா 32:20); “சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும்

ஜாக்கிரதையாய்த் திருவசனத்தை பிரசங்கம்பண்ணு" (2 தீமோ. 4:2); "என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக; கோதுமைக்குமுன் பதர் எம்மாத்திரம்? என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 23:28). "தேவனுடைய வசனமெல்லாம் புடமிட்டவைகள்... அவருடைய வசனங்களோடு ஒன்றையுங் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய்" (நீதி. 30:5,6). (19)

விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான். அனைத்து கல்விப் பணிகளுக்கும் அடிப்படையிலிருக்க வேண்டிய மாபெரும் கொள்கை இங்கு முன்வைக்கப்படுகிறது. "விதை தேவனுடைய வசனம்." இந்தக் காலத்தில் அநேக கல்வி நிறுவனங்களில் தேவனுடைய வார்த்தை புறம்பே தள்ளப் பட்டுள்ளது. மற்ற பாடங்கள் மனதை ஆக்கிரமிக்கின்றன. நம்முடைய கல்விமுறையிலே நாத்தீக ஆசிரியர்களின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றன. நாத்தீக உணர்வுகள் பள்ளிப் புத்தகங்களிலே பாடங்களிடையே பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. விஞ்ஞான ஆராய்ச்சி நம்மை தவறான பாதைக்கு வழிநடத்தும்; ஏனெனில், அதன் கண்டுபிடிப்புகள் தவறான பொருள்விளக்கம் கொடுப்பவைகளாகவும், தாறுமாறாக்கப்பட்டவையாகவும் இருக்கின்றன. அறிவியலின் உத்தேசமான போதனைகளோடு, தேவனுடைய வசனம் ஒப்பிடப்பட்டு, நிச்சயமில்லாததுபோலவும், நம்பத்தகாததுபோலவும் தோன்றும்படி காட்டப்படுகின்றது. இவ்விதமாக, வாலிபர் மனதிலே சந்தேகத்தின் விதைகள் நாட்டப்பட்டு, அவை சோதனை வேளைகளிலே முளைத்து எழும்புகின்றன. தேவனுடைய வார்த்தையின்மேலுள்ள விசுவாசம் தொலையும்போது, ஆத்துமாவிற்கு எந்த வழிகாட்டியும் பாதுகாப்பும் இல்லாமற்போகிறது. வாலிபர் தேவனைவிட்டும், நித்தியஜீவனைவிட்டும் தவறான பாதைகளுக்கு இழுக்கப்பட்டுவிடுகின்றனர். (20)

இன்றைய உலகிலே அக்கிரமம் பெருகியுள்ளதே பெருமளவில் அதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது. தேவனுடைய வசனம் புறம்பே தள்ளப்படும்போது, இயல்பான இதயத்தின் தீய உணர்வுகளைக் கட்டுப் படுத்துகின்ற அதின் வல்லமை புறக்கணிக்கப்படுகிறது. மனிதர் மாம்சத்திற் கென்று விதைத்து, மாம்சத்தினாலே தீமையை அறுவடை செய்கிறார்கள். (21)

இங்கும் மனம் வலுவிழந்து திறமையற்றுப்போவதற்கு பொருங்காரணம் இருக்கிறது. அருளற்ற மனிதர்களின் எழுத்துக்களை விரும்பிப் படிப்பதற்காக தேவனுடைய வசனத்தைவிட்டு விலகுவதினால், மனம் குறுகி, மதிப்பை இழந்துவிடுகிறது. தேவனுடைய ஆழமான—அகலமான—நித்தியமான சத்தியத்தின் கொள்கைகளுடன் தொடர்புகொள்வதற்கு மனம் கொண்டு

வரப்படுவதில்லை. தனக்கு அறிமுகமான காரியங்களைப் புரிந்துகொள்வதற்கு அது தன்னை மாற்றியமைத்துக்கொள்கிறது. இவ்வாறு எல்லைக்குட்பட்ட காரியங்களில் பற்றுவைப்பதின்மூலமாக அது பெலவீனமடைந்து, அதன் வல்லமை குறுகிவிடுகிறது. பின்னர் சிறிதுகாலத்தில் விரியும் தன்மையை இழந்துவிடுகிறது. (22)

இவையனைத்தும் தவறான கல்வியாகும். ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட மாபெரும் சத்திய வார்த்தைகளின்மேல் வாலிபரின் மனதை இணைப்பதே ஒவ்வொரு ஆசிரியரின் தலையாய பணியாகவும் இருக்கவேண்டும். இத்தகைய கல்வியே இந்த வாழ்க்கைக்கும் இனிவரும் வாழ்க்கைக்கும் அவசியமானதாகும். (23)

இத்தகைய கல்வி, அறிவியலைப் படிப்பதைப் தடுக்குமென்றோ, கல்வியின் தரத்தை மட்டுப்படுத்துமென்றோ எண்ணப்படவேண்டாம். தேவனைக்குறித்த அறிவு வானபரியந்தம் உயர்ந்ததாயும், அண்டசராசரத்தைப் போன்று அகன்றதாயும் இருக்கின்றது. நமது நித்தியஜீவனைக்குறித்த மாபெரும் தலைப்புகளைப் படிப்பதைவிட வேறு கண்ணியமான, உற்சாகமூட்டுகிற காரியங்கள் எதுவும் இருக்க முடியாது. தேவனால் கொடுக்கப்பட்ட இந்த சத்தியங்களைப் பற்றிப்பிடித்துக்கொள்ள வாலிபர் வகைதேடட்டும்; அப்பொழுது, மனங்கள் விரிவடைந்து, அந்த முயற்சியிலே அவர்கள் வல்லமை பெறுவார்கள். தேவ வார்த்தையின்படிச் செய்கிற ஒவ்வொரு மாணவனும் விரிவான சிந்தனையாளனாக மாறவும் அழியாத செல்வமாகிய அறிவைப் பெற்றுக்கொள்ளவும் இது உதவி செய்யும். (24)

வேத வாக்கியங்களை ஆராய்ச்சி செய்தின்மூலம் கிடைக்கும் கல்வி, இரட்சிப்பின் திட்டத்தைக்குறித்த அனுபவ அறிவைக் கொடுக்கிறது. இத்தகைய கல்வி தேவசாயலை ஆத்துமாவிற்கு மீண்டும் வழங்கும். அது சோதனையை எதிர்கொள்ளும் வகையில் மனதைப் பலப்படுத்தி, அரண்செய்து, உலகத்திற்கான கிறிஸ்துவின் இரக்க ஊழியத்தில் அந்த மாணவரை பரலோகக் குடும்பத்தின் ஒரு அங்கத்தினராக மாற்றி, பிரகாசிக்கின்ற பரிசுத்தவான்களின் சுதந்திரத்திலே பங்கடைவதற்கு ஆயத்தஞ்செய்யும். (25)

பரிசுத்தமான சத்தியத்தை அறிவிக்கும் போதகர், தான் அனுபவரீதியாக அறிந்தவைகளையே போதிக்க இயலும். விதை விதைக்கிறவன் தன்னுடைய விதையை விதைக்கிறான். கிறிஸ்து சத்தியத்தை உபதேசித்தார்; ஏனெனில், அவரே சத்தியமாயிருக்கிறார். அவருடைய சொந்த சிந்தனையும், அவருடைய குணமும், அவருடைய வாழ்க்கை அனுபவங்களும், அவருடைய உபதேசத்தில் இடம்பெற்றன; அதுபோலவே, வார்த்தையைக் கற்பிக்கிற

அவருடைய அடியார்கள் தங்கள் சொந்த அனுபவங்களிலிருந்து பிரசங்கிக்க வேண்டும். கிறிஸ்து தங்களுக்கு ஞானமுள்ளவராகவும், நீதியுள்ளவராகவும், பரிசுத்தமாக்குகிறவராகவும், மீட்பராகவும் இருக்கிறாரென்பதை அவர்கள் அறியவேண்டும். தேவனுடைய வார்த்தையை பிறருக்கு வழங்கும்போது, இருக்கலாம் என்றோ, எண்ணப்படுகிறது என்றோ போதகர்கள் போதிக்கக் கூடாது. அவர்கள் பேதுரு அப்போஸ்தலன் சொல்வதுபோல்: "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்" (2 பேதுரு 1:16) என்று கூறவேண்டும். ஒவ்வொரு கிறிஸ்து வின் ஊழியக்காரரும் ஒவ்வொரு போதகரும் பேதுரு அப்போஸ்தலனுடனும் யோவனுடனும் சேர்ந்து, "அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்தி லிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்" (1 யோவான் 1:2) என்று கூறவேண்டும். (26)

## வழியருகே உள்ள நிலம்

எந்த நிலத்திலே விதை விதைக்கப்பட்டதோ, அந்த நிலத்து மண்ணினால் அந்த விதைகளின் வளர்ச்சியிலே ஏற்பட்ட மாற்றங்களைக் குறித்து விதைக்கிறவனின் உவமை முக்கியப்படுத்திக்காட்டுகிறது. இந்த உவமையின்படி கிறிஸ்து தமது பிரசங்கத்தைச் செவிமடுத்தவர்களிடம்: உங்கள் கருத்துக்களுக்கு ஏற்றதாக இல்லாததினால் என்னுடைய ஊழியத்தைக்குறித்து குறைகாண்பவர்களாகவோ, அல்லது ஏமாற்றத்தில் திளைப்பவர்களாகவோ நிற்பது உங்களுக்கு பாதுகாப்பாயிருக்காது; மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கேள்வி, நான் கொடுக்கும் தூதை நீங்கள் எப்படிக் கையாளுகிறீர்கள்? ஏற்றுக்கொள்கிறீர்களா அல்லது மறுத்துவிடுகிறீர்களா என்பதைப் பொருத்தே உங்களது நித்தியம் இருக்கிறது என்றார். (27)

வழியருகே விதைக்கப்பட்ட விதையைக்குறித்து இயேசு கூறுகையில், "ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்" (மத்தேயு 13:19). (28)

வழியருகே விதைக்கப்பட்ட விதை, தேவனுடைய வார்த்தையை கவனக்குறைவோடு கேட்பவர்களின் மனதில் விழுவதை எடுத்துக்காட்டுகிறது. மக்கள் மற்றும் மிருகங்களின் நடையினிமித்தம் அதிகம் அடிபட்ட பாதையைப்

போல, உலகத்தின் நெருக்கடியிலும், அதன் இன்பங்களிலும், பாவங்களிலும் மூழ்கி, இருதயம் ஒரு நெடுஞ்சாலையைப்போல ஆகிவிடுகிறது. தன்னலக் குறிக்கோள்கள் நிமித்தமாகவும், பாவத்தில் ஈடுபடுவதின் நிமித்தமாகவும் ஆத்துமா ஈர்க்கப்பட்டு, "பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போய்விடுகிறது"—எபிரெயர் 3:13. ஆவிக்குரிய திறமைகள் முடங்கிவிடுகின்றன. மனிதர்கள் வார்த்தைளைக் கேட்கிறார்கள்; ஆனால், புரிந்துகொள்வதில்லை. அது தங்களுக்குப் பொருந்துகிறதை அவர்கள் அறிந்துகொள்வதில்லை. தங்களுடைய தேவையையோ அல்லது ஆபத்தையோ உணர்வதில்லை. கிறிஸ்துவின் அன்பை புரிந்துகொள்ளாமல், அவருடைய கிருபையின் தூதை தங்களுக்கல்லாததுபோல தாண்டிப்போகிறார்கள். (29)

பறவைகள் வழியருகே சிதறிய விதைகளை எடுத்துச்செல்ல ஆயத்தமாக இருப்பதுபோல் சாத்தானும் ஆத்துமாவில் விதைக்கப்பட்ட தெய்வீக சத்தியத்தைப் பறித்துச்செல்ல ஆயத்தமாயிருக்கிறான். அஜாக்கிரதையானவர்களை எழுப்பி, கடின இதயத்தில் தேவனுடைய வார்த்தை விளைச்சலை உண்டாக்கிவிடுமோவென்று அவன் அஞ்சுகிறான். சாத்தானும் அவனுடைய தூதர்களும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிற கூட்டங்களில் இருக்கிறார்கள். பரலோகத்தின் தூதர்கள் தேவனுடைய வார்த்தையை இதயங்களில் பதிக்க முற்படுகையில், எதிரியானவன் அந்த வார்த்தை பயனற்றதாகும்படிச் செய்யும் காரியத்தில் விழிப்போடிருக்கிறான். எவ்வளவு பகைமை எண்ணம் கொண்டிருக்கிறானோ அதற்கேற்ற அளவு ஊக்கத்தோடு தேவனுடைய ஆவியானவரின் ஊழியத்தை அவன் தகர்க்க முயற்சிக்கிறான். கிறிஸ்து தம் அன்பினால் ஆத்துமாவை தம்பக்கம் ஈர்க்கும்போது, மீட்பரைத் தேடுவதற்காக அசைக்கப்பட்ட நபரின் கவனத்தை திசைதிருப்ப முயற்சிக்கிறான். விமர்சனத்தைத் தூண்டி, சந்தேகத்தை உட்புகுத்தி, அவநம்பிக்கையை ஏற்படுத்துகிறான். பிரசங்கியாரின் மொழியும் நடையும் கேட்பவர்களை பிரியப்படுத்தாமலிருக்குமானால், அவர்களில் காணப்படும் இத்தகைய குறைகளைக்குறித்துப் பேசுவதில் மக்கள் ஈடுபடுகிறார்கள். இவ்வாறாக, அவர்களுக்குத் தேவையான, தேவனால் கிருபையாக அனுப்பப்பட்ட சத்தியம் எந்தவிதமான நீடித்த எண்ணப் பதிவையும் ஏற்படுத்தாமல் போய்விடுகிறது. (30)

சாத்தானுக்கு பல உதவியாளர்கள் உள்ளனர். மற்றவர்களுடைய இதயங்களினின்று சத்தியமென்னும் விதைகளை எடுத்துச் செல்வதற்கு கிறிஸ்தவர்களென்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள் சோதனைக் காரனுக்கு உதவிசெய்துகொண்டிருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுவதைக் கேட்கும் பலர் அதை தங்கள் வீடுகளிலே விமர்சனப்

பொருளாக மாற்றுகின்றனர். ஒரு அரசியல் பேச்சாளரையோ அல்லது ஒரு பேராசிரியரின் வார்த்தைகளையோ விமர்சிப்பதுபோன்று பிரசங்கியாரின் பிரசங்கத்தைக்குறித்து அவர்கள் அமர்ந்து மதிப்பீடு செய்கின்றனர். கர்த்தருடைய வார்த்தையாகக் கருதப்படவேண்டிய பிரசங்கத்தை அற்பமாக எண்ணுவதிலும், அல்லது கேலியாக விமர்சிப்பதிலும் ஈடுபடுகின்றனர். ஊழியக்காரரின் குணம், உள் நோக்கம், நடவடிக்கைகள் மற்றும் சபை அங்கத்தினர்களின் நடத்தை போன்றவை தாராளமாக விவாதிக்கப்படுகின்றது. மனந்திரும்பாத மக்கள் காதில் படும்வகையில் கடுமையான தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. வம்புப் பேசுதல், அவதூறுசெய்தல் ஆகியவை மீண்டும் மீண்டும் செயல்படுத்தப்படுகின்றன. அநேக வேளைகளில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் கேட்கும்வகையில் இவைகளைப் பேசுகின்றனர். இவ்விதமாக, தேவனுடைய ஊழியர்களுக்குக் கிடைக்கவேண்டிய கண்ணியத்தையும் அழித்துவிடுகின்றனர். தேவனுடைய வார்த்தையையோ அற்பமாக எண்ணும்படி அநேகர் கற்பிக்கப்படுகின்றனர்.(31)

கிறிஸ்தவர்களென்று வெளிப்படையாகக் கூறிக்கொள்ளும் பலரின் இல்லங்களில் வாலிபர்கள் இன்று சமய நம்பிக்கை அற்றவர்களாக இருக்கிறார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் ஏன் வேதாகம நற்செய்திகளுக் கடுத்த காரியங்களில் ஆர்வக் குறைவுள்ளவர்களாக இருக்கிறார்களென்றும் வினவுகின்றனர்.... சந்தேகிப்பதில் உடனடியாக ஆர்வம் உள்ளவர்கள், சன்மார்க்க மற்றும் ஆன்மீக நெறிகளின் வாயிலாக அவர்களை மீட்கமுடியாத நிலை ஏற்படும்போது வியப்படைகின்றனர். தங்கள் சொந்த உதாரணமே, தங்கள் பிள்ளைகளின் இதயக் கடினத்திற்கு காரணம் என்பதை அவர்கள் உணர்வதில்லை. நல்ல விதை வேரூன்ற இடமில்லாமல் போகவே, சாத்தான் அதை அபகரித்துச் செல்கிறான். (32)

## கற்பாறையான இடங்கள்

“கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறவன்; ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்”–மத்தேயு 13:20,21. (33)

கற்பாறையான இடங்களில் விழுந்த விதைகளுக்கு மண் ஆழம் மிகக் குறைவாக இருக்கும். செடி வெகுவிரைவாக வளர்ந்தபோதிலும், வேர் பாறையைத் துளைத்து அதன் வளர்ச்சிக்கான ஊட்டச்சத்தை பெற்றுக் கொள்ளக்கூடாததின் நிமித்தம், சீக்கிரத்தில் உலர்ந்துபோய்விடும். தங்கள்

மதத்தை பகிரங்கப்படுத்தும் பலர் கற்பாறை நிலத்து விதைக்கு ஒப்பா வார்கள். நிலத்திற்குக்கீழே பாறை இருப்பதுபோல், அவர்களுடைய நல் விருப்பம் மற்றும் வாஞ்சைகளுக்கடியில் சுபாவ இதயத்தின் சுயநலம் தென்படுகிறது. சுயநேசிப்பு தணியாமல் இருக்கிறது. இவர்கள் பாவத்தை உணராதவர்களாயும், பாவ உணர்வினிமித்தம் ஏற்படும் குற்ற உணர்வு இல்லாதவர்களாயும் இருக்கின்றனர். இந்தக் கூட்டத்தார் விரைவில் வார்த்தையை ஏற்றுக்கொண்டு, இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றவர்கள் போன்று தோன்றுவார்கள்; ஆனால், இவர்கள் மேலெழுந்தவாரியான சமய பக்தியையுடையவர்கள். (34)

வசனத்தைக் கேட்பதின் நிமித்தமும், அதை உடனே சந்தேஷத்தோடே ஏற்றுக்கொள்வதின் நிமித்தமும் மக்கள் விழுந்துபோவதில்லை. மத்தேயு இரட்சகரின் அழைப்பைக் கேட்டவுடனே எழுந்து, தனக்குண்டானதை யெல்லாம் விட்டுவிட்டு இயேசுவைப் பின்தொடர்ந்தான். தெய்வீக வார்த்தை நம்முடைய இதயங்களுக்கு வரும்போது, நாம் அதைப் பெற்றுக்கொண்டு, சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். "மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்"–லூக்கா 15:7. கிறிஸ்துவை விசுவாசிக்கின்ற ஆத்துமா விற்குச் சந்தோஷமுண்டு; ஆனால், உவமையில் கூறப்பட்டுள்ள நபர்கள் வார்த்தையை உடனே ஏற்றுக்கொள்கிறார்களே தவிர, அதன் கிரயத்தை அவர்கள் எண்ணுகிறதில்லை. அவர்கள் தேவனுடைய வார்த்தை தங்களிடம் என்ன எதிர்பார்க்கிறது என்பதைக் கருதுகிறதில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தையையும் தங்கள் வாழ்க்கையின் பழக்கங்களையும் அதனோடு ஒப்பிட்டு, அதன் கட்டுப்பாட்டில் தங்கள் ஜீவியத்தை முற்றிலுமாக ஒப்புக்கொடுப்பதில்லை. (35)

செடியினுடைய வேர்கள் ஆழமாக நிலத்தில் புகுந்து, மறைந்திருந்து செடியின் வளர்ச்சிக்கு ஊட்டச்சத்தை வழங்குகிறது. அதுபோலவே, கிறிஸ்தவனும் இருக்கிறான். விசுவாசத்தின்மூலமாக கிறிஸ்துவோடு ஆத்துமா கொண்டுள்ள கண்களுக்கு புலனாகாத ஐக்கியத்தில் ஆவிக்குரிய வாழ்க்கை ஊட்டச்சத்தைப் பெறுகின்றது. ஆனால், கற்பாறை நிலத்தைப்போன்று பிரசங்கத்தைக் கேட்பவர்கள் கிறிஸ்துவைச் சாராமல், தங்கள் சுயத்தையே சார்ந்துகொள்கின்றனர். அவர்கள் தங்கள் சுயநீதியில் பலமுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலமுள்ளவர்கள் அல்ல. இப்படிப்பட்ட மனிதன், தனக்குள்ளே வேரில்லாதவனாக இருக்கிறான். ஏனெனில், கிறிஸ்துவுடன் அவன் இணைக்கப்படவில்லை. (36)

கடினமான விதையைப் பலப்படுத்தி, முதிரச்செய்கின்ற கோடை காலத்து வெயிலின் வெப்பம் ஆழமாக வேர்விடாத செடிகளை அழித்துப்போடுகிறது. "கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்"–மத்தேயு 13:20,21. அநேகர் சுவிசேஷத்தை பாவத்திலிருந்து மீட்கும்படியாக ஏற்றுக்கொள்ளாமல், தங்கள் துன்பங்களிலிருந்து தப்பிக்கும் ஒரு வழியாக ஏற்றுக்கொள்கின்றனர். அவர்கள் தங்கள் கஷ்டங்களையும் சோதனைகளையும் தாங்கள் சார்ந்துள்ள மதம் விடுவிக்குமென்று நினைத்து, சிலகாலம் மகிழ்ந்திருப்பார்கள் வாழ்க்கை சுமூகமாகச் செல்லும்போது, முரணற்ற கிறிஸ்தவர்கள்போன்று காணப்படுவார்கள்; ஆனால், அக்கினிமயமான சோதனையின்போது, தளர்ந்துவிடுகின்றனர். கிறிஸ்துவினிமித்தம் அவர்களால் நிந்தையைச் சுமக்க இயலாது. வாஞ்சையோடு மனதில் காத்துவந்த பாவத்தைக்குறித்தோ, சுயத்தை வெறுப்பதைக்குறித்தோ, தியாகத்தைக்குறித்தோ, கர்த்தருடைய வார்த்தை சுட்டிக்காட்டும்போது, இடறலடைகின்றனர். தங்கள் வாழ்க்கையில் ஒரு தீவிர மாற்றத்தைக் கொண்டுவர அவர்கள் அதிகமான முயற்சியை மேற்கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அப்போது ஏற்படும் அசௌகரியங்களையும் சோதனைகளையும் பார்த்து, நித்தியத்திற்கடுத்த உண்மைகளை மறந்துவிடுகின்றனர். கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்த சீடர்கள்: "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்" (யோவான் 6:60) என்று கூறியதுபோல் இவர்களும் கூறிட ஆயத்தமாகிவிடுகின்றனர். (37)

தேவனுக்கு ஊழியஞ்செய்கிறோம் என்று கூறும் அநேகரிடத்தில் அவரைக் குறித்த அனுபவ அறிவு இல்லை. கர்த்தருடைய சித்தத்தைச் செய்யவேண்டுமென்ற அவர்களுடைய வாஞ்சை அவர்களுடைய சொந்த விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதேதவிர, பரிசுத்த ஆவியான வரின் நடத்தையுடனும் தேவனுடைய கற்பனையோடும் இணக்கம் பெறுவது இல்லை. அவர்கள் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளதாகக் கூறுகின்றபோதிலும், பாவங்களை மேற்கொள்ளும் வல்லமையை அவர் வழங்குகிறார் என்பதை விசுவாசிப்பதில்லை. ஜீவனுள்ள இரட்சகருடன் ஒரு தனிப்பட்ட உறவு அவர்களிடத்தில் இல்லாததினால், அவர்களுடைய குணத்திலே பரம்பரை, மற்றும் பழக்கப்படுத்திய குறைகள் வெளிப்படுகிறது. (38)

பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டிற்கு பொதுவான முறையில் சம்மதம் அளிப்பது ஒரு காரியம். கடிந்துரைப்பதுபோன்று மனந்திரும்புதலுக்கு அழைக்கும் அவரது ஊழியத்தை ஏற்றுக்கொள்ளுவது வேறொரு

காரியம். தேவனைவிட்டு முறிந்துபோன உறவுகுறித்த உணர்வைப்பெற்ற அநேகர் இருக்கின்றனர். தாங்கள் பாவத்திற்கும், சுயத்திற்கும் அடிமைப் பட்டிருக்கிறதை உணருகின்றனர். சீர்த்திருத்தங்களுக்கான முயற்சி எடுக்கும் அநேகர், சுயத்தை சிலுவையில் அறைகிறதில்லை. அவருடைய சித்தத்தைச் செய்வதற்கான தெய்வீகவல்லமையை நாடி முற்றிலுமாக கிறிஸ்துவின் கரங்களில், தங்களை ஒப்படைக்கிறதில்லை. தெய்வீக சாயலின்படி வார்க்கப்படவேண்டுமென்ற விருப்பம் அவர்களுக்கு இல்லை. பொதுவாக தங்கள் குறைபாடுகளை ஒத்துக்கொள்கின்றனர்; ஆனால், குறிப்பிட்ட சில பாவங்களை விட்டுவிடுகிறதில்லை. ஒவ்வொரு தவறான செயலுடனுங்கூட பழைய தன்னலமான இயல்பு பலம்பெற்றுக்கொள்கிறது. (39)

இப்படிப்பட்ட நபர்களுக்கு இருக்கின்ற ஒரே நம்பிக்கை, "நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும். ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான்" (யோவான் 3:7,3) என்று கிறிஸ்து நிக்கொதேமுவிற்குக் கூறிய வார்த்தைகளில் காணப்படும். (40)

உண்மையான பரிசுத்தம் என்பது முழுமையாக தேவனுக்கு ஊழியஞ்செய்வதாயிருக்கிறது. உண்மையான கிறிஸ்தவ ஜீவியத்தின் நிலை இதுவே. தங்குதடையற்ற அர்ப்பணிப்பையும் பிளவுபடாத சேவையையும் கிறிஸ்து வேண்டுகிறார். அவர் இதயத்தையும், மனதையும், ஆத்துமா வையும், முழு பலத்தையும் உரிமையுடன் கேட்கிறார். சுயத்தை நெஞ்சார சேவிக்கக்கூடாது. தனக்குத்தானே வாழ்பவன் கிறிஸ்தவன் அல்ல. (41)

செயலின் அடிப்படைக் கொள்கை அன்பாக இருக்கவேண்டும். பரலோகத்திலும் பூலோகத்திலும் தேவனுடைய அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையாக அன்பு இருக்கிறது. அதுவே கிறிஸ்தவனுடைய குணத்தின் அஸ்திவாரமாக இருக்கவேண்டும். அதுமாத்திரமே அவனை உறுதி உள்ளவனாக உருவாக்கிக் காத்துக்கொள்ளமுடியும். அதுமாத்திரமே, சோதனைகளையும் துன்பங்களையும் எதிர்கொள்ள உதவிசெய்யும். (42)

அன்பானது தியாகத்திலே வெளிப்படும். இரட்சிப்பின் திட்டம் மிகவும் அகலமான—ஆழமான—உயரமான—அளவிடப்படமுடியாத தியாகபலியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. கிறிஸ்து நமக்காக எல்லாவற்றையும் கொடுத்ததுபோல், அவரை ஏற்றுக்கொள்ளுகிற அனைவரும் இரட்சகரின் நிமித்தம் எல்லாவற்றையும் தியாகஞ்செய்ய ஆயத்தமாக இருக்கவேண்டும். அவருக்கு கனத்தையும் மகிமையையும் செலுத்தும் எண்ணம், மற்ற எல்லாக் காரியங்களைக்காட்டிலும் தியாகம் முதன்மையானதாக இருக்கவேண்டும். (43)

நாம் இயேசுவை நேசித்தால், அவரைப்போல் ஜீவிக்க விரும்புவோம். அவருக்கு ஸ்தோத்திர காணிக்கைகளைச் செலுத்தி அவருக்காக உழைப்போம். அந்த உழைப்பு இலகுவாயிருக்கும். அவர் நிமித்தம் நாம் வேதனையையும், கடும்உழைப்பையும், தியாகத்தையும் வாஞ்சிப்போம். மக்களின் இரட்சிப்பைக்குறித்து அவருக்கு இருக்கும் வாஞ்சையில் நாமும் பங்குபெறுவோம். அவரைப்போன்று நாமும் ஆத்துமாக்களை இரட்சிக்கவேண்டுமென்பதில் தணியாத ஆவலைக் காட்டுவோம். (44)

இதுவே கிறிஸ்துவின் மார்க்கமாகும். இதற்குக் குறைவானது எதுவும் வஞ்சனையே. சத்தியத்தைக்குறித்த வெறும் கோட்பாடுகளும், சீடத்துவங் குறித்த பறைசாற்றுதலும் எந்த ஒரு ஆத்துமாவையும் இரட்சிக்காது. நாம் முழுமையாக கிறிஸ்துவினுடையவர்களாக மாறாதபட்சத்தில், அவருக்குச் சொந்தமானவர்கள் அல்ல. கிறிஸ்தவ ஜீவியத்தில் அரைமனமுள்ளவர்களாக இருப்பதினால் மனிதர் தங்களது நோக்கத்தில் பெலவீனமுள்ளவர்களாயும் விருப்பத்தில் மாறக்கூடியவர்களாயும் இருக்கின்றனர். சுயத்திற்கும் கிறிஸ்துவிற்கும் ஊழியஞ்செய்ய எடுக்கப்படும் முயற்சி, அந்த நபரை கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்ட விதையைப்போன்று சத்தியத்தைக் கேட்கிறவராக மட்டுமே மாற்றுகின்றது. சோதனை அவர்மீது வரும்போது அவரால் தாங்கிக்கொள்ள முடியாது. (45)

## முள்ளுள்ள இடங்கள்

“முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப்போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்”– மத்தேயு 13:22. (46)

அநேக சந்தர்ப்பங்களில் சுவிசேஷ விதை முட்களின் மத்தியிலும் நச்சுத்தன்மைவாய்ந்த களைகளுக்கு மத்தியிலும் விழுந்துவிடுகிறது. மானிட இதயத்தின் ஒழுக்கநிலையில் ஒரு மாற்றம் ஏற்படாதபட்சத்தில், பழைய பழக்க வழக்கங்களும் நடவடிக்கைகளும் முந்தைய வாழ்க்கையின் பாவங்களும் பின்னாக விட்டுவிடப்படாவிட்டால், சாத்தானின் இயல்புகள் ஆத்துமாவினின்று வெளியேற்றப்படாவிட்டால், கோதுமைப் பயிர் நெருக்கப்படும். முட்கள் வளர்ந்து அவையே பயிராக மாறி கோதுமைப் பயிரை அழித்துவிடும். (47)

விலைமதிப்புள்ள சத்தியமாகிய விதைகளை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதற்கு பழக்கப்படுத்தப்பட்டுள்ள இதயத்தில்தான் தேவகிருபை விருத்தியடையமுடியும். பாவமாகிய முட்கள் எந்த நிலத்திலும் வளரும். அவைகளுக்கு எந்த பராமரிப்பும் அவசியமில்லை; ஆனால், கிருபையானது

ஜாக்கிரதையாக பராமரிக்கப்பட வேண்டும். முட்களும், நெருஞ்சில்களும் எழும்புவதற்கு எப்போதும் ஆயத்தமாக இருக்கின்றபடியால், சுத்திகரிப்பின் வேலை எப்பொழுதும் தொடர்ந்து முன்னேறிக்கொண்டே இருக்கவேண்டும். இதயம் தேவனுடைய கட்டுப்பாட்டில் வைக்கப்படாமலிருந்தால், பரிசுத்த ஆவியானவர் தடையின்றி கிரியை செய்து, குணத்தைப் பண்படுத்தி, கண்ணியப்படுத்தாதிருந்தால், பழைய பழக்கங்கள் வாழ்க்கையில் வெளிப்பட ஆரம்பிக்கும். சுவிசேஷத்தை விசுவாசிப்பதாக மனிதர் வெளிப்படையாக கூறிக்கொள்ளலாம்; ஆனால், அவர்கள் சுவிசேஷத்தினால் பரிசுத்தப்படாவிட்டால் எந்த பிரயோஜனமும் இல்லை. அவர்கள் பாவத்தை ஜெயங்கொள்ளவில்லையென்றால், பாவம் அவர்களை ஜெயங்கொள்ளும். முட்கள் வேருடன் பிடுங்கப்படாமல் வெறுமனே வெட்டப்படும்போது, அவை துரிதமாக வளர்ந்து, ஆத்துமாவை முற்றிலுமாக மூடிவிடும். (48)

ஆத்துமாவிற்கு அபாயத்தை விளைவிக்கக்கூடிய காரியங்கள் குறித்து கிறிஸ்து சுட்டிக்காட்டியிருக்கிறார். மாற்கு தமது புத்தகத்திலே உலகக் கவலைகள், ஐசுவரியத்தின் மயக்கம், மற்றவைகளின்மீது கொண்டுள்ள இச்சைகள் ஆகியவைகளைப்பற்றி எழுதியிருக்கின்றார். பிரபஞ்சத்திற்குரிய கவலைகள், ஐசுவரியங்கள், இவ்வுலக வாழ்வின் சிற்றின்பங்கள் ஆகியவைகளை லூக்கா குறிப்பிடுகின்றார். வளர்கிற ஆவிக்குரிய விதையாகிய வசனத்தை நெருக்கிப் போடுபவை இவைகளே. ஆத்துமா கிறிஸ்துவினிடத்திலிருந்து ஊட்டச்சத்தை பெறுவதை நிறுத்தும்போது, இதயத்தில் ஆவிக்குரிய மரணம் சம்பவிக்கிறது. (49)

### உலகக்கவலை

இந்த உலகில் எந்த ஒரு வகுப்பினரும் உலகக்கவலைகளிலிருந்து விடுபட்டவர்களாக இல்லை. ஏழை மக்களுக்கு கடும் உழைப்பும், இழப்பும், தேவைகுறித்த பயமும் மனக்கலக்கத்தையும் பாரத்தையும் கொண்டுவருகிறது. பணக்காரர்களுக்கு நஷ்டம்குறித்த, மேலும் திரளான காரியங்களைக்குறித்த பயமுண்டு. கிறிஸ்துவைப் பின்பற்றும் பலர், அவர் வயல்களிலுள்ள மலர்கள்மூலமாக நமக்குக் கற்றுத்தரும் பாடத்தை மறந்துவிடுகின்றனர். அவருடைய தொடர்ச்சியான பராமரிப்பில் அவர்கள் உறுதியாக நம்பிக்கை வைக்கிறதில்லை. அவர்கள் தங்கள் பாரத்தை கிறிஸ்துவின்மீது சுமத்தாததினால் அவரால் அதைச் சுமக்க இயலாது; எனவே, இவ்வுலக வாழ்வின் கவலைகள் உதவியையும் ஆறுதலையும் பெறத்தக்கதாக மீட்பரிடத்திற்கு விரைந்து அனுப்பிவைப்பதற்குப்பதிலாக, அவரிடத்தினின்று அவர்களை பிரித்துவிடுகிறது. (50)

தேவனுக்குச் சேவைசெய்து கனிகொடுக்கக்கூடிய பலர் ஆஸ்தியைச் சேர்ப்பதில் தீவிரமாக இறங்கிவிடுகிறார்கள். தொழில் சார்ந்த கடும் முயற்சிகளிலே தங்களது அனைத்து சக்தியையும் மூழ்கடித்து விடுகிறார்கள். அதன்விளைவாக ஆவிக்குரிய தன்மையுள்ள காரியங்களை அலட்சியம் செய்யும்படியாகக் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். இவ்விதமாக, அவர்கள் தங்களை தேவனிடமிருந்து விலக்கிவிடுகிறார்கள். "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள் என்று வேதவாக்கியங்களால் நாம் வற்புறுத்தப்படுகிறோம்"—ரோமர் 12:11. தேவையிலிருக்கிற நபருக்கு கொடுக்கும்படி நாம் உழைக்கவேண்டும். கிறிஸ்தவர்கள் பாவஞ்செய்யாத வகையில் வேலையிலும், வியாபாரத்திலும் கண்டிப்பாக ஈடுபடுதல் அவசியம்; ஆனால், பலர் தங்கள் வியாபாரத்தில் மெய்மறந்து மூழ்கிவிடுகிறபடியால் அவர்களுக்கு ஜெபிப்பதற்கும், வேதம் வாசிப்பதற்கும், தேவனைத் தேடுவதற்கும், அவரைச் சேவிப்பதற்கும், நேரமில்லாமல் போய்விடுகிறது. சில சந்தர்ப்பங்களில் ஆத்துமா பரிசுத்தத்திற்காகவும் பரத்திற்கடுத்த காரியங்களுக்காகவும் ஏங்குகிறது; ஆனால் தேவஆவியானவரின் கம்பீரமான தனிச்சிறப்பு வாய்ந்த கூற்றுகளுக்குச் செவிசாய்க்கும்படி இவ்வுலகத்தின் இரைச்சல்களினின்று ஒதுங்கிவிலக நேரமில்லை. நித்தியத்திற்கடுத்த காரியங்கள் கீழ்த்தரமாக வைக்கப்பட்டு, இவ்வுலகத்திற்கடுத்த காரியங்கள் மிகவும் உயர்வானதாக மதிக்கப்படுகின்றன. வசனமாகிய விதை கனிகொடுக்க இயலாமற் போய்விடுகிறது; ஏனெனில், இந்த உலகியல் சார்ந்த உலகப்பற்று என்னும் முட்களுக்கு ஊட்டம் கொடுப்பதற்காக ஆத்துமாவின் ஜீவன் அளிக்கப்படுகிறது. (51)

மிக வித்தியாசமான நோக்கத்திற்காக உழைத்துக்கொண்டிருக்கும் அநேகர் இதுபோன்ற ஒரு தவறில் விழுகின்றனர். அவர்கள் பிறர்நலனுக்காக உழைத்துக்கொண்டிருக்கிறார்கள்; அவர்களது கடமைகள் அவர்களை அழுத்திக்கொண்டிருக்கின்றன; இவர்களுக்கு ஏராளமான பொறுப்புகள் இருக்கின்றன; பக்தியை வெளியே தள்ளிவிடும்படி அவர்கள் உழைப்பின் பாரத்தை அனுமதிக்கிறார்கள். ஜெபத்தின்மூலமாக தேவனுடன் தொடர்பு கொள்வதையும், அவருடைய வார்த்தையைப் படிப்பதையும் அலட்சியப்படுத்து கிறார்கள். "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோவான் 15:5) என்று கிறிஸ்து கூறியிருப்பதை மறந்துவிடுகிறார்கள். இவர்கள் கிறிஸ்துவைவிட்டு வழிவிலகி நடக்கிறார்கள். கிறிஸ்துவின் கிருபையினால் இவர்களுடைய ஜீவியம் ஊடுருவப்படவில்லை. சுயத்தின் இயல்புகளின் விருப்பத்தினாலும், அடங்காத இதயத்தின் கடினமான இனிமையற்ற குணங்களாலும் இவர்களுடைய சேவை கேடடைகிறது. கிறிஸ்தவ உழைப்பில் ஏற்படும் தோல்விக்கான முக்கிய இரகசியங்களில்

இதுவும் ஒன்று. இதன் நிமித்தமே பல சமயங்களில் பலன்கள் மிகக் குறைவாகவே கிடைக்கின்றன. (52)

## ஐசுவரியத்தின் மயக்கம்

ஐசுவரியத்தின்மேல் உள்ள ஆவல், மயக்குகின்ற வஞ்சிக்கின்ற ஒரு வல்லமையாக இருக்கின்றது. உலக ஆஸ்தியுடையவர்கள், ஆஸ்தியைப் பெறுவதற்கான சக்தியை தேவன் தருகிறார் என்பதை அடிக்கடி மறந்துவிடுகிறார்கள். "என் சாமர்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது" (உபாகமம் 8:17) என்கிறார்கள். அவர்களின் ஆஸ்தி, தேவனுக்கு நன்றி தெரிவிக்கும்படி அவர்களைத் தூண்டாமல், அவர்களை உயர்த்தும்படிக்கே வழிநடத்துகிறது. சகமனிதர் களுக்குச் செய்யவேண்டிய கடமையையும் தேவன்மீது சார்ந்திருக்க வேண்டுமென்ற உணர்வையும் இழந்துவிடுகிறார்கள். ஆஸ்தியைக்கொண்டு மனுக்குலத்தை உயர்த்தவும், தேவநாமத்தை மகிமைப்படுத்தவும் அதை ஒரு கருவியாக பயன்படுத்தாமல், தங்களைமாத்திரம் திருப்திப்படுத்தும் பொருளாக உபயோகிக்கின்றனர். தேவனுடைய இயல்புகளை மனிதனில் தோற்றுவிப்பதற்குப்பதிலாக, சாத்தானுடைய இயல்புகளை அது தோற்றுவிக்கிறது. வசனமாகிய விதை முட்களால் நெருக்கப்படுகிறது. (53)

## பிரபஞ்சத்திற்குரிய சிற்றின்பங்கள்

வெறுமனே சுயதிருப்திக்காக நாடப்படும் பொழுதுபோக்கில் ஆபத்து இருக்கின்றது. அது, சரீரசக்தியை பெலவீனப்படுத்தி, மனதை இருளடையச் செய்கிறது. ஆவிக்குரிய உணர்ச்சிகளை உணர்விழக்கச் செய்யும் எல்லா சிற்றின்ப பழக்கங்களும் "ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிறது" (1 பேதுரு 2:11) என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். (54)

## மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சை

இத்தகைய காரியங்கள் தன்னில்தானே பாவமுள்ளவைகளாக இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. ஆனால், தேவ இராஜ்யத்திற்குப் பதிலாக எது முதன்மையாக வைக்கப்படுகிறதோ அது பாவமாகக் கருதப்படுகிறது. தேவனைவிட்டு மனதை கவர்ந்திழுக்கக்கூடிய எந்த ஒரு பொருளும், கிறிஸ்துவைவிட்டு தூரப்படுத்தும் எந்த ஒரு பாசமும், ஆத்துமாவின் விரோதியாக எண்ணப்படுகிறது. (55)

மனது இளமையாகவும், சக்தியானதாகவும், துரித முன்னேற்றத்திற்கு இடமளிக்கிறதாகவும் இருக்கும்போது, சுயத்தை நேசிக்கவும், அதற்குச் சேவைசெய்யவும் பேராவல்கொள்ளக்கூடிய மாபெரும் சோதனையிருக்கிறது.

உலகப்பிரகாரமான திட்டங்கள் வெற்றியுடையதாக இருக்குமானால், மனச்சாட்சியை மரத்துப்போகச்செய்கின்ற வழியிலே தொடரத்தக்கதான நாட்டம் ஏற்படுகிறது. மேலும் உண்மையிலேயே மேம்பாடான குணத்தை எக்காரியங்கள் அமைத்து உருவாக்குகிறதென்பதைக்குறித்து, ஒரு சரியான மதிப்பீடுசெய்வதை தடுத்துவிடுகிறது. சூழ்நிலைகள் இத்தகையை முன்னேற்றத்திற்கு அனுகூலஞ்செய்யும்போது, தேவனுடைய வசனத்தினால் தடைசெய்யப்பட்ட இலக்கைநோக்கி வளர்ச்சி காணப்படும். (56)

பிள்ளைகளுடைய வாழ்க்கையிலே எண்ணப்பதிவுகள் ஏற்பட்டு அவர்கள் உருவாக்கப்படுகின்ற காலக்கட்டத்திலே பெற்றோருடைய பொறுப்பு மிகவும் முக்கியமானதாகும். இளைஞர்கள் வாழ்க்கையையும் அதின் உண்மையான வெற்றியையும்பற்றின சரியான கருத்துக்களைக் கொடுக்கக்கூடிய செல்வாக்குகளால் சூழப்பட்டிருக்க வேண்டும் என்பதே பெற்றோருடைய அன்றாட ஆராய்ச்சியாக இருக்கவேண்டும். இதில் கவனஞ்செலுத்தாமல் எண்ணிக்கையில் அதிகமான பெற்றோர்கள் உலக ஆஸ்தியை தங்கள் பிள்ளைகளுக்குச் சேர்ப்பதையே தங்கள் முதல் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். அவர்களது அனைத்துக் கூட்டுறவுகளும் இந்தக் குறிக்கோளை மனதில் வைத்தே தெரிவுசெய்யப்படுகின்றன. அநேக பெற்றோர்கள் பெரிய நகரத்தில் தங்கள் இல்லத்தை அமைத்து, நாகரீக சமுதாயத்தை தங்கள் பிள்ளைகளுக்கு அறிமுகஞ்செய்கின்றனர். உலகப்பற்றையும் பெருமையையும் ஊக்குவிக்கின்ற செல்வாக்குகள் அவர்களைச் சூழ்ந்திருக்கும்படியாகச் செய்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் மனதும் ஆத்துமாவும் வளர்ச்சிகுன்றிப்போய்விடுகின்றது. வாழ்வின் உயர்ந்த, கண்ணியமான இலட்சியங்கள் பார்வையிலிருந்து மறைந்துவிடுகிறது. தேவனுடைய பிள்ளைகளின் நித்திய சுதந்தரவாளிகளென்ற சிறப்புரிமை உலக ஆதாயத்திற்காகப் பண்டமாற்றம் செய்யப்படுகிறது. (57)

அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் மகிழ்ச்சியை ஊக்குவிக்க முற்பட்டு, பொழுதுபோக்கின்மீது அவர்களுக்குள்ள ஆசையை தீர்த்துவைக்க முயற்சிக்கின்றனர். விளையாட்டுகளில் கலந்துகொள்ளவும், கேளிக்கைவிருந்துகளில் கலந்துகொள்ளவும் அவர்களுக்கு அனுமதி கொடுத்தும், சுயத்தைத் திருப்திப்படுத்தவும் கவர்ச்சியான காட்சிகளுக்காகத் தாராளமாக செலவுசெய்வதற்கும் பணம்கொடுத்தும் ஊக்குவிக்கின்றனர். மனவாஞ்சையின்படி இன்பமளிக்கும் காரியங்களில் ஈடுபடும்போது, அந்த வாஞ்சை மேலும் வலுப்பெறுகிறது. பொழுதுபோக்குகளில் இந்த வாலிபர்கள் அதிகமதிகமாக ஆர்வம்கொண்டு அதில் மூழ்கி, இறுதியில் அந்த பொழுதுபோக்கையே வாழ்வின் மாபெரும் குறிக்கோளென்று

நோக்கிப்பார்க்கும் நிலைக்கு வந்துவிடுகின்றனர். சோம்பல், தங்குதடையற்ற இன்பங்களில் ஈடுபடுதல் ஆகிய பழக்கங்களையும் குணங்களில் உருவாக்கி, ஒரு திடமான கிறிஸ்தவர்களாக என்றுமே மாறக்கூடாத நிலைக்கு அவர்கள் வந்துவிடுகின்றனர். (58)

சத்தியத்தின் தூணாகவும் இருப்பிடமாகவும் திகழவேண்டிய திருச் சபையுங்கூட சிற்றின்பத்தின்மீது கொண்டுள்ள தன்னலமான அன்பை ஊக்குவிப்பதாகவே தெரிகிறது. மார்க்கசம்பந்தமான நோக்கங்களுக்காக பணம் திரட்டும்போது, அநேக சபைகள் எவ்வாறான வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றன? கடைவீதிகளுக்கு செல்வதற்கும், இரவு விருந்துகளில் கலந்துகொள்வதற்கும், விநோதசந்தைகளில் பங்குபெறுவதற்கும், குலுக்குச் சீட்டு பரிசுமுறை போன்ற திட்டங்களுக்கும் சபையார்கள் வழிநடத்தப் படுகின்றனர். விருந்துண்பதிலும், குடிப்பதிலும், வாங்குவதிலும், விற்பதிலும், களியாட்டங்களில் ஈடுபடுவதிலும் அடிக்கடி தேவனைத் தொழுதுகொள்ளும் ஸ்தலம் தீட்டுப்படுத்தப்படுகிறது. வாலிபர் மனதிலே தேவனுடைய வீட்டின் மேல் இருக்கவேண்டிய மரியாதையும், அவரைத் தொழுதுகொள்வதில் இருக்கவேண்டிய பக்தியும் கனமும் குறைந்துவிடுகிறது. சுயக்கட்டுப் பாட்டிற்கான தடைகள் பலவீனப்படுத்தப்படுகிறது. சுயநலம், இன்சுவை கவர்ச்சிகள், விளம்பரத்தின்மேல் ஆவல் போன்றவைகள் ஊக்குவிக்கப்பட்டு, அவைகளில் ஈடுபடும்போது அவைகள் மேலும் வலுப்பெறுகின்றன. (59)

சிற்றின்பம் மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றை ஊக்குவிக்கும் மையங்கள் இன்றைய நகரங்களில் காணப்படுகின்றன. நகர வாழ்க்கை தங்கள் பிள்ளைகளுக்கு அதிக நன்மை பயக்குமென்று கருதி, நகரத்தில் வீட்டைத் தெரிந்தெடுக்கும் அநேக பெற்றோர்கள், ஏமாற்றத்தைச் சந்தித்து, அதிக காலதாமதத்திற்குப்பிறகு தங்களது மாபெரும் தவறுகளை உணர்கின்றனர். இன்றைய நகரங்கள் சோதோம், கொமோரா பட்டணங்களைப்போல வேகமாக மாறிவருகின்றன. அநேக விடுமுறைநாட்கள் சோம்பலை ஊக்குவிக்கின்றன. ஊக்கமளிக்கும் விளையாட்டுகள், சினிமா காட்சிகளுக்காக திரையரங்கம் செல்லுதல், குதிரைப்பந்தயங்களில் பங்குபெறுதல், சூதாட்டத்தில் ஈடுபடுதல், மதுபானம் அருந்துதல், களியாட்டத்தில் ஈடுபடுதல் போன்றவை ஒவ்வொரு இச்சையையும் தூண்டி தீவிரமாகச் செயல்படச்செய்கிறது. வாலிபர்கள் பிரபலமான நிகழ்காலத்திற்குரிய காரியங்களால் அடித்துச் செல்லப்படுகிறார்கள். பொழுதுபோக்கை பொழுதுபோக்கிற்காக விரும்பிப் பின்பற்றுபவர்கள் சோதனைகளின் மதகுகளை தாங்களே திறந்துவிடுகிறார்கள். சிந்தனையற்ற மகிழ்ச்சிக்கும் சமூக உல்லாசத்திற்கும் இடமளித்து, சிற்றின்பப் பிரியர்களோடு தொடர்பு ஏற்படும்போது, அவர்களது மனங்களில்

மதிமயக்கும் வெறி தூண்டப்படுகிறது. ஒருவகையான கீழ்த்தர இன்பத்திற்கு ஈர்க்கப்பட்டு, இறுதியில் பயனுள்ள வாழ்க்கை வாழ்வதற்கான தகுதியையும் வாஞ்சையையும் இழந்துவிடுகின்றனர். அவர்களது ஆவிக்குரிய வாஞ்சைகள் குளிரடைந்து இருண்டுபோய்விடுகின்றன. ஆத்துமாவின் அனைத்து உயரிய திறமைகளும், மனிதனை ஆவிக்குரிய உலகோடு இணைக்கும் அனைத்துக் காரியங்களும் இழிநிலையை அடைந்துவிடுகின்றன. (60)

சிலர் தங்கள் மதியீனத்தை உணர்ந்து மனந்திரும்புவது உண்மைதான். தேவனும் அவர்களை மன்னிக்கலாம்; ஆனால் அவர்கள் தங்கள் சொந்த ஆத்துமாக்களைக் காயப்படுத்தி, வாழ்நாள் முழுவதும் தொடரக்கூடிய இன்னலை தங்கள்மீது வருவித்துக்கொண்டார்கள். எது சரி அல்லது எது தவறென்ற காரியத்தை வேறுபடுத்திக் கண்டறியத்தக்கதான பகுத்தறிவு கூர்உணர்வோடும் முனைப்போடும் என்றும் காக்கப்படவேண்டும். அத்தகைய பகுத்தறிவு பெருமளவில் அழிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டும் குரலை விரைவாகப் புரிந்துகொள்ள முடியாதவர்களாயும் சாத்தானுடைய உபாய தந்திரங்களைத் தெளிவாக கண்டறிய முடியாதவர்களாயும் இருக்கின்றனர். பலமுறை ஆபத்துநேரங்களில் சோதனையில் விழுந்து, தேவனைவிட்டு விலகிச்செல்லும்படி நடத்தப் படுகின்றனர். சிற்றின்பப் பிரியர்களாக வாழ்கின்ற அவர்களது முடிவு, இந்த உலக வாழ்வு, வரப்போகும் உலக வாழ்வு ஆகிய இரண்டையுமே அழித்துப்போடுகிறது. (61)

கவலைகள், ஐசுவரியம், சிற்றின்பங்கள் போன்றவைகளை உபயோகித்து மனித ஆத்துமாவோடு சாத்தான் விளையாடுகிறான். "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமை யுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" (1யோவான் 2:15,16) என்று வேதாகமம் நம்மை எச்சரிக்கின்றது. மனிதரின் இதயங்களைத் திறந்த புத்தகம்போன்று அறிந்துகொள்பவர்: "உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" (லூக்கா 21:34) என்று சொல்கிறார். பரிசுத்த ஆவியானவர் துணையோடு அப்போஸ்தலனாகிய பவுல்: "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான

பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார் கள்" (1 தீமோ. 6:9,10) என்று எழுதுகிறார். (62)

விதைப்பதினால் வருகின்ற பலதரப்பட்ட விளைவுகள் நிலத்தைச் சார்ந்தே இருக்கின்றன என்பதை விதைப்பவனின் உவமை முழுவதிலும் கிறிஸ்து எடுத்துக்காட்டுகிறார். ஒவ்வொரு நிலையிலும் விதைப்பவரும் விதையும் ஒன்றே. இவ்விதமாக, தேவனுடைய வார்த்தை நம்முடைய இதயங்களிலும் ஜீவியங்களிலும் அதன் வேலையைச் செய்யத் தவறுகிறபோது, அதற்கான காரணம் நம்மிலே கண்டறியப்படவேண்டுமென்று இயேசு கற்பிக்கிறார்; ஆனால், பலன்கள் நமது கட்டுப்பாட்டிற்கும் அப்பால் இருக்கிறதில்லை. நம்மைநாமே மாற்ற இயலாது என்பது உண்மை, ஆனாலும், தெரிந்துகொள்ளும் உரிமை நம்முடையதாயிருக்கிறபடியால், நாம் எப்படி இருப்போம் என்பதை நாமே நிர்ணயிக்கக்கூடியவர்களா யிருக்கிறோம். வழியருகே உள்ள நிலம், கற்பாறை நிலம், முள்ளுள்ள நிலம் ஆகியவைகளைப்போன்று பிரசங்கத்தைச் செவிமடுப்பவர்கள் அவ்வாறே இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. மயக்கநிலையின் பிடி, உலகியல் சார்ந்த பொருளாசையில் மனிதரை மூழ்கடித்திருக்கின்றது. ஆனால், தேவ ஆவியானவர் இத்தகைய மயக்கநிலையின் பிடியினின்று மனிதரை விலக்கி, அழியாத பொக்கிஷத்தை நாடத்தக்கதாக அதற்கேற்ற விழிப்புணர்வை ஏற்படுத்த எப்பொழுதும் வகைதேடிக்கொண்டிருக்கிறார். ஆவியானவரின் வார்த்தைக்கு அலட்சியமாயும், கவனக்குறைவாயும் மாறுகிறவர்கள். நல்ல விதை வேர்விடுவதைத் தடுப்பதற்கும் தீய வளர்ச்சிகள் அதன் முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் காரணமாயிருக்கின்ற அவர்களது இதயக் கடினத்திற்கு அவர்களே பொறுப்பாளிகளாயிருக்கின்றனர். (63)

இதயமாகிய தோட்டம் பண்படுத்தப்படவேண்டும். பாவத்திற்கு ஆழ்ந்த மனந்திரும்புதலை காட்டுவதினிமித்தம் நிலம் உடைக்கப்படவேண்டும். சாத்தானிய விஷச்செடிகள் வேரோடு பிடுங்கப்படவேண்டும். முட்கள் அதிகம் வளர்ந்துள்ள நிலத்தை கடின உழைப்பின் வாயிலாக மாத்திரமே சீர்படுத்த முடியும். அதுபோலவே, சுபாவ இதயத்தின் தீமையான தன்மைகள் இயேசுவின் நாமத்தினாலும் வல்லமையினாலும் எடுக்கப்படும் ஊக்கமான முயற்சியினாலும் மாத்திரமே மேற்கொள்ளப்பட முடியும். தமது தீர்க்கதரிசியின் வாயிலாக: "நீங்கள் முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள், உங்கள் தரிசுநிலத்தைப் பண்படுத்துங்கள்; நீங்கள் நீதிக்கென்று விதைவிதையுங்கள்; தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள்" (எரேமியா 4:3; ஓசியா 10:12) என்று

கர்த்தர் சொல்கிறார். இந்த வேலையை அவர் நம்மிலே செய்துமுடிக்க வாஞ்சையாக இருக்கிறார். அதற்காக நாம் அவரோடு ஒத்துழைக்க வேண்டுமென்று நம்மைக் கேட்கிறார். (64)

விதைவிதைப்பவர்களுக்கு, சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இதயங்களை ஆயத்தம்பண்ணவேண்டிய ஒரு ஊழியம் இருக்கிறது. ஊழியத்தில் ஈடுபடுபவர்கள் அதிக நேரத்தை பிரசங்கஞ்செய்வதில் செலவிடுகிறார்கள். ஆனால், இதயத்தை தொடத்தக்கதான மனம்விட்டு ஒருவருக்கொருவர் இயல்பாகப் பேசுகின்ற ஊழியம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. காணாமற்போன ஆத்துமாக்களுக்கு தனியாள் ஊழியஞ்செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது. கிறிஸ்துவைப்போன்று அனுதாபங்கொண்டவர்களாக நாம் பிறரை தனித்தனியே சந்தித்து, நித்திய ஜீவன்குறித்த—மேலான காரியங்கள்குறித்த ஆவலை எழுப்பவேண்டும். அவர்களுடைய இதயங்கள் இறுகிப்போன நெடுஞ்சாலையைப்போன்று கடினமாயிருக்கலாம். இரட்சகரை இத்தகையோருக்கு அறிமுகப்படுத்துவது தேவையற்ற முயற்சிபோல் தோன்றக் கூடும்; ஆனால், கல்லான இதயத்தை மெதுவாக்கி, சத்தியமாகிய விதை வேரூன்ற தர்க்க சாஸ்திரம் செய்யத் தவறியதை, வாதம் நம்பச்செய்ய இயலாததை, தனியாள் ஊழியத்தில் வெளிப்படும் கிறிஸ்துவின் அன்பு செய்கிறது. (65)

விதைப்பவர்கள், விதை முட்களினிமித்தம் நெருக்கப்படாமலும், மண் ஆழமாக இல்லாததினிமித்தம் அழியாமலுமிருக்க ஏதாவது முயற்சிசெய்து பிரயாசப்பட வேண்டும். கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பக்கட்டத்தில் ஒவ்வொரு விசுவாசிக்கும் அடிப்படைக் கொள்கைகள் கற்றுத்தரப்பட வேண்டும். கிறிஸ்துவின் தியாகபலி இரட்சிக்கப்படுவதற்கு மாத்திரமல்லவென்றும், கிறிஸ்துவின் ஜீவியத்தை தனது ஜீவியமாகவும், அவருடைய குணத்தை தனது குணமாகவும் மாற்ற பிரயாசப்படவேண்டுமென்றும் கற்றுக்கொடுக்கவேண்டும். சுபாவ விருப்பங்களை வெறுத்து, சுமைசுமக்க ஒவ்வொருவருக்கும் கற்றுத்தர வேண்டும். தன்னைத்தான் வெறுத்து, அவரைப் பின்பற்றி, நல்ல போர்ச்சேவகர்களாக கஷ்டத்தை சகித்து, கிறிஸ்துவிற்காக பணிபுரிவது பாக்கியமென்பதை அவர்கள் அறிந்துகொள்ளட்டும். அவருடைய அன்பில் சார்ந்திருந்து தங்கள் பாரத்தை அவர்மேல் சுமத்தக் கற்றுக்கொள்ளட்டும். அவருக்காக ஆத்துமாக்களை ஆதாயஞ்செய்வதிலுள்ள ஆனந்தத்தை அவர்கள் ருசிபார்க்கட்டும். காணாமற்போனவர்கள்மீதுள்ள அன்பினாலும் அக்கறையினாலும் அவர்கள் தங்கள் சுயத்தைக் காணத் தவறுவார்கள். இவ்வுலகத்தின் ஆசாபாசங்கள் கவர்ந்திழுக்கும் சக்தியை இழக்கும்; சத்தியமாகிய ஏர்க்கொழு தன் வேலையைச் செய்யும். அது தரிசு நிலத்தை

உடைக்கும்; அது முட்களின் மேல்பகுதியைமாத்திரம் வெட்டாமல், அவைகளை வேரோடு பிடுங்கும். (66)

## நல்ல நிலம்

விதைப்பவன் எப்போதும் ஏமாற்றத்தைச் சந்திப்பதில்லை. நல்ல நிலத்தில் விழுந்த விதையைக்குறித்து இரட்சகர்: "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக்கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான்" (மத். 13:23) என்றார். "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்"—லூக்கா 8:15. (67)

உவமையில் கூறப்பட்டுள்ள உண்மையும் நன்மையுமான இருதயம் பாவமற்ற ஒரு இதயத்தைக் குறிக்கிறதென்று நினைத்துவிடக்கூடாது; ஏனெனில், சுவிசேஷம் காணாமற்போனவர்களுக்குப் பிரசங்கிக்கப்படுகிறது. "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" (மாற்கு 2:17) என்று கிறிஸ்து சொன்னார். பரிசுத்த ஆவியின் உணர்த்துதலுக்கு இணங்குகிறவனிடத்தில் நேர்மையான இதயமிருக்கிறது. அவன் தன் குற்றத்தை அறிக்கையிட்டு, தேவனுடைய இரக்கமும், அன்பும் தனக்குத் தேவையென்பதை உணருகிறான். சத்தியத்தை எப்படியாவது அறிந்து அதற்குக் கீழ்ப்படியவேண்டுமென்று தன் இதயத்தில் வாஞ்சிக்கிறான். நல்ல இதயம்—நம்பும் ஒரு இதயம்; தேவனுடைய வார்த்தையை இது விசுவாசிக்கும். விசுவாசமில்லாமல் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்வது கூடாதகாரியம். "தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்"—எபிரெயர் 11:16. (68)

நல்ல நிலத்தைப்போன்றவர்கள் வசனத்தைக்கேட்டு அதை விளங்கிக் கொள்கிறார்கள். கிறிஸ்துவின் நாளில் வாழ்ந்த பரிசேயர்கள் காணக்கூடாதபடி கண்களை மூடியும், கேட்கக்கூடாதபடி செவிகளை அடைத்துமிருந்ததால், சத்தியம் அவர்கள் இதயங்களைச் சென்றடையவில்லை. அவர்கள் தாங்களே விரும்பின குருட்டுத்தனத்தினிமித்தமும் அறியாமையினிமித்தமும், வேண்டுமென்றே தங்களை அறியாமையில் வைத்துக்கொண்டதினிமித்தமும் தெய்வீக தண்டனையை அனுபவிக்க வேண்டியதிருக்கும்; ஆனால், தமது உபதேசத்திற்கு அவர்கள் தங்கள் மனங்களைத் திறந்து வைத்திருக்கவும், விசுவாசிப்பதற்கு ஆயத்தமாக இருக்கவும் கிறிஸ்து தம்முடைய சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். அவர்கள் கண்களினால் பார்த்தும், காதுகளினால் கேட்டும் விசுவாசித்தபடியால் அவர்களை அவர் ஆசீர்வதித்தார். (69)

நல்ல நிலத்தைப்போன்று வார்த்தையை ஏற்றுக்கொள்ளும்போது, “அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக்கொள்கிறார்கள்”–1 தெச. 2:13. எந்த நபர் தேவனுடைய குரல் தன்னோடு பேசுவதாக வேதாகமத்தை ஏற்றுக்கொள்கிறாரோ அவர் கற்று கொள்பவராக இருக்கிறார். அது அவருக்கு உயிரோட்டமான உண்மையாக இருப்பதனால், வார்த்தையைக் கண்டு அவர் நடுங்குகிறார். அந்த நபர் நன்றாக விளங்கிக்கொண்டு அதை ஏற்றுக்கொள்வதற்காக இதயத்தைத் திறக்கிறார். இப்படிப்பட்ட குணங்களைக்கொண்ட கொர்நேலியுவும் அவன் நண்பர்களும் அப்போஸ்தலனாகிய பேதுருவிடம், “தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவசமூகத்தில் கூடியிருக்கிறோம்” (அப். 10:33) என்றார்கள். (70)

சத்தியத்தைக்குறித்த அறிவு, விவேகத்தின் பலத்தில் சார்ந்து இராமல், நோக்கத்தின் தூய்மையிலும், எளிமையான விசுவாசத்தை வாஞ்சிப்பதிலும் சார்ந்திருக்கிறது. தாழ்மையான இதயத்தோடு தெய்வீக வழிநடத்துதலைத் தேடுபவர்களுக்கு, தேவதூதர்கள் சமீபிக்கின்றனர். சத்தியத்தின் ஐசுவரிய மான பொக்கிஷங்களை அவர்களுக்கு திறந்துகொடுப்பதற்காக, பரிசுத்த ஆவியானவர் வழங்கப்படுகிறார். (71)

நல்லநிலத்தைப்போன்ற நபர்கள் வார்த்தையைக்கேட்டு அதைக் கைக்கொள்ளுகிறார்கள். சாத்தான், தன் தீய ஏதுகரங்களுடன், அதைப் பறித்துச்செல்ல முடிவதில்லை. (72)

வார்த்தையை வெறுமனே கேட்பதோ அல்லது வாசிப்பதோமட்டும் போதாது. வேதாகமத்திலிருந்து நன்மையைப் பெற விரும்புகிற நபர் தனக்கு வழங்கப்பட்டுள்ள சத்தியத்தைத் தியானிக்கவேண்டும். ஆவலுடன்கூடிய கவனத்தினாலும், ஜெப சிந்தையினாலும் சத்திய வார்த்தைகளின் பொருளை விளங்கி, பரிசுத்த ஆகமங்களில் ஆழ்ந்து பருக வேண்டும். (73)

நமது மனதை உயர்ந்த—சுத்தமான சிந்தனைகளால் நிரப்ப வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார். நாம் அவருடைய அன்பையும் இரக்கத்தையுங்குறித்து தியானித்து, மகா இரட்சிப்பின் திட்டத்தில் அவருடைய அற்புதமான பணியைக்குறித்தும் கற்றுக்கொள்ளவேண்டும் என்று வாஞ்சிக்கிறார். சத்தியத்தைக்குறித்த நமது அறிவு அப்பொழுது மிகவும் தெளிவடைந்து, சுத்த இதயம் மற்றும் தெளிவான சிந்தைகுறித்த நமது வாஞ்சை உயர்வாகி பரிசுத்தமடையும். சுத்தமான சூழ்நிலையில், பரிசுத்த சிந்தையில் தங்கியிருக்கும் ஆத்துமா, வேதாகமத்தைப் படிப்பதின்மூலம் ஏற்படும் தொடர்பினிமித்தம் மாற்றம்பெறும். (74)

வசனத்தைக் கேட்பவர்கள் அதைக் கைக்கொள்ளும்போது, கீழ்ப்படிதல் நிமித்தம் பலன் கொடுக்கின்றனர். தேவனுடைய வார்த்தையை ஆத்துமா ஏற்றுக்கொள்ளும்போது, அது நற்கிரியைகளை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவிற்கு ஒத்த குணமும், ஜீவியமும் அவர்களில் காணப்படும். தம்மைக்குறித்து கிறிஸ்து: "உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" (சங்கீதம் 40:8) என்று கூறினார். "எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறேன்" (யோவான் 5:30) என்றார். "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்" (1யோவான் 2:6) என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. (75)

மனிதனுடைய பரம்பரை மற்றும் அவன் வளர்த்து உருவாக்கிக்கொண்ட குணங்களோடும், வாழ்க்கைப் பழக்கங்களோடும் தேவனுடைய வார்த்தை அநேகமுறை மோதுகிறது; ஆனால், நல்லநிலத்தைப்போன்ற விசுவாசி வார்த்தையை ஏற்றுக்கொள்ளும்போது, அதன் நிபந்தனைகளையும் தேவைகளையும் ஏற்றுக்கொள்ளுகிறான். அவனுடைய பழக்கவழக்கங்களும் செயல்முறைகளும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படுத்தப்படுகிறது. எல்லையுள்ள, தவறக்கூடிய மனிதனின் கற்பனைகளை, எல்லையற்ற தேவனுடைய வார்த்தையோடு ஒப்பிடும்போது, அவன் பார்வையில் அவை தாழ்ந்து அற்பமானதாகப் போய்விடுகிறது. முழு இதயத்தோடு—பிரிக்கப்படாத நோக்கத்தோடு அவன் நித்திய ஜீவனைத் தேடும்போது, இழப்பையும், உபத்திரவத்தையும், மரணத்தையுங்கூட பொருட்படுத்தாது சத்தியத்திற்குக் கீழப்படிகிறான். (76)

அவன் பொறுமையோடே கனி கொடுக்கிறான். தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளும் எந்த ஒரு மனிதனும் கஷ்டத்திலிருந்தோ, சோதனையிலிருந்தோ தவிர்க்கப்படுவதில்லை; ஆனால், துன்பம் வரும்போது, மெய் கிறிஸ்தவன் அமைதியற்று—அவநம்பிக்கையோடு—மனச்சோர்வோடு இருப்பதில்லை. காரியங்களின் திட்டமான விளைவை காணமுடியாவிட்டாலும், அல்லது தேவ வழிநடத்துதலின் நோக்கத்தை அறியமுடியாவிட்டாலும், நாம் நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது. கர்த்தருடைய மென்மையான இரக்கங்களை நினைவிற்கொண்டு, நம்முடைய பாரத்தை அவர்மேல் சுமத்தி, பொறுமையுடன் அவருடைய இரட்சிப்பிற்காகக் காத்திருக்கவேண்டும். (77)

போராட்டத்தின்மூலமாக ஆவிக்குரிய வாழ்க்கை வலிமை பெறுகிறது. சோதனைகளை நல்லமுறையில் சகிக்கும்போது, தளராத குணமும், விலை மதிப்பற்ற ஆவிக்குரிய கிருபைகளும் வளர்ச்சி பெறும். அடிக்கடி ஆவியின்

கனியாகிய விசுவாசம், சாந்தம், அன்பு ஆகியவைகள் புயல், மேகங்கள் மற்றும் காரிருள் மத்தியில் முதிர்ச்சி பெறுகிறது. (78)

"பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்"–யாக்கோபு 5:7. அதுபோலவே, கிறிஸ்தவனும் தேவ வார்த்தையினால் ஜீவியத்தில் கனிகொடுக்க பொறுமையோடே காத்திருக்க வேண்டும். பலமுறை நாம் ஆவிக்குரிய கிருபைகளுக்காக ஜெபிக்கும்போது, தேவன் நமது ஜெபங்களுக்கு பதில்தர கிரியை செய்து, நாம் அந்தக் கனிகளைப் பெற்று வளர்ச்சியடையக்கூடிய சூழ்நிலைகளில் நம்மை வைக்கிறார்; ஆனால், நாம் அவர் நோக்கத்தை விளங்கிக்கொள்ளாமல், ஆச்சரியப்படுகிறோம்; திகைக்கிறோம். வளர்ச்சி மற்றும் கனிகொடுத்தல் மூலமாக மட்டுமேயன்றி வேறுமுறையில் இந்தக் கிருபைகளில் வளர்வது இயலாது. தேவ வார்த்தையை பெற்றுக்கொண்டு, அதை உறுதியாகப் பற்றிக்கொண்டு, அதன் கட்டுப்பாட்டிற்குள் முற்றிலுமாக நம்மை ஒப்புக்கொடுப்பதே நமது பங்கு; அப்பொழுது அதன் நோக்கம் நம்மில் நிறைவேறும். (79)

"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்"–யோவான் 14:23. அனைத்தையும் தாங்கும் வல்லமையுள்ள ஊற்றோடு நமக்கு ஒரு உயிரோட்டமுள்ள தொடர்பு இருப்பதால், உறுதியாக நிலைத்திருக்கும் ஆற்றல் உடைய ஒரு பூரண சிந்தை நம்மீது அமர்ந்திருக்கும். நம்முடைய தெய்வீக ஜீவியத்தில், நாம் கிறிஸ்துவினால் ஆட்கொள்ளப்பட்டவர்களாக மாறுகிறோம். இனி ஒருபோதும் தன்னலமிக்க சாதாரண வாழ்க்கை வாழ நம்மால் இயலாது; ஏனெனில், கிறிஸ்து நம்மில் ஜீவிக்கிறார். நம்முடைய இயல்பில் அவருடைய குணம் உருவாக்கப்படும். இவ்விதமாக, நாம் முப்பதாகவும், அறுபதாகவும், நூறாகவும் பரிசுத்த ஆவியின் கனிகளைக் கொடுப்போம். (80) ★

# 3

# முன்பு முளையையும் பின்பு கதிரையும்!

**(மூலநூல் : பக்கங்கள் 62–69)**
**மாற்கு 4:26–29**

விதைப்பவனைக்குறித்த உவமை அதிகமான கேள்வியை எழுப்பிற்று. சிலர் அந்த உவமையின்மூலம் கிறிஸ்து இவ்வுலகில் தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்க வரவில்லை என்பதைப் புரிந்துகெண்டனர். பலர் வியப்பிலும் குழப்பத்திலும் மூழ்கினர். அவர்கள் குழப்பத்தைக் கண்ணுற்ற கிறிஸ்து, வேறு உதாரணங்கள்மூலமாக உலக இராஜ்யங்குறித்த மக்களின் சிந்தையை திசை திருப்பி, தேவனுடைய கிருபை எவ்வாறாக ஆத்துமாவில் கிரியைசெய்கிறது என்பதை உணர்த்துவதற்கு தொடர்ந்து வகைதேடிக் கொண்டிருந்தார். (1)

“பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து; இரவில் தூங்கி, பகலில் விழித்திருக்க, அவனுக்குத் தெரியாதவிதமாய், விதை முளைத்துப் பயிரா கிறதற்கு ஒப்பாயிருக்கிறது. எப்படியென்றால், நிலமானது முன்பு முளை யையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய்க் கொடுக்கும். பயிர் விளைந்து அறுப்புக்காலம் வந்தவுடனே, அறுக்கிறதற்கு ஆட்களை அனுப்புகிறான்” (மாற்கு 4:26–29) என்றார். (2)

அறுப்புக்காலம் வந்தவுடனே, அறுக்கிறதற்கு ஆட்களை அனுப்புகிற அந்தக் குடியானவன் கிறிஸ்துவின் பிரதிநிதியாக, அவருக்குப்பதிலாக உழைக்கிறான். விதை முளைத்துப் பயிராவது உழவனுக்குத் தெரியாது; ஆனால், தேவனுடைய குமாரனைப் பொறுத்தமட்டில் இது உண்மையல்ல. கிறிஸ்து தம் பொறுப்பிலுள்ளவர்களைவிட்டு தூங்காமல், இரவுபகலாக விழித்திருக்கிறார். விதையின் வளர்ச்சியைக்குறித்து அவர் தெரியாதவராக இருக்கிறதில்லை. (3)

விதைபற்றிய உவமை இயற்கையில் தேவனுடைய கிரியையைக் குறித்து வெளிப்படுத்துகிறது. விதை தன்னிலே முளைப்பிக்கும் தன்மையைக் கொண்டுள்ளது; தேவன் தாமே அத்தன்மையை உட்புகுத்தியுள்ளார்; எனினும், தனித்து விடப்படும்பட்சத்தில் தானாகவே முளைக்கும் சக்தி அதற்கு இல்லை. பயிர் முளைத்து வளர்வதற்கு மனிதன் தன் பங்கைச் செய்யவேண்டியுள்ளது. அவன் நிலத்தை ஆயத்தப்படுத்தி, வளமுள்ள தாக்கி, பின்னர் விதையைத் தூவவேண்டும். அவன் வயல்களைப் பண்படுத்த வேண்டும்; ஆனால், ஒரு குறிப்பிட்ட நிலைக்குப்பின் அவனால் எதையும் நிறைவேற்ற இயல்வதில்லை. எந்த மனித பலமும் ஞானமும் விதையிலிருந்து உயிருள்ள செடியை முளைப்பிக்கச் செய்ய இயலாது. எவ்வளவு தான் இயலும் உச்சக்கட்ட அளவிற்கு மனிதன் முயற்சிகளை மேற்கொண்டாலும், விதைப்பையும் அறுப்பையும் தமது அதிசயமான தொடர்புகள்கொண்ட சர்வவல்லமையுள்ள சக்தியில் அடக்கியிருக்கும் ஆண்டவரை அவன் சார்ந்திருக்கவேண்டும். (4)

விதையில் உயிர் உள்ளது; நிலத்தில் சக்தி உள்ளது; ஆனால், எல்லையற்ற சக்தி இரவுபகலாக செயல்படாவிடில் விதையால் எந்த பலனையும் கொடுக்க இயலாது. மழைபொழிந்து நிலங்களை ஈரப்படுத்த வேண்டும்; சூரியன் வெப்பத்தை வழங்கவேண்டும். புதைந்திருக்கின்ற விதைக்கு மின்சக்தி வழங்கப்படவேண்டும். உயிரை மனிதனுள் வைத்துள்ள சிருஷ்டிகரால் மாத்திரமே அதனை வெளிக்கொணரமுடியும். தேவனுடைய வல்லமையினால் ஒவ்வொரு விதையும் முளைத்து ஒவ்வொரு செடியும் வளர்கிறது. (5)

“பூமி தன் பூண்டுகளை விளைவிப்பதுபோலவும், தோட்டம் தன்னில் விதைக்கப்பட்டவைகளை முளைவிப்பதுபோலவும், கர்த்தராகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக நீதியையும் துதியையும் முளைக்கப் பண்ணுவார்”—ஏசாயா 61:11. இயற்கையில் காணப்படுவதுபோன்றே, ஆவிக்குரிய விதைப்பில் உண்மையைப் போதிக்கும் போதகர், நிலமாகிய இதயத்தை ஆயத்தப்படுத்தவேண்டும்; அவர் விதையைத் தூவவேண்டும்; ஆனால், உயிரை உற்பத்திச்செய்யக்கூடிய சக்தி தேவனிடத்திலிருந்து மாத்திரமே வருகிறது. ஒரு குறிப்பிட்ட நிலைக்குப்பின் மனித முயற்சி விருதாவாகிவிடுகிறது. நாம் வார்த்தையை போதிக்கும்போது, ஆத்துமாவை உயிர்ப்பிக்கக்கூடிய வல்லமையையோ, நீதியும் துதியும் எழும்பச்செய்யும் சக்தியையோ, நம்மால் வழங்க இயலாது. வசனம் உபதேசிக்கப்படும்போது, மனித சக்திக்கும் அப்பாற்பட்ட ஒரு ஏதுகரம் செயல்படவேண்டும். தெய்வீக ஆவியின்மூலமாக மட்டுமே வசனம் உயிருடனும், வல்லமையுடனும்

செயல்பட்டு ஆத்துமாவை நித்திய ஜீவனுக்கேதுவாக புதுப்பிக்க இயலும். இதையே கிறிஸ்து தமது சீடர்களின் மனதிலே பதியவைக்கவேண்டுமென முயற்சித்தார். சீடர்களின் உழைப்பின் வெற்றிவாய்ப்பு அவர்களின் சக்தியில் இல்லையென்பதையும், அவர் கொடுத்த வசனத்திற்கு ஆற்றலைக் கொடுக்கின்ற, அற்புதங்களை நிகழ்த்தும் தேவனுடைய வல்லமையில் உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார். (6)

விதைப்பவனின் வேலை விசுவாசத்தின் வேலையாயிருக்கிறது. விதை முளைப்பதும், வளர்வதும் அவனால் விளங்கிக்கொள்ள இயலாத இரகசியமாயிருக்கிறது. தாவரங்கள் செழித்து வளர்வதற்கு தேவன் எந்த ஏதுகரங்களை பயன்படுத்துகின்றாரோ அவைகளில் அவனுக்கு நம்பிக்கை இருக்கிறது. விதையை நிலத்தில் தூவுவதினிமித்தம் அவன் தன் குடும்பத்திற்கு உணவாகப் பயன்படக்கூடிய மிகவும் அருமையான தானியத்தைத் தூவுகிறான். தன் கைவசமுள்ள நல்ல பொருளை பின்னர் கிடைக்கக்கூடிய பலனைக் கருத்தில்கொண்டு விட்டு விடுகிறான். பன்மடங்கு அபரிமித அறுவடையை எதிர்பார்த்து அவன் தூவுகிறான். அதுபோலவே, கிறிஸ்துவின் ஊழியக்காரர்களும் தங்கள் உழைப்பின் அறுவடையை எதிர்நோக்கியவர்களாக உழைக்கவேண்டும். (7)

நல்ல விதை, சில காலம் குளிர்ந்த—தன்னலமிக்க—உலகப் பிரகாரமான இதயத்திலே கவனிப்பாரற்று புதைந்துகிடக்கும்; வேர்விட்டிருக்கிறது என்பதற்கான எந்த ஆதாரத்தையும் கொடுக்காமல் இருக்கும். ஆனால், பின்னர் தேவ ஆவியானவர் ஆத்துமாவில் கிரியைசெய்யும்போது, மறைந்திருக்கும் விதை, கிளர்ந்தெழும்பி, இறுதியில் தேவமகிமைக்காக கனிகொடுக்கும். நமது ஆத்தும ஆதாய வேலையிலே இதுவா அல்லது அதுவா எந்த விதை செழித்து வளரும் என்பதை நாம் அறிய இயலாது; இதைத் தீர்மானிக்கவேண்டிய காரியம் நம்முடையதல்ல. நாம் நமது வேலையைச் செய்து, முடிவுகளை தேவனிடத்தில் விட்டுவிடவேண்டும். “காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையை நெகிழவிடாதே”–பிரசங்கி 1:16. தேவனுடைய மாபெரும் உடன்படிக்கை: “பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும்... ஒழிவதில்லை” (ஆதி. 8:22) என்று உறுதியாகக் கூறுகிறது. இந்த வாக்குத்தத்தத்தின்மேல் நம்பிக்கை கொண்டவனாக குடியானவன் நிலத்தைப் பண்படுத்துவதிலும், விதையைத் தூவுவதிலும் ஈடுபடுகிறான்; அதுபோலவே, நம்பிக்கையிலே தளராமல் ஆவிக்குரிய விதை விதைப்பில் ஈடுபட்டுள்ள நாம், “அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான்

அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்" (ஏசாயா 55:11) என்ற வாக்குத்தத்தத்தை நம்பிச் செயல்படவேண்டும். "அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்"—சங்கீதம் 126:6. (8)

விதை முளைத்தல் ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்பத்தைக் குறிக்கிறது. செடியின் வளர்ச்சி கிறிஸ்தவ ஜீவியத்தின் அழகிய வடிவங் கொண்ட வளர்ச்சியைக் குறிக்கிறது. இயற்கையில் எப்படி இருக்கிறதோ அப்படியே கிருபையிலும் அமைந்திருக்கிறது. வளர்ச்சியின்றி எந்த ஜீவனும் இருக்கமுடியாது. செடியானது வளரவேண்டும் அல்லது மடியவேண்டும். அதன் வளர்ச்சி அமரிக்கையாகவும் புலப்படக்கூடாத நிலையிலும் ஆனால் தொடர்ச்சியாகவும் இருக்கிறது. அதுபோலவே, கிறிஸ்தவ வாழ்வின் வளர்ச்சியும் உள்ளது. நம் வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையும் பூரணமாக இருக்கலாம்; இருப்பினும், நம்மிலே தேவ நோக்கம் நிறைவேறும்போது, தொடர்ச்சியான முன்னேற்றம் ஏற்படும். பரிசுத்தமாகுதல் என்பது ஒரு ஜீவியகால வேலையாயிருக்கிறது, நமது சந்தர்ப்பங்கள் பெருகும்போது, நமது அனுபவம் பெருகி, அறிவு விருத்தியடைகிறது. நாம் பொறுப்புகளைத் தாங்கும்படியாகப் பெலப்படுகிறோம். நமது சிறப்புரிமைகளுக்கு ஏற்றவிதத்தில் நமது முதிர்ச்சி அமைந்திருக்கும். (9)

உயிர் நிலைத்திருக்கும்படியாக, தேவன் அருளியதைப் பெற்றுக் கொண்டு செடி வளர்கிறது. அது தன் வேர்களை கீழாக பூமியில் செலுத்துகிறது. சூரிய வெளிச்சத்தையும் பனித்துளியையும் மழையையும் அருந்துகிறது. காற்றிடமிருந்து உயிர்தரும் இயல்புகளைப் பெற்றுக்கொள்கிறது; அதுபோலவே, கிறிஸ்தவனும் தெய்வீக ஏதுகரங்களோடு ஒத்துழைத்து வளரவேண்டும். நமது உதவியற்ற நிலையை உணர்ந்தவர்களாக ஒரு முழுமையான அனுபவத்தை பெற்றுக்கொள்ளத்தக்கதாக நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் அனைத்து சந்தர்ப்பங்களையும் நாம் மேம்படுத்த வேண்டும். செடி நிலத்திலே வேரூன்றுவதுபோல் நாமும் கிறிஸ்துவில் ஆழமாக வேரூன்றவேண்டும். செடியானது வெயிலையும் மழையையும் பனித்துளியையும் பெற்றுக்கொள்வதுபோல் நாமும் நமது இதயங்களை பரிசுத்த ஆவியானவருக்கு திறந்துகொடுக்கவேண்டும். "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"—சகரியா 4:6. நம்முடைய மனம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும்போது, "அவர் மழையைப்போலவும், பூமியின்மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில்

வருவார்"—ஓசியா 6:3; அவர் "செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்"—மல்கியா 4:2; "நாம் லீலிப்புஷ்பத்தைப்போல் மலருவோம்; ...தானிய விளைச் சலைப்போலச் செழித்து..." (ஓசியா 14:5,7) என்ற வாக்குத்தத்தங்கள் நம்மிலே நிறைவேறும். நமக்குத் தலையாயிருக்கிற கிறிஸ்துவை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரில் தொடர்ந்து நிலைத்திருக்கும்போது, எல்லாக் காரியங்களிலும் வளர்கிறவர்களாகக் காணப்படுவோம். (10)

கோதுமையானது முன்பு முளையையும் பின்பு கதிரையும் கதிரிலே நிறைந்த தானியத்தையும் விளையச்செய்கிறது. விதை விதைப்பதிலும், செடியை வளரச்செய்வதிலும் குடியானவனுக்கு இருக்கும் நோக்கம் அதிகமான தானியத்தை உற்பத்திசெய்யவேண்டுமென்பதே. பசியாயிருப்பவர்களுக்கு உணவையும், எதிர்கால அறுவடைகளுக்குத் தேவையான விதையையும் உருவாக்குவதே அவனது வாஞ்சையாயிருக்கிறது; அதுபோலவே, தெய்வீக விளைவாக மிகுந்த அறுவடையை தேவன் எதிர்பார்க்கிறார். மானிடரின் இதயங்களிலே கிறிஸ்து தம்மையே மீண்டும் உருவாக்க வகைதேடிக் கொண்டிருக்கிறார். அவரில் விசுவாசம் வைக்கிறவர்களின்மூலமாக இதைச் செய்கிறார். கனிகொடுப்பதே கிறிஸ்தவ வாழ்க்கையின் நோக்கமாகும். கிறிஸ்துவின் பண்பு மற்றவர்களிலே உருவாக்கப்படத்தக்கதாக விசுவாசியின் உள்ளத்தில் கிறிஸ்துவின் குணம் உருவாக்கப்படுகிறது. (11)

செடி தனக்காகவே முளைத்து வளர்ந்து கனிகொடுக்காமல், "விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது"—ஏசாயா 55:10. அதுபோலவே, எந்த ஒரு கிறிஸ்தவனும் தனக்காகவே வாழ்தல்கூடாது. கிறிஸ்தவன் இவ்வுலகத்தில் கிறிஸ்துவின் பிரதிநிதியாக இருந்து, அநேக ஆத்துமாக்களை ஆதாயஞ்செய்பவனாக இருக்கிறான். (12)

சுயத்தில் மையங்கொண்டுள்ள ஜீவியத்தில் வளர்ச்சி அல்லது கனிகொடுத்தல் இருக்க இயலாது. நீங்கள் கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருந்தால், உங்களை மறந்து, மற்றவர்களுக்கு உதவிசெய்ய முயற்சிசெய்யவேண்டும். அவருடைய அன்பைக்குறித்துப்பேசி, அவருடைய நற்குணத்தை மற்றவர்களிடம் எடுத்துக்கூறுங்கள். உங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு கடமையையும் செய்யுங்கள். ஆத்துமாக்களைக்குறித்த பாரத்தை உங்களது இதயத்தில் சுமந்துசெல்லுங்கள். உங்களது கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் அனைத்து வழி வகைகளின்மூலமாகவும் பொருட்களின்மூலமாகவும் பாவங்களில் மூழ்கி, தொலைந்துபோனவர்களை இரட்சிக்க வகைதேடுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றுக்கொள்கிறபோது, தன்னலமற்ற—

மற்றவர்களுக்காக உழைக்கின்ற ஆவியைப் பெற்றுக்கொள்கிறபோது, வளர்ந்து கனி கொடுப்பீர்கள். அந்த ஆவியானவரின் கிருபைகள் உங்கள் குணத்திலே வளர்ந்து முதிர்ச்சியடையும். உங்கள் விசுவாசம் அதிகரித்து, நம்பிக்கை பலமடைந்து, அன்பு பூரணமடையும். தூய்மையான—உயர்வான—இனிமையான எல்லாவற்றிலும் அதிகமதிகமாக கிறிஸ்துவை நாம் பிரதிபலிப்போம். (13)

"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை"–கலாத்தியர் 5:22–23. இந்தக் கனி ஒருபோதும் அழியாமல் நித்தியஜீவனுக்கேதுவான அறுவடையை உற்பத்திசெய்துகொண்டேயிருக்கும். (14)

பயிர் விளைந்து அறுப்புக்காலம் வந்தவுடனே, அறுக்கிறதற்கு ஆட்களை அனுப்புகிறான் குடியானவன். கிறிஸ்து தம்மை சபையிலே வெளிப்படுத்தும்படியாக ஏக்கமுள்ள வாஞ்சையோடு காத்துக்கொண்டிருக்கிறார். கிறிஸ்துவின் குணம் பூரணமாக அவரது மக்களிடத்தில் உருவாக்கப்படும்போது, அவர்களை தமக்குச் சொந்தமானவர்களென்று உரிமைகோரி தம்மிடமாகச் சேர்த்துக்கொள்ள அவர் வருவார். (15)

கர்த்தருடைய வருகைக்குக் காத்திருக்கிறவர்களாக மட்டுமிராமல், அதைத் துரிதப்படுத்தும் சிறப்புரிமையையும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அளித்திருக்கிறார். அவரது நாமத்தை அறிக்கைசெய்யும் அனைவரும் அவருடைய மகிமைக்கு கனிகொடுப்பவர்களாக இருப்பார்களேயானால், எவ்வளவு துரிதமாக சுவிசேஷ விதை இந்த உலகம் முழுவதிலும் விதைக்கப்பட்டிருக்கும்! கடைசி மகா அறுவடை துரிதமாக பக்குவமடையும்பட்சத்தில், கிறிஸ்து விலைமதிப்புள்ள தானியத்தைச் சேர்க்கும்படியாக வருவார். (16)
★

# 4

# களைகள்!

**(மூலநூல் : பக்கங்கள் 70–75)**
**மத்தேயு 13:24–30, 37–43**

“வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும் காணப்பட்டது”–மத். 13:24–26. (1)

நிலம் இந்த உலகத்தைக் குறிக்கிறது என்று கிறிஸ்து கூறுகிறார்; இது உலகிலுள்ள கிறிஸ்துவின் சபையைக்குறிக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். இந்த உவமையில் இயேசு பரலோக இராஜ்யத்தைக்குறித்தும், மானிட இரட்சிப்பைக்குறித்தும், இந்த இரட்சிப்பின் வேலை எவ்விதமாக சபையின்மூலமாக நிறைவேற்றப்படுகிறது என்பதைக் குறித்தும் வர்ணிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் உலகம் முழுவதிலும் பரவியிருக்கிறார் என்பதும், அனைத்து மனுஷரின் இதயங்களிலும் அசைவாடிக் கொண்டிருக்கிறார் என்பதும் உண்மை; இருப்பினும், சபையில் வளர்ந்து, பக்குவமடைந்து தேவனுடைய களஞ்சியத்தில் சேர்க்கப்படுவதற்காக நாம் முதிர்ச்சியடையவேண்டும். (2)

“நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன்; நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்; களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்”–(மத். 13:37–38) என்றார். நல்ல விதை தேவனுடைய வார்த்தையினாலும், சத்தியத்தினாலும் பிறந்தவர்களைக்குறிக்கிறது. களையானது, பிழை மற்றும் தவறான கொள்கைகளின் உருவமாகத் திகழும் மக்களைக் குறிக்கிறது. “அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு;” தேவனோ அல்லது அவருடைய தூதர்களோ ஒருபோதும் களையை உருவாக்கும் விதையைத் தூவுவதில்லை. களைகள் எப்போதுமே தேவனுக்கும் மனுஷனுக்கும் எதிரியான பிசாசானவனால் தூவப்படுகிறது. (3)

கிழக்கிலே, சில சமயங்களில் மனிதர் பழிவாங்கும் நோக்கத்தோடு எதிரியின் நிலத்தில் தீங்கான களைகளை தூவிச் செல்வர். அந்தக் களைகள் வளரும்போது, கோதுமைமணியைப்போன்று வித்தியாசமின்றி தோன்றும். அவை கோதுமையோடு வளர்ந்து அதைப் பங்கப்படுத்தி, வயலின் சொந்தக்காரனுக்கு கஷ்டத்தையும் நஷ்டத்தையும் ஏற்படுத்தும்; அதுபோலவே, சாத்தானும், கிறிஸ்துவிற்கு எதிராகச் செயல்பட்டு, இராஜ்யத்தின் நல்ல தானியத்தின் மத்தியில் தீய விதைகளைத் தூவிச் செல்கிறான். அவன் தூவியதன்நிமித்தம் ஏற்படும் விளைவிற்கு தேவகுமாரனைக் காரணம் காட்டுகிறான். கிறிஸ்துவின் நாமத்தைக்கொண்டிருந்தும் அவருடைய குணத்தை மறுக்கும் நபர்களை பொல்லாங்கன் சபைக்குள் கொண்டுவருகிறான். இதனால், தேவநாமம் கனவீனம்பண்ணப்பட்டு, அவருடைய இரட்சிப்பு தவறாக எடுத்துரைக்கப்பட்டு, ஆத்துமாக்கள் ஆபத்துக்குள்ளாகக் கொண்டுசெல்லப்படுகிறார்கள். (4)

உண்மையான விசுவாசிகளும், கள்ள விசுவாசிகளும் சபையில் கலந்திருப்பதைக் காணும்போது, கிறிஸ்துவின் ஊழியர்கள் வருந்துகின்றனர். ஏதாவது செய்து சபையைத் தூய்மைப்படுத்த ஆவல் கொள்கின்றனர். வீட்டெஜமானுடைய வேலைக்காரரைப்போல களைகளைப் பிடுங்கிப்போட ஆயத்தமாயிருக்கின்றனர்; ஆனால், “களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்பு மட்டும் வளரவிடுங்கள்” (மத்தேயு 13:29) என்று கிறிஸ்து கூறுகிறார். (5)

வெளிப்படையாக பாவஜீவியத்தில் ஈடுபடுபவர்களை சபையிலிருந்து பிரித்துவைக்க வேண்டுமென்று கிறிஸ்து தெளிவாகப் போதித்திருக்கிறார்; எனினும், அவர் மனிதரின் குணத்தையும் எண்ணத்தையும் நியாயந்தீர்க்கும் வேலையை நமக்கு வழங்கவில்லை. நம்முடைய குணத்தை அவர் நன்கு அறிந்திருப்பதால், இந்த வேலையை நமக்கு வழங்கவில்லை. போலிக் கிறிஸ்தவர்களை சபையிலிருந்து வேரோடு பிடுங்கும் வேலையைக் கொடுத்தால், நாம் நிச்சயம் தவறுகள் செய்வோம் என்பது அவருக்குத் தெரியும். எந்த நபர்களை கிறிஸ்து தம்மிடமாக இழுத்துக்கொள்ள முற்படுகிறாரோ அதே நபர்களை பயனற்றவர்கள் என்று நாம் பெரும்பாலும் மதிப்பிடுகிறோம். தீர்மானிக்கும் திறனில் குறைபாடுடையவர்களாகிய நாம் இத்தகைய ஆத்துமாக்கள்பற்றின காரியத்தில் தீர்மானமெடுக்கவேண்டிய நிலையில் இருப்போமானால், ஒருவேளை அவர்களிடத்தில் இறுதியாக காணப்படும் சிறிதளவு நம்பிக்கையையுங்கூட அழித்துபோட நேரிடலாம். தங்களை கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கும் அநேகர் இறுதியில் குறைவுள்ளவர்களாகக் காணப்படுவார்கள். பரலோகத்திற்குள்

ஒருபோதும் நுழையமுடியாது என்று தங்கள் அயலார்களால் கருதப்பட்ட அநேகர் பரலோகத்தில் இருப்பார்கள். மனிதன் வெளித்தோற்றத்தைப் பார்த்து தீர்ப்புச்செய்கிறான்; ஆனால், தேவன் இதயத்தைப் பார்த்து தீர்ப்புச்செய்கிறார். அறுவடைவரை களைகளும் கோதுமையும் ஒருமித்து வளர அனுமதிக்கப்படும்; தவணையின் காலத்தின் முடிவே அறுவடையின் வேளையாகும். (6)

இரட்சகரின் உவமையின்மூலம் தேவனுடைய நீடியபொறுமை, அவருடைய மென்மையான அன்பு ஆகியவைகுறித்த நல்ல பாடத்தை நாம் கற்றுக்கொள்கிறோம். களைகள் தங்கள் வேர்களை நல்ல தானியத்தோடு பிணைத்திருப்பதுபோல், சபையில் கள்ளச் சகோதரர்கள் உண்மையான சீடர்களோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக இருப்பார்கள். போலியான விசுவாசிகளின் உண்மையான குணம் முழுமையாக வெளிப்படாமல் இருக்கும். அவர்கள் சபையிலிருந்து பிரிக்கப்படும்பட்சத்தில், நல்ல நிலையில் நிலைத்திருந்த விசுவாசிகள் இடறும்படியான சூழ்நிலை உருவாகும். (7)

இந்த உவமையின்மூலமாக, தேவன் எவ்விதமாக மனிதர்களையும், தூதர்களையும் நிர்வகிக்கிறார் என்று தெளிவுபடுத்தப்படுகிறது. சாத்தான் வஞ்சகனாயிருக்கிறான். அவன் பரலோகத்தில் பாவஞ்செய்தபோது, விசுவாசமான தூதர்களால்கூட அவனுடைய குணத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள இயலவில்லை. அதனிமித்தமாகவே, தேவன் சாத்தானை உடனே அழிக்கவில்லை. அப்படி அவர் செய்திருந்தால், பரிசுத்த தூதர்கள் தேவனுடைய நீதியையும் அன்பையும் அறியாதிருந்திருப்பார்கள். தேவனுடைய நற்குணத்தைக்குறித்த சந்தேகம் தீய விதையாக உருவெடுத்து, கசப்பான கனியாகிய பாவத்தையும் துக்கத்தையும் கொடுத்திருக்கும்; ஆகவே, பாவத்திற்கு காரணகர்த்தாவான சாத்தானை விட்டுவைத்து, அவன் தன் குணத்தை முழுமையாக வெளிப்படுத்த தேவன் அனுமதித்தார். தேவன் நீண்ட யுகங்களாக தீமையின் கிரியையை வேதனையோடு கண்ணுற்று, எல்லையற்ற பரிசாகிய கல்வாரியைக் கொடுத்து, பொல்லாங்கனுடைய தவறான கூற்றுகளால் ஒருவரும் வஞ்சிக்கப்பட்டுவிடாதபடி பாதுகாக்கிறார்; ஏனெனில், களைகள் வேரோடு பிடுங்கப்படும்பட்சத்தில் நல்ல தானியத்தையும் வேரோடு சேர்த்து இழுக்கும் ஆபத்து எப்போதும் இருக்கிறது. வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தர் சாத்தானிடத்தில் பொறுமையோடு இருப்பதுபோல், நாமும் நம்முடைய உடன் மனிதர்களைப் பொறுத்துக்கொள்வது அவசியமல்லவா? (8)

திருச்சபையில் தகுதியற்ற அங்கத்தினர்கள் இருப்பதன் நிமித்தம் உலகம் கிறிஸ்தவத்தின் சத்தியத்தை சந்தேகிக்க எந்த உரிமையும் இல்லை.

கிறிஸ்தவர்களும் இந்த கள்ளச் சகோதரர்கள் நிமித்தம் அதைரியமடைதல் கூடாது. ஆதி சபையில் என்ன நடந்தது? அனனியாவும், சப்பீராளும் சீடர்க ளோடு இணைந்தார்கள். சீமோன் ஞானஸ்நானன் பெற்றான். பவுலைவிட்டு விலகிப்போய்விட்ட தேமா ஒரு விசுவாசியாக எண்ணப்பட்டிருந்தான். யூதாஸ் அப்போஸ்தலர்களில் ஒருவனாகக் கருதப்பட்டிருந்தான். நமது இரட்சகர் எந்த ஒரு ஆத்துமாவையும் இழக்க விரும்புகிறதில்லை. யூதாசுடன் அவர் கொண்டிருந்த அனுபவம் ஒரு ஏறுமாறான மானிட இயல்புடையவனிடம் (யூதாசிடம்) அவர் காட்டிய நீடியபொறுமையை வெளிப்படுத்தும்படியாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. நாமும் இதுபோன்று குறையுள்ள மனிதர்களை தம்மைப்போன்று சகித்துக்கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார். சபையில் கள்ளச் சகோதரர்கள் கடைசிமட்டும் இருப்பார்கள் என்று அவர் கூறியிருக்கிறார். (9)

கிறிஸ்து எச்சரித்திருந்தபோதிலும் களைகளைப் பிடுங்க மனிதர்கள் வகைதேடியிருக்கின்றனர். தவறுசெய்பவர்களை தண்டிக்க சபை அரசாங்க சக்தியை நாடியது. கிறிஸ்துவின் அனுமதியோடு செயல்படுவதாகக் கூறிய பலர், சபையில் ஏற்கெனவே நிலைநாட்டப்பட்டிருந்த உபதேசங்களை மீறியவர்களை சிறையிலடைத்து—கொடுமைப்படுத்தி—கொலைசெய்திருக் கின்றனர். கிறிஸ்துவின் அனுமதியின்பேரில்தான் அவைகள் செய்யப்பட்டன வென்று அவைகளைத் தூண்டிவிட்டு நடப்பித்தவர்கள் உரிமைகோரினார்கள். இத்தகைய செயல்களைத் தூண்டிவிடுவது சாத்தானின் ஆவியேதவிர கிறிஸ்துவின் ஆவியல்ல. உலகத்தை தன் ஆளுகைக்குள் கொண்டுவர சாத்தான் கையாளும் முறை இது. சமய பேதமுள்ள நபர்களென்று கருதப்பட்டவர்களை சபை இவ்வாறு தண்டித்ததினிமித்தம் மக்களில் அநேகர் தேவனை தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். (10)

தாழ்மையாகவும், சுயத்தைச்சாராதும் இருக்கவேண்டுமென்பதையே இவ்வுவமையின்மூலம் கிறிஸ்து தெரியப்படுத்துகிறாரே தவிர, நியாயந் தீர்ப்பதைக்குறித்தோ, பிறரைக் கண்டனம் செய்வதைக்குறித்தோ அவர் பேசவில்லை. வயலில் விதைக்கப்படும் அனைத்து விதைகளுமே நல்ல தானியமல்ல. சபையில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் என்ற உண்மை மக்களை கிறிஸ்தவர்களென்று நிரூபித்துவிடாது. (11)

களைகள் முளைப்பருவத்தில் பசுமையாயிருக்கும்போது, கோதுமை போன்று காணப்படும்; ஆனால், அறுவடையின்போது, விளைச்சலின் மிகுதியால் கோதுமை மணிகள் கீழ்நோக்கிச் சாயும்போது, கோதுமைக்கும், களைக்குமுள்ள வித்தியாசம் தென்படும். பக்தியுள்ளவர்கள்போல் நடிக்கும் பாவிகள் கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுபவர்களுடன்

கலந்திருப்பதினால், கிறிஸ்தவத்தின் வெளித்தோற்றம் சிலகாலம் பலரை வஞ்சிக்கலாம்; ஆனால், இவ்வுலகத்தின் அறுவடையின்போது, நன்மைக்கும் தீமைக்குமிடையே எத்தகைய ஒற்றுமையும் காணப்படாது. சபையில் சேர்ந்தும் கிறிஸ்துவுடன் சேராமலிருப்பவர்களின் நிலை அப்பொழுது வெளிப்படும். (12)

களைகள் கோதுமையுடன் வளர அனுமதிக்கப்படும். மழை, சூரிய வெப்பம் போன்ற அனுகூலமான காரியங்கள் வழங்கப்படும்; ஆனால், அறுவடையின்போது, "நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யா தவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்"– மல்கியா 3:18. பரலோகக் குடும்பத்தில் பங்குபெறுவதற்கு யார் யார் பாத்திரவான்கள் என்பதை கிறிஸ்துவே முடிவுசெய்வார். அவர் ஒவ்வொரு மனுஷனையும் அவனவன்வார்த்தைகளின்படியேயும், கிரியைகளின்படியேயும்நியாயந்தீர்ப்பார். வெளிப்படையாக ஒருவன் தன்னைப்பற்றி அறிவிப்பது அல்லது அவர் கொண் டிருக்கும் சமயநம்பிக்கை தராசிலே நிறுக்கப்படும்போது ஒன்றுமில்லாதது போன்று ஆகிவிடுகிறது. முடிவை நிர்ணயஞ்செய்வது குணமே.(13)

களைகள் அனைத்தும் கோதுமையாக மாறும் ஒரு நேரத்தை இரட்சகர் சுட்டிக்காட்டவில்லை. கோதுமையும் களைகளும் அறுவடைவரை, இவ்வுலகத்தின் முடிவுவரை ஒன்றாக வளரும். அறுவடையின்போது, களைகள் கட்டுகளாகக் கட்டப்பட்டு, எரிப்பதற்கு ஆயத்தமாயிருக்கையில், கோதுமையானது தேவனுடைய களஞ்சியத்தில் சேர்க்கப்படும். "அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன். மனுஷ குமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்"–மத்தேயு 13:43,41–42. (14) ★

# 1

# கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது!

**(மூலநூல் : பக்கங்கள் 76–79)**

**மத்தேயு 13:31,32; மாற்கு 4:30–32; லூக்கா 13:18,19**

கிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டுக்கொண்டிருந்த திரள்கூட்டத்திலே பரிசேயர்கள் பலர் இருந்தனர். உபதேசத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் சிலர் அவரை மேசியவாக அங்கீகரித்ததை அவர்கள் இகழ்ச்சியாகக் கண்ணுற்றனர். பாவனையின்றி உபதேசஞ்செய்யும் இந்தப் போதகர் எப்படி உலகத்தை ஆளுகை செய்யும் நிலைக்கு இஸ்ரவேல் மக்களை உயர்த்த இயலும் என்று தங்களுக்குள் வினவினர். பணமின்றி—பலமின்றி—கனமின்றி எப்படி இவரால் புதிய இராஜ்யத்தை ஸ்தாபிக்கமுடியும்? கிறிஸ்து அவர்கள் எண்ணத்தை அறிந்து பதிலுரைத்தார்: (1)

“தேவனுடைய ராஜ்யத்தை எதற்கு ஒப்பிடுவோம்? அல்லது எந்த உவமையினாலே அதைத் திருஷ்டாந்தப்படுத்துவோம்?”—மாற்கு 4:30. உலக இராஜ்யங்களுக்குரியவைகளில் ஒன்றும் ஒப்புமைக்குப் பயன்படவில்லை. எந்த உலகசமுதாயமும் அவருக்கு அடையாளமாக்கப் பயன்படும் பொருளை வழங்க இயலவில்லை. “அது ஒரு கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது” என்றார். அது பூமியில் விதைக்கப்படும்போது, பூமியிலுள்ள சகல விதைகளிலும் சிறிதாயிருக்கிறது; விதைக்கப்பட்டபின்போ, அது வளர்ந்து, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதனுடைய நிழலின் கீழ் வந்தடையத்தக்க பெரிய கிளைகளை விடும். (2)

விதையிலுள்ள ஜீவ அணு தேவன் உட்புகுத்தியுள்ள உயிரோட்டத்தின் கொள்கைப்படி விழுந்து வளர ஆரம்பிக்கிறது. அதன் வளர்ச்சி எந்த மனித சக்தியையும் சார்ந்திருப்பதில்லை. இவ்விதமாக, கிறிஸ்துவின் இராஜ்யமும் இருக்கிறது. அது ஒரு புது சிருஷ்டியாக உள்ளது. அதன் முன்னேற்றத்திற்கான கொள்கைகள் இவ்வுலக இராஜ்யங்களின் சட்டத்திற்கு எதிரிடையாக உள்ளன. உலக அரசாங்கங்கள் யாவும் சரீரப்பிரகாரமான பலத்தால் இயங்கி, யுத்தத்தால் தங்கள் ஆளுகையை நிலைநிறுத்தி

வருகின்றன; ஆனால், புதிய இராஜ்யத்தின் ஸ்தாபகர் சமாதான பிரபுவாக இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் உலக இராஜ்யங்களை, அடித்துப் புசிக்கின்ற பயங்கரமான மிருகங்களின் அடையாளத்தை வைத்து சுட்டிக்காட்டினார். "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று கிறிஸ்து வர்ணிக்கப்பட்டுள்ளார். மிருகபலத்தைக்கொண்டு மனச்சாட்சியை வற்புறுத்தும் திட்டம் எதுவும் அவர் ஆளுகையில் இல்லை. தேவனுடைய இராஜ்யம் உலக இராஜ்யங்களைப் போலவே ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று யூதர்கள் ஆவலோடு எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். நீதியை முன்னேற்றமடையச்செய்ய வெளிப்பிரகாரமான நடவடிக்கைகளில் இறங்கினர். முறைகளையும் திட்டங்களையும் வகுத்தனர். கிறிஸ்து ஒரு கொள்கையை உட்புகுத்துகிறார். சத்தியத்தையும், நீதியையும் உட்புகுத்துவதினிமித்தம் அவர் தவறுகளையும், பாவத்தையும் பலமிழக்கச்செய்கிறார். (3)

இயேசு இந்த உவமையைக் கூறிய வேளையில், அருகிலும் நெடுகிலும் புல் மற்றும் தானியங்களுக்குமேல் கடுகுச்செடி கிளைகளை அசைத்துக்கொண்டிருந்தது. பறவைகள் கிளைவிட்டு கிளை தாவி, இலைப் பரப்பிற்கு மத்தியில் பாடிக்கொண்டிருந்தன. இராட்சதச் செடியாக வளர்ந்து கொண்டிருந்த கடுகுச் செடியின் விதை அனைத்து விதைகளிலும் மிகச் சிறியதாக இருந்தது. முதலில் மென்மையான முளைகளை வெளியே அனுப்பியது. ஆனால் அவைகள் உறுதியாக உரமுள்ளவைகளாக இருந்தன. பின்னர் தற்போதைய மிக பிரம்மாண்டமான பரிணாமத்தை அடையும் அளவிற்கு உள்ளூரங்கொண்டு செழுமையாக வளர்ந்தது. இதுபோலவே, கிறிஸ்துவின் இராஜ்யமும் ஆரம்பத்தில் தாழ்மையானதாக—முக்கியமற்றதாகக் காணப்பட்டது. உலக இராஜ்யங்களோடு ஒப்பிடுகையில், அது மிகச் சிறியதாகத் தோன்றியது. கிறிஸ்து இராஜாவாக உரிமை கொண்டாடினது உலக ஆட்சியாளர்களின் நகைப்பிற்கிடமனாது. எனினும், சுவிசேஷ இராஜ்யத்தைப் பின்பற்றியவர்களிடத்தில் அவர் அளித்த வல்லமையான சத்தியங்கள் தெய்வீக ஜீவனுடையதாக இருந்தது. அதன் வளர்ச்சி துரிதமாயும் அதன் செல்வாக்கு விரிந்து பரந்து செல்லக்கூடியதாக இருந்தது. கிறிஸ்து இந்த உவமையைக் கூறியபோது, சொற்பமான கலிலேய விவசாயிகள் மாத்திரமே புதிய இராஜ்யத்தின் பிரதிநிதிகளாக இருந்தனர்; இயேசுவைப் பின்பற்றின எளிமையான மனங்கொண்ட மீனவர்களோடு மனிதர்கள் தங்களை ஏன் இணைத்துக்கொள்ளக்கூடாது என்பதற்கான காரணமாக அவர்களுடைய ஏழ்மையும் குறைந்த எண்ணிக்கையும் மீண்டும் மீண்டும் கூறப்பட்டது. ஆனால், கடுகு விதை வளர்ந்து உலகம் முழுவதற்கும் அதன் கிளைகள் பரவவேண்டும். அன்று மனிதர்களின் இதயங்களை

நிரப்பியிருந்த உலக இராஜ்யங்களின் மகிமை அழியும்போது, கிறிஸ்துவின் இராஜ்யம் நிலைத்திருந்து, மகா மேன்மையான சக்தியுள்ளதாக விளங்கும். (4)

ஆகவே இதயத்தில் கிருபையின் கிரியை ஆரம்பத்தில் சிறியதாக இருக்கிறது. புதிய ஜீவியத்தின் ஆரம்பமாக ஒரு வார்த்தை பேசப்பட்டு, ஆத்துமாவிற்குள் ஒரு ஒளிக்கீற்று படிந்து, ஒரு செல்வாக்கை ஏற்படுத்துகிறது. அதன் முடிவுகளை யாரால் அளவிடமுடியும்? (5)

கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் வளர்ச்சிமாத்திரம் இந்தக் கடுகுவிதையின் உவமை விளக்கவில்லை. மாறாக, அந்த வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் இவ்வுவமையின் அனுபவம் மறுபடியும் மறுபடியும் நிகழ்கிறது. ஒவ்வொரு சந்ததியிலும் தேவன் சபைக்கு ஒரு சிறப்பான சத்தியத்தையும், ஒரு சிறப்பான வேலையையும் வைத்திருக்கிறார். உலக ஞானிகளுக்கும், அறிஞர்களுக்கும் மறைக்கப்பட்ட சத்தியம் பாலகர்களைப் போன்றவர்களுக்கும், தாழ்மையுள்ளவர்களுக்கும் வெளிப்படுத்தப்படுகிறது. அது சுயத்தை தியாகம்செய்யுமாறு அழைக்கிறது. போராடவேண்டிய போராட்டங்களும் பெறவேண்டிய வெற்றிகளும் அதற்கு உண்டு. ஆரம்பத்தில் சொற்பமானவர்களே அதனை ஆதரிப்பார்கள். அவை இந்த உலகத்தின் மாமனிதர்களாலும், உலகத்தோடு ஒத்துப்போகும் சபைகளாலும் எதிர்க்கப்பட்டு நிந்திக்கப்படும். கிறிஸ்துவுக்கு முன்னோடி யாக இருந்த யோவான் ஸ்நானகன், தனியாக நின்று யூததேசத்தின் பெருமையையும் ஆச்சாரமுறைகளையும் கண்டனம் செய்யவேண்டிய திருந்தது. ஐரோப்பாவிற்கு முதலில் சுவிசேஷத்தைச் சுமந்துசென்றவர் களை நாம் நோக்குவோம். கூடாரஞ்செய்பவர்களான பவுலும் சீலாவும் தங்களுக்கருமையான தோழர்களுடன் துரோவாவிலிருந்து பிலிப்பி பட்டணத்திற்குக் கப்பலேறியபோது, அவர்களின் ஊழியம் மங்கலானதும், நம்பிக்கையற்றதுமாகத் தோன்றியது. "வயது சென்ற பவுல்" சங்கிலிகளினால் கட்டப்பட்டவராக ராயர்களின் கோட்டைகளாகக் கருதப்பட்ட இடங்களில் கிறிஸ்துவை பிரசங்கிப்பதைப் பாருங்கள். சிறிய இனத்தவர்களாகிய அடிமைகளும் குடியானவர்களும் கம்பீரமான அஞ்ஞான ரோமாபுரியோடு மோதுவதைப் பாருங்கள். உலக ஞானத்தின் சாதனைக்களமாகத் திகழ்ந்த மாபெரும் சபையை மார்டின் லுத்தர் எதிர்த்து நின்றதை பாருங்கள். அவர் தேவனுடைய வார்த்தையைப் பிடித்துக்கொண்டு, அரசனையும் போப்புவையும் பார்த்து, "இதுவே என்னுடைய நிலை; என்னால் மாற்று முறைகளை ஏற்றுக்கொள்ள இயலாது. தேவன் எனக்கு உதவிசெய்வார்" என்று தைரியமாகக் கூறுவதைப் பாருங்கள். ஆச்சாரமுறைமைகள், சிற்றின்பம்,

நாத்திகம் ஆகியவைகளுக்கு மத்தியில் கிறிஸ்துவையும் அவருடைய நீதியையுங்குறித்து பிரசங்கிக்கும் ஜான் வெஸ்லியைப் பாருங்கள். அஞ்ஞான உலகத்தின் வேதனைகளைக் கண்டு பாரங்கொண்டவராக, கிறிஸ்துவின் அன்பின் செய்தியைச் சுமந்து சென்றவரைப் பாருங்கள். "வாலிபரே, நீங்கள் சும்மா இருங்கள். அஞ்ஞானிகளை தேவன் இரட்சிக்க விரும்பும்போது, உங்கள் உதவியோ எங்கள் உதவியோ எதுவுமின்றி அவர் தாமே அதைச் செய்துகொள்வார்" என்று மத அதிகாரம் தரும் பதிலைக் கேளுங்கள். (6)

நூற்றாண்டுகளுக்கு முன்னர், சத்தியத்தின் விதைகளை விதைத்த தேவப் பிள்ளைகளைக்குறித்து புகழ்பாடி, அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்த இந்தத் தலைமுறையின் மார்க்க சம்பந்தமான மாபெரும் தலைவர்கள் முயற்சிக்கின்றனர். அதே விதையிலிருந்து துளிர்த்திருக்கிற வளர்ச்சியை தங்கள் காலின்கீழ் மிதிக்க திரும்பவில்லையா? "மோசேயுடனே தேவன் பேசினாரென்று அறிவோம், இவன் (அவர் அனுப்பின தூதுவரான கிறிஸ்து) எங்கேயிருந்து வந்தவனென்று அறியோம் என்றார்கள்" (யோவான் 9:29). முந்தைய காலங்களைப்போன்றே, இந்தக் காலத்திற்கான சிறப்பான சத்தியங்கள் மத அதிகாரமுள்ளவர்களிடத்திலிருந்தல்ல, தேவனுடைய வசனத்தை அதிகமாகப் புரிந்துகொள்ளும் ஞானமில்லாத அல்லது அதிகமாகக் கற்றறிந்திராத ஆண்களிடத்திலும் பெண்களிடத்திலுமுள்ளது. (7)

"எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத் தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீன மானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்"–1கொரி.1:26–28. "உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு" (1 கொரி. 2:4) தேவன் அப்படிச் செய்தார். (8)

இந்தக் கடைசித் தலைமுறையில், கடுகுவிதை உவமை குறிப்பிடத்தக்க இலக்கை அடைந்து, வெற்றியோடு நிறைவேறவுள்ளது. சிறிய விதை மிகப் பெரிய மரமாக வளரும். எச்சரிப்பையும் இரக்கத்தையும் அறிவிக்கிற கடைசி செய்தியும், "சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கப்படவேண்டும்" (வெளி. 14:6–14). "தமது

நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி" (அப். 15:14) தேவன் கிரியை செய்வார். "அவருடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிருக்கும்"– வெளி. 18:1. (9) ★

# 6

# விதையை விதைப்பதிலிருந்து கற்றுகொள்ளப்படும் ஏனைய பாடங்கள்

**(மூலநூல் : பக்கங்கள் 80–89)**

விதை விதைக்கின்ற வேலையிலிருந்தும், விதையிலிருந்து செடி வளர்வதிலிருந்தும் அருமையான ஆவிக்குரிய பாடங்களை நம் குடும்பத்திலும், வேதாகம வகுப்புகளிலும் கற்றுக்கொள்ளலாம். நம்முடைய பிள்ளைகளும், வாலிபர்களும் தெய்வீக ஏதுகரங்கள் எவ்வாறு இயற்கையில் கிரியை செய்கிறது என்பதை அறிந்துகொள்ளும்போது, அவர்கள் கண்டிராத நன்மைகளை விசுவாசத்தினால் பெற்றுக்கொள்வர். தேவன் தம்முடைய மாபெரும் குடும்பத்தின் தேவைகளை அற்புதமாகச் சந்திக்கும் பணியினை விளங்கிக்கொண்டு, அவருடன் எப்படி ஒத்துழைக்க வேண்டுமென்பதையும் புரிந்துகொள்ளும்போது, அவர்கள் தேவன்மேல் அதிக விசுவாசமுள்ளவர்களாகி, அவருடைய வல்லமை தங்களுடைய அன்றாட வாழ்வில் கிரியை செய்வதை உணருவார்கள். (1)

தேவன் இவ்வுலகை வார்த்தையினால் சிருஷ்டித்ததுபோல விதையையும் சிருஷ்டித்தார். தமது வார்த்தையினால் அது வளர்ந்து பெருகத்தக்கதாக அதற்கு தமது வார்த்தையின்மூலம் வல்லமையைக் கொடுத்தார். “அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று… தேவன் அது நல்லது என்று கண்டார்”–ஆதியாகமம் 1:11,12. அந்த வார்த்தையே இன்றைக்கும் விதையை வளரச்செய்கிறது. பசுமையான செடியும், சூரிய ஒளியை நோக்கி வளரும் ஒவ்வொரு பச்சையான இலையும், “அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்” (சங்கீதம்

33:9) என்ற வேத வசனத்தின் அற்புதமாகக் கிரியைசெய்யும் ஆற்றலை அறிவித்துக்கொண்டிருக்கிறது. (2)

"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" (மத்தேயு 6:11,30) என்று கிறிஸ்து தமது சீடர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார். "புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?" என்று மலர்களைக் காட்டி, தமது சீடர்களை தைரியப்படுத்தினார். கிறிஸ்து இந்த ஜெபத்திற்கு இடைவிடாது பதில்கொடுத்து, தமது வாக்குறுதியை நிறைவேற்றி வருகிறார். காண இயலாத வல்லமை ஒன்று மனிதனின் வேலையாளைப் போன்று தொடர்ச்சியாகச் செயல்பட்டு, அவனைப் போஷித்தும், உடுத்துவித்தும் வருகிறது. நமது கர்த்தர் பல ஏதுகரங்களை உபயோகித்து, வீசி எறியப்படுகிற விதையை, உயிருள்ள செடியாக மாற்றுகிறார். பூரண அறுவடை கிடைக்கத் தேவையான சகல பொருட்களையும் அவர் தகுந்த அளவில் வழங்குகிறார். கர்த்தரின் கிரியையைக்குறித்து சங்கீதக்காரன்: "தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர்; தண்ணீர் நிறைந்த தேவநதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்; இப்படி நீர் அதைத் திருத்தி, அவர்களுக்குத் தானியத்தை விளைவிக்கிறீர். அதின் வரப்புகள் தணியத்தக்கதாய் அதின் படைச்சால்களுக்குத் தண்ணீர் இறைத்து, அதை மழைகளால் கரையப்பண்ணி, அதின் பயிரை ஆசீர்வதிக்கிறீர். வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது" (சங்கீதம் 65:9–11) என்று மிக அழகாக விவரிக்கிறான். (3)

பொருள் சார்ந்த உலகம் தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. இயற்கையின் விதிகளுக்கு இயற்கை கட்டுப்படுகிறது. ஒவ்வொரு பொருளும் சிருஷ்டிகரின் சித்தத்தைப் பேசுகிறது; செயல்படுத்துகிறது. மேகம், சூரிய வெளிச்சம், பனித்துளி, மழை, காற்று, புயல் ஆகிய அனைத்தும் தேவனுடைய மேற்பார்வையின்கீழ் இருந்து, அவருடைய கட்டளைக்குத் தங்களை பூரணமாகக் கீழ்ப்படுத்துகின்றன. தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்தே தானியங்கள், "முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும்" (மாற்கு 4:28) கொடுக்கிறது. இவைகள் அவருடைய கிரியையை எதிர்க்காமல், அவருக்குக் கட்டுப்படுகிறபடியால், ஏற்றபருவத்திலே அவைகளுக்கு வளர்ச்சியைக் கொடுக்கிறார். தேவ சாயலிலே சிருஷ்டிக்கப்பட்டு, பேச்சாற்றலும் பகுத்தறிவும் வழங்கப்பட்டுள்ள மனிதன்மட்டும் அவருடைய ஈவுகளுக்கு நன்றியற்றவனாக இருந்து, அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியாமலிருக்கலாமா? பகுத்தறிவுள்ள மனிதர்கள் மாத்திரம் உலகத்தில் குழப்பத்தை விளைவிக்கலாமா? (4)

மனிதனுடைய பராமரிப்புகுறித்த காரியத்தில் மனித முயற்சியும் தெய்வீகக் கிருபையும் ஒத்துப்போவதை நாம் காணலாம். விதையைத் தூவும் தங்கள் பங்கைச் செய்வதற்கு மனிதக் கரங்கள் வராதபோது, அறுப்பு இருக்கமுடியாது. என்றபோதும், தேவன் அருளும் ஏதுகரங்களான சூரிய வெளிச்சம், மழை, பனித் துளிகள் இல்லாமல், விளைச்சல் இருக்காது. இதேபோன்றுதான் ஒவ்வொரு ஆராய்ச்சியிலும் விஞ்ஞானத்திலும், ஒவ்வொரு தொழில் நடவடிக்கையிலும் இருக்கிறது. இப்படியே ஆவிக்குரிய காரியங்களில் குணம் மேம்பாடு அடைவதிலும், கிறிஸ்தவ பணியின் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிறது. ஆற்ற வேண்டிய பங்கு ஒன்று நமக்கு உண்டு; ஆனால் தெய்வீகத்தின் வல்லமை நம்மோடு ஒன்றுபடவேண்டும். இல்லாவிட்டால், நம்முடைய முயற்சிகள் வீணாயிருக்கும். (5)

ஆவிக்குரிய காரியங்களிலானாலும் இம்மைக்குரிய காரியங்களிலானாலும் மனிதன் எதையாகிலும் சாதிக்கும்போது. தன் சிருஷ்டிகரோடு சேர்ந்து உழைத்ததினாலேயே அதைச் செய்ததாக அவன் மனதில் கொள்ளவேண்டும். தேவனைச் சார்ந்து இருப்பதன் அவசியத்தை நன்றாகப் புரிந்துகொள்வது மாபெரும் தேவையாக இருக்கிறது. மனிதன்மீது அதிக நம்பிக்கை வைக்கப்படுகிறது; அவனுடைய கண்டுபிடிப்புகளை அதிகம் சார்ந்திருக்கிறது. தேவன் நமக்கு வழங்குவதற்கு ஆயத்தமாக வைத்திருக்கும் வல்லமையில் மிகவும் குறைந்த நம்பிக்கையே இருக்கிறது. "நாம் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்"–1 கொரி. 3:9. மனித ஆற்றலின் பங்கு எண்ணமுடியாத அளவு கீழானது. ஆனால், அவன் கிறிஸ்துவின் தெய்வீகத்தோடு இணையும்போது, அவர் வழங்கும் சக்தியினால் எல்லாவற்றையும் செய்யத்தக்க பலத்தைப் பெற்றுக்கொள்கிறான். (6)

குழந்தைகளை பயிற்றுவிப்பதில் விதையிலிருந்து படிப்படியாக வளரும் செடி, ஒரு பொருட்பாடமாக அமைகிறது. நிலமானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகக் கொடுக்கிறது. இந்த உவமையைக் கொடுத்தவர், அந்தச் சிறிய விதையையும் சிருஷ்டித்து, அதற்கே உரிமையான பண்புகளை அதற்கு வழங்கி, அதன் வளர்ச்சியை ஆளுகைசெய்கின்ற விதிகளையும் ஏற்படுத்தினார். இந்த உவமை போதிக்கும் சத்தியங்கள் அனைத்தும் அவருடைய சொந்த வாழ்வில் உயிருள்ள உண்மையாக வெளிப்பட்டது. செடிகள் வெளிப்படுத்தும் தெய்வீக வளர்ச்சிவிதியை கிறிஸ்து தம்முடைய சரீர மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சியில் பின்பற்றினார். இதையே அனைத்து வாலிபரும் பின்பற்றவேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவர் பரலோகத்தின் அதிபதியாயும், மகிமையின் இராஜாவாகவும் இருந்தும், பெத்லகேமில்

குழந்தையாக அவதரித்து, தன் தாயின் அரவணைப்பில் இருக்கிற ஒரு உதவியற்ற குழந்தையை எடுத்துக்காட்டினார். குழந்தைப் பருவத்திலே கீழ்ப்படிதலுள்ள குழந்தையாக தனது பணிகளைச் செய்தார். பேச்சிலும், நடத்தையிலும் ஒரு மனிதனைப்போலன்றி குழந்தையின் ஞானத்தை வெளிப்படுத்தி, பெற்றோர்களை கனப்படுத்தி, உதவுகின்ற அநேக வழிமுறைகளில் அவர்களது விருப்பங்களை நிறைவேற்றி, கட்டளைகளைக் கடைபிடித்து, குழந்தை செய்யத்தகும் உதவிகளை அவர்களுக்குச் செய்தார்; ஆனால், அவர் தமது வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் எளிமையான பாவமற்ற வாழ்க்கையின் அழகோடு பூரணமடைந்துவந்தார்.அவருடைய குழந்தைப் பருவத்தைக்குறித்து தூய ஆவணம்: "பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது. இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" (லூக். 2:40,52) என்று கூறுகிறது. (7)

பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் பணி இங்கு அறிவுறுத்தப்படுகிறது. தோட்டத்தின் செடிகளைப்போல, வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் அந்தந்த வளர்ச்சிக்குரிய, இயற்கையாகவே மலரும் இயற்கையான அழகை பிள்ளைகள் எடுத்துக்காட்டுவதற்கேதுவாக வாலிபத்தின் குணங்களை உண்டாக்க பெற்றோரும் நோக்கங்கொள்ளவேண்டும். (8)

பாதிக்கப்படாத இயற்கையாகவே வளரும் பிள்ளைகளே மிகக் கவர்ச்சியானவர்கள். அவர்களுக்கு விசேஷ கவனிப்பைக் கொடுத்து, அவர்களுடைய புத்தியான வார்த்தைகளை அவர்கள்முன் திருப்பிச் சொல்லுவது ஞானமல்ல. அவர்களுடைய பார்வையையும் வார்த்தைகளையும் செய்கைகளையும் புகழ்வதினால் மாயையை ஊக்குவிக்கக்கூடாது. விலையுயர்ந்த, பகட்டாக காட்டிக்கொள்ளும் வஸ்திரங்களையும் அவர்கள் உடுத்தக்கூடாது. இது அவர்களில் பெருமையைத் தூண்டி, அவர்களுடைய நண்பர்கள் மனதிலும் பொறாமையை ஏற்படுத்தும். (9)

குழந்தைக்கேற்ற எளியமுறையில் அவர்கள் போதிக்கப்பட வேண்டும். சிறிய உதவியாயிருக்கும் கடமைகளைச் செய்வதிலும், தங்கள் வயதிற்கேற்ற இயற்கையான இன்பங்களிலும் அனுபவங்களிலும் திருப்தியடையும்படி பயிற்றுவிக்கப்படவேண்டும். உவமையிலுள்ள முளை குழந்தைப் பருவத்தைக் குறிக்கிறது. முளை அதற்கே உரிய அழகைப் பெற்றிருக்கிறது. பிள்ளைகள் வயதுக்குமிஞ்சிய முதிர்ச்சிக்குத் தள்ளப்படக்கூடாது, மாறாக, குழந்தைப் பருவத்தின் அழகையும், மலர்ச்சியையும் எவ்வளவு காலத்திற்கு சாத்தியமோ அவ்வளவு காலத்திற்குக் காக்கவேண்டும். (10)

சிறுகுழந்தைகள் தங்கள் வயதிற்கு ஒத்த அனுபவத்தோடு நல்ல கிறிஸ்தவர்களாகத் திகழலாம். இதைத்தான் தேவன் அவர்களிடம் எதிர்பார்க்கிறார். ஆவிக்குரிய காரியங்களில் அவர்கள் பயிற்றுவிக்கப்படவேண்டியது அவசியம். கிறிஸ்துவைப்போன்ற குணம் அவர்களில் அமையத்தக்கதாக பெற்றோர்கள் அதற்கேற்ற அனுகூலமான காரியங்களை அவர்களுக்கு வழங்கவேண்டும். (11)

இயற்கையில் தேவனுடைய விதிகள் அனைத்தும் காரணத்தைத் தொடர்ந்துவரும் பலன்களைப்போன்று, தவறிழைக்க முடியாத அளவிற்கு நிச்சயத்தோடு நிறைவேறுதலையடைகிறது. சோம்பேறியான ஊழியக்காரன் தன் வேலையினிமித்தம் கண்டனம் செய்யப்படுகிறான். அறுவடை அவனுக்கு எதிராகச் சாட்சி பகருகிறது. அதுபோலவே, ஆவிக்குரிய காரியங்களிலும் ஒவ்வொரு ஊழியக்காரனின் உத்தமமான நிலையும் அவனது பணியின் முடிவுகளை வைத்து அளவிடப்படுகிறது. அவனுடைய வேலையின் தன்மை சுறுசுறுப்பானதா அல்லது சோம்பலானதா என்பதை அறுவடை வெளிப்படுத்தும். அவனுடைய நித்தியம் இவ்விதமாக நிர்ணயிக்கப்படுகிறது. (12)

விதைக்கப்பட்ட ஒவ்வொரு விதையும் அதின் தன்மைக்கேற்ப அறுவடையை உற்பத்தி செய்கிறது. மானிட வாழ்விலும் இவ்வாறே நடைபெறுகிறது. நாம் அனைவரும் மனதுருக்கம், அனுதாபம், அன்பு போன்ற விதைகளை விதைக்கவேண்டியது அவசியம். ஏனெனில், நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம். தன்னலம், சுயத்தின்மீதான அன்பு, தன்மதிப்பு, சுயமாக தங்குதடையற்ற இன்பத்தை நுகர்தல் போன்ற குணங்களைக்கொண்ட விதைகள் அனைத்தும் அதேபோன்ற அறுவடையைக் கொண்டுவரும். சுயத்திற்காக வாழும் ஒரு மனிதன் தன் மாம்சத்திற்காக விதைக்கிறான். அவன் மாம்சத்தினாலே ஒழுக்கக்கேட்டை அறுப்பான். (13)

எந்த மனிதனையும் தேவன் அழிக்கிறதில்லை. அழிக்கப்படுகிற ஒவ்வொருவனும் தன்னைத்தானே அழிக்கிறவனாக இருக்கிறான். மனச்சாட்சியின் எச்சரிப்புகளை நெரித்து அடக்கிவைக்கின்ற ஒவ்வொருவனும் அவிசுவாசத்தின் விதைகளைத் தூவுகிறான். இவைகள் ஒரு நிச்சயமான அறுவடையைக் கொண்டுவரும். தேவனுடைய முதலாவது எச்சரிப்பைப் புறக்கணித்துப்போட்ட பண்டைக்காலத்து பார்வோன் பிடிவாதத்தின் விதைகளைத் தூவி, அதின்மூலம் பிடிவாதத்தையே அறுத்தான். நம்பும்படி தேவன் அவனை வற்புறுத்தவில்லை. அவன் விதைத்த அவிசுவாசத்தின் விதை அதின் தன்மைக்கேற்ப அறுவடையை உருவாக்கியது. பாழாகிப்போன தனது தேசத்தையும் தனது முதற்பேறான குழந்தையின் குளிர்ந்துபோன

உடலையும், தனது குடும்பம் மற்றும் இராஜ்யத்தில் உள்ள அனைத்து மரித்துப்போன உடல்களையும் பார்க்கும்வரைக்கும், தனது இரதங்களையும் குதிரைகளையும் தன்னுடைய இராணுவ வீரர்களையும் சமுத்திரத்தின் தண்ணீர் ஆழ்த்திப் போடும்வரைக்கும் தொடர்ந்து எதிர்த்தான். "மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலாத்தியர் 6:7) என்கிற தேவ வார்த்தை மெய் என்பதை அவனது வரலாற்றிலுள்ள பயங்கரமான சம்பவங்கள் நமக்குத் தெரியப்படுத்துகிறது. இதை மனிதர்கள் உணரும் பட்சத்தில், தாங்கள் எதை விதைக்கிறோம் என்பதைக்குறித்து எச்சரிக்கையாக இருப்பார்கள். (14)

விதைக்கப்பட்ட விதை அறுவடையை உருவாக்கும்போது, அந்த அறுவடையிலிருந்து மீண்டும் விதை விதைக்கப்பட்டு, இவ்விதமாக அறுவடை பெருக்கப்படுகிறது. மற்றவர்களிடத்தில் நாம் பழகும்போது, இந்த விதி செயல்படுகிறது. ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு வார்த்தையும் பலனைக் கொடுக்கக்கூடிய ஒரு விதையாக இருக்கிறது. அன்பான சிந்தை, கீழ்ப்படிதல், சுயத்தை வெறுத்தல் போன்ற நற்குணங்கள் நம்மிடமிருந்து பிறரிலே உருவாகி, அவர்களிடமிருந்து மற்றவர்களிடம் செல்லும். அதைப் போலவே, பொறாமை, துர்க்குணம், பிரிவினையை ஏற்படுத்துதல் போன்ற விதை, "கசப்பான வேராக" (எபிரெயர் 12:15) உருவெடுத்து, அநேகரைத் தீட்டுப்படுத்தும். அந்த "அநேகர்," மேலும் அநேகரைத் தீட்டுப்படுத்து வார்கள். இவ்விதமாக, நன்மையும் தீமையும் காலங்காலமாக விதைக்கப் பட்டுக்கொண்டிருக்கிறது. (15)

ஆவிக்குரிய மற்றும் இம்மைக்குரிய காரியங்களில் நாம் எப்படி உதாரத்துவமாக இருக்கவேண்டுமென்பதைக்குறித்து விதை விதைத்தல் உவமை நமக்குத் தெரிவிக்கிறது. "நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்" (ஏசாயா 32:20) என்று கர்த்தர் சொல்லுகிறார். "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக் கிறவன் பெருக அறுப்பான்"–2 கொரிந்தியர் 9:6. நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைத்தல் என்பது தேவனுடைய ஈவுகளைத் தடையின்றி வழங்குவதைக் குறிக்கிறது. எங்கெல்லாம் மனுக்குலத்திற்கு நம்முடைய உதவி தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் நம்முடைய சேவை சென்றடைய வேண்டும். அப்படி நாம் செய்யும்போது, வறுமை இருக்க வாய்ப்பில்லை. "பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்". விதைக்கிறவன் விதையைத் தூவுவதினால் அதைப் பெருகப்பண்ணுகிறான். இதைப் போன்றே தேவனுடைய ஈவுகளை மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொடுப்பவர்கள், அது பெருகும்படியாகப் பகிர்ந்துகொடுக்கிறார்கள். அவர்கள் கொடுக்கக்

கொடுக்க அவர்களுக்கு ஒருபோதும் குறைவு ஏற்படாது என்று தேவன் வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார். "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்"—லூக்கா 6:38. (16)

விதைப்பிலும் அறுப்பிலும் மேலும் ஏராளமான காரியங்கள் அடங்கியிருக்கின்றன. நம்முடைய அன்பு, மற்றும் அனுதாபத்தின்நிமித்தமாக நாம் தேவனுடைய இம்மைக்குரிய ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்கு அளிக்கும்போது, அது நன்றியோடு தேவனைத் துதிக்க அவர்களைத் தூண்டும். இதயமாகிய நிலம், ஆவிக்குரிய சத்தியமாகிய விதைகளைப் பெறுவதற்கு ஆயத்தப்படுகிறது. விதை விதைக்கப்பட்டவுடன், அது முளைத்து நித்திய ஜீவனுக்கேதுவான கனிகளைக் கொடுக்கும். (17)

விதையை மண்ணில் தூவுதலின்மூலம் கிறிஸ்து நம்மை மீட்கும்படிக்கு தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்ததைக் குறிப்பிடுகிறார்: "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்"—யோவா. 12:24. கிறிஸ்துவின் மரணம் தேவனுடைய இராஜ்யத்திற்கேதுவான கனிகளைக் கொடுக்கும். தாவர உலகத்தில் தானியம் மரித்து பலனைக் கொடுப்பதுபோல், ஜீவன் என்பது நமக்கு கிறிஸ்துவின் மரணத்தின்மூலம் கிடைக்கிறது. (18)

கிறிஸ்துவின் உடன் ஊழியக்காரர்களாக, அவரைப்போல் கனி கொடுக்க விருப்பமுள்ளவர்கள் முதலாவது நிலத்தில் விழுந்து மடியவேண்டும். உலகத்தின் தேவையென்னும் உழுசாலிற்குள் ஜீவியம் வீசி எறியப்படவேண்டும். சுயநலம், சுயஅன்பு அழியவேண்டும். ஆனால், நாம் சுயத்தைத் தியாகம் செய்யும் விதியே சுயத்தைப் பாதுகாக்கும் விதியாகும். நிலத்தில் புதைக்கப்பட்ட விதை கனியை உற்பத்திசெய்து, பின்னர் அந்தக் கனியின் விதையும் விதைக்கப்படுகிறது. இவ்விதமாக, அறுவடையானது பெருக்கப்படுகிறது. குடியானவன் விதைப்பதின்மூலமாக தானியத்தைச் சேமிக்கிறான்; அதுபோலவே, மனிதவாழ்விலும் கொடுப்பதன் பொருள் வாழ்வதாகும். தேவனுக்கும் மனிதனுக்கும் தாராளமாகச் செய்யப்படும் சேவையிலுள்ள ஜீவியத்தில்தான் ஜீவன் பாதுக்காக்கப்படுகிறது. கிறிஸ்துவினிமித்தம் இந்த உலகத்தில் தங்கள் ஜீவனை பலியாகக் கொடுப்பவர்கள் அதனை நித்தியத்திற்கென்று பாதுகாக்கிறார்கள். (19)

விதை அழிந்தபின், புதிய ஜீவனோடு எழும்புவதிலிருந்து உயிர்த்தெழுதலைக்குறித்த சத்தியத்தைக் கற்றுக்கொள்ளுகிறோம். தேவனை நேசிக்கிற அனைவரும் மீண்டுமாக மேலிருக்கும் ஏதேனில் ஜீவிப்பார்கள்.

பூமியிலே கிடத்தப்பட்டிருக்கும் சரீரத்தைக்குறித்து: "அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்" (1 கொரி. 15:42,43) என்று தேவன் கூறுகிறார். (20)

உயிருள்ள உவமையாகிய விதைவிதைக்கும் உவமையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய அநேக பாடங்களிலிருந்து சிலவற்றை விளங்கிக்கொண்டோம். இதைக் கற்றுக்கொடுக்கும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒரு நிலத்தைத் தெரிந்துகொண்டு, அதிலே விதை விதைத்து, செய்முறைவிளக்கத்தோடு போதனைசெய்வது மிகவும் நல்லது. பிள்ளைகள் தாங்களாகவே நிலத்தை ஆயத்தப்படுத்தி, அதிலே விதையை விதைக்குமாறு நாம் அவர்களை ஊக்குவிக்கலாம். அவர்கள் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது, பெற்றோரோ அல்லது ஆசிரியரோ இதயமாகிய தோட்டத்திலே விதைக்கப்பட்டிருக்கும் நன்மையான அல்லது தீமையான விதைகளைக்குறித்தும், தோட்டம் விதையைப் பெற்றுக்கொள்ள எப்படி எழுத்தின்படியாக ஆயத்தஞ்செய்யப்படுகின்றதோ, அதைப்போலவே இதயமும் சத்தியமாகிய விதையைப் பெற்றுக்கொள்ள ஆயத்தஞ்செய்யப்படவேண்டும் என்பதைக்குறித்தும் விளக்கலாம். நிலத்திலே விதையை விதைக்கும்போது, கிறிஸ்துவின் மரணத்தைக்குறித்துப் போதித்து, முளை எழும்பும்போது, அவருடைய உயிர்த்தெழுதலைக்குறித்துப் போதிக்கலாம். செடி வளரும்போது, இயற்கைக்கும் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் இடையேயுள்ள ஒற்றுமையை எடுத்துக்கூறலாம். (21)

வாலிபரும் இவ்விதமாக போதிக்கப்படவேண்டும். அவர்கள் நிலத்தைப் பண்படுத்த பயிற்றுவிக்கப்படவேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் விவசாயம் செய்யக்கூடிய நிலம் சேர்ந்திருந்தால் நல்லது. அத்தகைய நிலம் தேவனுடைய வகுப்பறையாகக் கருதப்படவேண்டும். இயற்கையில் காணப்படும் பொருட்களைப் பாடப்புத்தகமாக நோக்கி, அவைகளிலிருந்து கர்த்தருடைய பிள்ளைகள் அறிவைப்பெற்றுக்கொண்டு, ஆத்துமாவைப் பண்படுத்தும் அறிவைப் பெற்றுக்கொள்ளக் கற்றுக்கொள்ளவேண்டும். (22)

நிலத்தை ஒழுங்குபடுத்துவதிலும், பண்படுத்துவதிலும், அதைப் படியவைத்து ஆயத்தப்படுத்துவதிலுமிருந்து தொடர்ச்சியாகப் பாடங்களைப் படிக்க இயலும். வெறுமையாகக் கிடக்கின்ற நிலம் உடனடியாக அறுவடையைக் கொடுக்குமென்று எவரும் எதிர்பார்க்கமாட்டார்கள். ஆர்வம், கடின உழைப்பு, விடாமுயற்சியோடுகூடிய உழைப்பு ஆகியவைகள் மிகவும் அவசியமாக இருக்கிறது. நிலமானது விதையைப் பெறுவதற்கு

ஆயத்தஞ்செய்யப்படுகிறது. மானிட இதயத்தில் நடைபெறும் ஆவிக்குரிய வேலையிலும் இவ்வாறே காணப்படுகிறது. இதயமாகிய நிலத்தைப் பண்படுத்த விரும்புகிறவர்கள் தங்கள் இதயங்களிலே, தேவனுடைய வார்த்தையைச் சுமந்துசெல்ல வேண்டும்; அப்பொழுது, தரிசுநிலம்போன்ற அவர்களது இதயங்களை பரிசுத்த ஆவியானவர் நொறுக்கி மிருதுவாக்குவதைக் காண்பார்கள். நிலத்தின்மீது கடின உழைப்பில் ஈடுபடாத பட்சத்தில், அது எந்த விளைச்சலையும் தராது. அவ்வண்ணமே, இதயமாகிய நிலத்தை தேவ ஆவியானவர் பண்படுத்தி ஒழுங்குபடுத்தும்போது, அது தேவ மகிமைக்காகக் கனி கொடுக்கும். (23)

நிலமானது, கணநேர உந்துதல் நிமித்தம் அவ்வப்போது அதின்மீது செயல்படுகிறவர்களுக்கு பலனைக் கொடுக்காது. சிந்தனை கலந்த அன்றாட கவனம் அதற்குத் தேவை. நல்ல விதையிலிருந்து களைகள் போஷாக்கு பெற்றுவிடாதவாறு அடிக்கடி நிலத்தை ஆழமாக உழுதல் அவசியம். இவ்விதமாக உழுவதின் நிமித்தமும் விதைப்பதின் நிமித்தமும் விவாயி அறுவடைக்கு ஆயத்தமாகிறான். நம்பிக்கையிழந்தவர்களாகத் தங்கள் நிலத்தின் மத்தியில் நிற்கும் நிலைமை எவருக்கும் ஏற்பட வாய்ப்பில்லை. (24)

நிலத்தில் வேலைசெய்பவர்கள் இயற்கையின்மூலமாக ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக்கொள்ளும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்கள் மீது தங்கும். நிலத்தைப் பயிரிடும்போது, அதில் பணிபுரியும் வேலையாட்கள் எந்த அளவிற்கு நிலம் நன்மை பயக்கும் என்பதை அறியாதிருப்பார்கள். போதனைகளை அவமதிக்காமல், அனுபவசாலிகளிடமிருந்தும் படித்தவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்ட தகவல்களைமாத்திரம் மனதில் கொள்ளாமல், அவர்கள் தாங்களாகவே பாடங்களைக் கற்றுக்கொள்ள முன்வரவேண்டும்; இது அவர்களது பயிற்சியின் ஒரு பகுதியாகிறது; ஆத்துமாவிற்கு நல்லதொரு கல்வியை வழங்கும் பாடசாலையாக பயிர்செய்யும் நிலம் விளங்கும். (25)

விதையை முளைத்து எழும்பச்செய்து, அதை இரவு பகலாகக் காத்து, அது நல்ல முறையில் வளர சக்தியைக் கொடுப்பவர் நம்மைப் படைத்தவர்; அவரே பரலோகத்தின் சக்கரவர்த்தியுமாவார். அவர் தமது பிள்ளைகளின் சார்பில் அதிக அக்கறையும் கவனமும் செலுத்துகிறார். இந்த உலகத்தில் நம்முடைய வாழ்க்கை நிலைக்கும்படியாக குடியானவன் விதையைத் தூவுகிறான். நாம் நித்திய ஜீவனுக்கேதுவான கனியைத் தரும் வகையிலே, நம்முடைய தெய்வீக விதைப்பாளர் நமது ஆத்துமாவிலே விதையை விதைக்கிறார். (26) ★

# 7

# புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது!

**(மூலநூல் : பக்கங்கள் 95–102)**
**மத்தேயு 13:33; லூக்கா 13:20,21**

படித்த மற்றும் செல்வாக்குள்ள மக்கள் பலர் கலிலேயா தீர்க்க தரிசியின் பேச்சைக்கேட்க வந்திருந்தனர். அவர்களில் சிலர் கடற்கரையில் பிரசங்கித்துக்கொண்டிருந்த அவரைச் சுற்றிலும் கூடியிருந்த பெருந்திரளான மக்களைக்குறித்து அறியவேண்டுமென்று அக்கறையுள்ள ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்தில் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் குழுமியிருந்தனர். ஏழைகள், படிக்காதவர்கள், பிச்சைக்காரர்கள், முகத்திலே குற்றவாளியென முத்திரை குத்தப்பட்ட திருடர்கள், ஊனமுற்ற வர்கள், ஒழுக்கக்கேடானவர்கள், வணிகர்கள், ஓய்வுநேரத்தை அனுபவிக்கும் மக்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், தரித்திரர்கள், செல்வந்தர்கள் என்று பலதரப்பினரும் கிறிஸ்துவைச்சுற்றி ஒருவர்மேல்ஒருவர் விழத்தக்கதாக நெருக்கிக்கொண்டு அவருடைய பிரசங்கத்தைக் கேட்பதற்காக நின்றனர். இப்படிப்பட்ட வழக்கத்திற்கும் மாறான ஒரு ஜனக்கூட்டத்தை கற்றறிந்தவர்கள் பார்த்தபோது, தேவனுடைய இராஜ்யம் இப்படிப்பட்ட ஜனக்கூட்டத்தைக் கொண்டதாகத்தான் இருக்குமோவென்று தங்களுக்குள் வினவினர்; அப்பொழுது மீண்டும் ஒரு உவமையின்மூலமாக இரட்சகர் அவர்களுக்குப் பதில் கொடுத்தார். (1)

“பரலோக இராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும்வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கிவைத்தாள்” (மத்தேயு 13:33) என்றார். (2)

யூதர்கள் சில சமயங்களில் புளித்த மாவை பாவத்தின் சின்னமாகக் கருதினார்கள். பஸ்கா பண்டிகையின்போது இதயங்களில் இருந்து பாவத்தை நீக்குவதுபோல், தங்கள் இல்லங்களிலிருந்து புளித்தமாவு அனைத்தையும் நீக்கும்படியாக அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். கிறிஸ்து தமது சீடர்களை நோக்கி, “மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையா

யிருங்கள்" (லூக்கா 12:1) என்று கூறினார். அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரி.5:8–ல் "துர்க்குணம் பொல்லாப்பு" என்னும் புளித்தமாவைக்குறித்துப் பேசுகிறார்; ஆனால், இரட்சகரின் உவமையிலே புளித்தமாவு பரலோக இராஜ்யத்தைக் குறிக்கிறது. அது தேவகிருபையின் உயிர்ப்பிக்கிற—தன்மயமாக்குகிற வல்லமையை விளக்கிச் சொல்கிறது. (3)

பரிசுத்த ஆவியானவரின் இந்த வல்லமை செயல்படாத அளவிற்கு எவரும் துஷ்டனாகவோ, கீழான நிலையிலோ இருக்க முடியாது. பரிசுத்த ஆவியானவருக்கு தங்களை ஒப்புக்கொடுக்கும் மக்கள் அனைவரிலும், வாழ்விற்கான ஒரு புதிய கொள்கை நாட்டப்படவேண்டும். இழந்துபோன தேவசாயலை மானுடம் மீண்டும் பெற்றுக்கொள்ளவேண்டும். (4)

எனவே, மனிதன் தன் சுயசித்தத்தைப் பயன்படுத்தி, தன்னைத்தானே மாற்றிக்கொள்ள இயலாது. இந்த மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தி அவனிடத்தில் இல்லை. உணவிலே விருப்பமான மாற்றத்தைக் கொண்டுவரும்படியாக புளித்தமாவு சற்று கலக்கப்படுகிறது; அதுபோலவே, மகிமையின் இராஜ்யத்திற்குச் செல்லத் தகுதிபெற ஒரு பாவி தேவனிடத்திலிருந்து கிருபையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். உலகம் தரக்கூடிய கலாச்சாரமும், கல்வியும் பாவத்தினிமித்தம் தரந்தாழ்ந்திருக்கும் ஒரு மனிதனை, பரலோகத்தின் பிள்ளையாக மாற்ற இயலாது. புதிதாக்குகிற சக்தி தேவனிடத்திலிருந்து வரவேண்டும். இந்த மாற்றத்தை பரிசுத்த ஆவியானவர்மட்டுமே செய்ய இயலும். உயர்ந்தவரோ, தாழ்ந்தவரோ, ஏழையோ, பணக்காரரோ, இரட்சிக்கப்பட விருப்பமுள்ள யாவரும் இந்த வல்லமைக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும். (5)

உணவில் கலக்கப்பட்ட புளித்தமாவு மாற்றத்தை ஏற்படுத்த உள்ளிருந்து கிரியைசெய்வதுபோல, தேவனுடைய கிருபை இதயத்தைப் புதிதாக்குவதின்மூலம் ஜீவியத்தை மாற்றுகிறது. வெறுமனே ஏற்படும் ஒரு வெளியரங்கமான மாற்றம் தேவனோடு நம்மை இணக்கமாகக் கொண்டுவர இயலாது. அநேகர் தங்களிடமுள்ள கெட்ட பழக்கவழக்கங்களைக் கைவிடுவதினிமித்தமாக தங்களை மாற்றி கிறிஸ்தவர்களாகிவிடலாமென்று கருதுகின்றனர்; ஆனால், அவர்கள் தவறான இடத்தில் ஆரம்பிக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். மாற்றமானது முதலாவது இதயத்தில் துவங்கவேண்டும். (6)

விசுவாச அறிக்கைசெய்வதும், சத்தியத்தை ஆத்துமாவில் கொண்டிருப்பதும் இரு வித்தியாசமான காரியங்களாகும். சத்தியத்தைக்குறித்த அறிவு மாத்திரம் இருந்தால் போதாது. சத்தியத்தைக்குறித்த அறிவைப் பெற்றிருந்தும் சிந்தனைகளில் மாற்றம் ஏற்படாமல் இருக்க வாய்ப்பு

உண்டு. நமது முதல் வேலை இதயத்தில் துவங்கவேண்டும். இதயமானது மாற்றமடைந்து பரிசுத்தமாக்கப்படவேண்டும். (7)

கட்டாயத்தினிமித்தம்—கடமை உணர்வினிமித்தம் தேவனுடைய கற்பனைகளை அனுசரிக்க முயற்சிசெய்யும் ஒரு மனிதன், கீழ்ப்படிதலின் மகிழ்ச்சிக்குள் ஒருபோதும் பிரவேசிக்கமுடியாது. அவன் கீழ்ப்படிகிறதில்லை. அவன் கற்பனைகளைக் கைக்கொள்வதாக நாம் அர்த்தங்கொள்ள இயலாது. தேவனால் கோரப்படும் கடமைகள் ஒரு பாரமாக கருதப்படும்போது, அது மனிதனின் இயல்புக்கு மாறாகச் செயல்படுகிறது. எனவே, அந்த நபரது வாழ்க்கை ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையல்லவென்பதை நாம் அறிந்துகொள்ளலாம். மெய்கீழ்ப்படிதலானது உள்ளே கிரியைசெய்யும் கொள்கைகளினிமித்தம் வெளிப்படும். அது நீதியின்மேல் உள்ள நாட்டத்தினாலும், தேவனுடைய கற்பனையின்மேல் உள்ள அன்பினாலும் வெளிப்படும். மீட்பருக்கு நாம் காட்டும் விசுவாசமே அனைத்து நீதியின் சாரமாயிருக்கிறது. நாம் இதைச் செய்யும்போது, இக்காரியம் சரியானதாக இருப்பதால், சரியானதைச் செய்ய நம்மை நடத்திச் செல்லும். ஏனெனில், சரியானதைச் செய்வதே தேவனுக்குப் பிரியமானதாகும். (8)

பரிசுத்த ஆவியானவர்மூலம் ஏற்படும் இதய மாற்றம் என்னும் பெரிய சத்தியத்தை கிறிஸ்து நிக்கொதேமுவிற்கு விளக்கினார்: “ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக்குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்” (யோவான் 3:–8) என்றார். (9)

அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு: “தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப் பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும்

செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு” எபேசியர் 2:4–8) என்று எழுதுகிறார். (10)

மாவிற்குள் மறைந்திருக்கும் புளிப்பு, மாவுமுழுவதும் புளிக்கும்படியாக காணக்கூடாத வகையில் செயல்படுவதுபோல், சத்தியமென்னும் புளித்த மாவு இரகசியமாகவும், அமைதியாகவும், உறுதியாகவும் கிரியைசெய்து, ஆத்துமாவிலே மாற்றத்தை ஏற்படுத்துகிறது. சுபாவ விருப்பங்கள் அனைத்தும் மிருதுவாக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகிறது. புதிய சிந்தனைகளும், புதிய உணர்வுகளும், புதிய நோக்கங்களும் நாட்டப்படுகின்றன. குணத்தில் ஒரு புதிய படித்தரம் நிலைநாட்டப்படுகிறது; அதாவது, கிறிஸ்துவின் ஜீவியம் அங்கு ஆரம்பமாகிறது. மனதில் மாற்றம் ஏற்பட்டு திறன்கள் புதிய வழிகளிலே செயல்படத் துவங்குகின்றன. புதிய திறன்கள் மனிதனுக்கு அளிக்கப்படாமல், அவனுக்குள் இருக்கும் திறன்கள் பரிசுத்தமாக்கப்படுகின்றன. மனச்சாட்சி விழிப்படைகிறது. தேவனுடைய ஊழியத்தை நாம் செய்யும்வண்ணமாக, அவர் விசேஷித்த குணங்களை நமக்கு வழங்குகிறார். (11)

தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கிறதாகக் கூறிக்கொள்கிற அநேகரிடத்தில் வார்த்தையிலும், ஆவியிலும், குணத்திலும் சீர்திருத்தம் ஏற்படாதிருப்பது ஏன்? என்ற கேள்வி அநேக முறை எழுவதுண்டு. தங்களுடைய நோக்கங்களுக்கும், திட்டங்களுக்கும் எதிர்ப்பு ஏற்படும்போது, அநேகர் தங்களுடைய பரிசுத்தமற்ற குணத்தையும், கடுமையான வார்த்தை களையும், கர்வத்தையும், தீய உணர்வுகளையும் வெளிப்படுத்துவது ஏன்? உலகத்தாரைப்போல் அவர்களும் சுயத்தை நேசித்து, சுயத்திற்கு இடங் கொடுத்து, துரிதமாக சிந்தியாமல் பேசி, வாழ்க்கையிலே உலகத்தாரைப் போலக் காணப்படுகிறார்கள். சத்தியத்தை முற்றிலுமே அறியாதவர்கள் போல் பெருமைக்கு இடமளித்து, சுபாவ விருப்பத்திற்குப் பணிந்து, தங்களது குணத்தை வக்கிரமாக்கிக்கொள்கிறார்கள். இவ்வண்ணமாக அவர்கள் இருப்பதற்கு மனம் திரும்பாததே காரணம். அவர்கள் புளித்தமாவு என்னும் சத்தியத்தை தங்கள் இதயத்தில் மறைத்துவைக்காமால் இருக்கிறார்கள். அந்த புளித்தமாவு தன் வேலையைச் செய்வதற்குத் தருணம் கொடுக்காமல் இருக்கிறார்கள். மாற்றத்தைக் கொண்டுவரும் அதின் சக்திக்கு தங்களை ஒப்புக்கொடுக்காமல், தாங்களாகவே வளர்த்திருக்கும் தங்களது இயல்பான குணத்திற்கு இடமளிக்கிறார்கள். அவர்களுடைய ஜீவியங்கள் கிறிஸ்துவின் கிருபை அவர்களில் இல்லை என்பதை மாத்திரமல்ல, அவருடைய குணத்தை மாற்றும் வல்லமையை அவர்கள் விசுவாசிப்பதில்லை என்பதையும் வெளிப்படுத்துகிறது. (12)

"விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்"—ரோமர் 10:17. குணத்தில் மாற்றம் ஏற்படுவதில் பரிசுத்த வேதவாக்கியங்கள் ஒரு மாபெரும் ஏதுகரமாக இருக்கிறது. "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17) என்று கிறிஸ்து ஜெபித்தார். தேவனுடைய வார்த்தையை வாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்தால், அது இதயத்தில் கிரியைசெய்து, ஒவ்வொரு அசுத்த இயல்புகளையும் அடக்கும்; அப்பொழுது, பரிசுத்த ஆவியானவர் வந்து பாவத்தைக்குறித்து உணர்த்துவார். கிறிஸ்துவை நேசிப்பதினிமித்தம் இதயத்தில் பொங்கும் விசுவாசம், ஆவி, ஆத்துமா, சரீரத்தில் அவருடைய சாயல் தெரியும்வண்ணம் ஒரு ஒத்த சாயலைக் கொண்டுவரும்; அப்பொழுது, தேவன் அவருடைய சித்தஞ்செய்ய நம்மை உபயோகிப்பார். நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் வல்லமை உள்ளிருந்து வெளியரங்கமாகக் கிரியைசெய்து, நாம் பெற்றுக் கொண்ட சத்தியத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த நம்மை வழிநடத்தும். (13)

தேவனுடைய வசனத்தில் காணப்படும் சத்தியங்கள் அவனுடைய அன்றாட—மிகமுக்கியமான நடைமுறைக்கேற்ற காரியங்களைச் சந்திக்கக் கூடியதாக இருக்கிறது. அதாவது, அது விசுவாசத்தின்மூலமாக ஆத்துமாவை மனந்திரும்பச்செய்கிறது. தேவனுடைய வார்த்தையில் உள்ள வாழ்க்கையின் உயரிய நெறிமுறைகள் மிகவும் பரிசுத்தமானதாகவும் மிகவும் தூய்மையான தாகவும் இருக்கிறபடியால், அதை அன்றாட வாழ்வில் செயல்படுத்துவது கடினமென்று எண்ணிவிடக்கூடாது. இந்த சத்தியங்கள் பரலோகத்தையும் நித்தியத்தையும் எட்டிப்பிடித்து வளைந்துகொண்டிருக்கிறது. இந்த சத்தியங்களின் ஆற்றல்வாய்ந்த செல்வாக்கு மனிதனின் அனுபவத்திலே பின்னிப்பிணைந்திருக்கவேண்டும். அவை வாழ்வின் அனைத்து—பெரிய மற்றும் சிறிய காரியங்களிலும் ஊடுருவிச்செல்லவேண்டும். (14)

சத்தியமாகிய புளித்தமாவை இதயத்தில் பெற்றுக்கொள்ளும்போது, அது வாஞ்சைகளை ஒழுங்குபடுத்தி, சிந்தனைகளை பரிசுத்தப்படுத்தி, மனவிருப்பங்களை இனிமையாக்கும். அது மனதின் திறன்களையும் ஆத்துமாவின் சக்திகளையும் உயிர்ப்பிக்கிறது. உணரும் மற்றும் நேசிக்கும் திறனை அது அதிகரிக்கிறது. (15)

இத்தகைய கொள்கையினால் ஊக்குவிக்கப்படும் ஒரு மனிதனை உலகம் புரியாத புதிராகக் கருதும். சுயநலமுள்ள, பண ஆசைகொண்ட மனிதன் ஆஸ்திகளையும் கனத்தையும் உலகப்பிரகாரமான இன்பங்களையும் தனக்கே சேமித்துவைத்துக்கொள்ள ஜீவிக்கிறான். தன்னுடைய மதிப்பீட்டின்

படியே, நித்திய உலகை இழந்துபோகிறான். கிறிஸ்துவைப் பின்பற்றும் மனிதனுடைய சிந்தையை இந்தக் காரியங்கள் கவர்ந்திழுக்காது. அவன் கிறிஸ்துவினிமித்தம் தன் சுயத்தை மறுத்து, இவ்வுலகில் நம்பிக்கை யற்றவர்களாக வாழ்க்கையில் கிறிஸ்து இல்லாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களை இரட்சிக்கும் அந்த மாபெரும் வேலையில் உதவுவதற்காக கடுமையாக உழைக்கிறான். அத்தகைய ஒரு மனிதனை இவ்வுலகத்தால் புரிந்துகொள்ள இயலாது; ஏனெனில், அவன் நித்தியத்திற்கடுத்த மெய்யான காரியங்களை மனதில் கொண்டு செயல் படுகிறான்; மீட்கும் வல்லமைகொண்ட கிறிஸ்துவின் அன்பு அவனுடைய இதயத்திற்குள் புகுந்திருக்கின்றது. இந்த அன்பு மற்ற அனைத்து எண்ணங்களையும் அடக்கி, கறைப்படுத்துகின்ற உலகத்தின் செல்வாக்கினின்று அவனை உயர்த்துகிறது. (16)

மானிடக் குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரோடும் நாம் தொடர்பு கொள்ளும்போது, தேவனுடைய வார்த்தை நம்மைச் சுத்திகரிக்கும் தன்மையுடையதாகக் காணப்படவேண்டும். சத்தியமாகிய புளித்தமாவு போட்டியின் ஆவியையும், புகழ்குறித்த ஆவலையும், முதன்மையாக இருக்கவேண்டுமென்ற வாஞ்சையையும் உற்பத்தி செய்யாது. பரத்திலிருந்து பிறக்கும் உண்மையான அன்பு தன்னலமிக்கதாகவும், மாறக்கூடியதாகவும் இருக்காது. அது மனிதப் புகழ்ச்சியைச் சார்ந்திராது. தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளுகிற ஒரு மனிதனுடைய இதயம் தேவனை நேசித்து, கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அவர்களையும் நேசிப்பதற்காக பொங்கிவழியும். அங்கீகாரம் பெற்றுவிடவேண்டுமென்ற போராட்டத்தில் சுயம் இறங்குவதில்லை. அவனைப் பிரியப்படுத்தி, அவனுடைய நற்குணங்களைப் பாராட்டுகின்ற காரணத்தினால், அவன் அவர்களை நேசியாமல், கிறிஸ்து அவர்களை கிரயப்பொருளாகக் கொண்டிருப்பதினிமித்தம் அவர்களை நேசிக்கிறான். தன்னுடைய எண்ணங்களும், வார்த்தைகளும், கிரியை களும் தவறாகப் புரிந்துகொள்ளப்படும்போது, அல்லது தவறாக எடுத்துரைக்கப்படும்போது, அதைக்குறித்து இடறலடையாமல், தன்னுடைய வழக்கமான வழியில் நிதானமாகச் செல்வான். அவன் அன்பு கொண்டவ னாகவும், சிந்தனையாளனாகவும் தன்னைக்குறித்து தாழ்மையான கருத்து கொண்டவனாகவும் எப்போதும் தேவனுடைய அன்பிலும் அவருடைய இரக்கத்திலும் முழு நம்பிக்கையுள்ளவனாகவும் இருக்கிறான். (17)

“உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்

கிறதே" (1 பேதுரு 1:15,16) என்று அப்போஸ்தலனாகிய பேதுரு நம்மை எச்சரிக்கிறார். கிறிஸ்துவின் கிருபையானது குணத்தையும், குரலையும் கட்டுப்படுத்தும். சகோதரருக்கு சகோதரர் நற்பண்புகொண்ட, மென்மையான மரியாதைகொண்ட உற்சாகமளிக்கும் வார்த்தைகளை தெரிவிப்பதில் அதின் கிரியை வெளிப்படும். நம்முடைய இல்லம் தூதனுடைய பிரசன்னத்தைக் கொண்டிருக்கும்; அப்பொழுது மனித வாழ்க்கை இனிமையான சுகந்த வாசனையுள்ளதாக மாறி, பரிசுத்த தூபமாக தேவனிடத்திற்கு எழும்பும். அன்பானது இரக்கம், மென்மையான குணம், சகிப்புத்தன்மை மற்றும் நீடியபொறுமை ஆகியவைகளின்மூலமாக வெளிப்படுகிறது. (18)

முகச்சாயலில் மாற்றம் ஏற்படும். அவரை நேசித்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுடைய இதயங்களில் கிறிஸ்து வாசஞ்செய்யும்போது, அவர்களுடைய முகங்கள் பிரகாசமாயிருக்கும். சத்தியம் அங்கே எழுதப்பட்டிருக்கும். பரலோகத்தின் இனிமையான சமாதானம் வெளியாக்கப்பட்டிருக்கும். மனித அன்பிற்கும் மேலான சாந்த குணம் வெளிப்பட்டிருக்கும். (19)

சத்தியமாகிய புளித்த மாவு கரடுமுரடானதை நயப்படுத்தி, கடின மானதை மென்மையாக்கி, சுயநலமாயிருப்பதை தயாள குணமாக மாற்றி, முழுமனிதனிலும் ஒரு மாற்றத்தைக் கொண்டுவருகிறது. ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலே அது அசுத்தமானதை கழுவிச் சுத்திகரிக்கிறது. அது தன்னுடைய ஜீவனை வழங்கும் வல்லமையினால் நம்முடைய மனம், ஆத்துமா, பலம் ஆகியவற்றை தெய்வீக ஜீவனோடு இசைவுபடுத்துகிறது. மானிட இயல்பிலிருக்கும் மனிதன் தெய்வீகத்தில் ஒரு பங்காளியாக மாறுகிறான். குணத்தில் காணப்படும் நிறைவிலும் மேன்மையிலும் கிறிஸ்து கனப்படுத்தப்படுகிறார். இந்த மாற்றங்கள் தோற்றுவிக்கப்படும்போது, தேவ தூதர்கள் பேரானந்தத்துடன் துதியின் கீதங்களை ஏறெடுக்க, தெய்வீகத் தன்மைக்கேற்றவாறு வடிவமைக்கப்பட்ட ஆத்துமாக்களைக் கண்டு, தேவனும் கிறிஸ்துவும் மகிழ்ச்சியடைகின்றனர். (20) ★

# 8

# புதையுண்டிருந்த பொக்கிஷம்!

**(மூலநூல் : பக்கங்கள் 103–114)**

**மத்தேயு 13:44**

“பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்.”—மத்தேயு 13:44. (1)

பண்டையக் காலங்களில் பொக்கிஷங்களை பூமியில் புதைத்து வைப்பது மக்களின் வழக்கமாயிருந்தது. கொள்ளைகளும், களவுகளும் அடிக்கடி நிகழ்ந்துவந்தன. அரசாட்சிசெய்யும் அரசு மாறியபோதெல்லாம், பொருள் வைத்திருந்தோரிடமிருந்து பெருந்தொகையை கப்பம் என்ற பேரில் கட்டாயமாக வசூலித்தனர். வேற்றுநாட்டுப் படைகள் வந்து கொள்ளையடித்துச் சூரையாடும் அபாயத்தை நாடு தொடர்ந்து சந்திக்க வேண்டியதிருந்தது. அதின் விளைவாக, பணம் வைத்திருந்தோர் அதை மறைக்க முற்பட்டு, அதை பூமியின் அடியில் புதைத்துவைப்பதைப் பாதுகாப்பாக எண்ணினார்கள். அப்படி மறைத்துவைத்த இடத்தை அநேக வேளைகளில் மறந்து போனார்கள். மரணம் பொக்கிஷக்காரரை மவுனமாக்கலாம் அல்லது சிறைவாசமும் நாடுகடத்தப்படுவதும் பொக்கிஷங்களிலிருந்து அவர்களைப் பிரித்திருக்கலாம். அப்படிப்பட்ட நிலையில் இவ்வளவு பிரயாசப்பட்டு மறைக்கப்பட்ட பொக்கிஷம் அதைக் கண்டுபிடிக்கும் பாக்கியசாலிக்கு விட்டுவிடப்பட்டது. அலட்சியமாகக் கிடந்த நிலங்களிலிருந்து பழைய நாணயங்களையும், பொன் மற்றும் வெள்ளி ஆபரணங்களையும் கண்டெடுப்பது கிறிஸ்துவின் நாட்களில் சாதாரணமான ஒரு காரியமாக இருந்தது. (2)

நிலத்தை வாடகைக்கு எடுக்கும் மனிதன் அதில் எருதைப்பூட்டி உழும்போது, புதைக்கப்பட்டிருந்த பொக்கிஷம் கண்டெடுக்கப்படுகிறது.

பொக்கிஷத்தைக் கண்டுபிடிக்கிற விவசாயி தனக்குக் கிடைக்கும் தூரத்தில் அது இருப்பதைக் காண்கிறான். கண்டெடுத்த பொன்னை அந்த மறைவிடத்திலேயே மீண்டும் வைத்துவிட்டு, தன் வீடு திரும்பி, தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, பொக்கிஷத்தைக்கொண்டுள்ள நிலத்தை வாங்குகிறான். அவனுடைய குடும்பத்தாரும் அயலகத்தாரும் அவன் செய்வதை ஒரு பைத்தியக்காரச் செயலாகப் பார்க்கும்போது, அதின் மதிப்பு அவர்கள் கண்களுக்குப் புலப்படுதில்லை; ஆனால், அந்த நிலத்தைக்கொள்ளும் அந்த மனிதனுக்கு தான் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதுபற்றி நன்றாகத் தெரியும். அந்த நிலத்தை தன் பெயரில் வாங்கிக்கொண்டபின், தான் கண்ட பொக்கிஷத்தை நிலத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தேடுகிறான். (3)

இந்த உவமை பரலோக பொக்கிஷத்தின் மதிப்பையும், அதைப் பெற்றுக்கொள்ளுவதற்காக நாம் செய்யவேண்டிய முயற்சியையும் விளக்கிச் சொல்கிறது. பொக்கிஷத்தைக் கண்டுபிடித்தவன், மறைந்திருந்த செல்வங்களை அடைந்துகொள்வதற்காக தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்பதற்கும் களைப்பின்றி உழைப்பதற்கும் ஆயத்தமாக இருந்தான்; அதுபோலவே, பரலோகப் பொக்கிஷத்தை கண்டுபிடிக்கும் நபர், சத்தியமாகிய பொக்கிஷத்தைப் பெற்றும்கொள்ள எத்தகைய மாபெரும் உழைப்பையும் தியாகத்தையும் பொருட்படுத்துவதில்லை. (4)

உவமையில் காணப்படுகிற பொக்கிஷத்தை உள்ளடக்கிய நிலம், பரிசுத்த வேதவாக்கியங்களைக் குறிக்கிறது. சுவிசேஷம் பொக்கிஷமாக இருக்கிறது. தேவனுடைய வசனத்தில் இருப்பதைப்போன்ற அளவிற்கதிகமான பொற்படிவங்களையும் விலையேறப்பெற்ற பொருட்களையும் இந்த பூமிகூட தன்னகத்தே கொண்டிருக்கவில்லை. (5)

## எவ்வாறு புதைந்துள்ளது?

சுவிசேஷத்தினுடைய பொக்கிஷங்கள் புதையுண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. தங்களது மதிப்பீட்டில் தங்களை ஞானிகளாகக் கருதிக்கொள்பவர்களாலும், வீண் தத்துவத்தைப் போதித்து, கர்வங் கொண்டிருப்பவர்களாலும் மீட்பின் திட்டத்தின் இரகசியமும், அதின் அழகும் வல்லமையும் சரியாகப் புரிந்துகொள்ளப்படுவதில்லை. அநேகர் கண்கள் இருந்தும் காணாதவர்களாகவும், செவிகள் இருந்தும் கேளாதவர்களாகவும், அறிவு இருந்தும் விளங்கக்கூடாதவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களால் மறைந்திருக்கும் பொக்கிஷத்தைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. (6)

ஒரு மனிதன் மறைத்துவைக்கப்பட்டிருக்கும் நிலத்தின்மீது நடந்து செல்லலாம். மிகவும் கொடிய தரித்திரமான நிலையில் ஓய்வெடுக்கிறதற்காக ஒரு மரத்தடியில் அமரலாம்; ஆயினும், வேர்களின்கீழ் மறைந்திருக்கும் பொக்கிஷத்தை அவன் அறியாதிருக்கிறான். இவ்வண்ணமாகவே யூதர்கள் நிலையும் இருந்தது. சத்தியம் ஒரு தங்க பொக்கிஷமாக எபிரெய மக்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்து, யூத வாழ்வாதாரம் பரலோகக் கையொப்பம்கொண்டதாக—கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டதாக இருந்தது. மீட்பைக்குறித்த மேலான சத்தியங்கள் அதின் மாதிரிகளிலும், அடையாளங் களிலும் மறைந்திருந்தது. அந்த மாதிரிகளும் அடையாளங்களும் சுட்டிக் காட்டிய கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தபோது, யூதர்களால் அவரை அடையாளம் கண்டுகொள்ள இயலவில்லை. அவர்கள் கரங்களில் தேவனுடைய வார்த்தை இருந்தது; ஆனாலும், தலைமுறை தலைமுறையாகக் கடைபிடிக்கப் பட்டுவந்த பாரம்பரியத்தாலும், மானிடரால் வேதவாக்கியங்களுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கங்களாலும், கிறிஸ்துவைப்பற்றிய சத்தியம் அவர்களுக்கு மறைவாயிருந்தது. புனித நூலின் ஆவிக்குரிய அர்த்தங்களை அவர்கள் காணத்தவறினார்கள். அனைத்து ஞானத்தின் பொக்கிஷ வீடாக விளங்கும் திருமறை அவர்களுக்குத் திறந்திருந்தும், அவர்கள் அதை அறியாதிருந்தார்கள். (7)

தேவன் தமது சத்தியத்தை மனிதர்களிடமிருந்து மறைத்து வைக்கிற தில்லை. தங்கள் சொந்த நடவடிக்கைகள்மூலமாக அவர்களே அதை தங்களுக்குத் தெளிவற்றதாக்கிக்கொள்ளுகிறார்கள். தாம்தான் மேசியா என்பதற்கான ஏராளமான ஆதாரங்களை யூத மக்களுக்கு கிறிஸ்து கொடுத்திருந்தார். அவருடைய போதனை அவர்களுடைய ஜீவியத்தில் ஒரு தீர்க்கமான மாற்றத்தை ஏற்படுத்த அழைப்புவிடுத்தது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால், தாங்கள் பேணிக்காத்துவந்த கோட்பாடுகளையும் பாரம்பரியங்களையும் விட்டுவிடவேண்டியதிருக்கும் என்பதை அவர்கள் கண்டார்கள். மாறாத நித்திய சத்தியத்தை ஏற்றுக்கொள்ள ஒரு தியாகம் அவசியமாயிருந்தது; கிறிஸ்துவிலே விசுவாசத்தை நிலைநாட்டத்தக்கதாக தேவன் கொடுத்த மிகமுக்கியமான, இறுதியான ஆதாரத்தை அவர்கள் ஏற்க மறுத்தார்கள். பழைய ஏற்பாட்டின் வேதவசனங்களை நம்புவதாக கூறிக்கொண்டபோதிலும், கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் அவரது குணம் ஆகியவை குறித்து பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டிருந்த சாட்சியை ஏற்க மறுத்தார்கள். நம்பிக்கை ஏற்படும்பட்சத்தில் தாங்கள் முன்கூட்டியே கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை விட்டுவிட்டு, மனம்மாற வேண்டியதிருக்கும் என்று அஞ்சினார்கள். சுவிசேஷத்தின் பொக்கிஷமும்

வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிற கிறிஸ்து அவர்கள் மத்தியில் வாசஞ்செய்தபோதிலும், பரலோகம் அனுப்பியிருந்த மாபெரும் ஈவை ஏற்க மறுத்தார்கள். (8)

"ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர்நிமித்தம் அதை அறிக்கைபண்ணாதிருந்தார்கள்"–யோவான் 12:42. அவர்கள் இயேசுவை தேவனுடைய குமாரனென்று விசுவாசித்தார்கள்; நன்றாக உணர்ந்திருந்தார்கள்; எனினும் அவரை அறிக்கைசெய்வதென்பது அவர்களது வாஞ்சைகளுக்கும் பேராவல்களுக்கும் இசைவாக அமைந்திருக்கவில்லை. பரலோகப் பொக்கிஷத்தைப் பெற்றுத்தந்திருக்கக்கூடிய விசுவாசம் அவர்களிடத்தில் காணப்படவில்லை; அவர்கள் உலகப்பிரகாரமான பொக்கிஷத்தை மட்டுமே தேடிக்கொண்டிருந்தார்கள். (9)

இன்றைக்கும் மனிதர்கள் இந்த பூமிக்கடுத்த பொக்கிஷங்களை ஆவலோடு தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது உள்ளங்கள் தன்னல மான பேராவல்கொண்ட எண்ணங்களால் நிறைந்திருக்கின்றன. உலகப் பிரகாரமான செல்வத்தையும் கனத்தையும் அல்லது அதிகாரத்தையும் பெற்றுக்கொள்வதற்காக மனிதனுக்கேற்ற கோட்பாடுகள், பாரம்பரியங்கள், கோரிக்கைகள் அனைத்தையும் தேவனுடைய கோரிக்கைகளுக்கும்மேலாக வைக்கின்றனர். அவர்களிடமிருந்து தேவனுடைய வசனத்தில் காணப்படும் பொக்கிஷங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன. (10)

"ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவை களானதால், அவைகளை அறியவுமாட்டான்"–1 கொரி. 2:14. (11)

"எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர் களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்"–2 கொரி. 4:3,4. (12)

## பொக்கிஷத்தின் மதிப்பு

மனிதன் இலாபம் ஈட்டுவதில் தன் கவனத்தைச் செலுத்தி, நித்தியத் திற்கடுத்த காரியங்களை நோக்கத் தவறினான் என்பதை இரட்சகர் கண்டார்.

இந்தத் தீமையைத் திருத்துகின்ற வேலையை அவர் மேற்கொண்டார். ஆத்துமாவைச் செயலிழக்கச்செய்யும் வசிய ஆற்றலினின்று அவனை விடுவிக்க விரும்பினார்; உரத்த சத்தமாக: "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத்தேயு 16:26) என்றார். மனிதன் காணத்தவறிய—உயரிய—மேலான உலகத்தை, பாவத்தில் விழுந்துபோன மனுக்குலத்திற்குமுன்பாக நிறுத்தி, நித்தியத்திற்கடுத்த உண்மைகளைக் காணச்செய்தார். எல்லையற்ற அவ்வுலகத்தின் வாசலருகே அவனை அழைத்துச்சென்று, அங்கேயுள்ள பொக்கிஷங்களையும், அவையனைத்தும் வர்ணிக்கமுடியாதபடி தேவ மகிமையால் மூடப்பட்டிருப்பதையும் காண்பிக்கிறார். (13)

அந்தப் பொக்கிஷத்தின் மதிப்பு வெள்ளி அல்லது பொன்னைப் பார்க்கிலும் மேலானது. இவ்வுலகத்தில் காணப்படும் சுரங்கங்களின் ஐசுவரியத்தை அதனோடுகூட ஒப்பிட இயலாது. (14)

"ஆழமானது: அது என்னிடத்தில் இல்லையென்கிறது; சமுத்திர மானதும், அது என்னிடத்தில் இல்லையென்கிறது. அதற்கு ஈடாகத் தங்கத்தைக் கொடுக்கவும், அதற்குக் கிரயமாக வெள்ளியை நிறுக்கவும் கூடாது. ஓப்பீரின் தங்கமும், விலையேறப்பெற்ற கோமேதகமும், இந்திர நீலக்கல்லும் அதற்கு ஈடல்ல. பொன்னும் பளிங்கும் அதற்கு ஒப்பல்ல; பசும் பொன்னாபரணங்களுக்கு அதை மாற்றக்கூடாது. பவளத்தையும் ஸ்படிகத்தையும் அத்தோடே ஒப்பிட்டுப் பேசலாகாது; முத்துகளைப் பார்க்கிலும் ஞானத்தின் விலை உயர்ந்தது"—யோபு 28:14–18. (15)

இதுவே வேதவாக்கியங்களில் காணப்படும் பொக்கிஷம். பரிசுத்த வேதாகமம் தேவனுடைய மாபெரும் பாடப்புத்தகமாகவும், மேம்பட்ட அவரது கல்வியாளராகவும் இருக்கிறது; அனைத்து மெய்யான அறிவியலின் அஸ்திபாரமும் வேதாகமத்தில் அடங்கியிருக்கிறது. அறிவின் ஒவ்வொரு கிளையையும், தேவனுடைய வார்த்தையை ஆராய்வதின்வழியாகக் கண்டடையலாம். எல்லாவற்றிற்கும்மேலாக, அனைத்து அறிவியல்களுக்கும் அறிவியலாகத் திகழ்கின்ற இரட்சிப்பின் அறிவியலை அது தன்னகத்தே அடக்கியிருக்கிறது. ஆராய்ச்சிசெய்யவியலாத ஐசுவரியங்களைக்கொண்ட ஒரு சுரங்கமாக பரிசுத்த வேதாகமம் இருக்கிறது. (16)

தேவனுடைய வார்த்தையைப் படிப்பதிலும், கீழ்ப்படிவதிலும்தான் மெய்யான உயர்கல்வியைப் பெற இயலும்; தேவனுடைய வார்த்தையைப்

புறம்பே வைத்துவிட்டு, தேவனிடத்திற்கும் அவருடைய இராஜ்யத்திற்கும் அழைத்துச்செல்லாத நூல்களைப் படிப்பதின்மூலம் கிடைக்கும் கல்வி அதின் பெயருக்கு எதிர்மாறானதாக இருக்கிறது. (17)

இயற்கையில் அதிசயமான சத்தியங்கள் உள்ளன. பூமி, சமுத்திரம், வானம் யாவும் சத்தியத்தால் நிரம்பியுள்ளன. அவை நம்முடைய ஆசிரியர் களாக உள்ளன. பரலோக ஞானத்தையும் நித்திய சத்தியத்தையும் பாடங்களாக இயற்கை தனது குரல்மூலம் தெரிவிக்கிறது; ஆனால், பாவத்தால் விழுந்துபோன மனிதனால் அதை விளங்கிக்கொள்ளவியலாது. பாவம் அவன் பார்வையை மங்கலாக்கியிருப்பதினால், இயற்கையை தேவனுக்கும்மேலான இடத்தில் வைக்காமல், அவனால் அதை விவரித்துக் காட்டவியலாது. தேவனுடைய வார்த்தையைப் புறக்கணிப்பவர்களின் மனதில் சரியான பாடங்கள் பதியாது. இயற்கையின் பாடங்கள் அவர்களால் திரித்துக்கூறப்படுவதால், அவைகள் அவர்களுடைய மனதை சிருஷ்டிகரைவிட்டுத் திருப்பிவிடுகிறது. (18)

அநேகர் மனிதனுடைய ஞானத்தை தெய்வீக ஆசிரியரின் ஞானத்தை விட மேலானதாகக் கருதி, தேவனுடைய பாடப்புத்தகத்தை பழைமைவாய்ந்த தாகவும், சலிப்பூட்டக்கூடியதென்றும், கவர்ச்சியற்றதென்றும் நோக்கிப் பார்க்கிறார்கள். ஆனால், பரிசுத்த ஆவியினால் உயிர்ப்பிக்கப்பட்டவர்கள் வேதாகமத்தை அவ்விதமாகக் கருதுவதில்லை. இவர்கள் அந்த விலைமதிப்புள்ள பொக்கிஷத்தைக் கண்டு, தங்களுடைய அனைத்தையும் விற்று, அந்த நிலத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். பிரசித்திபெற்ற மாபெரும் ஆசிரியர்கள் கற்பனை நூல்களை வாசியாமல், உலகமே கண்டிராத மாபெரும் ஆசிரியரும், போதகரும் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தவரும், நித்திய ஜீவனை அருளுகிறவருமான கிறிஸ்துவின் வார்த்தைகளையே தெரிந்துகொள்கிறார்கள். (19)

## பொக்கிஷத்தை அலட்சியஞ்செய்வதால் ஏற்படும் விளைவுகள்!

தேவனைச் சாராமலேயே மிகவும் அற்புதமான அறிவைப்பெற இயலுமென்று மனிதன் நினைக்குமளவிற்கு சாத்தான் மனிதர்களின் மனதில் கிரியை செய்கிறான். தன் வஞ்சனையான பகுத்தறிவின் வாதத்தின்மூலம் அவன் ஆதாமையும் ஏவாளையும் தேவனுடைய வார்த்தையைச் சந்தேகிக்கச் செய்து, கீழ்ப்படியாமைக்கு கொண்டுசெல்லும் ஒரு கோட்பாட்டை அந்த இடத்தில் வைத்துவிட்டான். ஏதேனில் செய்த அதே குதர்க்கவாதத்தை சாத்தான் இன்றைக்கும் செய்கிறான். கல்வி புகட்டும் ஆசிரியர்கள் பாடத்தை

நடத்தும்போது, சமய நம்பிக்கையற்ற ஆசிரியர்களின் கருத்துக்களையும் கலந்து போதிப்பதால், அவர்கள் இளைஞர்கள் மனதில் தேவன்மீதுள்ள நம்பிக்கையைக் கெடுத்து, அவருடைய பிரமாணங்களை மீறுமாறு செய்துவிடுகின்றனர். தாங்கள் செய்யும் செயலின் விளைவுகளைக்குறித்து சிறிதேனும் உணராதிருக்கிறார்கள். (20)

ஒரு மாணவன் இன்றைய பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ள பல்வேறு நிலைகளை வெற்றிகரமாகக் கடக்கக்கூடும். தன் வசமுள்ள அனைத்து திறமைகளையும் பயன்படுத்தி, அவன் அறிவைப் பெருக்கிக் கொள்ளக்கூடும்; ஆனால், தேவனைக்குறித்த அறிவு அவனுக்கு இல்லையெனில், தன்னை அடக்கியாளுகின்ற பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியாவிட்டால், அவன் தன்னையே அழிக்கக்கூடியவனாக மாறிவிடுகிறான். தவறான பழக்கங்களினால், தன் சுயத்தை மதிப்பீடுசெய்யும் சக்தியை இழந்து, சுயக்கட்டுப்பாட்டையும் இழந்துவிடுகிறான். தன்னைப்பற்றிய முக்கியமான காரியங்களை அவனால் சரியாக பகுத்தறிவோடு சந்திக்க முடியாமல் போய்விடுகிறது. தன்னுடைய மனதையும் சரீரத்தையும் பகுத்தறிவற்ற வகையில், அஜாக்கிரதையாகக் கையாளுகிறான். தவறான பழக்கங்களினிமித்தமாக தன்னை நாசமாக்கிக்கொள்ளுகிறான். தூய்மையான, ஆரோக்கியமான கொள்கைகளை அசட்டைசெய்வதினிமித்தமாக, தன் சமாதானத்தை அழிக்கும் வழக்கங்கள் தன்னைக் கட்டுப்படுத்த இடங்கொடுத்து, சந்தோஷமின்றிக் காணப்படுகிறான். அவன் தன்னையே அழித்துக்கொண்டதால், பல ஆண்டுகளாக கடினமாக உழைத்துப் படித்த படிப்பையும் இழந்துபோகிறான். தன் சரீர மற்றும் மனதின் சக்திகளை தவறாகப் பயன்படுத்தியதின்காரணமாக, அவனுடைய சரீரமாகிய ஆலயம் பாழடைந்து காணப்படுகிறது. இந்த வாழ்க்கையும் இனி வரவிருக்கும் வாழ்க்கையும் அவனுக்கு அழிந்துவிட்டதாகவே இருக்கும். உலக அறிவைப் பெறுவதினிமித்தமாக பொக்கிஷத்தைப் பெறலாம் என நினைத்திருந்தான்; ஆனால், பரிசுத்த வேதாகமத்தைப் புறம்பே வைத்ததினிமித்தமாக மிகவும் விலைமதிப்புள்ள ஒரு பொக்கிஷத்தை இழந்துவிட்டான். (21)

## பொக்கிஷத்தைத் தேடுதல்!

தேவனுடைய வார்த்தையே நமது ஆராய்ச்சியாக இருக்கவேண்டும். அதில் அடங்கியிருக்கும் சத்தியங்களை நமது பிள்ளைகளுக்கு நாம் போதிக்கவேண்டும். பரிசுத்த வேதாகமம் வற்றாத ஒரு பொக்கிஷம்; ஆனால், மனிதர்கள் வேதாகமத்தின் பொக்கிஷத்தை கண்டடையத் தவறுகின்றனர்; அதைத் தங்களது உடைமையாக வைத்துக்கொள்ளுமளவிற்குத் தேடுவ

தில்லை. அநேகர் சத்தியத்தைக்குறித்த தங்களுடைய அனுமானங்களில் மனநிறைவடைகின்றனர். ஒரு மேலெழுந்தவாரியான வாசிப்பில் திருப்தி கொண்டு, தங்கள் வசம் தேவையான அனைத்தும் உள்ளதாக எண்ணுகின்றனர். ஆர்வத்துடன்கூடிய கடின உழைப்பில் ஈடுபட்டு, வேதாகமத்தில் கூறியுள்ளபடி பொக்கிஷத்தைத் தேடுவதின்மூலமாக நிலத்தைத் தோண்டும் பணியில் ஈடுபடாமல், பிறர் கூறுவனவற்றையே சத்தியமென ஏற்றுக்கொள்ளுமளவிற்கு சோம்பேறிகளாக இருக்கின்றனர். ஆனால், மனிதனுடைய கண்டுபிடிப்புகள் நம்பமுடியாதவைகள் மட்டுமல்ல, ஆபத்தானவைகளும், அபாயகரமானவையுங்கூட; ஏனெனில், அவைகள் தேவன் இருக்க வேண்டிய இடத்தில் மனிதனை வைக்கின்றன. "இவ்விதமாக, கர்த்தர் கூறுகிறார்" என்று இருக்கவேண்டிய இடத்தில், அவைகள் மனிதர்களின் கூற்றை வைக்கின்றன. (22)

கிறிஸ்து சத்தியமாயிருக்கிறார். அவருடைய வார்த்தைகள் மேலெழுந்தவாரியாகக் காணப்படுவதைவிட அதிக ஆழமானதாகவும், சிறப்பான அர்த்தமுள்ளதாகவும் இருக்கிறது. கிறிஸ்து பேசிய கூற்றுகள் அனைத்துமே அவைகளின் பாசாங்குசெய்யாத தோற்றத்திற்கும் அப்பால் ஒரு மதிப்பை உடையதாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரால் உயிர்ப்பிக்கப்பட்ட மனங்களால்மாத்திரமே இத்தகைய கூற்றுகளின் மதிப்பை துல்லியமாகக் கண்டறியமுடியும். இவைகள் புதைக்கப்பட்ட பொக்கிஷங்களாக இருந்தபோதிலும், விலையுயர்ந்த சத்தியமாகிய மாணிக்கங்களை அவர்கள் தெளிவாகக் கண்டறிவார்கள். (23)

மனிதத் தத்துவங்களும், யூகங்களும் தேவனுடைய வார்த்தையை விளங்கிக்கொள்வதற்கேதுவாக ஒருபோதும் நடத்தாது. பரிசுத்த வேதாகமம் உள்ளடக்கியிருக்கும் பொக்கிஷமான அறிவை அறிந்துகொள்வதற்கு சிலர் தங்களது தத்துவ அறிவும், விளக்கங்களும் தேவை என்று நினைக்கின்றனர்; ஆனால், அவர்களது விளக்கங்கள்தான் தவறான கொள்கைகளையும் மார்க்கபேதங்களையும் கொண்டுவந்திருக்கிறது. புரிந்துகொள்வதற்குக் கடினமாக இருக்கும் வேதாகமப் பகுதிகளுக்கு விளக்கமளிக்க மனுஷர் துணிச்சலான முயற்சிகளில் இறங்குகின்றனர்; ஆனால், அநேக நேரங்களில், அவர்கள் இலகுவாக்க நினைக்கும் பகுதிகள் விளங்கிக்கொள்வதற்குக் கடினமாகிவிடுகிறது. (24)

ஆசாரியர்களும், பரிசேயர்களும் தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதற்காகத் தங்களுடைய சொந்த விளக்கங்களை பயன்படுத்தி, தங்களைப் பெரிய போதகர்களாக எண்ணிக்கொண்டிருந்தார்கள்; ஆனால்,

கிறிஸ்து: “நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாததினாலல்லவா தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்?” (மாற்கு 12:24) என்றும், “மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்” (மாற்கு 7:7) என்றும் கடிந்து கொண்டார். இறைவாக்கினைப் போதிக்கும் ஆசிரியர்களாயிருந்தபோதிலும், அவரது வசனத்தைப் புரிந்துகொண்டவர்களென்று எண்ணப்பட்டபோதிலும், அவருடைய வார்த்தையின்படி அவர்கள் செயல்படவில்லை. சாத்தான் அவர்களின் கண்களைக் குருடாக்கியிருந்ததினால், தேவவார்த்தையின் மெய்யான கருத்தை அவர்களால் பார்க்கமுடியவில்லை. (25)

இந்தக் காலத்திலும் அநேகர் இந்த வேலையைத்தான் செய்கிறார்கள். அநேக சபைகள் இப்படிப்பட்ட பாவத்தில் இருக்கின்றன. இக்காலத்தில் ஞானிகளென்று உத்தேசிக்கப்படுகின்ற அநேகர் யூத மதபோதகர்களின் அனுபவத்தை மீண்டும் வெளிப்படுத்தும் மாபெரும் ஆபத்தில் இருக்கின்றனர். இறைவாக்கிற்குப் பொய்யான விளக்கங்கள் கொடுக்கிறார்கள். தெய்வீக சத்தியத்திற்குத் தவறான விளக்கங்கள் கொடுத்ததினால், ஆத்துமாக்கள் குழப்பத்திற்குள்ளாக்கப்பட்டு, இருளால் போர்த்தப்படுகின்றன. (26)

மங்கலான வெளிச்சம்போன்ற பாரம்பரியத்தையோ அல்லது மனித யூகத்தையோவைத்து நாம் வேதவாக்கியங்களை விளக்கத்தேவையில்லை. மனித பாரம்பரியத்தையும் மனித கற்பனையையும்வைத்து வேதாகமத்தை விளக்க முற்படுவது என்பது, சூரியனுக்கு ஒளிகொடுக்க அதற்கு நேராக ஒரு விளக்கைக் காண்பிப்பதுபோலாகும். தேவனுடைய பரிசுத்த வார்த்தையை மனிதன் புரிந்துகொள்வதற்கு, மங்கலாக எரியும் இவ்வுலக விளக்கு அவசியமில்லை. தேவனுடைய வார்த்தையே ஒளியாயிருந்து, அவருடைய மகிமையை வெளிப்படுத்துவதினால், பிற ஒளிகள் அனைத்தும் மங்கலானதாகயிருக்கிறது. (27)

எனவே, பரிசுத்த வேதாகமத்தை ஆவலுடன் படித்து, அதை நுட்பமாக ஆராய்ச்சிசெய்தல் அவசியம். சத்தியத்தைக்குறித்த கூர்மையான, தெளிவான அறிவு சோம்பலாயிருப்பவர்களுக்கு ஒருபோதும் கிட்டாது. ஆவலும், பொறுமையும், விடாமுயற்சியுமின்றி மனிதன் எந்த ஒரு உலக ஆசீர்வாதத்தையும் பெற இயலாது. வியாபாரத்தில் வெற்றிபெற வேண்டுமென்றால், செயல்படுவதற்கான மன உறுதியும் தன் முயற்சிகளில் நல்ல பலன் கிட்டும் என்ற விசுவாசமும் மனிதனுக்கு அவசியம். அதுபோலவே, ஆவலுடன்கூடிய முயற்சி இல்லாமல் ஆவிக்குரிய அறிவை நம்மால் பெற இயலாது. பூமியில் புதையுண்டிருக்கும் பொக்கிஷத்தைக்

கண்டடைய சுரங்கத் தொழிலாளி தோண்டுவதுபோல், சத்தியமாகிய புதையலைக் கண்டடைய விருப்பமுள்ளவர்கள் தோண்டும் பணியில் ஈடுபடவேண்டும். அரைமனதோடு, அலட்சியமாகப் பணியில் ஈடுபடுபவர்கள் எந்தவித பயனையும் பெற இயலாது. முதியவர்களும், இளைஞர்களும் தேவனுடைய வார்த்தையை வாசிப்பதோடு நிறுத்திவிடாமல், ஆவலோடும், முழுமனதோடும், ஜெபத்தோடும் புதையலைத் தேடுவதுபோல் ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும். இவ்விதமாக ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்களுடைய சிந்தனை யாற்றலை கிறிஸ்து உயிர்ப்பித்து பலனளிக்கிறார். (28)

நம்முடைய இரட்சிப்பு நம்முடைய வேதவாக்கியங்களில் அடங்கியிருக்கின்ற சத்தியமாகிய அறிவைச் சார்ந்திருக்கிறது. இதை நாம் பெற்றிருக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. விலைமதிப்புமிக்க வேதாகமத்தை பசிதாகமுள்ள இதயத்தோடு ஆராய்ச்சிசெய்யவேண்டும். தங்கப்படிவங்களைக் கண்டுபிடிக்க சுரங்கத்தில் வேலைசெய்பவர் ஆராய்ச்சியில் ஈடுபடுவதுபோன்று, நாம் தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சிசெய்ய வேண்டும். தேவனுக்கும் உங்களுக்கும் இடையிலான உறவையும் உங்களைக்குறித்ததான அவரது சித்தத்தையும் தெரிந்துகொள்ளும்வரை ஆராய்ச்சியை விட்டுவிடக்கூடாது. “நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்” (யோவான் 14:13,14) என்று கிறிஸ்து கூறியிருக்கிறார். (29)

தெய்வ பக்தியையும் தாலந்துகளையும் பெற்றிருக்கும் மனுஷர் நித்தியத்திற்கடுத்த உண்மைகளைக் கண்டும், அதைச் சரியாகப் புரிந்து கொள்ள பெரும்பாலும் தவறிவிடுகின்றனர்; ஏனெனில், காணக்கூடியவைகள் காணக்கூடாத மகிமையானவற்றை மறைத்துவிடுகின்றன. புதைந்திருக்கின்ற பொக்கிஷத்தைத் தேடமுற்படும் மனிதன் பூமிக்குரிய காரியங்களை விட்டு விட்டு, மேன்மையான காரியங்களை நோக்கவேண்டும். தன்னுடைய ஆவல்களையும், திறமைகளையும் ஆராய்ச்சிசெய்வதற்காக அர்ப்பணிக்க வேண்டும். (30)

வேதவாக்கியங்களிலிருந்து அதிக அறிவைப் பெற இயலாதபடிக்கு கீழ்ப்படியாமை கதவை மூடிவிடுகிறது. வேதவாக்கியங்களைப் புரிந்து கொள்வதின் பொருள் தேவகட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதே. மனிதனது தவறான எண்ணங்களுக்கும் பொறாமைக்கும் இசைந்து போகத்தக்கதாக வேதவாக்கியங்கள் பொருத்தமாக மாற்றி அமைக்கப்படக்கூடாது. கீழ்ப்படியும்

எண்ணத்தோடு தாழ்மையாக வேத அறிவைப்பெற நாடுபவர்கள் அதின் சத்தியங்களைப் புரிந்துகொள்ள முடியும். (31)

இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்கி றீர்களா? ஆழ்ந்த ஆராய்ச்சியின் கதவருகே உங்களுடைய தீர்மானிக்கப்பட்ட அபிப்பிராயங்களையும் பாரம்பரியத்தையும் வளர்த்துக்கொண்டுள்ள எண்ணங் களையும் வைத்துவிட வேண்டும். உங்கள் சொந்தக் கருத்துக்களை நியாயப்படுத்தும்விதமாக வேத ஆராய்ச்சியில் ஈடுபடுவீர்களானால், நீங்கள் ஒருபோதும் சத்தியத்தைக் கண்டடையமாட்டீர்கள். கர்த்தர் என்ன சொல்லுகிறார் என்பதை அறிந்துகொள்ளும்படியாக ஆராய்ச்சிசெய்யுங்கள். நீங்கள் மனதில் வைத்துப் போற்றிய கருத்துக்களுக்கும் வேதாகமச் சத்தியத்திற்கும் சற்றும் இசைவு இல்லை என்று ஆராய்ச்சியின்போது உணர்த்தப்பட்டால், உங்கள் சொந்த நம்பிக்கைக்குப் பொருத்தம் ஏற்படும் வகையில் சத்தியத்தை தவறாக வியாக்கியானம் செய்யாமல், கொடுக்கப்படும் வெளிச்சத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். தேவனுடைய வார்த்தையின் மகத்துவமான காரியங்களைக் காணும்படியாக, நீங்கள் உங்கள் மனதையும் இதயத்தையும் திறந்துகொடுக்கவேண்டும். (32)

பரலோகப் பொக்கிஷத்தைப் புரிந்துகொள்ளும் இதயம் கொண்டுள்ள ஞானமுள்ள மனிதனுக்கே கிறிஸ்து இந்த உலகத்தின் மீட்பர் என்ற விசுவாசம் ஏற்படும். இந்த விசுவாசத்தை மனந்திரும்புதலிலிருந்தும், குணம் மாறுதலிலிருந்தும் பிரிக்க இயலாது. விசுவாசம் என்பதின் அர்த்தம், சுவிசேஷமாகிய பொக்கிஷத்தை அதின் அனைத்து எதிர்பார்ப்புகளுடனும் கண்டறிந்து ஏற்றுக்கொள்வதேயாகும். (33)

“ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான்”—யோவான் 3:3. விசுவாசக் கண்களினால் மாத்திரமே யல்லாமல் அனுமானத்தினாலும், மனதில் கற்பனை செய்வதினாலும் பொக்கிஷத்தைக் காணமுடியாது. இந்த விலைமதிப்புமிக்க பொக்கிஷத்தை நாம் பெறும்படியாக கிறிஸ்து தமது ஜீவனைக் கொடுத்தார்; ஆனால், அவர் இரத்தத்தை விசுவாசிப்பதின்மூலமாக ஏற்படும் புதுவாழ்வின்றி அழிந்து போகும் ஆத்துமாவிற்கு பாவமன்னிப்பும் பொக்கிஷமும் இல்லை. (34)

தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களைப் புரிந்துகொள்வதற்கு பரிசுத்த ஆவியினால் ஒளியூட்டப்படுதல் நமக்குத் தேவைப்படுகின்றது. இவ்வுலகத்தில் காணப்படும் அருமையான இயற்கைக் காட்சிகள் அனைத்தும் சூரியன் தனது ஒளிக்கதிர்களால் இருளை நீக்கும்போதுதான் நம்

கண்களுக்குப் புலப்படுகிறது. அதுபோலவே, தேவனுடைய வார்த்தையின் பொக்கிஷங்கள் நீதியின் சூரியனாயிருக்கிறவரின் ஒளிக்கதிர்களால் வெளிப்படுத்தப்படும்போதுமாத்திரமே மதிப்பீடுசெய்யப்பட முடியும். (35)

எல்லையற்ற அன்பினிமித்தமாக, உதாரகுணம் கொண்டுள்ள நம்முடைய தேவன், கிறிஸ்துவின்மேல் பூரண விசுவாசம் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் தேவனுக்கடுத்த காரியங்களை வெளிப்படுத்தும்படி, பரத்திலிருந்து பரிசுத்த ஆவியானவரை அனுப்பிக்கொடுத்திருக்கிறார். அவர் தமது வல்லமையினால், ஆத்தும இரட்சிப்பிற்குத் தேவையான அனைத்து இன்றியமையாத சத்தியங்களையும் மனதில் பதியவைத்து, ஒருவரும் தவறு செய்யாதபடி பாதுகாக்கிறார். வேதாகமத்தைத் தியானிக்கும்போது, அதின் பொக்கிஷங்களைக்கண்டு பாராட்டத்தக்கதாக தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் வார்த்தையின்மீது பிரகாசிக்கவேண்டுமென்று நாம் ஜெபம் செய்யவேண்டும். (36)

## தேடுவதினால் ஏற்படும் பலன்!

அறிந்துகொள்வதற்கும், புரிந்துகொள்வதற்கும் இனி வேறு ஒன்றுமே இல்லை என்று ஒருவரும் நினைக்கக்கூடாது. மனித ஞானத்தின் ஆழத்தை நாம் அளந்துவிடலாம்; மனித ஆசிரியர்களின் நூல்களைக் கற்று புலமை பெற்றுவிடலாம்; ஆனால், எவ்வித உயரமான, ஆழமான, அகலமான கற்பனையில் சிறகடித்துப் பறந்தாலும் தேவனைக் கண்டுபிடிக்க இயலாது. நாம் விளங்கிக்கொள்ளக்கூடியதற்கும் அப்பால் எல்லையற்ற காரியங்கள் உள்ளன. நாம் தேவனுடைய மகிமையையும் அவருடைய எல்லையற்ற ஞானத்தையும் அறிவையும் மங்கலாக மாத்திரமே பார்த்திருக்கிறோம். நாம் சுரங்கத்தின் மேற்பரப்பில் வேலைசெய்துகொண்டிருக்க, தங்கமானது பூமியின் ஆழத்தைத் தோண்டுபவர்களுக்குப் பலனாகக் கிடைப்பதுபோலத்தான் தேவனைக்குறித்த அறிவு ஆவலாக ஆராய்ச்சிசெய்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். மிகமிக ஆழமாகத் தோண்டுவதின் விளைவாக, மகிமையான பொக்கிஷம் சுரங்கத்தில் இருந்து கிடைக்கும். சரியான விசுவாசத்தின் மூலமாக, தெய்வீக அறிவானது மானுட அறிவாகிறது. (37)

கிறிஸ்துவின் ஆவியையுடையவராக வேதவாக்கியங்களை ஆராய்ச்சி செய்யும் எந்த ஒரு நபரும் பலனின்றிப்போக இயலாது. மனிதன் சிறு குழந்தையைப்போன்று கற்றுக்கொள்வதற்கு தாழ்த்தி, தன்னை முற்றிலுமாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும்போது, ஆண்டவருடைய வார்த்தையின் சத்தியத்தைக் கண்டடைகிறான். மனுஷர் தங்களைக் கீழ்ப்படிதலிற்கு

உட்படுத்தும்போது, அவர்கள் தேவனுடைய அரசாங்கத்தின் திட்டத்தைப் புரிந்துகொள்கின்றனர்; அப்பொழுது, பரலோகம் தனது கிருபையின்—மகிமையின் அறைகளை ஆராய்ச்சிக்கென்று திறந்துகொடுக்கும். மனுஷர் இப்பொழுது இருப்பதைப்போன்று அல்லாமல், முற்றிலும் மாறுதலடைந்து, சுரங்கமாகிய சத்தியத்தை ஆராய்வதின்மூலம் மேன்மையடைவர். மீட்பின் இரகசியம், கிறிஸ்து மனிதனாக அவதரித்தது, அவர் செய்த பாவநிவாரணபலி போன்ற காரியங்கள் முன்புபோல் புரிந்துகொள்வதற்குத் தெளிவற்றதாக இராது. அவைகளை நன்கு புரிந்துகொள்வது மட்டுமல்லாது, அவைகளைக்குறித்து மேன்மையாகவும் பேசுவர். (38)

கிறிஸ்து தனது பிதாவை நோக்கி ஜெபிக்கும்போது, மனதிலும், ஆத்துமாவிலும் பதித்துக்கொள்ளவேண்டிய ஒரு பாடத்தை உலகிற்குக் கொடுத்தார். "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" (யோவான் 17:3) என்று சொன்னார். இதுவே மெய்யான கல்வி; அது வல்லமையை வழங்குகிறது. தேவனையும் அவர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் குறித்த அனுபவ அறிவு மனிதனை தேவசாயலிற்கு ஒப்பாக மாற்றுகிறது. அது தன்னைக் கட்டுப்படுத்தக்கூடிய தன்மையை மனிதனுக்குக் கொடுத்து, கீழ்த்தரமான தன்மையுள்ள உந்துவேகங்களையும் உணர்வுகளையும் மேலான சக்திகளைப் பெற்றிருக்கும் மனதின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருகிறது. தேவ வல்லமையைப் பெற்றிருக்கும் ஒரு நபர், அவருடைய குமாரனாக மாறி, பரலோகத்தின் சுதந்தரவாளியாகிவிடுகிறான். எல்லையற்ற தேவனுடைய மனதோடு அவனுக்குத் தொடர்பு ஏற்படுவதினால், சர்வலோகத்தின் விலைமதிப்புமிக்க பொக்கிஷங்களும் அவனுக்குத் திறந்துகொடுக்கப்படுகின்றன. (39)

தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சிசெய்வதின்மூலமாக கிடைக்கும் அறிவு இதுவே. பெற்றுக்கொள்ளத்தக்கதாக தன்னிடத்தில் உள்ள அனைத்தையும் கொடுக்கும் ஒவ்வொரு மனிதனும் இந்தப் பொக்கிஷத்தைக் கண்டடைவான். (40)

"ஞானத்தை வா என்று கூப்பிட்டு, புத்தியைச் சத்தமிட்டு அழைத்து, அதை வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறது போல் தேடுவாயாகில், அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்ன தென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்"–நீதி. 2:3–5. (41) ★

# 9

# சிறந்த முத்து!

**(மூலநூல் : பக்கங்கள் 103–114)**

**மத்தேயு 13:45–46**

மீட்கும் அன்பின் ஆசீர்வாதங்களை நமது இரட்சகர் விலை உயர்ந்த முத்திற்கு ஒப்பிடுகிறார். "அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தன்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்" என்கிற விலையுயர்ந்த முத்துக்களைத் தேடுகிற வியாபாரியின் உவமையின் மூலமாக அவர் தமது பாடத்தை விளக்கிக்காட்டுகிறார். கிறிஸ்து தாமே விலையுயர்ந்த முத்தாயிருக்கிறார். பிதாவின் மகிமையும் தேவத்துவத்தின் முழுமையும் அவரில் அடங்கியிருக்கிறது. அவர் பிதாவுடைய மகிமையின் பிரகாசமாகவும் அவருடைய தன்மையின் சொரூபமாகவும் இருக்கிறார். தேவனுடைய இயல்பான பண்பின் மகிமை கிறிஸ்துவின் குணத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தின் ஒவ்வொரு பக்கமும் அவருடைய ஒளியில் பிரகாசிக்கிறது. கிறிஸ்துவினுடைய நீதி தூய்மையான வெண்மையான ஒரு முத்தைப் போன்றிருப்பதினால், அதில் பழுதோ, கறையோ காணப்படுவதில்லை. எந்த ஒரு மனிதக் கிரியையாலும் தேவனுடைய மாபெரும் அருமையான ஈவை மேம்படுத்த இயலாது. அது பிழையற்றதாக இருக்கிறது. "அவருக்குள் (கிறிஸ்துவிற்குள்) ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது"– கொலோ. 2:3; "அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்"–1 கொரிந்தியர் 1:31. இவ்வுலகிலும் இனி வரவிருக்கும் உலகிலும் மனித ஆத்துமாவின் தேவைகளையும் ஏக்கங்களையும் திருப்திசெய்யக்கூடிய அனைத்தும் கிறிஸ்துவில் காணப்படுகிறது. நம்முடைய மீட்பர் விலையுயர்ந்த முத்து. அவருடன் ஒப்பிடும்போது, மற்ற அனைத்தும் நஷ்டமாக எண்ணப்படலாம். (1)

"அவர் (கிறிஸ்து) தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை"–யோவான் 1:11.

தேவனுடைய வெளிச்சம் உலகத்தின் இருளில் பிரகாசித்தது, "இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை"—யோவான் 1:5. பரலோகத்தின் ஈவைப் பெற்றுக்கொள்ள அனைவருமே அலட்சியமாக இல்லை. உண்மையான ஆவலுடன் சத்தியத்தை வாஞ்சிக்கும் வகுப்பாரை இந்த உவமையிலுள்ள வியாபாரி எடுத்துக்காட்டுகிறான். பல்வேறு நாடுகளிலும், ஆவலும் சிந்தனையுணர்வும் கொண்டிருந்த மனிதர்கள், ஆத்துமாவின் பொக்கிஷத்தைப்போன்ற சத்தியத்தை இலக்கியத்திலும் விஞ்ஞானத்திலும் அஞ்ஞான மதங்களிலும் தேடிக்கொண்டிருந்தார்கள். யூதர்கள் மத்தியிலும் சிலர் தங்களிடத்தில் இல்லாததைத் தேடிக்கொண்டிருந்தார்கள். சடங்கான மதத்தில் சலிப்படைந்து, ஆவிக்குரியதும், தங்களை உயர்த்தக்கூடியது மானதிற்காக ஏங்கினார்கள். கிறிஸ்துவால் தெரிந்துகொள்ளப்பட்ட சீடர்கள் பின்கூறப்பட்ட கூட்டத்திலும், கொர்நேலியு மற்றும் எத்தியோப்பிய மந்திரி முதலில் கூறப்பட்டுள்ள கூட்டத்திலும் காணப்பட்டனர். பரலோகத்தின் ஒளிக்காக அவர்கள் ஏக்கத்தோடும் ஜெபித்துக்கொண்டும் இருந்தனர். கிறிஸ்து அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டபோது, அவர்கள் அவரை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்கள். (2)

உவமையில் கூறப்பட்டுள்ள முத்து ஒரு ஈவாகச் சுட்டிக்காட்டப் படவில்லை. வியாபாரி தன்னிடமுள்ள அனைத்தையும் விற்று அதை வாங்கினான். கிறிஸ்துவை வேதாகமம் பரிசுப்பொருளாகச் சித்தரிக்கிறபடியால், அநேகர் இதன் பொருளைக்குறித்து கேள்வி எழுப்புகின்றார்கள். ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் அவருக்கு தங்குதடையின்றி கொடுப்பவர்களுக்கு மாத்திரமே கிறிஸ்து ஒரு பரிசாயிருக்கிறார். நாம் நம்மையே கிறிஸ்துவிற்கு அர்ப்பணித்து, விருப்பத்தோடு கீழ்ப்படிதலின் ஜீவியஞ்செய்து, அவருடைய எதிர்பார்ப்புகள் அனைத்தையும் நிறைவேற்றவேண்டும். நாமும், நம்முடைய தாலந்துகளும், நாம் பெற்றிருக்கும் திறமைகளும் கர்த்தருடையவைகள். நாம் அவைகளை அவருடைய பணிக்காக அர்ப்பணிக்கவேண்டும். இவ்விதமாக, நாம் நம்மை முழுமையாக அவருக்கு ஒப்புக்கொடுக்கும்போது, கிறிஸ்து அனைத்துப் பரலோகப் பொக்கிஷங்களோடும் தம்மை நமக்குத் தருகிறார்; அப்பொழுது, விலையுயர்ந்த முத்தை நாம் பெற்றுக்கொள்கிறோம். (3)

இரட்சிப்பு ஒரு இலவசமான ஈவாக இருக்கிறது; எனினும், அது வாங்கப்பட்டு விற்கப்படவேண்டும். தெய்வீகக் கிருபை மேலாண்மை செலுத்துகிற சந்தையில் விலைமதிப்புமிக்க முத்து பணமுமின்றி விலையுமின்றி வாங்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தச் சந்தையில் அனைவரும் பரலோகத்தின் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம். சத்திய ஆபரணங்களைக் கொண்ட இந்தக் கருவூலம் அனைவருக்கும் திறந்திருக்கிறது. "இதோ,

திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" (வெளி. 3:8) என்று கர்த்தர் சொல்லுகிறார். எந்த பட்டயமும் இந்த வாசலைக் காக்கிறதில்லை. வாசலிற்குள்ளும், வாசலிலிருந்தும் "வா" என்றழைக்கும் குரல்களைக் கேட்கலாம். இரட்சகரின் குரல் ஆவலுடனும் அன்புடனும் நம்மை அழைக்கிறது. "நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னை... வாங்கிக்கொள்"–வெளி. 2:18. (4)

கிறிஸ்துவின் சுவிசேஷம் அனைவரும் பெற்றிருக்கவேண்டிய ஒரு ஆசீர்வாதமாயிருக்கிறது. உலக ஆஸ்தியினால் பெறமுடியாத இரட்சிப்பை ஏழைகளும் ஐசுவரியமுள்ளவர்களைப்போன்று எளிதாகப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். கிறிஸ்து நம்மை கிரயத்திற்குக் கொண்டிருக்கிறாரென்ற உணர்வோடு நம்மை அவருக்கு ஒப்புக்கொடுத்து, விருப்பத்தோடு கீழ்ப்படியும் போது, இரட்சிப்பைப் பெற்றுக்கொள்கிறோம். கல்வி எவ்வளவு உயரியதாக இருப்பினும், ஒரு மனிதனை தேவனிடம் நெருங்கிச் சேர்க்க அதினால் இயலாது. இம்மைக்குரிய—ஆவிக்குரிய அனைத்து அனுகூலங்களையும் பரிசேயர்கள் அனுபவித்து வந்தார்கள். அவர்கள் தற்புகழ்ச்சியோடுகூடிய பெருமையோடு: தாங்கள் ஐசுவரியாவன்களென்றும், திரவியசம்பன்னர்களென்றும் எங்களுக்கு ஒரு குறையும் இல்லையென்றும் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் நிர்ப்பாக்கியமுள்ளவர்களும், பரிதபிக்கப் படத்தக்கவர்களும், தரித்திரரும், குருடரும், நிர்வாணிகளுமாய் இருந்தார்கள் (வெளி. 3:17). கிறிஸ்து விலையுயர்ந்த முத்தை அவர்களுக்கு வழங்கியபோது, அவர்கள் அதை அலட்சியப்படுத்தி வாங்க மறுத்தனர்; ஆகவே, அவர்களைப் பார்த்து: "ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள்" (மத்தேயு 21:21) என்றார். (5)

இரட்சிப்பை நம்மால் சம்பாதிக்க முடியாது. அதினால், அதைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக இவ்வுலகக் காரியங்கள் அனைத்தையும் ஒதுக்கிவிட்டு, ஆவலுடனும் விடாமுயற்சியுடனும் தேடவேண்டும். (6)

நாம் விலையுயர்ந்த முத்தைத் தேடவேண்டும்; அதனை உலகச் சந்தைகளிலோ, உலகப்பிரகாரமான வழிகளிலோ கண்டடைய முடியாது. வெள்ளியைக்கொண்டோ, பொன்னைக்கொண்டோ நம்மால் அதைப் பெறவியலாது; ஏனெனில், அது தேவனுக்குச் சொந்தமானது. இம்மைக்குரிய அல்லது ஆவிக்குரிய அனுகூலங்கள் இரட்சிப்பைப் பெற்றுத்தரும் என்ற எண்ணத்தைக் கைவிட வேண்டும். தேவன் மனப்பூர்வமான கீழ்ப்படிதலுக்கு உங்களை அழைக்கிறார். உங்கள் பாவங்களை கைவிடுமாறு அவர்

கூறுகிறார்: “நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்” (வெளி. 3:21) என்று கிறிஸ்து அறிவிக்கிறார். (7)

சிலர் எப்போதும் பரலோக முத்தைத் தேடுவதுபோல் காணப்படுவர்; ஆனால், தங்கள் தவறான பழக்கங்களை முற்றிலுமாக கைவிடுகிறதில்லை. கிறிஸ்து தங்களில் ஜீவிக்கும்படியாக சுயத்திற்காக அவர்கள் மரிக்கிறதில்லை. ஆகையால், விலையுயர்ந்த முத்தை கண்டடைகிறதில்லை. தாங்கள் அடைய விரும்பும் பரிசுத்தமற்ற ஆசையையும், உலக ஈர்ப்புகளின்மேலுள்ள நாட்டத்தையும் அவர்கள் மேற்கொள்வதில்லை. சுயத்தை வெறுத்து, தியாக உணர்வோடு, சிலுவையைச் சுமந்துகொண்டு அவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதில்லை. ஏறக்குறைய கிறிஸ்தவர்களாயிருந்தும் முற்றிலும் கிறிஸ்தவர்களாக இல்லாததினால், அவர்கள் பரலோக இராஜ்யத்திற்குச் சமீபமாகக் காணப்பட்டு, அதற்குள் பிரவேசிக்கமுடியாத, முழுமையாக இரட்சிக்கப்படாமல், ஏறக்குறைய இரட்சிக்கப்பட்டவர்களாக பரலோக இராஜ்யத்தை இழந்துபோவார்கள். (8)

விலையுயர்ந்த முத்துக்களைத் தேடும் வியாபாரியின் உவமை இரண்டு உட்பொருள்களை கொண்டிருக்கிறது. அது பரலோக இராஜ்யத்தைத் தேடும் மனிதரைமட்டும் குறிக்காமல், இழந்துபோன தமது சுதந்தரத்தைத் தேடும் கிறிஸ்துவையும் குறிக்கிறது. நல்ல முத்துக்களைத் தேடின பரலோக வியாபாரியான கிறிஸ்து, தொலைந்துபோன மானிடத்தில் விலைமதிப்புள்ள முத்தைக் காண்கிறார். பாவத்தினிமித்தம் அசுத்தமடைந்து, வீழ்ச்சியடைந்திருக்கும் மனிதனில் மீட்கும் சாத்தியக்கூறுகளைக் கண்டார். சாத்தானின் போர்க்களமாக இருந்து, கிறிஸ்துவின் அன்பினால் மீட்கப்பட்ட இதயங்கள், மீட்பருடைய பார்வையில் ஒருபோதும் விழுந்துபோகாத இதயங்களைக் காட்டிலும் மிகவும் விலையேறப்பெற்றது. தேவன் மனுக்குலத்தை துஷ்டர்களாகவும் தகுதியற்றவர்களாகவும் பார்க்கவில்லை. கிறிஸ்துவின் மீட்கும் அன்பின்மூலமாக, அவர்கள் எவ்விதமாக மாறக்கூடும் என்று பார்த்தார். அந்த முத்தை வாங்குவதற்காக அண்டசராசரங்களின் ஐசுவரியங்கள் அனைத்தையும் ஒன்றாகத் திரட்டி, கொடுத்தார். கண்டுபிடித்தபின், இயேசு அதை தமது சொந்த மணிமுடியிலே மீண்டும் பதிக்கிறார். “அவர்கள் அவருடைய தேசத்தில் ஏற்றப்பட்ட கொடிகளின் கிரீடத்தில் பதிந்திருப்பார்கள்”—சகரியா 9:16; “என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்”—மல்கியா 3:17. (9)

விலைமதிப்புமிக்க முத்தாகிய கிறிஸ்துவும், இந்தப் பரலோகப் பொக்கிஷத்தை நமதாக்கிக்கொள்ளும் நம்முடைய சிலாக்கியமும் நாம் மிகவும் அதிகமாகச் சிந்திக்கவேண்டிய ஒரு ஆய்வுப்பொருளாக இருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவரே, மனுஷருக்கு விலைமதிப்புமிக்க முத்தினை வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமை வெளிப்படும் சமயத்தில்தான் பரலோகத்தின் ஈவை ஒரு விசேஷித்த உணர்வோடு தேடவும் காணவும் இயலும். கிறிஸ்துவின் நாட்களில் அநேகர் சுவிசேஷத்தைக் கேட்டபோதிலும், அவர்களுடைய மனங்கள் தவறான போதனைகளால் இருளடைந்திருந்ததால், தாழ்மையான கலிலேய ஆசிரியராகிய கிறிஸ்துவை தேவனிடத்திலிருந்து வந்தவரென்று அவர்களால் அறிந்துகொள்ளமுடியவில்லை; ஆனால், கிறிஸ்துவின் பரமேற்றத்திற்குப்பிறகு, மத்தியஸ்த ஊழியத்திற்காக அவர் சிங்காசனத்தில் அமர்ந்தது, பரிசுத்த ஆவி (பூமியில்) பொழிந்தருளப்பட்டதின்மூலமாகச் சுட்டிக்காட்டப்பட்டது. பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, பரிசுத்த ஆவி வழங்கப்பட்டது. கிறிஸ்துவின் சாட்சிகள் உயிர்த்தெழுந்த இரட்சகரின் வல்லமையைக் கூறி அறிவித்தார்கள். கிறிஸ்துவிற்கு எதிரிகளால் வஞ்சிக்கப்பட்டிருந்தவர்களது இருளடைந்த உள்ளங்களை பரலோக ஒளி ஊடுருவிச்சென்றது. “இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவ மன்னிப்பையும், அருளுகிறதற்காக, ... அதிபதியாகவும் இரட்சகராகவும்” (அப். 5:31) அவர் உயர்த்தப்பட்டிருந்ததை அவர்கள் இப்பொழுது கண்டார்கள். அவர் பரலோகத்தின் மகிமையால் சூழப்பட்டிருப்பதையும், கலகத்தைவிட்டு தம்மிடம் திரும்புவோருக்கு கொடுக்கத்தக்கதாக தம் கரங்களில் எல்லையற்ற பொக்கிஷங்களை வைத்திருப்பதையும் அவர்கள் கண்டார்கள். பிதாவினுடைய ஒரேபேறான குமாரனின் மகிமையை அப்போஸ்தலர்கள் எடுத்துரைத்தபோது, மூவாயிரம் ஆத்துமாக்கள் தங்கள் இதயங்களில் குத்தப்பட்டார்கள். தாங்கள் இருந்தவண்ணமாகவே, தங்களை பாவிகளாகவும் மாசுபடிந்தவர்களாகவும், கிறிஸ்துவை சிநேகிதராகவும் மீட்பராகவும் காணவும் நடத்தினர். பரிசுத்த ஆவியின் வல்லமை மனிதர்களின்மீது அமர்ந்ததினிமித்தம் கிறிஸ்து உயர்த்தப்பட்டு மகிமையடைந்தார். தாங்கள் அழியாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டுமென்பதற்காக அவர் தாழ்மையையும் வேதனையையும் மரணத்தையும் சகித்தாரென்று இந்த விசுவாசிகள் விசுவாசித்தனர். ஆவியானவர் கிறிஸ்துவை அவர்களுக்கு வெளிப்படுத்தியபோது, அவருடைய வல்லமையையும் மகத்துவத்தையும் உணர்ந்தவர்களாக தங்கள் இரு கரங்களையும் அவருக்கு நேராக விசுவாசத்தினால் நீட்டி, “நான் விசுவாசிக்கிறேன்” என்று சொன்னார்கள். (10)

பின்பு உயிர்த்தெழுந்த இரட்சகரின் நற்செய்தி உலகத்தில் மனிதர்கள் வாழுகின்ற கடையாந்திரங்கள்மட்டும் எடுத்துச்செல்லப்பட்டது. அனைத்து திசைகளிலுமிருந்தும் இரட்சிக்கப்பட்ட மக்கள் திரளாக சபையை நாடிவந்தனர். விசுவாசிகளாக இருந்தவர்கள் மீண்டும் மனந்திரும்பினர். பாவிகள் கிறிஸ்தவர்களோடு சேர்ந்து விலையுயர்ந்த முத்தைத் தேடத்துவங்கினர். "அவர்களில் தள்ளாடினவன் அந்நாளிலே தாவீதைப்போல இருப்பான்; தாவீது குடும்பத்தார் அவர்களுக்கு முன்பாகத் தேவனைப்போலும் கர்த்தருடைய தூதனைப்போலும் இருப்பார்கள்" (சகரியா 12:8) என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறியது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தெய்வீக தயாளத்திற்கும், அன்பிற்கும் ஒத்த ஒரு குணத்தை தன் சகோதரனிடத்தில் கண்டான். விசுவாசிகள் ஒரே நோக்கமும் சிந்தையும் கொண்டவர்களாக இருந்தனர். ஒரே குறிக்கோள் அனைவரையும் ஆட்கொண்டது. அனைத்து இதயங்களும் இசைவாகச் செயல்பட்டது. விசுவாசிகள் கிறிஸ்துவின் குணத்தை வெளியாக்கி, அவரது சாயலை அடையவேண்டுமென்ற ஒரே நோக்கம் கொண்டவர்களாகவும், அவருடைய இராஜ்யத்தை விரிவுபடுத்த உழைக்கவேண்டுமென்ற எண்ணமுடையவர்களாகவும் பேராவல்கொண்டவர்களாகவும் இருந்தனர். "விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்... கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது"–அப். 4:32,33; "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டுவந்தார்"–அப். 2:47. விலையுயர்ந்த முத்தை அவர்கள் கண்டுகொண்டதினிமித்தம் கிறிஸ்துவின் ஆவி முழுச்சபையையும் அசைத்தது. (11)

இந்தக் காட்சிகள் யாவும் மிகுந்த வல்லமையோடு திரும்பவும் நிகழ்த்தப்படவேண்டும். பெந்தெகொஸ்தே நாளில் ஊற்றப்பட்ட பரிசுத்த ஆவி முன்மாரியாக இருந்தது. பின்மாரியானது அதைக்காட்டிலும் மிகுதியாக ஊற்றப்படும். நம்முடைய தேவைக்காகவும் அழைப்பிற்காகவும் ஆவியானவர் காத்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின்மூலமாக கிறிஸ்து தமது நிறைவிலே மீண்டும் வெளிப்படவேண்டியதிருக்கிறது. மனுஷர் விலையுயர்ந்த முத்தின் மதிப்பை உணர்ந்தவர்களாக அப்போஸ்தலனாகிய பவுலுடன் சேர்ந்து, "ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" (பிலிப்பியர் 3:8) என்று சொல்லுவார்கள். (12) ★

# 1

# வலை!

**(மூலநூல் : பக்கங்கள் 122–123)**
**மத்தேயு 13:47–50**

அன்றியும், “பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள்.இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்” (மத்தேயு 13:47–50) என்றார். (1)

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது என்பது வலையை வீசுவதற்கு ஒப்பா யிருக்கிறது. நல்லோர்களையும், தீயோர்களையும் இது சபைக்குக் கொண்டு வருகிறது. சுவிசேஷத்தின் பணி முற்றுப்பெறும்போது, நியாயத்தீர்ப்பு நல்லவர்களையும் தீயவர்களையும் பிரிக்கின்ற வேலையைச் செய்துமுடிக்கும். கள்ளச்சகோதரர்கள் சபையில் இருப்பதின் காரணமாக, சத்தியத்தின் வழியை மக்கள் குற்றப்படுத்துவார்களென்பதை கிறிஸ்து கண்டார். போலியான மக்களின் முரண்பாடான வாழ்க்கையினால் இந்த உலகம் சுவிசேஷத்தை நிந்திக்கும். கிறிஸ்துவின் நாமத்தைப் பெற்றிருக்கும் அநேகர் அவருடைய ஆவியானவரின் கட்டுப்பாட்டில் இல்லாதிருப்பதினால், கிறிஸ்தவர்களும்கூட இடறிவிழ நேரிடும். இத்தகைய பாவிகள் சபையில் இருப்பதால், தேவன் இவர்களின் அக்கிரமங்களைப் பொறுத்துக்கொள்கிறார் என்னும் அபாய கரமான எண்ணம் மக்கள் மனதில் ஏற்படுகின்றது; ஆகவேதான், கிறிஸ்து எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் சம்பவங்களைத் தெளிவுபடுத்தி, மனிதனின் முடிவை நிர்ணயஞ்செய்வது அவனவனுடைய குணமே தவிர, அந்தஸ்து அல்ல என்பதை அனைவரும் காணவேண்டுமென்று எதிர்காலத்தின் திரையை விலக்கிக் காட்டுகிறார். (2)

துன்மார்க்கர் அனைவரும் தேவனிடமாகத் திரும்பமாட்டார்கள் என்று களைகள் உவமையும், வலை உவமையும் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. அறுப்புவரை கோதுமையும் களைகளும் சேர்ந்து வளர்கிறது. நல்ல மீன்களும், ஆகாத மீன்களும் சேர்ந்து கரைக்குக் கொண்டுவரப்பட்டு, இறுதியிலே பிரிக்கப்படுகின்றன. (3)

நியாயத்தீர்ப்பிற்குப் பின்னர் தவணையின் காலம் கிடையாது என்பதையே இந்த இரு உவமைகளும் மீண்டும் போதிக்கின்றன. சுவிசேஷத்தின் பணி நிறைவுற்றதும் நல்லவர்களும், தீயவர்களும் பிரிக்கப்பட்டு, அவர்களின் முடிவு என்றைக்குமாக நிச்சயிக்கப்படுகிறது. (4)

ஒருவரும் அழிந்துபோவதை தேவன் விரும்புகிறதில்லை. “நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும்” —எசேக்கியேல் 33:11. தவணையின் காலக்கட்டம் முழுவதும் தேவனுடைய ஆவியானவர் ஈவாகிய ஜீவனைப் பெற்றுக்கொள்ளுமாறு மனிதர்களிடத்தில் மன்றாடிக்கொண்டிருக்கிறார். அவருடைய மன்றாட்டை ஒதுக்கித்தள்ளுபவர்கள் மாத்திரமே அழிந்துபோகும்படி விட்டுவிடப்படுகிறார்கள். அண்டசராசரத்தை அழித்துப்போடும் தீமையாகிய பாவம் அழிக்கப்படவேண்டுமென்று தேவன் அறிவித்திருக்கிறார். பாவத்தை விடாமல் பற்றிக்கொண்டிருப்பவர்கள் அந்த அழிவிலே தாங்களும் அழிந்துபோவார்கள். (5) ★

# 11

# புதியவைகளும் பழையவைகளும்

**(மூலநூல் : பக்கங்கள் 124–134)**

**மத்தேயு 13:51–52**

கிறிஸ்து மக்களுக்குப் போதித்துக்கொண்டிருக்கும்போதே, தமது சீடர்களின் வருங்காலப் பணியைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கும் போதித்தார். அவருடைய போதனைகளில் எல்லாம் அவர்களுக்கான பாடங்கள் இருந்தன. வலையைக்குறித்த உவமையைக் கூறிவிட்டு, “இவைகளையெல்லாம் அறிந்துகொண்டீர்களா” என்று அவர்களைக் கேட்டார். மக்களும், “ஆம், அறிந்துகொண்டோம் ஆண்டவரே” என்றார்கள்; பின்பு, மற்றொரு உவமையில் அவர்கள் பெற்றுக்கொண்ட சத்தியங்களைக் குறித்து அவர்களது பொறுப்பைப்பற்றி அவர்களுக்கு முன்பாக எடுத்துக் கூறினார். “இப்படியிருக்கிறபடியால், பரலோகராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்” (மத்தேயு 13:52) என்றார். (1)

பொக்கிஷத்தைப் பெற்றிருக்கும் வீட்டெஜமான் அதை தன்னிடத்தில் குவித்துவைக்கிறதில்லை. அதை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக வெளியே கொண்டுவருகிறான். இந்தப் பொக்கிஷம் பயன்படுத்துவதின் மூலமாகவே பெருகுகிறது. வீட்டு எஜமானிடத்தில் விலையேறப்பெற்ற பழைய, புதிய பொருட்கள் இருக்கின்றன. எனவே, தமது சீடர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட சத்தியம் உலகத்திலுள்ள மக்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட வேண்டுமென்று கிறிஸ்து போதிக்கின்றார்; இந்த சத்தியத்தின் அறிவு பகிர்ந்தளிக்கப்படும்போது பெருகும். (2)

சுவிசேஷத்தூதை இதயத்திற்குள் ஏற்றுக்கொள்ளும் அனைவரும் அதனைக் கூறியறிவிக்கவேண்டுமென்ற ஏக்கத்தோடிருப்பார்கள். கிறிஸ்துவின்

தெய்வீக அன்பு வெளிப்படுத்தப்படவேண்டும். பரிசுத்த ஆவியானவர் படிப்படியாக தங்களை நடத்தியதைக்குறித்தும், தேவனைப்பற்றியும் தேவன் அனுப்பிய இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் பெற்றுக்கொள்ளவேண்டிய அறிவிற்காக அவர்கள் பசியோடும் தாகத்தோடும் இருந்ததுபற்றியும், வேதாகமத்தை ஆராய்ந்ததின்வாயிலாக ஏற்பட்ட விளைவுகளையும், தங்கள் ஜெபங்களையும் ஆத்தும வியாகுலங்களையும், கிறிஸ்துவின் கருணையின் வார்த்தைகளான, "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டது" என்கிறதையும், கிறிஸ்துவை அணிந்தவர்கள், தங்களின் அனுபவங்களாக பிறருக்கு எடுத்துக்கூறுவார்கள். இவைகளை இரகசியமாக வைத்திருப்பது இயற்கைக்கு முரணானது; கிறிஸ்துவின் அன்பினால் நிரப்பப்பட்டவர்கள் இவ்வாறு செய்யமாட்டார்கள். தூய சத்தியத்தின் களஞ்சியங்களாக கர்த்தர் அவர்களை வைத்திருப்பதினால், பிறரும் அதே ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற வாஞ்சை அவர்களுக்கு உண்டு. ஐசுவரியமான தேவகிருபையை பிறருக்கு வெளிப்படுத்தும்போது, அதிகமதிகமாக கிறிஸ்துவின் கிருபை அவர்களுக்கு வழங்கப்படும். எளிமையிலும், தங்குதடையற்ற கீழ்ப்படிதலிலும் ஒரு சிறுகுழந்தையின் இதயத்தை அவர்கள் பெற்றிருப்பார்கள். அவர்களுடைய ஆத்துமாக்கள் பரிசுத்தத்திற்காகக் கதறும்; அப்பொழுது, உலகிற்குப் பகிர்ந்துகொடுக்கும்படியாக சத்தியமும் கிருபையுமான ஐசுவரியங்கள் அதிகமதிகமாக அவர்களுக்கு வழங்கப்படும். (3)

சத்தியத்தின் மாபெரும் பண்டசாலையாக தேவனுடைய வார்த்தை —எழுதப்பட்ட வார்த்தை, இயற்கையெனும் புத்தகம், மானிட வாழ்வில் தேவன் இடைபடுகிறதினால் வருகிற அனுபவம் என்னும் புத்தகம் இருக்கிறது. இவைகளினின்று கிறிஸ்துவின் ஊழியர்கள் பொக்கிஷங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். சத்தியத்தைத் தேடுவதில் அவர்கள் தேவனைச் சார்ந்திருக்கவேண்டும்; மானிட அறிவைச் சார்ந்திருக்கக்கூடாது. ஏனெனில், பெரிய மனிதர்களின் ஞானமெல்லாம் தேவனின் பார்வையிலே பேதமையாகக் காணப்படுகிறது. கர்த்தரைக்குறித்த அறிவை நாடுபவர்களுக்கு, அவர்தாமே ஏற்படுத்தியிருக்கின்ற வாய்க்கால்கள்மூலமாக பகிர்ந்தளிக்கிறார். (4)

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் அவருடைய வார்த்தையை விசுவாசித்துக் கடைப்பிடித்தால், இவ்வியற்கையையும் உலகில் காணும் விஞ்ஞானம் அனைத்தையும் புரிந்துகொண்டு, அவைகளைப் பாராட்டுவார்கள். அனைத்துக் காரியங்களும் மற்றவர்களுக்கு சத்தியத்தை பகிர்ந்தளிக்க வேண்டியதற்கான வழிமுறைகளை வழங்கும். இயற்கை விஞ்ஞானமென்பது மாபெரும் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்கிறது. கிறிஸ்துவின் பள்ளியில்

பயிலும் ஒவ்வொரு மாணவனும் அதிலிருந்து பாடங்களைக் கற்பான். இயற்கையின் அழகைக் குறித்து தியானித்து, நிலத்தைப் பண்படுத்தி விளையச்செய்வதின்மூலமாக ஏற்படும் அனுபவங்களைக் கற்று, மரங்கள் வளர்வதைக் கண்ணுற்று, பூமியிலும், சமுத்திரத்திலும், வானத்திலுமுள்ள அற்புதங்களை நோக்கும்போதும், சத்தியத்தைக்குறித்த புதிய சாட்சிகள் வெளிப்படும். மனிதனோடு தேவன் இடைபடும் இரகசியங்களைக்குறித்தும், மனித வாழ்வில் புலப்படும் அவருடைய ஞானத்தின் நியாயத்தீர்ப்பின் ஆழங்களைக்குறித்தும் மனிதன் அறிந்துகொள்வானேயாகில், அந்த அறிவு கிடைப்பதற்கரிய பொக்கிஷம் நிறைந்த பண்டசாலையாக இருக்கும். (5)

தேவனைக்குறித்த அறிவு விழுந்துபோன மனிதனுக்கு எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதாகமத்தின்மூலமாக தெளிவாகக் கிடைக்கிறது. ஆராய இயலாத கிறிஸ்துவின் ஐசுவரியங்களை உள்ளடக்கிய அறிவுக் களஞ்சியமாக வேதாகமம் திகழ்கிறது. (6)

தேவனுடைய வார்த்தை என்பது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் காணப்படும் வேதவாக்கியங்களை உள்ளடக்கியிருக்கிறது. ஒன்றில்லாமல் மற்றொன்று முழுமையாகாது. பழைய ஏற்பாட்டின் சத்தியங்கள் அனைத்தும் புதிய ஏற்பாட்டின் சத்தியங்களைப்போன்றே மதிப்புமிக்கதென்று கிறிஸ்து கூறியுள்ளார். மனிதனின் மீட்பராக கிறிஸ்து இன்று இருப்பதுபோலவே, உலகத் தோற்றத்தின்போதும் இருந்தார். அவர் தமது தெய்வீகத்தை மனுஷீகத்தால் மூடி, நம் உலகிற்கு வருவதற்கு முன்பாகவே ஆதாம், சேத், ஏனோக்கு, மெத்தூசலா மற்றும் நோவா ஆகியோரால் (இயேசுவின்) சுவிசேஷத் தூது கொடுக்கப்பட்டது. ஆபிரகாம் கானான் தேசத்திற்கும், லோத்து சோதோமிற்கும் தூதினைக் கொடுக்கச் சென்றனர். விசுவாசமுள்ள தூதுவர்கள் (மக்கள்) தலைமுறை தலைமுறையாக வரப்போகின்ற ஒருவரைக்குறித்து அறிவித்துவந்தார்கள். யூத வாழ்வாதாரத்தின் சட்ட திட்டங்களை கிறிஸ்து தாமே ஏற்படுத்திவைத்தார். அவரே பலி, காணிக்கை அமைப்பு ஆகியவற்றின் அஸ்திவாரமாகவும், அவர்களது அனைத்து சமயச்சடங்குகளின் நிஜமாகவும் உள்ளார். பலிகள் செலுத்தப்படும்போது, சிந்தப்பட்ட இரத்தம், பலியாகப்போகிற தேவ ஆட்டுக்குட்டியின் தியாகத்தையே குறிப்பிட்டுக் காட்டியது. அனைத்து முன்னடையாளமான பலிகளும் அவரில் நிறைவேறுதலையடைந்தது. (7)

முற்பிதாக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டபடி, பலிமுறை ஆராதனை யில் அடையாளமாக இருந்தவரும், பிரமாணத்தில் விளக்கமாகக் காட்டப் பட்டவரும், தீர்க்கதரிசிகளால் வெளிப்படுத்தப்பட்டவருமான கிறிஸ்துவே

பழைய ஏற்பாட்டின் ஐசுவரியமாக இருக்கிறார். கிறிஸ்து தமது வாழ்விலும், மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும், பரிசுத்த ஆவியானவர் அவரை வெளிப்படுத்திய பிரகாரமாக புதிய ஏற்பாட்டின் பொக்கிஷமாக இருக்கிறார். பிதாவின் மகிமையைப் பிரகாசிக்க வந்த—நமது மீட்பரான கிறிஸ்து பழையவராகவும் புதியவராகவும் திகழ்கிறார். (8)

கிறிஸ்துவின் ஜீவனைக்குறித்தும், மரணத்தைக்குறித்தும், பரிந்துபேசு தலைக்குறித்தும் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்ததை அப்போஸ்தலர்கள் சாட்சிகளாகக் கொண்டுசெல்லவேண்டும். கிறிஸ்து தமது தாழ்மையிலும் தூய்மையிலும் பரிசுத்தத்திலும் தமது ஈடுஇணையற்ற அன்பிலும் அவர்களுக்கு ஒரு ஆய்வுப்பொருளாகக் காணப்பட்டார். சுவிசேஷத்தை முழுமையாக பறைசாற்றுவதற்கு இரட்சகருடைய ஜீவியத்தையும் அவருடைய போதனை களையும் மாத்திரம் முக்கியப்படுத்தி நின்றுவிடாதபடிக்கு, பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் அவரைக்குறித்து முன்னறிவித்தவைகளையும், பலி ஆராதனைகள் அவரை எப்படி அடையாளமாகச் சுட்டிக்காட்டியது என்பதையும் எடுத்துரைக்க வேண்டும். (9)

முற்பிதாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகள்மூலமாக தாம் வழங்கி இருந்த பழைய சத்தியங்களுக்கு அவர்தாமே ஆரம்பமாகியிருந்து, அந்த பழைய சத்தியங்களை அவர்களுக்குப் போதித்தார். கிறிஸ்து தமது போதனைகளிலே புதிய வெளிச்சம் கொடுத்தார்; அப்பொழுது, அவைகள் புதிய அர்த்தங்களைப் பெற்றன. அவைகளின் பொருள் எவ்வளவு வித்தியாசமாகக் காணப்பட்டது! அவருடைய விளக்கத்தின் வாயிலாக ஆவிக்குரிய அர்த்தமும் ஏராளமான வெளிச்சமும் கொண்டுவரப்பட்டன. பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தைக்குச் சதாகாலங்களிலும் புது அர்த்தங்களை வெளிப்படுத்துவா ரென்று தமது சீடர்களுக்கு வாக்குத்தத்தம் அருளினார். அதின்படியே அவர்கள் சத்தியங்களை புதுப்பொலிவுடன் வழங்கினார்கள். (10)

ஏதேனில் மீட்பைப்பற்றிய முதலாவது வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து கிறிஸ்துவின் வாழ்க்கை, அவரது குணம், அவரது மத்தியஸ்த ஊழியம் ஆகியவைகளே மானிட மனங்களின் ஆய்வுப்பொருளாக அமைந்திருந்தது. எந்த உள்ளங்கள்மூலமாக பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்தாரோ அவர்கள் இத்தகைய ஆய்வுப்பொருட்களை புதிய வெளிச்சத்தோடும் பொலிவோடும் மக்கள்முன் வைத்தனர். மீட்பின் சத்தியங்கள் தொடர்ச்சியாக முன்னேற்றமடைவதற்கும் விரிவடைவதற்கும் தனியாற்றல் பெற்றதாக இருக்கின்றன. பழையவைகளாக இருந்தும், என்றும் புதியவைகளாக இருந்து, சத்தியத்தைத் தேடுகிறவர்களுக்கு அவை

மேன்மையான மகிமையையும் மேன்மையான வல்லமையையும் தொடர்ந்து வெளிப்படுத்தும். (11)

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அந்தத் தலைமுறையைச் சார்ந்த மக்களுக்காக தேவனுடைய ஒரு தூது—அதாவது சத்தியம் ஒரு புதிய வளர்ச்சிபெற்றதாக வழங்கப்படுகிறது. பழைய சத்தியங்கள் அனைத்துமே பழையவற்றினின்று தனித்தியங்காமல், அதின் ஒரு விரிவாக்கமாகவே இருக்கிறது. பழைய சத்தியங்களை நாம் வாசித்து விளங்கிக்கொள்ளும்போது, புதிய சத்தியங்களைப் புரிந்துகொள்ளுகிறோம். தம்முடைய உயிர்த்தெழுதலைக்குறித்து சீடர்களுக்கு கிறிஸ்து கூறமுற்பட்ட போது, "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்"–லூக்கா 24:27. வேதாகம சத்தியங்களுக்கு பரிசுத்த ஆவியானவர் காண்பிக்கும் புதிய அர்த்தங்களின் வெளிச்சமே பழைய சத்தியங்களை மகிமைப்படுத்துகிறது. புதிய அர்த்தங்களையும் விளக்கங்களையும் புறக்கணிக்கிற நபர் பழைய சத்தியங்களைச் சரியாகப் புரிந்திருக்க வாய்ப்பில்லை. இந்த நபருக்கு இவை ஆற்றலை இழந்ததாக, மரித்த உடல்போல மாறிவிடுகிறது. (12)

சிலர் பழைய ஏற்பாட்டு சத்தியங்களை விசுவாசித்து போதிக்கிறதாகச் சொல்லிக்கொள்வார்கள்; அதே சமயத்தில், புதிய ஏற்பாட்டைப் புறக்கணிக்கின்றனர். கிறிஸ்துவின் உபதேசங்களை பெற்றுக்கொள்ள மறுப்பதின்மூலம் முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் ஏற்கனவே சொல்லியிருந்த காரியங்களை தாங்கள் விசுவாசிக்கவில்லை என்பதையே காட்டுகிறார்கள். "நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்; அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே" (யோவான் 5:46) என்று இயேசு கூறினார். ஆகவே, பழைய ஏற்பாடுகுறித்து இத்தகைய மக்கள் போதிக்கும் போதனையில் எவ்வித வல்லமையும் இருப்பதில்லை. (13)

சுவிசேஷத்தை விசுவாசித்துப் போதிப்பதாக மார்தட்டும் அநேகர் இத்தகைய தவறைச் செய்கிறார்கள். "என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" (யோவான் 5:39) என்று கிறிஸ்து கூறியிருக்க, இவர்களோ பழைய ஏற்பாட்டின் வேதவாக்கியங்களை தள்ளிவைத்து விடுகிறார்கள். பழைய ஏற்பாட்டைப் புறக்கணிப்பதின்மூலம் இவர்கள் புதிய ஏற்பாட்டையும் புறக்கணிக்கிறார்கள்; ஏனெனில், இரண்டு பகுதிகளுமே பிரிக்கமுடியாத முழுமையான தொகுதியின் பிரிவுகளாக இருக்கின்றன. சுவிசேஷமில்லாமல் எந்த ஒரு மனிதனும் தேவனுடைய கற்பனையைக்குறித்து

சரிவரப் போதிக்க இயலாது. சுவிசேஷம் உள்ளடங்கியிருப்பதே பிரமாணம். சுவிசேஷம் கற்பனையை திறந்து காட்டுகிறது. அதைப்போலவே கற்பனை வேராகவும் சுவிசேஷம் அதின்மேல் உருவாகும் மணம்தரும் மலராகவும், அது கொடுக்கும் கனியாகவும் இருக்கிறது. (14)

பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டிற்கு வெளிச்சம் அளிக்கிறதுபோல் புதிய ஏற்பாடும் பழைய ஏற்பாட்டிற்கு வெளிச்சம் அளிக்கிறது. கிறிஸ்துவிலே தேவனுடைய மகிமையை இரண்டுமே வெளிப்படுத்துகிறது. வாஞ்சையுடன் நாடும் நபர்களுக்கு ஆழமான புதிய கருத்துக்களைத் தொடர்ந்து வெளிப் படுத்துவதாக இரண்டு ஏற்பாடுகளும் திகழ்கிறது. (15)

கிறிஸ்துவிலும், கிறிஸ்துவின்மூலமும் வெளிப்படும் சத்தியம் அளவிடப்பட முடியாதது. வேதாகம ஆராய்ச்சியில் ஈடுபடும் மாணவருக்கு அதின் ஆழங்கள் ஒரு ஊற்றைப்போல ஆழமானதாகவும், அகலமானதாகவும் தோன்றும். நம்முடைய பாவங்களுக்கு கிருபாதாரபலியாக தேவன் தமது சொந்தக்குமாரனை அனுப்பியதின் இரகசியத்தை, தேவனுடைய அன்பை, இந்த வாழ்வில் நாம் விளங்கிக்கொள்வது கடினம். இவ்வுலகத்தில் நமது மீட்பர் நடப்பித்த கிரியைகள் யாவும் நமது உச்சக்கட்ட கற்பனா சக்தியையும் விரிவடையச்செய்யும் ஒரு ஆய்வுப்பொருளாக என்றும் இருக்கும். மனிதன் தனது உள்ளத்தின் அனைத்து ஆற்றலையும் கடுமையாக ஈடுபடுத்தி, இந்த இரட்சிப்பின் திட்டத்தின் இரகசியத்தின் ஆழத்தை அறியமுயலலாம். ஆனால் அவனது மனம் இந்த முயற்சியில் சோர்ந்து களைத்துப்போய்விடுகிறது. மிகக் கடுமையான ஆராய்ச்சியில் ஈடுபடும் நபர், தமக்கு முன்பாக ஒரு எல்லையற்ற—கறையற்ற— கடலையே காண்பார். (16)

இயேசுவில் காணப்படுகின்ற அந்த சத்தியத்தை அனுபவத்திலே உணரமுடியும். ஆனால் ஒருபோதும் விளக்கிக் கூறமுடியாது. அதின் உயரம், அகலம், ஆழம் ஆகியவை நமது அறிவிற்கு எட்டாமல் கடந்து போகிறது. இயலுமளவிற்கு உச்சக்கட்டத்திற்கு நமது கற்பனாசக்தியை நாம் இயங்கச் செய்யலாம். எனினும், விவரித்துக் கூறமுடியாத அளவிற்கு வானங்களைப் போன்று உயர்ந்திருந்த நிலையிலும் எல்லா மானிடர்கள்மேலும் தமது முத்திரையைப் பதிக்கத்தக்கதாக பூமியின் தாழ்விடங்களுக்கு வந்த அந்த அன்பை, அந்த அன்பின் சுற்றுக்கோட்டை நம்மால் மங்கலாக மாத்திரமே காணமுடியும். (17)

எனினும், தெய்வீகக் கருணையில் நாம் பங்குகொள்ளும் அளவிற்கு காண்பது நமக்கு சாத்தியமாகலாம். நொறுங்குண்ட தாழ்மையான

ஆத்துமாவிற்கு இது வெளிப்படுத்தப்படுகிறது. கிறிஸ்துவின் தியாகபலியை நாம் விளங்கிக்கொள்ளும் அளவிற்குத்தக்கதாக தேவனின் கருணையை நாம் விளங்கிக்கொள்ளமுடியும். தேவனுடைய வார்த்தையை நாம் தாழ்மையுள்ள இதயத்தோடு ஆராய்ச்சிசெய்யும்போது, வியப்பளிக்கும் இரட்சிப்பின் திட்டத்தை தேவன் வெளிப்படுத்திக் கொடுப்பார். அதனை நாம் நோக்கும்போது, அதின் பிரகாசம் அதிகரித்து, அதைப் பற்றிக்கொள்ள ஆர்வம் காட்டும்போது, அதின் உயரமும் ஆழமும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். (18)

நமது ஜீவன் கிறிஸ்துவின் ஜீவனோடு கட்டப்பட்டிருக்கவேண்டும். வானத்திலிருந்து இறங்கிவந்த அந்த ஏராளமான பொக்கிஷங்களை எப்பொழுதும் வாரிவழங்குகின்ற புதுமையோடு விளங்குகின்ற—ஜீவ அப்பத்தோடு தொடர்புவைத்து, ஜீவத்தண்ணீரைப் பருகி, அவரோடுகூட நாம் நெருங்கி ஜீவிக்கவேண்டும். நம்முடைய இதயங்களினால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவரைத் துதித்து, அவரை எப்போதும் நமக்கு முன்பாக வைத்திருப்போமானால், அப்பொழுது நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் ஒரு தொடர்ச்சியான புத்துணர்ச்சி காணப்படும். நமது ஜெபங்களில் ஒரு நண்பனோடு உரையாடுவதுபோல், நாம் தேவனோடு உரையாடலாம். அவரது இரகசியங்களை அவர் நம்மிடத்தில் தனிப்பட்ட முறையில் பேசுவார். கிறிஸ்துவின் இனிமையான—மகிழ்ச்சிதரக்கூடிய பிரசன்னத்தை நம்மால் அடிக்கடி அனுபவிக்க இயலும். அவர் ஏனோக்குடன் உரையாடியதுபோல் நம்மோடும் நெருங்கிவந்து உரையாடுவார்; அப்பொழுது, நமது இதயங்கள் நமக்குள் கொழுந்துவிட்டு எரியும். இப்படிப்பட்ட அனுபவத்தின்வழியாகக் கடந்து செல்லும் ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்வில் எளிமை, தாழ்மை, சாந்தம் போன்ற நற்பண்புகள் காணப்பட்டு, அவன் தொடர்புகொள்ளும் மக்கள் அனைவரும், அவன் இயேசுவோடு தங்கி இருந்தவன், அவரிடமிருந்து கற்றுக்கொண்டவன் என்பதை அறிந்துகொள்வார்கள். (19)

கிறிஸ்துவின் மார்க்கம் அதை உடையவர்களிடத்தில், ஒரு ஆற்றல் நிறைந்த, ஊடுருவிப்பாயும் கொள்கையுடைய—உயிரோட்டமுடைய—கிரியை செய்கிற—ஆவிக்குரிய வல்லமையாக வெளிப்படுகிறது. அது எப்போதும் புதிதாகவும், வல்லமையுள்ளதாகவும், என்றும் தங்கியிருக்கின்ற இளமையின் மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது. தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளும் இதயம் நீராவியாக மாறும் ஒரு குளம்போன்றதோ அல்லது தனக்குள் இருக்கும் விலைமதிப்புள்ள பொக்கிஷத்தை இழந்துவிடும் உடைந்த தொட்டிபோன்றதோ அல்ல. வற்றாத நீருற்றுக்களால் வளம்பெரும் மலையின் சிற்றாறாக, ஒரு குன்றினின்று அடுத்த குன்றிற்கு துள்ளியோடும்

குளிர்ந்த நீராகப் பாய்ந்து, தாகத்தோடு பாரஞ்சுமந்து களைத்துப்போய் இருப்பவர்களுக்கு புத்துணர்ச்சியூட்டுவதாகவும் இருக்கிறது. (20)

இந்த அனுபவம் சத்தியத்தைப் போதிக்கிற ஒவ்வொரு ஆசிரியருக்கும் கிறிஸ்துவின் பிரதிநிதி என்ற தகுதியைப் பெற்றுத் தருகிறது. கிறிஸ்துவின் போதிக்கும் தன்மையானது அந்த நபருடைய ஜெபங்களுக்கும் மற்றவர்களுடன் கொள்ளும் தொடர்புகளுக்கும் ஒரு சக்தியையும் ஒளிவு மறைவற்ற தன்மையையும் வழங்குகிறது. கிறிஸ்துவைக்குறித்த அவர்களுடைய சாட்சி குறுகலானதாகவோ, ஜீவனற்றதாகவோ இராது. அந்த போதகர் ஏற்கனவே போதித்ததை திரும்பத்திரும்ப போதிக்கமாட்டார். அவர்களுடைய மனம் எப்போதும் பரிசுத்த ஆவியானவரால் பிரகாசம் அடையும். (21)

“என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு… ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்… ஆவியே உயிர்ப்பிக்கிறது… நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது” (யோவான் 6:63) என்று கிறிஸ்து சொன்னார். (22)

நாம் கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து, அவர் இரத்தத்தைப் பானம் பண்ணும்போது, நமது ஊழியத்திலே நித்திய ஜீவனுக்கு ஏதுவான வல்லமை காணப்படும். பழைய—திரும்பத்திரும்பக் கூறப்பட்ட கருத்துக்கள் பிரசங்கத்தில் இருக்காது. சலிப்படையச்செய்யும் பிரசங்கங்கள் ஒருபோதும் காணப்படாது. பழைய சத்தியங்களைப் போதித்தாலும், அவைகளில் புதுமையான ஆவிக்குரிய கருத்துக்கள் அடங்கியிருக்கும். சத்தியத்தை அறிவதில் தெளிவையும், வல்லமையையும் அனைவரும் உணர்ந்துகொள்வர். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலிற்கு தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் இத்தகைய ஊழியங்களின்மூலமாக வல்லமையையும் புதுவாழ்வையும் பெற்றுக்கொள்வார்கள். தேவனுடைய அன்பினால் அவர்கள் நிரப்பப்படுவார்கள். அவர்களுடைய அறிவுத்திறன் உயிர்ப்பிக்கப்பட்டு, சத்தியத்தின் அழகையும் கம்பீரத்தையும் காணுகின்ற பாக்கியம் கிடைக்கும். (23)

உண்மையுள்ள வீட்டெஜமான் சிறுவர்களுக்கும், வாலிபர்களுக்கும் உபதேசிக்கும் ஆசிரியர் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறார். தேவனுடைய வார்த்தையை அவர் ஒரு

பொக்கிஷமாகக் கருதும்பட்சத்தில், அதின் அழகையும் புதிய சத்தியத்தையும் தொடர்ந்து எடுத்துரைப்பவராகத் திகழ்வார். அவர் ஜெபத்தின்மூலமாக தேவனோடு சார்ந்திருக்கும்போது, கிறிஸ்துவின் ஆவி அவர்மீது இறங்கும்; அப்பொழுது, தேவன் அவர்மூலமாக பரிசுத்த ஆவியானவரைக்கொண்டு, மற்றவர்களுடைய மனங்களில் கிரியை செய்வார். இனிய நம்பிக்கையையும் தைரியத்தையும் வேதத்தில் காணப்படும் உருவகங்களையும் அறிவையும் இந்த ஆசிரியரின் ஊழியத்தின்மூலமாக, மனதிலும் இதயத்திலும் பரிசுத்த ஆவியானவர் நிறைக்கிறார். அவரது போதனைக்கடியில் இவையனைத்தும் வாலிபர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. (24)

பரலோக சமாதானம், சந்தோஷம் ஆகிய ஊற்றுகள் ஆவியானவரின் அருள்மொழியால் ஆசிரியரின் ஆன்மாவிலே அடைப்பைத் திறந்து, அவரோடு சேர்ந்த அனைவருக்கும் ஒரு மாபெரும் நதியைப்போல்வந்து, அதின் செல்வாக்கால் அனைவரையும் ஆசீர்வதிக்கும். அப்பொழுது வேதாகமம் அதைப் படிப்பவருக்கு களைப்பு ஏற்படுத்தும் ஒரு நூலாக மாறாது. ஒரு ஞானமான போதகரின்மூலம் வேதாகமத்தின்மேல் மேலும்மேலும் வாஞ்சை ஏற்படும். அது ஜீவ அப்பமாக மாறி, பழமையடையாமல் இருக்கும். அதின் புதுமையும், அழகும் சிறுவர்களையும், வாலிபர்களையும் ஈர்க்கும். பூமியின்மீது பிரகாசிக்கும் சூரியன் ஒளியையும், உஷ்ணத்தையும் தவறாது வழங்குவதுபோல, கர்த்தருடைய வார்த்தையானது தொடர்ந்து மக்களுக்கு ஆசீர்வாதத்தையே வழங்கும். (25)

தேவனுடைய பரிசுத்தமான ஆவி போதிக்கும் அவருடைய வார்த்தையில் இருக்கிறது. ஒரு ஒளி, ஒரு புதிய விலைமதிப்புள்ள ஒளி, ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் பிரகாசிக்கிறது. தேவனுடைய குரல் ஆன்மாவிலே பேசுவதைப்போன்று சத்தியம் அதிலே வெளிப்பட்டிருக்கிறது. வார்த்தைகளும் வாக்கியங்களும் பிரகாசம்பெற்று, சமயத்திற்கேற்ற பொருத்தமான ஆலோசனையை நமக்கு வழங்குகிறது. (26)

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையிலுள்ள பொக்கிஷங் களையும் அதின் அழகையும் வாலிபர்களுக்கு வெளிப்படுத்திக் கொடுக்க விரும்புகிறார். மாபெரும் ஆசிரியரால் கூறப்பட்ட வாக்குத்தத்தங்கள் புலன்களை ஈர்த்து, தெய்வீகமான ஆவிக்குரிய வல்லமையினால் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது. நற்பயன் தரும் உள்ளமானது தெய்வீகக் காரியங்களோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி, சோதனைக்கு எதிரான —தடையாக விளங்கும். (27)

சத்திய வசனங்கள் முக்கியத்துவம்பெற்று வளர்ந்து பெருகும். நாம் ஒருபோதும் கனவிலும் நினைத்திராத அளவிற்கு தேவனுடைய வார்த்தைகளின் அர்த்தங்கள் அதின் அகலத்தையும் முழுமையையும் பெற்றுக்கொள்ளும். தேவனுடைய அழகும் செழுமையுமான வார்த்தைக்கு நமது மனதையும் குணத்தையும் மாற்றும் வல்லமை இருக்கிறது. பரலோக அன்பின் ஒளி இதயத்தில் விழுந்து எழுப்புதலை ஏற்படுத்தும். (28)

வேதாகமத்தைப் பாராட்டும் செயல் அதைப் படிக்கப்படிக்க வளர்கிறது. அந்த மாணவன் எந்தப் பக்கத்தில் திரும்பினாலும் அதில் எல்லையற்ற ஞானமும் தேவ அன்பும் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காண்பார். (29)

யூத இனத்தின் வாழ்வாதாரத்தின் முக்கியத்துவம் இன்னும் முழுமை யாகப் புரிந்துகொள்ளப்படவில்லை. அதின் சடங்குகளிலும், அடையாளங் களிலும் மிகவிரிவான—ஏராளமான சத்தியங்கள் நிழலாகக் கொடுக்கப்பட் டிருக்கின்றன. திறவுகோலாகிய சுவிசேஷமே இரகசியங்களை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. மீட்பின் திட்டத்தைக்குறித்த அறிவின்மூலமாக அதின் அர்த்தங்களை நாம் விளங்கிக்கொள்ளலாம். நாம் இப்பொழுது செய்வதை விட, இன்னும் காரியங்களை நாம் விளங்கிக்கொள்ளுதல் அவசியம். தேவ தூதர்களுங்கூட மனிதனுக்கு தேவன் வெளிப்படுத்திய சத்தியங்களை அறிந்து கொள்ள ஆவலுடன் இருக்கிறார்கள். நொறுங்குண்ட இதயத்தோடு தேவ வார்த்தையை ஜெபத்தோடு ஆராய்ச்சிசெய்பவர்களுக்கு கர்த்தர் மாத்திரமே அந்த அறிவின் ஆழங்களையும் உயரங்களையும் அகலங்களையும் நீளங் களையும் விளக்கிக் காண்பிக்கிறார். (30)

இந்த உலக வரலாற்றின் முடிவை நெருங்கிக்கொண்டிருக்கும்போது, கடைசிக்கால தீர்க்கதரிசனங்களைக் குறிப்பிட்டவிதத்தில் நாம் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். புதிய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகமாகிய வெளிப் படுத்தின விசேஷம் பல கடைசிக்கால தீர்க்கதரிசனங்களை உள்ளடக்கியிருப் பதினால், நாம் அதை அவசியம் விளங்கிக்கொள்ளவேண்டும். பலருடைய மனக்கண்களை சாத்தான் குருடாக்கியிருக்கிறபடியால், வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தைப் படிப்பதற்கும் தியானிப்பதற்கும் சாக்குப்போக்கு கூறுகின்ற காரியத்தில் அநேகர் மகிழ்ச்சியடைகின்றனர். ஆனால், கிறிஸ்து தமது ஊழியக்காரனாகிய யோவான்மூலம் கடைசிநாட்களில் என்னென்ன சம்பவிக்கும் என்பதை: “இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்” (வெளி. 1:3) என்று கூறுகிறார். (31)

"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவா. 17:3) என்று கிறிஸ்து கூறினார். இந்த அறிவின் மதிப்பை ஏன் நாம் சரியாகப் புரிந்துகொள் கிறதில்லை? ஏன் இந்த மகிமையான சத்தியங்கள் நமது இதயங்களிலே கொழுந்துவிட்டு எரியவில்லை? நமது உதடுகளிலே ஏன் நடுக்கம் ஏற்படுத்த வில்லை? நமது உடலிலும் உள்ளத்திலும் ஏன் ஊடுருவிப் பாயவில்லை? (32)

தமது வார்த்தையை நமக்கு அளித்திருப்பதின்மூலம் தேவன் நமது இரட்சிப்பிற்கு அவசியமான ஒவ்வொரு சத்தியத்தையும் நமது உடமை யாக்கியிருக்கிறார். ஆயிரக்கணக்கானோர் இந்த ஜீவ ஊற்றுகளிலிருந்து தண்ணீரை இறைத்தபோதிலும், அது வற்றாமல் தண்ணீரை வழங்கிக்கொண் டிருக்கிறது. ஆயிரக்கணக்கானோர் கர்த்தரை தங்களுக்கு முன்பாக நிறுத்தி, அவரை நோக்கிப்பார்த்து, அவருடைய சாயலைத் தரித்திருக்கிறார்கள். கிறிஸ்து தங்களுக்கு என்னவாக இருக்கிறார் என்பதையும், அவர்கள் கிறிஸ்துவிற்கு என்னவாக இருக்கிறார்களென்பதையும் கூறி, அவரது குணத்தைப்பற்றி விவரிக்கும்போது, அவர்களது இதயத்திலே அவர்களது ஆவி கொழுந்து விட்டு எரிகிறது. இந்த ஆராய்ச்சியாளர்கள், இந்த மாபெரும் பரிசுத்தமான ஆய்வுப்பொருட்களை முற்றிலுமாக ஆராய்ந்து முடிக்கவில்லை. இன்னும் ஆயிரக்கணக்கானோர் இரட்சிப்பின் இரகசியங்கள்குறித்த ஆராய்ச்சியில் ஈடுபடலாம். கிறிஸ்துவின் வாழ்வையும் அவரது பணியின் தன்மையையுங் குறித்து தியானிக்கும்போது, சத்தியத்தை விளங்கிக்கொள்வதற்கு வசதியாக பரலோகத்தின் ஒளிக்கதிர்கள் நமது முயற்சிகளில் பிரகாசிக்கும். ஒவ்வொரு புதிய ஆராய்ச்சியும் ஆழமான உற்சாகமளிக்கக்கூடிய சத்தியங்களை வெளிப்படுத்திக் காண்பிக்கும். இந்த ஆய்வுப்பொருளானது என்றும் வற்றாததாக இருக்கும். கிறிஸ்துவின் மனித அவதாரம், அவருடைய தியாகபலி, அவருடைய மத்தியஸ்த ஊழியம் ஆகியவைகளில் காலம் இருக்கும்வரை கடுமையாக உழைத்துப் படிக்கின்ற மாணவனின் மனம் அதில் ஈடுபட்டிருக்கும். எண்ணிமுடியாத ஆண்டுகள்வரை பரலோகத்தை நோக்கிப்பார்த்தவராக, அந்த நபர் தேவத்துவத்தின் இரகசியம் மகா பெரியது என்று ஆச்சரியமடைவார். (33)

இந்த உலகில் நாம் ஒளியூட்டப்பட்டிருப்பது சாத்தியமாகவே இருந் தது. அவ்வாறு ஒளியூட்டப்பட்டிருந்திருப்போமானால், நமது கண்கள் திறக்கப் பட்டு, காரியங்களை நாம் நன்றாக விளங்கிக்கொண்டிருந்திருப்போம். இத்தகைய காரியங்களை நாம் செலவிடப்போகும் நித்தியத்தில் கற்றுக் கொள்வோம். நித்தியத்தின் யுகங்கள் முழுவதிலும் இரட்சிப்பு சம்பந்தப்பட்ட

ஆய்வுப்பொருட்களே நமது இதயங்களையும் சிந்தைகளையும் நாவுகளையும் இயக்கிக்கொண்டிருக்கும். கிறிஸ்து இவ்வுலகில், மனிதனாக அவதரித்து வாழ்ந்திருந்த காலத்தில், தமது சீடர்களுக்கு விளக்கிக்கூற வாஞ்சித்த அனைத்துக் காரியங்களையும் அவர்கள் விளங்கிக்கொள்வார்கள். ஆனால் இவ்வுலகில் அவர்களுக்குப் புரிந்துகொள்ளத்தக்கதான விசுவாசம் இல்லாதிருந்ததினால் அவர்களால் புரிந்துகொள்ளமுடியாமல் போய்விட்டது. என்றென்றுமாக கிறிஸ்துவின் பூரணத்துவம், மகிமை ஆகியவைபற்றிய புதிய கருத்துக்கள் தோன்றும். முடிவில்லாத யுகங்கள் முழுவதிலும் உண்மையும் உத்தமமுமான வீட்டெஜமானாகிய நமது கர்த்தர் தமது பொக்கிஷத்தில் இருந்து பழையனவற்றையம் புதியனவற்றையும் எடுத்துக்கொடுப்பார். (34)

★

# 12

# கொடுப்பதற்காகக் கேளுங்கள்!

**(மூலநூல் : பக்கங்கள் 139–149)**
**லூக்கா 11:1–13**

நமக்கு வழங்கும் வண்ணமாக கிறிஸ்து தமது பிதாவினிடத்திலிந்து தொடர்ந்து பெற்றுக்கொண்டேயிருந்தார். “நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது” யோவான் 14:24; “அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்ய வந்தார்”–மத்.20:28. அவர் வாழ்ந்ததும், சிந்தித்ததும், ஜெபித்ததும் தமக்காயிராமல் மற்றவர்களுக்காகவே இருந்தது. தினமும் காலைவேளைகளில் பலமணி நேரங்கள் பிதாவின் சமூகத்தை ஜெபத்தில் நாடி, மனிதர்களுக்கு பரலோகத்தின் ஒளியைக் கொண்டுவந்தார். பரிசுத்த ஆவியின் புதிய அபிஷேகத்தை ஒவ்வொருநாளும் பெற்றுக்கொண்டார். ஒவ்வொரு புதிய நாளிலும் அதிகாலை மணிவேளைகளில் தேவன் அவரை நித்திரையினின்று எழுப்பினார். மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கத்தக்கதாக அவரது ஆத்துமாவும் உதடுகளும், கிருபையினால் அபிஷேகம் செய்யப்பட்டன. இளைத்தோருக்கும், நொறுக்கப்பட்டோருக்கும் சமயத்திற்கேற்ற புத்தம்புதிய வார்த்தைகளைக் கொடுக்கத்தக்கதாக பரலோக மன்றங்களிலிருந்து அவருக்கு வார்த்தைகள் வழங்கப்பட்டது. “இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலைதோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக்கொள்ளுகிறவர்களைப்போல, நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச்செய்கிறார்”–ஏசாயா 50:4. (1)

கிறிஸ்துவின் ஜெபங்களாலும் பிதாவோடு தொடர்புகொள்ளும் அவருடைய பழக்கத்தினாலும் சீடர்கள் அதிகமாக உணர்த்தப்பட்டார்கள். ஒருநாள் அவர்களது ஆண்டவரைவிட்டு பிரிந்திருந்த சிறிதுநேரம் கழித்து அவர் விண்ணப்பஞ்செய்வதில் ஆழ்ந்திருப்பதைக் கண்டார்கள். அவர்கள்

அருகில் நிற்பதை அறியாதவர்போல உரத்த குரலில் அவர் ஜெபித்துக் கொண்டிருந்தார். சீடர்களுடைய இதயங்கள் ஆழமாக அசைக்கப்பட்டது. அவர் ஜெபித்து முடித்தபோது, "எங்களுக்கு ஜெபிக்கக் கற்றுத்தாரும், ஆண்டவரே" என்று கேட்டார்கள். (2)

"பின்னும் அவர் அவர்களை நோக்கி: உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிறவனிடத்தில் பாதிராத்திரியிலே போய்: சிநேகிதனே, என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான், அவன்முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை, நீ மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். வீட்டுக்குள் இருக்கிறவன் பிரதியுத்தரமாக: என்னைத் தொந்தரவுசெய்யாதே, கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னோடேகூடப் படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து, உனக்குத் தரக்கூடாது என்று சொன்னான். பின்பு, தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிறதினிமித்தம் எழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும், தன்னிடத்தில் அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தமாவது எழுந்திருந்து, அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான்" (லூக். 11:5–7) என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (3)

இங்கு விண்ணப்பித்தவரை தான் மீண்டும் கொடுப்பதற்காக கேட்பது போன்று கிறிஸ்து சுட்டிக்காட்டுகிறார். அவன் அப்பத்தைப் பெறவேண்டும்; இல்லையேல் தாமதமாக வந்த களைத்துப்போயிருக்கிற பிரயாணியின் தேவைகளை அவனால் சந்திக்கமுடியாது. அவனுடைய அண்டை வீட்டுக்காரன் தொந்தரவு செய்யப்படுவதை விரும்பாவிட்டாலும், அவன் கெஞ்சுவதை நிறுத்தமாட்டான். அவனது நண்பனின் துன்பத்தை எப்படியாவது தீர்க்கவேண்டும். விடாமல் கொடுத்த தொந்தரவிற்குப் பலன் கிடைத்தது. அவனது தேவைகள் வழங்கப்பட்டன. (4)

இதுபோன்றே சீடர்களும் தேவனிடத்தில் ஆசீர்வதங்களை நாட வேண்டும். தம்முடைய சீடர்கள் இவ்வுலகில் தமது பிரதிநிதிகளாகப் பணியாற்ற வேண்டுமென்பதை திரளான மக்களைப் போஷித்தபோது வானத்தினின்று பெற்றுக்கொண்ட அப்பத்தைக்குறித்த பிரசங்கத்திலே கிறிஸ்து கூறியிருந்தார். ஜீவ அப்பத்தை அவர்கள் மக்களுக்கு வழங்கவேண்டும். இந்தப் பணியை அவர்களுக்கு நியமித்துக் கொடுத்தவர், அவர்களது விசுவாசம் பலமுறை சோதிக்கப்படும் என்பதையும் கண்டார். அடிக்கடி எதிர்பாராத நிலைமைகளில் தள்ளப்படுவார்கள். அப்போது தங்களுடைய மனித இயலாமையை அவர்கள் உணருவார்கள். ஜீவ அப்பத்திற்காக பசியோடிருக்கும் ஆத்துமாக்கள் அவர்களிடம் வரும். அப்போது தங்களை ஆதரவற்றவர்களாகவும்

உதவியற்றவர்களாகவும் உணருவார்கள். ஆவிக்குரிய உணவை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்; இல்லையேல் பிறருக்கு வழங்க அவர்களிடம் எதுவுமே இருக்காது. ஒரு ஆத்துமாவைக்கூட அவர்கள் போஷிக்காமல் திருப்பி அனுப்பக்கூடாது. ஆசீர்வாதங்களின் ஊற்றிற்கு நேராக கிறிஸ்து அவர்களை வழிநடத்துகிறார். பாதி இராத்திரியிலே வழிப்பிரயாணமாக தன்னிடம் வந்தவனை அந்த சிநேகிதன் திருப்பி அனுப்பவில்லை. அவனுக்குக் கொடுப்பதற்கு தன்னிடம் ஒன்றுமில்லாத போதும், உணவு வைத்திருந்த தன்னுடைய அண்டைவீட்டுக்காரனை நாடிச்சென்று வருந்திக்கேட்டு, வந்திருந்தவனுடைய தேவையைப் பூர்த்தி செய்தான். பசியாயிருப்பவர்களைப் போஷிக்கும்படியாக தம்முடைய ஊழியர்களை அனுப்பும் தேவன், தமது வேலைக்காகச் செல்லும் அவர்களுடைய தேவையைச் சந்திக்காமல் இருப்பாரா? (5)

உவமையில் கூறப்பட்டுள்ள சுயநலமான அண்டை வீட்டுக்காரன் தேவனுடைய குணத்தை அங்கு சுட்டிக்காட்டவில்லை. ஒப்பிட்டு அல்ல எதிர்மாறான கருத்தோடு பாடம் கொடுக்கப்படுகிறது. ஒரு சுயநலமுள்ள மனிதன், ஓய்வெடுக்கும்போது தொந்தரவுசெய்யும் மனிதரிடமிருந்து விடுதலை பெறும்படி அவனது அவசரமான வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பான். ஆனால், நம்முடைய தேவன் கொடுப்பதில் மகிழ்ச்சி காண்கிறவர். அவர் மனதுருக்கம் நிறைந்தவர். விசுவாசத்தோடு தம்மிடம் வருபவர்களின் விண்ணப்பங்களைச் சந்திக்க ஆவலோடிருக்கிறார். பிறருக்குக் கொடுப்பதால், நாமும் அவரைப்போலாவதற்காக அவர் நமக்குக் கொடுக்கிறார். (6)

“கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்” (லூக்கா 11:9–10) என்று கிறிஸ்து கூறுகிறார். (7)

மேலும், “உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா? அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்தஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?” (லூக்கா 11:11–13) என்கிறார். (8)

தேவன்மீது நமக்கு இருக்கும் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்காக அவரை ஒரு புதிய நாமத்தில்—மனித இருதயத்தோடு நெருக்கமாக இணைந்திருக்கிற ஒரு நாமத்தில் அழைக்க கிறிஸ்து கற்றுக்கொடுக்கிறார். நித்திய தேவனை நம்முடைய பிதா என்று அழைக்கும்படியான ஒரு சிறப்புரிமையை நமக்குத் தருகிறார். இந்த நாமம், அவரிடம் பேசும்போதும் அவரைக்குறித்துப் பேசப்படும்போதும், அவரிடம் நமக்கிருக்கும் அன்பு மற்றும் நம்பிக்கையின் அடையாளமாகவும், அவர் நம்மீது கொண்டுள்ள அக்கறை மற்றும் உறவுபற்றிய வாக்குறுதியாகவும் இருக்கிறது. அவரது ஆசீர்வாதத்தை அல்லது ஆதரவை நாம் கேட்கும்போது, அது அவரது செவிகளில் கீதம் போன்று தொனிக்கிறது. பெயரைச்சொல்லி அவரை அழைப்பதை துணிச்சலென்று நாம் நினைக்காதிருக்க, அவர் மீண்டும் மீண்டும் அதைச் சொல்லுகிறார். அவரது சிறப்புப் பெயரோடு நாம் நன்கு பரிட்சயமாகவேண்டுமென்று அவர் விரும்புகிறார். (9)

தேவன் நம்மை தமது பிள்ளைகளாகக் கருதுகிறார். பாதுகாப் பற்ற உலகத்திலிருந்து நம்மை மீட்டு, பரலோக இராஜாவின் குமாரரும் குமாரத்திகளுமாக இராஜ குடும்பத்தின் அங்கத்தினர்களாக தெரிந்தெடுத் திருக்கிறார். ஒரு குழந்தை இந்த உலகிற்கடுத்த தகப்பன்மீது வைத்திருக்கும் நம்பிக்கையைவிட ஆழமாகவும், உறுதியாகவும் அவர்மீது நம்பிக்கை வைக்க நம்மை அழைக்கிறார். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நேசிக்கிறார்கள்; ஆனால், மனித அன்பைவிட தேவனுடைய அன்பு அதிகமும், அகலமும், ஆழமுமானதாக இருக்கிறது. அது அளவிடப்படமுடியாதது. இவ்வுலகத்தின் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக்கொடுக்க அறிந்திருக்கும் போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? (10)

ஜெபத்தைக்குறித்த கிறிஸ்துவின் போதனைகளை நாம் கவனமாக தியானிக்கவேண்டும். ஜெபத்தில் தெய்வீக அறிவியல் அடங்கியிருக்கிறது. அனைவரும் புரிந்துகொள்ளவேண்டிய கருத்துக்களை அவருடைய எடுத்துக் காட்டு நமக்குக் கொண்டுவருகிறது. மெய்யான ஜெப ஆவி என்றால் என்ன என்பதை அவர் நமக்குக் காண்பித்து, விடாமுயற்சியுடன் நமது விண்ணப்பங்களை தேவனிடத்தில் முன்னிலைப்படுத்துவதன் அவசியத்தைப் போதிக்கிறார். நமது ஜெபத்தைக் கேட்பதற்கும் பதிலளிப்பதற்கும் ஆயத்தமாக இருப்பதை உறுதிப்படுத்துகிறார். (11)

நமது ஜெபங்கள் சுயநலமிக்கதாக—நமது சொந்த நன்மைக்காக மாத்திரம் கேட்பதாக இருக்கக்கூடாது. பிறருக்குக் கொடுக்கிறதற்கேதுவாக

நாம் கேட்கவேண்டும். கிறிஸ்துவின் வாழ்க்கைக் கொள்கை நம்முடைய வாழ்க்கைக்கொள்கையாகவேண்டும். தமது சீடர்களைக்குறித்துப்பேசும்போது, "அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர் களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" (யோவான் 17:19) என்றார். கிறிஸ்துவில் வெளிப்பட்ட அதே பக்தியும், அதேபோன்ற சுயதியாகமும், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்த அதே கீழ்ப்படிதலும் அவருடைய அடியார்களிடம் காணப்படவேண்டும். இவ்வுலகத்தில் நமது பணி, நமக்கு நாமே சேவைசெய்வதோ அல்லது நம்மையே திருப்திப் படுத்திக்கொள்வதோ அல்ல. பாவிகளை இரட்சிப்பதற்காக தேவனோடு ஒத்துழைப்பதினால் அவரை மகிமைப்படுத்தவேண்டும். பிறருக்கு கொடுக்கும்படியாக, நாம் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதங்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும். பெற்றுக்கொள்வதற்கான தகுதி மற்றவர்களுக்குக் கொடுப்பதின்மூலமாகவே தக்கவைக்கப்படுகிறது. நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குக் கொடுக்காமலிருக்கும் பட்சத்தில், நாம் பரலோகப் பொக்கிஷத்தைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ள இயலாது.(12)

உவமையில் விண்ணப்பதாரர் தன் நண்பனால் மீண்டும்மீண்டும் விரட்டப்பட்டபோதிலும் மனந்தளர்ந்து தனது நோக்கத்தை விட்டுவிடவில்லை. அதுபோலவே, நம்முடைய ஜெபங்களும் உடனடியாக பதில்பெறுவதுபோல எப்போதும் தோன்றுவதில்லை; ஆனாலும், நாம் ஜெபிப்பதை நிறுத்திவிடக்கூடாது என்று கிறிஸ்து போதிக்கிறார். ஜெபம், தேவனிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அல்ல; தேவனோடுள்ள இசைவுக்கு நம்மைக் கொண்டுவருவதற்கே. அவரிடத்தில் விண்ணப்பிக்கும்போது, நாம் நம்முடைய இதயங்களை ஆராய்ந்து, பாவத்திற்கு மன்னிப்பு பெறுவது அவசியம் என்று அவர் காணலாம். ஆகவே, பரிசுத்த ஆவியானவர் நம்மிலே கிரியை செய்வதற்கு எது தடை செய்கிறது என்பதை நாம் காண, அவர் நம்மைச் சோதனை மற்றும் உபத்திரவத்தின் பாதையில் நடத்தி, சிறுமையின் அனுபவத்திற்குள் கொண்டுவருகிறார். (13)

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதற்கு சில நிபந்தனைகள் உள்ளன. ஜெபம் கடமையின் இடத்தை ஒருபோதும் எடுக்காது. "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்." "என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்" (யோவான் 14:15,21) என்று கிறிஸ்து சொல்கிறார். தேவனுடைய வாக்குத்தத்தங்களைப்

பற்றிக்கொண்டு, ஆனால் அதற்கான நிபந்தனைகளைப் புறக்கணித்து, அவரிடம் தங்கள் விண்ணப்பங்களைக் கொண்டுவருபவர்கள் யெகோவாவை அவமதிக்கிறார்கள். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறும்படியாக, அவருடைய நாமத்தை அதிகாரமாகப் பயன்படுத்துகிறார்கள்; ஆனால், கிறிஸ்துவிலே விசுவாசத்தையும் அவர்மீது அன்பையும் காட்டத்தக்கதான காரியங்களை அவர்கள் செய்கிறதில்லை.(14)

பிதாவால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனையை அநேகர் இழந்துகொண்டிருக்கிறார்கள். எத்தகைய நம்பிக்கையோடு நாம் தேவனை நெருங்குகிறோம் என்பதை உன்னிப்பாகச் சோதித்துப்பார்க்கவேண்டியது அவசியம். கீழ்ப்படியாதபோது, காசாக மாற்றவேண்டிய காசோலையை அதற்குரிய நிபந்தனைகளின்றி கொண்டுவருகிறவர்களாக இருக்கிறோம். தேவனுக்கு முன்பாக அவரது வாக்குத்தத்தங்களை வைத்து அவைகளை நிறைவேற்றவேண்டுமென்றும் கேட்கிறோம். அவர் அப்படிச் செய்வாரானால், தமது சொந்த நாமத்தைக் கனவீனப்படுத்துவார். (15)

“நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத் திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்” (யோவான் 15:7) என்று கிறிஸ்து நமக்கு வாக்குப்பண்ணுகிறார். “அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறே னென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப் பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந் திருக்கிறோம்”–1 யோவான் 2:3–5. (16)

கிறிஸ்து கடைசியாக தமது சீடர்களுக்குக் கொடுத்த கற்பனையில் “நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்” (யோவான் 13:34) என்கிறார். இந்தக் கற்பனைக்கு நாம் கீழ்ப்படிகிறோமா அல்லது கிறிஸ்துவைப்போன்ற குணமின்றி கடுமையான குணங்களில் திளைக்கின்றோமா? ஏதாவது ஒரு வழியில் நாம் பிறரைத் துக்கப்படுத்தியோ அல்லது காயப்படுத்தியோ இருப்போமானால், நமது குற்றத்தை அறிக்கையிட்டு, ஒப்புரவாகுதலை நாடுவது அவசியம். விசுவாசத்தினால் தேவனிடத்தில் வந்து, அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவ்வாறாக நாம் ஆயத்தப்படுதல் மிகவும் அவசியம். (17)

ஜெபத்தில் கர்த்தரை நாடும் பலரால் அடிக்கடி அலட்சியப்படுத்தப்படும் இன்னொரு காரியமும் உண்டு. நீங்களும் தேவனுக்கு உண்மையாக இருக்கிறீர்களா? மல்கியா தீர்க்கதரிசியின் வாயிலாக கர்த்தர்: “நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவைகளைவிட்டு விலகிப்போனீர்கள்; என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; நாங்கள் எந்த விஷயத்தில் திரும்பவேண்டும் என்கிறீர்கள். மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே” (மல். 3:7,8) என்கிறார். (18)

எல்லா ஆசீர்வாதங்களையும் வழங்கும் தேவன் நம்முடையவைகளி லிருந்து ஒரு பகுதியைக் கொடுக்கவேண்டுமென்று உரிமைகோருகிறார். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர்களின் தேவையைச் சந்திக்க தேவன் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார். நாம் தேவனுக்குத் திருப்பிச் செலுத்துவதின் மூலமாக, அவரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட நன்மையான காரியங்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறோமென்று காட்டவேண்டும். அவருக்குச் சேர வேண்டியதை நம்வசம் வைத்துக்கொண்டு, அவரிடத்திலிருந்து எப்படி ஆசீர்வாதங்களை எதிர்பார்க்கலாம்? உலகப்பிரகாரமான காரியங்களில் நாம் அவருக்கு உண்மையற்ற உக்கிராணக்காரர்களாயிருக்கும்போது, பரத்திற்குரிய ஆசீர்வாதங்களை நமக்கு அவர் வழங்கவேண்டுமென்று எப்படி எதிர்பார்க்கலாம்? அநேக சமயங்களில் நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்காமல் போவதற்கு இதுவே காரணம். (19)

ஆனால் தமது பெரிதான இரக்கத்தினால் நம்மை மன்னிப்பதற்கு ஆயத்தமாயிருக்கும் கர்த்தர்: “என் ஆலயத்தில் ஆகாரம் உண்டா யிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப்பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். பூமியின் கனியைப் பட்சித்துப்போடுகிற வைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்; அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற் போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள்; தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்”– மல்கியா 3:10–12. (20)

தேவனால் வைக்கப்படும் கோரிக்கைகள் ஒவ்வொன்றிலும் இவ்வாறே இருக்கிறது. தேவன் கொடுக்கும் அனைத்து நன்மையான காரியங்களையும் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கே வாக்குப்பண்ணியிருக்கிறார். தம்மிடம் ஒத்துழைப்பவர்களுக்கு வழங்கத்தக்கதாக தேவன் பரலோகம் நிறைய ஆசீர்வாதங்களை வைத்திருக்கிறார். அவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அனைவரும் அவருடைய வாக்குத்தத்தங்களைத் தங்கள் வாழ்வில் நிறைவேற்றுமாறு உரிமையுடன் கேட்கலாம். (21)

ஆனால், உறுதியான எவ்வித மாறுபாடுமின்றி தேவனைச் சார்ந் திருக்கிறோமென்பதை நாம் வெளிப்படுத்தவேண்டும். அநேக சமயங்களில், நம்முடைய விசுவாசத்தையும், உண்மையாகவே நாம் வாஞ்சிக்கிறோமா என்பதையும் அறிந்துகொள்ள, அவர் நமது ஜெபங்களுக்குப் பதிலளிக்கத் தாமதிக்கிறார். அவருடைய வார்த்தையின்படியே நாம் கேட்கும்போது, அவருடைய வாக்குத்தத்தத்தில் விசுவாசம்வைத்து பெற்றுக்கொள்வோமென்ற உறுதியுடன் கேட்கவேண்டும். (22)

நீங்கள் ஒருமுறை கேட்டாலே பெற்றுக்கொள்வீர்களென்று தேவன் கூறுகிறதில்லை. நாம் கேட்கவேண்டுமென்று அவர் கட்டளையிடுகிறார். சோர்ந்துபோகாமல் ஜெபத்தில் உறுதியாக நிலைத்திருக்கவேண்டும். விடாப்பிடியாகச் செய்யும் வேண்டுதலானது ஜெபிப்பவரை அதிகமான ஊக்கமான மனப்பாங்கிற்குக் கொண்டுவந்து, தான் கேட்டுக்கொள்வதைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பதற்கான ஆவலை அவருக்குக் கொடுக்கிறது. லாசருவினுடைய கல்லறையண்டை நிற்கும்போது, கிறிஸ்து மார்த்தாளைப் பார்த்து: “நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்” (யோவான் 11:40) என்றார். (23)

ஆனால் அநேகரிடத்தில் ஒரு உயிரோட்டமுள்ள விசுவாசம் இல்லை. இந்தக் காரணத்தினால், அவர்கள் தேவனுடைய வல்லமையை அதிகமாகக் காண்கிறதில்லை. அவர்களுடைய அவிசுவாசத்தின் விளைவே இத்தகைய பெலவீனமாகும். தேவனுடைய செயற்பாட்டில் வைக்கும் விசுவாசத்தைவிட, தங்களுடைய செயற்பாட்டில் அதிக விசுவாசம் வைக்கிறார்கள். தங்களைக் காத்துக்கொள்வதில் தங்களையே சார்ந்திருக்கிறார்கள். திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும்போது, சிறிதளவே ஜெபித்து சிறிதளவாகவே தேவனிடம் உண்மையான விசுவாசம் வைக்கிறார்கள். அவர்கள் தங்களிடம் விசுவாசம் இருக்கிறதென்று நினைக்கிறார்கள்; ஆனால், அது ஒரு கணநேர உந்துதலே. தங்களது சொந்தத் தேவையை உணரத் தவறியவர்களாக தேவன் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறாரென்பதை முழுமையாக

விசுவாசிக்காமல் இருப்பதினால், இடைவிடாது அவரிடம் விண்ணப்பங்களை ஏறெடுப்பதில்லை. (24)

நள்ளிரவில் அப்பங்களைக் கேட்ட தேவையிலிருந்த நண்பனின் விண்ணப்பத்தைப்போல, நமது ஜெபங்கள் ஊக்கமானதாகவும் விடாப்பிடி யானதாகவும் இருக்கவேண்டும். எவ்வளவிற்கு அதிகமாக ஊக்கமாயும் தடுமாற்றமின்றி உறுதியாயும் நாம் ஜெபிக்கின்றோமோ அவ்வளவிற்கதிகமாக கிறிஸ்துவோடு நமது ஆவிக்குரிய ஐக்கியம் மிகவும் நெருக்கமானதாக இருக்கும். நமது விசுவாசம் அதிகமாகப் பெருகியிருப்பதால், பெருக்கமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம்.(25)

ஜெபிப்பதும் விசுவாசிப்பதும் நம்முடைய பங்காயிருக்கிறது. விழித்திருந்து ஜெபியுங்கள். ஜெபத்தைக் கேட்கும் தேவனோடு ஒத்துழைக்க வேண்டும். விழிப்போடு இருக்கவேண்டும். “நாங்கள் (நாம்) தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்” (1 கொரிந்தியர் 3:9) என்பதை மனதில் கொள்ளவேண்டும். நம்முடைய விண்ணப்பங்களுக்கு ஏற்றாற்போல் நாம் பேசவும் செயல்படவும் வேண்டும். சோதனை வரும்போது, நம்முடைய விசுவாசம் உண்மையானதுதானா அல்லது நம்முடைய விண்ணப்பங்கள் வெறும் வடிவத்தில்மாத்திரமே அமைந்திருக்கின்றனவா என்பதில் ஒரு மாபெரும் வித்தியாசம் தெரியும். (26)

குழப்பங்களும் கஷ்டங்களும் நமக்கு நேரிடுகையில், மனித உதவியை நாம் நோக்கக்கூடாது. தேவனில் முழுவதுமாகச் சார்ந்திருக்கவேண்டும். மற்றவர்களிடத்தில் நமது கஷ்டங்களைக் கூறும் பழக்கம் நம்மை பெலவீன மாக்குகிறது. அவர்களுக்கு எந்தவித வல்லமையையும் அது கொடுப்ப தில்லை. கேட்பவர்களும் அதினால் பிரயோஜனம் அடைவதில்லை. அவர்களால் நிவர்த்திசெய்யக்கூடாத ஆவிக்குரிய பெலவீனங்களின் பாரத்தை அவர்கள்மீது வைக்கிறோம். தவறுசெய்யாத எல்லையற்ற பரம்பொருளின் வல்லமையைப் பெற்றுக்கொள்வதற்குப்பதிலாக தவறுசெய்கின்ற எல்லைக் குட்பட்ட மனிதனின் பெலத்தை நாடுகிறோம். உங்களுடைய விசுவாசம் மேற்கொள்ளமுடியாத விசுவாசமாயிருக்கவேண்டும். இவ்வுலகம் கர்த்தருக்குச் சொந்தமானது. அவர் நம்மை ஆசீர்வாதங்களால் நிரப்பும்படி கிருபையில் ஐசுவரியமுள்ளவராயிருக்கிறார். விசுவாசத்தோடு பரலோகத்தை—ஒளியை யும், வல்லமையையும் உடைய கர்த்தரையே நோக்குங்கள். (27)

நாம் ஞானத்தைத் தேடி உலகின் கடையாந்திரம்வரை செல்லத் தேவையில்லை; ஏனெனில், தேவன் நமது அருகாமையில்

இருக்கிறார். இப்பொழுது உங்களிடம் இருக்கின்ற திறமைகளோ அல்லது இனி அடையப்போகின்றவைகளோ உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத்தரமுடியாது.தேவன் உங்களுக்காக செய்வதுவே வெற்றி. மனிதன் செய்யக்கூடியவைகளில் மிகக்குறைந்த நம்பிக்கையும் தேவன் தம்மை நம்பும் ஆத்துமாவிற்குச் செய்யக்கூடியவைகளில் அதிகமான நம்பிக்கையும் வைக்கவேண்டும். விசுவாசத்தின்மூலமாக நீங்கள் அவரை நெருங்க வேண்டுமென்று அவர் ஆவலோடிருக்கிறார். அவரிடமிருந்து பெரிய காரியங்களை நீங்கள் எதிர்பார்க்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். இம்மைக்குரிய மற்றும் ஆவிக்குரிய காரியங்களுக்குச் சரியான விளக்கத்தை உங்களுக்குக் கொடுப்பதற்கு அவர் ஆவலோடிருக்கிறார். மனிதனுடைய அறிவாற்றலை அவரால் கூர்மைப்படுத்தமுடியும். திறனையும் சாமர்த்தியத்தையும் அவரால் வழங்கமுடியும். உங்கள் தாலந்துகளைச் செயல்படுத்தி, தேவனிடத்தில் ஞானத்தைக் கேளுங்கள்; அப்பொழுது அவர் அதை உங்களுக்குத் தருவார். (28)

கிறிஸ்துவின் வார்த்தையை நீங்கள் வாக்குறுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். தம்மிடத்தில் வருமாறு அவர் உங்களை அழைக்கவில்லையா? நம்பிக்கையற்ற முற்றும் அதைரியமுள்ள வார்த்தைகளை நீங்கள் ஒருபோதும் பேசுதல் கூடாது. அப்படி நீங்கள் செய்வீர்களானால், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை இழந்துபோவீர்கள். துன்பங்களும் நெருக்கடிகளும் வரும் போது, அவைகளின் தோற்றங்களைப் பார்த்து ஒரு நலிந்த—பெலவீனமான விசுவாசத்திற்கான ஆதாரத்தைக் காட்டிவிடுகிறீர்கள். உங்களுடைய விசுவாசம் வெல்லமுடியாததென்பதைப்போன்று பேசுங்கள், செயலில் இறங்குங்கள். நமது ஆண்டவர் வாய்ப்பு வழங்கலில் ஐசுவரியமானவர். இந்த உலகமே அவருக்குச் சொந்தமானது. விசுவாசத்துடன் பரலோகத்தை நோக்கிப்பாருங்கள். ஒளியும் வல்லமையும் நிறைவேற்றும் ஆற்றலும் உடைய அவரையே நோக்கிப்பாருங்கள். (29)

உண்மையான விசுவாசத்தில் ஒரு உற்சாகமும் கொள்கையுறுதியும், நோக்கத்தில் நிலையான இயல்பும் காணப்படும். நேரமோ அல்லது கடின உழைப்போ அதை பெலவீனப்படுத்த முடியாது. “இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்”—ஏசாயா 40:30,31. (30)

பிறருக்கு உதவிசெய்வதற்கு அநேகர் வாஞ்சையுள்ளவர்களாக இருக்கிறார்கள்; ஆனால், வழங்குவதற்கு தங்களிடம் ஆவிக்குரிய பெலமோ ஒளியோ இல்லை என்று நினைக்கின்றார்கள். கிருபாசனத்திற்கு நேராக அவர்கள் விண்ணப்பங்களை ஏறெடுக்கட்டும். பரிசுத்த ஆவியானவர் தங்களை ஆட்கொள்வதற்காக மன்றாடட்டும். தேவன் தாம் கொடுத்திருக்கும் ஒவ்வொரு வாக்குத்தத்தத்திற்கும்பின்னாக நின்றுகொண்டிருக்கிறார். உங்கள் வேதாகமத்தை கையில் எடுத்துக்கொண்டு, தேவனே, நீர் சொல்லியதை நான் செய்துவிட்டேன்: "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப் படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" (லூக்கா 11:9) என்ற உமது வாக்குத்தத் தத்தை நான் உமக்கு முன்பாக வைக்கிறேன் என்று சொல்லுங்கள்.(31)

நாம் கிறிஸ்துவின் நாமத்தினால்மாத்திரம் ஜெபிக்காமல், பரிசுத்த ஆவியானவரின் துணையுடனும் ஏவுதலுடனும் ஜெபிப்பது மிகவும் அவசியம்; ஆகவேதான் ரோமர் 8:26: "நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" என்கிறது. இத்தகைய ஜெபங்களுக்கு தேவன் பதில் கொடுக்க மிகவும் விரும்புகிறார். நாம் ஆவலுடன் கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கும்போது, அந்த ஆவல் தேவனிடமிருந்து நமது ஜெபத்திற்குப் பதிலைக் கொண்டுவரும். "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்" நமக்குச் செய்ய அவர் ஆயத்தமாக இருக்கிறார்; எனவே, அதே தீவிர முனைப்போடு நமது ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுக்கப்போகிறாரென்ற வாக்குறுதியும் அதில் இருக்கிறது (எபேசியர் 3:20). (32)

"ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது, எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசி யுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்" (மாற்கு 11:24) என்று கிறிஸ்து கூறியிருக்கிறார். "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன்"– யோவான் 14:13. பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டவராக அன்புள்ள சீடனாகிய யோவான் மிகத் தெளிவாகவும் நிச்சயத்தோடும் எழுதுவது: "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்"–1 யோவான் 5:14,15. உங்கள்

விண்ணப்பத்தை இயேசுவின் நாமத்தில் பிதாவினிடத்தில் தெரியப்படுத்துங்கள். தேவன் அந்த நாமத்தைக் கனப்படுத்துவார். (33)

சிங்காசனத்தைச் சுற்றியுள்ள வானவில் தேவன் உண்மையுள்ளவரா யிருக்கிறாரென்பதையும், அவரிடத்தில் பட்சபாதமோ அல்லது ஒரு மாற்றத்தின் நிழலோ இல்லை என்பதையும் நிச்சயப்படுத்துகிறது. நாம் அவருக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, அவருடைய தயவைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்களாக இருக்கிறோம். இருப்பினும், அவரே நாம் விண்ணப்பிக்கவேண்டிய ஜெபத்தை நமக்குக் கற்றுத்தந்திருக்கிறார். “உம்முடைய நாமத்தினிமித்தம் எங்களை அருவருக்காதிரும், உமது மகிமையின் சிங்காசனத்தைக் கனவீனப்படுத்தாதேயும்; எங்களோடே உமக்கு இருக்கிற உடன்படிக்கை அபத்தமாகாதபடி எங்களை நினைத்தருளும்” (எரேமியா 14:21) என்ற அதிசயமான கெஞ்சுதல்களை அவர்தாமே நமது நாவில் வைக்கிறார். நம்முடைய பாவத்தையும் அபாத்திர நிலையையும் அவரண்டை வந்து அறிக்கை செய்யும்போது, அவர் நம்முடைய கூக்குரலிற்குச் செவிசாய்ப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அவரது வார்த்தையை நம்மில் நிறைவேற்றத்தக்கதாக, அவரது சிங்காசனத்தின் மேன்மையானது, போராடி நாட்ட வேண்டிய நிலையில் உள்ளது. (34)

கிறிஸ்துவிற்கு அடையாளமாகத் திகழ்ந்த ஆரோனைப்போல, நம்முடைய இரட்சகரும் தம்முடைய மக்களுடைய பெயர்களை பரிசுத்த ஸ்தலத்திலே தமது இதயத்தில் சுமந்து நிற்கிறார். நமது மகா பிரதான ஆசாரியர், நாம் அவரில் உறுதியாக நம்பிக்கை வைக்கவேண்டுமென்று நம்மை உற்சாகப்படுத்திய அவரது அனைத்து வார்த்தைகளையும், தமது உடன்படிக்கையையும் எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கிறார். (35)

அவரைத் தேடுகிற அனைவரும் அவரைக் கண்டடைவார்கள். தட்டுகிற அனைவருக்கும் கதவு திறக்கப்படும். என்னைத் தொந்தரவு செய்யாதீர் களென்றோ, கதவு பூட்டப்பட்டுள்ளதென்றோ, எனக்குத் திறப்பதற்கு விருப்ப மில்லையென்றோ அவர் ஒருபோதும் கூறமாட்டார். உனக்கு என்னால் உதவமுடியாதென்று அவர் ஒருவரிடமும் ஒருபோதும் கூறமாட்டார். பசியுள்ள ஆத்துமாக்களைத் திருப்திப்படுத்துவதற்காக, நள்ளிரவில் வந்து அவரிடம் அப்பங்களைக் கேட்டாலும் அவர்கள் பெற்றுக்கொள்வார்கள். (36)

உவமையிலே முன்பின் தெரியாத நபருக்காக அண்டை வீட்டுக் காரன் வந்து அப்பம் கேட்கும்போது, “அவன் தேவையானதைப் பெற்றுக் கொண்டான்.” நாம் மற்றவர்களுக்கு வழங்கும்படியாக தேவன் எந்த

அளவின்படி நமக்கு வழங்குவார்? “கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத் தக்கதாக” (எபேசியர் 4:7) அவர் நமக்குக் கொடுக்கிறார். மனிதன் தன் சக மனிதர்களோடு எவ்விதம் நடந்துகொள்கிறான் என்பதை தூதர்கள் ஆவலுடன் நோக்கிப் பார்க்கிறார்கள். தவறு இழைப்பவர்கள்மீது ஒரு மனிதன் கிறிஸ்து காட்டிய பரிவைக் காட்டும்போது, அவர்கள் அவனிடமாக சமீபித்து, ஆத்துமாவிற்கு ஜீவஅப்பமாக விளங்கக்கூடிய வார்த்தைகளை அவனுடைய ஞாபகத்திற்குக் கொண்டுவருகின்றனர். இவ்விதமாக, “என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்”–பிலிப்பியர் 4:19. உங்களுடைய உண்மையான மெய்யான சாட்சியின் ஜீவியத்தை அவர் வரப்போகும் வாழ்வின் வல்லமையால் வலிமையுடையதாக்குவார். கர்த்தருடைய வார்த்தைகள் உங்கள் வாயிலிருந்து சத்தியத்தின் வார்த்தைகளாக—நீதியின் வார்த்தைகளாகப் புறப்பட்டுவரும். (37)

பிறருடைய இரட்சிப்பிற்காக நாம் முயற்சிகளை மேற்கொள்ளும் முன்பாக, அதிகமான நேரத்தை நாம் அந்தரங்க ஜெபத்தில் செலவிட வேண்டும்; ஆத்துமாக்களை ஆதாயம்செய்யும் அறிவியலை புரிந்துகொள்வ தற்கு முன்பாக கிறிஸ்துவோடு தொடர்புகொள்ளுங்கள். மக்களுக்கு ஊழியம் செய்வதற்காக பரலோகத்தின் கிருபாசனத்தண்டையில் ஒரு ஆயத்தத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். (38)

ஜீவனுள்ள தேவன்பேரில் உங்களுக்கிருக்கும் வாஞ்சையினால் உங்கள் இதயம் உடையட்டும். தெய்வீக சுபாவத்தில் மனுக்குலம் பங்கெடுக்கும்போது, எதைச்செய்ய இயலும் என்பதை கிறிஸ்துவின் ஜீவியம் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறது. கிறிஸ்து தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட அனைத்தையும் நாமும் பெற்றுக்கொள்ளலாம்; ஆகவே, கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள். யாக்கோபுவிற்கு இருந்த விடாமுயற்சியான விசுவாசத்தோடும், எலியாவின் விட்டுக்கொடுக்காத தன்மையோடும், தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கும் யாவையும் உங்களுக்காகப் பெற்றுக்கொள்ளுங்கள். (39)

தேவனைக்குறித்த மகிமையான கருத்துக்கள் உங்கள் மனதை ஆட்கொள்ளட்டும். உங்களுடைய ஜீவியம் இயேசுவோடு இணைக்கப் பட்டிருக்கட்டும். இயேசு கிறிஸ்துவின் முகத்தின் தேவமகிமையின் அறிவின் ஒளியைக் கொடுப்பதற்காக, இருளிலிருந்து ஒளியை பிரகாசிக்கக் கட்டளை யிட்ட தேவன் உங்கள் இதயத்தில் பிரகாசிக்க விருப்பத்தோடிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் தேவனுக்கடுத்த காரியங்களை எடுத்து, அவை

கீழ்ப்படிகிறவர்களின் இதயங்களில் எவ்விதமாக உயிரோட்டமுள்ள வல்லமையாக மாறுகிறது என்பதை விளக்கிக் காண்பிப்பார். எல்லையற்ற தேவனுடைய சமூகத்திற்கு கிறிஸ்து உங்களை வழிநடத்துவார். திரைக்குப்பின் இருக்கும் தேவ மகிமையை நீங்கள் காண்பீர்கள்; அப்பொழுது, அவர் போதுமானவராக இருக்கிறார் என்பதையும், நமக்காக பரிந்துபேசும்படியாக அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார் என்பதையும் மக்களுக்கு வெளிப்படுத்துங்கள். (40) ★

# 13

# இரண்டு தொழுகையாளர்கள்!

**(மூலநூல் : பக்கங்கள் 150–163)**

**லூக்கா 18:9–14**

“தங்களை நீதிமான்களென்று எண்ணி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து” கிறிஸ்து பரிசேயன்—ஆயக்காரனைக்குறித்த ஒரு உவமையைச் சொன்னார். தன்னை பாவியென்று கருதி பாவமன்னிப்பைப் பெறும்படி ஆலயத்திற்குச் செல்லாமல், தன்னை நீதிமானாக எண்ணி, தேவனிடமிருந்து பாராட்டுதலைப் பெறும் நோக்கத்தோடு பரிசேயன் ஆலயத்திற்குச் செல்கிறான். தனக்காக தேவனிடம் பரிந்துரை செய்யும் தகுதியாக தன்னுடைய தொழுகையை அவன் எண்ணினான். கூடவே தனது பயபக்தியைப்பற்றி ஒரு சிறந்த எண்ணத்தை மக்களுக்குக் கொடுக்குமென்றும் எண்ணினான். அவன் தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் தயவைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நம்புகிறான். அவனுடைய தொழுகை சுயத்தின்மீதுகொண்ட ஆர்வத்தினால் தூண்டப்பட்டதாகும். (1)

அவன் தன்னைப் புகழ்ந்துகொண்டிருந்தான். அவனுடைய பார்வையிலும், நடையிலும், ஜெபத்திலும் முற்றிலும் அதுவே காணப்பட்டது. “நீ உன்மட்டிலிரு, என் சமீபத்தில் வராதே, உன்னைப்பார்க்கிலும் நான் பரிசுத்தன்” (ஏசாயா 65:5) என்று தனக்குள் கூறிக்கொண்டதைப்போல, அவன் மற்றவர்களைவிட்டு விலகி, தனியே நின்று, “தனக்குள்ளே” ஜெபித்தான். தேவனும் மற்ற மனிதர்களும் தன்னை இவ்வாறாகவே கருதுவதாக அவன் எண்ணி, தனக்குள்ளாக மகிழ்ச்சிகொண்டான். (2)

“தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்” என்றான். அவன் தேவனுடைய பரிசுத்த குணத்தை வைத்து தனது குணத்தை மதிப்பீடுசெய்யாமல், மற்ற மனிதர்களின் குணத்தைவைத்து தன்னை மதிப்பிட்டான். அவனுடைய எண்ணங்கள்

தேவனைப்பற்றியதாக இராமல், மனிதனைப்பற்றியே சிந்திக்கத் திரும்பியது. இதுவே, அவனுடைய சுயதிருப்தியின் இரகசியமாயிருந்தது. (3)

"வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்தி லெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன்" என்று அவன் தன்னுடைய நற்செயல்களைப் பட்டியலிடுகிறான். பரிசேயனுடைய மார்க்கம் ஆத்துமாவைத் தொடுகிறதில்லை. தேவ அன்பும், இரக்கமும் நிறைந்த இதயத்தோடு தேவனுடைய குணத்தை அவன் நாடவில்லை. வெளிப்பிரகாரமான ஜீவியத்தில் காணப்படுகிற ஒரு மார்க்கத்தோடு அவன் திருப்திகொள்கிறான். தனது சொந்தக் கிரியைகளினால் வரும் பலன்களே அவனது சொந்த நீதியாகும். அவன் மனித அளவுகோலைவைத்துத் தன்னை அளவிடுகிறான். (4)

தன்னை நீதிமானாகக் கருதுகிற எவனும் மற்றவர்களை அற்பமாக எண்ணுவான். பரிசேயன் மற்றவர்களைவைத்து தன்னை அளவிடுவதுபோல, தன்னைவைத்து மற்றவர்களை அளவிடுகிறான். மற்றவர்களுடைய நீதியை வைத்து அவனுடைய நீதி மதிப்பிடப்படுகிறது. மற்றவர்கள் எவ்வளவு மோசமானவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவு நீதிமானாக இவன் காணப்படுகிறான். அவன் சுயநீதி மற்றவர்களை குற்றப்படுத்த அவனை நடத்துகிறது. மற்றவர்களை தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறவர்களென்று கண்டனஞ்செய்கிறான். இவ்வாறாக, சகோதரரைக் குற்றப்படுத்துகிற சாத்தானின் குணத்தை அப்படியே வெளிப்படுத்துகிறான். இந்த ஆவியுடன் தேவனோடு தொடர்புகொள்ள அவனுக்கு முடியாது. தேவனுடைய ஆசீர்வாதம் இல்லாதவனாக அவன் வீட்டுக்குத் திரும்புகிறான். (5)

மற்றவர்களுடன் சேர்ந்து தேவனைத் தொழுதுகொள்ள தேவாலயம் நோக்கிச் சென்றான் ஆயக்காரன்; ஆயினும், தன்னுடைய தகுதியின்மையை உணர்ந்தவனாக கூட்டத்தினரைவிட்டு தனித்து நிற்கிறான். மனக்கசப்போடு கடுந்துயர்கொண்டு, தன்னையே அருவருத்தவனாக, தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்திற்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டான். அவன் தான் பாவி என்பதையும், தேவனுடைய பிரமாணங்களை மீறியிருப்பதையும் உணர்ந்தான். அவனைச் சுற்றிலுமிருந்த மக்கள் அவன்மீது பரிவுகாட்டுவதற்குப்பதிலாக, அவனை இகழ்ச்சியுடன் பார்த்தனர். தேவனிடத்திலே செல்வதற்கு தன்னிடத்திலே எந்தத் தகுதியும் இல்லையென்பதை புரிந்துகொண்டவுடன், முற்றிலும் நம்பிக்கையற்றவனாக, "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று கதறினான். அவன் தன்னை மற்றவர்களோடு ஒப்பிடவில்லை. குற்ற உணர்வு மேற்கொள்ள அவன் தனிமையில் நின்று, தேவபிரசன்னத்தில் தனித்து நிற்பதுபோல் காணப்பட்டான். அவனுடைய ஒரே வாஞ்சை பாவமன்னிப்பையும்

சமாதானத்தையும் பெறுவதாக இருந்தது. தேவனுடைய இரக்கத்தைப் பெறுவதே அவனுடைய ஒரே விண்ணப்பமாயிருந்தது. அவன் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டான். "அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான்" என்று இயேசு கூறினார். (6)

பரிசேயனும், ஆயக்காரனும் தேவனைத் தொழுதுகொள்ள வருகின்ற இவ்வுலகில் உள்ள இருபெரும் வகுப்பை எடுத்துக்காட்டுகிறார்கள். அவர்களது முதல் இரண்டு பிரதிநிதிகளும் இந்த உலகில் பிறந்த முதல் இரண்டு குழந்தைகளிலே காணப்படுகிறார்கள். காயீன் தன்னைத்தானே நீதிமானாகக் கருதி, ஸ்தோத்திர காணிக்கையோடுமாத்திரம் தேவசமூகத்திற்கு வந்தான். அவன் பாவ அறிக்கைசெய்யவில்லை; தேவ இரக்கம் தனக்குத் தேவையென்பதை உணரவுமில்லை; ஆனால், ஆபேல் தேவ ஆட்டுக்குட்டியைச் சுட்டிக்காட்டிய இரத்தத்தைக் கொண்டுவந்தான். அவன் தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டவனாக தேவ சமூகத்திற்கு வந்தான். அவனுடைய ஒரே நம்பிக்கை தேவனுடைய அன்பாகயிருந்தது. ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை. நாம் பாவிகள், அபாத்திரர் என்பதை அறிக்கைசெய்து, நமது தேவையை நாம் உணருதலே தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முதல் நிபந்தனையாகும். "ஆவியிலே எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக இராஜ்யம் அவர்களுடையது"—மத்தேயு 5:3. (7)

பரிசேயனாலும் ஆயக்காரனாலும் எடுத்துக்காட்டப்படுகிற இரு பிரிவினருக்கும் அப்போஸ்தலனாகிய பேதுருவின் வாழ்க்கைச் சரித்திரத்திலிருந்து அருமையான பாடமொன்று இருக்கிறது. அவர் தமது ஆரம்ப சீடத்துவ நாட்களில் தன்னை ஒரு பலசாலியாகக் கருதினார். அவர் பரிசேயனைப்போல் தன்னைக்குறித்து, தான் மற்ற மனிதர்களைப்போல இல்லை என்ற உயர்வான எண்ணங்கொண்டிருந்தார். தாம் காட்டிக்கொடுக்கப்படுவதைக் குறித்து கிறிஸ்து தமது சீடர்களை முன்னெச்சரித்து, "இந்த இராத்திரியிலே நீங்களெல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்" என்று கூறினபோது, பேதுரு மிகவும் நம்பிக்கையோடு, "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன்" (மாற்கு 14:27–29) என்றான். பேதுரு தனக்கு இருந்த ஆபத்தை அறியவில்லை. சுயத்தின்மீது வைத்த நம்பிக்கை அவனை வழிவிலகச் செய்தது. சோதனையை எதிர்த்துநிற்க தன்னால் முடியுமென்று நினைத்தான்; ஆனால், சிலமணி நேரங்களில் சோதனை வந்தபோது, சபித்தும் சத்தியம்பண்ணியும் கர்த்தரை மறுதலித்தான். (8)

சேவல் கூவியபோது, கிறிஸ்துவின் வார்த்தைகள் அவன் நினைவிற்கு வந்தது. தான் செய்ததைக்குறித்து அதிர்ச்சியுற்றவனாக, தான் செய்த காரியத்தினிமித்தம் திரும்பி தனது எஜமானரை நோக்கிப் பார்த்தான். அதே சமயத்தில், கிறிஸ்துவும் பேதுருவை நோக்கிப்பார்த்தார். அந்த வேதனை நிறைந்த பார்வையில் இரட்சகர் அவனுக்காகக்கொண்ட பரிவும் அன்பும் கலந்திருந்தது. பேதுரு தனது தவறை உணர்ந்தான். வெளியே சென்று மனங்கசந்து அழுதான். கிறிஸ்துவின் பார்வை அவனுடைய இதயத்தை உடைத்தது. பேதுரு தன்னுடைய பாவத்திற்காக மனந்திரும்பி, மனங்கசந்து அழுதபோது, அவனுடைய வாழ்வில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. ஆயக்காரனைப்போல் மெய்யாகவே குற்றத்தை உணர்ந்து மனந்திரும்பியதால் இரக்கம் பெற்றான். கிறிஸ்துவின் பார்வை பேதுருவிற்கு மன்னிப்பின் நிச்சயத்தைக் கொடுத்தது. சுயத்தின்மீது அவனுக்கிருந்த நம்பிக்கை இப்போது போய்விட்டது. இந்த நிகழ்ச்சிக்குப்பின்பு அவன் ஒருபோதும் பழைய தற்புகழ்ச்சியின் வார்த்தைகளை உச்சரிக்கவில்லை. (9)

தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் மூன்றுமுறை கிறிஸ்து பேதுருவைச் சோதித்தார். “யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா” (யோவான் 21:15) என்றார். அப்பொழுது அவன் தன் சகோதரர்களைவிட தன்னை உயர்த்திக்காட்டவில்லை. பேதுரு தன்னுடைய இதயத்தின் சிந்தனைகளை அறிகிற கிறிஸ்துவைப் பார்த்து: “ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்” (யோவான் 21:15,17) என்றான். (10)

அதன்பிறகு, பேதுரு தனக்கான ஊழியப்பொறுப்பை இயேசுவிடம் பெற்றுக்கொண்டான். இதுவரை கொடுத்திராத ஒரு நேர்த்தியான—மிகவும் விரிவான பணியைச் செய்யுமாறு இயேசு அவனை நியமித்தார். ஆத்துமாக்களை மீட்கும் உக்கிராணத்துவ ஊழியத்தை பேதுருவிடம் ஒப்படைத்தார். தம்முடைய ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் மேய்க்குமாறு கிறிஸ்து அவனுக்கு கட்டளை கொடுத்தார். இவ்வாறு இரட்சகர் எந்த ஆத்துமாக்களுக்காக உயிரைக் கொடுத்தாரோ அந்த உக்கிராணத்துவ ஊழியத்தை அவனிடம் ஒப்படைத்ததின்மூலமாக, கிறிஸ்து அவனிடம் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு உரிய பலமான சான்றினை பேதுருவிடம் கொடுத்தார். ஒரு காலத்தில் தன்னம்பிக்கை உடையவராக—துடுதுடுப்பாக—பெருமைபாராட்டுகிற சீடன், இப்பொழுது தாழ்மையுள்ளவராக—நொறுங்குண்ட இதயம் உள்ளவராக மாறிவிட்டார். அதற்குப் பின்னர், அவர் சுயத்தை வெறுத்திட்டவராக, சுயத்தைத் தியாகஞ்செய்தவராக கர்த்தரைப் பின்தொடர்ந்தார். கிறிஸ்துவின்

பாடுகளிலே அவர் ஒரு பங்காளியாக இருந்தார். கிறிஸ்து தமது மகிமையான சிங்காசனத்தில் அமரும்போது, பேதுருவும் அவரது மகிமையில் ஒரு பங்காளியாக இருப்பார். (11)

பேதுருவை விழுகைக்கு நடத்திச் சென்றதும், தேவனோடு தொடர்பு கொள்ளக்கூடாதபடி பரிசேயனை அடைத்துப்போட்டதுமான அந்தத் தீமையே இன்றும் ஆயிரக்கணக்கானோர்களின் அழிவிற்குக் காரணமாக இருக்கிறது. பெருமை மற்றும் சுயத்தின்மீது நம்பிக்கை வைத்தல் ஆகிய குணங்களைப் போன்று தேவனுக்கு மிகவும் அருவருப்பானதும் அல்லது மானிட ஆத்துமா விற்கு ஆபத்தைக் கொண்டுவரக்கூடியதுமான காரியம் வேறெதுவுமில்லை. அனைத்துப் பாவங்களையும்விட, இதுவே மிகவும் நம்பிக்கையற்றதும் திருத்தவே முடியாததுமாகும். (12)

பேதுருவின் விழுகை சடுதியாக ஏற்பட்டதல்ல. மெல்லமெல்ல ஏற்பட்ட ஒன்றாகும். சுயத்தின்மீது அவனுக்கிருந்த மட்டற்ற நம்பிக்கைதான் இரட்சிக்கப்பட்டுவிட்டோமென்ற நம்பிக்கைக்கு அவனைக் கொண்டுசென்று, தனது எஜமானரை மறுதலிக்கும் அளவிற்கு அவனைப் படிப்படியாக கீழ்நோக்கிச் செல்லும் பாதையில் அழைத்துச் சென்றது. சுயத்தின்மீது நம்பிக்கை வைத்தோ அல்லது இந்த உலகத்திலே சோதனைக்கு எதிராக பத்திரமாக இருக்கிறோமென்றோ நாம் ஒருபோதும் இருக்க முடியாது. இரட்சகரை ஏற்றுக்கொள்ளுகிறவர்களின் மனந்திரும்புதல் எவ்வளவு உண்மையானதாக இருந்தபோதிலும், தாங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டோமென்று சொல்வதற்கோ அல்லது எண்ணுவதற்கோ அவர்களுக்கு ஒருபோதும் கற்றுக்கொடுக்கக்கூடாது. அது தவறாக வழிநடத்துகிறது. மனதில் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் பேணிவளர்க்க வேண்டுமென்று ஒவ்வொருவருக்கும் கற்றுக்கொடுக்கவேண்டும். கிறிஸ்துவிற்கு நம்மை ஒப்புக்கொடுத்தபோதிலும், நாம் சோதனைக்கு அப்பாற்பட்ட நிலையில் வைக்கப்படவில்லை. "அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப் பட்டவர்களாய் விளங்குவார்கள்"–தானியேல் 12:10; "சோதனையைச் சகிக்கிறவன் ஜீவ கிரீடத்தைப் பெறுவான்" (யாக்கோபு 1:12) என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. (13)

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தங்களது முதல் நம்பிக்கையிலேயே "நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன்" என்று சொல்பவர்கள், தங்கள்மீது உறுதியான நம்பிக்கைவைக்கும் ஆபத்தில் இருக்கிறார்கள். அவர்கள் தங்களது சொந்த பெலவீனத்தை மறந்து, தங்களுக்குத் தொடர்ச்சியாக தெய்வீக பலம் தேவை என்பதைக் காணத் தவறுகிறார்கள். சாத்தானுடைய உபாயங்களுக்கு ஆயத்தமில்லாமல், சோதனை வரும்போது, பேதுருவைப்

போல் பாவத்தின் ஆழங்களிலே விழுந்துவிடுகிறார்கள். "தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" (1 கொரி. 10:12) என்று நாம் எச்சரிக்கப்படுகிறோம். நமது சுயத்தின்மீது இருக்கும் நம்பிக்கையை அகற்றிவிட்டு, கிறிஸ்துவில் சார்ந்து ஜீவிப்பதே நமக்கிருக்கும் ஒரே பாதுகாப்பு என்பதை விளங்கிக்கொள்ளவேண்டும். (14)

பேதுரு, தனது சொந்தக் குணத்தின் குறைகளையும், கிறிஸ்துவின் வல்லமையும், கிருபையும் தனக்கு அவசியம் என்பதையும் அறிந்துகொள்ள வேண்டியதிருந்தது. சோதனையில் இருந்து பேதுருவைக் காப்பதற்கு கர்த்தரால் இயலவில்லை என்றபோதிலும், அவனுடைய தோல்வியினின்று அவனைக் காப்பாற்றியிருக்கமுடியும். கிறிஸ்துவின் எச்சரிப்பை ஏற்க அவன் விருப்பத்தோடு இருந்திருப்பானானால், தன்னுடைய கால் இடறாதபடிக்கு அவன் விழிப்போடு ஜெபித்திருந்திருப்பான். அவனுடைய பாதங்கள் இடறாதபடிக்கு பயத்தோடும் நடுக்கத்தோடும் நடந்திருப்பான். சாத்தான் தன்னை மேற்கொள்ளாதவாறு தெய்வீக உதவியைப் பெற்றிருப்பான். (15)

சுயத்தின்மீது மட்டற்ற நம்பிக்கை வைத்ததினால் பேதுரு விழுந்தான். மனந்திரும்புதல் நிமித்தமாகவும் தாழ்மையின் நிமித்தமாகவும் பேதுருவின் கால்கள் மீண்டும் நிலைப்படுத்தப்பட்டன. அவனுடைய அனுபவத்தைப்பற்றிய குறிப்புகளிலிருந்து மனம் திரும்புகிற ஒவ்வொரு பாவியும் தைரியத்தைப் பெற்றுக்கொள்ளலாம். வருந்தத்தக்க பாவத்தை பேதுரு செய்தபோதிலும், அவன் கைவிடப்படவில்லை. "நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்" (லூக்கா 22:32) என்ற கிறிஸ்துவின் வார்த்தைகள் அவனுடைய ஆத்துமாவில் எழுதப்பட்டிருந்தது. அவன் உள்ளத்தின் வேதனையோடும், பாவத்தின் கடுந்துயரிலும் இருந்தபோது, கிறிஸ்துவின் அன்பும் இரக்கமும் கலந்த அவரது பார்வையைப்பற்றிய நினைவு அவனுக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. கிறிஸ்து தாம் உயிர்த்தெழுந்தபின்பு பேதுருவை நினைவுகூர்ந்து, தூதன்மூலமாக ஸ்திரீகளிடத்தில்: "நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய்: உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார், அவர் உங்களுக்குச் சொன்னபடியே அங்கே அவரைக் காண்பீர்கள்" (மாற்கு 16:7) என்று கூறினார். பேதுருவின் மனந்திரும்புதல் பாவத்தை மன்னிக்கும் இரட்சகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (16)

பேதுருவைக் காப்பாற்றத்தக்கதாக காட்டப்பட்ட அதே மனதுருக்கம் பாவத்திற்கடியில் வீழ்ந்துகிடக்கும் ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் காட்டப்படுகிறது. மனிதனை பாவத்தில் விழச்செய்து, பிற்பாடு மன்னிப்பைப் பெறுவதற்கு பயப்படவும், நடுங்கவும் வைத்து, அவனை உதவியற்ற

நிலையிலேயே விட்டுவிடுவது, சாத்தானின் மிகத் தந்திரமான சூழ்ச்சியாகும். "அவன் என் பெலனைப் பற்றிக்கொண்டு என்னோடே ஒப்புரவாகட்டும், அவன் என்னோடே ஒப்புரவாவான்" (ஏசாயா 27:5) என்று தேவன் கூறியிருக்கிறபடியால், நாம் பயம்கொள்ள அவசியமில்லை. நம்முடைய பெலவீனங்கள் அனைத்தையும் சரிசெய்ய தேவன் போதிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். கிறிஸ்துவிடம் வருவதற்காக அனைத்து ஊக்கமும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. (17)

தேவனுடைய சம்பத்தைத் திரும்பப் பெறும்படியாகவும், மனிதனுக்கு மேலும் ஒரு தருணத்தைக் கொடுக்கும்படியாகவும் கிறிஸ்து தம்முடைய சரீரத்தை பிய்க்கப்பட ஒப்புக்கொடுத்தார். "மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்"—எபிரெயர் 7:25. தமது கறையற்ற ஜீவியத்தாலும், கீழ்ப்படிதலினாலும், கல்வாரி மரணத்தினாலும் கிறிஸ்து தொலைந்துபோன மனுக்குலத்திற்காகப் பரிந்துபேசினார். இப்பொழுது நமது இரட்சிப்பின் தளபதியானவர் வெறும் விண்ணப்பதாரராகமட்டும் பரிந்துபேசாமல், வெற்றிபெற்றவராக, தாம் பெற்ற வெற்றியை உரிமைகோரி பரிந்துபேசுகிறார். அவரது தியாகபலி முழுமையானது. இப்பொழுது நமக்காகப் பரிந்துபேசுபவராக தாமே நியமித்துக்கொண்ட வேலையில், தமது சொந்த கரையற்ற புண்ணியங்களோடு, ஜனங்களின் ஜெபங்களையும், பாவஅறிக்கைகளையும் நன்றிகூறல்களையும் சேர்த்த தூபகலசத்தை தேவனுக்குமுன்பாக பிடித்துக்கொண்டிருக்கிறார். அவரது நீதியின் சுகந்தத்தினால் அவைகள் நறுமணமூட்டப்பெற்று, இனிய தூபமாக தேவனிடத்திற்கு மேலெழுகிறது. இந்தக் காணிக்கை முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எல்லா மீறுதல்களையும் மன்னிப்பு மூடுகிறது. (18)

தம்மைத்தாமே நமக்குப் பதிலாளியாகவும், பிணையாளராகவும் கிறிஸ்து அர்ப்பணித்திருக்கிறார். அவர் எவரையும் புறக்கணிப்பதில்லை. மனிதன் நித்திய அழிவைச் சந்திப்பதை விரும்பாத தேவன், தமது ஒரே பேறான குமாரன் தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றுவதற்குச் சம்மதித்தார். ஆகவே, தமது இயலாமையை உணர்ந்து, அவர் சமூகத்தை நாடும் ஒவ்வொருவரையும் அவர் கருணையுடன் நோக்குகிறார். (19)

தம்மிடம் கெஞ்சிவேண்டி நடுங்கிநிற்கும் ஒவ்வொருவரையும் அவர் தூக்கிவிடுகிறார். அவர் தமது சொந்த பாவநிவாரணத்தின்மூலமாக எல்லை யற்ற ஒழுக்க வல்லமையின் சேமநிதியை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். எனவே நமக்காக தமது வல்லமையை வழங்கத் தவறமாட்டார். அவர்

நம்மை நேசிக்கிறபடியால், நமது பாவங்களையும் துக்கங்களையும் நாம் அவர் பாதத்தண்டை எடுத்துச் செல்லலாம். அவருடைய ஒவ்வொரு பார்வையும் வார்த்தையும் நமக்கு நம்பிக்கையைக் கொண்டுவரும். அவர் தமது சொந்த சித்தத்திற்கு ஏற்றபடி நமது குணங்களை வடிவமைத்து வனைகிறார். (20)

எளிய விசுவாசத்தோடு கிறிஸ்துவின்மீது சார்ந்திருக்கும் எந்த ஒரு ஆத்துமாவையும் அனைத்து சாத்தானிய வல்லமையாலும் மேற்கொள்ள முடியாது. "சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவ மில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்"—ஏசா. 40:29. (21)

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்"—1 யோவான் 1:9. "உன் அக்கிரமத்தையும், என் சத்தத்துக்குச் செவிகொடாமற்போனதையும் ஒத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்"—எரேமியா 3:13. "அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள்"—எசேக்கியேல் 36:25. (22)

நாம் மன்னிப்பையும் சமாதானத்தையும் கண்டடையுமுன்னர், நம்மைப்பற்றி ஒரு அறிவு நமக்கிருக்கவேண்டும். அதாவது, நமது பாவத்தை நினைத்து வருந்துவதே அந்த அறிவின் பயனாக இருக்கவேண்டும். பரிசேயனிடம் பாவத்தைக்குறித்த குற்ற உணர்வு இல்லை. பரிசுத்த ஆவியானவர் அவனில் கிரியைசெய்ய முடியவில்லை. அவனது ஆத்துமா சுயநீதியென்னும் கவசத்தில் அடைக்கப்பட்டிருந்தது. தூதர்களின் கரங்களால் சரியாகக் குறிபார்த்து எய்யப்படும் தேவனுடைய கூர்மையான அம்புகளைக் கொண்டு எய்தாலும், அந்த சுயநீதியாகிய கவசம் ஊடுருவ முடியாத நிலையில் இருந்தது. தன்னை பாவி என்று அறிந்திருக்கிறவனையே கிறிஸ்துவால் இரட்சிக்க முடியும். "இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலை யாக்கவும், என்னை அனுப்பினார்"—லூக்கா 4:18; "சுகமாயிருப்பவர்களுக்கு வைத்தியன் தேவை இல்லை"—லூக்கா 5:31. நம்முடைய உண்மை நிலையை நாம் அறிந்துகொள்ளவேண்டும். இல்லையேல், கிறிஸ்துவின் உதவி நமக்குத் தேவை என்பதை நம்மால் உணர இயலாது. நமது ஆபத்தை நன்றாக நாம் புரிந்துகொள்ளவேண்டும். இல்லாவிடில், அடைக்கலத்தை நோக்கி

நாம் ஓடமுடியாது. நம்முடைய காயங்களின் வலியை நாம் உணர்ந்தால் தான், குணமாகுதலை வாஞ்சிக்க முடியும். (23)

"நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவா னென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிறபடியால்; நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப் பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்" (வெளி. 3:17,18) என்று கர்த்தர் சொல்லுகிறார். நெருப்பிலே புடமிடப்பட்ட பொன் என்பது அன்பின் கிரியைகளால் வெளிப்படுகின்ற விசுவாசமே. அது மாத்திரமே தேவனோடு நாம் இசைவாக இருக்கும்படி கொண்டுவரமுடியும். நாம் சுறுசுறுப்பாக பல கிரியைகளை அன்பின்றிச் செய்யலாம். ஆனால் கிறிஸ்துவின் இதயத்தில் வாசம்செய்யும் அன்பு நமக்கிராவிடில், பரலோகக் குடும்பத்தின் அங்கத்தினர்களாக ஒருபோதும் எண்ணப்படமாட்டோம். (24)

எந்த மனிதனாலும் தன்னுடைய தவறுகளைத் தானே அறிந்து கொள்ளமுடியாது. "எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?"—எரேமியா 17:9. இதயம் அங்கீகரியாத ஆவிக்குரிய வறுமையைக்குறித்து உதடுகள் பேசலாம். ஆவியின் வறுமையைக்குறித்து தேவனிடம் பேசுகையில் இதயமானது தனக்கே உரிய உயர்தரமான தாழ்மையைக்குறித்தும் உயர்த்தப்பட்ட நீதியைக்குறித்தும் பெருமைகொள்ளலாம். சுயத்தைக்குறித்த உண்மையான அறிவை, கிறிஸ்துவை நோக்குவதின்மூலமாக மாத்திரமே பெற்றுக்கொள்ளமுடியும். நாம் கிறிஸ்துவை நோக்கிப் பார்க்கவேண்டும். அவரைக்குறித்த அறியாமையின்நிமித்தமாக தேவமனிதர் தங்கள் சொந்த நீதியிலே தங்களை மேம்பட்டவர்களாக நினைக்கிறார்கள். அவருடைய பரிசுத்தத்தையும் மேன்மையையுங்குறித்து தியானிக்கும்போது, நாம் நமது பெலவீனங்களையும், தரித்திரத்தையும் குறைகளையும் அவைகள் இருக்கின்ற நிலையிலேயே—அப்படியே அறிந்துகொள்வோம். அப்பொழுது மற்ற பாவிகளைப்போல நம்மை நாமே காணாமற்போனவர்களாகவும், நம்பிக்கை இழந்தவர்களாகவும், சுயநீதி என்னும் ஆடையை அணிந்தவர் களாகவும் காண்போம். நாம் இரட்சிக்கப்படுவோமானால், அது நமது சொந்த நற்குணத்தினாலல்ல, தேவனுடைய அளவற்ற கிருபையின்மூலமாகவே என்பதைக் காண்போம். (25)

ஆயக்காரனுடைய ஜெபம் கேட்கப்பட்டதற்குக் காரணம், அவன் சர்வவல்லவரைப் பற்றிக்கொண்டு அவரைச் சார்ந்திருப்பதைக் காட்டினான். ஆயக்காரன் சுயத்தை ஒரு அவமானமாகக் கருதினான். தேவனை நாடும் அனைவரும் சுயத்தை இவ்வண்ணமாகவே நோக்கவேண்டும். விசுவாசத்தின்மூலமாக அதாவது சுயத்தின்மீது கொண்டுள்ள அனைத்து நம்பிக்கையையும் முற்றிலுமாக விட்டுவிடக்கூடிய விசுவாசம் வேண்டும். தேவையில் இருக்கின்ற—கெஞ்சிமன்றாடுகின்ற அந்த நபர், எல்லையற்ற பரம்பொருளின் வல்லமையைப் பற்றிக்கொள்ளவேண்டும். (26)

எளிய விசுவாசம் மற்றும் முற்றிலுமாக சுயத்தை விட்டுவிடுதல் என்பதின் இடத்தை, வெளிப்படையான சடங்காச்சாரங்களை நிறைவேற்று வதின்மூலம் அடைந்துவிட முடியாது. எந்த ஒரு மனிதனும் சொந்த பெலத்தினால் சுயத்தை வெறுத்து வெளியேற்றிவிட முடியாது. கிறிஸ்து அந்த வேலையை நமக்குச்செய்ய நாம் சம்மதிக்கவேண்டும். நமது ஆத்துமாவின் மொழி: “ஆண்டவரே, என் இதயத்தை எடுத்துக்கொள்ளும். ஏனெனில், என்னால் அதைக் கொடுக்கமுடியாது. அது உமக்கே சொந்தமானது. அதைத் தூய்மையாக வைத்துக்கொள்ளும். ஏனெனில், உமக்காக என்னால் அதை தூய்மையாக வைத்துக்கொள்ளமுடியாது. பெலவீனமான—கிறிஸ்துவைப்போன்றில்லாத—சுயத்தையும்தாண்டி என்னை இரட்சியும். எனது ஆத்துமாவின்மூலமாக உமது செழுமையான அன்பு பாய்ந்தோடத்தக்கதாக என்னை வனைந்து வடிவமைத்து, ஒரு தூய்மையான பரிசுத்தமான சூழ்நிலைக்கு உயர்த்தும் என்பதாக இருக்கும். (27)

கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்ப காலத்தில், சுயத்தை வெறுப்பதோடு நின்றுவிடாமல், பரத்திற்கு நேராக நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு முன்னேற்றமான அடியிலும் அதைப் புதுப்பிக்கவேண்டும். நம்முடைய நற் கிரியைகள் அனைத்தும் நமக்கு அப்பாற்பட்ட ஒரு வல்லமையைச் சார்ந் திருக்கிறது. எனவே தொடர்ந்து ஊக்கமாக இதயம் உடையும்வண்ணம் பாவத்தை அறிக்கைசெய்து, அவருக்கு முன்பாக ஆத்துமாவைத் தாழ்த்தவேண்டும். சுயத்தைத் தொடர்ந்து வெறுப்பதினாலும் கிறிஸ்துவின்மீது சார்ந்திருப்பதினாலும் மாத்திரமே நாம் பாதுகாப்போடு நடக்கமுடியும். (28)

எவ்வளவுக்கதிகமாக இயேசுவண்டை நெருங்கிவருகிறோமோ அவ்வளவிற்கதிகமாக அவரது குணத்தின் தூய்மையைத் தெளிவாக அறிந்துகொள்ளமுடியும். மேலும் பாவத்தின் உச்சக்கட்ட பாவத்தன்மையை நன்றாகப் புரிந்துகொள்ளமுடியும். நம்மை உயர்த்துகின்ற எண்ணம் குறைந்துகொண்டேபோகும். பரிசுத்தவான்களென்று பரலோகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றவர்கள் ஒருபோதும் தங்களை நல்லவர்களென்று

மார்தட்டிக்கொள்வதில்லை. அப்போஸ்தலனாகிய பேதுரு கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனாக மாறினான். தெய்வீக ஒளியாலும், வல்லமையாலும் அவன் அதிகமாக கனப்படுத்தப்பட்டான். கிறிஸ்துவின் சபையைக் கட்டிக்காப்பதில் முக்கிய பங்கு வகித்தான். ஆனால் பேதுரு தன்னுடைய விழுகையின் பயங்கர அனுபவத்தை ஒருபோதும் மறக்கவில்லை. அவனுடைய பாவம் மன்னிக்கப்பட்டது. தான் விழுவதற்குக் காரணமாயிருந்த பெலவீனத்தை கிறிஸ்துவின் கிருபையே நீக்கிப்போட்டது என்பதை உறுதியாக நம்பினான். தன்னிலே மேன்மைபாராட்டுவதற்கு ஒன்றுமில்லை என்பதையும் அறிந்துகொண்டான். (29)

அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் தங்களிடம் பாவம் இல்லையென்று ஒருபோதும் கூறியதில்லை. தேவனோடு நெருங்கி ஜீவித்தவர்களும், தவறான செயலைச் செய்வதைப்பார்க்கிலும் தங்கள் ஜீவனைக் கொடுக்க முன்வருபவர்களும், தெய்வீக ஒளியாலும் வல்லமையாலும் தேவனால் கனப்படுத்தப்பட்டவர்களும்கூட, தங்கள் பாவக் குணத்தை அறிக்கைசெய் திருக்கிறார்கள். தங்கள் மாம்சத்திலே நம்பிக்கைவைக்காமலும், தங்கள் நீதியைக்குறித்து மேன்மைபாராட்டாமலும், கிறிஸ்துவினுடைய நீதியில் முழு நம்பிக்கை வைத்தவர்கள் அநேகர். கிறிஸ்துவை நோக்கிப்பார்க்கிற அனைவரும் இவ்வாறே இருப்பார்கள். (30)

கிறிஸ்தவ அனுபவத்தில் நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு முன்னேற்றமான அடியும் நம்முடைய மனந்திரும்புதலை ஆழப்படுத்தும். கர்த்தர் தாம் மன்னித்தவர்களையும், தம்முடைய ஜனம் என்று அவரால் அங்கீகரிக்கப்பட்டவர்களையும் பார்த்து: “அப்பொழுது நீங்கள் உங்கள் பொல்லாத மார்க்கங்களையும் உங்கள் தகாத கிரியைகளையும் நினைத்து, உங்கள் அக்கிரமங்களினிமித்தமும் உங்கள் அருவருப்புகளினிமித்தமும் உங்களையே அரோசிப்பீர்கள்” (எசே. 36:31) என்கிறார். “உன்னோடே என் உடன்படிக்கையைப்பண்ணி ஏற்படுத்துவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிவாய். நீ செய்த எல்லாவற்றையும் நான் மன்னித்தருளும்போது, நீ நினைத்து வெட்கி, உன் நாணத்தினால் உன் வாயை இனித் திறக்கமாட்டாதிருப்பாய்” என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் —எசே. 16:62,63. அப்பொழுது நம் உதடுகள் சுயத்தைக்குறித்து மேன்மைபாராட்டாது. கிறிஸ்து மாத்திரமே நமக்குப் போதுமானவர் என்பதை நாம் அறிந்துகொள்வோம். நாமும் அப்பொழுது அப்போஸ்தலனாகிய பவுல் கூறியதைப்போல, “என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மைவாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்”—ரோமர் 7:18; “நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக்

குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்" (கலாத்தியர் 6:14) என்று அறிக்கைசெய்வோம். (31)

இந்த அனுபவத்திற்கு இசைவாயிருக்கிற கட்டளை: "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப் படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவரா யிருக்கிறார்"–பிலிப்பியர் 2:12,13. அவருடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றத் தவறிவிடுவாரோவென்றும், அவரது பொறுமை அற்றுப் போய்விடுமோ அல்லது இரக்கம் குறைந்துபோய்விடுமோவென்றும் நாம் பயப்படத் தேவையில்லை என்றும் தேவன் கூறுகின்றார். உங்களது சித்தமானது கிறிஸ்துவின் சித்தத்திற்கு அடங்கிப்போகாமால் இருந்துவிடுமோ வென்றும், உங்களது மரபுவழித் தொடர்புடைய குணங்கள் அல்லது வளர்த்துக்கொண்ட குணங்கள் உங்களது வாழ்க்கையை அடக்கி ஆண்டுவிடுமோவென்றும் பயந்திருங்கள். "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." சுயம் உங்கள் ஆத்துமாவிற்கும் மாபெரும் தலைமை ஊழியரான இயேசுவிற்குமிடையில் குறிக்கிட்டுவிடக்கூடாதே என்று பயப்படுங்கள். தேவன் உங்கள்மூலமாக நிறைவேற்ற விரும்புகின்ற அந்த மேலான நோக்கத்தை உங்களது சுயசித்தமானது களங்கப்படுத்திவிடுமோ என்றும், கிறிஸ்துவின் கரத்தினின்று உங்கள் கரத்தை விலக்கிக்கொள்வதைக்குறித்தும், அவரது நிலையான பிரசன்னத்தினின்று விலகி வாழ்க்கைப் பாதையில் தனித்துச்செல்ல முயல்வதைக்குறித்தும் பயப்படுங்கள். (32)

பெருமையையும் மட்டற்ற சுயநம்பிக்கையையும் ஊக்குவிக்கும் அனைத்தையும் நாம் வெறுத்துத் தள்ளவேண்டியது அவசியமாகும். முகஸ்துதியையும், புகழ்ச்சியையும்குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். முகஸ்துதியில் ஈடுபடுவது சாத்தானுடைய கிரியையாயிருக்கிறது. முகஸ்துதியில் மட்டுமல்லாது அவன் குற்றப்படுத்துவதிலும், ஆக்கினைக் குள்ளாகத் தீர்ப்பதிலும் ஈடுபடுகிறான். இவ்விதமாக, அவன் ஆத்தும அழிவை ஏற்படுத்துகிறான். மனிதனைப் புகழ்கிறவர்களை சாத்தான் தனது பிரதிநிதிகளாக வைத்து பயன்படுத்துகிறான். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் ஒவ்வொரு புகழ்ச்சியின் வார்த்தைகளையும் தங்களைவிட்டு அகற்றட்டும். சுயத்தை கண்களுக்கு மறைவாக புறம்பே தள்ளவேண்டும். கிறிஸ்து

மாத்திரமே உயர்த்தப்படவேண்டும். "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி" (வெளி. 1:6), நம்மைச் சுத்திகரித்தவரை நோக்கி, மீட்டுக்கொண்ட கிறிஸ்துவையே ஒவ்வொரு கண்ணும் நோக்கி, அவரையே ஒவ்வொரு இதயமும் புகழட்டும். (33)

கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை நெஞ்சாரப் பேணுபவர்களது வாழ்க்கையில் துக்கமும், இருளும் ஏற்படுவதில்லை. கிறிஸ்துவில்லாத வாழ்க்கையே முகத்தை துக்கத்தால் நிறைத்து, வாழ்க்கையென்னும் இந்த யாத்திரையை பெருமூச்சுகள் நிறைந்ததாகச் செய்துவிடும். சுயகவுரவத்தினாலும், சுய அன்பினாலும் நிரப்பப்பட்டிருப்பவர்கள் கிறிஸ்துவுடன் ஜீவிக்கிற ஒரு தனிப்பட்ட உறவு தேவையென்பதை உணர்ந்துகொள்கிறதில்லை. கிறிஸ்துவாகிய பாறையின்மேல் விழாத இதயம், தனது நிறைவைக் குறித்து பெருமையோடிருக்கும். மனிதர் மேன்மையான ஒரு மார்க்கத்தை விரும்புகின்றனர். தங்களுடைய இயல்புகளோடு ஒரு பெரிதும் விஸ்தாரமுமான பாதையில் நடக்க வாஞ்சிக்கிறார்கள். சுயத்தின்மீதுள்ள அன்பும், விளம்பரப்படுத்தப்பட வேண்டுமென்கிற வாஞ்சையும், புகழ்ச்சியின் மீதுள்ள அன்பும், அவர்களுடைய இதயங்களை இரட்சகரைவிட்டுப் பிரித்துவிடுகிறது. அவர் இல்லாவிடில், அங்கு இருளும் துக்கமுமே நிறைந்திருக்கும். கிறிஸ்து நம்முடைய ஆன்மாவிலே வாசம்செய்யும்போது, அது அளவிடமுடியாத ஒரு மகிழ்ச்சியின் ஊற்றாக இருக்கும். அவரை ஏற்றுக்கொள்ளுகிற அனைவருக்கும் தேவனுடைய வார்த்தை என்பதே களிகூருதலாயிருக்கும். (34)

"நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்"—ஏசாயா 57:15. (35)

ஒரு பிளவுண்ட பாறையில் மறைந்திருந்தபோதுதான் மோசே தேவனுடைய மகிமையைக் கண்டார். நாமும் பிளவுண்ட கன்மலையாகிய கிறிஸ்துவில் மறைந்திருப்போமென்றால், அவர் தமது ஆணிபாய்ந்த கரங்களால் நம்மை மூடுவார். அவர் தமது ஊழியர்களுக்குச் சொல்லும் ஆலோசனையை நாமும் கேட்போம். மோசேக்கு வெளிப்படுத்தியதுபோலவே, நமக்கும் "கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு

இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்" (யாத். 34:6,7) என்று அவரை வெளிப்படுத்துவார். (36)

மீட்புப் பணி விளைவுகளை உள்ளடக்கியது. அதைக்குறித்து அறிவது மனிதனுக்குக் கடினம். "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை"–1 கொரி. 2:9. ஒரு பாவி கிறிஸ்துவின் வல்லமையினால் உயர்த்தப்பட்ட கல்வாரியண்டை இழுக்கப்பட்டு, அவருக்கு முன்பாக சாஷ்டாங்கமாக விழும்போது, அவனுக்கு ஒரு புது இதயம் கொடுக்கப்படுகிறது. அவன் ஒரு புது சிருஷ்டியாக மாறுகிறான். இனி அதற்கு எதுவும் தேவையில்லை என்பதை பரிசுத்தம் காண்கிறது. (ரோமர் 3:25). "தேவன் தாமே இயேசுவிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் இருக்கிறார். எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" (ரோமர் 8:30) என்ற வார்த்தையின்படி அவர் தாம் தெரிந்துகொண்டவர்களை மகிமைப் படுத்துகிறார். பாவத்தின்மூலமாக நிந்தையும், அவமானமும் ஏற்படுகின்றது. ஆனால் மீட்பரின் அன்பின்மூலமாக நாம் கனத்தையும், உயர்வையும் பெற்றுக்கொள்கிறோம். தேவசாயலுக்கு ஒத்த ஒரு சாயலை அடைவதற்குப் பிரயாசப்படும் மனுஷருக்கு பரலோகத்தின் பொக்கிஷமும், வல்லமையும் வழங்கப்படுகிறது. அது அவர்களை விழுந்துபோகாத தூதர்களைப் பார்க்கிலும் மேன்மையான இடத்திற்கு அழைத்துச்செல்லும். (37)

"இஸ்ரவேலின் மீட்பரும் அதின் பரிசுத்தருமாகிய கர்த்தர், மனுஷரால் அசட்டைபண்ணப்பட்டவரும், ஜாதியாரால் அருவருக்கப்பட்டவரும், அதிகாரிகளுக்கு ஊழியக்காரனுமாயிருக்கிறவரை நோக்கி, உண்மையுள்ள கர்த்தர் நிமித்தமும், உம்மைத் தெரிந்துகொண்ட இஸ்ரவேலின் பரிசுத்தர் நிமித்தமும், ராஜாக்கள் கண்டு எழுந்திருந்து, பிரபுக்கள் பணிந்துகொள்வார்கள்" (ஏசாயா 49:7) என்று சொல்லுகிறார். (38)

"தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தானே தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்." (39) ★

# 14

# நியாயஞ்செய்யும் தேவன்

**(மூலநூல் : பக்கங்கள் 164–180)**
**லூக்கா 18:1–8**

கிறிஸ்து தமது இரண்டாம் வருகைக்குச் சற்றுமுன்னர் இருக்கப் போகும் காலக்கட்டத்தைக்குறித்தும் அவரது பின்னடியார்கள் கடந்துசெல்ல விருக்கின்ற இன்னல்கள்பற்றியும் பேசிக்கொண்டிருந்தார். இந்தக் காலத்தை நினைவில்கொண்டவராக: "சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும் என்பதைக்குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்." (1)

"ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான்; அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான். அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள்; அவள் அவனிடத்தில் போய்: எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினாள். வெகுநாள்வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. பின்பு அவன்: நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றார். பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள். அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாம லிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார்" என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (2)

இங்கே சித்தரிக்கப்பட்டுள்ள நியாயாதிபதி நியாயத்தைக்குறித்து அக்கறையில்லாதவனாகவும் துயரப்படுகிறவர்களிடத்தில் இரக்கம் காட்டாத

வனாகவும் இருந்தான். தன்னுடைய வழக்கை அவனிடம் கொண்டுவந்த விதவை தொடர்ந்து துரத்தப்பட்டாள். அலட்சியத்துடன் நடத்தப்படுவதற்கும், நியாயாசனத்திலிருந்து விரட்டப்படுவதற்குமே அவள் விடாப்பிடியாக மீண்டும் மீண்டும் அவனிடத்தில் வந்தாள். அவளுடைய வழக்கில் நியாயமிருந்த தென்று நியாயாதிபதிக்குத் தெரியும். அவளுக்கு உதவிசெய்து அவளுடைய துன்பத்தை உடனே தீர்த்திருக்கமுடியும். ஆனால் அவன் அவ்வாறு செய்ய வில்லை. அவளுக்கு உதவவும் முன்வரவில்லை. அவன் தனது அதிகாரத் தைக் காண்பிக்க விரும்பினான். அந்த விதவை அடிக்கடி வந்து தன்னிடம் வீணாகக் கெஞ்சி மன்றாடுவதில் அவனுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது. அவள் அதைரியப்படவுமில்லை, சோர்ந்துபோகவுமில்லை. அவனுடைய அலட்சியத்தையும், மனக்கடினத்தையும் பொருட்படுத்தாமல், வழக்கை விசாரிக்க அவன் சம்மதிக்கும்வரை முறையிட்டாள். "நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும்" என்று அவன் தன்னுடைய பெயரைக் காப்பாற்றிக்கொள்ளவும், தன்னுடைய ஒருதலைத் தீர்ப்பு வெளிவராமல் தவிர்க்கப்படவும் அவளுக்கு நியாயஞ்செய்தான். (3)

"பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள். அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." இவ்விடத்திலே கிறிஸ்து அநீதியுள்ள நியாயாதிபதிக்கும் தேவனுக்குமிடையே உள்ள துல்லியமான வித்தியாசத்தைக் கோடிட்டுக் காண்பிக்கிறார். தொடரும் விதவையின் தொந்தரவு தன்னைவிட்டு நீங்கும்படியாக, வெறுமனே சுய நலத்தோடு அவன் விதவையின் வேண்டுகோளுக்கு இணங்கினான். (4)

அவள்மீது அவன் அனுதாபமோ, மனதுருக்கமோ கொள்ளவில்லை. அவளுடைய துன்பம் அவனை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. அவரைத் தேடுகிறவர்களது காரியத்தில் தேவனுடைய மனப்பாங்கு எவ்வளவு வித்தியாசமானதாக இருக்கிறது. தேவையுள்ளோரும், துயரப்படுவோரும் ஏறெடுக்கும் விண்ணப்பங்களை நமது தேவன் அளவற்ற மனதுருக்கத்துடன் கவனமாக எண்ணிப்பார்க்கிறார். (5)

நியாயம்கேட்டு நியாயாதிபதியிடம் மன்றாடிய பெண், தன் கணவனை மரணத்தினிமித்தம் இழந்திருந்தாள். ஏழையும் நண்பர்களற்றவளாயுமிருந்த

அவளது சொத்துக்களை திரும்பப் பெற்றுக்கொள்ள வழிவகையில்லாதிருந்தாள். இதுபோலவே, மனிதன் பாவத்தினிமித்தம் தேவனுடன் இருந்த தொடர்பை இழந்துபோனான். தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள எந்த வழிவகையும் கிடையாது. ஆனால் கிறிஸ்துவின்மூலமாக நாம் பிதாவிற்கருகில் கொண்டுவரப்படுகிறோம். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அவருடைய இதயத்திற்கு அருமையானவர்களாயிருக்கிறார்கள். இருளான இவ்வுலகில் பிரகாசிக்கிற சுடர்களாய்த் திகழும்படியும், அவரது புகழைச் சொல்லிவரும்படியும் தேவன் அவர்களை இருளிலிருந்து தமது மகிமையான ஒளிக்குள் அழைத்திருக்கிறார். அநீதியுள்ள நியாயாதிபதி விடுதலைக்காக அவனிடத்தில் கெஞ்சிமன்றாடிய அந்த விதவையின்மீது தனிப்பட்ட கவனம் எதுவும் செலுத்தவில்லை. ஆயினும், அவளுடைய தொந்தரவை நிறுத்தும்படியாக, அவளுடைய விண்ணப்பத்தைக்கேட்டு, அவளுடைய எதிராளியிடமிருந்து அவளை மீட்டான். ஆனால் தேவன் தமது பிள்ளைகளை எல்லையற்ற அன்போடு நேசிக்கிறார். இவ்வுலகில் அவருக்கு மிகவும் பிடித்த ஒரு பொருள் அவருடைய சபையே. (6)

“கர்த்தருடைய ஜனமே அவருடைய பங்கு; யாக்கோபு அவருடைய சுதந்தரவீதம். பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தரவெளியிலும் அவர் அவனைக் கண்டுபிடித்தார், அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனைத் தமது கண்மணியைப்போலக் காத்தருளினார்”—உபா. 32:9,10. “பிற்பாடு மகிமையுண்டாகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; உங்களைக் கொள்ளையிட்ட ஜாதிகளிடத்துக்கு என்னை அனுப்பினார்; உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான்”—சகரியா 2:8. (7)

“எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும்” என்ற அந்த விதவையின் ஜெபம் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையின் ஜெபமென்பதைச் சுட்டிக்காட்டுகிறது. சாத்தானே அவர்களுடைய பெரிய எதிரியாக, தேவனுக்கு முன்பாக இரவும் பகலும் நம்முடைய சகோதரர்களைக்குறித்து குற்றஞ்சுமத்துகிறவனாயிருக்கிறான். (வெளி. 12:10). தேவனுடைய ஜனங்களை குற்றப்படுத்தவும், வஞ்சிக்கவும், அழிக்கவும் அவன் தொடர்ந்து கிரியைசெய்துவருகிறான். சாத்தான் மற்றும் அவனோடுசேர்ந்து உழைப்பவர்களது வல்லமையினின்று விடுதலைசெய்வதற்காக கிறிஸ்து இந்த உவமையின்மூலமாக எவ்வாறு ஜெபிக்கவேண்டுமென்று தமது சீடர்களுக்குக் கற்றுத்தருகிறார். (8)

சகரியாவின் தீர்க்கதரிசனத்தின்மூலமாக சாத்தான் எப்படி ஜனங்களை குற்றப்படுத்துகிறானென்பதையும், கிறிஸ்து தமது மக்களின் எதிராளியை

எதிர்த்து எவ்வாறு வேலைசெய்கிறார் என்பதையும் அறியமுடிகிறது. “அவர் பிரதான ஆசாரியனாகிய யோசுவாவை எனக்குக் காண்பித்தார்; அவன் கர்த்தருடைய தூதனுக்கு முன்பாக நின்றான்; சாத்தான் அவனுக்கு விரோதஞ்செய்ய அவன் வலது பக்கத்திலே நின்றான். அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி: கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக; சாத்தானே, எருசலேமைத் தெரிந்துகொண்ட கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக; இவன் அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளி அல்லவா என்றார். யோசுவாவோவெனில் அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய்த் தூதனுக்கு முன்பாக நின்றிருந்தான்”–சகரியா 3:1–3. (9)

இந்தச் சம்பவத்தில், தேவனுடைய ஜனங்கள் ஒரு வழக்கு விசாரணைக்காக நிற்கும் ஒரு குற்றவாளியைப்போல் சுட்டிக்காட்டப்படுகிறார்கள். பிரதான ஆசாரியனாகிய யோசுவா பெருந்துன்பத்தில் இருக்கும் தமது ஜனங்களுக்கு ஒரு ஆசீர்வாதத்தை நாடுகிறான். தேவனுக்கு முன்பாக அவன் பரிந்துபேசிக்கொண்டு இருக்கும்போது, சாத்தான் அவனது எதிராளியாக அவனது வலதுபுறத்தில் நின்றுகொண்டிருக்கிறான். அவன் தேவனுடைய ஜனங்களைக் குற்றப்படுத்தி, அவர்களுடைய நிலையை மிகவும் பரிதவிக்கத்தக்கவிதமாக தோன்றச் செய்கிறான். அவர்களுடைய தீமையான செயல்களையும் குணத்தில் காணப்படும் குறைகளையும் கர்த்தருக்கு முன்பாக சமர்ப்பிக்கிறான். இயேசுவின் பார்வையில் அவர்கள் மிகவும் கீழ்த்தரமான குணமுள்ளவர்களாக காணப்பட்டால் அவர்களது மாபெரும் தேவையில் அவர் உதவிசெய்யமாட்டாரென்று எதிர்பார்த்து, அவர்களுடைய தவறுகளையும் தோல்விகளையும் காண்பிக்கிறான். யோசுவா தேவனுடைய ஜனங்களின் பிரதிநிதியாக, ஆக்கினையின்கீழ், அழுக்கான வஸ்திரம் தரித்தவனாக நிற்கிறான். தன்னுடைய ஜனங்களின் பாவங்களை உணர்ந்தவனாக, அதைரியத்தினால் அழுத்தப்படுகிறான். சாத்தான் அவன் ஆன்மாவின்மேல் சுமத்தும் குற்ற உணர்வினால் அவன் ஏறக்குறைய நம்பிக்கையற்ற நிலைக்கு வந்துவிடுகிறான். இருப்பினும், சாத்தான் தனக்கு எதிராக நிற்க, பிரதான ஆசாரியனாகிய யோசுவா மன்றாடிக்கொண்டிருக்கிறான். (10)

குற்றப்படுத்துகிற வேலையை சாத்தான் பரலோகத்தில் துவக்கினான். மனிதனின் விழுகைக்குப்பின் பூமியிலும் இதுவே அவனுடைய வேலையாக இருந்தது. இந்த உலக வரலாற்றின் இறுதிக்கட்டத்தை நாம் நெருங்கிவந்துகொண்டிருக்கும்போது, ஒரு குறிப்பிட்டவிதத்தில் இதுவே அவனுடைய வேலையாக இருக்கும். தன்னுடைய நாட்கள் குறுகிவருகிறதென்பதை அவன் எண்ணிப்பார்க்கிறபோது, மேலும் அதிகமாக ஜனங்களை வஞ்சிப்பதிலும்

அழிப்பதிலும் மிகவும் ஊக்கத்தோடு ஈடுபடுவான். தங்களுடைய பாவத்திலும், பெலவீனத்திலும்கூட இந்த பூமியிலே ஒரு ஜனக்கூட்டம் யொகோவாவின் கற்பனைகளை மதித்து நடப்பதைக் காணும்போது அவன் கோபமடைகிறான். அவர்களை எப்படியாவது கீழ்ப்படியாமலிருக்கச்செய்ய வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கிறான். அவர்களுடைய தகுதியற்ற நிலையைக்கண்டு மகிழ்ச்சியடைகிறான். அனைவரும் கண்ணியில் அகப்பட்டு தேவனைவிட்டுப் பிரிக்கப்படுவதற்காக, ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் ஏற்ற உபாய தந்திரங் களையும் ஆயத்தம்செய்கிறான். இரக்கத்தோடும் உருக்கத்தோடும் அன்புடனும் மன்னிக்கும் குணமுடையவர்களாக அவரது நோக்கங்களை நிறைவேற்ற முயற்சிக்கின்ற அனைவரையும் குற்றஞ்சாட்டி, கண்டனஞ்செய்ய வகைதேடுகிறான். (11)

தேவன் தமது மக்களுக்காக ஒவ்வொரு முறையும் தமது வல்லமையை வெளிப்படுத்தும்போது, சாத்தானின் விரோதம் தூண்டிவிடப்படுகிறது. ஜனங்கள் சார்பாக தேவன் ஒவ்வொரு முறையும் கிரியை செய்யும்போதெல்லாம் சாத்தானும் புதுப்பிக்கப்பட்ட சக்தியுடன் தன்னுடைய தூதர்களுடன் அவர்களை அழிக்க முற்படுகிறான். கிறிஸ்துவைத் தங்கள் பெலமாகக் கொண்டிருக்கும் அனைவர்மீதும் அவன் பொறாமை கொள்கிறான், தீமையைத் தூண்டிவிடுவதையே தன் குறிக்கோளாகக் கொண்டிருந்து, அதில் வெற்றிகண்டவுடன் விழுந்துபோனவர்கள்மீது பழியைப் போடுகிறான். ஜனங்களுடைய அழுக்கான கந்தையை—அவர்களுடைய தவறான குணங்களை அவர்களுக்கு காண்பிக்கிறான். ஜனங்களுடைய பெலவீனத்தையும், புத்தியீனத்தையும், அவர்களது நன்றிகெட்ட குணத்தின் பாவநிலையையும், கிறிஸ்துவுக்கு எதிரான அவர்களது தன்மைகளையும் படம்பிடித்துக்காட்டி, மீட்பரை கனவீனப்படுத்திவிட்டதாகக் கூறுவான். தர்க்கரீதியாக வாதாடி, அவர்களது அழிவில் தனது சித்தத்தின்படி கிரியைசெய்ய உரிமையிருக்கிறதென்று நிரூபிக்க முயற்சிக்கிறான். அவர்களது பாவ அழுக்கின் கறை ஒருபோதும் கழுவப்படமுடியாது, அவர்களது காரியம் நம்பிக்கையற்றது என்ற எண்ணத்தைப் புகுத்தி அவர்களது ஆத்துமாக்களை பயத்தால் நிறைக்க முயற்சிக்கிறான். அவனது சோதனைகளுக்கு முற்றிலுமாக தங்களை ஒப்புக்கொடுத்து, தேவனுக்கு உத்தமமாய் இருப்பதினின்று விலகத்தக்கதாக அவர்களது விசுவாசத்தை இவ்வாறு அழித்துப்போடலாம் என நம்புகிறான். (12)

சாத்தானின் குற்றச்சாட்டுகளுக்கு கர்த்தருடைய பிள்ளைகள் தாங்களாகவே பதில்கூற இயலாது. தங்களைத்தாங்களே நோக்கிப் பார்க்கும்போது நம்பிக்கையிழக்க அவர்கள் ஆயத்தமாகிறார்கள். ஆனால்

அவர்கள் தெய்வீக வழக்கறிஞரிடம் முறையிடுகிறார்கள். மீட்பரின் புண்ணியங்கள் சார்பில் கெஞ்சுகிறார்கள். தேவன் "இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிற" (ரோமர் 3:16) வராக இருக்கிறார். சாத்தானின் குற்றச்சாட்டுகளை அமைதிப்படுத்தி, அவனது சூழ்ச்சிகளை செயலற்றுப்போகச்செய்யும்படி ஆண்டவருடைய பிள்ளைகள் நம்பிக்கையோடு அவரிடத்தில் கதறுகிறார்கள் –ரோமர் 3:25. "எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும்" என்று அவர்கள் ஜெபிக்கிறார்கள். சிலுவையைப்பற்றின மாபெரும் தர்க்கத்தை முன்னிலைப்படுத்தி, துணிகரமாகக் குற்றஞ்சாட்டுகிற சாத்தானை கிறிஸ்து வாயடைக்கச் செய்கிறார். (13)

"அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி: கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக; சாத்தானே, எருசலேமைத் தெரிந்துகொண்ட கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக; இவன் அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளி அல்லவா" என்றார். சாத்தான் தேவ ஜனங்களை இருளினால் மூடி அழிக்க முயற்சிக்கும்போது, கிறிஸ்து குறுக்கிடுகிறார். அவர்கள் பாவம் செய்திருந்தபோதும், கிறிஸ்து குற்றத்தை தம்மீது எடுத்துக் கொள்கிறார். அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட ஒரு கொள்ளியைப்போன்று அவர் தமது பிள்ளைகளை வலிய பறித்துக்கொள்கிறார். அவர் தமது மானிட இயல்பின்மூலமாக மனிதனோடு இணைக்கப்பட்டிருக்கிறார்; அவரது தெய்வீக இயல்பின்படி எல்லையற்ற பரம்பொருளாகிய தேவனோடு ஒன்றாக இருக்கிறார். அழிந்துபோகிற ஆத்துமாக்களுக்கு உதவி வழங்கப்பட்டு, சாத்தான் கடிந்துகொள்ளப்படுகிறான். (14)

"யோசுவாவோவெனில் அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய்த் தூதனுக்கு முன்பாக நின்றிருந்தான். அவர் தமக்கு முன்பாக நிற்கிறவர்களை நோக்கி: இவன்மேல் இருக்கிற அழுக்கு வஸ்திரங்களைக் களைந்துபோடுங்கள் என்றார்; பின்பு அவனை நோக்கி: பார், நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச்செய்து, உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன் என்றார். அவன் சிரசின்மேல் சுத்தமான பாகையை வைப்பார்களாக என்றார்; அப்பொழுது சுத்தமான பாகையை அவன் சிரசின்மேல் வைத்து, அவனுக்கு வஸ்திரங்களைத் தரிப்பித்தார்கள்." பின்னர் சேனைகளின் தேவனாகிய கர்த்தருடைய அதிகாரத்தினால் தேவனுடைய மக்களின் பிரதிநிதியாக இருந்த யோசுவாவிடம் ஒரு பக்திவிநயமான வாக்குறுதி ஒன்றை தூதன் அறிவித்தார். "நீ என் வழிகளில் நடந்து என் காவலைக் காத்தால், நீ என் ஆலயத்தில் நியாயம் விசாரிப்பாய்; என் பிராகாரங்களையும் காவல்காப்பாய்; இங்கே நிற்கிறவர்களுக்குள்ளே உலாவுகிறதற்கு இடம் நான் உனக்குக்

கட்டளையிடுவேன்" (தேவசிங்காசனத்தை சுற்றிலுமிருக்கிற தூதர்களுக்கு மத்தியில்) (சகரியா 3:3–7) என்றார்.(15)

தமது ஜனங்களிடத்தில் தவறுகள் இருந்தபோதிலும், அவரால் பராமரிக்கப்படுபவர்களினின்று அவர் தமது முகத்தைத் திருப்புகிறதில்லை. அவர்களுடைய வஸ்திரத்தை மாற்றும் வல்லமை அவருக்கு இருக்கிறது. உண்மையாக மனந்திரும்புகிற ஜனங்களின் அழுக்கான வஸ்திரங்களை நீக்கி, தமது நீதியின் வஸ்திரத்தினால் அவர்களை மூடி, பரலோக ஆவணங்களில் அவர்களுடைய பெயர்களுக்கு எதிராக, தாம் அவர்கள் பாவங்களை மன்னித்ததை எழுதுகிறார். இவ்வாறு பரலோக அண்டசராசரங் களுக்கு முன்பாக அவர்களை தம்முடையவர்களென்று அறிக்கைசெய்கிறார். அவர்களது விரோதியான சாத்தான் குற்றஞ்சாட்டுகிறவனாகவும் வஞ்சிக்கிற வனாகவும் காட்டப்படுகிறான். இவ்வாறுசெய்து, தேவன் தாம் தெரிந்துகொண்ட வர்களுக்கு நியாயஞ்செய்கிறார். (16)

"எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யும்" என்கிற ஜெபமானது சாத்தானுக்கு மட்டுமே பொருந்தாது. ஆனால் யாரெல்லாம் தேவனுடைய மக்களைப்பற்றி எடுத்துக்கூறி, சோதித்து அழிக்கும்படி தூண்டிவிடப்படுகிறார்களோ அவர்களுக்கும் பொருந்தும். தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ள தீர்மானமாயிருக்கும் ஜனங்கள், கீழிருந்து கிளம்பும் ஒரு வல்லமையினால் கட்டுப்படுத்தப்படும் எதிராளிகள் தங்களுக்கு உண்டு என்பதை தங்கள் அனுபவத்தின்வாயிலாக அறிந்துகொள்வார்கள். அப்படிப்பட்ட விரோதிகள் கிறிஸ்துவின் ஒவ்வொரு அடியிலும் எவ்வளவு தொடர்ச்சியாகவும் தீர்மானத்துடனும் கிறிஸ்துவை இடருக்கு உட்படுத்தினார்கள் என்பதை எந்த மனிதனும் ஒருபோதும் அறியமுடியாது. கிறிஸ்துவின் சீடர்களும் அவருடைய ஆண்டவரைப்போலவே இடைவிடாத சோதனைகளினால் பின்தொடரப்படுகிறார்கள். (17)

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு, இவ்வுலகின் நிலை எப்படியிருக்குமென்பதை பரிசுத்த வேதவாக்கியங்கள் விவரிக்கிறது. ஜனங்கள் பேராசைக்காரர்களாகவும், பிறரை ஒடுக்குகிறவர்களாகவும் காணப்படுவார்களென்பதை அப்போஸ்தலனாகிய யாக்கோபு தெரிவிக்கிறார்: "உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப் போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும் கடைசிநாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய

கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில்பட்டது. பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள். நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்து நிற்கவில்லை”–யாக். 5:1–6. இத்தகைய காரியங்களே உலகத்தில் இந்நாட்களில் நடந்துவருகிறது. கொடுமைப்படுத்தியும், அபகரித்தும் மக்கள் தங்களுக்கு ஆஸ்திகளைக் குவித்துக்கொண்டிருக்கிறார்கள். பட்டினிகிடக்கின்ற மானிடர்களின் கூக்குரல் தேவ சமூகத்தை எட்டுகிறது. (18)

“நியாயம் பின்னிட்டு அகன்றது; நீதி தூரமாய் நின்றது; சத்தியம் வீதியிலே இடறி, யதார்த்தம் வந்து சேரமாட்டாமற்போகிறது. சத்தியம் தள்ளுபடியாயிற்று; பொல்லாப்பை விட்டு விலகுகிறவன் கொள்ளையாகிறான்…”–ஏசாயா 59:14,15. இது கிறிஸ்து பூமியிலிருந்தபோது அவர் வாழ்க்கையில் நிறைவேறியது. தேவனுடைய கற்பனைகளுக்கு உத்தமமாகக் கீழ்ப்படிந்து அந்தக் கட்டளைகளுக்குப்பதிலாக உயர்த்தப்பட்டிருந்த மானிடப் பாரம்பரியங்களையும் கோரிக்கைகளையும் ஒதுக்கிவைத்தார். இதனால் அவருடைய சத்துருக்கள் அவரை வெறுத்துத் துன்பப்படுத்தினார்கள். இந்த வரலாறு மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்படுகிறது. மனிதனுடைய சட்டங்களையும் பாரம்பரியங்களையும் தேவனுடைய கற்பனைகளுக்கும் மேலாக ஜனங்கள் உயர்த்துகிறார்கள். தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு உண்மையாக நடக்கிற ஜனங்கள் நிந்தைக்கும் துன்பத்துக்கும் ஆளாகின்றனர். கிறிஸ்து தேவனுக்கு உண்மையாயிருந்தபடியினால், ஓய்வுநாளை மீறுகிறவராகவும் தேவதூஷணம் செய்கிறவராகவும் கருதப்பட்டார். அவர் பெயல்செபூல் என்றும் கண்டனம் செய்யப்பட்டார். இதேபோன்று அவரது பின்னடியார்களும் குற்றஞ்சாட்டப்பட்டு தவறாக எடுத்துரைக்கப்படுவார்கள். இவ்விதமாக, அவர்களை பாவத்திற்கு கொண்டுசென்று, தேவனுக்கு கனவீனத்தைக் கொண்டுவரலாம் என்று நம்புகிறான். (19)

தேவனுக்குப் பயப்படாதவனும் மனிதனை மதியாதவனுமாக இருந்த நியாயாதிபதியின் குணமும் தம்முடைய பாடுமரணத்திற்கு முன்னர் நடைபெறவேண்டிய விசாரணையில் தமக்குத் தீர்ப்புச் சொல்லுகிறவர்களின் குணமும் ஒரேமாதிரியாக இருக்குமென்பதை விளக்கவே கிறிஸ்து இந்த உவமையைக் கூறினார். சோதனையின் நாளிலே இவ்வுலகத்தின் அதிபதிகளையும், நியாயாதிபதிகளையும் நம்புவதில் பிரயோஜனமில்லையென்பதை யுகம் நெடுகிலும் வாழ்ந்திருக்கும் தமது மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று கிறிஸ்து விரும்புகிறார். தேவனுடைய வார்த்தையைத்

தங்கள் வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் ஏற்றுக்கொள்ளாமல், தங்களை அர்ப்பணிக்காதவர்களாயும் ஒழுக்கக்கட்டுப்பாட்டிற்கு ஒவ்வாத உந்துதலுடனும் இருக்கின்ற, சுயவிருப்பத்தின்படி ஜீவிக்கிற அதிகாரிகள்முன்பாக, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அடிக்கடி நிற்க நேரிடுகிறது. (20)

நாம் என்ன செய்யவேண்டுமென்பதை அநீதியுள்ள நியாயாதிபதியின் உவமையின்மூலமாக கிறிஸ்து நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். “தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?” தான் செய்வது சரியென்பதை மெய்ப்பித்துக்காட்டவோ அல்லது தம்மை விடுதலைசெய்துகொள்ளவோ நமக்கு முன்மாதிரியாக இருக்கின்ற கிறிஸ்து எதையும் செய்யவில்லை. அவர் தமது காரியத்தை தேவனிடம் ஒப்படைத்தார். அவரைப் பின்பற்றுகிறவர்களும் தங்களை விடுதலைசெய்யும்படியாக பிறரைக் குற்றப்படுத்தவோ, கண்டனம் செய்யவோ அல்லது பலாத்காரமுறையையோ உபயோகிக்கக்கூடாது. (21)

வருகின்ற துன்பங்கள் விவரிக்கக்கூடாதவைபோன்று தோன்றும்போது நமது சமாதானத்தை கெடுக்கத்தக்கதாக எதையும் நாம் அனுமதிக்கக்கூடாது. எவ்வளவுதான் அநியாயமாக நடத்தப்பட்டாலும், உணர்வுகளுக்கு நாம் ஒருபோதும் இடங்கொடுக்கக்கூடாது. பிறரை பழிவாங்கும் குணத்தில் திளைப்பதினால், நம்மை நாமே காயப்படுத்திக்கொள்கிறோம். தேவன் பேரில் இருக்கும் நம்பிக்கையை அழித்து, பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகிறவர்களாயிருப்போம். பரலோகத்தின் தூதர் நம் அருகில் ஒரு சாட்சியாக நின்று, சத்துருக்களுக்கு எதிராக நமது சார்பில் கொடியை உயர்த்திப்பிடிப்பார். நீதியின் சூரியனாம் இயேசு தமது பிரகாசமான ஒளிக்கதிர்களால் நம்மை அரவணைக்கிறார். இதற்கும் அப்பால் சாத்தனால் ஊடுருவ முடியாது. (22)

“ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு” (சங்கீதம் 50:15) என்று கர்த்தர் சொல்லுகிறார். நம்முடைய பிரச்சனைகளையும் தேவைகளையும், தெய்வீக உதவியின் அவசியத்தையும் தம்மிடம் கூறுமாறு அவர் நம்மை அழைக்கிறார். எந்த ஒரு விஷயத்திலும் உடனடியாக ஜெபிக்கவேண்டுமென்று நமக்குக் கட்டளையிடுகிறார். கஷ்டங்கள் எழும்பும் பட்சத்தில் உடனே அவரிடம் உண்மையுடனும், ஊக்கத்துடனும் முறையிட வேண்டும். விடாப்பிடியாகக் கெஞ்சிமன்றாடும் ஜெபங்களின்மூலமாக, தேவனிடம் நாம் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கைக்குச் சான்றினைக் கொடுக்கிறோம். ஜெபிப்பது தேவையென்ற உணர்வு ஊக்கமான

ஜெபத்திற்கு நம்மை வழிநடத்துகிறது. நமது மன்றாட்டுகளில் நமது பரமபிதா அசைக்கப்படுகிறார். (23)

அநேக சமயங்களில் விசுவாசத்தினிமித்தம் நிந்தையையும், துன்பத்தையும் சகிப்பவர்கள் தேவனால் கைவிடப்பட்டுவிட்டதாக எண்ணும்படி சோதிக்கப்படுகின்றனர். மனுஷர் கண்களில் இவர்கள் சிறுபான்மையினராகத் தோன்றலாம். சத்துருக்கள் தங்களை மேற்கொண்டுவிட்டதுபோலத் தோன்றலாம். எனினும் அவர்கள் தங்களது மனச்சாட்சியின் புனிதத் தன்மையை சீர்குலைக்கவேண்டாம். அவர்கள் சார்பாக துக்கங்களையும் பாடுகளையும் அனுபவித்தவர் அவர்களை ஒருபோதும் கைவிடுவதில்லை. (24)

தேவனுடைய பிள்ளைகள் தனித்து பாதுகாப்பின்றிவிடப்படுவதில்லை. ஜெபம் சர்வவல்லவருடைய புயத்தை அசைக்கிறது. ஜெபத்தினாலே "அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத் தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள்"—எபிரெயர் 11:33,34. அந்நியருடைய சேனைகளை முறியடிக்கும்படியாக விசுவாசத்தினாலே இரத்தசாட்சிகளாக மரித்தவர்களுடைய அறிக்கைகளை நாம் கேட்கும்போது, அதின் பொருள் என்னவென்பதை அறிந்துகொள்வோம். (25)

நாம் நமது ஜீவியங்களை அவருடைய சேவைக்கு ஒப்புக்கொடுக்கும் போது, தேவனால் ஏற்பாடுசெய்யப்பட்டிராத எந்த நிலைமையிலும் ஒருபோதும் வைக்கப்படமாட்டோம். நம்முடைய சூழ்நிலைகள் எப்படிப் பட்டதாயிருப்பினும் நமக்கு அவர் "வழிகாட்டியாய்" இருக்கிறார். நம்முடைய குழப்பங்கள் எதுவாயினும் அவர் நமக்கு ஒரு நிச்சயமான "ஆலோசனைக் கர்த்தராக" இருக்கிறார். நம்முடைய துக்கமும், இழப்பும், தனிமையும் எப்படிப்பட்டதாயினும் அவர் நம்மீது மனமிரங்கும் "நண்பராக" இருக்கிறார். நம்முடைய அறியாமையினிமித்தம் நாம் தவறாக அடியெடுத்துவைக்கும்போது, கிறிஸ்து நம்மைக் கைவிடுவதில்லை. நாம் தெளிவான குரலில் அவர் பேசுவதைக் கேட்கலாம். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 14:6) என்றவர் "கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் விடுவிப்பார்"—சங்கீதம் 72:12. (26)

யார் கர்த்தரண்டை நெருங்கிச் சேர்ந்து அவருடைய பணியை உத்தமமாகச் செய்கிறார்களோ அவர்களால் தாம் கனப்படுத்தப்படுவதாக ஆண்டவர் கூறுகிறார். "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதை யுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண

சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்"–ஏசாயா 26:3. முன்னோக்கி மேலும் மேலும் முன்னோக்கிச் செல்லும்படி நம்மை வழிநடத்தத்தக்கதாக சர்வவல்லவரின் புயம் நம்மை நோக்கி நீட்டப்பட்டுள்ளது. நீங்கள் முன்செல்லுங்கள், நான் உங்களுக்கு உதவிசெய்வேனென்று கர்த்தர் சொல்லுகிறார். என் நாமத்தின் மகிமைக்கென கேட்கும்போது நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். உங்கள் தோல்வியை எதிர்பார்த்து காத்திருக்கிறவர்களுக்குமுன்பாக நான் கனப்படுத்தப்படுகிறேன். அவர்கள் "என்னுடைய" வார்த்தை மகிமையோடு வெற்றிசிறப்பதைப் பார்ப்பார்கள். "நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்" (மத்தேயு 21:22) என்றார். (27)

நெருக்கப்படுகிறவர்களும், அநியாயமாக நடத்தப்படுகிற அனைவரும் தேவனை நோக்கிக் கதறட்டும். இரும்பு மனம் கொண்டவர்களிடமிருந்து திரும்பி, உங்களைப் "படைத்தவரிடம்" உங்கள் விண்ணப்பங்களை ஏறெடுங்கள். நொறுங்குண்ட இதயத்தோடு வருகிற எவரையும் அவர் ஒருபோதும் புறம்பே தள்ளுவதில்லை. உண்மையான ஒரு ஜெபங்கூட வீணாகப் போனதில்லை. தெய்வீக பாடற்குழுவினரின் இசைக்கு மத்தியிலே, தேவன் பெலவீனமான மனுப்புத்திரருடைய விண்ணப்பங்களைக் கேட்கிறார். நம்முடைய தனி அறைகளிலிருந்து நமது இதயத்தின் வாஞ்சைகளை சில சமயங்களில் அவரிடத்தில் நமது விண்ணப்பங்களாகச் சமர்ப்பிக்கிறோம். நம்முடைய விண்ணப்பங்கள் எதுவாயினும், அண்டசராசரத்தின் "பேரரசரின்" சிங்காசனத்தை சென்றடைகிறது. மானிட செவியால் கேட்க முடியாமல் இருக்கலாம். ஆயினும், அவ்விண்ணப்பங்கள் மௌனத்தில் மறைந்து போய்விடுவதில்லை; அல்லது நடைபெற்றுக்கொண்டிருக்கிற தொழில் சார்ந்த நடவடிக்கைளால் இழக்கப்பட்டுப்போவதுமில்லை. ஆன்மாவின் விருப்பத்தை எதைக்கொண்டும் மடங்கடித்துவிடமுடியாது. தெருக்களின் இரைச்சலுக்கும் திரள்கூட்ட மக்களின் குழப்பங்களுக்கு மத்தியிலும் ஜெபங்கள் மேலாக எழும்பி, பரலோக மன்றங்களைச் சென்றடைகின்றன. நாம் தேவனிடத்தில் ஜெபித்துக்கொண்டிருக்கிறோம். நமது ஜெபம் கேட்கப்படுகிறது. (28)

உங்களைக்குறித்து மிகவும் தகுதியற்றவர்களென்று எண்ணுகிற நீங்கள், உங்கள் வழக்கை தேவனிடம் ஒப்படைக்கப் பயப்படவேண்டாம். கிறிஸ்துவின்மூலமாக தேவன் தம்மையே இவ்வுலகின் பாவத்திற்காக அர்ப்பணித்ததினிமித்தமாக, நம் ஒவ்வொருவருடைய வழக்கையும் ஏற்றுக்கொண்டுவிட்டார். "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோமர் 8:32).

பெலப்படுத்தி, உற்சாகப்படுத்தி தமது கிருபைபொருந்திய வார்த்தையை அவர் நமக்கு நிறைவேற்றாதிருப்பாரா? (29)

சாத்தானுடைய ஆளுகையிலிருந்து தம்முடைய ஜனங்களை மீட்பதைவிட, வேறு எதுவும் அவருக்கு அதிக விருப்பமான காரியமில்லை. வெளியிலிருந்து செயல்படும் சாத்தானுடைய வல்லமையிலிருந்து நாம் விடுதலை செய்யப்படவேண்டும். உலகத்தையும், சுயநலத்தையும், கிறிஸ்துவுக்கு எதிரான கடினமான குணத்தையும் நம்மிலிருந்து நீக்கும்படியாக, கர்த்தர் நம் வாழ்விலே சோதனைகளை அனுமதிக்கிறார். தேவனையும் அவர் அனுப்பின இயேசு கிறிஸ்துவையும் நாம் அறிந்துகொள்ளவும், அசுத்தத்தினின்று தூய்மையடையத்தக்கதாக இதயத்தில் ஆழ்ந்த ஏக்கத்தோடிருந்து, இறுதியில் அத்துன்பத்தினின்று மிகவும் தூய்மையாகவும் மிகவும் பரிசுத்தமாகவும் அதிக மகிழ்ச்சியுடனும் வெளிவரத்தக்கதாகவும், தனது ஆத்துமாக்கள்மீது துன்பமெனும் ஆழமான தண்ணீர்கள் கடந்துசெல்லும்படி அனுமதிக்கிறார். பெரும்பாலும் நமது ஆத்துமாக்கள் சுயநலத்தால் இருண்டிருக்கும்போது, நாம் துன்பமென்னும் சூளைக்குள் பிரவேசிக்கிறோம். கொடுமையான சோதனைக்கடியில் நாம் பொறுமையாக இருப்போமானால், தெய்வீகக் குணத்தை பிரதிபலிப்பவர்களாக வெளியே வருவோம். சோதனையின்போது அவருடைய நோக்கத்தை நாம் நிறைவேற்றுவோமானால், அவர் நம்மை ஆசீர்வதிக்க ஆயத்தமாக உள்ளார். “உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார்”–சங்கீதம் 37:6. (30)

கர்த்தர் தமது மக்களின் ஜெபங்களை அலட்சியம் செய்துவிடுவாரென்ற ஆபத்து இல்லை. சோதனை மற்றும் துன்பங்களின்போது அவர்கள் அதைரியப்பட்டு, விடாப்பிடியாக ஜெபம் செய்யத் தவறுவதில்தான் ஆபத்து இருக்கிறது. (31)

நமது இரட்சகர் தெய்வீக மனதுருக்கத்தை சீரோபெனிக்கேயா தேசத்து பெண்ணிற்குக் காண்பித்தார். அவளுடைய துக்கம் அவருடைய இதயத்தைத் தொட்டது. அவளுடைய ஜெபம் கேட்கப்பட்டுவிட்டதென்ற நிச்சயத்தை உடனடியாக அவளுக்குக் கொடுக்க அவர் வாஞ்சித்தார். ஆனால் தமது சீடர்களுக்கு ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுக்க விரும்பினார். எனவே, வேதனைப்பட்டுக்கொண்டிருந்த அவளது இதயத்தின் கூக்குரலை அலட்சியம்செய்வதுபோன்று காணப்பட்டார். அவளுடைய விசுவாசம் வெளிப்பட்டபோது, அவர் அவளை வார்த்தைகளால் பாராட்டி, அவள் கேட்ட விலைமதிப்புள்ள வரத்தையும் கொடுத்தனுப்பினார். இடைவிடாது ஜெபிக்கும் ஜெபத்தின் முடிவைக் காண்பிக்கும்பொருட்டாக, இந்தச் சம்பவம்

வேதாகமத்தில் இடம்பெற்றுள்ளது. கிறிஸ்துவின் சீடர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட இந்தப் பாடத்தை பின்னர் ஒருபோதும் மறந்துவிடவில்லை. (32)

கிறிஸ்துதாமே அந்தத் தாயின் இதயத்தில் முறியடிக்கப்படக்கூடாத அளவிற்கு விடாப்பிடியாக இருக்கும் அந்த இயல்பினை வைத்தார். நியாயாதிபதிக்கு முன்பாக நின்று கெஞ்சிக்கொண்டிருக்கும் அந்த விதவைக்கு தைரியத்தையும், உறுதியையும் கிறிஸ்துதாமே வழங்கினார். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு யாப்போக்கு ஆற்றங்கரையில் நடைபெற்ற புரிந்துகொள்ளமுடியாத போராட்டத்தில், கிறிஸ்து யாக்கோபை அதே விடாப்பிடியான விசுவாசத்தோடு ஏவினார். அவர்தாமே நிலைநாட்டிய அந்த விசுவாசத்திற்காக வெகுமதி கொடுக்க அவர் தவறிவிடவில்லை. (33)

பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் வாசம்செய்கிற தேவன் நீதியாக நியாயஞ்செய்கிறார். தமது சிங்காசனத்தைச் சுற்றிநிற்கும் திரளான தூதர்கள் மீது அவருக்கு இருக்கும் அக்கறையைக்காட்டிலும், பாவ உலகத்தில் சோதனையில் சிக்கித்தவிக்கும் தமது ஜனங்களிடம் மிகுந்த அக்கறை யுள்ளவராக இருக்கிறார். (34)

இவ்வுலகத்தில் குடியிருப்பவர்களுக்காக கிறிஸ்து அளவிடமுடியாத கிரயத்தைச் செலுத்தியதின் நிமித்தமாக, பரலோகம் முழுவதும், இந்த அகிலத்தில் ஒரு புள்ளிபோன்று காணப்படும் நமது உலகத்தின்மீது மிகுந்த கவனம் செலுத்துகிறது. கர்த்தரால் மீட்கபட்டவர்கள் இங்கு இருப்பதினால், அறிவின் பிணைப்புகளால் இவ்வுலகத்தைப் பரலோகத்தோடு நமது “மீட்பர்” இணைத்துள்ளார். ஆபிரகாமின் நாட்களிலும், மோசேயின் நாட்களிலும் பரலோகத்தின் தூதர்கள் பூமியிலே மனிதரோடு நடந்து பேசியிருந்ததைப் போன்று, இன்றும் செய்கின்றனர். நமது மாபெரும் பட்டணங்களில் அன்றாடம் நடைபெறுகின்ற சுறுசுறுப்பான நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் காலையிலிருந்து மாலைவரை தொழில்கள், விளையாட்டுகள், களியாட்டுகள் ஆகியவைகளே வாழ்க்கையென்பதாக எண்ணி, பொதுவழிகளிலும் வியாபார நிறுவனங்களிலும் நிரம்பிக் காணப்படுகின்ற மக்கள் கூட்டங்களிலும் கண்களால் காணக்கூடாத உண்மையான மேலான பரலோகக் காரியங் களைப்பற்றி சிந்தித்து, தியானிக்க ஒரு சிலரே காணப்படுகின்ற அந்த இடங்களிலும், பரலோகமானது விழிப்போடு கவனிக்கின்ற தனது காவலாளிகளையும் பரிசுத்த தூதர்களையும் வைத்திருக்கிறது. காணக்கூடாத பரலோகத்தின் பிரதிநிதிகள் மனிதனின் ஒவ்வொரு வார்த்தையையும், செய்கையையும் கவனிக்கின்றனர். ஒவ்வொரு வியாபார மற்றும் பொழுது போக்குக்கூட்டத்திலும், ஒவ்வொரு ஆராதனைக்கூட்டத்திலும் நம் கண்களால் காணக்கூடாத பல நபர்கள் நடவடிக்கைகளைக் கவனிக்கின்றனர். காணக்

கூடாத உலகத்தை மறைத்துக்கொண்டிருக்கின்ற திரையை பரலோக அறிவு ஜீவிகள் ஒரு புறமாக விலக்கும்போது, நாம் செய்கின்ற அல்லது சொல்லுகின்ற அனைத்துக் காரியங்களுக்கும் நம் கண்களால் பார்க்கமுடியாத சாட்சிகள் இருக்கிறார்களென்பதை சிந்திக்க, இந்த உலகின் துரிதமான பரபரப்பான வாழ்க்கையினின்று விலகலாம். (35)

இந்த உலகத்திற்கு வருகைதருகின்ற தூதர்களின் பணியைக்குறித்து நாம் இப்பொழுது புரிந்துகொண்டிருப்பதைவிட அதிகமாகப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். நமது அனைத்து வேலைகளிலும் பரலோக தூதுவர்களின் கவனமும் ஒத்துழைப்பும் நமக்கு இருக்கிறதென்பதை ஆழ்ந்து சிந்திப்பது நமக்கு நல்லது. தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்து உரிமைகோருகின்ற மனத்தாழ்மையுள்ள சாந்தமுள்ள கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஜோதிமயமான—வல்லமையான—கண்களால் காணக் கூடாத பரலோக ஒளியின் சேனைகள் உதவிசெய்கின்றன. ஆயிரமாயிரமான பதினாயிரம் பதினாயிரமான வல்லமைமிகுந்த, சிறந்த கேரூபீன்கள், சேராபீன்கள், தூதர்கள் அவரது வலதுபக்கத்தில் நிற்கிறார்கள். “இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?” —எபிரெயர் 1:14. (36)

மனிதனின் செயல்களையும், வார்த்தைகளையும் இந்தத் தூதர்கள் குறிப்பேட்டில் உண்மையாகப் பதிவுசெய்து வைக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதியும், கொடூரமான அல்லது அநீதியான செயலும், தீய பணியாளர்களின் வல்லமையால் இழைக்கப்பட்ட அனைத்து துன்பங்களும் பரலோகத்தில் பதிவுசெய்யப்படுகிறது. (37)

“தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமை யுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.”- —லூக்கா 18:7,8. (38)

“ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. வருகிறவர் இன்னுங்கொஞ்சக் காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்”—எபிரெயர் 10:35–37; “இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும்

வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே"—யாக்கோபு 5:7,8. (39)

தேவனுடைய நீடியபொறுமை அதிசயமானது. இரக்கம் பாவியோடு இடைபடும் காலங்களில் நீதி பொறுமையுடன் காத்துநிற்கிறது. இருப்பினும் "நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்"—சங். 97:2. "கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர்; அவர்களை ஆக்கினையில்லாமல் தப்புவிக்கமாட்டார்; கர்த்தருடைய வழி சுழல்காற்றிலும் பெருங்காற்றிலும் இருக்கிறது; மேகங்கள் அவருடைய பாதத்தூளா யிருக்கிறது"—நாகூம் 1:3. (40)

தேவனுடைய பிரமாணங்களை மீறுவதில் இந்த உலகம் துணிகரங் கொண்டிருக்கிறது. அவருடைய நீடியபொறுமையினால் மனிதர் அவரது அதிகாரத்தை காலின்கீழ்ப்போட்டு மிதிக்கிறார்கள். "தேவனுக்கு அது எப்படித் தெரியும்? உன்னதமானவருக்கு அதைப்பற்றி அறிவு உண்டோ?" (சங்கீதம் 73:11) என்று சொல்லி, தேவனுடைய ஜனங்களை ஒடுக்கி, அவர்களுக்கு விரோதமாய் கொடுமைசெய்து, ஒருவரையொருவர் பலப்படுத்திக்கொள்கிறார்கள். குறிக்கப்பட்ட அந்த எல்லையை அவர்கள் கடந்துசெல்லும் நேரம் மிகச் சமீபமாக இருக்கிறது. ஆனால், அவர்கள் கடந்துசெல்ல இயலாத எல்லைக்கோடு ஒன்று இருக்கிறது. தேவனுடைய நீடியபொறுமை, அவருடைய கிருபை, அவருடைய இரக்கம் ஆகியவைகளின் எல்லையை மனிதன் இப்பொழுதே ஏறக்குறைய கடந்துவிட்டான். கர்த்தர் தமது கனத்தை நிலைநிறுத்தவும், அநீதி பெருகாமல் தடுக்கவும் தமது ஜனத்தை மீட்கவும் மனிதனின் செயல்பாட்டில் குறுக்கிடுவார். (41)

நோவாவின் நாட்களில் சிருஷ்டிகரை ஜனங்கள் நினைவில்கொள்ளாமற் போகுமளவிற்கு அவருடைய கற்பனைகளை அலட்சியப்படுத்தினர். அவர்களுடைய அக்கிரமம் பெருமளவிற்குப் பெருகினதினிமித்தம் கர்த்தர் வானத்தின் மதகுகளைத் திறந்து, பூமியின் துன்மார்க்கரை நிக்கிரகம் பண்ணினார். (42)

காலங்காலமாக தேவன் தாம் செயல்படும் முறையை வெளிப்படுத்தி யிருக்கிறார். ஒரு ஆபத்தான சூழ்நிலை உருவாகியபோதெல்லாம் அவர் தம்மை வெளிப்படுத்தி, சாத்தானின் திட்டங்களை முறியடிக்கத்தக்கதாக குறுக்கிட்டுள்ளார். தேசங்களிலும், குடும்பங்களிலும், தனிநபர்களின் வாழ்விலும், அவரது தலையீடு குறிப்பிடப்பட்டவிதத்தில் காணப்படும்படியாக, ஆபத்தான காலக்கட்டங்கள் வரும்படி அவர் அடிக்கடி அனுமதிக்கிறார். தேவனுடைய பிரமாணங்களை அழியாமல் காத்து, அவரது மக்களுக்கு

நியாயம் செய்கின்ற ஒரு தேவன் இஸ்ரவேலில் இருக்கிறாரென்பதை வெளிப்படுத்தியிருக்கிறார். (43)

அக்கிரமம் பெருகியிருக்கும் இந்நாட்களில் கடைசி மாபெரும் நெருக்கடி நேரம் சமீபித்திருக்கிறதென்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். சகமனிதர்கள் தேவனுடைய கற்பனைகளை முற்றிலும்விட்டு, அவருடைய ஜனங்களை நெருக்கித் துன்பப்படுத்தும்போது, கர்த்தர் தாம் தெரிந்து கொண்டவர்கள் சார்பில் குறுக்கிடுவார். (44)

காலம் சமீபமாகிறபோது: "என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக் குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள். இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தினிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருவார்; பூமி தன் இரத்தப்பழிகளை வெளிப்படுத்தி, தன்னிடத்தில் கொலைசெய்யப்பட்டவர்களை இனி மூடாதிருக்கும்" (ஏசாயா 26:20,21) என்று கூறுவார். கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் இப்பொழுது ஏழைகளை ஏமாற்றி ஒடுக்கலாம். விதவைகளையும் திக்கற்ற பிள்ளைகளையும் கொள்ளை யிடலாம். தேவனுடைய மக்களுடைய மனச்சாட்சிகளை அடக்கியாள முடியாததால் அவர்கள் தங்களுக்கே உரிய சாத்தானிய வெறுப்பை வெளிப்படுத்தலாம். ஆனால் இவைகள் அனைத்திற்காகவும் தேவன் அவர்களை நியாயத்தீர்ப்பிலே கொண்டுவருவார். "இரக்கஞ்செய்யாத வனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்" (யாக். 2:13). கர்த்தருடைய பிள்ளைகளின் உடல்களுக்கும், உள்ளங்களுக்கும் அவர்களால் இழைக்கப்பட்ட வேதனைகளுக்கான கணக்கை இந்த பூமி அனைத்திற்கும் நியாயாதிபதியாக நிற்கப்போகிறவருக்கு முன்பாக ஒப்புவிக்க வேண்டிய நாள் தொலைவில் இல்லை. இப்பொழுது அவர்கள் கர்த்தருடைய பிள்ளைகள்மீது குற்றச்சாட்டுகளைக் கூறலாம்; தேவனுடைய பணியைச்செய்ய நியமிக்கப்பட்டவர்களைப் பார்த்து பரிகசிக்கலாம்; அவரை விசுவாசிக்கும் பிள்ளைகளை சிறையிலடைக்கலாம், சங்கிலிகளால் கட்டலாம், நாடு கடத்தலாம், கொலைசெய்யலாம். ஆனால், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஒவ்வொரு மனவியாகுலத்திற்கும், வடிக்கும் ஒவ்வொரு சொட்டு கண்ணீருக்கும் பதில் சொல்லியாக வேண்டும். அவர்களுடைய பாவங்களுக்கு இரட்டிப்பாய் தேவன் பதிலளிப்பார். மருளவிழும் சபைக்கு அடையாளமாகத் திகழும் பாபிலோனைக்குறித்து: "அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களை தேவன் நினைவுகூர்ந்தார். அவள் உங்களுக்குப் பலனளித்ததுபோல நீங்களும்

அவளுக்குப் பலனளியுங்கள்; அவளுடைய கிரியைகளுக்குத்தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீருங்கள்; அவள் உங்களுக்குக் கலந்துகொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்துகொடுங்கள்" (வெளி. 18:5,6) என்று கர்த்தர் நியாயத்தீர்ப்பைக் கொடுக்கப்போகும் தமது ஊழியக்காரர்களிடத்தில் கூறுவார். (45)

இந்தியாவிலிருந்தும், ஆப்பிரிக்காவிலிருந்தும், சீனாவிலிருந்தும், பல தீவுகளிலிருந்தும், இன்னும் பல கிறிஸ்தவ நாடுகளென்று அழைக்கப்படுகின்ற நாடுகளிலிருந்தும்கூட ஒடுக்கப்பட்ட இலட்சக்கணக்கான ஜனங்களின் கூக்குரல் தேவசமூகத்தை எட்டுகிறது. இந்த அழுகையின் கூக்குரலுக்குப் பதில் வர இன்னும் வெகுகாலம் செல்லாது. நெறிதவறிய இவ்வுலகத்தை நோவாவின் நாளில் செய்ததுபோல, தண்ணீரால் அல்லாமல், எந்த மனித சக்தியாலும் அணைக்க இயலாத அக்கினிக் கடலால் சுத்திகரிப்பார். (46)

"யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்"—தானியேல் 12:1. (47)

மேல்மாடிகளிலிருந்தும் குடிசைகளிலிருந்தும், தூக்குமரங்களி லிருந்தும், இருண்ட நிலவறைகளிலிருந்தும், மலைகளிலிருந்தும், வனாந்தரங் களிலிருந்தும், பூமியின் குகைகளிலிருந்தும், சமுத்திரங்களின் ஆழங்களி லிருந்தும் கிறிஸ்து தமது பிள்ளைகளை தம்மிடமாகக் கூட்டிச்சேர்ப்பார். பூமியில் இவர்கள் ஆதரவற்றவர்களாக துன்பத்தையும் சாத்தானுடைய வேதனைகளையும் அனுபவித்து வந்தார்கள். சாத்தானுடைய வஞ்சனையான சூழ்ச்சிகளுக்கு இடங்கொடுக்காத இலட்சக்கணக்கானோர் அபகீர்த்தி குவிக்கப்பட்டவர்களாக கல்லறைகளில் நித்திரைசெய்கிறார்கள். மனித நீதிமன்றங்களில் தேவனுடைய பிள்ளைகள் பெருங்குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் தேவனே நியாயாதிபதியாயிருக்கும் நாள் சமீபமாயிருக்கிறது (சங்கீதம் 50:6). அப்பொழுது பூலோகம் வழங்கிய தீர்ப்புகள் மாற்றப்படும். "தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்"—ஏசாயா 25:8; "அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது" (வெளி. 6:11); "அவர்களைப் பரிசுத்த ஜனமென்றும், கர்த்தரால் மீட்கப்பட்டவர்களென்றும் சொல்லுவார்கள்"—ஏசாயா 62:12. (48)

எத்தகைய சிலுவைகளை அவர்கள் சுமக்கவேண்டுமென்று அழைக்கப் பட்டிருந்தாலும், எத்தகைய இழப்புகளை அவர்கள் அனுபவித்திருந்தாலும்,

எத்தகைய இக்கட்டுகளால் துன்பப்பட்டிருந்தாலும், அவர்கள் தங்களது பூலோக வாழ்வையே இழந்திருந்தாலும்கூட, இத்தகைய தேவனுடைய பிள்ளைகளுக்கு ஏராளமாக இழப்பீடு வழங்கப்படும். "அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்"—வெளிப்படுத்தல் 22:4. (49) ★

# 15

# பாவிகளை ஏற்றுக்கொள்ளும் இயேசு!

**(மூலநூல் : பக்கங்கள் 185–197)**
**லூக்கா 15:1–10**

ஆயக்காரரும் பாவிகளும் இயேசுவைச் சூழ்ந்திருந்தனர். அப்போது ரபிமார்கள்: “இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்” என்று தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர். (1)

இந்தக் குற்றச்சாட்டை மறைமுகமாகப் பரப்பி, கிறிஸ்து பாவிகளோடும் இழிந்தநிலையில் இருப்பவர்களோடும் இணைந்து அவர்களது அக்கிரமங்களைக்குறித்த உணர்வு இல்லாதவராயிருக்கிறார் என்றார்கள். ரபிமார்கள் இயேசுவைக்குறித்து ஏமாற்றமடைந்திருந்தார்கள். இவ்வளவு உயர்வான குணம் படைத்தவர் ஏன் தங்களுடன் இணைந்து தங்கள் போதனை முறைகளைப் பின்பற்றக்கூடாது என வினவினார்கள். ஏன் அவர் அனைத்துத் தரப்பு ஜனங்களிடமும் கபடமற்றவராக—சகஜமாகப் பழகுகிறார் என்று எண்ணினார்கள். அவர் உண்மையான தீர்க்கதரிசியாயிருந்தால், தங்களுடன் மாத்திரம் இசைந்துபோய், ஆயக்காரர்களையும் பாவிகளையும் அவர்களது தகுதிக்கு ஏற்றபடி அலட்சியஞ்செய்திருப்பாரென்று கூறினார்கள். தொடர்ந்து போராடிக்கொண்டிருந்தும் யாருடைய தூய்மையான வாழ்க்கை பயபக்தியோடுகூடிய ஒரு அச்சத்தை ஏற்படுத்தி அவர்களைக் கண்டனம்செய்ததோ, அவர் (இயேசு) சமுதாயத்தால் புறக்கணிக்கப் பட்டவர்களோடு வெளிப்படையாகத் தெரியுமளவிற்குப் பரிவுடன் பழகிவந்தது, தங்களைச் சமுதாயத்தின் காவலர்களாக எண்ணிக்கொண்டிருந்தவர்களுக்குக் கோபத்தை உண்டாக்கியது. அவர்கள் தங்களை படித்தவர்களாகவும், நற்குணமுள்ளவர்களாகவும், ஒப்புயர்வற்ற சமயப்பற்று உள்ளவர்களாகவும் கருதினார்கள். கிறிஸ்துவின் முன்மாதிரி அவர்களுடைய தன்னலத்தை அப்பட்டமாக வெளிப்படுத்திக்காட்டியது. (2)

ரபிமார்களை எப்போதும் அவமதித்து, தேவாலயத்திலேயே காணப் படாதவர்களுங்கூட, இயேசுவைப் பின்தொடர்ந்து தங்களையும் மறந்த நிலையில் கவனத்துடன் அவருடைய உபதேசத்தை கேட்டபோது, அவர்கள் எரிச்சலடைந்தார்கள். வேதபாரகர்களும் பரிசேயர்களும் அவருடைய தூய்மையான பிரசன்னத்தில் தாங்கள் கண்டனம் செய்யப்பட்டதையே உணர்ந்தார்கள். இப்படியிருக்கையில், ஆயக்காரர்களும் பாவிகளும் எவ்வாறு இயேசுவண்டை ஈர்க்கப்பட்டார்கள்! (3)

இவர் பாவிகளை ஏற்றுக்கொள்ளுகிறாரென்ற தங்களுடைய குற்றச் சாட்டில் இந்த கேள்விக்கான பதில் இருக்கின்றது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. இயேசுவண்டை வந்த அனைவரும் தங்களுக்கும்கூட பாவக்குழியிலிருந்து தப்பித்துக்கொள்ள வழி இருக்கிறதென்பதை அவருடைய பிரசன்னத்தில் உணர்ந்தனர். பரிசேயர் அவர்களை எப்போதும் இகழ்ந்து கண்டனம் செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் கிறிஸ்துவோ இந்த ஜனங்கள் பிதாவின் சமூகத்தைவிட்டு வெகுதூரம் சென்றுவிட்ட போதிலும், அவர்களை பிதாவினால் மறக்கப்படாத தேவனுடைய பிள்ளை களாகவே வரவேற்றார். அவர்களது பாவமும் துன்பத்தில் உழன்றுகொண்டி ருக்கிற அவர்களது நிலையும் அவரது மனதுருக்கத்திற்கு இன்னும் அதிக பாத்திரவான்களாகவே மாற்றியது. எவ்வளவு அதிகத் தூரமாக அவர்கள் அவரைவிட்டுப் பிரிந்து திரிந்து அலைந்தார்களோ அவ்வளவிற்கதிகமாக அவர்கள்மீது அவர் வாஞ்சைவைத்து, அவர்களின் விடுதலைக்காக அதிக மாகத் தியாகம்செய்தார். (4)

இவை அனைத்தையும் இஸ்ரவேலின் போதகர்கள் புனித ஏடுகளி லிருந்து கற்றிருந்திருக்கலாம். எனினும், அக்காரியமே தாங்கள் அப்புனித ஏடுகளின் காப்பாளர்களென்றும் விளக்கவுரையாளர்களென்றும் பெருமை கொள்ளச்செய்தது. கொடிதான பாவத்தில் விழுந்த தாவீது: “காணாமற் போன ஆட்டைப்போல வழிதப்பினேன்; உமது அடியேனைத் தேடுவீராக” (சங். 119:176) என்று எழுதவில்லையா? ஒரு பாவிமீது தேவன் வைத்திருக்கும் அன்பைக்குறித்து மீகா: “தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபைசெய்ய விரும்புகிறபடியால், அவர் என்றென்றைக்கும் கோபம் வையார்” (மீகா 7:18) என்று எழுதுகிறார். (5)

### காணாமற்போன ஆடு!

இந்தச் சந்தர்ப்பத்தில், கிறிஸ்து வேதாகமத்திலிருந்து வசனங்களை எடுத்துப் போதியாமல், ஜனங்களுடைய சொந்த அனுபவத்திலிருந்து ஒரு

பாடத்தைக் கற்பிக்க விரும்பினார். யோர்தானுக்கு கிழக்கேயுள்ள பீடபூமியில், மிருகஜீவன்கள் மேய்வதற்கு புல்தரைகள் ஏராளம் இருந்தன. மலையருவி ஓடும் பள்ளத்தாக்குகளிலும், மரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ள குன்றுகளிலும் ஏராளமான ஆடுகள் மேய்ச்சலின்போது காணாமற்போயிருக்கின்றன. அவைகள் தேடப்பட்டு மேய்ப்பனின் கவனமுள்ள பராமரிப்பினால் மீண்டும் கொண்டுவரப்பட்டன. இயேசுவைச் சுற்றியிருந்த ஜனங்களில் மேய்ப்பர்களும், மந்தையில் தங்கள் பணத்தை முதலீடுசெய்தவர்களும் இருந்தனர். அவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் உதாரணத்தை நன்கு புரிந்துகொண்டனர். "உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடு களையும் வனாந்தரத்திலேவிட்டு காணாமற்போன ஆட்டைக் கண்டு பிடிக்குமளவும் தேடித் திரியானோ?" என்றார். (6)

நீங்கள் அலட்சியம்செய்கிற இந்த ஆத்துமாக்கள் தேவனுடைய சம்பத்தாயிருக்கிறார்கள் என்று இயேசு சொன்னார். சிருஷ்டிப்பினாலும் மீட்பினாலும் அவர்கள் அவருடையவர்கள். அவருடைய பார்வையில் அவர்கள் மதிப்புமிக்கவர்கள். மேய்ப்பன் தன் ஆட்டை நேசிப்பதினால் அவைகளில் ஏதேனும் ஒன்று காணாமல் போனாலும்கூட அவனால் இளைப்பாற முடிகிறதில்லை. மேய்ப்பனுடைய அன்பைக்காட்டிலும் மேலான எல்லையற்ற அன்பை நம்மீது வைத்திருக்கும் தேவன், தம்மைவிட்டு வழிவிலகிச் செல்லும் ஆத்துமாக்களை மிகுந்த பரிவுடன் நோக்குகிறார். மனிதன் அவருடைய அன்பை மறுக்கலாம், அவரைவிட்டு தூரம் செல்லலாம். அவர்கள் இன்னொரு எஜமானரைத் தெரிந்துகொள்ளலாம். இருப்பினும், அவர்கள் தேவனுடையவர்கள். அவருக்குச் சொந்தமானவர்களை மீட்க அவர் வாஞ்சிக்கிறார். "ஒரு மேய்ப்பன் சிதறுண்ட தன் ஆடுகளின் நடுவே இருக்கிற நாளில் தன் மந்தையைத் தேடிக்கொண்டிருக்கிறதுபோல, நான் என் ஆடுகளைத் தேடி, மப்பும் மந்தாரமுமான நாளிலே அவைகள் சிதறுண்டு போன எல்லா இடங்களிலுமிருந்து அவைகளைத் தப்பிவரப்பண்ணுவேன்" (எசேக்கியேல் 34:12) என்று கர்த்தர் சொல்லுகிறார். (7)

உவமையிலே மிகவும் அற்பமானதாக எண்ணப்படக்கூடிய ஒரு ஆட்டைத் தேடி மேய்ப்பன் செல்கிறான். அதேபோன்று ஒரே ஒரு ஆத்துமா தொலைந்துபோயிருந்தாலும், அந்த ஒரு ஆத்துமாவுக்காக கிறிஸ்து மரித்திருந்திருப்பார். (8)

மந்தையைவிட்டு வழிதப்பிய ஆடு படைக்கப்பட்ட அனைத்துப் பிராணி களிலும் மிகவும் உதவியற்றதாக இருக்கிறது. மேய்ப்பன் அதைத் தேடிச் செல்லவேண்டும். ஏனெனில், திரும்பி வருகிறதற்கு அதற்கு வழி தெரியாது.

அதுபோலவே, தேவனைவிட்டு வழிதவறிய மனிதனும் தொலைந்துபோன ஆட்டுக்குட்டியைப்போல் உதவியற்றவனாக இருக்கிறான். தெய்வீக அன்பு அவனைச் சந்தித்து மீட்காவிடில், அவனால் ஒருபோதும் தேவனிடமாகச் சேரும்வழியைக் கண்டுபிடிக்க இயலாது. (9)

ஒரு ஆடு தொலைந்துபோனதை கண்டுபிடித்த மேய்ப்பன், தொழுவத்தில் பத்திரமாக அடைக்கப்பட்ட ஆடுகளைப்பார்த்து திருப்தியோடு: "எனக்கு தொண்ணூற்றொன்பது ஆடுகள் இருக்கின்றன; வழிதவறிப்போன ஒரு ஆட்டைத் தேடிப்போவது எனக்கு அதிக தொந்தரவு கொடுக்கும். அந்த ஆடு தானாக வரட்டும். அது உள்ளேவரும்படியாக தொழுவத்தின் கதவைத் திறந்து வைத்திருப்பேன்" என்று நிச்சயமாகவே கூறமாட்டான். ஆடு காணாமல்போனவுடன் அவன் துக்கமடைந்து, மனவிசாரம் கொள்கிறான். மறுபடியும் மறுபடியுமாக ஆடுகளை எண்ணுகிறான். ஒரு ஆடு காணாமற்போய்விட்டது என்பது உறுதியானவுடன், நித்திரையை இழந்தவனாக தன்வசமாய் தொழுவத்தில் இருக்கும் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டுவிட்டு, காணாமற்போன ஆட்டைத் தேடிச்செல்கிறான். இரவு எவ்வளவு இருண்டிருந்ததோ, சூறைக்காற்று எவ்வளவு கடுமையாக வீசிக்கொண்டிருந்ததோ, வழி எவ்வளவு ஆபத்து நிறைந்ததாக இருந்ததோ, மேய்ப்பனின் கவலையும் அவ்வளவு அதிகமாக இருந்தது; அவனுடைய தேடுதலும் அதிக ஊக்கமுடையதாக இருந்தது. காணாமற்போன ஒரு ஆட்டைக் கண்டுபிடிக்க அவன் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறான். (10)

தூரத்தில் முதன்முதலாக வலுவிழந்த மெல்லிய குரலைக் கேட்கும் போது, மேய்ப்பனின் மனப்பாரம் எவ்வளவிற்கதிகமாய் குறைகிறது! சத்தத்தை பின்தொடர்ந்தவனாக செங்குத்தான உச்சிகளில் ஏறி, தன் உயிரை பணயம் வைத்து குன்றுகளின் உச்சிவரை ஏறுகிறான். சாகும் தருவாயில் இருப்பதை குறையும் அதன் குரலோசையில் உணர்ந்து, இவ்வாறு தேடுகிறான். இறுதியில் அவனது முயற்சிக்கு வெற்றிகிடைக்கிறது. காணாமற்போன ஆடு கண்டுபிடிக்கப்பட்டாயிற்று. இப்போது, இவ்வளவு அதிகமான தொல்லையை தனக்கு கொடுத்துவிட்டதேயென்று அவன் அதைத் திட்டுகிறதில்லை. சாட்டையை வைத்து அதை விரட்டுகிறதில்லை. அதை நடத்திக்கொண்டு போகவேண்டுமென்றுகூட முயற்சிசெய்கிறதில்லை. நடுங்கிக்கொண்டிருக்கும் அந்தப் பிராணியை மகிழ்ச்சியோடு தனது தோள்களிலே சுமந்துசெல்கிறான். அந்த ஆடு புண்பட்டு கன்றிப்போய் காயப்பட்டு இருந்தாலோ அதை இருகரங்களிலும் ஏந்தி, அவனது சொந்த இதயத்தின் வெப்பம் அதற்கு ஜீவனைக் கொடுக்கத்தக்கதாக அதை தனது மார்போடு அணைத்துக்

கொள்கிறான். தன் முயற்சி வீண்போகவில்லையென்ற நன்றியுணர்வோடு, அவன் அந்த ஆட்டை மந்தைக்குத் திரும்பவும் கொண்டுசெல்கிறான். (11)

ஆடு இல்லாமல் துக்கத்தோடு திரும்பிச் செல்லும் ஒரு மேய்ப்பனின் சித்திரத்தை நம் கற்பனைக்குக் கொடுக்காததற்காக தேவனுக்கு நன்றி சொல்லுவோம். உவமை தோல்வியைக்குறித்துக் கூறாமல் வெற்றியைக் குறித்தும், கண்டுபிடிப்பதின்மூலம் கிடைக்கும் சந்தோஷத்தைக்குறித்தும் கூறுகிறது. தேவனுடைய தொழுவத்திலிருந்து வழிதவறிப்போன ஒரு ஆடுகூட புறக்கணிக்கப்படுகிறதில்லை; உதவியின்றி ஒருவரும் கைவிடப்படுவதுமில்லை என்ற தெய்வீக உத்தரவாதம் இங்கு இருக்கிறது. கிரயத்திற்கு கொள்ளப் படுவதற்கு ஒப்புக்கொடுக்கிற ஒவ்வொருவரையும் ஒழுக்கக்கேடு எனப்படும் குழியினின்றும், பாவம் என்னும் முட்புதர்களினின்றும் கிறிஸ்து மீட்பார். (12)

நம்பிக்கை இழந்திருக்கும் ஆத்துமாவே, நீ எவ்வளவு துன்மார்க்கமாக நடந்திருந்தாலும் தைரியங்கொள். எனது மீறுதல்களை மன்னித்து, அவரது பிரசன்னத்திற்குள் வரும்படியாக ஒருவேளை என்னை அவர் அனுமதிப்பார் என்று எண்ணவேண்டாம். தேவன் ஏற்கெனவே முதலடி எடுத்து வைத்துவிட்டார். நீ அவருக்கு விரோதமாகக் கலகம்செய்தபோதும், உன்னைத் தேடி வந்தார். மேய்ப்பனின் இளகிய இதயத்துடன் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டுவிட்டு, வனாந்தரத்திற்குள் சென்று, காணாமற்போனதைத் தேடி அலைந்தார். கன்றி—காயப்பட்டு—அழிந்துபோகவிருந்த ஆத்துமாவை தம் அன்பின் கரம்கொண்டு அணைத்து, சந்தோஷமாக தமது பத்திரமான ஆட்டுக்கொட்டிலுக்குள் சுமந்து செல்லுகிறார். (13)

முதலாவது ஒரு பாவி மனந்திரும்பவேண்டும். அதன்பின்னரே தேவன் அவன்மீது அன்புசெலுத்துவாரென்று யூதர்கள் கற்பித்தனர். அவர்களுடைய பார்வையில் மனந்திரும்புதல் என்பது ஒரு கிரியையென்றும் அதின்மூலமாக பரலோகத்தின் அநுக்கிரகத்தை மனிதர் பெற்றுக்கொள்ளுகிறார்களென்றும் எண்ணப்பட்டது. இந்த எண்ணமே: "இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்" என்று கோபத்துடனும் ஆச்சரியத்துடனும் பரிசேயர்களைக் குரலெழுப்பச்செய்தது. மனந்திரும்புகிறவர்களைத் தவிர வேறு யாரையும் தேவனுடைய சமூகத்தை நெருங்குவதற்கு அனுமதிக்கக் கூடாதென்று எண்ணியிருந்தார்கள். ஆனால் காணாமற்போன ஆட்டின் உவமையின்மூலமாக, நாம் தேவனை நாடுவதினால் அல்லாமல் தேவன் நம்மை நாடித்தேடுவதின்மூலமாகவே இரட்சிப்பு வருகிறதென்பதை கிறிஸ்து நமக்குத் தெளிவாக்குகிறார். (14)

"உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்"—ரோமர் 3:11,12. (15)

காணாமற்போன ஆட்டை மந்தைக்குக் கொண்டுவரும்போது மேய்ப்பன் நன்றிப்பெருக்கோடு செவிக்கினிய பாடல்களைப் பாடுகிறான். அவன் தன் "சிநேகிதரையும் அயலகத்தாரையும் கூடவரவழைத்து: காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன். என்னோடேகூடச் சந்தோஷப்படுங்கள்" என்று கூறுகிறான். அதுபோலவே, வழிதவறிய ஒரு மனிதனை மாபெரும் மேய்ப்பனாகிய கிறிஸ்து கண்டுபிடிக்கும்போது, பரலோகமும் பூலோகமும் இணைந்து மட்டற்ற நன்றிசெலுத்தி மகிழ்கிறது. (16)

"மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான் களைக்குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டா யிருக்கும்" என பரிசேயர்களைப் பார்த்து கிறிஸ்து கூறினார். நீங்கள் தேவனுடைய தயவைப் பெற்றிருப்பதாகக் கருதுகிறீர்கள். உங்கள் சொந்த நீதியினிமித்தம் பாதுகாப்பாக இருப்பதாகக் கருதுகிறீர்கள். மனந்திரும்புதல் உங்களுக்கு அவசியமில்லையென்று கருதினால், என் ஊழியத்தின்மூலம் உங்களுக்கு எந்த பயனும் இல்லை. தங்களது இரங்கத்தக்கதான பாவ நிலையை உணருகின்ற ஆத்துமாக்களைமாத்திரமே மீட்கும்படியாக நான் வந்திருக்கிறேன். நீங்கள் அவமதிக்கின்ற வழிதவறியிருக்கும் என் ஜனங்கள்மீது பரலோக தூதர்கள் ஆர்வமாயிருக்கின்றனர். இந்த ஆத்துமாக்களில் ஒருவர் என்னுடன் இணைந்துகொள்ளும்போது, நீங்கள் குற்றஞ்சாட்டி அவர்களைப் பரிகசிக்கின்றீர்கள். ஆனால் பரலோகத் தூதர்கள் களிகூருகிறார்கள். அவர்களது வெற்றியின் கீதமானது பரலோக மன்றங்களில் ஒலிக்கின்றது. (17)

தேவனுக்கு விரோதமாகப் பாவம்செய்கிறவர் அழிக்கப்படும்போது பரலோகத்திலே களிகூருதல் உண்டாகிறதென்று ரபிமார்கள் மத்தியில் வழக்கச்சொல் ஒன்று உண்டு. தேவனுக்கு அழிவின் வேலை விசித்திரமான ஒரு வேலையென்று இயேசு கற்பித்தார். தேவன் உண்டாக்கிய ஆத்துமாக்களிலே அவரது சொந்தச் சாயல் மீண்டும் காணப்படுவதில்தான் பரலோகம் முழுவதும் மகிழ்ச்சியடைகிறது. (18)

பாவத்தில் நீண்டதூரம்வரை சென்று அலைந்து திரிந்தபின், அந்த நபர் மீண்டும் தேவனிடத்திற்குத் திரும்பும்போது, குற்றச்சாட்டுகளையும் அவநம்பிக்கையையும்எதிர்த்துப்போராடவேண்டியதிருக்கும். இத்தகையோரது மனந்திரும்புதலை சிலர் சந்தேகத்துடன் நோக்குவர். அந்த நபருடைய மனந்திரும்புதல் உண்மையானதுதானாவென்று சந்தேகிக்கும் சிலர் இருப்பார்கள். மற்றும் சிலர் இந்த நபர் சத்தியத்தில் உறுதியாக இல்லை; இவர் நீடிப்பார் என நான் நம்பவில்லை என்று கிசுகிசுப்பார்கள். இவர்கள்

தேவனுடைய பணியைச் செய்யாமல், சகோதரனைக் குற்றஞ்சாட்டுகிறவனான சாத்தானின் பணியைச் செய்கின்றனர். இவர்களது குற்றச்சாட்டுகளின் மூலமாக, சாத்தான் அவர்களை அதைரியப்படுத்தலாமென்றும், நம்பிக் கையினின்றும் தேவனிடமிருந்தும் வெகுதூரத்திற்கு துரத்திவிடலாமென்றும் நம்பிக்கைகொள்கிறான். மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் உண்டாகும் மிகுந்த சந்தோஷத்தைக்குறித்து மனந்திரும்புகின்ற அந்தப் பாவி ஆழ்ந்து சிந்தனைசெய்யட்டும். அவன் தேவனுடைய அன்பில் இளைப்பாறட்டும். பரிசேயர்கள் அவர்கள்மீது கொள்ளும் சந்தேகத்தைக் குறித்தோ அல்லது அவர்கள் செய்யும் பரிகாசத்தைக்குறித்தோ எக்காரணங் கொண்டும் அதைரியப்படாமலிருக்கட்டும். (19)

கிறிஸ்துவின் உவமை ஆயக்காரர்களுக்கும், பாவிகளுக்கும் மாத்திரமே பொருந்தும் என ரபிமார்கள் கருதினார்கள். ஆனால் அதற்கு விசாலமான ஒரு பொருளும் உண்டு. காணாமற்போன ஆடு கிறிஸ்துவைவிட்டு தூரம் சென்றுவிட்ட ஒரு பாவியை மாத்திரம் குறிக்காமல், பாவத்தினிமித்தம் மருளவிழுந்துவிட்ட நம்முடைய இந்த உலகையும் குறிக்கிறது. தேவன் தலைமைதாங்கி ஆட்சிசெய்கின்ற மாபெரும் ஆட்சிப்பகுதிகளில் இந்த உலகம் ஒரு அணுவைப்போன்று இருக்கிறது. எனினும், விழுந்துபோன இந்தச் சிறிய உலகம், அதாவது காணாமற்போன ஒரு ஆடு, பிரிந்துபோகாத மற்ற தொண்ணூற்றொன்பது ஆடுகளைவிட அவரது பார்வையில் மிகவும் அருமையானதாக இருக்கிறது. பரலோகமன்றங்களில் நேசிக்கப்படத்தக்க சேனைத் தலைவராக இருந்த கிறிஸ்து, விழுந்துபோன இந்த உலகத்தை இரட்சிப்பதற்காக தமது உன்னத நிலையிலிருந்து இறங்கி, பிதாவுடன் அவர் பெற்றிருந்த மகிமையை ஒதுக்கிவைத்துவிட்டு வந்தார். மேலே இருக்கும் —தம்மை நேசித்த காணாமற்போன—மற்ற தொண்ணூற்றொன்பது உலகங்களையும் விட்டுவிட்டு, இந்த உலகத்திற்கு வந்து, "நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்படவும், நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் நொறுக்கப்படவும்" தம்மை ஒப்புக்கொடுத்தார் (ஏசாயா 53:5). காணாமற் போன ஆட்டை திரும்பப் பெற்றுக்கொள்ளும் அந்த மகிழ்ச்சியை தாம் அடைந்துகொள்ளத்தக்கதாக, தமது குமாரனில் தேவன் தம்மையும் வழங்கினார். (20)

"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்"— 1 யோவான் 3:1; "நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்" (யோவா. 17:18) என்று கிறிஸ்து கூறுகிறார். "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை

அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (கொலோ. 1:24) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். கிறிஸ்து மீட்டிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் அவருடைய நாமத்தினாலே மற்றவர்களை—வழிதவறிப்போனவர்களை மீட்கும் பொறுப்பை தேவன் கொடுத்திருக்கிறார். இந்தப் பணியை ஆதி இஸ்ரவேலர்கள் அலட்சியப் படுத்தினார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோமென்று கூறிக்கொள்ளும் பலர் இன்றும் இந்த வேலையை அலட்சியப்படுத்தவில்லையா? (21)

அருமையான வாசகரே, கிறிஸ்துவைவிட்டுத் தூரம் சென்றுவிட்ட எத்தனை ஆத்துமாக்களை நீங்கள் அவருடைய மந்தைக்குத் திரும்பவும் கொண்டுவந்திருக்கிறீர்கள். சில சபை அங்கத்தினர்களை பயனற்றவர்கள் கவர்ச்சியற்றவர்கள் என்றெண்ணி அக்கறை செலுத்தாமல் அவர்களைவிட்டு நீங்கள் திரும்பும்போது, கிறிஸ்து தேடி அலைந்துகொண்டிருக்கிற அந்த ஆத்துமாக்களை அலட்சியம்செய்துகொண்டிருக்கிறதை நீங்கள் உணருகிறீர்களா? நீங்கள் வழிதப்பியோரைவிட்டுத் திரும்பும்போது, அந்த வேளையே உங்களது அரவணைப்பு அவர்களுக்கு மிகவும் அதிகமாக தேவைப்பட்டிருந்திருக்கலாம். ஒவ்வொரு சபைகூடுதலின்போதும் இளைப்பாறுதலுக்காகவும் சமாதானத்திற்காகவும் ஏங்கும் ஆத்துமாக்கள் ஏராளம் உள்ளனர். பொறுப்பற்ற வாழ்க்கை வாழ்வதுபோல் தோன்றினாலும், பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலுக்கு அவர்கள் உணர்வற்றவர்களாக இருப்பதில்லை; அவர்களில் பலரை நாம் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தலாம். (22)

காணாமற்போன ஆட்டை திரும்பவும் மந்தைக்கு அழைத்துவராத பட்சத்தில், அது மடிந்துபோகும்வரை அலைந்து திரிகிறது. மீட்கும்படியாக ஒரு கரம் நீட்டப்படாததினிமித்தமாக அநேக ஆத்துமாக்கள் அழிவின் குழியில் இறங்குகிறார்கள். தவறு செய்கின்ற இந்த நபர்கள் கடினப்பட்ட மனதுடையோராயும் பொறுப்பு இல்லாதவர்களாயும் காணப்படலாம். ஆனால் மற்றவர்களுக்குக் கிடைத்திருந்த அதேபோன்ற அனுகூலங்களை இவர்களும் பெற்றிருந்திருப்பார்களேயானால், ஆத்துமாவில் மிகப் பெரிய அளவில் மேன்மையான குணத்தை வெளிப்படுத்தியிருப்பார்கள். பயனுள்ள வாழ்விற்குத் தேவையான அதிகத் தாலந்துகளை உடையவர்களாகவும் அறியப்பட்டிருப்பார்கள். இவ்வாறு அலைந்து திரியும் ஆத்துமாக்களுக்காக தூதர்கள் அனுதாபப்படுகிறார்கள். இரக்கத்திற்கு மனிதனின் கண்கள் உலர்ந்து, இதயங்கள் கருணை காட்டாமல் மூடியிருக்கும்போது, தூதர்கள் கண்ணீர் சிந்துகின்றனர். (23)

ஆழ்ந்த—ஆத்துமாவைத்தொடும்—உருக்கமான உணர்வைக் காண்பதே அரிதாகவிருக்கிறது. ஆ! கிறிஸ்துவின் ஆவி எவ்வளவு அதிகமாகக்

காணப்படவேண்டும்! சுயத்தைப்பற்றிய சிந்தனை குறைந்து காணப்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். இவ்வாறு நித்திரையின்றி உருக்கத்தோடும் இரக்கத்தோடும் ஆத்துமாக்களைக்குறித்து எண்ணிப்பார்க்கின்றோமா? (24)

தங்களைக் கடிந்துகொள்வதற்காக கிறிஸ்து இவ்வுவமையைக் கூறியதாக பரிசேயர்கள் கருதினார்கள். அவரது ஊழியத்தைப்பற்றிய அவர்களது குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ளுவதற்குப்பதிலாக, ஆயக்காரரையும் பாவிகளையும் அவர்கள் அலட்சியம் செய்ததை அவர் கடிந்துகொண்டார். அவருக்கு எதிராக அவர்கள் தங்கள் இதயங்களை அடைத்துக்கொள்வார்களென்று எண்ணி இதை அவர் வெளியரங்க மாகச் செய்யவில்லை. இந்த பொருட் பாடத்தை அவர்கள் முன்பாக வைத்ததின்மூலமாக, தேவன் அவர்களிடம் எதிர்பார்ப்பதை அவர்கள் எப்படிச் செய்யத் தவறினார்களென்பதைச் சுட்டிக்காட்டினார். இஸ்ரவேல் ஜனங்களின் தலைவர்கள் உண்மையான மேய்ப்பர்களாக இருந்திருந்தால், மேய்ப்பனின் பணியைச் செய்திருப்பார்கள். கிறிஸ்துவின் அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தி, அவருடைய பணியைச் செய்வதில் அவருடன் இணைந்திருப்பார்கள். இதை அவர்கள் செய்ய மறுத்ததினால், அவர்களுடைய தெய்வபக்தி போலியானதென்று நிரூபிக்கப்பட்டது. கிறிஸ்துவின் கடிந்து கொள்ளுதலை அநேகர் புறக்கணித்தபோதிலும், சிலருடைய மனதில் அவைகள் குற்ற உணர்வை ஏற்படுத்தின. கிறிஸ்து பரமேறிய பின்னர், பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மீது இறங்கியபோது, அவருடைய சீடருடன் இணைந்து, உவமையில் கூறப்பட்டுள்ளபடி காணாமற்போனதைத் தேடும் பணியில் தங்களை ஈடுபடுத்தினார்கள்.(25)

## காணாமற்போன வெள்ளிக்காசு!

காணாமற்போன ஆட்டின் உவமையை வழங்கியபின்னர், வேறொரு உவமையை கிறிஸ்து கூறினார்: "அன்றியும், ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக் காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற் போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டு பிடிக்கிறவரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ?" (26)

கிழக்கு நாடுகளில், ஒரே அறைகொண்ட, ஜன்னலில்லாத, இருண்ட வீடுகள் ஏராளம் இருந்தன. தினந்தோறும் தரையைப் பெருக்கிச் சுத்தம் செய்யும் பழக்கமில்லாததினால், ஒரு காசு கீழே விழுமாயின், அது தூசியிலும் குப்பையிலும் துரிதமாக மறைந்துவிடும். அதைக் கண்டுபிடிக்க வேண்டுமானால், பகல் நேரத்திலும்கூட விளக்கைக் கொளுத்தி மிகவும் கவனமாக வீட்டைப் பெருக்கவேண்டும். (27)

குடும்பத்தலைவி தனது சொந்தக் குமாரத்திகளுக்கு கொடுப்பதற்காக, தனக்கு திருமணத்தின்போது பரிசாகக் கொடுக்கப்பட்ட காசுகளை மிகவும் கவனமாக மிக விலையேறப்பெற்ற உடைமையைப்போல் பாதுகாத்து வைத்திருப்பாள். ஆகவே, ஒரு காசு தொலைந்தாலும் அதை பேரிழப்பாகக் கருதி, அதைக் கண்டுபிடிக்கும்போது, அயலகத்துப் பெண்களை அழைத்து, அவர்களுடன் தன் மட்டற்ற மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்வாள். (28)

அந்த ஸ்திரீயானவள் "கண்டுபிடித்தபின்பு, தன் சிநேகிதிகளையும் அயல்வீட்டுக்காரிகளையும்கூட வரவழைத்து: காணாமற்போன வெள்ளிக் காசைக் கண்டுபிடித்தேன், என்னோடேகூட சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா? அதுபோல, மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"—லூக்கா 15:10. (29)

இந்த உவமையும் முந்தைய உவமையைப்போலவே காணாமற் போன ஒரு பொருளைக் கண்டெடுப்பதின்மூலம் கிடைக்கும் சந்தோஷத்தைக் குறித்துப் பேசுகிறது. ஆனால் இரு உவமைகளும் வெவ்வேறுவிதமான மக்களைக்குறித்துப் பேசுகிறது. தான் வழிதப்பியிருப்பது காணாமற்போன ஆட்டிற்குத் தெரியும். அது மேய்ப்பனையும் மந்தையையும் விட்டுவிலகி, தன்னை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது என்பதை அறியாதிருக்கிறது; மேலும் இந்தக் காரியம், தேவனை விட்டுப்பிரிந்து குழப்பத்திலும், நிந்தை யிலும், மிகக்கடுமையான சோதனையிலும் சிக்கித்தவிப்பதை உணருகின்ற ஜனங்களைச் சுட்டிக்காட்டுகிறது. தங்கள் மீறுதல்களினாலும், பாவங் களினாலும் தேவனைவிட்டுத் தூரம்சென்றுவிட்டபோதிலும், தங்கள் நிலை குறித்து உணர்வற்றிருக்கும் ஜனங்களை காணாமற்போன காசு சுட்டிக் காட்டுகிறது. அவர்கள் தேவனைவிட்டு தூரம்சென்றபோதிலும், அதை அறியாதிருக்கிறார்கள். அவர்களுடைய ஆத்துமாக்கள் ஆபத்தான நிலையில் இருந்தும், அதைக்குறித்த உணர்வும் அக்கறையும் இல்லாதிருக்கிறார்கள். தேவனுடைய கோரிக்கைகளை அலட்சியப்படுத்துபவர்களுங்கூட, அவரது பரிவுநிறைந்த அன்பிற்குப் பாத்திரராக இருக்கிறார்கள். தேவனிடத்தில் மீண்டும் கொண்டுவரப்பட நாம் அவர்களைத் தேடவேண்டும். (30)

ஆடு மந்தையைவிட்டு விலகிச்சென்று வனாந்தரத்திலோ, மலை யிலோ வழிதவறி காணாமற்போய்விடுகிறது. வெள்ளிக்காசு வீட்டிற்குள்ளேயே காணாமற்போய்விடுகிறது. அருகாமையில் இருந்தபோதிலும், சிரத்தையுடன் தேடுவதின்மூலமாகவே அதைக் கண்டெடுக்கமுடியும். (31)

இந்த உவமையில், குடும்பங்களுக்கான ஒரு பாடம் இருக்கிறது. பெரும்பாலும் குடும்பத்திலுள்ள அங்கத்தினர்களின் ஆத்துமாக்களைப்பற்றின

அக்கறையற்ற தன்மை அதிகம் காணப்படுகிறது. தேவனால் ஒப்படைக்கப்பட்ட ஈவாகிய குடும்பத்தின் அங்கத்தினர் குடும்பத்தின் உறவினின்று பிரிந்து விட்டதுபற்றி எவ்வளவு குறைவாக அக்கறைகாட்டப்படுகிறது! காணாமற் போன அது ஒரு வெள்ளிக்காசாகவே இன்னமும் இருக்கிறது. தூசியிலும் குப்பையிலும் மறைந்துகிடந்தாலும், மதிப்புள்ளதாகவே இருப்பதினால் அதின் சொந்தக்காரர் அதைத் தேடுகிறார். அதுபோலவே, பாவத்தினிமித்தம் தரம் தாழ்ந்து போனாலும் ஒவ்வொரு மனிதனும் தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றவனாகவே இருக்கிறான். நாணயத்திலே ஆட்சி செய்பவனுடைய சொரூபமும் மேலெழுத்தும் காணப்படுவதுபோல, சிருஷ்டிப்பின்போது தேவசாயலும் அவருடைய மேலெழுத்தும் மனிதனில் காணப்பட்டது. பாவத்தினிமித்தம் தேவசாயல் களங்கப்பட்டு மங்கலடைந்த போதிலும், அந்த எழுத்தின் சாயல் மீந்திருக்கிறதே. தேவன் அந்த ஆத்துமாவை மீட்பதற்காக, தமது நீதியிலும் பரிசுத்தத்திலும் தமது சொந்தச் சாயலை மீண்டும் கொண்டுவர விரும்புகிறார். (32)

உவமையில் கூறப்பட்டுள்ள பெண் கடும் முயற்சியுடன் காணாமற் போன காசினைத் தேடுகிறாள். விளக்கைக் கொளுத்தி தரையைப் பெருக்கு கிறாள். தேடுவதற்கு ஏற்படும் அனைத்து தடைகளையும் அப்புறப்படுத்து கிறாள். காணாமற்போனது ஒரே ஒரு காசாக இருந்தபோதிலும், அதைக் கண்டுபிடிக்கும்வரை அவள் தன் முயற்சிகளைக் கைவிடுவதில்லை. அது போலவே, குடும்பத்தில் தேவனைவிட்டுப் பிரிந்துநிற்கும் ஒரு நபரை மீட்பதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும். மற்ற நபர்களும் தங்களை ஜாக்கிரதையுடனும் ஊக்கத்துடனும் சுயபரிசோதனை செய்துகொள்ளவேண்டும். குடும்பத்தை நடத்திய விதத்தில் ஏதோ பிழைகளோ அல்லது தவறோ ஏற்பட்டிருக்குமோவென்றும், அந்தக் குறிப்பிட்ட தவறின் மூலமாக குடும்பத்திலுள்ள அந்த அங்கத்தினரின் மனம் கடினப்பட்டுப்போயி ருக்கலாமோவென்றும் ஆராயவேண்டும். (33)

குடும்பத்தில் ஒரு பிள்ளை தனது பாவநிலைகுறித்து உணர்வற்றி ருந்தால், பெற்றோர்கள் உடனே அந்த குழந்தைமீது தனிக்கவனம் செலுத்த வேண்டும். விளக்கு கொளுத்தப்படட்டும். தேவனுடைய வார்த்தையை அதின் வெளிச்சத்திலே ஆராய்ந்து, அதின்மூலம் ஏற்படும் வெளிச்சத்தைக்கொண்டு அது வழிதவறியதற்கான காரணம் கடும்முயற்சி யோடு கண்டுபிடிக்கப்படவேண்டும். பெற்றோர்கள் தங்கள் இதயங்களையும், பழக்கவழக்கங்களையும் ஆராய்ந்துபார்த்தல் அவசியம். பிள்ளைகள் கர்த்த ருடைய சுதந்தரமாயிருக்கிறார்கள். அதைச் சரியாக நாம் பராமரிக்காவிடில், அவருக்கு நாம் பதில்கூற வேண்டியதிருக்கும். (34)

சில பெற்றோர்கள் அந்நிய தேசங்களில் தேவ ஊழியத்தைச் செய்ய வாஞ்சிக்கிறார்கள். தங்களது சொந்தப் பிள்ளைகள் மீட்பரையும் அவரது அன்பையும்பற்றி அறியாத அந்நியர்களாக இருக்கும்போது அநேகர் வீட்டிற்கு வெளியில் கிறிஸ்துவின் ஊழியத்திலே சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கிறார்கள். தேவனுடைய ஊழியரோ அல்லது ஓய்வுநாள் பள்ளி ஆசிரியரோ தங்கள் பிள்ளைகளை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்துவார்களென்று நம்புகிறார்கள். ஆனால், இப்படிச் செய்வதின்மூலம் தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பொறுப்பினைத் தட்டிக்கழித்துக்கொண்டிருக்கிறார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் போதித்து, பயிற்றுவித்து நல்ல கிறிஸ்தவர்களாக ஜீவிக்க உதவிசெய்யும்போது, அவர்கள் தேவனுக்கு உயர்ந்த ஒரு சேவையைச் செய்கிறார்கள். மேன்மையான ஊழியத்தை தேவனுக்குச் செய்கிறார்கள். வாழ்நாள் முழுவதும் சிரத்தையுடன்கூடிய விடாமுயற்சியும், பொறுமையும் இந்தப் பணிக்குத் தேவை. இப்பணியை நாம் அலட்சியப்படுத்துவோமாயின், கிறிஸ்துவுக்கு உண்மையான உக்கிராணக்காரர்களாக இருக்க இயலாது. அலட்சியப்படுத்தியதற்கான காரணத்தை ஏற்று தேவன் நம்மை மன்னித்துவிடுவார் என்று நம்புவதும் தவறு. (35)

ஆனால், அலட்சியம்செய்துவிட்டோமென்ற குற்றத்தில் இருப்பவர்கள் நம்பிக்கையிழக்க அவசியமில்லை. காசினைத் தொலைத்துவிட்ட பெண் அதைக் கண்டுபிடிக்கும்வரைத் தேடினாள். “இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும்” (ஏசாயா 8:18) என்று மகிழ்ச்சியோடு தேவனிடத்தில் கூறும் நிலைக்கு வரும்வரை பெற்றோர் அன்பிலும் ஜெபத்திலும் விசுவாசத்தோடு தங்களது குடும்பங்களுக்காக பாடுபடவேண்டும். (36)

இதுவே உண்மையான குடும்ப ஊழியமாயிருக்கிறது. இந்த ஊழியத்தின் மூலமாக எவ்வாறாக குடும்பத்தினர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளு கிறார்களோ அதுபோலவே ஊழியத்தைச் செய்பவர்களும் ஆசீர்வதிக்கப்படு கிறார்கள். நாம் நம்முடைய குடும்பவட்டத்திற்கு உண்மையான அக்கறை யுடன் ஊழியம்செய்யும்போது, கர்த்தருடைய குடும்பத்தின் அங்கத்தினர் களுக்கு ஊழியம்செய்யும் தகுதியைப் பெறுகிறோம். நாம் கிறிஸ்துவுக்கு உண்மையாக இருப்போமானால், அவரோடும் அவருடைய குடும்பத்தின் பிள்ளைகளோடும் யுகயுகங்களாக வாழ்வோம். நம்முடைய குடும்ப அங்கத்தி னர்கள்மீது நாம் எவ்வாறு அக்கறைசெலுத்துகிறோமோ அவ்வாறாகவே கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கும் அன்பான சகோதர சகோதரிகளிடத்திலும் நாம் அக்கறை செலுத்தவேண்டும். (37)

இவ்வாறாகவே பணிசெய்யும்போது, மற்றவர்களிடத்திலும் ஊழியம் செய்யும்வண்ணமாக தேவன் நம்மைத் தகுதிப்படுத்துகிறார். நம்முடைய

இரக்கம் விரிவடைந்து, நம்முடைய அன்பு பெருகும்போது, அனைத்து இடங்களிலும் ஊழியஞ்செய்யும் வாய்ப்பு இருப்பதை அறிந்துகொள்வோம். இந்த உலகம் முழுவதுமே தேவனுடைய மாபெரும் மானிடக் குடும்பமாக இருக்கிறது. அந்தக் குடும்பத்தின் அங்கத்தினர்களில் ஒருவரைக்கூட நாம் அலட்சியம்செய்தல் கூடாது. (38)

நாம் எங்கிருந்தாலும் சரி, காணாமற்போன வெள்ளிக்காசினை தேடும் பொறுப்பு நமக்கிருக்கிறது. அதை நாம் தேடுகிறோமா? சமயக் காரியங்களில் அக்கறை காண்பிக்காத நபர்களை நாம் அனுதினமும் சந்திக்கிறோம்; அவர்களோடு பேசுகிறோம்; அவர்களுடைய ஆவிக்குரிய நலனில் நாம் அக்கறை காண்பிக்கிறோமா? பாவத்தை மன்னிக்கும் இரட்சகராக கிறிஸ்துவை அவர்களுக்கு அறிமுகம் செய்கிறோமா? கிறிஸ்துவின் அன்பினால் நம்முடைய இதயங்கள் அனலடைந்திருந்தும் அந்த அன்பைக்குறித்து அவர்களிடம் பேசுகிறோமா? இப்படி செய்யாவிடில், தேவனுடைய சிங்காசனத்திற்குமுன் தேவனுடைய இராஜ்யத்தை நிரந்தரமாக இழந்துவிட்ட அந்த ஆத்துமாக்களுடன் நிற்கும்போது, அவர்களை எப்படிச் சந்திப்போம்? (39)

ஒரு ஆத்துமாவின் மதிப்பை யாரால் அளவிடமுடியும்? அதின் மதிப்பை அறிய விரும்பினால், நீங்கள் கெத்சமெனே தோட்டத்திற்குச் சென்று, அங்கே பலமணிநேரங்களாக கடுந்துயரடைந்து, தம்முடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாக விழ கிறிஸ்து அனுபவித்த வேதனையின் மணித்துளிகளில் அவரோடு விழித்திருங்கள். இரட்சகர் சிலுவையில் உயர்த்தப்பட்டிருப்பதைப் பாருங்கள். “என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?” (மாற்கு 15:34) என்ற அவருடைய கதறலைக் கேளுங்கள். காயப்பட்ட தலையையும், ஈட்டியால் குத்தப்பட்ட விலாவையும், ஆணிகளால் கடாவப்பட்ட பாதங்களையும் நோக்கிப்பாருங்கள். கிறிஸ்து சகலத்தையும் துணிந்து கொடுத்தார். நம்முடைய இரட்சிப்பிற்காக பரலோகம்தானே ஆபத்துக்குட்பட்டது. மனந்திரும்புகிற ஒரேயொரு பாவிக்காக கிறிஸ்து தமது ஜீவனைக் கொடுத்திருப்பார் என்பதை கல்வாரியின் பாதத்தண்டை நினைவுகூரும்போது, ஒரு ஆத்துமாவின் மதிப்பு என்னவென்பதை உணர்ந்துகொள்வீர்கள். (40)

நீங்கள் கிறிஸ்துவுடன் தொடர்பு வைத்திருப்பீர்களானால், அவர் அளிக்கும் முக்கியத்துவத்தை ஒவ்வொரு மனிதனுக்கும் நீங்களும் அளிப்பீர்கள். கிறிஸ்து உங்கள்மீது காண்பித்த அதே ஆழமான அன்பினை நீங்களும் பிறரிடத்தில் காண்பிப்பீர்கள். அப்பொழுது கிறிஸ்து யாருக்காக உயிரைக் கொடுத்தாரோ ஆத்துமாக்களை துரத்துகிறவர்களாக அல்ல

வெற்றிகொள்பவர்களாக, தாக்குகிறவர்களாக அல்ல, கவருகிறவர்களாக இருப்பீர்கள். கிறிஸ்து தனிப்பட்ட முயற்சி செய்திருக்காவிட்டால், ஒருவரும் ஒருபோதும் தேவனண்டை மீண்டும் கொண்டுவரப்பட்டிருக்க முடியாது. இப்படிப்பட்ட தனியாள் ஊழியத்தின்மூலமாகத்தான் நாம் ஆத்துமாக்களை மீட்டுக்கொள்ளமுடியும். மரணத்தை நோக்கிச் செல்பவர்களைப் பார்க்கும் போது, உங்களால் அமைதியாக, முற்றிலும் அக்கறையற்ற நிலையில் இளைப்பாறிக்கொண்டிருக்க முடியாது. அவர்கள் பாவம் பெரிதாகவும் அவர்கள் துக்கம் தாங்க இயலாததாகவும் இருப்பதைக் காணும்போது, நீங்கள் மிகுந்த அக்கறையுடனும் மென்மையுடனும் அவர்களை அணுகி, அவர்களை மீட்கும் பணியில் ஈடுபடுவீர்கள். தேவனுக்கு எதிராகப் பாவஞ்செய்து, குற்ற உணர்வினால் நெருக்கப்படுகிறவர்களின் தேவையை கண்டுகொள்வீர்கள். உங்கள் இதயம் அனுதாபத்தால் நிறைந்து, உங்கள் கரம் அவர்களுக்கு உதவிட முன்வரும். விசுவாசமும் அன்புமான கரங்களால் அவர்களை கிறிஸ்துவண்டை கொண்டுவருவீர்கள். அவர்களைக் கவனித்திருந்து உற்சாகப்படுத்துவீர்கள். உங்கள் அனுதாபமும் உங்கள் நம்பிக்கையும் அவர்கள் தங்கள் மன உறுதியை இழந்துவிடாதபடிக்கு அவர்களைக் காக்கும். (41)

இந்தப் பணியில் பரலோகத்தின் தேவதூதர்கள் நம்மோடு ஒத்துழைக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். இழந்துபோனவர்களை மீட்பதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் நாம் பரத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மிகுந்த அஜாக்கிரதையுள்ளவர்களையும், மனக்கடினமுள்ளவர்களையும்கூட மீட்பதற்கு தேவதூதர்கள் உங்களுக்கு உதவிசெய்வார்கள். ஒரு பாவி தேவனண்டை கொண்டுவரப்படும்போது, பரலோகம் முழுவதும் மகிழ்ந்து களிகூருகிறது. சேராபீன்களும் கேரூபீன்களும் தங்களது பொற்சுரமண்டலங் களை மீட்டி, மனுப்புத்திரருக்கு அவர்கள் காண்பிக்கும் இரக்கத்திற்காகவும் தயவுக்காகவும் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திர கீதங்களைப் பாடுவார்கள். (42) ★

# 16

# காணாமற்போய் திரும்பக்கிடைத்த மகன்!

**(மூலநூல் : பக்கங்கள் 198–211)**

**லூக்கா 15:11–32**

காணாமற்போன ஆடு, காணாமற்போன வெள்ளிக்காசு, காணாமற்போன மகன் ஆகிய இம்மூன்று உவமைகளும், தம்மைவிட்டு தூரம்சென்று காணாமற்போய்விடுகிற ஜனங்களின்மீது தேவன் காட்டுகின்ற பரிவுள்ள இரக்கத்தையே தெளிவாக விளக்குகிறது. அவர்கள் தேவனைவிட்டுச் சென்றுவிட்டபோதிலும், பரிதாபமான நிலைமையில் அவர்களை அவர் அப்படியே விட்டுவிடுகிறதில்லை. தந்திரமுள்ள சத்துருவின் சோதனைகளுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிற அனைவர்மீதும் அவர் மிகுந்த இரக்கமும், மனஉருக்கமும் உள்ளவராக இருக்கிறார். (1)

பரலோகப் பிதாவின் அன்பை ஒரு காலத்தில் ருசித்திருந்தும் சோதனைக்காரன் தன்னுடைய சித்தத்தின்படி அடிமைகளாக்கத் தங்களை அனுமதித்துவிட்ட ஜனங்களை கர்த்தர் எவ்வாறு சந்திக்கிறார் என்பதை கெட்ட குமாரன் உவமை நமக்கு வெளிப்படுத்துகிறது. (2)

"ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தான். சில நாளைக்குப்பின்பு, இளைய மகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூர தேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்." (3)

தகப்பன் வீட்டில் இருந்த கட்டுப்பாடுகளால் இளைய மகன் சலிப்படைந்தான். தன்னுடைய சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவதாக அவன் கருதினான். தன் தகப்பனுடைய அன்பையும், பராமரிப்பையும் அவன்

தவறாகப் புரிந்துகொண்டு, தனது சொந்த மனவிருப்பத்தின்படி வாழ முடிவு செய்தான். (4)

அந்த வாலிபன் தன் தகப்பனுக்குச் செய்யவேண்டிய கடமையை ஒத்துக்கொள்ளவில்லை; அவருக்கு நன்றியையும் தெரிவிக்கவில்லை. எனினும், தகப்பனின் ஆஸ்தியில் பிள்ளைக்கு இருக்கும் பங்கை உரிமை கோருகிறான். தகப்பனுடைய மறைவிற்குப்பின்னர் தனக்கு வரவிருக்கும் ஆஸ்தியை அவன் இப்பொழுதே பெற்றுக்கொள்ள வாஞ்சித்தான். தற்போது தனக்குக் கிடைக்கவிருக்கும் சந்தோஷத்தின்மேல் நாட்டங்கொண்டு, தன் எதிர்காலத்தைக்குறித்தும் கவலையற்றிருந்தான். (5)

பூர்வீக சொத்தைப் பெற்றுக்கொண்டு தன் தகப்பன் வீட்டைவிட்டு "தூரதேசத்துக்குப்" புறப்பட்டுப்போகிறான். ஏராளமான பணத்தை கையில் வைத்துக்கொண்டு, தன் மனவிருப்பத்தின்படி சுதந்திரமாக வாழத் தருணம் கிடைத்ததும், தன்னுடைய இதயத்தின் வாஞ்சை நிறைவேறிவிட்டதாக எண்ணி, அவன் தன்னையே புகழ்ந்துகொண்டான். அதைச் செய்யாதே உனக்குத் தீங்கு ஏற்படும், இதைச் செய், இது சரியான காரியம் என்று அவனிடத்தில் கூறுவதற்கு ஒருவருமில்லை. தீய நண்பர்கள் பாவ ஜீவியஞ்செய்ய அவனைத் தூண்ட, அவன் "துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்." (6)

"தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி" (ரோமர் 1:22) என்று சில மனிதர்களைப்பற்றி பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. அது இந்த உவமையில் வரும் வாலிபனின் வரலாறே. சுயநலமாகத் தன் தகப்பனிடமிருந்து ஆஸ்தியைப் பெற்று, வேசிகளிடத்தில் அதை அழித்துப்போட்டான். செல்வம்போன்ற அருமையான வாலிபப் பருவம் சீரழிந்துபோயிற்று. வாழ்வின் அருமையான ஆண்டுகள், அறிவுத்திறன், வாலிப வயதின் பிரகாசமான எதிர்காலம்பற்றிய தரிசனம், ஆவிக்குரிய பேரார்வங்கள் அனைத்தும் இச்சை என்னும் அக்கினியால் எரிந்து அழிக்கப் பட்டுவிட்டது. (7)

உவமையில் கூறப்பட்டுள்ள இளைய மகன் எல்லாவற்றையும் செலவு செய்தபின்பு, அந்த தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத்துவங்கி, அந்த தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில்போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான். ஒரு யூதனைப் பொறுத்தவரையில் இது மிகவும் இழிவான, தரம் தாழ்ந்த ஒரு வேலை. தன்னுடைய சுதந்தரத்தைக்குறித்துப் பெருமைபாராட்டின இளைஞன் தற்பொழுது ஒரு அடிமையாகிவிடுகிறான். தன் பாவக்கயிறுகளால்

கட்டப்பட்ட (நீதி. 5:22) ஒரு அடிமையாக அவன் இருக்கிறான். தன்னைக் கவர்ந்திழுத்த மினுக்கான, அற்பமான, மாயையான கபட்டுப்பொருட்கள் மறைய, பாவச்சங்கிலியின் பாரத்தை அவன் உணருகிறான். பஞ்சம் பரவிய, பாழடைந்த அந்த தேசத்திலே, நண்பர்களை இழந்து பன்றிகள் மத்தியில் நின்றவனாக, பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான். செழுமையான நாட்களில் அவனைச் சுற்றிவந்து அவனுடன் உணவருந்தி—குடித்து—மகிழ்ந்த அவனுடைய நண்பர்கள் அவன் குறைவுபடத் தொடங்கியதும் ஒவ்வொருவராக அவனைவிட்டுச் சென்றுவிட்டனர். அவனது ஒழுக்கங்கெட்ட வாழ்வின் மகிழ்ச்சி இப்பொழுது எங்கே போயிற்று? பணம் கையிலிருந்த நாட்களிலே தன் மனச்சாட்சியை மழுங்கப்பண்ணி, தன்னுடைய உணர்வுகளை மறத்துப்போகச்செய்த அந்த நிலையில், மிகவும் சந்தோஷமாக வாழ்ந்துகொண்டிருப்பதாகக் கருதினான். பணம் அனைத்தும் செலவிடப்பட்டு, பசியும் தணிக்கப்படாத நிலையில், பெருமை குலைந்தவனாக ஒழுக்கநிலையில் கூனிக்குறுகி—அவனது சுயசித்தம் பலவீனப்பட, நம்பிக்கைக்குத் தகுதியற்றுப்போய், அவனது மேன்மையான உணர்வுகள் மடிந்துவிட்ட தோற்றத்தில் மனிதரிலேயே மிகவும் நிர்ப்பந்தமான நிலையை அடைந்தவனாக இருந்தான். (8)

ஒரு பாவியின் நிலைகுறித்து எப்படிப்பட்ட ஒரு சித்திரம் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது! அவரது ஆசீர்வாதங்களால் சூழப்பட்டிருந்தபோதிலும், தங்குதடையற்ற இன்ப நுகர்வுகளில் திளைத்து, பாவம் நிரம்பிய இன்பங்களை அனுபவிக்கவேண்டுமென்று தீவிரமாக ஈடுபட்டிருக்கின்ற ஒரு பாவி, தேவனிடமிருந்து பிரிந்துபோவதையே விரும்புகிறான். நன்றிகெட்ட மைந்தனைப்போல் தேவனுடைய ஈவுகள் அனைத்துமே தனக்குச் சொந்தமானவை என்று உரிமைபாராட்டுகிறான். அவைகளை அனுபவித்து மகிழ்கிறபோதும், தேவனுக்கு நன்றிசெலுத்தாமலும், அவருக்கு அன்பின் சேவையைச் செய்யாமலும் இருந்துவிடுகிறான். காயீன் கர்த்தருடைய சமூகத்தைவிட்டுப் பிரிந்து தனக்கான வீட்டைத்தேடி புறப்பட்டுப்போனதைப் போலவும், "தூரதேசத்துக்குப்போய்" அலைந்துதிரிந்த கெட்ட குமாரனைப் போலவும், பாவிகள் தேவனை மறந்திருப்பதில் மகிழ்ச்சியைத் தேடுகிறார்கள் (ரோமர் 1:28). (9)

சுயத்தை மையமாகக் கொண்டுள்ள வாழ்க்கை பார்வைக்கு எப்படிப்பட்ட தோற்றத்தைக் கொடுத்தாலும், அது முற்றிலுமாக வீணடிக்கப்படுகிறது. தேவனைவிட்டு தனது வாழ்க்கையின் அருமையான ஆண்டுகளையும் மனதின், இதயத்தின், ஆத்துமாவின் திறன்களையும் வீணடித்து, இறுதியில் நித்தியஜீவனையும் இழந்துவிடுகிறான். தேவனைவிட்டுப்பிரிந்து, தனக்குத்

தானே ஊழியஞ்செய்கிறவன் சாத்தானின் அடிமையாயிருக்கிறான். தூதர்களோடு தோழமைகொண்டு வாழத்தக்கதாக தேவனால் படைக்கப்பட்ட அந்த உள்ளம், பூமிக்கடுத்த மற்றும் மிருகத்தைப் போன்ற கீழ்த்தரமான உணர்ச்சிசார்ந்த காரியங்களுக்குச் சேவைசெய்யும் அளவிற்கு இழிநிலையை அடைந்துவிடுகிறது. சுயத்திற்கு ஊழியஞ்செய்வதின் முடிவு இதுவே. (10)

இத்தகைய வாழ்க்கையை ஒருவேளை நீங்கள் தேர்ந்தெடுத் திருப்பீர்களாகில் அப்பமல்லாத ஒன்றிற்காகவும் திருப்திசெய்யாத வேலைக் காகவும் நீங்கள் பணத்தைச் செலவிட்டுக்கொண்டிருக்கிறீர்கள். உங்களிலே ஏற்பட்டிருக்கும் தரக்குறைவை நீங்கள் அறியுங்காலம் வரும். தூரதேசத்திலே தனிமையில் துக்கத்தோடு இருக்கும்போது, "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்திலிருந்து யார் என்னை விடுதலையாக்குவார்?" (ரோமர் 7:24) என்று நம்பிக்கையற்றுக் கதறிட நேரிடும். "மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப்போலிருந்து, நன்மை வருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான்" (எரேமியா 17:5,6) என்ற எரேமியா தீர்க்கதரிசியின் வார்த்தைகளிலே ஒரு பிரபஞ்ச உண்மை அடங்கியிருக்கிறது. "தேவன் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்"—மத்தேயு 5:45. ஆனால் சூரிய ஒளியினின்றும் மழையினின்றும் தங்களை அடைத்துக் கொள்வதற்கு மனிதர்களுக்கு வல்லமையிருக்கிறது. அதுபோலவே, நீதியின் சூரியனாகிய கர்த்தர் பிரகாசிக்கும்போதும், அவரது கிருபையின் பொழிவு இலவசமாக அளிக்கப்படும்போதும், தேவனிடமிருந்து இன்னமும் நம்மை பிரித்துவைத்தவர்களாக "வனாந்தரத்தில் வறட்சியான இடங்களில் குடியிருப்பது போன்ற" நிலையில் இருக்கலாம். (11)

தம்மைவிட்டுப் பிரிந்துசெல்ல முடிவெடுத்து, தூரம் சென்றுவிட்ட நபரை தகப்பன் வீட்டிற்குத் திரும்ப அழைத்துவர தேவன் மிகுந்த ஆவலுடன் முயற்சிகளை மேற்கொள்ளுகிறார். நிர்ப்பந்தமான சூழ்நிலையில் கெட்ட குமாரனுக்கு புத்திதெளிந்தது. சாத்தான் அவன்மீது செலுத்திய வஞ்சகமான வல்லமை முறிந்துபோயிற்று. தன்னுடைய துன்பங்கள் அனைத்திற்கும் தனது புத்தியீனமே காரணமென்பதைப் அவன் புரிந்துகொண்டான். "என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என்

தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்" என்று கூறுவேன் எனத் தீர்மானித்தான். பரிதபிக்கப்படத்தக்க நிலையிலிருந்த கெட்ட குமாரன், தன்னுடைய தகப்பனாரின் அன்பிலே நம்பிக்கைகொண்டான். அந்த அன்பே அவனை அவனது இல்லம் நோக்கி இழுத்தது. தேவனுடைய அன்பின்மீதான உறுதி பாவியை தேவனிடத்திற்குத் திரும்பத்தக்கதாக நெருக்கி ஏவியது. "தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறது"—ரோமர் 2:4. தெய்வீக அன்பும், இரக்கமும், மனதுருக்கமும் ஒரு தங்கச்சங்கிலிபோன்று ஆபத்தில் சிக்கியுள்ள ஒரு ஆத்துமாவைச் சூழ்ந்துகொள்ளுகிறது. "அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்கிறேன்" (எரேமியா 31:3) என்று கர்த்தர் கூறுகிறார்.(12)

இளைய குமாரன் தன் குற்றத்தை அறிக்கைசெய்ய தீர்மானிக்கிறான். அவன் தன் தகப்பனிடத்திற்குப்போய்: "பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு, நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும்" என்றுகூற முடிவுசெய்தான். பிதாவின் அன்பைப்பற்றியதான அவனது எண்ணம் எப்படி ஒரு வரையறைக்கு உட்பட்டிருந்ததென்பதை வெளிப்படுத்தியவனாக, "உமது கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும்" என்று தொடர்ந்து கூறினான். (13)

அந்த கெட்டகுமாரன் பன்றி மேய்ப்பவர்களிடமிருந்தும் பன்றிகளின் தவிட்டினின்றும் விலகி, தனது தகப்பன் வீட்டைநோக்கி தனது பயணத்தை ஆரம்பிக்கிறான். பெலவீனத்தினால் நடுங்கியவனாக—பசியினால் களைப் படைந்தவனாக—ஆர்வத்தோடு தனது வழியிலே விரைந்து செல்கிறான். அவனுடைய துயரமான நிலை அவனுடைய பெருமையை முற்றிலுமாக அகற்றிவிட்டது. தன்னுடைய கந்தையை மறைப்பதற்கு மாற்று வஸ்திரமும் அவனிடமில்லை. ஒரு காலத்தில் மகனாக வளர்ந்த தகப்பன் வீட்டில், வேலைக்காரனாகவாவது கெஞ்சி சேர்ந்துகொள்ள அவன் விரைந்து நடக்கின்றான். (14)

பணத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, புத்தியில்லாத இளைஞனாக களிப்போடு வீட்டைவிட்டு வெளியேறியபோது தன் தகப்பனாருக்கு ஏற்பட்ட மனவேதனையையும், ஏக்கத்தையும் அவன் நினைக்கவில்லை. தனது கட்டுப்பாடற்ற நண்பர்களுடன் நடனமாடி, விருந்துண்டு தகப்பன் பணத்தை விரயம்செய்தபோது, தன்னுடைய குடும்பத்திற்கு அதினால் ஏற்பட்ட களங்கம்குறித்து அவன் நினைத்துப்பார்க்கவில்லை. இப்பொழுது களைப்பு

அடைந்தவனாக, வேதனையோடு வீடு திரும்பும்போது, தன்னை எதிர்பார்த்து தன் தகப்பனார் ஆவலுடன் காத்திருக்கிறாரென்பதை அறியாதிருக்கிறான். அவன் "தூரத்தில் வரும்போதே" அவனுடைய சாயலை தகப்பனார் நன்றாக அறிந்துகொள்கிறார். அன்பு உடனே கண்டுகொள்ளுகிறது. பலவருட பாவ ஜீவியத்தில் அவன் உருக்குலைந்திருந்தபோதிலும்கூட, அவனுடைய சாயலை தகப்பனார் எளிதில் அறிந்துகொள்கிறார். "அவர் மனதுருகி ஓடி," இறுக மென்மையாக நீண்ட நேரம் அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டார். (15)

தனது மகனுடைய துயரத்தையும் கந்தையையும் அலட்சியமாக நிந்திக்க எவரையும் தகப்பன் அனுமதிக்கமாட்டார். தமது தோளின்மீது போட்டிருந்த மிகப்பெரிய விலையுயர்ந்த மேலாடையை எடுத்து, மெலிந்து காணப்பட்ட அவனது உடலில் போர்த்துகிறார். அப்பொழுது மகன்: "தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல" என்று தனது மனந்திரும்புதலின் வார்த்தைகளைக்கூறி, தேம்பி அழுகிறான். அப்பொழுது தகப்பன் அவனை நெருக்கமாக அணைத்துக்கொண்டு வீட்டிற்குள் அழைத்துச் செல்கிறார். "உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும்" என்று மீண்டும் விண்ணப்பம் செய்கிறதற்கு அவர் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. காத்திருக்கும் வேலைக்காரர்கள் மதித்து சேவைசெய்கின்ற, அந்த வீடு கொடுக்கக்கூடிய மேன்மையான காரியங்களால் கனம்பண்ணப்படவேண்டிய—குமாரன் அவன். (16)

"அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்." (17)

தன்னுடைய ஒழுக்கக்கேடான வாலிப நாட்களிலே, தன் தகப்பனைப்பற்றி அவர் மிகவும் கடிந்துகொள்பவரென்றும், கடுமையானவரென்றும் எண்ணியிருந்தான். இப்பொழுதோ அதே தகப்பனை அவன் வித்தியாசமான கண்ணோட்டத்தில் நோக்கிப் பார்க்கிறான்! இதுபோலவே, சாத்தானால் வஞ்சிக்கப்படுகிறவர்கள், தேவனைக் கடினமனதுடையவரென்றும் கொடுமையுள்ளவரென்றும் நோக்கிப்பார்க்கின்றனர். உதவிசெய்யாமலிருப்பதற்கு நியாயமான காரணம் இருக்கும்வரை பாவியை சேர்த்துக்

கொள்ளாமலிருக்கவும், கண்டனம்பண்ணவும் கடிந்துரைக்கவும் அவர் விழிப்போடிருக்கிறாரென்று அவரைக்குறித்து கருதுகின்றனர். அவருடைய பிரமாணங்கள் மனிதனுடைய சந்தோஷத்திற்கு ஒரு கட்டுப்பாட்டை விதிப்பதாகக் கருதி, அதை பாரமான சுமையென்றெண்ணி, அதினின்று தப்புவது மகிழ்ச்சியான காரியமென்று நினைத்தார்கள். எந்த மனிதனுடைய கண்கள் கிறிஸ்துவினுடைய அன்பினால் திறக்கப்பட்டிருக்கிறதோ, அவன் தேவனை மனதுருக்கம் உடையவராகக் காண்பான். அவர் அவர்களுக்கு கொடுமையான—விட்டுக்கொடுக்காத ஒருவரைப்போன்று காணப்படுகிற தில்லை. மனந்திரும்பிவரும் மைந்தனை அணைத்துக்கொள்ளத்தக்கதாக ஏக்கத்தோடு இருக்கும் ஒரு தகப்பனாக அவரை எண்ணிப்பார்க்கின்றனர். "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்" என்று சங்கீதக்காரனோடுகூட சேர்ந்து பாவி கூறுவான். (18)

இந்த உவமையில் கெட்ட வழிகளைத் தெரிந்துகொண்டதற்காக இளைய மகன் இடித்துரைக்கப்படவோ குற்றஞ்சாட்டப்படவோ இல்லை. கடந்தகால வாழ்க்கை மன்னிக்கப்பட்டு, மறக்கப்பட்டு என்றென்றைக்குமாக கிறுக்கிப்போடப்பட்டுவிட்டதாக மைந்தன் உணர்கிறான். அதுபோலவே, ஒரு பாவியைப் பார்த்து தேவன்: "உன் மீறுதல்களை மேகத்தைப்போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப்போலவும் அகற்றிவிட்டேன்; என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக்கொண்டேன்"—ஏசா. 44:22; "நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" —எரே. 31:34; "துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்"—ஏசா. 55:7; "அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேலின் அக்கிரமம் தேடப்பட்டாலும் அது காணாதிருக்கும்; யூதாவின் பாவங்கள் தேடப்பட்டாலும் அவைகள் கிடையாதிருக்கும்" (எரேமியா 50:20) என்று கூறுகிறார். (19)

மனந்திரும்புகிற பாவியை ஏற்றுக்கொள்ள தேவன் விருப்பத்தோ டிருக்கிறார் என்பதுகுறித்து எப்படிப்பட்ட உறுதியான நம்பிக்கை இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது! அருமையான வாசகரே, நீங்கள் உங்களுக்குச் சொந்தவழியைத் தெரிந்துகொண்டிருக்கிறீர்களா? தேவனைவிட்டு தூரத்திலே அலைந்துதிரிந்துகொண்டிருக்கிறீர்களா? உங்கள் உதடுகளில் சாம்பலாக மாறும் தன்மைகொண்ட உங்களுடைய அக்கிரமத்தின் கனிகளைப் புசிக்க வகைதேடிக்கொண்டிருக்கிறீர்களா? உங்களுடைய ஆஸ்திகள்

செலவிடப்பட்டு, வாழ்க்கைத் திட்டங்கள் தகர்க்கப்பட்டு, நம்பிக்கைகள் மடிந்து, தனிமையில் ஆறுதலற்று அமர்ந்திருக்கிறீர்களா? நீண்டகாலமாக உங்கள் இதயத்தோடு பேசிக்கொண்டிருந்த—ஆனால் நீங்கள் செவிசாய்க்காத—அந்தக் குரல் மிகவும் தெளிவாக துல்லியமாக: "எழுந்திருந்து போங்கள்; இது நீங்கள் இளைப்பாறும் இடம் அல்ல, இது தீட்டுப்பட்டது, இது உங்களை நாசப்படுத்தும், அந்த நாசம் மிகவும் கொடியதாயிருக்கும்" (மீகா 2:10) என்று கூறுவதைக் கேட்கலாம். உங்கள் தகப்பனாரின் வீட்டிற்குத் திரும்பிச் செல்லுங்கள். "என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக்கொண்டேன்" (ஏசாயா 44:22) என்று கூறி, கர்த்தர் உங்களை அழைக்கிறார். (20)

நல்லதொரு மாற்றத்தைச் சந்திக்கும்வரைக்கும், தேவனிடமாக நெருங்கிச் சேர ஒரு தகுதியைப் பெறும்வரைக்கும், கிறிஸ்துவைவிட்டு சற்று விலகியிருப்பதில் தவறில்லையென்ற சத்துருவின் ஆலோசனைக்கு நீங்கள் செவிகொடாதிருங்கள். தாமதப்படுத்துவீர்களாகில் ஒருபோதும் கிறிஸ்துவண்டை நெருங்க இயலாது. சாத்தான் உங்களுடைய அழுக்கான கந்தையைச் சுட்டிக்காட்டும்போதெல்லாம் "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37) என்ற கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தை நீங்கள் உச்சரிக்கவேண்டும். கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கிச் சுத்திகரிக்கும் என்பதை சத்துருவினிடத்தில் கூறுங்கள். "நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்" (சங்கீதம் 51:7) என்ற தாவீதினுடைய விண்ணப்பமே உங்களுடைய விண்ணப்பமாக இருக்கட்டும். (21)

நீங்கள் எழுந்து உங்கள் தகப்பன் வீட்டை நோக்கிச் செல்லுங்கள். நீங்கள் வெகுதூரத்தில் இருக்கும்போதே அவர் உங்களை வந்து சந்திப்பார். நீங்கள் மனந்திரும்பி ஒரு அடி முன்வைக்கும்போது, அவரது எல்லையற்ற அன்பின் புயங்களோடு உங்களை அரவணைக்க விரைந்துவருவார். நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களின் கூக்குரலுக்கு அவருடைய செவிகள் திறந்திருக்கிறது. நம்முடைய இருதயத்தின் நினைவுகளையும் விருப்பங்களையும் அவர் அறிந்திருக்கிறார். அந்தரங்கமாய் ஜெபித்து, கண்ணீர் சிந்தி, தேவனை இருதயத்தில் வாஞ்சிக்கும்போது, தேவனுடைய ஆவியானவர் நம்மைச் சந்திக்க வருகிறார். நம் உதடுகளிலிருந்து ஜெபத்தின் வார்த்தைகள் வெளிவரும்முன்னரே அல்லது நாம் நமது இருதயத்தின் ஏக்கத்தைத் தெரியப்படுத்தும் முன்னரே கிறிஸ்துவின் கிருபை மனித இருதயத்தில் கிரியையை நடப்பித்துக்கொண்டிருக்கும் கிருபையைச் சந்திக்க விரைந்து வருகிறது. (22)

பாவத்தினால் தீட்டுப்படிந்திருக்கும் உங்களுடைய வஸ்திரங்களை உங்கள் பரமபிதா உங்களைவிட்டு அகற்றுவார். சகரியா தன்னுடைய அழகான உருவகமாய் அமைந்த தீர்க்கதரிசனத்தில் பிரதான ஆசாரியனாகிய யோசுவா அழுக்கு வஸ்திரங்களைத் தரித்தவனாக தேவதூதனுக்கு முன்பாக நிற்பதைக் காண்கிறான். இது ஒரு பாவியின் அவலநிலையைச் சித்தரிக்கிறது. அப்பொழுது கர்த்தர் தமக்கு முன்பாக நிற்கிறவர்களை நோக்கி: "இவன்மேல் இருக்கிற அழுக்கு வஸ்திரங்களைக் களைந்துபோடுங்கள்" என்றார்; "பின்பு அவனை நோக்கி: பார், நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச்செய்து, உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன் என்றார். அவன் சிரசின்மேல் சுத்தமான பாகையை வைப்பார்களாக என்றார்; அப்பொழுது சுத்தமான பாகையை அவன் சிரசின்மேல் வைத்து, அவனுக்கு வஸ்திரங்களைத் தரிப்பித்தார்கள்"–சகரியா 3:4,5. இவ்விதமாகவே, கர்த்தர், "இரட்சிப்பின் வஸ்திரங்களை" உங்களுக்கு வழங்கி, "நீதியின் சால்வையை" அணிவிப்பார் (ஏசாயா 61:10). "நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும், வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள்போலவும், பசும்பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்"–சங்கீதம் 68:13. (23)

அவர் உங்களை அவரது விருந்துசாலைக்கு அழைத்துச் செல்வார். உங்கள்மீது பறந்த அவரது கொடி நேசமே (உன்னதப்பாட்டு 2:4). நீங்கள் அவரோடுகூட விருந்து உட்கொள்ளும்படி உங்களை உபசரிப்பார். "நீ, என் வழிகளில் நடந்து என் காவலைக் காத்தால், நீ என் ஆலயத்தில் நியாயம் விசாரிப்பாய்; என் பிராகாரங்களையும் காவல் காப்பாய்; இங்கே நிற்கிறவர்களுக்குள்ளே உலாவுகிறதற்கு இடம் நான் உனக்குக் கட்டளையிடுவேன்"–சகரியா 3:7; "மணவாளன் மணவாட்டியின்மேல் மகிழ்ச்சியாயிருப்பதுபோல, உன் தேவன் உன்மேல் மகிழ்ச்சியாயிருப்பார்" –ஏசாயா 62:5; "அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்"–செப்பனியா 3:17; "என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்" என்று பரமபிதா மகிழ்ந்து கூறும்போது, பரலோகவாசிகளும் பூலோகத்தாரும் அவருடன் சேர்ந்து மகிழ்ந்து பாடுவார்கள். (24)

இரட்சகர் கூறிய உவமையில் இதுவரை அந்த மகிழ்ச்சியான சம்பவத்தின் இணக்கமான சூழ்நிலையில் முரண்பாடு ஏற்படுத்தக்கூடியவிதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை. ஆனால் கிறிஸ்து இப்பொழுது வேறொரு காரியத்தை அறிமுகப்படுத்துகிறார். கெட்ட குமாரன் வீட்டிற்குத் திரும்பிவந்த

சமயத்தில் மூத்தகுமாரன் வயலிலிருந்தான். "அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வருகிறபோது, கீதவாத்தியத்தையும் நடனக்களிப்பையும் கேட்டு, ஊழியக்காரரில் ஒருவனை அழைத்து: இதென்ன என்று விசாரித்தான். அதற்கு அவன்: உம்முடைய சகோதரன் வந்தார், அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்துசேர்ந்தபடியினாலே அவருக்காகக் கொழுத்த கன்றை அடிப்பித்தார் என்றான். அப்பொழுது அவன் கோபமடைந்து உள்ளேபோக மனதில்லாதிருந்தான்." தகப்பனார் இளைய குமாரன் நிமித்தம் மனவியாகூலமடைந்து, அவன் திரும்பவும் தன்னிடமாய் வரவேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார். மூத்த குமாரனிடத்தில் இத்தகைய தன்மைகள் காணப்படவில்லை. ஆகவே, ஊரைச்சுற்றி, பணத்தை வீணடித்தவன் திரும்பவும் வீட்டிற்கு வந்ததில் அவனுக்கு எவ்வித மகிழ்ச்சியும் இல்லை. வீட்டிலிருந்து எழும்பிய மகிழ்ச்சியின் தொனிகள் அவனுடைய இருதயத்திற்கு மகிழ்ச்சியைக் கொண்டுவரவில்லை. வேலைக்காரன்மூலம் வீட்டில் நிகழ்ந்துகொண்டிருக்கும் களிப்பிற்கான காரணத்தை அறிந்தவுடன், பொறாமை உணர்வு அவனை மேற்கொள்கிறது. எனவே, காணாமற்போன தன் சகோதரனை வரவேற்க அவன் உள்ளே செல்லவில்லை. கெட்ட குமாரனுக்குக் காண்பிக்கப்பட்ட பரிவின் விளைவாக, தனக்கு அவமரியாதை ஏற்பட்டிருப்பதாக அவன் கருதினான். (25)

தகப்பனார் அவனை வருந்தி அழைத்தபோது, அவனிடமிருந்து பெருமையும், கடுமையான வெறுப்புணர்ச்சியும் வெளிப்பட்டது. இதுவரை தான் வீட்டில் உண்மையும் உத்தமமுமாய் நடந்துகொண்டதைச் சுட்டிக்காண்பித்து, அதனோடு இளைய குமாரனுடைய வாழ்வை ஒப்பிட்டுக்காட்டி, அவனுக்குக் காட்டப்பட்டிருக்கும் தயவு தேவையற்றது என்று கூறுகிறான். இதுவரை அவன் தன் தகப்பனாருக்கு ஒரு மகனைப்போன்று அல்லாமல் ஒரு வேலைக்காரனைப்போல் ஊழியஞ்செய்ததாகத் தெளிவாகக் காட்டிவிட்டான். தனது தகப்பனாரின் சமுகத்தில் நிலையான ஒரு மகிழ்ச்சியை காண்பதற்குப்பதிலாக ஜாக்கிரதையாக வாழ்ந்ததின்மூலம் குவிந்திருக்கும் இலாபத்தின்மேல் தன் மனதை வைத்தான். ஆஸ்தியைச் சம்பாதிப்பதற்காகவே பாவஜீவியத்தில் கிடைக்கும் இன்பங்களை அவன் துறந்தானென்பதை அவனுடைய வாயின் வார்த்தைகள் வெளிப்படுத்துகிறது. தகப்பனார் தமது ஒப்பற்ற அன்பினிமித்தமாக, தமது சம்பாத்தியத்தில் ஒரு பங்கை இளைய மகனுக்குக் கொடுக்க முன்வரும்பட்சத்தில், அது தனக்கு இழைக்கப்படும் அநீதி என்று அவன் கருதினான். தன்னுடைய சகோதரன்மீது காண்பிக்கப்பட்ட பாசம் அவனுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. தகப்பனாருடைய இடத்தில் அவன் இருந்திருப்பானேயானால், இத்தகைய வகையில் கெட்டகுமாரனை வரவேற்றிருக்கமாட்டான் என்பதை அவன் தெளிவாகக்

காட்டுகிறான். அவனைச் சகோதரன் என்றுகூட அழைக்க விரும்பாதவனாக, "உம்முடைய குமாரன்" என்று தன் தகப்பனிடம் அன்பற்றவிதத்தில் கூறுகிறான். இருப்பினும், தகப்பனார் அவனிடம் அன்போடு நடந்துகொண்டு: "மகனே நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது" உன் சகோதரன் சுற்றியலைந்துகொண்டிருந்த இத்தனை வருடங்களும் நீ என்னுடன் இருக்கும் சிலாக்கியம் உனக்குக் கிடைக்கவில்லையா என்றார். (26)

பிள்ளைகளுடைய மகிழ்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் இலவசமாக வழங்க தகப்பனார் எப்போதும் ஆயத்தமாக இருக்கிறார். பங்கைக் குறித்தோ, ஆஸ்தியைக்குறித்தோ மகன் கவலைகொள்ள அவசியமில்லை. "எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது." நீ என் அன்பின்மேல் விசுவாசம்வைத்து, நான் உனக்கு அளிக்கும் வெகுமதியை இலவசமாகப் பெற்றுக்கொள்வதே உன் கடமையாயிருக்கிறது. (27)

ஒரு மகன் தகப்பனாருடைய அன்பைச் சரிவரப் புரிந்துகொள்ளாமல், சில காலம் தன் உறவை அறுத்துக்கொண்டு தகப்பன் வீட்டைவிட்டு வெளியே சென்றுவிடுகிறான். ஆனால் இப்பொழுது மீண்டும் அவன் வீடு திரும்பியதினிமித்தமாக மகிழ்ச்சி அலைகள் கரைபுரள, தகப்பனாரின் மனதில் இருந்த துக்கம் பறந்தோடுகிறது. "உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்" என்றார். (28)

மூத்த குமாரன் தன்னுடைய அற்பமான நன்றிகெட்ட குணத்தை காணத்தக்கதாக எதுவும் செய்யப்பட்டதா? கெட்ட குமாரன் துன்மார்க்கமான கிரியைகளை நடப்பித்திருந்தபோதிலும், அவன் இன்னமும் தன் சகோதரனாயிருக்கிறானென்பதைப் புரிந்துகொண்டானா? தன் சகோதரன்மீது ஏற்பட்டிருக்கும் பொறாமையையும் இதயக் கடினத்தையும்குறித்து அவன் மனவருத்தம் கொண்டானா? இக்காரியங்களைக் குறித்தெல்லாம் கிறிஸ்து எதுவும் கூறவில்லை. இன்றைக்கும் நிஜவாழ்வில் இந்த உவமையில் கூறப்பட்டுள்ள காரியங்கள் நிகழுகிறது. வாசகர்கள் தாமே இந்த உவமையின் முடிவைத் தீர்மானம் செய்துகொள்ளவேண்டும். (29)

மனந்திரும்பாத யூதர்களும், மற்றும் ஒவ்வொரு காலத்தைச் சேர்ந்த பரிசேயர்களும் உவமையில் வரும் மூத்த குமாரனாகச் சுட்டிக்காட்டப்படுகிறார்கள். இவர்கள் யாரை ஆயக்காரர்கள், பாவிகளென்று கருதினார்களோ அவர்களை அவமதிப்போடு நோக்கிப்பார்ப்பார்கள். தங்கள் துர்க்குணத்தில் எல்லைமீறி கடந்துசெல்லாததினால், சுயநீதியினால் நிறைந்திருந்தார்கள். அற்பத் தடைகளை எழுப்பும் இத்தகைய மக்களை

கிறிஸ்து அவர்களது நிலைக்களத்திலேயே சந்தித்தார். உவமையில் வரும் மூத்தகுமாரனைப்போலவே இவர்கள் தேவனிடத்திலிருந்து தனிப்பட்ட ஆசீர்வாதங்களைப்பெற்று அனுபவித்திருக்கின்றனர். இவர்கள் தங்களை தேவனுடைய வீட்டில் வசிக்கும் புத்திரர்களாகக் கருதிக்கொண்டாலும், கூலிக்காரர்களின் குணமும் ஆவியும் இவர்களில் கிரியைசெய்தது. இவர்கள் அன்பின் அடிப்படையில் ஊழியஞ்செய்யாமல், வெகுமதியை எதிர்பார்த்து ஊழியம் செய்துகொண்டிருந்தார்கள். இவர்கள் தேவனை கடினமாக வேலைவாங்கும் ஒரு ஆளோட்டியாகப் பார்த்தனர். கடுமையான முயற்சியின்மூலமும், பிராயச்சித்தத்தின்மூலமுமே தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளமுடியுமென்று ரபிமார்கள் நம்பினார்கள். ஆகவே, இலவச வெகுமதியான தமது கிருபையைப் பெற்றுக்கொள்ளுமாறு கிறிஸ்து ஆயக்காரர்களையும் பாவிகளையும் அழைத்தபோது, அவர்கள் கோபமடைந்தனர். கெட்டகுமாரனின் வரவினால் தகப்பனாரின் இருதயம் மகிழ்ச்சியால் நிரம்பியது. ஆனால் இவர்களின் இருதயங்களோ பொறாமையால் நிரம்பியது. (30)

உவமையில் வரும் தகப்பனார் மூத்த குமாரனை வருந்தி அழைப்பது போலவே, பரிசேயர்களை தேவன் தம்மண்டை அழைக்கிறார். “எனக்குள்ள தெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது” என்று கூலியாகக் கொடாமல், வெகுமதியாகக் கொடுக்கிறார். கெட்டகுமாரனைப்போல வெகுமதியைப் பெறுகின்ற தகுதி நமக்கு இல்லாவிடினும் இணையற்ற நமது பிதாவின் அன்பினால் அதைப்பெறும் பாக்கியத்தை நாம் அடைகிறோம். (31)

சுயநீதியானது, தேவனை தவறாகச் சித்தரிக்க மக்களைத் தூண்டுவ தோடு நில்லாமல், தங்கள் சகமனிதர்களிடம் கடின இருதயத்தோடு நடந்துகொள்ளவும் குறைகாணவும் தூண்டுகிறது. மூத்த குமாரன் சுயநலமிக்கவனாக, பொறாமையோடு தன் சகோதரனின் நடவடிக்கைகளை உற்றுக்கவனித்து, அவனுடைய ஒவ்வொரு செயலையும் குற்றஞ்சாட்டி, சிறிய குறைபாட்டையும் கண்டுபிடித்து, குற்றஞ்சுமத்துவதற்காகக் காத்திருந்தான். ஒவ்வொரு தவறையும் கண்டுபிடித்து, ஒவ்வொரு தவறான செயலையும் பெரிதுபடுத்திக் காட்டுகிறான். இவைகளைச் செய்தபின்பு, தன்னிடமுள்ள மன்னிக்க விரும்பாத அவனது குணத்தை நியாயப்படுத்தவும் வகைதேடுவான். இதே காரியத்தை இன்றும் அநேகர் செய்துகொண்டிருக்கிறார்கள். வெள்ளம் போன்று சோதனைகள் அடுக்கடுக்காகவந்து மூழ்கடிக்கும் தருணத்தில், தத்தளித்துக் கரைசேர முற்படும் ஒரு ஆத்துமாவிற்கு உதவிக்கரம் நீட்டாமல், அருகில் நின்றுகொண்டு பிடிவாதத்தோடும் விடாப்பிடியான தன்மையோடும் அவரைக்குறித்து குறைகூறிக்கொண்டும், குற்றஞ்சாட்டிக்கொண்டும் இருக்

கிறார்கள். இவர்கள் தங்களை தேவனுடைய பிள்ளைகள் என்று கூறிக்கொண்டாலும், சாத்தானின் ஆவியை செயல்படுத்தி காட்டிக்கொண்டிருக்கிறார்கள். தங்கள் உடன் சகோதரர்களைப் பரிவாக நடத்தத் தவறுவதினிமித்தம், குற்றஞ்சாட்டுகிற இவர்கள் தேவன் தமது முகத்தின் ஒளியை தங்கள்மீது பிரகாசிக்கக்கூடாத இடத்தில் தங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். (32)

அநேகர் தொடர்ந்து கேள்விகேட்டுக்கொண்டிருக்கிறார்கள். “என்னத்தைக்கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து, உன்னதமான தேவனுக்கு முன்பாகப் பணிந்துகொள்வேன்? தகனபலிகளைக்கொண்டும், ஒரு வயது கன்றுக்குட்டிகளைக் கொண்டும் அவர் சந்நிதியில் வரவேண்டுமோ? ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின்பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின்பேரிலும், கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தைப் போக்க என் கர்ப்பக்கனியையும் கொடுக்கவேண்டுமோ?” ஆனால் கர்த்தர் கூறுகிறார்: “மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்”—மீகா 6:6–8. (33)

“அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கி விடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும், … உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும்” (ஏசாயா 58:6,7) ஆகிய இவைகளை நாம் செய்ய தேவன் எதிர்பார்க்கிறார். பரமபிதாவின் அன்பினால் இரட்சிக்கப்பட்டிருக்கும் பாவிகளாக நீங்கள் உங்களைக் கருதினால் மாத்திரமே, பாவத்தினால் அவதியுறும் பிறரிடம் உங்களால் மென்மையான விதத்தில் பரிவுகாட்டமுடியும். அப்பொழுது மனதின் வியாகுலத்துடனும், மெய்யான மனந்திரும்புதலுடனும் வருகிறவர்களிடம் நீங்கள் பொறாமை யையும் வெறுப்பையும் காண்பிக்கமாட்டீர்கள். சுயநலமாகிய பனிக்கட்டி உங்கள் இருதயங்களிலிருந்து உருகும்போது, காணாமற்போனவர்கள் திரும்பிவருவதின்மூலம் தேவனுக்கு ஏற்படும் சந்தோஷத்தில் நீங்களும் பங்கெடுப்பீர்கள். (34)

நீங்கள் தேவனுடைய பிள்ளைகளென்று உரிமைகோருவது உண்மைதான். இந்த உரிமைகோரல் உண்மையாயிருக்குமானால், மரித்தது உங்கள் சகோதரன், அவன் திரும்பவும் உயிர்த்திருக்கிறான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டிருக்கிறான். அவன் உங்களோடு

நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கிறான். ஏனெனில் கர்த்தர் அவனைத் தமது மகனாக அங்கீகரிக்கிறார். அவனை நீங்கள் புறக்கணித்தால், உங்களை தேவனுடைய குடும்பத்தின் பிள்ளையாக அல்லாமல் கூலியாளாகவே காட்டிக்கொண்டிருக்கிறீர்கள். (35)

காணாமற்போன மைந்தனை வாழ்த்த நீங்கள் முன்வராவிட்டாலும், மகிழ்ச்சி தொடரும்; மீட்கப்பட்டவன் தகப்பனுக்கு அருகில் தகப்பனுடைய வேலையில் அமர்த்தப்படுவான். எவனுக்கு அதிகம் மன்னிக்கப்பட்டதோ, அவன் அதிகமாய் அன்புகூருவான். நீங்களோ புறம்பான இருளில் தள்ளப்படுவீர்கள். ஏனெனில், “அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார்”–1 யோவான் 4:8. (36) ★

# 17

# இந்த வருடமும் இருக்கட்டுமே!

**(மூலநூல் : பக்கங்கள் 212–218)**
**லூக்கா 13:1–9**

நியாயத்தீர்ப்பைக்குறித்த தமது போதனையில் எச்சரிப்பைக் கொடுத்த போது, கிறிஸ்து இரக்கம் கலந்த அழைப்பையும் இணைத்துவிடுத்தார். “மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக் கிறதற்கே வந்தார்” (லூக்கா 9:56) என்று கூறினார். “உலகத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்”–யோவான் 3:17. அவருடைய இரக்கத்தின் ஊழியத்திற்கும் தேவனுடைய நீதிக்கும், நியாயத்தீர்ப்புக்கும் உள்ள சம்பந்தத்தை கனியற்ற அத்திமரத்தின் உவமை எடுத்துக்கூறுகிறது. (1)

வரவிருக்கும் தேவனுடைய இராஜ்யத்தைக்குறித்து கிறிஸ்து மக்களை எச்சரித்து வந்தார். அதைக்குறித்த அவர்களுடைய அறியாமையையும் அலட்சியப்போக்கையும் அவ்வப்போது கடிந்துகொண்டார். சீதோஷ்ண நிலையை முன்னறிவிக்கும் வானத்தின் அடையாளங்கள்குறித்து மிகத் தெளிவாகவும் துரிதமாகவும் புரிந்துகொண்டார்கள். ஆனால் ஆண்டவருடைய இறைப்பணி ஊழியத்தை மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டிய காலங்களின் அடையாளங்களை அவர்களால் பகுத்தறிந்து, உணர்ந்துகொள்ள முடியாமல் போயிற்று. (2)

அக்காலத்திலும் இக்காலத்திலும் ஜனங்கள் தங்களை தேவனுக்கு மிகவும் பிரியமானவர்களாகக் கருதி, எச்சரிப்பின் தூது பிறருக்கே உரியதாக முடிவுசெய்துவிடுகின்றனர். பெரும் எழுச்சியை ஏற்படுத்திய ஒரு சம்பவம் குறித்து சிலர் இயேசுவிடம் வந்து கூறினார்கள். யூதேயாவின் ஆளுநரான பொந்தியு பிலாத்துவின் ஒரு சில நடவடிக்கைகளால் ஜனங்கள் மனவருத்தம் அடைந்திருந்தனர். அதின்மூலமாக எருசலேமில் ஏற்பட்ட கிளர்ச்சியை பிலாத்து வன்முறையைப் பிரயோகித்து கட்டுப்படுத்த முயற்சித்தான். ஒரு

சந்தர்ப்பத்தில் அவனுடைய போர்ச்சேவகர்கள் தேவாலயத்தைக் கைப்பற்றி அங்கே பலிகளைச் செலுத்தி, தொழுகையில் ஈடுபட்டிருந்த கலிலேயா யாத்திரிகள் சிலரை வெட்டிச் சாய்த்தனர். கலிலேயர்கள் பாவஞ்செய்திருந்த தாலேயே இத்தகைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வந்ததாக யூதர்கள் இந்த துக்கமான சம்பவத்திற்கு விளக்கம்கொடுத்தனர். இவ்விளக்கம் கேட்டு திருப்தியடைந்தவர்களில் சிலர் இந்த வன்முறையை கிறிஸ்துவிடம் விவரித்தனர். கலிலேயர்களைக்காட்டிலும் தாங்கள் நல்லவர்களாக இருந்ததினால் தேவன் தங்கள்மீது பிரியம்வைத்து, கலிலேயர்கள்மீது நியாயத்தீர்ப்பை அனுமதித்தாரென்று தங்களது உள்ளங்களில் திருப்தி கொண்டனர். கலிலேயர்கள் தண்டனைக்குப் பாத்திரமானவர்களே என்று அவர்கள் உறுதியாக நம்பினபடியால், இயேசுவும் தமது வார்த்தைகளால் அந்த ஜனங்களைக் கடிந்துகொள்வாரென்று ஆவலுடன் எதிர்பார்த்தனர். (3)

இவ்விஷயத்தில், தங்கள் எஜமான் தமது கருத்தை தெரிவிப்பதற்கு முன்னர் எந்தக் கருத்தையும் தெரிவிக்க கிறிஸ்துவின் சீடர்கள் துணிய வில்லை. மற்றவர்களின் குணங்களை நியாயந்தீர்ப்பதுபற்றியும், தங்களது குறுகிய கண்ணோட்டத்தின்படி நியாயத்தீர்ப்பை அளப்பது குறித்தும் அவர்களுக்குத் தெளிவான பாடத்தை அவர் கற்றுக்கொடுத்திருக்கிறார். எனினும், மற்றவர்களைவிட அந்த மனிதர் பாவிகளென்று கிறிஸ்து பழித்துரைக்க வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவருடைய பதிலில் அவர்கள் ஆச்சரியமடைந்தனர். (4)

தம்மைச் சூழ்ந்திருந்த திரளான ஜனங்களை நோக்கி: “அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப்பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக் கிறீர்களா? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்” என்றார். அவர்கள் தங்கள் இருதயங்களைத் தாழ்த்தி பாவத்திற்காக மனந்திரும்பும்படியாக அதிர்ச்சியூட்டும் இந்தக் கோரசம்பவங்கள் நிகழ அனுமதிக்கப்பட்டது. யாரெல்லாம் கிறிஸ்துவிலே ஒரு அடைக்கலத்தைக் கண்டடையவில்லையோ, அவர்களை தாக்கப்போகின்ற பழிவாங்கும் புயலானது சூழ ஆரம்பித்துவிட்டது. (5)

இயேசு தமது சீடர்களிடத்திலும் திரளான மக்களிடத்திலும் பேசிக் கொண்டிருக்கும்போது, எருசலேம் நகரம் அந்நிய சேனைகளால் பின் நாட்களில் முற்றுகையிடப்படும் சம்பவத்தை தமது தீர்க்கதரிசனக் கண்களால் கண்டார். பட்டணத்திற்கு விரோதமாக அணிவகுத்து வரப்போகின்ற அந்நியர்களின்

காலடி ஓசையை அவர் கேட்டார். அந்த முற்றுகையிலே ஆயிரமாயிரம் பேர் மடிவதை அவர் பார்த்தார். இந்தக் கலிலேயர்களைப்போலவே தேவாலயப் பிராகாரங்களிலே பலிசெலுத்தி தொழுகை நடத்திக்கொண்டிருக்கும்போது பல யூதர்கள் கொல்லப்படுவதைக் கண்டார். கலிலேயர்களுக்கு சம்பவித்த இந்தக் கொடூர சம்பவங்கள், இதைப்போன்ற குற்றத்தால் காணப்படும் நாட்டிற்கும் தேவனிடமிருந்து வரப்போகும் எச்சரிப்பைக் காட்டுவதாக இருந்தது. "நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" என்று இயேசு கூறினார். அவர்களுக்கு இன்னமும் சிறிது தவணையின் காலம் இருந்தது. தங்கள் சமாதானத்திற்கடுத்த காரியங்களை அறிந்துகொள்வதற்கு அவர்களுக்கு இன்னமும் சிறிது காலம் இருந்தது. (6)

"ஒருவன் தன் திராட்சத் தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங்காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்தி மரத்திலே கனியைத்தேடி வருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான்" என்று இயேசு கூறினார். (7)

இந்த உவமையைக் கேட்டவர்கள் அதின் கருத்தினை தவறாகப் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில், இஸ்ரவேல் என்னும் திராட்சைச் செடி எகிப்திலிருந்து கொண்டுவரப்பட்டதாக தாவீது பாடியிருக்கிறான். "சேனைகளின் கர்த்தருடைய திராட்சத்தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே; அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே" (ஏசாயா 5:7) என்று ஏசாயா தீர்க்கதரிசி எழுதியுள்ளான். கர்த்தருடைய தனிப்பட்ட கவனத்தையும், கண்காணிப்பையும் பெற்றிருந்த திராட்சத்தோட்டத்திலே நாட்டப்பட்ட அத்திமரம் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமாகிய யூதர்களையே சுட்டிக்காட்டியது. (8)

தமது ஜனங்கள்மீது தேவன் வைத்திருந்த நோக்கமும் அவர்களுக்கு அவர் வழங்கியிருந்த மகிமையான வாய்ப்புகளும் ஏராளம். "அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்" (ஏசாயா 61:3) என்று ஏசாயா தீர்க்கன் அழகான வார்த்தைகளில் எடுத்துக்கூறியிருக்கிறான். சாகும் தருணத்தில் யாக்கோபு பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு தான் மிகவும் நேசித்த யோசேப்பைக் குறித்துக் கூறுகையில்: "யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்" (ஆதி. 49:22) என்றான். "அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும்

ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங் களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார்" (ஆதி. 49:22,25) என்றான். தேவன் இஸ்ரவேல் வம்சத்தை நற்குல திராட்சச்செடியாக ஜீவ ஊற்றுகளண்டை நட்டார். அவர் தமது திராட்சத்தோட்டத்தை "மகா செழிப்பான மேட்டிலே" உருவாக்கினார். "அவர் அதை வேலியடைத்து, அதிலுள்ள கற்களைப்பொறுக்கி, அதிலே நற்குல திராட்சச்செடிகளை நட்டார்"—ஏசாயா 5:1,2. (9)

"அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று காத்திருந்தார்; அதுவோ கசப்பான பழங்களைத் தந்தது"—ஏசா. 5:2. ஆரம்பகாலத்தில் இருந்த யூதர்களைவிட, கிறிஸ்துவின் நாட்களிலிருந்த ஜனங்கள் தங்களை மிகவும் பக்தியுள்ளவர்கள்போல் காட்டிக்கொண்டார்கள். ஆனால் தேவ ஆவியானவரின் இனிய கிருபைகளினின்று அவர்களைவிடவும் மிகவும் அவலமான நிலையில் காணப்பட்டார்கள். யோசேப்பினுடைய வாழ்வை மணம்பெறச்செய்த அவனுடைய ஒப்பற்ற குணம் யூத தேசத்தாரிடத்தில் காணப்படவில்லை. (10)

தேவன் தமது குமாரன்மூலமாக கனிகளைத் தேடினார். அவரால் அதைக் காணமுடியவில்லை. இஸ்ரவேலர் நிலத்தைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள். கனிதரும் செடி நிற்கவேண்டிய இடத்தை ஆக்கிரமித்து கனிகொடாமல் நிற்பதின்மூலம், அது சாபத்தைச் சம்பாதித்தது. இவ்வுலகிற்கு தேவன் வழங்கத் திட்டமிட்டிருந்த ஆசீர்வாதங்களை அளிப்பதற்கு அது தடையாக அங்கே நின்றது. இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் நடத்தையின் மூலமாக தேவனை மற்ற தேசத்தவர் மத்தியில் தவறாகச் சித்தரித்தார்கள். அவர்கள் பிரயோஜனமற்றவர்களாக மாறியதோடுமட்டுமல்லாமல் தேவசித்தம் நிறைவேறுவதற்குத் தடையாகவும் இருந்தார்கள். அவர்களுடைய மார்க்கம் பெருமளவிற்கு தவறான வழிக்கு அழைத்துச்சென்று, இரட்சிப்பிற்குப் பதிலாக அழிவைத் தேடித்தந்தது. (11)

மரம் கனியற்றதாக இருக்கும் என்றால், அது வெட்டிப்போடப்பட வேண்டுமென்று அதற்கு கொடுக்கப்பட்ட தீர்ப்பை அந்த உவமையில்வரும் திராட்சத்தோட்டக்காரன் கேள்வி கேட்கவில்லை. மாறாக, தோட்டத்தின் சொந்தக்காரருக்கு அந்தக் கனிகொடாத மரத்தின்மீதிருந்த அக்கறைகுறித்து அறிந்து, அதில் அவனும் பங்குகொள்கிறான். அந்த மரம் வளர்ந்து கனி கொடுப்பதைக் காண்பதைத்தவிர வேறு எதுவும் அவருக்கு சந்தோஷத்தைக் கொடுக்காது. எனவே தன் எஜமானனின் எண்ணத்தைப் புரிந்துகொண்டு: "ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன். கனிகொடுத்தால் சரி" என்று கூறினான். (12)

உத்தரவாதமற்ற ஒரு மரத்திற்குப் பணிசெய்ய தோட்டக்காரன் எந்தத் தயக்கமும் காட்டவில்லை. அதின்மீது மேலும் அதிகக் கவனம் செலுத்த ஆயத்தப்படுகிறான். அதைச்சுற்றிலும் கொத்திவிட்டு அதற்கு எருப்போட்டு கனிகொடுப்பதற்குச் சாதகமான நிலையை ஏற்படுத்திக்கொடுக்கத் தீர்மானிக்கிறான். (13)

கனிகொடாத அத்திமரத்தின் விஷயத்தில் எஜமானனும், தோட்டக் காரனும் ஒரே கருத்துடையவர்களாகவும், கரிசனையுடையவர்களாகவும் இருக்கின்றனர். அதுபோலவே பிதாவும், குமாரனும் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களிடத்தில் ஒரேவிதமான அன்பு செலுத்துகிறவர்களாகக் காணப்படு கிறார்கள். அதிகப்படியான தருணங்கள் தரப்படுமென்று கிறிஸ்து ஜனங்களைப் பார்த்து கூறினார். நீதியின் விருட்சங்களாக மாறி உலகிற்குக் கனிகொடுப்பதின்மூலமாக ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்படியாக, தேவன் அவர்களை தமது அன்பினிமித்தம் அவர்களை எடுத்து உபயோகப்படுத்த ஆவலுள்ளவராக இருக்கிறார். (14)

தோட்டக்காரனுடைய பணியின் விளைவு எவ்வாறாக இருந்தது என்பதைக்குறித்து இயேசு தமது உவமையில் கூறவில்லை. எஜமானனுக்கும் தோட்டக்காரனுக்குமிடையே நடைபெற்ற சம்பாஷணையோடு உவமை முற்றுப்பெறுகிறது. உவமையைக் கேட்டுக்கொண்டிருந்த சந்ததியார் முடிவை கற்பனைசெய்துகொள்ளும் வகையில் அது பாதியில் நிறுத்தப் பட்டது. "கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப் போடலாம்" என்ற எச்சரிப்பை அவர் அவர்களுக்குக் கொடுத்தார். இந்த மாற்றப்படமுடியாத வார்த்தைகள் கூறப்படவேண்டுமாவென்பது அவர்களையே சார்ந்திருந்தது. கோபாக்கினையின் நாள் சமீபமாயிருந்தது. கனியற்ற அத்தி மரத்திற்கு எஜமான் விடுத்த எச்சரிப்பு பாவஜீவியத்தின்மூலம் ஏற்கெனவே பல பேரிடர்களுக்கு ஆளான இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவனுடைய இரக்கம் கலந்த முன்னெச்சரிப்பாயிருந்தது. (15)

இதே எச்சரிப்பின் வார்த்தைகளை நம்முடைய சந்ததிக்கும் தேவன் இன்று கொடுக்கிறார். ஆ! அக்கறையற்ற இதயமுடையவர்களே, நீங்கள் கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் ஒரு கனியற்ற மரமாக இருக்கிறீர்களா? வெகு காலத்திற்கு முன்னர் கூறப்பட்ட அழிவின் வார்த்தைகள் உங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறதா? கர்த்தரிடத்தில் இருந்து நன்மையான ஈவுகளை நீங்கள் எவ்வளவு காலமாகப் பெற்றிருக்கிறீர்கள்? உங்களிடமிருந்து அன்பை எதிர்பார்த்து அவர் எவ்வளவு காலமாக கவனித்துக் காத்திருக்கிறார் என்பது தெரியுமா? தோட்டக்காரனுடைய விழிப்போடுகூடிய கண்காணிப்பிற்கடியில் அவருடைய திராட்சத்தோட்டத்தில் நடப்பட்டுள்ள

நீங்கள் எத்தனை சிறப்புரிமைகளைப் பெற்றிருக்கிறீர்களென்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். மென்மையான சுவிசேஷத் தூதுகளினால் உங்களுடைய இதயம் பரவசமடைந்ததுண்டா? கிறிஸ்துவின் நாமத்தை நீங்கள் உச்சரிக்கிறீர்கள். வெளிப்பிரகாரமாக அவருடைய சரீரமாகிய சபையில் ஒரு அங்கத்தினராயிருக்கிறீர்கள். இருப்பினும், அந்த மாபெரும் அன்பின் இதயத்தோடு (ஆண்டவரின்) உங்களுக்கு உயிரோட்டமுள்ள தொடர்பு இருக்கிறதாவென்பதைக்குறித்து அறியாதிருக்கிறீர்கள். அவருடைய ஜீவ அலை உங்களை ஊடுருவிச்செல்ல நீங்கள் அனுமதிக்கிறதில்லை. அவருடைய குணத்தின் இனிமையான கிருபைகள் அதாவது ஆவியின் கனிகள் உங்களுடைய ஜீவியத்தில் காணப்படுவதில்லை. (16)

கனியற்ற மரம் மழையையும், சூரிய ஒளியையும், தோட்டக்காரனுடைய கண்காணிப்பையும் பெற்றுக்கொள்ளுகிறது. நிலத்திலிருந்து அது போஷாக்கைப் பெறுகிறது. பதிலாக தனது கனியற்ற கிளைகளின் நிழலால் நிலத்தை கருமையாக்கிவிடுகிறது. அதினால் அந்த நிழல்களிலே படர்ந்திருக்கும் கனி தரும் செடிகளைத் தழைக்கமுடியாமல் செய்கிறது. அதுபோலவே, தேவன் தமது நன்மையான ஈவுகளை உங்கள்மீது அதிகமாகப் பொழிந்திருந்தும் உங்களால் இந்த உலகத்தவருக்கு எந்த பிரயோஜனமும் இல்லை. பிறருக்குச் சென்றடையவேண்டிய தேவாசீர்வாதங்கள் உங்களால் கொள்ளையடிக்கப்படுகின்றது. (17)

நீங்கள் நிலத்தைக் கெடுக்கிறவர்களாக இருக்கிறீர்களென்பதைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் இருக்கலாம். இருப்பினும் தமது பெரிதான இரக்கத்தினால் தேவன் உங்களை வெட்டிப்போடவில்லை. அவர் உங்களை இரக்கமில்லாதவராக நோக்குவதில்லை; அக்கறையற்ற நிலையில் உங்களைவிட்டு அவர் முகத்தைத் திருப்புகிறதில்லை; அல்லது அழியும்படி உங்களை விடுகிறதுமில்லை. அவர் பல நூற்றாண்டுகளுக்குமுன்னர் இஸ்ரவேலரைப்பார்த்து கதறியதுபோலவே இப்பொழுதும் உங்களைப் பார்த்து: "எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்?... என் உக்கிர கோபத்தின்படியே செய்ய மாட்டேன்; எப்பிராயீமை அழிக்கும்படித் திரும்பமாட்டேன்; ஏனென்றால் நான் மனுஷனல்ல, தேவனாயிருக்கிறேன்" (ஓசியா 11:8,9) என்று கதறுகிறார். மனதுருகும் இரட்சகர் உங்களைக்குறித்து: "இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலுங்கொத்தி, எருப்போடுவேன்" என்று கூறுகிறார். (18)

அதிகரிக்கப்பட்ட தவணையின் காலத்திலே கிறிஸ்து தமது விடாப்பிடியான அன்பினால் தொடர்ந்து இஸ்ரவேலர்களுக்குக் கிருபையை

வழங்கி வந்தார். "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்" (லூக்கா 23:34) என்று சிலுவையில் தொங்கியபோது, இயேசு ஜெபித்தார். உயிர்த்தெழுந்த பின்னர், சுவிசேஷமானது முதலாவதாக எருசலேமில் பிரசங்கிக்கப்பட்டது. அங்கே பரிசுத்த ஆவியைப் பொழிந்தருளினார். உயிர்த்தெழுந்த இரட்சகரின் வல்லமையை முதல் சுவிசேஷ சபை வெளிப்படுத்திற்று. அங்கே ஸ்தேவான் சாட்சிகூறி, தன் ஜீவனை ஒப்புக்கொடுத்தான். "அவன் முகம் தேவதூதன் முகம் போலிருந்தது"–அப். 6:15. கொடுக்கமுடிந்ததனைத்தையும் பரலோகம் மனுபுத்திரருக்குக் கொடுத்தது. கிறிஸ்து "நான் என் திராட்சத்தோட்டத்திற்காகச் செய்யாத எந்த வேலையை அதற்கு இனிச் செய்யலாம்?" (ஏசாயா 5:4) என்று வினவினார். உங்கள்மீது அவருக்கிருக்கும் அக்கறையும், பராமரிப்பும் அதிகரிக்குமே தவிர குறையாது. இன்னமும் கர்த்தர்: "நான் அதைக் காப்பாற்றி, அடிக்கடி அதற்குத் தண்ணீர்பாய்ச்சி, ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும் பகலும் காத்துக்கொள்வேன்" (ஏசாயா 27:3) என்கிறார். (19)

"கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால்," தெய்வீக ஏதுகரங்களுக்குச் செவிகொடாத இதயம் கடினமடைந்து, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலையுங்கூட உணரமுடியாத நிலையை அடைந்துவிடுகிறது. அப்பொழுது எஜமான் தோட்டக்காரனைப்பார்த்து: "இதை வெட்டிப் போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது" என்று கூறுவார். (20)

இன்று அவர் உங்களை அழைக்கிறார். "இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு... நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்... நான் இஸ்ரவேலுக்குப் பனியைப்போலிருப்பேன்; அவன் லீலிப் புஷ்பத்தைப் போல் மலருவான்; லீபனோனைப்போல வேரூன்றி நிற்பான்... அவன் நிழலில் குடியிருக்கிறவர்கள் திரும்புவார்கள்; தானிய விளைச்சலைப் போலச் செழித்து திராட்சச்செடிகளைப்போல படருவார்கள்... என்னாலே உன் கனியுண்டாயிற்று"–ஓசியா 14:1–8. (21) ★

# 18

# பெருவழிகளுக்கும் வேலிகளுக்கும் செல்லுங்கள்!

**(மூலநூல் : பக்கங்கள் 219–237)**
**லூக்கா 14:1,12–24**

ஒரு பரிசேயனின் வீட்டிலே நடந்த விருந்திற்கு இரட்சகர் விருந்தினராக சென்றிருந்தார். பணக்காரர் மாத்திரமல்லாமல் ஏழைகளின் அழைப்பையும் ஏற்று அவர்கள் வீடுகளுக்குச் செல்வதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். இச்சந்தர்ப்பங்களிலெல்லாம் தமக்கு முன்பாக இருக்கும் காட்சிகளை பயன்படுத்தி, அவைகளிலிருந்து நல்ல போதனைகளை ஜனங்களுக்குக் கற்றுத்தருவது அவருடைய பழக்கமாயிருந்தது. யூதர்கள் மத்தியில் தேசியரீதியிலும், மார்க்கரீதியிலும் மகிழ்ச்சியளிக்கும் ஒரு வைபவமாக இந்த விருந்து இருந்தது. நித்திய ஜீவனுக்கடுத்த ஆசீர்வாதங்களின் ஒரு அடையாளமாக அது கருதப்பட்டது. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரோடு அவர்கள் பந்தியிருக்கும்போது, புறஜாதியார் வெளியிலிருந்து ஏக்கத்தோடு நோக்கும் அந்த மாபெரும் விருந்தைக்குறித்து சிந்திக்க அவர்கள் ஆவலாயிருந்தனர். எச்சரிப்பின் தூதையும், போதனையையும் அவர்களுக்குக் கொடுக்க வாஞ்சித்த இயேசு மாபெரும் விருந்து உவமையைக் கூறினார். தேவனுடைய இம்மைக்குரிய மற்றும் மறுமைக்குரிய ஆசீர்வாதங்களை தங்களிடம் வைத்துக்கொள்ள யூதர்கள் மனதாயிருந்து, தேவனுடைய இரக்கத்தை புறஜாதியாருக்கு மறுத்தார்கள். தேவனுடைய இராஜ்யத்தில் பங்கடையும்படிக்கு அவர் விடுக்கும் இரக்கம்கலந்த அழைப்பை அச்சமயத்தில் யூதர்கள் புறக்கணித்துக்கொண்டிருந்ததை விளக்கவே கிறிஸ்து இவ்வுவமையைக் கூறினார். புறஜாதிகளை தொழுநோயாளிகளாக எண்ணி, தங்களது உடைகள் அவர்கள்மீது பட்டுவிடாதபடி ஒதுங்கி நடப்பது யூதர்களின் பழக்கம். இப்படிப்பட்ட யூதர்களால் ஏளனமாக அவமதிக்கப்பட்ட அழைப்பு, இவர்களால் நிந்திக்கப்பட்ட புறஜாதியார்களுக்குக் கொடுக்கப்பட இருக்கிறதென்று காட்டினார். (1)

தன் சுயநலமான ஆர்வத்தை கவனத்தில்கொண்டவனாக பரிசேயன் ஒருவன் விருந்திற்கு விருந்தினர்களை தெரிவுசெய்திருந்தான். கிறிஸ்து அவனைப்பார்த்து: "நீ பகல் விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது, உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும், உன் பந்துஜனங்களை யாகிலும், ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்கவேண்டாம்; அழைத்தால் அவர்களும் உன்னை அழைப்பார்கள், அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும். நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்" என்றார். (2)

மோசேமூலமாக இஸ்ரவேலருக்கு தாம் கொடுத்திருந்த புத்திமதியை கிறிஸ்து இவ்விடத்தில் திரும்பவும் கூறிக்கொண்டிருந்தார். "உன் வாசல் களில் இருக்கிற பரதேசியும், திக்கற்றவனும், விதவையும் வந்து புசித்து திருப்தியடைவார்களாக" (உபா. 14:29) என்று, அவர்கள் தங்களது பரிசுத்தமான பண்டிகைகளைக் கொண்டாடும்போது செய்யவேண்டுமென்று கூறியிருந்தார். இந்த விருந்துகளின்போது வரும் கூட்டங்கள் இஸ்ரவேலருக்கு பொருட்பாடங்களாக இருக்கவேண்டுமென்பதே அவரது எண்ணமாகும். உண்மையான விருந்தோம்பலினால் உண்டாகும் மகிழ்ச்சியையும், வருடமுழுவதும் ஏழைகளும் இழப்புகளைச் சந்தித்த குடும்பத்தினரும் பராமரிக்கப்படவேண்டுமென்றும் மக்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. இந்த விருந்துகளின்மூலமாக மேலும் ஒரு பரவலான பாடத்தை அவர்கள் கற்கவேண்டியதாயிருந்தது. இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு மாத்திரமே உரியதல்ல என்பதையும், உலகிற்குப் பகிர்ந்தளிக்கும்படியாகவே தேவன் அவர்களுக்கு ஜீவ அப்பத்தைக் கொடுத்தாரென்பதையும் அவர்கள் புரிந்துகொள்வது அவசியமாக இருந்தது. (3)

இந்தப் பணியை அவர்கள் நிறைவேற்றவில்லை. கிறிஸ்து அவர்களுடைய சுயநலத்தைக் கடிந்துகொண்டார். பரிசேயர்கள் அவரின் வார்த்தைகளை விரும்பவில்லை. அப்பொழுது அந்த உரையாடலை வேறுதிசையில் திருப்பும் நோக்கோடு தன்னை ஒரு பக்திமான்போல் காட்டிக்கொண்ட ஒரு மனிதன்: "தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம் பண்ணுகிறவன் பாக்கியவான்" என்றான். தேவனுடைய இராஜ்யத்தில் தனக்கு நிச்சயம் ஒரு இடம் இருப்பதுபோன்று, நிச்சயத்துடன் இதைக் கூறினான். எந்த நிபந்தனைகளின்பேரில் இரட்சிப்பு வாக்குத்தத்தம்

செய்யப்பட்டதோ அந்த நிபந்தனைகளை நிறைவேற்றாமலேயே தாங்கள் கிறிஸ்துவினால் இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டோமென்று களிகூருகிறவர் களுடைய மனப்பாங்கு எப்படி இருக்கிறதோ அதைப்போலவே இந்த நபருடைய மனப்பாங்கும் இருந்தது. பிலேயாமிடமிருந்த ஆவி இவனில் காணப்பட்டது. “நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக. என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக” (எண். 23:10) என்று அவன் ஜெபித்தான். பரலோகத்திற்குச் செல்வதற்குத் தன்னிடம் தகுதி இருக்கிறதாவென்று அந்த பரிசேயன் எண்ணிப்பார்க்கவில்லை. பரலோகத்தில் அவன் அடையப்போகும் சந்தோஷத்தைக்குறித்து நம்பிக்கையோடு இருந்தான். விருந்து உபசரிப்பின் மூலம் ஜனங்கள் கற்றுக்கொள்ளவேண்டிய பாடத்திலிருந்து அவர்களை திசைதிருப்பும் நோக்கில் அவனுடைய கருத்து இருந்தது. நிகழ்கால ஜீவியத்தைக் கடந்து, நீதிமான்கள் உயிர்த்தெழும் எதிர்காலச் சம்பவத்தை அவர்களுக்கு நினைவுபடுத்துவதாக அவன் நினைத்தான். (4)

பாசாங்கு செய்பவனுடைய இருதயத்தின் சிந்தனைகளை அறிந்து கொண்ட இயேசு அவனை உற்றுநோக்கியவராக, இம்மையில் மனிதர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்களையும் அவைகளின் குணநலன்களையும் மதிப்பையுங்குறித்து தம்மைச் சூழ்ந்திருந்த ஜனங்களுக்கு எடுத்துரைத்தார். மறுமையில் அவர்கள் பங்கடையப்போகும் ஆசீர்வாதங்களுக்காக இம்மையில் அவர்கள் ஆற்றவேண்டிய பங்கு ஒன்று உண்டென்பதை அவர் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். (5)

“ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம்பண்ணி, அநேகரை அழைப்பித்தான்” என்றார். விருந்து வேளை வந்தபோது அவன் தனது ஊழியக்காரனை அனுப்பி: “எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, வாருங்கள்” என்று இரண்டாவது தூதை அனுப்பினான்; ஆனால் அழைக்கப்பட்டவர்கள் அழைப்பை அலட்சியம்பண்ணத் துவங்கினார்கள். “அவர்களெல்லாரும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள். ஒருவன்: ஒரு வயலைக்கொண்டேன், நான் அகத்தியமாய்ப்போய், அதைப் பார்க்கவேண்டும், என்னை மன்னிக் கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: ஐந்தேர்மாடு கொண்டேன், அதைச் சோதித்துப்பார்க்கப் போகிறேன், என்னை மன்னிக் கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: பெண்ணை விவாகம்பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது” என்றான். (6)

விருந்திற்கு வரஇயலாமற்போனதற்கு அவர்கள் கூறிய சாக்குப் போக்குகள் ஒரு அவசியத்தின் அடிப்படையில் அமையவில்லை. வயலை ஏற்கெனவே வாங்கிவிட்டவன்: “நான் அகத்தியமாய்ப்போய் அதைப் பார்க்கவேண்டும்” என்று கூறுகிறான். தான் வாங்கிய நிலத்தின்மீதுகொண்ட

ஆர்வத்தில் மூழ்கியிருந்ததால், அதைத் துரிதமாகச்சென்று பார்க்கவேண்டு மென்ற எண்ணத்தில் கூறினான். ஏர்மாடுகளும் ஏற்கனவே வாங்கியாகி விட்டது. வாங்கியவரின் ஆர்வத்தை திருப்திப்படுத்துவதற்காகவே அவைகளை நிரூபிக்க வேண்டியதிருந்தது. மூன்றாவது மனிதன் கூறிய காரணமும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. பெண்ணை விவாகம் செய்ததால் அவன் விருந்தைப் புறக்கணித்திருக்கத் தேவையில்லை. அவளையும் அவன் விருந்திற்கு அழைத்துவந்திருக்கலாம். அவன் தான் மகிழ்ந்திருப்பதற்காக தனக்காக சில திட்டங்களைத் தீட்டியிருந்தான். வருவதாக வாக்குக்கொடுத்திருந்த அந்த விருந்தைவிட அவன் போட்டிருந்த திட்டம் அவனுக்கு அதிக விருப்பமானதாகக் காணப்பட்டது. அந்த விருந்தளிப்பவரின் கூட்டுறவில் மகிழ்ச்சியடைவதைவிட தான் திட்டமிட்டிருந்த அந்தக் கூட்டுறவின் சூழலில் மகிழ்ச்சி காண்பதை அவன் நன்றாக அறிந்தி ருந்தான். விருந்திற்கு வருவதற்கு மறுப்பு தெரிவிக்கும்போது இவன் மற்றவர் களைப்போன்று என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேனென்று மரியாதையோடுகூடிய பாசாங்கோடு எதையும் கூறாமல், "நான் வரக்கூடாது என்றான்." "வருவதற்கு எனக்கு விருப்பமில்லை" என்ற உண்மையே அவனது கூற்றில் மறைந்திருக்கிறது. (7)

இம்மூவரின் மனமும் வேறு காரியங்களில் ஆழ்ந்திருந்தபடியால், அவர்கள் போக்குச்சொல்லத் துவங்கினர். மற்ற காரியங்களின்மீது இருந்த அக்கறை அவர்களுடைய சிந்தனையை ஈர்த்தது. ஆகவே கலந்து கொள்வதாக வாக்குப்பண்ணியிருந்த விருந்தை புறக்கணித்து, தாராளமான தங்கள் நண்பனை அவர்களது அலட்சியத்தினால் அவமதித்தனர். (8)

சுவிசேஷத்தின்மூலமாகக் கிடைக்கும் ஆசீர்வாதங்களை கிறிஸ்து இம்மாபெரும் விருந்து உவமையின்மூலமாக நமக்குத் தெளிவுபடுத்துகிறார். சுவிசேஷத்தின் கருப்பொருளாகத் திகழ்பவர் கிறிஸ்து. பரலோகத்திலிருந்து இறங்கிவரும் அப்பமாக அவர் இருக்கிறார். அவரிலிருந்து இரட்சிப்பின் ஊற்றுகள் பாய்ந்தோடுகிறது. இரட்சகரின் வருகைகுறித்து யூதர்களுக்கு கர்த்தருடைய தூதர்கள் கூறியறிவித்தார்கள். அவர்கள் கிறிஸ்துவை "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று சுட்டிக்காட்டினர். பரலோகம் அளிக்கக்கூடிய மாபெரும் வெகுமதியை தேவன் நமக்கு ஏற்பாடு செய்திருக்கும் விருந்தின்மூலம் ஈவாக வழங்குகிறார். இந்த வெகுமதியின் மதிப்பை நம்மால் கணக்கிட இயலாது. தேவன் தமது மட்டற்ற அன்பினால் மாபெரும் விருந்தை ஏற்பாடுசெய்து, வற்றாத வளமிகுந்த நல்ஈவுகளை மனுப்புத்திரருக்கு வழங்கியிருக்கிறார். "இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்" (யோவான் 6:51) என்று இயேசு கூறினார். (9)

சுவிசேஷ விருந்திற்காக கொடுக்கப்படும் அழைப்பை ஏற்றுக் கொள்ளத்தக்கதாக, அவர்கள் கிறிஸ்துவையும் அவரது நீதியையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, தங்களது உலகப் பிரகாரமான ஆர்வங்களையும் ஆசைகளையும் அவர்கள் கீழடக்கி அடிபணியச்செய்ய வேண்டும். தேவன் தம்வசமுள்ள அனைத்தையும் மனிதனுக்குக் கொடுத்தார். அவனது சேவையை இந்த பூமிக்கடுத்த மற்றும் தன்னலமான காரியங்களுக்கும்மேலாக வைக்கவேண்டுமென்று மனிதனிடம் வேண்டுகிறார். பிளவுபட்ட இதயத்தை அவரால் ஏற்றுக்கொள்ள இயலாது. உலகப்பிரகாரமான பாசங்களில் மூழ்கியிருக்கும் இதயமானது தேவனுக்காகக் கொடுக்கப்படமுடியாது. (10)

இந்தப் படிப்பினை அனைத்துக் காலங்களுக்கும் பொருந்தும். தேவஆட்டுக்குட்டியானவர் எங்கெல்லாம் செல்கிறாரோ அங்கெல்லாம் நாமும் பின்தொடரவேண்டும். அவருடைய வழிநடத்துதலைத் தெரிந்துகொண்டு, அவருடைய நட்பையும் தோழமையையும் இந்த உலகியல் சார்ந்த நண்பர்களின் தோழமைக்கும்மேலாக மதிக்கவேண்டும். “தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாக நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல” (மத். 10:37) என்று கிறிஸ்து கூறுகிறார். (11)

கிறிஸ்துவின் நாட்களில், குடும்பத்தினர் கூடியிருந்து தினந்தோறும் உணவருந்தும் வேளையிலே அப்பத்தைப் பிட்கும்போது, “தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம்பண்ணுகிறவன் பாக்கியவான்” என்று கூறுவது வழக்கமாயிருந்தது. எல்லையற்ற விலைக்கிரயம் கொடுத்து விருந்து ஏற்பாடு செய்யப்படும்பொழுது அதற்கான விருந்தினர்களைக் கண்டுபிடிப்பது எவ்வளவு கடினமானது என்பதை கிறிஸ்து காட்டினார். அவருடைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் இரக்கத்தின் அழைப்பை தாங்கள் அலட்சியப்படுத்திவிட்டதை அறிந்திருந்தார்கள். உலகிலுள்ள பொருட்களும், இன்பமும், ஐசுவரியமும், அவர்கள் மனதை மயக்கிவிட்டன. அவர்களெல்லாரும் ஒருமனதாக போக்குச்சொல்லிவிட்டார்கள். (12)

இன்றைய நாட்களிலும் அதே நிலைமை நிலவுகிறது. விருந்து அழைப்பின்போது தங்களது மறுப்பை வலியுறுத்துவதற்காக மக்கள் கூறிய சாக்குப்போக்குகளையே இன்று விடப்படும் சுவிசேஷ அழைப்பிற்கும் மக்கள் கூறுகின்றனர். சுவிசேஷத்தின் கோரிக்கைகளுக்கு கவனம் செலுத்துவதின்மூலம் தங்களது உலகப்பிரகாரமான வெற்றிவாய்ப்புகளை இடர்பாட்டிற்கு உட்படுத்த முடியாதென்று மனிதர் வற்புறுத்துகின்றனர். நித்தியத்திற்கடுத்த காரியங்களுக்கு வழங்கப்படும் மதிப்பைவிட, இந்த உலகம்

சார்ந்த காரியங்களுக்கு அதிக மதிப்பையும் கனத்தையும் கொடுக்கின்றனர். தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட லௌகீக ஆசீர்வாதங்களே அவர் களுக்கும் அவர்களது சிருஷ்டிகரும் மீட்பருமானவருக்குமிடையே ஒரு தடையை ஏற்படுத்திவிடுகிறது. உலகத்தைப் பின்தொடர்வதிலிருந்து அவர்களை யாராலும் தடுக்க இயலாது. இரக்கத்தின் தூதுவரைப் பார்த்து: "இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன்" (அப். 24:25) என்று கூறுகிறார்கள். சிலர் தேவனுடைய அழைப்பிற்கு கீழ்ப்படிவதின்மூலம் சமூக உறவுகளில் எழக்கூடிய கஷ்டங்களை வலியுறுத்தி, தங்கள் உறவுக்காரர்களுக்கும் நண்பர்களுக்குமிடையே உள்ள தொடர்பை விட்டுவிட இயலாதென்று கூறுகின்றனர். இப்படிச் செய்வதின்மூலம், உவமையில் வரும் நடிகர்களைப்போன்றே அவர்களும் உள்ளனர் என்பதை நிரூபிக்கின்றனர். விருந்திற்கு ஏற்பாடுசெய்த எஜமான், அவர்கள் தெரிவிக்கும் அற்பமான சாக்குப்போக்குகளை, தனது அழைப்பிற்குக் காட்டப்படும் அவமதிப்பாகவே கருதுகிறார். (13)

"பெண்ணை விவாகம் பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது" என்றவன் இவ்வுலகத்தில் ஜீவிக்கும் ஒரு பெரும் வகுப்பினர்களை எடுத்துக்காட்டுகிறான். தேவனுடைய அழைப்பிற்குச் செவிசாய்க்காதபடிக்கு தங்கள் மனைவியரும் அல்லது கணவர்களும் தடையாயிருப்பதற்கு அநேகர் அனுமதித்துவிடுகின்றனர். "என் மனைவி எதிர்க்கின்றபடியினால் என்னால் கடமை உணர்வுகளுக்குக் கீழ்ப்படிய இயலாது" என்றும், அவளுடைய செல்வாக்கு இதைச் செய்யக்கூடாதபடிக்கு மிகவும் கடினமாக்கிவிட்டதென்றும் கணவன் கூறுகிறான். "எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, வாருங்கள்" என்ற கிருபையின் அழைப்பை மனைவி கேட்கும்போது: "என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். என் கணவன் இரக்கத்தின் அழைப்பை ஏற்க மறுக்கிறார். அவர் தமது வியாபாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார். நான் என் கணவனுடன் சென்றாக வேண்டும். ஆகவே என்னால் வர இயலாது" என்கிறாள். இரக்கத்தின் அழைப்பு பிள்ளைகளின் மனதில் கிரியைசெய்யத் துவங்குகிறது. அவர்கள் ஏற்க வாஞ்சிக்கின்றனர். ஆனால் அவர்கள் தங்கள் தகப்பனையும், தாயையும் அதிகமாய் நேசிக்கின்றனர். சுவிசேஷ அழைப்பை ஏற்க மறுப்பதினால் தாங்கள் வருவதை எதிர்பார்க்கக்கூடாதென்று நினைக்கிறார்கள். எனவே, தங்களை மன்னித்துவிடுமாறு அவர்களும் கூறுகின்றனர். (14)

குடும்ப வட்டத்தில் பிளவு ஏற்படும் என்று அஞ்சி இவர்கள் அனைவரும் இரட்சகரின் அழைப்பை ஏற்பதற்கு மறுக்கின்றனர். தேவனுக்குக் கீழ்ப்படிய மறுப்பதின்மூலம் அவர்கள் தங்கள் இல்லத்திற்கு சமாதானத்தையும்

செழுமையையும் கொண்டுவருவதாக நினைக்கின்றனர். ஆனால் இது ஒரு வஞ்சனையே. சுயநலத்தை விதைப்பவர்கள் சுயநலத்தையே அறுப்பார்கள். கிறிஸ்துவின் அன்பைப் புறக்கணிப்பதின்மூலம் மனித அன்பிற்கு அவர் அளிக்கும் தூய்மையையும், நிலையான தன்மையையும் புறக்கணிக்கின்றனர். அவர்கள் பரலோகத்தை மாத்திரமல்ல எந்த உண்மையான மகிழ்ச்சிக்காகப் பரலோகம் தியாகம்செய்யப்பட்டதோ அதையும் இழந்துவிடுகிறார்கள். (15)

உவமையில் வரும் வீட்டெஜமான் தனது அழைப்பு பெற்றுக்கொள்ளப் பட்டவிதம் குறித்து அறிந்தபோது, “கோபமடைந்து, தன் ஊழியக்காரனை நோக்கி: நீ பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய்ப் போய், ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே கூட்டிக்கொண்டுவா” என்றான். (16)

விருந்தை ஆயத்தம்செய்தவர் தன்னை அலட்சியப்படுத்தியவர்களை விட்டுவிட்டு, வீடுகளையும் நிலங்களையும் பெற்றிராத ஏழை வகுப்பினரை அழைப்பித்தான். தன்னுடைய தயாளத்தைப் பாராட்டக்கூடிய எளியோரையும், பசியுற்றோரையும் விருந்திற்கு அழைத்தான். “ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள்” (மத்தேயு 21:31) என்று கிறிஸ்து கூறினார். மனிதரால் வெறுத்து ஒதுக்கப்பட்டு விலக்கப்படுபவர்கள் எவ்வளவு நிர்ப்பந்தமான நிலையிலிருந்தபோதிலும், தேவனுடைய அன்பின் கவனத்திற்குள் வரும்போது, இழிந்தவர்களாகவும் அற்பமானவர்களாகவும் இருக்கமாட்டார்கள். மனிதர்களால் ஒடுக்கப்பட்டு, பல்வேறுவிதமான பாரங்களால் அழுத்தப்பட்டு, கவலையோடு இளைப் படைந்துபோயிருக்கும் ஜனங்கள் தம்மண்டையில் வரவேண்டுமென கிறிஸ்து வாஞ்சிக்கிறார். வேறு எங்கும் காண இயலாத ஒளியையும், சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அவர்களுக்கு வழங்கிட வாஞ்சிக் கிறார். மிகப் பெரும் பாவிகளாக இருப்பவர்களே ஆண்டவருடைய ஆழமான அக்கறையோடுகூடிய பரிவிற்கும் அன்பிற்கும் பாத்திரவான்களாக இருக்கின் றார்கள். அவர் தமது பரிசுத்த ஆவியானவரை அவர்களிடமாக அனுப்பி, மென்மையான குரலில்பேசி, அவர்களை தம்வசம் இழுத்துக்கொள்ளும் முயற்சியை மேற்கொள்ளுகிறார். (17)

ஏழைகளையும் குருடர்களையும் அழைத்துவந்த ஊழியக்காரன் எஜமானனைப் பார்த்து: “நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று, இன்னும் இடம் இருக்கிறது என்றான். அப்பொழுது எஜமான் ஊழியக்காரனை நோக்கி: நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக் கொண்டுவா” என்றான். இங்கே சுவிசேஷத்தின் பணி யூத சமூகத்தைக் கடந்து உலகின்

பெருவழிகளுக்கும், ஒதுக்காக இருக்கும் தெருக்களுக்கும் செல்வதை கிறிஸ்து சுட்டிக்காட்டுகிறார். (18)

இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்பட்டிருந்தவர்களாக பவுலும் பர்னபாவும் யூதர்களை நோக்கி: "முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்ல வேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத்தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள். புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்" அப். 13:46–48. (19)

சுவிசேஷத்தின் தூதை கிறிஸ்துவின் சீடர்கள் அறிவித்ததே உலகிற்கு அவரது முதலாம் வருகையைப்பற்றிக் கொடுக்கப்பட்ட அறிவிப்பாகும். அவர்மீது வைக்கும் விசுவாசத்தினால் கிடைக்கும் இரட்சிப்பை நற்செய்தியாக ஜனங்களுக்கு வழங்கினர். தம்முடையவர்களை மீட்கும்படியாக அவர் மகிமையோடு வரவிருக்கும் இரண்டாம் வருகையையும் அது சுட்டிக்காட்டியது. விசுவாசத்தின்மூலமாகவும், கீழ்ப்படிதலின்மூலமாகவும் ஒளியாயிருக்கும் பரிசுத்தவான்களின் சுதந்திரத்தில் பங்கெடுக்கும் நம்பிக்கையை அது ஜனங் களுக்கு அளித்தது. இந்தத் தூதும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் சமீபமாயிருக்கிறது என்கிற அறிவிப்பும் சேர்த்து, இன்றைய தினங்களில் மக்களுக்கு வழங்கப்படுகிறது. தமது வருகையைக்குறித்து அவர் கூறிய அடையாளங்கள் நிறைவேறிவிட்டன. தேவனுடைய வார்த்தையைப் படிப்பதின் வாயிலாக கர்த்தர் வாசலண்டை நிற்கிறார் என்பதை நாம் அறியலாம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குச் சற்றுமுன்னர் சுவிசேஷத்தின் தூது கூறியறிவிக்கப்படுவதைக்குறித்து யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தில் முன்னறிவிக்கிறான். வானத்தின் மத்தியில் ஒரு தூதன் பறக்கக் காண்கிறான். "அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது" என்றான் (வெளி. 14:6,7). (20)

இந்த தீர்க்கதரிசனத்தில் நியாயத்தீர்ப்பைப்பற்றிய எச்சரிப்பு அத்துடன் சேர்ந்த மற்ற தூதுகளோடு கொடுக்கப்பட்ட பின்னர் வானத்தின் மேகங்கள்மீது

மனுஷகுமாரன் வருவார். நியாயத்தீர்ப்பின் அறிவிப்பு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சமீபம் என்பதைக் கூறும் ஒரு அறிவிப்பாகும். இந்த அறிவிப்பு நித்திய சுவிசேஷம் என்று அழைக்கப்படுகிறது. இரட்சகரின் வருகையைக் குறித்துப் பிரசங்கிப்பதும், வருகை வெகுசமீபமென்று கொடுக்கப்படும் அறிவிப்புமே சுவிசேஷத்தின் முக்கியப்பகுதி என்று காட்டுகிறது. (21)

கடைசிநாட்களில், மக்கள் உலகப்பிரகாரமான காரியங்கள், களியாட்டுக்களிலும், பணத்தைச் சேர்க்கவேண்டுமென்ற ஆசையிலும் மூழ்கியிருப்பார்களென்று வேதாகமம் தெரிவிக்கிறது. நித்தியத்தையடுத்த உண்மைகளுக்கு அவர்கள் குருடராயிருப்பார்கள். “நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண்கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்” (மத். 24:37–39) என்று கிறிஸ்து கூறுகிறார். (22)

இன்றைக்கும் அவ்வண்ணமாகவே காரியங்கள் நடைபெறுகின்றன. இதற்குப்பின்னர் தேவனோ, பரலோகமோ அதற்குப்பின்னான காலமோ இல்லையென்பதுபோல் ஜனங்கள் இலாபத்தைத் தேடியும் சுயநலமான இன்பங்களில் திளைக்கவும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். நோவாவின் நாளில் ஜலப்பிரளயம் குறித்த எச்சரிப்பு மனுஷரை அவர்களுடைய துன்மார்க்கத்தைக் குறித்துத் திடுக்கிடச் செய்து, எப்படியேனும் மனந்திரும்புதலுக்கு அழைக்கவேண்டுமென்று முயற்சித்தது. அதேபோன்று கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையின் செய்தி உலகப்பிரகாரமான காரியங்களில் மூழ்கியிருக்கும் மனிதரை விழிப்படையச்செய்வதற்காகத் திட்டமிடப்பட்டது. நித்தியத்திற்கடுத்த உண்மைகளை புரிந்துகொள்ளும்படியாக அவர்களை விழிப்படையச்செய்து, கர்த்தருடைய விருந்திற்கு விடுக்கப்படும் அழைப்பினை அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படியாகவுமே இந்த எச்சரிப்பு கொடுக்கப்படுகிறது. (23)

இந்தச் சுவிசேஷ அழைப்பானது “பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத் தாருக்கும்” (வெளி. 14:6) வழங்கப்பட வேண்டும். இரக்கம் கலந்த கடைசி எச்சரிப்பின் தூதானது முழு உலகத்தையும் அதின் மகிமையினால் ஒளிரச் செய்யும். ஐசுவரியவான்—ஏழை, உயர்ந்தவன்—தாழ்ந்தவன் போன்ற அனைத்து வகுப்பினரையும் அது சென்றடையவேண்டும். “நீ பெருவழிகளிலும்

வேலிகளிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டு வா" என்று கிறிஸ்து கூறுகிறார். (24)

சுவிசேஷத்தை அறியாமல் அநேகர் அழிந்துகொண்டிருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தைக்குப் பஞ்சமேற்பட்டிருக்கிறது. மனித பாரம்பரியத்தைக் கலக்காமல் வெகுசிலரே தேவவார்த்தையைப் பிரசங்கிக்கின்றனர். பரிசுத்த வேதாகமத்தைக் கரங்களில் வைத்திருந்தபோதிலும், தேவன் அவர்களுக்காக அந்த வேதவாக்கியங்களில் வைத்திருக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்கிறதில்லை. கர்த்தர் தமது அடியார்களை அவருடைய நற்செய்தியை ஜனங்களுக்குக் கொண்டுசெல்லுமாறு அழைக்கிறார். நித்திய ஜீவனுடைய வார்த்தை பாவத்தில் அழிந்துகொண்டிருப்பவர்களுக்கு வழங்கப்படவேண்டும். (25)

பெருவழிகளுக்கும் வேலிகளுக்கும் செல்ல கட்டளை கொடுக்கும் கிறிஸ்து, தமது நாமத்தில் ஊழியஞ்செய்ய முன்வரும் அனைவருக்கும் ஊழியப்பணியை நிர்ணயம் செய்து அனுப்புகிறார். கிறிஸ்துவின் ஊழியர் களுக்கு முழு உலகமும் ஒரு பணித்தளமாக இருக்கிறது. தாங்கள் மனிதக் குடும்பத்தின் உறுப்பினர்களென்பதை அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். தமது கிருபையின் வார்த்தை, ஒவ்வொரு இல்லத்தையும் சென்றடையவேண்டுமென்று கர்த்தர் வாஞ்சிக்கிறார். (26)

தனியாள் ஊழியத்தின்மூலமாக மாத்திரமே இது பெருமளவிற்குச் சாத்தியப்படும். இதுவே கிறிஸ்துவின் வழக்கமாக இருந்தது. அவர் தமது ஊழியத்தின்போது பலரைத் தனிமையில் சந்தித்துப் பேசினார். ஒரு தனி நபரோடு ஆன்மீகக் காரியங்களைக்குறித்து உரையாடுவதில் அதிக அக்கறை காட்டினார். அந்த ஒரு ஆத்துமாமூலமாக அவர் கற்பிக்க விரும்பிய பாடம் பல்லாயிரக்கணக்கானோரைச் சென்றடைந்தது. (27)

ஆத்துமாக்கள் நம்மண்டை வருவதற்காக காத்திராமல், அவர்கள் எங்கிருக்கிறார்களோ அங்கே நாம் அவர்களைத் தேடிச் செல்லவேண்டும். பிரசங்கமேடையிலிருந்து கொடுக்கப்படும் செய்தி கர்த்தருடைய பணியின் துவக்கத்தைக் குறிக்கிறது. சுவிசேஷம் சுமந்து செல்லப்படாவிட்டால், பெருந்திரளான மக்கள் ஒருபோதும் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். (28)

பிற ஜனங்களுக்குப் போதகர்களாகவும் தலைவர்களாகவும் இருக்கும்படியாக தேவன் யூதர்களைத் தெரிந்துகொண்டு, கிறிஸ்துவின் வருகை குறித்த தீர்க்கதரிசன சுருள்களை அவர்கள் கையில் கொடுத்து, அவருடைய ஊழியத்திற்கு முன்னடையாளமான ஆசாரியப் பணியையும்

அவர்கள் வசமாக ஒப்படைத்து, விருந்தில் பங்குபெறுமாறு முதல் அழைப்பும் அவர்களுக்கு வழங்கினார். அந்த அழைப்பிற்கு ஆசாரியர்களும் மக்களும் செவிசாய்த்திருப்பார்களேயானால், கிறிஸ்துவின் ஊழியர்களுடன் சேர்ந்து அவர்களும் உலகிற்குச் சுவிசேஷ அழைப்பைக் கொடுத்திருப்பார்கள். சத்தியத்தைப் பிறருக்கு வழங்கும்படியாக அவர்களுக்கு அது வழங்கப்பட்டது. அழைப்பிற்கு அவர்கள் செவிசாய்க்க மறுத்தபோது ஏழைகளுக்கும், ஊனருக்கும், சப்பாணிகளுக்கும், குருடர்களுக்கும், ஆயக்காரர்களுக்கும், பாவிகளுக்கும் அது கொடுக்கப்பட்டது. சுவிசேஷத்தின் அழைப்பை புறஜாதியாருக்கு அனுப்பினபோதும் அதே செயல்திட்டம்தான் பின்பற்றப்பட்டது. தூதானது முதலாவது பெருவழிகளில் உள்ள உலகப்பிரகாரமான வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்த ஜனங்களுக்கும், தலைவர்களுக்கும் போதகர்களுக்கும் வழங்கப்பட்டது. (29)

ஆண்டவருடைய ஊழியக்காரர்கள் இதை மனதில் வைத்திருக்கட்டும். தேவனால் நியமிக்கப்பட்ட போதகர்களின் மந்தையின் மேய்ப்பர்களுக்கு, அவர்கள் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டிய வார்த்தையாக அது வரவேண்டும். சமுதாயத்தில் உயர் அந்தஸ்தில் இருப்பவர்களை சகோதரனுக்கே உரிய மென்மையான மரியாதையோடும் பாசத்துடனும் அணுக வேண்டும். வணிகத்தில் ஈடுபட்டிருப்பவர்களும் நம்பிக்கைக்குரிய உயர்பொறுப்புகளை வகிப்பவர்களும் புதிய காரியங்களை கண்டுபிடிக்கும் திறன்படைத்தவர் களும் அறிவியலில் நுண்ணறிவுத்திறன் படைத்தவர்களும் மேதைகளும் இக்காலத்திற்குரிய சிறப்பான சத்தியங்களை இதுவரை கேட்டிராத சுவிசேஷ போதகர்களும் முதலில் இந்த அழைப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கண்டிப்பாக இவர்களுக்கு அழைப்பு கொடுக்கப்படவேண்டும். (30)

இவ்வுலகின் செல்வந்தர்களுக்காக செய்யப்பட வேண்டிய ஊழியம் ஒன்று நமக்கு உண்டு. பரலோகத்தின் ஈவுகள் அவர்களிடத்தில் பொறுப்பாக ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அவர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து கொள்ளத்தக்கதாக அவர்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டியது அவசியம். உயிரோடு இருக்கிறவர்களையும் மரித்தோர்களையும் நியாயந் தீர்க்கிறவருக்குக் கணக்குக்கொடுக்கவேண்டுமென்பதை அவர்களுக்கு நினைவுபடுத்துதல் அவசியம். அன்பிலும் தேவபயத்திலும் செய்யப்படுகின்ற உங்களது ஊழியம் செல்வந்தரான மனிதர்களுக்கு அவசியமாக இருக்கிறது. அநேக சமயங்களில், தன் ஆஸ்திகளில் நம்பிக்கைவைத்து அதினால் தனக்கு ஏற்படும் அபாயத்தை அவன் உணர்கிறதில்லை. அவனுடைய மனக்கண்கள் நிலையான மதிப்புடைய பொருட்களினால் கவர்ந்திழுக்கப்பட வேண்டும். “வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும்

என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது" (மத்தேயு 11:28–30) என்ற உண்மையான நற்குணத்தின் அதிகாரத்தை அவன் அங்கீகரிப்பது அவசியமாகும். (31)

தங்கள் கல்வியினிமித்தமும் செல்வத்தினிமித்தமும் அல்லது செய்யும் இறையருள் தொண்டினிமித்தமும் இவ்வுலகில் உயர்நிலையில் இருப்பவர்களிடம் அவர்களுடைய ஆத்தும தேவையைக்குறித்து தனிப்பட்ட முறையில் கர்த்தருடைய ஊழியர்கள் எடுத்துரைப்பது அரிதாயிருக்கிறது. அநேக கிறிஸ்தவ ஊழியர்கள் இத்தகைய வகுப்பினர்களை நெருங்கத் தயக்கம் காட்டுகிறார்கள். ஆனால் அவ்வாறு இருக்கக்கூடாது. ஒரு மனிதன் மூழ்கிக்கொண்டிருப்பானேயாகில், அவன் வழக்கறிஞராகவோ அல்லது ஒரு வியாபாரியாகவோ அல்லது நீதிபதியாகவோ இருப்பதினால் நாம் நின்று அதை வேடிக்கை பார்க்கமாட்டோம். ஒரு செங்குத்தான பாறையை நோக்கி பல நபர்கள் விரைந்துகொண்டிருப்பார்களேயாகில், அவர்கள் சந்திக்கவிருக்கும் ஆபத்தினை மனதில்கொண்டு, அவர்கள் உயர் அந்தஸ்துள்ளவர்களாயிருந்தாலும் அல்லது பெரிய உத்தியோகத்தில் இருந்தாலும், அங்கு போகாதீர்கள், திரும்புங்கள், திரும்புங்களென்று வற்புறுத்தத் தயங்கமாட்டோம். அதுபோல தங்களது ஆத்துமாக்களை இழந்துபோகும் ஆபத்திலிருக்கும் மனிதர்களுக்கும் எச்சரிப்புக்கொடுக்க நாம் ஒருபோதும் தயங்கக்கூடாது. (32)

உலகப்பொருட்களின்மீது கொண்டிருக்கும் பற்று வெளிப்படையாகத் தெரிவதினால், நாம் அப்படிப்பட்டவர்களை அலட்சியம் செய்யக்கூடாது. சமுதாயத்தின் உயர்பதவிகளில் உள்ளவர்கள் பலர் புண்பட்ட மனமுள்ளவர் களாகவும், மாயையினால் சலிப்படைந்தவர்களாகவும் இருக்கின்றனர். தங்கள் வசம் இல்லாத சமாதானத்திற்காக அவர்கள் ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். மிக உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்களும்கூட இரட்சிப்பிற்காக பசியோடும் தாகத்தோடும் இருக்கின்றனர். கிறிஸ்துவின் அன்பினால் மென்மை யாக்கப்பட்ட இருதயமுடையவர்கள் பரிவானவகையில் தனிப்பட்டமுறையில் இத்தகையோரை அணுகும்போது, அவர்கள் அதன்மூலம் பயன்பெறுவது நிச்சயம். (33)

சுவிசேஷ தூதிற்கான வெற்றி, பேச்சாற்றல் மிகுந்த சொற்பொழி வினாலோ, சொல்திறன்மிக்க சாட்சிகளினாலோ, ஆழமான வாக்குவாதங்களி னாலோ கிடைப்பதில்லை. ஜீவ அப்பத்திற்கு பசியுடன் காத்திருக்கும் ஆத்து

மாக்களுக்கு எளிய நடையில் வழங்கப்படும் செய்தியின் மூலமாகத்தான் கிடைக்கிறது. "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?" இதுவே இரட்சிப்பிற்காக ஏங்கும் ஆத்துமாவின் தேவையாக இருக்கிறது. (34)

மிகவும் எளிய தாழ்மையான வழியில் பல்லாயிரக்கணக்கானோரைச் சந்திக்கவியலும். அறிவாற்றல்மிக்கவர்களிடமும் உலகப்பிரகாரமான தாலந்துகளைப் பெற்றிருக்கும் ஆண்களிடமும், பெண்களிடமும் நாம் எளியநடையில் தேவனுடைய அன்பைப் பகிர்ந்துகொள்ளும்போது, அவர்கள் இளைப்பாறுதல் பெறுவர். உலகப்பற்றுடைய நபர் அதிக ஆர்வத்தைக் கொடுக்கக்கூடிய காரியங்களைப்பற்றி எப்படிப் பேசுகிறாரோ அதுபோன்று ஆண்டவரது அன்பைப்பற்றி இயல்பாக யார் பேசமுடியும்? (35)

அநேக சமயங்களில், நன்கு ஆராய்ச்சிசெய்து ஆயத்தத்துடன் வழங்கும் சொற்பொழிவு நாம் எதிர்பார்க்கும் விளைவை ஏற்படுத்துவதில்லை. தேவனுடைய குமாரன் அல்லது குமாரத்தியின் உண்மையான நேர்மையான விளக்கம் இயல்பான முறையில் எளிய நடையில் பேசப்படுமானால், கிறிஸ்துவுக்கும் அவருடைய அன்பிற்கும் இதுவரை அடைபட்டிருந்த இதயக் கதவுகளைத் திறக்கும் வல்லமை அதற்கு இருக்கும். (36)

கிறிஸ்துவின் ஊழியர் தன்னுடைய சுயபலத்தைப் பயன்படுத்தி ஊழியஞ்செய்ய இயலாதென்பதை மனதில்கொள்ளவேண்டும். இரட்சிக்கும் வல்லமையைக்கொண்டிருக்கும் தேவன்மீது விசுவாசம்வைத்து அவருடைய சிங்காசனத்தைப் பற்றிக்கொள்ளட்டும். ஜெபத்தில் தேவனோடு போராடி, அவர் அளித்திருக்கும் அனைத்து வாய்ப்புவசதிகளையும் பயன்படுத்தி, ஊழியத்தில் ஈடுபடுதல் அவசியம். பரிசுத்த ஆவியானவர் அவனுக்குரிய ஆற்றலாக வழங்கப்படுகிறார். இதயங்களில் எண்ணப்பதிவை ஏற்படுத்த ஊழியஞ்செய்யும் தேவதூதர்கள் அவருக்கு அருகிலிருப்பார்கள். (37)

எருசலேமின் தலைவர்களும், போதகர்களும் கிறிஸ்துவின் உபதே சத்தைப் பெற்றிருப்பார்களேயாகில், அவர்களுடைய நகரம் சுவிசேஷத்தின் மையமாக மாறியிருக்கும். பின்வாங்கிப்போன இஸ்ரவேலர் மனம்மாறியிருப் பார்கள். ஒரு மிகப்பெரிய சேனை கர்த்தருக்காக ஆயத்தப்பட்டிருக்கும். அப்படி நடந்திருப்பின், சுவிசேஷம் உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் எவ்வளவு துரிதமாக எடுத்துச்செல்லப்பட்டிருக்கும். அதுபோலவே, இப்பொழுதும் பிறரிடத்தில் செல்வாக்கை ஏற்படுத்தக்கூடிய மிகவும் பயனுள்ள வகையில் செயல்படுகின்ற மிகப்பெரும் திறமைபடைத்த மனிதரை நாம் கிறிஸ்துவுக் கென்று ஆதாயம்செய்யும்போது, அவர்கள்மூலமாக விழுந்துபோனவர்களைத் தூக்கவும், புறக்கணிக்கப்பட்டவர்களைச் சேர்க்கவும், இரட்சிப்பின் செய்தியை

தூர இடங்களில் பரப்பவும் ஏதுவாயிருக்கும். துரிதமாக அழைப்பு அனுப்பப் பட்டு, கர்த்தருடைய விருந்திற்கு ஆட்களைச் சேர்க்க இயலும். (38)

ஆனால், நாம் உயர்நிலையில் உள்ள தாலந்துநிறைந்த மனிதரை மாத்திரம் மனதில் கொண்டு, ஏழை வகுப்பினரை அலட்சியம் செய்துவிடக் கூடாது. எளியோரையும் தாழ்ந்த நிலையில் உள்ளோரையும் அழைத்துவரும் வண்ணமாக கிறிஸ்து ஒதுக்குப்புறமுள்ள தெருக்களுக்கும் சிறுசாலைகளுக்கும் செல்லுமாறு தமது ஊழியர்களை வலியுறுத்துகிறார். பெருநகரங்களின் விஸ்தாரமான வீதிகளிலும் கிராமப்புறத்தின் குறுகலான தெருக்களிலும் அநேக தனிநபர்களும் குடும்பங்களும், அந்நியநாட்டிலே அந்நியர்களாக, சபையுமின்றி உறவினருமின்றி தனிமையுணர்வில், தேவன் தங்களை மறந்துவிட்டதாக எண்ணிக்கொள்ளுகின்றனர். இரட்சிக்கப் படுவதற்கு தாங்கள் என்ன செய்யவேண்டுமென்று அறியாதிருக்கிறார்கள். அநேகர் பாவத்தில் மூழ்கி இருக்கிறார்கள். அநேகர் அதைரியத்திலும், அவிசுவாசத்திலும், தேவையிலும், துயரங்களினால் நெருக்கப்பட்ட நிலையிலும் உள்ளனர். சரீரத்திலும் ஆத்துமாவிலும் அனைத்துவகை வியாதிகளும் அவர்களைத் துன்பப்படுத்துகின்றன. பிரச்சனைகளிலிருந்து ஆறுதலைக் கண்டடைய ஏங்குகிறார்கள். சாத்தான் இச்சைகளையும், இன்பங்களையும் நாடும்படி அவர்களைச் சோதித்து, அழிவிற்கும் மரணத்திற்கும் நேராக வழிநடத்துகிறான். உதடுகளில் சாம்பலாக மாறக்கூடிய சோதோமின் கனிகளை அவன் அவர்களுக்கு அளிக்கிறான். அப்பமல்லாததற்காக தங்கள் பணத்தையும் திருப்திசெய்யாத பொருளுக்காக தங்கள் பிரயாசத்தையும் செலவிடுகிறார்கள். (39)

இப்படிப்பட்ட இன்னல்களை அனுபவிக்கிறவர்களில் கிறிஸ்து யாரை இரட்சிக்கவந்தாரோ அவர்களை நாம் காணவேண்டும். “ஓ, தாகமாயிருக்கிற வர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பண மில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள். நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்” (ஏசாயா 55:1–3) என்று அவர்களை அவர் அழைக்கிறார். (40)

பரதேசிகளையும், சமுதாயத்தினால் விலக்கிவைக்கப்பட்டவர்களையும், ஒழுக்கநிலையில் பெலவீனப்பட்டிருக்கும் ஏழைகளையும், திக்கற்றோரையும் நாம் அரவணைக்கவேண்டுமென்று தேவன் நமக்கு ஒரு சிறப்பான கட்டளையைக் கொடுத்திருக்கிறார். சமயரீதியான காரியங்களில் முற்றிலும் அலட்சியமாக இருப்பவர்கள் போன்று காணப்படும் அநேகர் இளைப்பாறுதலுக்காகவும் சமாதானத்திற்காகவும் இதயத்திலே ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாவத்தின் ஆழத்தில் மூழ்கிவிட்டபோதிலுங்கூட, அவர்களையும் மீட்பதற்கான வாய்ப்பு உள்ளது. (41)

கிறிஸ்துவின் ஊழியர்கள் அவருடைய உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும். அவர் இடம்விட்டு இடம்சென்று பணியில் ஈடுபட்டபோது, துன்பப்படு கிறவர்களுக்கு ஆறுதல்கூறி, வியாதியுள்ளவர்களைக் குணமாக்கினார். பின்பு, தமது இராஜ்யத்திற்கடுத்த மேன்மையான சத்தியங்களை அவர்களுக்கு எடுத்துரைத்தார். இதுவே அவரைப் பின்தொடர்கிறவர்களின் பணியாயிருக் கிறது. சரீரப்பிரகாரமான பாடுகளுக்கு விடுதலையைக் கொடுத்தபின்னர், ஆத்தும தேவைகளைச் சந்திப்பதற்கு வழிகளை வகுக்கவேண்டும். உயர்த்தப்பட்ட இரட்சகரைச் சுட்டிக்காட்டி, மீட்டெடுக்கும் வல்லமையை தாம் மாத்திரமே உடையவரான அந்த மாபெரும் மருத்துவரின் அன்பைப்பற்றிக் கூறவேண்டும். (42)

இரங்கத்தக்க நிலையில் நம்பிக்கை இழந்து தேவசமூகத்தைவிட்டு விலகிச்சென்றவர்கள், நம்பிக்கை இழக்க அவசியமில்லை என்று கூறுங்கள். அவர்கள் தவறிழைத்து நற்குணங்களை வெளிப்படுத்தி வராவிட்டாலுங்கூட, தமது இரட்சிப்பின் சந்தோஷத்தை அவர்களுக்குத்தர தேவன் மகிழ்ச்சியோடி ருக்கிறார். சாத்தானின் கிரியைகளுக்கு இடமளித்து, பார்வைக்கு நம்பிக்கை யற்ற சூழ்நிலையில் வாழ்பவர்களை மீட்டு, தமது கிருபையின் குடிமக்களாக மாற்றுவதில் அவர் மகிழ்ச்சியடைகிறார். கீழ்ப்படியாதவர்கள்மீது விழவிருக்கும் கோபாக்கினையிலிருந்து ஜனங்களை மீட்பதில் அவர் களிப்படைகிறார். சுத்தி கரிப்பும் குணமாக்குதலும் ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் உண்டென்பதை நாம் தெளிவுபடுத்தவேண்டும். கர்த்தருடைய விருந்துபசரிப்பு மேஜையில் அவர்களுக்கும் ஒரு இடமிருக்கிறது. அவர்களை வரவேற்பதற்கு அவர் காத்துக்கொண்டிருக்கிறார். (43)

ஒதுக்குப்புறமான தெருக்களிலும் வேலிகளிலும் செல்பவர்கள் வித்தி யாசமான குணங்களுடைய ஜனங்களைச் சந்திக்கும்போது, தங்களுடைய ஊழியம் அவர்களுக்கு மிகவும் அவசியமென்பதை உணர்ந்துகொள்வர். தங்களுக்குக் கிடைத்த வெளிச்சத்திலே உண்மையாயிருந்து, அவர்களுக்குத் தெரிந்த அளவிற்கு தேவனைச் சேவிக்கும் ஒரு கூட்டமுண்டு. ஆனால்

இவர்கள் தங்களுக்கும் தங்களைச் சுற்றிலும் வாழ்ந்துவருபவர்களுக்குமாக ஒரு மாபெரும் ஊழியம் நடைபெறவேண்டுமென்பதை நன்றாகப் புரிந்து கொள்கிறார்கள். தேவனைக்குறித்து அதிகமான அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆவலுள்ளவர்களாக இருக்கின்றனர். அந்த மாபெரும் ஒளியை மங்கலாகவே மாத்திரம் காண ஆரம்பித்திருக்கின்றனர். தேவன் தங்களுக்கு ஊழியர்களை அனுப்பிக்கொடுக்கவேண்டுமென்று இவர்கள் மிகுந்த பாரத்துடன் கண்ணீரோடு ஜெபிக்கிறார்கள். விசுவாசத்தின்மூலமாக தூரத்தில் இருக்கும்பொழுதே அதைத் தெளிவாகக் காண்கின்றனர். துன்மார்க்கம் நிறைந்த பெருநகரங்களின் மத்தியில் இதுபோன்ற ஆத்துமாக்கள் காணப்படுகின்றனர். இவர்களில் பலர் மிகவும் தாழ்ந்த சூழ்நிலைகளில் வசிப்பதால், உலகத்தாரால் கவனிக்கப்படாமல் விட்டுவிடப்படுகின்றனர். ஊழியரும் சபையாரும் இவர்களில் அநேகரைப்பற்றி எதுவுமே அறியாதவர்களாக இருக்கின்றனர். ஆனால் இப்படிப்பட்ட இழிவான துயர் மிகுந்த இடங்களில் ஆண்டவருடைய சாட்சிகளாக இவர்கள் இருக்கின்றனர். கிறிஸ்தவ பயிற்சியில் மிகவும் சொற்பமான அனுபவங்களைப் பெற்று, தேவனைக்குறித்து சிறிதளவு வெளிச்சத்தைப் பெற்றிருக்கும் இவர்கள் நிர்வாணம், பசி, குளிர் ஆகியவைகளுக்கு மத்தியில் உள்ள மக்களுக்கு ஊழியம்செய்ய நாடுகின்றனர். தேவனுடைய கிருபையை ஏராளமாகப் பெற்றிருக்கும் உக்கிராணக்காரர்கள் இத்தகைய ஆத்துமாக்களை நாடி, அவர்களது இல்லங்களில் அவர்களைச் சந்தித்து, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின்மூலமாக அவர்களது தேவைகளுக்கு ஏற்றபடி ஊழியஞ்செய்ய வேண்டும். பெற்றுக்கொண்ட அத்தகைய பரிசுத்தஆவியானவரின் உந்து தலால் எளிய முறையில் அவர்களோடு அமர்ந்து—வேதாகமத்தை வாசித்து அவர்களுக்காக ஜெபிக்கவேண்டும். பரலோகத்தின் அப்பமாகத் திகழக்கூடிய தூது ஒன்றை ஆத்துமாக்களுக்கு வழங்க கிறிஸ்து தமது ஊழியர்களுக்கு வெளிப்படுத்திக் கொடுப்பார். விலையேறப்பெற்ற இந்த பரலோகத்தின் தூது ஒரு இருதயத்திலிருந்து மற்றொரு இருதயத்திற்கும், ஒரு குடும்பத்திலிருந்து மற்றொரு குடும்பத்திற்கும் எடுத்துச்செல்லப்படும். (44)

“ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா” என்று உவமையில் கூறப்பட்ட எஜமானனின் கட்டளைக்குப் பலசமயங்களில் தவறான பொருள்விளக்கம் கொடுக்கப்படுகிறது. சுவிசேஷத்தைப் பிரசங்கிக் கும்போது, அதை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனங்களைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்பதுபோன்று சிலர் இந்தப் பகுதிக்கு அர்த்தம் கொள்கின்றனர். ஆனால் இந்த அழைப்பு எவ்வளவு அவசரமாகக் கொடுக்கப்படுகிறதென் பதையும் தூண்டுதல் எத்தகைய ஆற்றலோடு செய்யப்படுகிறதென்பதை யும் சுட்டிக்காட்டுகிறது. ஜனங்களை கிறிஸ்துவண்டை கொண்டுவருவதற்கு

சுவிசேஷம் எப்பொழுதுமே கட்டாயப்படுத்துவதில்லை. "ஓ, தாகமாயிருக்கிற வர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்" (ஏசா. 55:1) என்பதே அதின் பொருளாயிருக்கிறது. "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (வெளி. 22:17). தேவனுடைய அன்பின் வல்லமை நம்மை அவரிடத்தில் வருமாறு நெருக்கி ஏவுகிறது. (45)

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்"(வெளி. 3:20) என்று இரட்சகர் கூறுகிறார். ஏளனத்தினால் அவன் துரத்தப்படுகிற தில்லை; அல்லது பயமுறுத்தலினால் ஒதுக்கித்தள்ளப்படுவதில்லை; மாறாக, "நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்?" (ஓசி. 11:8) என்றுகூறி, தொடர்ந்து இழந்துபோனவர்களைத் தேடுகிறார். கடின இதயம் அவருடைய அன்பை திரும்ப விரட்டுகிறபோதும், மிகுந்த அன்புடன் "இதோ, வாசற்படியில் நின்று தட்டுகிறேன்" என்கிறார். அவருடைய அன்பின் வெற்றிகொள்ளும் வல்லமை அவரண்டை வருமாறு ஆத்துமாக்களை நெருக்கி ஏவுகிறது. அவருடைய அழைப்பை செவிமடுத்தவர்கள் அவரைப் பார்த்து: "உம்முடைய காருண்யம் என்னைப் பெரியவனாக்கும்" (சங். 18:35) என்று கூறுவார்கள். (46)

காணாமற்போனவர்களைத் தேடுவதில் தமக்கு இருக்கும் அதே ஆர்வத்தோடு கூடிய அன்பை கிறிஸ்து தமது ஊழியர்களுக்கு வழங்குவார். நாம் வெறுமனே வாருங்களென்று அழைப்பு விடுப்பதோடு நிறுத்திவிடக் கூடாது. ஏனெனில், கேட்கும் சக்தியைப் பெற்றிருந்தும் புரிந்துகொள்ளும் சக்தியின்றி சிலர் இருக்கின்றனர். தங்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் நன்மைகளைக் காணக்கூடாத அளவிற்கு அவர்கள் கண்கள் முற்றிலும் குருடாக இருக்கின்றன. பலர் தங்களது மிகப்பெரும் இழிநிலையை உணர்கின்றனர். நான் உதவிபெற்றுக்கொள்ளத் தகுதியற்றவன், என்னை விட்டுவிடுங்கள் என்பார்கள். ஆனால் கர்த்தருடைய ஊழியர்கள் பின்வாங்கி விடக்கூடாது. ஆதரவில்லாமல் தைரியமற்றிருப்பவர்களை மென்மையான பரிவுநிறைந்த அன்போடு அணைக்கவேண்டும். அவர்களுக்கு உங்களது தைரியத்தையும் உங்களது நம்பிக்கையையும் உங்களது ஊக்கத்தையும் கொடுக்க வேண்டும். "சிலருக்கு இரக்கம் பாராட்டி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு பயத்தோடே இரட்சித்து" (யூதா 22,23) கிறிஸ்துவண்டை வரும்படி அன்போடு வருந்தி அழைக்கவேண்டும். (47)

தேவ ஊழியர்கள் விசுவாசத்தோடு அவரோடு நெருங்கி ஜீவிக்கும் போது, அவர்கள் கொடுக்கும் தூதுகளுக்கு அவர் வல்லமையைக்

கொடுக்கிறார். தேவனுடைய அன்பை ஜனங்களுக்கு விளக்கி, அவருடைய கிருபையைப் புறக்கணிப்பதினால் ஏற்படும் அபாயத்தை எடுத்துக்கூறும்போது, ஜனங்கள் சுவிசேஷத்தை ஆவலுடன் ஏற்றுக்கொள்ளும்படி நெருக்கி ஏவப்படு வார்கள். தேவன் தங்களுக்கு அளித்திருக்கும் பங்கை மனுஷர் சரிவரச் செய்யும்போது, பிரமிக்கக்கூடிய அற்புதங்களை கிறிஸ்து நிகழ்த்துவார். முன் சந்ததிகளில் ஏற்பட்டிராத ஒரு மாபெரும் மனமாற்றத்தை இக்காலத்திலே மானிட இதயங்களில் நாம் செய்யலாம். ஜான் பன்யன் என்பவர் தேவனை நிந்தனை செய்வதிலிருந்தும் களியாட்டத்திலிருந்தும் மீட்கப்பட்டபோது, உயிர்த்தெழுந்த இரட்சகரை உலகிற்குப் பறைசாற்றினார். அதுபோலவே, ஜான் நியூட்டன் என்பவர் அடிமைகள் சம்பந்தப்பட்ட காரியத்தில் ஈடுபட்டிருந்தபோது, கிறிஸ்துவின் ஊழியராக மாறினார். இன்றைக்கும்கூட ஒரு பனியனும் ஒரு நியூட்டனும் மனிதர் மத்தியிலிருந்து மீட்கப்படலாம். இரட்சிப்பதற்காக தேவன் பயன்படுத்தும் மனிதப் பிரதிநிதிகள் அவரோடு ஒத்துழைக்கும்போது, பல சமுதாயத்திலிருந்தும் அநேக ஏழை ஆத்துமாக்கள் மீட்கப்படுவார்கள். இப்படி மீட்கப்பட்ட நபர் மற்ற மனிதர்களில் தேவனுடைய சாயலைக் கொண்டுவரத்தக்கதாக வகைதேடி உழைக்க முற்படுவார். வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சிலருக்கு சொற்பமான தருணங்களே கிடைத்திருக்கலாம். சரியான வழி எதுவென்று அறியாமல் சிலர் தவறான வழிகளில் சென்றிருக்கலாம். இரட்சிப்பின் ஒளி இத்தகையவர்களைச் சென்றடைய வேண்டும். “இன்றைக்கு நான் உன் வீட்டில் தங்கவேண்டும்” (லூக். 19:5) என்று கிறிஸ்து சகேயுவிடம் கூறியதுபோல் மற்றவர்களுக்கும், கடினப்பட்ட இதயமுடையவர்களென்று மற்றவர்களால் கருதப்பட்டவர் களுக்குங்கூட, ஒரு சிறுபிள்ளையைப்போன்ற மென்மையான இதயம் இருப்பது கண்டறியப்படும். ஏனெனில், கிறிஸ்து அவர்களுக்கு அருள்செய்வதற்குத் திட்டமிட்டுவிட்டார். அநேகர் படுமோசமானவர்களிலும் பிழைகளிலுமிருந்தும் விலகி வெளிவந்து, நல்ல சந்தர்ப்பங்களையும் சிறப்புரிமைகளையும் பெற்றிருந்தும் அவைகளின் மதிப்பை உணரத் தவறிவிட்ட மற்றவர்களது இதயத்தைப் பெற்றுக்கொள்வார்கள். இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்றும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்றும், விலைமதிப்புள்ளவர் களென்றும் கருதப்படுவார்கள். கிறிஸ்து தமது இராஜ்யத்தோடு வரும்போது, அவருடைய சிங்காசனத்திற்கு அடுத்து நிற்பார்கள். (48)

“பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்”—எபிரெயர் 12:25. “அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லை” என்று கிறிஸ்து கூறினார். கொடுக்கப்பட்ட அழைப்பை தள்ளிப்போட்டார்கள். அவர்களில் எவருக்கும் மீண்டும் அழைப்பு கொடுக்கப்படமாட்டாது.

கிறிஸ்துவைப் புறக்கணித்ததில் யூதர்கள் தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தி, சாத்தானின் வல்லமைக்கு ஒப்புக்கொடுத்தார்கள். எனவே அவருடைய கிருபையை ஏற்றுக்கொள்வது அவர்களுக்குக் கூடாத காரியமாகும். அதேநிலை இன்றைக்கும் நிலவுகிறது. தேவனுடைய அன்பு பாராட்டப்படாவிட்டால், அந்த அன்பு ஆத்துமாவை மென்மைப்படுத்தி அடக்கியாளும் கொள்கையாக நிலைத்திருக்காவிட்டால், நாம் முற்றிலும் அழிந்துபோக நேரிடும். அவரது அன்பைக்குறித்து இதுவரை கொடுத்த வெளிப்படுத்தல்களைவிட இனி வேறு மாபெரும் வெளிப்பாடுகளை ஆண்டவர் கொடுக்க முடியாது. இயேசுவின் அன்பு நம்முடைய இதயத்தை அடக்கி ஆளாவிட்டால், நம்மை எட்டுவதற்கு வேறு எந்த வழிவகைகளும் கிடையாது. (49)

இரக்கத்தின் தூதைக் கேட்கும் ஒவ்வொரு முறையும் செவிசாய்க்க மறுக்கும்போது, நீங்கள் உங்கள் அவிசுவாசத்தைப் பெலப்படுத்துகிறீர்கள். ஒவ்வொரு முறையும் நீங்கள் உங்கள் இதயத்தைக் கிறிஸ்துவுக்கு திறந்துகொடுக்கத் தவறும்போது, உங்களிடம் பேசுகின்ற அவருடைய குரலுக்குச் செவிசாய்க்க மேலும் மேலும் மனவிருப்பமற்றுப்போகிறீர்கள். கடைசியாக விடுக்கப்படும் இரக்கத்தின் அழைப்பிற்குச் செவிகொடுக்கும் வாய்ப்பையும் நீங்கள் மங்கலாக்கிவிடுகிறீர்கள். “எப்பிராயீம் விக்கிரகங்க ளோடு இணைந்திருக்கிறான். அவனைப் போகவிடு” (ஓசியா 4:17) என்று இஸ்ரவேலைப்பற்றி எழுதப்பட்டதுபோல், உங்களைப்பற்றியும் எழுதப் படாதிருப்பதாக. “எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச்சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமறபோயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்” (லூக்கா 13:34,35) என்று கிறிஸ்து எருசலேமைக்குறித்துக் கதறியதுபோல் உங்களைக்குறித்தும் கதறாதிருக்கட்டும். (50)

கடைசி அழைப்பும் கடைசி இரக்கத்தின் தூதும் மனுப்புத்திரருக்குத் தொனிக்கும் காலக்கட்டத்திலே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். பெரு வழிகளுக்கும் வேலிகளுக்கும் செல்லுங்கள் என்ற கட்டளை அதின் இறுதி நிறைவேறுதலை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. கிறிஸ்துவின் அழைப்பு ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் விடுக்கப்படும். “வாருங்கள் எல்லாம் ஆயத்தமாக இருக்கிறதென்று தூதுவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.” தேவதூதர்கள் மனிதப் பிரதிநிதிகளுடன் ஒத்துழைத்துப் பணியாற்றிவருகின்றனர். நீங்கள்

வரும்படி பரிசுத்த ஆவியானவர் அனைத்து ஊக்குதலையும் கொடுத்து, உங்களை நெருக்கி ஏவுகிறார். கிறிஸ்து பிரவேசிப்பதற்காக உங்களது இதயக்கதவுகள் திறக்கப்படும்படி தாழ்ப்பாள் அகற்றப்படுவதற்காக கிறிஸ்து உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கிறார். மேலும் ஒரு காணாமற் போன பாவி திரும்பக் கிடைத்த மகிழ்ச்சியான செய்தியைப் பரலோகம் கொண்டுசெல்ல தேவதூதர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். சுவிசேஷ விருந்தில் கலந்துகொள்ள விடுக்கப்பட்ட அழைப்பை மேலும் ஒரு ஆத்துமா ஏற்றுக்கொண்டதின் மகிழ்ச்சியில் பங்கெடுக்க பரலோகத்தின் சேனை சுரமண்டலங்களைக் கையில் ஏந்தியவர்களாக பாடுவதற்கு ஆவலுடன் காத்திருக்கின்றனர். (51) ★

# 19

# மன்னித்தலின் அளவு!

**(மூலநூல் : பக்கங்கள் 243–251)**

**மத்தேயு 18:1–35**

"ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்துவந்தால் நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதர மட்டுமோ" என்ற கேள்வியுடன் பேதுரு கிறிஸ்துவிடம் வந்தான். மூன்று தவறுகள்வரை பிறருக்கு மன்னிக்கலாம் என்ற அளவை ரபிமார்கள் நிர்ணயித்திருந்தனர். கிறிஸ்துவின் போதனைக்கு ஏற்றவாறு அமையும் வகையில் பரிபூரணத்தைக் குறிக்கும் ஏழாம் இலக்கத்தை பேதுரு தெரிந்துகொண்டான். ஆனால் கிறிஸ்து அவனைப் பார்த்து, "ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபது தரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். பிறரை மன்னிப்பதில் நாம் ஒருபோதும் சோர்ந்துவிடக்கூடாதென்று அவர் நமக்குத் தெரிவிக்கிறார். (1)

மன்னிப்பு எந்தவண்ணமாக அளிக்கப்படவேண்டும் என்பதையும் மன்னியாமையின் ஆவியைப் பெற்றிருப்பதின்மூலம் ஏற்படக்கூடிய அபாயத்தை யுங்குறித்து கிறிஸ்து இங்கே தெளிவுபடுத்துகிறார். ஒரு ராஜா தனது அரசாங்கக் காரியங்களை நிர்வகித்துவந்த அதிகாரிகளிடம் எவ்வாறு நடந்து கொண்டான் என்பதை எடுத்துக்கூறும் உவமையொன்றை ஜனங்களுக்குக் கூறினார். சில அதிகாரிகள் அரசுக்குச் சொந்தமான பெருந்தொகையை தங்களுக்காக பெற்றுக்கொண்டிருந்தனர். ராஜா தனது ஊழியக்காரர்களிடத்தில் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். கடனைத்தீர்க்க அவனிடத்தில் ஒன்றுமில்லாதிருந்ததினால், வழக்கத்திற்கேற்றபடி ராஜா அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான். "அப்பொழுது அந்த ஊழியக்காரன் பயந்துநடுங்கி தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான்." (2)

“அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன் வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன்வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவனுடைய உடன்வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்.” (3)

இந்த உவமையில் நடைபெற்ற சம்பவத்தின் முழு விபரங்களும் வைக்கப்பட்டிருக்கிறது. இதன் ஆவிக்குரிய முக்கியத்துவத்திலே இதற்கு இணையாக வேறு எதுவும் கொடுக்கப்படவில்லை. இந்த விபரங்களைப் பொறுத்தமட்டில் வேறுவழியில் கவனம் திரும்பக்கூடாது. இந்த உவமையில் சில மாபெரும் முக்கியக் கருத்துக்கள் பொருட்பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே நமது சிந்தனைகள் செலுத்தப்படவேண்டும். (4)

உவமையில் வரும் ராஜா தனது ஊழியக்காரனுடைய கடன்கள் அனைத்தையும் மன்னித்ததுபோல, நம்முடைய தேவனும் நமது பாவக்கடன்கள் அனைத்தையும் மன்னிக்கிறார். மனமிரங்கி தனது ஊழியக்காரனின் கடனை மன்னித்த ராஜா கிறிஸ்துவுக்கு அடையாளமாகக் காணப்படுகிறான். பிரமாணங்களை மீறியதின்நிமித்தமாக மனிதன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படவேண்டியது அவசியமாயிருந்தது. அவன் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள இயலாததினிமித்தமாக கிறிஸ்து தமது தெய்வீகத்தை மறைத்து, மனுஷீகத்தில் வெளிப்பட்டு, அநீதிக்காரர்களுக்காக நீதிபரராக தமது ஜீவனைக் கொடுத்தார். அவர் தம்மையே நமது பாவங்களுக்காக அளித்து, தமது இரத்தக்கிரயத்தால் கொள்ளப்பட்ட மன்னிப்பை ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் இலவசமாக வழங்குகிறார். “கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு” (சங்கீதம் 130:7). (5)

நாமும், பாவத்தில் ஜீவிக்கும் மனிதர்களிடம் கிறிஸ்துவைப்போல் மனதுருக்கத்தோடு இருத்தல்வேண்டும். “தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளா யிருக்கிறோம்”–1 யோவான் 4:11. “இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்” (மத்தேயு 10:8) என்று கிறிஸ்து கூறுகிறார். (6)

உவமையிலே சற்று தாமதிக்கவேண்டுமென்று கடன்காரன் கெஞ்சி: “என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன்” என்று வாக்குறுதி கொடுத்தான். அவனுக்கு வழங்கப்பட்டிருந்த தண்டனை ரத்துசெய்யப்பட்டது. அவன் செலுத்தவேண்டிய முழுக்கடனும் ரத்து செய்யப்பட்டது. தனது எஜமான் தனக்கு மனமிரங்குகிறதுபோல் அவனும் தனது மனதுருக்கத்தை வெளிப்படுத்தவேண்டிய ஒரு சந்தர்ப்பம் வெகுசீக்கிரத்தில் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவன் புறப்பட்டுப்போகையில், தன்னிடம் சொற்பத்தொகை கடன்பட்டிருந்த உடன்வேலைக்காரனைக் கண்டான். பதினாயிரம் தாலந்துகள் அவனுக்கு மன்னிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவன் வழியில் சந்தித்த கடன்காரன் நூறு வெள்ளிக்காசு கடன் பட்டிருந்தான். எந்த நபர் மிகவும் இரக்கமாக நடத்தப்பட்டிருந்தாரோ, அவர் தமது உடன்வேலைக்காரனிடம் முற்றிலும் வித்தியாசமான விதத்தில் நடந்து கொண்டார். அவன் ராஜாவிடம் எவ்விதமாக மன்றாடினானோ அதைப் போலவே, இந்த உடன்வேலைக்காரனும் இவனிடம் மன்றாடியபோதிலும், அதுபோன்ற பலன் கிடைக்கவில்லை. வெகுசமீபத்திலே மன்னிக்கப்பட்ட அந்த நபர் மென்மையான இதயத்தோடும் பரிவோடும் இருக்கவில்லை. தனக்கு இரக்கம் காட்டப்பட்டபோதிலும் அதே இரக்கத்தை அவனது உடன் ஊழியக்காரனிடத்தில் செயல்படுத்தவில்லை. தனக்கு வரவேண்டிய கடன் அனைத்தையும் அவன் கொடுத்துத்தீர்க்கவேண்டுமென்று கோரிக்கை வைத்தான். மிகுந்த கிருபையோடு எந்தத் தண்டனை அவனுக்காக ரத்து செய்யப்பட்டிருந்ததோ அதே தண்டனையை உடன் ஊழியக்காரனுக்குக் கொடுத்து, காரியத்தை நிறைவேற்றினான். “என்னிடத்தில் பொறுமையாயிரும்” என்ற அவனுடைய மன்றாட்டை அவன் புறக்கணித்தான். தன்னிடம் கடன்பெற்ற சொற்பத் தொகையைமாத்திரமே அந்த நன்றிகெட்ட ஊழியக் காரன் மனதில் கொண்டிருந்தான். (7)

கடன்பெற்றவன் தனது ஆண்டவனிடம் வந்து வேண்டுதல்செய்த போது, அவன் அதன் சுமையை முழுமையாக அறிந்திருக்கவில்லை. தனது இயலாமையை அவன் உணர்ந்துகொள்ளவில்லை. தன்னைத்தானே மீட்டுக் கொள்ள இயலும் என்று நம்பினான். “என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன்” என்று கூறினான்.

இதுபோலவே, அநேகர் தங்கள் சொந்தக் கிரியைகளின்மூலமாகவே தேவனுடைய தயவைப் பெறலாமென்று நினைக்கின்றனர். அவர்களுடைய இயலாமையை அவர்கள் உணர்ந்துகொள்ளுகிறதில்லை. தேவனுடைய இலவச ஈவாகிய கிருபையை ஏற்க மறுத்து, தங்கள் சுயநீதியில் தங்களைக் கட்டி உருவாக்க முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய பாவத்தி னிமித்தமாக அவர்களது சொந்த இதயங்கள் நொறுக்கப்பட்டு தாழ்மையடைய வில்லை. அவர்கள் மற்றவர்களிடம் கடுமையாக காரியங்களைச் செயல் படுத்தி, மன்னிக்கும் குணமற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தேவனுக்கு எதிராகச் செய்த பாவங்கள் பதினாயிரம் தாலந்துகள்போல் பெரிதாகக் குவிந்திருக்க, இவர்களது சகோதரர்கள் இவர்களுக்கு எதிராகச்செய்த பாவங்கள் நூறு வெள்ளிப்பணம் போன்று சொற்பமாகக் காணப்பட்டாலும், அதை மன்னிப்பதற்கு மனமில்லாதிருக்கின்றார்கள். இதன் வித்தியாசம் பத்து இலட்சம் ரூபாய்க்கும் ஒரு ரூபாய்க்குமுள்ள வித்தியாசத்தைப்போல இருக்கிறது. எனினும், மன்னிக்காமலிருப்பதில் அவர்கள் துணிகரம்கொண்டிருக்கிறார்கள். (8)

உவமையில் வரும் இரக்ககுணமற்ற கடன்காரனை அந்த ஆண்டவன் அழைப்பித்து: “பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்.” பின்பு இயேசு ஜனங்களை நோக்கி: “நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்” என்றார். மன்னிக்க மறுப்பவன் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற அவனது நம்பிக்கையை இவ்வாறு தொலைத்துப்போடுகிறான். (9)

இந்த உவமையின் உபதேசத்தை நாம் தவறுதலாக செயற்படுத்தக் கூடாது. தேவன் நமது பாவங்களை மன்னிக்கும் குணமுடையவராக இருக்கிறாரென்று இவ்வுவமை நமக்குப் போதிப்பதினால், நாம் அவருக்குக் கீழ்ப்படியும் கடமையிலிருந்து அது நம்மை விடுவிப்பதில்லை. நாம் உடன் மனிதர்களிடம் காட்டும் மன்னிக்கும் குணம் சரியாகச் செய்யப்படவேண்டிய கடமைகள்பற்றிய உரிமையை எந்தவிதத்திலும் குறைத்துப்போடுகிறதில்லை. தமது சீடர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கையில்: “எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை

எங்களுக்கு மன்னியும்" (மத்தேயு 6:12) என்று இயேசு கூறினார். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக நமது கடனாளிகள் நமக்கு நியாயமானபடி கொடுத்துத் தீர்க்கவேண்டியவைகளை நாம் கேட்காமல் விட்டுவிடவேண்டும் என்று அவர் கூறவில்லை. அவர்களாக திருப்பிக்கொடுக்க இயலவில்லையென்றாலோ அல்லது தவறான நிர்வாகத்தின்நிமித்தமாக திருப்பிக்கொடுக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டாலோ நாம் அவர்களை சிறையிலடைக்கவோ, துன்புறுத்தவோ, கடினமாக நடத்தவோ கூடாது என்பது தான் இவ்வுவமையில் நாம் கற்கவேண்டிய பாடமேயொழிய, சோம்பலை ஊக்குவிக்கவேண்டுமென்பதல்ல. "ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று" 1தெச. 3:10–ல் பார்க்கி றோம். சுறுசுறுப்பாக—கடினமாக உழைக்கும் ஒரு மனிதன் சோம்பலாக இருக்கிற மற்றவர்களைத் தாங்கவேண்டுமென்று கர்த்தர் கூறுகிறது இல்லை. நேரத்தை வீணடிப்பதினாலும் முயற்சிகள் மேற்கொள்ளாததினாலும் அநேகர் வறுமையிலும் தேவையிலும் ஜீவிக்கிறார்கள். இத்தகைய தவறுகளை செய்பவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ளாவிட்டால், அவர்களுக்காகச் செய்யப்படும் அனைத்துக் காரியங்களும் பொக்கிஷத்தை ஓட்டைகளுள்ள பையில் போடுவதுபோல் இருக்கும். தவிர்க்கமுடியாத தரித்திரநிலை இன்னமும் காணப்படுகிறது. வாய்ப்பு வசதி அற்றவர்களிடத்தில் மனமிரங்கி அவர்களிடத்தில் பரிவுகாட்டவேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஒருவேளை நாம் ஜீவிக்க நேர்ந்தால், பிறர் நம்மை எவ்வாறாக நடத்தவேண்டுமென்று எதிர்பார்ப்போமோ அதைப்போலவே அவர்களை நாம் நடத்தவேண்டும். (10)

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலனாகிய பவுல்மூலமாக நமக்குக் கொடுக்கும் கட்டளை: "ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறை வாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவை களையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசு விலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது"–பிலிப். 2:1–5. (11)

ஆனால் பாவத்தை நாம் சாதாரணமாகக் கருதக்கூடாது. நம்முடைய சகோதரர்கள் நமக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால் அதைக்

கண்டிக்க வேண்டுமென்று கிறிஸ்து கூறுகிறார். “உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால் அவனைக் கடிந்துகொள்” (லூக். 17:3). பாவத்தை அதின் சரியான பெயர் கொண்டு அழைத்து, தவறுசெய்தவர் அதைக் காணும்வகையில் நாம் அதை அவர்களுக்குத் தெளிவாக உணர்த்த வேண்டும். (12)

பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டவராக பவுல் தீமோத்தேயுவிற்கு எழுதுகையில்: “சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு புத்திசொல்லு” என்று கூறுகிறார். தீத்துவிற்கு எழுதுகையில்: “அநேகர், விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள்... விசுவாசத்தினாலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, நீ அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்துகொள்” (தீத்து 1:10–13) என்கிறார். (13)

“உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக” (மத்தேயு 18:15–17) என்று கிறிஸ்து கூறுகிறார். (14)

கிறிஸ்தவ பிள்ளைகளுக்கிடையே எழும்பும் பிரச்சனைகளை சபையில் வைத்துத் தீர்வுகாணவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். தேவபயம் இல்லாதவர்களிடத்தில் அவைகளைக் கொண்டுசெல்வதைத் தவிர்க்க வேண்டும். ஒரு கிறிஸ்தவன் உடன்விசுவாசியால் தீங்கிழைக்கப்படும்போது, அவிசுவாசிகளைக்கொண்டு இயங்கும் நீதிமன்றத்தில் முறையிடுவதைத் தவிர்க்கவேண்டும். இவ்விஷயத்தில் கிறிஸ்து கற்பித்திருக்கும் வழிமுறையை நாம் பின்பற்றவேண்டும். பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிட்டு, அவனை மீட்கும் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். தம்மிடம் அன்புகூர்ந்து பயந்து ஜீவிக்கிறவர்களுடைய நலன்களைக் கர்த்தர் பாதுகாக்கிறவராயிருக்கிறார். அனைவரையும் நீதியாய் நியாயம் விசாரிக்கிற அவரிடத்தில் நமது வழக்குகளை நம்பிக்கையோடு கொண்டுசெல்வோம். (15)

தவறுசெய்பவர்கள் மீண்டும் மீண்டும் தவறுசெய்து மன்னிப்புக் கோரும் போது, தவறுகளால் பாதிக்கப்பட்டவர்கள் சோர்வடைந்து போதுமான அளவு மன்னித்துவிட்டதாக எண்ணங்கொள்ளுகின்றனர். தவறுசெய்பவர்களை நாம் எவ்வாறாக நடத்தவேண்டுமென்பதை இரட்சகர் நமக்குத் தெளிவாகக் கூறியுள்ளார். "உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பா யாக"–லூக்கா 17:3. உங்களுடைய நம்பிக்கைக்கு அபாத்திரமானவர்களாக நாம் அவர்களைக் கருதிவிடக்கூடாது. "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு"–கலா. 6:1. (16)

உங்கள் சகோதரர் தவறு செய்யும்போது, நீங்கள் அவர்களை மன்னிக்கவேண்டும். அவர்கள் உங்களிடத்தில் வந்து அறிக்கைசெய்யும் போது, "அவர்கள் போதுமான அளவிற்கு தாழ்மையின் குணத்தைக் காட்டவில்லை… உண்மையிலேயே அவர்கள் வாயால் கூறுகின்ற பாவ அறிக்கையை மனதில் உணர்ந்திருக்கிறார்களாவென்று தெரியவில்லை" என்று கூறக்கூடாது. அவர்களுடைய இருதயத்தின் நினைவுகளை அறிந்தவர்கள்போல அவர்களை நியாயந்தீர்ப்பதற்கு உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. "அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக. அவன் ஒரு நாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக" (லூக்கா 17:3,4) என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது. ஏழுமுறை மாத்திரமல்ல, நாம் தவறுசெய்யும்போதெல்லாம் தேவன் நமக்கு இரங்குகிறதுபோல, நாம் ஏழெழுபதுமுறை மன்னிக்கக் கடமைப்பட்டுள்ளோம். (17)

தேவனுடைய இலவசக் கிருபைக்கு நாமே அனைத்திலும் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம். உடன்படிக்கையிலுள்ள கிருபையே நாம் பெற்ற சுவிகாரத்தை வகுத்து ஒழுங்குபடுத்தியது. இரட்சகரில் உள்ள கிருபையையும் நமது மீட்பையும் புதுவாழ்வையும் கிறிஸ்துவோடுள்ள சுதந்தர வீதத்தையும் கொடுத்து நம்மை உயர்த்தி இருக்கிறது. இந்தக் கிருபையை நாம் பிறருக்கும் வெளிப்படுத்துவோம். (18)

தவறு செய்தவர்கள் அதைரியமடைவதற்கு ஒரு சந்தர்ப்பத்தையும் நாம் அளிக்கக்கூடாது. பரிசேயர்களிடத்தில் காணப்படும் மனக்கடினம் நம்மிலும் வெளிப்பட்டு, நமது உடன் சகோதரர்களின் மீட்பிற்கு அது தடையாக

அமைந்துவிடக்கூடாது. கசப்பான ஏளன இகழ்ச்சி நமது இதயத்திலோ சிந்தையிலோ வரக்கூடாது. நமது குரலிலே கேலியின் சாயல் சிறிதளவும் வெளிப்படக்கூடாது. நீங்கள் உங்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி சிலவார்த்தை களைப் பேசி, அலட்சிய மனப்பாங்கைக் காட்டி, அல்லது சந்தேகம்கொண்டு, அல்லது நம்பிக்கைகொள்ளத் தயங்குவீர்களானால், அது ஒரு ஆத்துமாவி னுடைய அழிவிற்கு வழிவகுத்துவிடும். மூத்த சகோதரனைப்போன்ற ஒரு சகோதரனின் பரிவுள்ள இதயத்தோடு அவருடைய இதயத்தைத் தொட வேண்டும். அனுதாபத்துடன் இறுகப்பற்றும் கரங்களை அவர் உணரட்டும். மென்மையான குரலில், “நாம் ஜெபிப்போம்” என்று நீங்கள் கூறும் வார்த்தையை அவர் கேட்கட்டும். அப்பொழுது தேவன் உங்களிருவருக்கும் ஒரு உன்னத அனுபவத்தைக் கட்டளையிடுவார். ஜெபம் நம்மை பிறருடனும் தேவனுடனும் இணைக்கிறது. ஜெபமானது கிறிஸ்துவை நமக்குச் சமீபத்தில் கொண்டுவருகிறது. அப்பொழுது நம்முடைய ஜெபத்தின்மூலம் சோர்விலும் குழப்பத்திலும் வாழ்கின்ற ஜனங்கள் உலகையும், மாம்சத்தையும், சாத்தா னையும் மேற்கொள்வதற்கு புதுபெலத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஜெபம் சாத்தானின் தாக்குதல்களை முறியடிக்கும் வல்லமையைப் பெற்றிருக்கிறது. (19)

மனிதக் குறைபாடுகளைவிட்டுத்திரும்பி இயேசுவை நோக்கிப்பார்க்கும் போது, கிறிஸ்துவின் ஆவி இருதயத்தில் கிரியைசெய்யும்போது, நாம் தேவசாயலைப் பெறுவோம். அதன்பிறகு இயேசுவை உயர்த்திக்காட்டுவது உங்களது முயற்சியாக இருக்கட்டும். “உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை நம்முடைய மனக்கண்கள் நோக்கட்டும்” (யோவான் 1:29). “தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்” (யாக். 5:20) என்ற வசனத்தை இந்த வேலையில் ஈடுபட்டிருக்கும்போது நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். (20)

“மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியா திருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்” –மத்தேயு 6:15. ஒரு மன்னியாத ஆவியை எதுவும் நியாயப்படுத்தமுடியாது. மற்றவர்களிடத்தில் இரக்கமற்ற விதத்தில் நடந்துகொள்பவர்கள் தேவனுடைய மன்னிக்கும் கிருபையில் பங்குகொள்ளாதவரென்பதைக் காட்டி விடுகிறார். தேவனுடைய மன்னிப்பு தவறிழைக்கும் மாந்தர்களை எல்லையற்ற அன்பினால் நிறைந்திருக்கும் தமது இருதயத்திற்கு நேராக இழுக்கும் சக்தியைப் பெற்றிருக்கிறது. தெய்வீகக் கருணையாகிய வெள்ளம் ஒரு பாவியின்

ஆத்துமாவிற்குள் பாய்ந்து, அங்கிருந்து மற்ற ஆத்துமாக்களை நோக்கிச் செல்லும். கிறிஸ்துவின் ஒப்பற்ற ஜீவியத்தில் வெளிப்பட்ட மென்மையையும் இரக்கத்தையும், அவருடைய கிருபையைப் பகிர்ந்துகொள்ளும் அனைவரும் தங்கள் ஜீவியத்தில் வெளிப்படுத்துவார்கள். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோமர் 8:9) என்று பவுல் கூறுகிறார். அவன் தேவனிடமுள்ள உறவினின்று விலக்கப்பட்டு, நித்தியமாக அவரைவிட்டுப் பிரிந்திருப்பதற்கு மாத்திரமே தகுதிப்படுத்தப்படுகிறான். (21)

ஒரு சந்தர்ப்பத்தில் தேவனுடைய மன்னிப்பை அந்த நபர் பெற்றது உண்மைதான். ஆனால் இரக்கமற்ற ஆவியுடையவராக மாறும்போது, அவருடைய மன்னிக்கும் அன்பைப் புறக்கணிப்பவர்களாகிவிடுகிறார்கள். தேவ சமூகத்தைவிட்டு தன்னை விலக்கிக்கொண்டு மன்னிக்கப்படுவதற்கு முன்னிருந்த அதேநிலைக்குச் சென்றுவிடுகிறான். அவன் தனது மனந்திரும்புதலை மறுதலித்துவிட்டான். அவன் ஒருபோதும் மனந்திரும்பாதது போன்று அந்த பாவங்கள் அவன்மீது சுமந்துவிடுகிறது. நாம் மன்னிக்கிறோம் என்பதற்காக அவர் நம்மை மன்னியாமல், நாம் எவ்வாறாக மன்னிக்கிறோமோ அவ்வாறாகவே அவர் நம்மை மன்னிக்கிறார். மன்னிப்பின் ஆதாரமாக தேவனுடைய அன்பு விளங்குகிறது. பிறரிடம் நாம் காட்டும் மனப்பாங்கை வைத்து, அந்த அன்பை நமக்குச் சொந்தமானதாக மாற்றியுள்ளோமா என்பது புரியும். "நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்" (மத். 7:2) என்று இயேசு கூறினார். (22) ★

# 20

# நஷ்டத்தை விளைவித்த இலாபம்!

**(மூலநூல் : பக்கங்கள் 252–259)**
**லூக்கா 12:13–21**

வழக்கம்போல கிறிஸ்து போதித்துகொண்டிருந்தபோது, அவரது சீடர்களைத் தவிர மற்றவர்களும் அவரைச்சுற்றிலும் குழுமியிருந்தார்கள். தமது சீடர்கள் விரைவிலே சந்திக்கவிருக்கும் சம்பவங்களைக்குறித்து அவர் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். அவருடைய கட்டளையை ஏற்று சத்தியத்தைப் பரப்ப முற்படும்போது, இவ்வுலகத்தின் அதிகாரிகளுடைய போராட்டத்தை அவர்கள் சந்திக்க நேரிடும். அவருடைய நாமத்தின் நிமித்தமாக அவர்கள் அதிகாரிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் நிற்கவேண்டிய அவசியம் ஏற்படும். ஒருவரும் மறுத்துரைக்க முடியாத ஞானம் அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள்மூலமாக வெளிப்படுமென்று அவர்களுக்கு அவர் வாக்களித்தார். திரளான கூட்ட மக்களின் இதயங்களை அசைத்த அவரது வார்த்தைகள் சூழ்ச்சி மிகுந்த அவரது எதிராளிகளைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. மேலும் அவர் தமது பின்னடியார்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்த பரிசுத்த ஆவியின் வல்லமையைக்குறித்தும் சாட்சிகொடுத்தது. (1)

பரலோகம் வழங்கும் கிருபையை பலர் தங்கள் சுயநல நோக்கங்களுக்கு மாத்திரமே பயன்படுத்த விரும்பினர். சத்தியத்தை தெளிவான ஒளியில் சித்தரித்துக் காண்பித்த கிறிஸ்துவின் வல்லமையைக்கண்டு வியந்தனர். அதிகாரிகளுக்கும் அதிபதிகளுக்கும் முன்பாக பேசுவதற்குவேண்டிய ஞானத்தை அவர் பின்னடியார்களுக்குக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்ததை அவர்கள் கேட்டனர். அவர்கள் உலகப்பிரகாரமான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவரது வல்லமையை வழங்கமாட்டாரா? (2)

"அப்பொழுது ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, ஆஸ்தியைப் பாகம்பிரித்து என் வீதத்தை எனக்குத் தரும்படி என் சகோதரனுக்குக் கட்டளையிடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

ஆஸ்தியைப் பகிர்ந்தளிப்பதுகுறித்து மோசேமூலமாக தேவன் சில ஒழுங்கு முறைகளைக் கட்டளையிட்டிருந்தார். தகப்பனுடைய ஆஸ்தியில் இரண்டு பங்கு மூத்த மகனுக்கும் (உபா. 21:17) மீதமுள்ளதை ஏனைய சகோதரருக்கு சரிசமமாகப் பங்கிடவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. கிறிஸ்துவினிடத்தில் வந்த மனிதனோ ஆஸ்தியைப் பகிர்ந்தளிப்பதில் தன் சகோதரன் தன்னை வஞ்சித்துவிட்டதாகக் கருதினான். தனக்கு வரவேண்டிய ஆஸ்தியைப் பெற்றுக்கொள்ள அவனது சொந்த முயற்சிகள் தவறிவிட்டதால், கிறிஸ்து தலையிடுவாரானால் அவனுடைய நோக்கம் நிச்சயமாக நிறைவேறுமென்று எண்ணினான். பரிசேயர்களிடத்திலும் வேதபாரகரிடத்திலும் இயேசு கொடுத்த கடிந்துகொள்ளும் வேண்டுகோள்களையும், பக்திவிநயத்தோடு அவர் கொடுத்த கண்டனங்களையும் அந்த நபர் ஏற்கெனவே கேட்டிருந்தார். இத்தகைய கண்டிப்பான வார்த்தைகள் பேசப்படுமானால், பாதிக்கப்பட்ட மனிதனுக்கு அவனுக்குரிய பங்கைக் கொடுக்க அவன் சகோதரன் மறுக்கத் துணியமாட்டானென்று எண்ணினான். (3)

பக்திவிநயமான போதனைகளை கிறிஸ்து ஜனங்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கையில், இந்த மனிதன் தன் சுயநல எண்ணத்தை வெளிப்படுத் தினான். அவர் கூறிய ஆவிக்குரிய சத்தியங்களை தன் மனதிலும் இதயத் திலும் பதிப்பதைவிட்டுவிட்டு, அவர் தலையீட்டால் தனக்குக் கிடைக்கவிருக்கும் இந்த உலகப்பிரகாரமான தனது முன்னேற்றத்தைக்குறித்து மாத்திரமே சிந்தித்துக்கொண்டிருந்தான். ஆவிக்குரிய உண்மைகள் அவனுடைய சிந்தையிலும் இதயத்திலும் இடம்பெற்றிருக்கவில்லை. ஆஸ்தியை அடையவேண்டுமென்பதில் மாத்திரமே குறியாக இருந்தான். நமக்காக ஐசுவரிய சம்பன்னரான—மகிமையின் ராஜாவான இயேசு தரித்திரராகி, அவரது தெய்வீக அன்பின் பொக்கிஷங்களை அவனுக்கு விளக்கிச் சொல்லிக்கொண்டிருந்தார். “அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய” (1 பேதுரு 1:4) சுதந்தரத்தை பெற்றுக்கொள்ளும்படியாக பரிசுத்த ஆவியானவர் அவனிடத்தில் மன்றாடிக்கொண்டிருந்தார். கிறிஸ்துவின் வல்லமையை அவன் தன் கண்களால் கண்டான். தனது இருதயத்தின் ஆழத்தில் இருக்கும் வாஞ்சையை மாபெரும் போதகருக்கு முன்பாக எடுத்துவைக்கும் தருணமிது. ஆனால் பன்யனின் (BUNYAN) உருவகக் கதையில் வரும் குப்பைகூட்டும் கருவியை வைத்திருக்கும் மனிதனைப்போன்று, அவனுடைய கண்கள் இவ்வுலகில் பதிந்திருந்தது. தன் தலைக்கு மேலிருந்த கிரீடத்தை அவன் பார்க்கவில்லை. சீமோனைப்போல உலக ஆதாயத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒரு வழிமுறையாக தேவனுடைய ஈவை எண்ணினான். (4)

இவ்வுலகத்தில் இரட்சகரது பணி முடியும் கட்டத்தை விரைந்து நெருங்கிக்கொண்டிருந்தது. அவர் தமது கிருபையின் இராஜ்யத்தை ஸ்தாபிப்

பதால் எதைச் செய்யவேண்டுமென வந்திருந்தாரோ அதை முடிவுறச்செய்ய இன்னும் சில மாதங்களே எஞ்சி இருந்தது. ஒரு துண்டுநிலத்தைக்குறித்த பிரச்சனையைத் தீர்ப்பதற்காக அதை எடுத்திருப்பாரானால், மானிட பேராசை யானது அவரது பணியினின்று அவரை திசைதிருப்பிவிடலாம். கர்த்தராகிய இயேசு இந்த பூமியில் முடிக்கவேண்டிய பணியைவிட்டு அவரது கவனத்தை வேறுவழியில் திருப்புவதற்கு முடியவில்லை. அவர் அவனைப் பார்த்து: "மனுஷனே, என்னை உங்களுக்கு நியாயாதிபதியாகவும் பங்கிடுகிறவ னாகவும் வைத்தவன் யார்?" என்றார். (5)

எது நியாயம் என்று இயேசு அவனுக்குச் சொல்லியிருக்கக்கூடும். இந்த வழக்கில் எது சரி என்று அவருக்குத் தெரியும். அந்தச் சகோதரர்கள் பேராசையினிமித்தம் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். எனவே இவ்விதமாக சர்ச்சைகளைத் தீர்த்துவைப்பது தமது வேலையல்ல என்று அவனுக்குக் கூறினார். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் நித்தியத்திற்கடுத்த உண்மைகளை மனுஷர் உணர்ந்துகொள்ளும்படி விழிப்படையச்செய்யவுமே அவர் இவ்வுலகிற்கு வந்தார். (6)

இந்த விஷயத்தில் அவர் கூறிய மறுமொழியிலிருந்து நல்லதொரு பாடத்தை அவருடைய நாமத்தினால் ஊழியஞ்செய்யும் அனைவரும் கற்றுக் கொள்ளலாம். தாம் தெரிந்துகொண்ட பன்னிருவரையும் ஊழியத்திற்கு அனுப்புகையில் அவர்: "போகையில், பரலோகராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள், இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" (மத். 10:7,8) என்று கூறினார். இம்மைக்குரிய காரியங்களைச் சரிசெய்வதற்கு அவர் அனுமதிகொடுக்கவில்லை. மனுஷரை தேவனோடு ஒப்புரவாக்க இணங்கச்செய்வதே அவர்கள் பணியாயிருந்தது. இந்தப் பணியை அவர்கள் ஆர்வத்தோடு செய்யும்போது, மனுக்குலத்திற்கு அது ஆசீர்வா தத்தைப் பெற்றுத்தரும். பாவங்களுக்கும் வேதனைகளுக்கும் பரிகாரம் கர்த்தராகிய இயேசு மாத்திரமே. அவருடைய கிருபையின் சுவிசேஷத்தினால் மாத்திரமே சமுதாயத்தை சாபத்தால் நிறைத்துக்கொண்டிருக்கிற தீமைகளைக் குணப்படுத்த முடியும். ஐசுவரியவான்கள் ஏழைகளை அநியாயமாக நடத்து வதற்கும், ஏழைகள் ஐசுவரியவான்களை வெறுப்பதற்கும் மூலகாரணம் அவர் களது சுயநலமே. இந்த நிலையை கிறிஸ்துவுக்கு தங்களை முற்றிலுமாக ஒப்புக்கொடுப்பதின்மூலமாக மாத்திரமே ஒழிக்கமுடியும். அவரால் மாத்திரமே பாவம் நிறைந்த சுயநல இதயத்தை அகற்றிவிட்டு, அன்புள்ள புது இதயத்தை வழங்கமுடியும். கிறிஸ்து மனிதனின் நன்மைக்காகச் செய்த

பணியைப்போல ஊழியர்கள் பரத்திலிருந்து வரும் ஆவியின் வல்லமையைப் பெற்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். அப்பொழுதுதான் மானிடர் உயர்த்தப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவது வெளிப்படையாகத் தெரியும். மானிட வல்லமையால் இப்படி நிறைவேற்றுவது கூடாத காரியமாகும். (7)

ஆஸ்தியை பாகம் பிரித்துத் தருமாறு வேண்டிய மனிதனுக்கும் இதேபோன்று உலகப்பொருட்களின்மேல் ஆசைவைத்திருந்த ஜனங்களுக்கும்: "பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" என்று இயேசு கூறினார். (8)

அல்லாமலும், ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: "ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான்" என்றார். (9)

இந்த மதிகெட்ட ஐசுவரியவான் உவமையின்மூலமாக, உலகமே தங்களுக்கு அனைத்துமாகக் கருதிக்கொண்டிருக்கிற ஜனங்களுடைய மதிகேட்டை கிறிஸ்து வெளிப்படுத்தினார். உவமையில் வரும் மனிதன் தேவனிடமிருந்து வரும் ஆசீர்வாதங்கள் அனைத்தையும் பெற்றிருந்தான். கர்த்தர் சூரியனை நல்லோர்மீதும் தீயோர்மீதும் பிரகாசிக்கச்செய்கிறபடியால், அவனுடைய நிலமும் அதனால் பயனடைந்தது. நல்லோர்மீதும் தீயோர்மீதும் கர்த்தர் மழையையும் பெய்யப்பண்ணுகிறார். நிலமானது நல்ல முறையிலே தாவர வகைகளை முளைப்பிக்கவும் வயல்கள் ஏராளமாக அறுவடையைத் தரும்படியும் செய்கிறார். ஐசுவரியவான் தன் நிலத்தின் மிகுதியான விளைச்சலை வைத்து என்ன செய்யலாமென்று குழப்பத்திலிருந்தான். அவனுடைய களஞ்சியங்கள் நிரம்பிவழியும் நிலை ஏற்பட்டதால், மிகுதியான விளைச்சலைச் சேகரித்துவைப்பதற்கு அவனுக்கு வேறு இடமில்லாதிருந்தது. தனக்குக்

கிடைத்திருக்கும் மிகுதியான ஆசீர்வாதத்திற்கு தேவனே காரணமென்பதை அவன் நினைக்கவில்லை. ஏழைகளுக்கு உதவும்படியாக கர்த்தர் தன்னை தமது பொருட்களுக்கு உக்கிராணக்காரனாக வைத்திருக்கிறாரென்பதையும் அவன் உணரவில்லை. வறியோருக்கு வழங்குவதற்கு தேவனால் நியமிக்கப் பட்டவனாக இருக்கும்படி, அவனுக்கு ஒரு ஆசீர்வாதமான சந்தர்ப்பம் இருந்தது. அவன் தனது நலனுக்காக ஊழியஞ்செய்யும் சிந்தையோடு மாத்திரமே காணப்பட்டான். (10)

ஏழைகள், அநாதைகள், விதவைகள், இடுக்கணில் இருப்பவர்கள், துயரப்படுகிறவர்கள் ஆகியோர்களின் நிலைமை ஐசுவரியவானின் கவனத் திற்குக் கொண்டுவரப்பட்டது. அவனுடைய பொருட்களைக் கொடுப்பதற்கு ஏராளமான இடங்கள் இருந்தன. அவன் தனது மிகுதியான விளைச்சலின் ஒரு பகுதியை பிறருக்கு வெகு சுலபமாக வழங்கியிருந்தால், அது பல குடும்பங்களின் தேவையைச் சந்தித்திருக்கும். பசியில் வாடியவர்கள் போஷிக்கப்பட்டிருப்பார்கள்; நிர்வாணத்திலிருந்த அநேகர் உடுத்துவிக்கப் பட்டிருப்பார்கள். அநேக இதயங்கள் மகிழ்ச்சியால் நிறைக்கப்பட்டிருக்கும். உணவுக்காக, உடைக்காக ஜெபித்த அநேக ஜெபங்களுக்கு பதில் கிடைத்திருக்கும். துதியின் கீதங்கள் மேலே எழும்பி பரலோகத்தை அடைந்திருக்கும். ஏழைகளின் விண்ணப்பங்களை தேவன் கேட்கிறார். “தேவனே, உம்முடைய தயையினாலே ஏழைகளைப் பராமரிக்கிறீர்” (சங். 68:10) என்று வாசிக்கிறோம். பலரது தேவைகளைச் சந்திக்கும்வண்ணமாக கர்த்தர் அந்த ஐசுவரியவானை அபரிமிதமாக ஆசீர்வதித்தார். ஏராளமான முன்னேற்பாடுகளைச் செய்திருந்தார். ஆனால் அவனோ ஏழைகளின் கூக்குரலிற்குத் தன் செவியை அடைத்து, தன் ஊழியர்களிடம்: “நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து, பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன்” என்றான். (11)

இந்த மனிதனுடைய குறிக்கோள்கள் அழிந்துபோகும் மிருகங்களின் எண்ணங்களைவிட மேன்மையானவைகளாக இருக்கவில்லை. அவன் தனக்கு உண்டான அனைத்தும் தனக்கே சொந்தம் என்று கருதினான். தேவனுக்கும் பிறமனிதருக்கும் கொடுக்க தான் கடமைப்பட்டிருப்பதை அவன் உணர வில்லை. தன்னை உருவாக்கிய தேவனைக்குறித்தோ, பரலோகத்தைக் குறித்தோ, எதிர்கால வாழ்வைக்குறித்தோ அவன் சிந்தித்துப்பார்க்கவில்லை.

இத்தகைய செல்வந்தனைக்குறித்தே சங்கீதக்காரன்: “தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்” (சங்கீதம் 14:1) என்று கூறுகிறான். (12)

அவன் தன் சுயத்திற்காக மாத்திரமே திட்டமிட்டு வாழ்ந்துகொண்டிருந்தான். தனது எதிர்காலத்திற்குத் தேவையான அனைத்தும் தன்வசம் மிகுதியாக இருப்பதினால், தற்சமயம் தன் உழைப்பின் பலன்களைக்கண்டு களிகூருவதைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்று நினைத்தான். பிற மனிதரைப்பார்க்கிலும் அவன் தன்னை மேன்மையானவனாகக் கருதி, தான் ஞானமாக காரியங்களைச் செய்ததாக எண்ணி, தன்னைத்தானே மெச்சிக் கொண்டான். அவனைப்போன்று அந்தஸ்தில் உயர்ந்திருந்த அவனுடைய ஊர் ஜனங்கள் அவனுடைய நல்ல தீர்மானங்களைப்பற்றியும் அவன் வாய்ப்பு வளங்களைக் கூறியும் அவனைக் கனம்பண்ணினார்கள். “நீ உனக்கு நன்மையை நாடினாய்” (சங். 49:18) என்று மனுஷர் அவனைப் புகழ்ந்தார்கள். (13)

ஆனால் “இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது”–1 கொரி. 3:19. இந்த ஐசுவரியவான் தனது சம்பாத்தியத்தின் பலனை பல வருடங்கள் அனுபவித்து மகிழலாம் என்று நினைத்துக் கொண்டிருக்க, தேவனோ மிகவும் வித்தியாசமான ஒரு திட்டத்தை அவனுக்கு வைத்திருந்தார். அந்த விசுவாசமற்ற உக்கிராணக்காரனைப் பார்த்து, அவர்: “மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும்” என்று கூறுகிறார். பணத்தால் நிரப்பப்படக்கூடாத ஒரு கோரிக்கை இங்கு இருக்கிறது. அவன் கவனமாக சேமித்துவைத்திருந்த செல்வத்தினால், அவனுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையிலிருந்து அவனைக் காப்பாற்ற இயலாமற்போனது. ஒரு நொடியிலே அவன் தன் ஜீவியகாலம் முழுவதுமாக பாடுபட்டுச் சம்பாதித்த பொருட்கள் அனைத்தும் அவனுக்குப் பயனற்றுப்போகிறது. “நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்?” அவனுடைய பரந்துவிரிந்துகிடந்த வயல்களும், நன்றாக நிரப்பப்பட்ட களஞ்சியங்களும், அவன் கட்டுப்பாட்டைவிட்டு அகன்றுபோகிறது. “ஆஸ்தியைச் சேர்க்கிறான், யார் அதை வாரிக்கொள்ளுவான் என்று அறியான்”–சங். 39:6. (14)

அவனுக்குப் பயனளிக்கக்கூடிய ஒரே ஒரு காரியத்தை அவன் பெற்றிருக்கவில்லை. சகமனிதர்களிடம் இரக்கத்தோடு பாய்ந்தோடக்கூடிய தெய்வீக அன்பை சுயத்திற்காக வாழ்ந்ததினால் புறக்கணித்துப்போட்டான். இதினிமித்தமாக தேவன் விரும்பும் வாழ்வு முறையை அவன் புறக்கணித்து விட்டான். தேவன் அன்பாக இருக்கிறார். அன்பே நமது ஜீவனாக

இருக்கவேண்டும். இந்த மனிதன் ஆவிக்குரியவைகளை நாடாமல், உலகத்திற்கு உரியவைகளை நாடினபடியால், உலகத்தோடுகூட அவனும் கடந்துபோகவேண்டியதாயிற்று. "கனம்பொருந்தினவனாயிருந்தும் அறிவில்லாத மனுஷன் அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்"–சங்கீதம் 49:20. (15)

"தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான்." கர்த்தருடைய வார்த்தை அனைத்துக் காலங்களுக்கும் பொருந்தும். நீங்கள் சுகமாக வாழ்வதற்குத் திட்டங்களைத் தீட்டலாம்; சொத்துக்களைக் குவிக்கலாம். பண்டைய பாபிலோனியர்களைப்போல் பெரிதும் உயரமுமான மாளிகைகளைக் கட்டலாம். ஆனால் கட்டிடத்தின் மதில்கள் எவ்வளவு உயரமாகயிருந்தாலும், கதவுகள் எவ்வளவு பலமாகயிருந்தாலும், தேவன் அனுப்புகின்ற அழிவின் தூதர்களை வெளியே தள்ளி அடைத்துப்போடமுடியாது. பெல்ஷாத்சார் என்னும் ராஜா தன் அரண்மனையில் விருந்தினர்களோடு திராட்சரசம் அருந்தி, "பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தான்" (தானியேல் 5:4). ஆனால் கண்ணால் காணப்படக்கூடாத ஒருவரின் கரம் அழிவின் வார்த்தைகளை சுவரிலே எழுதிற்று. அவனது அரண்மனை வாசல்களிலே அந்நிய சேனைகளின் காலடி ஓசை கேட்டது. "அன்று இராத்திரியிலே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலைசெய்யப்பட்டான்"–தானி. 5:30. வேற்று நாட்டு அரசன் சிங்காசனத்தில் அமர்ந்தான். (16)

சுயத்திற்கு வாழ்தல் அழிவிற்கு வழிநடத்தும். சுயத்தை திருப்திசெய்வதற்காகப் பொருளாசைக்கு இடமளிப்பவர்கள் அவர்களாகவே தங்கள் ஆத்துமாவை நித்தியஜீவனினின்று துண்டித்துக்கொள்கிறார்கள். சுயத்திற்காகப் பெறுவதும் சேர்ப்பதும் சாத்தானின் ஆவியாயிருக்கிறது. பிறர் நலனுக்காக சுயத்தைத் தியாகம்செய்வதும், கொடுப்பதும் கிறிஸ்துவின் ஆவியாயிருக்கிறது. "தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்"–1 யோவான் 5:11,12. (17)

ஆகவே இயேசு: "பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" என்கிறார். (18) ★

# 21

# லாசருவும் ஐசுவரியவானும்!

**(மூலநூல் : பக்கங்கள் 260–271)**
**லூக்கா 16:19–31**

இந்த வாழ்வின்போது மனுஷர் தங்கள் நித்திய வாழ்வை நிர்ணயம் செய்கின்றனரென்பதைத் தெளிவுபடுத்தவே கிறிஸ்து, ஐசுவரியவான்–லாசரு என்ற உவமையைக் கூறினார். தவணையின் காலத்தின்போது தேவனுடைய கிருபை அனைத்து மனுஷருக்கும் வழங்கப்படுகிறது. ஆனால் மனுஷர் தங்களுக்கு வழங்கப்படும் சந்தர்ப்பங்களை சுயத்தை மகிழ்விப்பதற்காக வீணடிப்பார்களேயாகில், அவர்களாகவே தேவன் அளிக்கும் நித்திய வாழ்வினின்று தங்களைத் துண்டித்துக்கொள்ளுகிறார்கள். தவணையின் காலத்திற்குப் பின்னர், வேறு ஒரு தருணம் அவர்களுக்கு வழங்கப்படுகிறதில்லை. அவர்கள் தங்கள் சொந்தத் தெரிந்துகொள்ளுதலின்படி, தங்களுக்கும் தேவனுக்கும் இடையே கடக்கவியலாத மாபெரும் பிளவை உருவாக்குகிறார்கள். (1)

தேவனைச் சார்ந்திராமல், தங்கள் செல்வத்தையே நம்பி ஜீவிக்கும் செல்வந்தர்களுக்கும், தேவனைச் சார்ந்து ஜீவிக்கின்ற ஏழைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை இந்த உவமை தெளிவுபடுத்துகிறது. இவ்விரு வகுப்பினருடைய நிலை எதிராக மாறும் காலம் வருகிறதென்பதை கிறிஸ்து நமக்குக் காண்பிக்கிறார். உலகப்பிரகாரமான பொருட்களில் ஏழைகளாக இருப்பினும், தேவன்பேரில் நம்பிக்கைவைத்து, துன்பத்தில் பொறுமையோடிருப்பவர்கள், இப்பொழுது இவ்வுலகம் தரக்கூடிய மிகவும் உயர்ந்த பதவிகளை வைத்துக்கொண்டு தேவனுக்குத் தங்களது வாழ்வை ஒப்புக்கொடுக்காதவர்களைவிட மேன்மையான நிலைக்கு ஒருநாள் உயர்த்தப்படுவார்கள். (2)

“ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய

வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்" என்று இயேசு கூறினார். (3)

உவமையில் வரும் ஐசுவரியவான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் ஜீவித்த அநீதியுள்ள நியாயாதிபதியின் வகுப்பைச் சார்ந்தவனல்ல. அவன் தன்னை ஆபிரகாமின் குமாரனென்று உரிமை கோரினான். லாசரு பார்வைக்குச் சகிக்க இயலாதவனாக இருந்தபோதிலுங் கூட, அவன் அவனைக் கடினமாய் நடத்தவுமில்லை; அங்கிருந்து துரத்தவு மில்லை. ஏழையான—அருவருக்கத்தக்க தோற்றமுள்ள மனிதனான லாசரு, தான் வாசல்வழியாக உள்ளே பிரவேசிப்பதை பார்ப்பதினால் ஆறுதலடையக் கூடுமானால், அங்கு இருந்துவிட்டுப் போகட்டும் என்று செல்வந்தன் நினைத்தான். துன்பமடைகின்ற அவனது சகோதரனின் தேவைகளைக்குறித்து, கண்டும் காணாமல் அவன் சுயநலத்தோடு அலட்சியமாக இருந்தான். (4)

ஏழை ஜனங்கள் சென்று சிகிச்சைபெறக்கூடிய மருத்துவமனைகள் அந்நாட்களிலே கிடையாது. கர்த்தரிடமிருந்து செல்வத்தை ஈவாகப் பெற்றிருந்தவர்கள் இத்தகையோருக்கு இரங்கி உதவும் வகையிலே வியாதியினால் துன்பப்படுவோரும் தேவையிலிருப்போரும் உதவியையும் பரிவையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அந்த செல்வந்தனுக்கும் பிச்சைக்காரனுக்கும் உரிய காரணங்கள் இப்படித்தான் இருந்தது. அவன் நண்பர்களின்றி, வீடின்றி, பணமின்றி, உணவின்றி மிகவும் அதிக உதவி தேவைப்பட்டவனாக இருந்தான். ஐசுவரியவான் தனக்குத் தேவையான அனைத்தையும் தன்வசம் வைத்து அனுபவித்து வந்தபோதிலும், தன் வாசலருகே கிடந்த பிச்சைக்காரன் அதே நிலையில் தொடர்வதற்கு அனுமதித்தான். தனது உடன்மனிதனுடைய பாடுகளினின்று அவர்களை விடுதலைசெய்யத் தக்கவிதத்தில் மிகவும் வசதிபடைத்திருந்தவன்; இன்றும் அநேகர் வாழ்வதுபோல் தனக்குத் தானே வாழ்ந்துகொண்டிருந்தான். (5)

நம்மைச்சுற்றி அநேகர் பசியுடையவர்களாகவும், உடையில்லாதவர் களாகவும், வீடற்றவர்களாகவும் இருக்கின்றனர். இத்தகைய தேவையிலும் துன்பத்திலும் இருப்பவர்களின் தேவைகளை நமக்கு உண்டானவைகளைக் கொண்டு சந்திக்கத் தவறுவது, ஒருநாள் நாம் சந்திக்கப் பயப்படுகிற குற்றபாரத்தை நம்மீது வைக்கும். அனைத்து வகையான பொருளாசையும் இச்சையும் விக்கிரகாராதனையெனக் கண்டனம் செய்யப்படுகிறது. அனைத்து சுயநலத்தோடும் சிற்றின்பங்களிலே திளைத்தலானது தேவனுடைய பார்வையிலே ஒரு குற்றமாகவே காணப்படுகிறது. (6)

தேவன் அந்த ஐசுவரியவானை தனது பொருட்களுக்கு உக்கிராணக் காரனாகவும் லாசரு போன்ற திக்கற்றவர்களுக்கு உதவிசெய்கிறவனாகவும் ஏற்படுத்தியிருந்தார். ஒரு பிச்சைக்காரனைப்போன்றிருக்கும் லாசருவைப் போன்ற நபர்களைக் கவனித்துப் பராமரிப்பது அவனுடைய கடமையாகும். "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக" (உபா. 6:5) என்றும், "உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக" (லேவி. 19:18) என்றும் ஆண்டவர் கட்டளை கொடுத்திருந்தார். அந்த ஐசுவரியவான் ஒரு யூதனாயிருந்தபடியினால், தேவனுடைய இந்தக் கட்டளையை அறிந்தவனாயிருந்தான். அவனிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த பொருட்களையும் அவனுக்கு உரிய திறமைகளையும் பயன்படுத்தும் காரியத்தில், அதற்காக பதில் சொல்லக்கூடிய பொறுப்பில் இருந்தான் என்பதை அவன் மறந்திருந்தான். கர்த்தருடைய ஆசீர்வாதம் அவனிடம் மிகுதியாக இருந்தும், அதைத் தன் சுயநலனிற்காகவும், கனத்திற்காகவும் பயன்படுத்தி, சிருஷ்டிகரை மகிமைப்படுத்தத் தவறினான். அவன் தன் அபரிமிதமான ஆசீர்வாதத்திற்குத்தக்கதாக தேவையில் வாடும் மனுக்குலத்தின் கண்ணீரைத் துடைக்கக் கடமைப்பட்டிருந்தான். இது கர்த்தருடைய கட்டளையாயிருந்தும், தேவனுக்குச் செய்யப்படவேண்டிய கடமையைப்பற்றிய எண்ணமில்லாதவனாக அந்தச் செல்வந்தன் இருந்தான். அவன் தன்னிடமிருந்த பணத்தைக் கடனாகக் கொடுத்து, கொடுத்த கடனுக்கு வட்டியைப் பெற்றுக்கொண்டான். ஆனால் தேவன் அவனுக்குக் கொடுத்த கடனுக்கு வட்டியைக் கொடுக்கவில்லை. அவன் அறிவும் தாலந்துகளும் உடையவனாயிருந்தும் அவைகளை தேவன் மகிமைப்படும் வகையிலே முன்னேற்றுவிக்கவில்லை. தேவனுக்குக் கணக்கொப்புவித்தலை முற்றிலும் மறந்தவனாக, தனக்குண்டான அனைத்தையும் சிற்றின்பங்களுக்காகப் பயன்படுத்தினான். அவனைச் சுற்றிலுமிருந்த அனைத்துக் காரியங்களும், தொடர்ந்து ஈடுபட்டிருந்த களியாட்டங்களும், அவனது நண்பர்கள் அவனைப்பற்றிக் கூறிய புகழுரைகளும், முகஸ்துதிகளும் அவனது சுயநலம் நிறைந்த மகிழ்ச்சிக்குக் கைகொடுத்து உதவின. அவனது நண்பர்கள் கூட்டம் மிகவும் அதிகமாக அவனது கவனத்தை ஈர்த்திருந்தபடியால், தேவனுடைய இரக்கத்தின் ஊழியத்தில் ஒத்துழைக்க வேண்டுமென்ற பொறுப்பைப்பற்றிய எண்ணத்தை முற்றிலுமாக இழந்து விட்டான். தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளவும் அதின் உபதேசங்களின்படி ஜீவிக்கவும் அவனுக்குத் தருணம் கொடுக்கப்பட்டது. ஆனால் சிற்றின்பத்தை விரும்பும் கூட்டத்தினரோடு அவனுக்கிருந்த தொடர்பும் ஈடுபாடும் தேவனையும் அவர் அளிக்கும் நித்தியஜீவனையும் மறந்துவிடத்தக்கதாக அவனைத் தூண்டினது. (7)

இந்த இருவருடைய நிலையிலும் மாறுதல் ஏற்படும் வேளை வந்தது. ஏழை லாசரு அனுதினமும் வறுமையையும் துன்பத்தையும் பொறுமையோடு சகித்துவந்தான். காலப்போக்கில் அவன் மரித்து அடக்கம் செய்யப்பட்டான். அவனுக்காக அழுது துக்கப்படுவதற்கு ஒருவரும் இல்லாதிருந்தபோதிலும் கூட, அவன் பொறுமையோடு ஜீவிய நாட்களில் பாடுகளைச் சகித்து, கிறிஸ்து வுக்குச் சாட்சியாக இருந்ததினால், அவனுடைய விசுவாசத்திற்கு வந்த பரீட் சையைச் சகித்துக்கொண்டான். அவன் மரித்ததும் தேவதூதர்கள் அவனை ஆபிரகாமின் மடிக்குத் தூக்கிச்சென்றதாக இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. (8)

கிறிஸ்துவின்மேல் விசுவாசம்வைக்கும் ஏழை ஜனங்களின் பிரதிநிதி யாக லாசரு எடுத்துக்காட்டப்படுகிறான். எக்காளச் சத்தம் தொனிக்கும்போது, தேவன்மீது விசுவாசமுள்ளவர்களாக மரித்த அனைவரும் கிறிஸ்துவின் குரலைக்கேட்டு, கல்லறைகளிலிருந்து வெளியே வரும்போது தங்கள் பலனைப் பெறுவார்கள். அவர்கள் தேவனிலே வைத்திருந்த விசுவாசம் வெறும் கோட்பாடாக இல்லாமல் நிஜ அனுபவமாக இருந்தது. (9)

“ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே” என்று கூப்பிட்டான்—லூக்கா 16:22–24. (10)

இந்த உவமையின் வாயிலாக ஜனங்களை அவர்கள் சொந்த நிலவரத்தில் கிறிஸ்து சந்திக்கிறார். கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் அநேகர் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்குமிடையே மனிதன் நினைவாற்றல் உடையவனாக இருப்பானென்ற மாயையான உபதேசத்தை நம்பிவந்தனர். அவர்கள் கொண்டிருந்த எண்ணம் தவறென்பதைச் சுட்டிக்காட்டும்வகையில் முக்கியமான சத்தியங்களை உள்ளடக்கிய இவ்வுவமையைக் கூறினார். ஜனங்கள் தாங்கள் தேவனோடு கொண்டிருக்கும் உண்மையான உறவு எப்படியென்பதை தங்களிலே காணத்தக்கதாக அவர் தமது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு முன்பாக ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியைப்போன்று ஒரு காரியத்தை வைத்தார். அவர்கள் மத்தியிலே நிலவியிருந்த எண்ணத்தைப் பயன்படுத்தி அவர் கூறவிருந்த கருத்தின் முக்கியத்துவத்தை—எந்த மனிதனும் அவனுடைய உடமைகளுக்காக மதிக்கப்படுகிறதில்லை என்பதை அனைவருக்கும்

தெரியும்படியாக கொடுக்க எண்ணினார் அவனுக்குச் சொந்தமாகயிருக்கும் பொருட்களும் கர்த்தரால் கடனாகமாத்திரமே வழங்கப்பட்டவைகளாகும். ஐசுவரியவான்களின் நிலைமை, தேவனை நேசித்து அவரைச் சார்ந்து, துன்பத்தை அனுபவிக்கும் தரித்திரர்களைக் காட்டிலும் மோசமாக மாறும். (11)

மரணத்திற்குப் பின்னர் மனுஷர் ஆத்தும இரட்சிப்பைத் தேடுவது இயலாத காரியமென்று கிறிஸ்து தெளிவுபடுத்துகிறார். ஆபிரகாம் ஐசுவரிய வானைப் பார்த்து: "மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது" என்றான். மரணத்திற்குப் பின்னர் இரண்டாவது தருணம் கிடைக்கும் என்ற கருத்து தவறு என்பதை கிறிஸ்து தெளிவுபடுத்துகிறார். நித்தியத்திற்கு ஆயத்தப்படுவதற்கு மனிதனுக்கு இந்த வாழ்வுமாத்திரமே அளிக்கப்படுகிறது. (12)

தான் ஆபிரகாமின் குமாரனென்ற கருத்தை அந்த செல்வந்தன் விடவில்லை. அவனது துயரத்திலே ஆபிரகாமை நோக்கி, உதவி கேட்பதாக இங்கு சுட்டிக்காட்டப்படுகிறான். "தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கும்" என்று வேண்டினான். அவன் தேவனிடத்தில் வேண்டுதல் செய்யாமல், ஆபிரகாமிடத்தில் வேண்டுதல் செய்கிறான். அவன் ஆபிரகாமை தேவனுக்கும் மேலாகவைத்து, தனக்கும் அவனுக்கும் உள்ள உறவு இரட்சிப்பினைப் பெற்றுத்தரும் என்று நினைத்தான். சிலுவையில் கிறிஸ்துவுடன் அறையுண்ட கள்ளன்: "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்று விண்ணப்பம் செய்தான் (லூக்கா 23:42). (தான் சிலுவையிலே அவமானத்தையும் துன்பத்தையும் சகித்த நிலையில் தொங்கிக்கொண்டிருக்கும்போது) "இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று இரட்சகரிடமிருந்து உடனே அவனுக்குப் பதிலும் கிடைத்தது. ஆனால் இந்த ஐசுவரியவான் ஆபிரகாமிடத்தில் விண்ணப்பம் செய்ததினிமித்தம் அவனுடைய விண்ணப்பம் கேட்கப்படவில்லை. "இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார்"–அப். 5:31; "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை"–அப். 4:12. (13)

ஐசுவரியவான் தன் ஜீவியநாட்களை தனக்கு இன்பமான காரியங்களில் செலவிட்டான். நித்தியத்தைச் சுதந்தரிப்பதற்கு தான் எதையும் செய்யவில்லை என்பதை அவன் உணர்ந்தபோது காலம் கடந்துவிட்டது. அவன் தனது அறிவீனத்தை நன்கு உணர்ந்து துக்கித்துக்கொண்டிருந்தபொழுதில், தன்னைப்போலவே வாழ்ந்துகொண்டிருக்கும் தன் சகோதரர்களை நினைத்து: "தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று ஆபிரகாமிடம் வேண்டுகிறான். ஆபிரகாம் அவனை நோக்கி: "அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள்" என்று சொன்னான். (14)

தன் சகோதரர்களுக்கு கூடுதல் ஆதாரம் கிடைக்கும் வகையில், லாசரு அனுப்பப்படவேண்டுமென்பது வேண்டுகோள். அப்படிச்செய்யும் பட்சத்திலும், அவர்கள் செவிகொடுக்கமாட்டார்கள் என்று கூறப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டது. அவனுடைய வேண்டுகோள் தேவனைக் குற்றப்படுத்துவதுபோன்று அமைந்தது. தான் செம்மையாக எச்சரிக்கப்பட்டிருந்தால், இவ்விடத்திற்கு வராமலிருந்திருக்கலாம் என்றவகையில் அவனுடைய பேச்சு அமைந்தது. ஆபிரகாம் அவனுக்கு பதிலுரைக்கையில் அவனுடைய சகோதரர்கள் போதுமான அளவிற்கு எச்சரிக்கப்பட்டிருக்கிறார்களென்று எடுத்துக்கூறப்பட்டிருக்கிறது. வெளிச்சம் வழங்கப்பட்டும் அதை அவர்கள் காணாமலும், சத்தியம் வெளிப்படுத்தப்பட்டும், அதற்கு அவர்கள் செவிசாய்க்காமலும் இருக்கிறார்கள். (15)

"அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள்" என்ற வார்த்தைகள் மெய் என்பதை யூத தேச வரலாறு எடுத்துக்காட்டுகின்றது. அற்புதங்களின் கிரீடமாக பெத்தானியா ஊர் லாசருவை கிறிஸ்து மரித்து நான்கு நாட்களுக்குப்பின்னர் உயிருடன் எழுப்பினார். இரட்சகரின் தெய்வீகத்திற்கு ஆதாரமாக இவ்வற்புதம் நிகழ்த்தப்பட்டது. ஆனால் யூதர்கள் அதைப் புறக்கணித்தனர். லாசரு உயிருடன் எழுந்து சாட்சிபகர்ந்தபோதிலும் அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட வலுவான ஆதாரத்தை தங்கள் இதயக்

கடினத்தினால் புறக்கணித்ததுமட்டுமின்றி, லாசருவையும் கொல்வதற்கு ஆலோசனைபண்ணினார்கள்–யோவான் 12:9–11. (16)

இரட்சிப்பின் ஏதுகரங்களாய்த் திகழும்படியாக தேவன் கற்பனையையும், தீர்க்கதரிசிகளையும் ஜனங்களுக்கு அருளியிருக்கிறார். இந்த ஆதாரங்களை மக்கள் கவனித்துப்பார்க்கட்டுமென்று கிறிஸ்து கூறுகிறார். தேவனுடைய வார்த்தைக்கு அவர்கள் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழும்பிவந்து சாட்சிகொடுத்தாலும், அவர்கள் அதற்குக் கவனம் செலுத்தமாட்டார்கள். (17)

மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடுப்பவர்களுக்கு தேவன் கொடுத்திருக்கும் வெளிச்சத்தைவிட மேலான வெளிச்சம் தேவையில்லை. வெளிச்சத்தைப் புறக்கணித்து, தேவன் கொடுக்கும் தருணங்களையும் அலட்சியப்படுத்துபவர்கள், ஒருவேளை மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து ஒரு செய்தியைக் கொண்டுசென்றாலும், செவிசாய்க்கமாட்டார்கள். எத்தகைய ஆதாரம் கொடுக்கப்பட்டாலும் அவர்கள் நம்பமாட்டார்கள். ஏனெனில், கற்பனையையும் தீர்க்கதரிசிகளையும் புறக்கணிப்பவர்கள், தேவன் வழங்கும் அனைத்து வெளிச்சத்தையும் புறக்கணிப்பார்கள் என்பது உறுதி. (18)

ஆபிரகாமிற்கும் ஒரு காலத்தில் செல்வந்தனாக இருந்தவனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல்தான் இங்கு உருவகமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனிடம் எதிர்பார்க்கப்படும் கடமைகளைச் செய்வதற்கான போதிய வெளிச்சம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்னும் பாடத்தை இங்கு பெற்றுக்கொள்ளவேண்டும். மனிதனுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கும் சிறப்புரிமைகளுக்கும் ஏற்றவாறு மனிதனின் பொறுப்புகள் இருக்கின்றன. தேவன் செய்யும்படியாக மனிதனுக்கு வழங்கியிருக்கும் பொறுப்புகளை நிறைவேற்றும்படி, ஒவ்வொருவருக்கும் போதுமான வெளிச்சத்தையும், கிருபையையும் கொடுத்திருக்கிறார். கடமை இதுவென்று மனிதனுக்கு கொடுக்கப்படும் ஒரு சிறு வெளிச்சமும் அவனது உண்மையற்ற குணத்தை வெளிப்படுத்தும். மேலும், கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களை முன்னேற்றுவிக்காமல் அலட்சியப்படுத்திவிட்டதையும் காட்டும். “கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்”–லூக்கா 16:10. மோசேயின்மூலமாகவும் தீர்க்கதரிசிகள்மூலமாகவும் பெற்ற வெளிச்சத்தை ஏற்க மறுப்பவர்களுக்கு, அவர்களது மனவிருப்பத்தின்படியே வேறு ஒரு அற்புதம் நிகழ்த்தப்பட்டாலும் அதையும் அவர்கள் ஏற்கமாட்டார்கள். (19)

உவமையில் வரும் ஐசுவரியவானும் லாசருவும் இவ்வுலகில் வாழும் இரு வகுப்பினரின் பிரதிநிதிகளாகத் திகழ்கிறார்கள். இத்தகைய மனிதர்களால் எடுத்துக்காட்டப்படும் இரண்டு வகுப்பாரும் காணக்கூடாத உலகத்தால் (இறைவன் மற்றும் தூதர்கள்) எவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகிறார்கள் என்பதைக் காட்டுகிறார்கள். செல்வந்தர்கள் சொத்துக்களை தீயவழியில் சம்பாதித்திருக்காவிட்டால் செல்வந்தர்களாக இருப்பதில் பாவம் எதுவுமில்லை. ஆஸ்தியின் நிமித்தமாக ஒரு ஐசுவரியவான் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுகிறதில்லை. ஆனால் அந்த ஆஸ்தியை ஒருவன் தன் சுயநலத்திற்காக மாத்திரமே பயன்படுத்துவானேயானால், ஆக்கினைக்குத் தப்ப இயலாது. தனது செல்வத்தை தேவனுடைய சிங்காசனத்திற்கருகில் வைத்து (ஜெபத்தில் வைத்து), நன்மைசெய்வதற்காக பயன்படுத்துவானானால் அக்காரியம் மிகவும் மேன்மையாகக் கருதப்படும். நித்தியமாக நிலைத்திருக்கும் செல்வத்தை நாடித் தேடுவதில் தன்னை முற்றிலுமாக ஒப்படைத்துவிடுகிற மனிதனை மரணம் ஏழையாக்கிவிடமுடியாது. சுயத்திற்காகச் சொத்துக்களைக் குவித்துவைக்கிற மனிதன் அதில் சிறிதளவைக்கூட பரலோகத்திற்கு எடுத்துச்செல்லமுடியாது. அவன் தன்னை உண்மையற்ற உக்கிராணக்காரனென்பதை நிரூபிக்கிறான்; தனது ஜீவிய நாட்களில் நன்மையானவைகளை அனுபவித்தபோதிலும், தேவனுக்குச் செய்யவேண்டிய கடமையை மறந்துவிட்டான். ஆகவே, அவனால் பரலோகத்தில் பொக்கிஷத்தைச் சேர்க்க இயலவில்லை. (20)

ஏராளமான சிறப்புரிமைகளைப்பெற்று அனுபவித்திருந்த செல்வந்தன், விருத்திசெய்யப்பட்ட ஆவிக்குரிய அனுகூலங்களை எடுத்துச்செல்லத்தக்க விதத்தில், நித்தியத்தை அடைவதற்கு ஏற்றவாறு அவனது கிரியைகள் இருக்கும்படியாக, தான் பெற்ற ஈவுகளை பெருக்கிக்கொள்ளவேண்டு மென்று இங்கு நமக்கு எடுத்துக்காட்டப்படுகிறான். பாவத்தை அகற்றுவது மாத்திரமல்ல, வளர்ச்சியைக் குன்றச்செய்யும் பாவத்தின் வல்லமையினால் இழக்கப்பட்ட ஆவிக்குரிய ஈவுகளை மீண்டும் மனிதனுக்குக் கொடுப்பதே இரட்சிப்பின் நோக்கமாகும். வரப்போகும் வாழ்விற்குப் பணத்தை எடுத்துச் செல்ல இயலாது. அங்கு இதற்கான தேவையுமில்லை. மேலும், கிறிஸ்து விற்கு ஆத்துமாக்களை ஆதாயம்செய்யத்தக்கதாக செய்யப்பட்ட நற் கிரியைகள் பரலோக மன்றங்களுக்கு எடுத்துச்செல்லப்படும். ஆனால் கர்த்தர் கொடுத்த ஈவுகளை தங்களுக்காகவே சுயநலத்தோடு செலவிட்டு, தங்களுக்கு அருகில் வாழ்ந்துவந்த தேவையிலிருக்கும் சகமனிதர்களுக்கு எந்த உதவியும் செய்யாமல், இந்த உலகத்தில் தேவனுடைய வேலையையும் முன்னேற்றுவியாமல், தங்களைப் படைத்தவரை கனவீனம் செய்கிறவர்களின் பெயர்களுக்கு எதிராக தேவனைக் கொள்ளையடித்தவர்கள் என்று பரலோகப் பதிவேடுகளில் எழுதப்படும். (21)

பணத்தால் பெறக்கூடிய அனைத்தும் அவன்வசம் இருந்தும், அந்த செல்வந்தனுக்கு அவனது கணக்கை தேவனோடு சரியான நிலையில் வைத்திருக்கக்கூடிய அந்த செல்வத்தை அவன் உடைமையாக வைத்திருக்க வில்லை. தன்னிடமுள்ளவைகள் அனைத்தும் தனக்கே சொந்தமெனக் கருதி வாழ்வதுபோல் அவன் வாழ்ந்துவந்தான். அவன் தனக்கு உடைமையாகப் பெற்றிருந்த அனைத்தையும் தன்னுடையதாகவே எண்ணி வாழ்ந்துவந்தான். தேவனுடைய அழைப்பையும் துன்பம் அனுபவிக்கின்ற ஏழைகளின் கோரிக் கைகளையும் அவன் அலட்சியப்படுத்திவிட்டான். ஆனால் இறுதியிலே அவனால் அலட்சியப்படுத்த இயலாத அழைப்பொன்று தேவனிடமிருந்து வருகிறது. அவன் வாழ்ந்துவந்த வீட்டையும் அனுபவித்துவந்த சொத்துக்க ளையும் விட்டுவிட்டு வெளியேறுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டதும், அந்த வல்லமையை எதிர்த்து அவனால் போராடவோ கேள்விகேட்கவோ இயலவில்லை. ஒரு காலத்தில் செல்வந்தனாக வாழ்ந்திருந்த அவன், நம்பிக்கையற்ற தரித்திரநிலைக்கு தாழ்த்தப்படவேண்டியதாகிவிட்டது. பரலோகத் தறியில் உருவாக்கப்பட்ட வஸ்திரமாகிய கிறிஸ்துவின் நீதி இனி ஒருபோதும் அவனை மூடாது. ஒருகாலத்தில் அனுதினமும் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற மெல்லிய வஸ்திரமும் உடுத்திவந்தவன் இப்போது நிர்வாணநிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டான். அவனுக்கு தேவன் கிருபையாக அளித்துவந்த தவணையின் காலம் முற்றுப்பெற்றுவிட்டது. அவன் இந்த உலகத்தில் தோன்றுகையில் எதையும் எடுத்துவரவுமில்லை. அதைவிட்டுப் போகையில் எதையும் எடுத்துச்செல்லவுமில்லை. (22)

ஆசாரியர்கள், அதிபதிகள், வேதபாரகர், பரிசேயர் ஆகியோருக்கு முன்பாக கிறிஸ்து திரையை விலக்கி, இந்தச் சித்திரத்தை எடுத்துக் காட்டினார். இவ்வுலகத்தில் பெருமளவு ஆஸ்திகளை உடைமையாகக்கொண்டிருந்தும் தேவனிடத்தில் எத்தகைய செல்வத்தையும் சேர்த்துவைக்காத நீங்கள் இதை நோக்கிப்பாருங்கள். இதை வாசிக்கும் அன்பு வாசகரே, இந்தக் காட்சியை சற்றுநேரம் மனதில் தியானிக்கமாட்டீரா? மனுஷர் பார்வையில் மிகவும் அதிகமாய் மதிப்பீடுசெய்யப்படும் காரியங்கள், தேவனுடைய பார்வையில் அருவருப்பாகக் காணப்படுகிறது. "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மாற்கு 8:36,37) என்று கிறிஸ்து கேட்கிறார். (23)

## யூதஜனத்துக்கு பொருத்துதல்!

ஐசுவரியவானும் லாசருவும் என்ற தலைப்பில் கூறப்பட்ட உவமையை கிறிஸ்து அவர்களிடம் கூறியபோது, யூதமக்களிடையே அநேகர் இந்த

ஐசுவரியவானைப் போன்று பரிதாபமான நிலையில் இருந்தனர். கர்த்தரால் கொடுக்கப்பட்ட சொத்துக்களை தங்களது சுயநலத்தைத் திருப்திசெய்யும் காரியங்களுக்காகப் பயன்படுத்தி: "நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய்" (தானி. 5:27) என்று சொல்லப்படப்போகிற தீர்ப்பைக் கேட்க தங்களை ஆயத்தம்செய்துகொண்டிருந்தார்கள். இம்மைக்குரிய மற்றும் ஆவிக்குரிய அனைத்து ஆசீர்வாதங்களையும் ஐசுவரியவான் பெற்றிருந்தும், அவைகளைப் பயன்படுத்துவதில் தேவனோடு ஒத்துழைக்க மறுத்தான். யூத தேசமும் இவ்வாறாகவே இருந்தது. பரிசுத்தமான சத்தியத்தின் பாதுகாவலர் களாக கர்த்தர் யூதர்களை வைத்திருந்தார். தமது கிருபையின் உக்கிராணக் காரர்களாக அவர்களை நியமித்திருந்தார். ஆவிக்குரிய மற்றும் இம்மைக் குரிய ஆசீர்வாதங்களை பிறருக்கு வழங்கும்வண்ணமாக அவைகளை அவர்களுக்கு வழங்கினார். வறுமையில் இருப்பவர்களுக்கு எப்படி உதவுவது என்றும், வாசல்களில் நிற்கும் அந்நியர்களை எப்படி உபசரிப்பது என்றும், பொருளாதார நிலையில் பின்தங்கிவிட்ட சகோதரர்களுக்கு எப்படி உதவுவது என்றும் அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்தன. தங்கள் சுய தேவைகளை சந்திப்பதோடு நின்றுவிடாமல், தேவையில் வாழ்கின்ற பிறனுடன் தங்களிடமிருந்த மிகுதியைப் பகிர்ந்துகொள்ளவேண்டுமென்பதை அவர்கள் நினைவில் வைத்திருக்கவேண்டும். அன்பும், இரக்கமும், கலந்த செயல்களுக்குத்தக்கதாக அவர்களுக்கு ஆசீர்வாதம் உண்டென்று தேவன் வாக்குப்பண்ணி இருந்தார். ஆனால் உவமையில் வரும் ஐசுவரியவான் போன்றே துன்பத்திலிருக்கும் மனிதரின் சரீரப்பிரகாரமான அல்லது ஆவிக்குரிய தேவைகளைச் சந்தித்து, அவர்களுக்கு விடுதலை அளித்து, உதவிக் கரம் நீட்ட மறுத்தனர். பெருமையினால் நிறைந்தவர்களாக தாங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்னும் சிறப்புரிமைகள் பெற்றவர்களென்றும் தங்களைத் தாங்களே பாராட்டிக்கொண்டிருந்தனர். ஆயினும், மெய்யாக அவரைத் தொழுதுகொள்ளவோ அவருக்குச் சேவைசெய்யவோ இல்லை. தேவ கிருபையின்மீது சாராமல், தங்களை ஆபிரகாமின் புத்திரரென்ற காரியத்தில் முழுமையாகச் சார்ந்திருந்தனர். "நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம்" (யோவா. 8:33) என்று பெருமையுடன் கூறினர். இக்கட்டான நேரம் வந்தபோது, அவர்கள் தேவனைவிட்டு முற்றிலுமாக தங்களை விலக்கிக்கொண்டனரென்றும், ஆபிரகாமே தங்களுக்கு தேவனாக இருப்பதாக எண்ணினவர்களைப்போன்று, ஆபிரகாமின்மீது தங்களது நம்பிக்கையை வைத்தனரென்பதும் வெளிப்பட்டது. (24)

இருள் சூழ்ந்திருக்கும் யூத ஜனங்களுடைய மனங்களில் ஒளிவீசச் செய்ய கிறிஸ்து ஏக்கத்தோடு இருந்தார். அவர் அவர்களை நோக்கி: "நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால், ஆபிரகாமின் கிரியைகளைச்

செய்வீர்களே. தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள். ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே" (யோவா. 8:39,40) என்று அவர்களுக்குக் கூறினார். (25)

வம்சவரலாற்றிற்கு கிறிஸ்து முக்கியத்துவம் அளிக்கவில்லை. ஆவிக்குரிய தொடர்பானது இயற்கையான தொடர்புகளையும் அகற்றிவிடக்கூடிய உரிமைகொண்டதென்று அவர் எடுத்துரைத்தார். தாங்கள் ஆபிரகாமின் சந்ததியாரென்று யூதர்கள் உரிமைகொண்டாடினர். ஆனால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்யத் தவறியதினால், அவனுடைய உண்மையான பிள்ளைகளாகத் திகழும் பாக்கியத்தை இழந்தனர். எவர்கள் ஆவிக்குரிய ரீதியில் ஆபிரகாமுடன் இசைவாக இருந்து, தேவ சத்தத்திற்குச் செவிகொடுக்கிறார்களோ அவர்கள் மாத்திரமே அவனுடைய உண்மையான சந்ததியாராகக் கருதப்படுவர். மனிதரால் மிகவும் தாழ்வாக மதிக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்தவனாக அந்தப் பிச்சைக்காரன் இருந்தபோதிலும், அவன் ஆபிரகாமால் மிகவும் நெருங்கிய நண்பனாகவும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குத் தகுதி உள்ளவனென்றும் கிறிஸ்து அங்கீகரித்தார். (26)

வாழ்வின் அனைத்து செல்வங்களாலும் அந்த செல்வந்தன் சூழப் பட்டிருந்தபோதிலும், எங்கு தேவன் இருக்கவேண்டுமோ அந்த இடத்தில், ஆபிரகாமை வைத்து எண்ணுமளவிற்கு புத்தியற்றவனாக இருந்தான். தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த மிகவும் உயர்ந்த சிறப்புரிமைகளை உண்மையிலேயே பாராட்டி, தன்னுடைய உள்ளத்தையும் இதயத்தையும் உருவாக்கத்தக்கதாக பரிசுத்த ஆவியானவரை அனுமதித்திருந்திருப்பானேயானால் அவன் முற்றிலும் வித்தியாசமான நிலையில் இருந்திருப்பான். அவன் பிரதிநிதித்துவம்செய்த அவன் தேசமும் அவ்வண்ணமே இருந்தது. தெய்வீக அழைப்பிற்கு அவர்கள் செவிசாய்த்திருந்தால், அவர்களுடைய எதிர்காலம் முற்றிலும் வித்தியாசமாக இருந்திருக்கும். உண்மையான ஆவிக்குரிய பகுத்தறிவை வெளிப்படுத்தி யிருப்பார்கள். அவர்கள் பெற்றிருந்த வழிவகைகளை தேவன் பெருக்கிக் கொடுத்திருப்பார். இந்த உலகம் முழுவதையும் சத்திய ஒளியால் நிறைக்கவும் ஆசீர்வதிக்கவும் அந்த வளங்கள் போதுமானதாக இருந்திருக்கும். ஆனால் அவர்களோ தங்கள் முழு ஜீவியமும் சீர்குலையும்வகையிலே, கர்த்தர் அவர்களுக்கு வகுத்திருந்த திட்டத்திலிருந்து மிகவும் தூரமாக விலகிச்சென்று விட்டனர். உண்மையான, நீதியுள்ள உக்கிராணக்காரர்களாயிருந்து, தேவன் தங்களுக்கு வழங்கியிருந்த ஈவுகளை பயன்படுத்தத் தவறினர். நித்தியத் திற்கடுத்த காரியங்களை நோக்கத் தவறினர். கர்த்தருக்கு உண்மையற்ற வர்களாக ஜீவித்ததினால், தேசம் முழுவதும் அழிவைச் சந்தித்தது. (27)

எருசலேம் நகரம் அழிக்கப்படும்போது, யூதர்களுக்கு தாம் விடுத்திருந்த எச்சரிப்பை அவர்கள் நினைத்துப்பார்க்க நேரிடும் என்பதை இரட்சகர் அறிந்திருந்தார். அவ்வண்ணமே அது நடந்தேறியது. துன்பமும், பசியும், பேரழிவும், வேதனையும், எருசலேம்மீது வந்தபோது அவர்கள் கிறிஸ்துவின் வார்த்தைகளையும், உவமைக்கான அர்த்தத்தையும் விளங்கிக்கொண்டனர். தேவன் அவர்கள் வசம் கொடுத்திருந்த வெளிச்சத்தை உலகம் பிரகாசிக்கும் வகையில் பயன்படுத்தாமல், அதை அலட்சியம் செய்ததினிமித்தமாக அழிவையும் துன்பத்தையும் தங்கள்மீது வருவித்துக்கொண்டார்கள். (28)

### கடைசி நாட்களில்!

செல்வந்தனது வரலாற்றின் இறுதிக்கட்டத்தின்மூலமாக இவ்வுலக வரலாற்றின் இறுதிகாட்சிகள் சித்தரிக்கப்படுகின்றன. ஐசுவரியவான் தன்னை ஆபிரகாமின் குமாரனென்று உரிமைகொண்டாடியபோதிலும், அவனுக்கும் ஆபிரகாமிற்குமிடையே ஒரு மாபெரும் கடக்கமுடியாத பிளவு ஒன்று இருந்தது. அதாவது, தவறான முறையில் வளர்த்துக்கொண்ட ஒரு குணமே அந்த பிளவாகும். ஆபிரகாம் தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்து, அவை களுக்குக் கீழ்ப்படிந்து, அவரைச் சேவித்தான். ஆனால் ஐசுவரியவானோ தேவனைக்குறித்தும் துன்பமடையும் மனுக்குலத்தின் தேவைகள்குறித்தும் கவலையற்றவனாக இருந்தான். அவனுக்கும் ஆபிரகாமிற்குமிடையே காணப்பட்ட பிளவு கீழ்ப்படியாமையின்நிமித்தமாக ஏற்பட்டதாகும். இன்றும் அநேகர் அதே வழியில் சென்றுகொண்டிருக்கின்றனர். சபை அங்கத்தினர்களா யிருந்தும் மனந்திரும்பாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சபை ஆராதனைகளில் கலந்துகொண்டு சங்கீதக்காரன் கூறுவது போன்று: "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது" (சங். 42:1) என்று கூறினாலும், அவர்கள் பொய்யராயிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தேவனுடைய பார்வையில் நீதிமான்களாயிராமல், பாவிகளாகவே காணப்படுகிறார்கள். இவ்வுலக இன்பஞ்சார்ந்த கிளர்ச்சிகளுக்கு ஏங்கிநிற்கும் ஆத்துமாவினாலும் பகட்டை வாஞ்சிக்கும் மனதாலும் தேவனைச் சேவிக்க இயலாது. உவமையில் வரும் ஐசுவரியவான்போன்ற இப்படிப்பட்ட நபர் மாம்ச இச்சையை எதிர்த்துப் போர்செய்ய மனமற்றவராகிவிடுகிறார். உணவிற்கு முக்கியத்துவமளித்து, அதில் திளைக்க ஏங்குகிறார். பாவம் நிறைந்த சூழ்நிலைகளையே அவர் தெரிந்துகொள்கிறார். திடீரென மரணத்தைச் சந்தித்து, சாத்தானிய ஏதுகரங் களோடு இணைந்து, தோழமைகொண்டு வாழ்க்கை முழுவதிலும் அதின் விளைவாக அமைத்துக்கொண்ட தீய குணங்களோடு கல்லறைக்குச் செல்கிறார். நன்மையான அல்லது தீமையான எதையும் தெரிவுசெய்து கொள்வதற்கான வல்லமை அந்த நபருக்குக் கிடையாது. ஏனெனில்

சங்கீதக்காரன் கூறுவதுபோன்று: "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்"–சங். 146:4. "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்துபோயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை"–பிரசங்கி 9:5,6. (29)

தேவனுடைய சத்தம் மரித்தோரை எழும்பப்பண்ணும்போது, மரித்துப் போன அந்த ஐசுவரியவான் உயிரோடிருக்கையில் விரும்பி ஈடுபட்ட பாவ இச்சை உணர்வுகளோடும், விருப்பு, வெறுப்புகளோடும் எழுந்திருப்பான். மனிதன் தனக்குக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் ஒவ்வொரு வாய்ப்பையும் தன்னை மீண்டும் புதுப்பிக்கத்தக்கதாக தேவன் எந்த அற்புதத் தையும் செய்யமாட்டார். ஐசுவரியவான் தன் வாழ்நாட்களில் தேவனில் களிகூரவோ அவருக்குச் சேவைசெய்வதில் மகிழ்ச்சிகொள்ளவோ இல்லை. அவனுடைய குணம் தேவனுடன் இசைந்திராததினால், அவன் பரலோகக் குடும்பத்தில் மகிழ்ச்சியோடு இருக்கமுடியாது. (30)

இன்றைய நாட்களில் ஒரு கூட்டத்தினர் சுயநீதியுடையவர்களாக இருக்கின்றனர். இவர்கள் பெருந்தீனிக்காரர்களாகவோ, குடிகாரர்களாகவோ, தேவனை மறுக்கிறவர்களாகவோ இராதபோதிலும், தேவ மகிமைக்கென வாழாமல், தங்களுக்காகவே வாழ்வதில் விருப்பமுடையவர்களாக இருக்கி றார்கள். அவர்களுடைய சிந்தையில் தேவன் இல்லாதபடியினாலே, அவர்கள் அவிசுவாசிகளோடு வைத்து எண்ணப்படுகிறார்கள். தேவப்பட்டணத்தின் வாசல்வழியாக அவர்கள் பிரவேசிப்பது சாத்தியமென்று நாம் வைத்துக் கொள்வோம். (அவர்கள் பிரவேசிக்கமுடியாது) எனினும், அவர்களுக்கு ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்திட எந்த உரிமையும் கிடையாது. ஏனெனில் தேவனுடைய பத்துக்கட்டளைகளும் அவற்றின் கட்டுப்படுத்தும் உரிமையோடு அவர்கள்முன் வைக்கப்பட்டபோது, அதற்கு அவர்கள் கீழ்ப்படியமுடியாதென்று கூறிவிட்டார்கள். இங்கே அவர்கள் தேவனைச் சேவியாததால், இதற்குப் பின்னர் அவரைச் சேவிக்கும் தருணம் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அவரது பிரசன்னத்திலே அவர்களால் வாழமுடியாது. எனவே, பரலோகத்தைவிட வேறு எந்த இடமானாலும் பரவாயில்லை என்று எண்ணுவார்கள். (31)

அவரது குணமாகிய அவரது கிருபையைப் பெற்றுக்கொள்வது என்பதே கிறிஸ்துவைப்பற்றி கற்றுக்கொள்வது என்பதின் பொருளாகும்.

இந்த பூமியில் வாழும்போது தேவனால் வழங்கப்பட்ட அருமையான சந்தர்ப்பங்களையும் பரிசுத்த செல்வாக்குகளையும் பாராட்டி, அவைகளை பயன்படுத்தாதவர்கள் பரலோகத்தின் தூய்மையான வழிபாட்டில் பங்குகொள்ளத் தகுதியுடையவர்களாக இருக்கமாட்டார்கள். அவர்களது குணங்கள் தெய்வீக மாதிரியின்படி வடிவமைக்கப்படவில்லை. தங்களது சொந்த அலட்சியத்தினாலே எதை வைத்தும் பாலம்போட முடியாத அளவிற்கு, ஒரு பெரும் பிளவை ஏற்படுத்திவிட்டார்கள். அவர்களுக்கும் நீதிமான்களுக்குமிடையே ஒரு மாபெரும் பிளவு வைக்கப்பட்டாயிற்று. (32) ★

# 22

# சொல்வதும் செய்வதும்!

**(மூலநூல் : பக்கங்கள் 257–283)**
**மத்தேயு 21:28–32**

"ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே நீ போய் இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் வேலைசெய் என்றான். அதற்கு அவன்: மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டு போனான். இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான்; அதற்கு அவன்: போகிறேன் ஐயா, என்று சொல்லியும், போகவில்லை. இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார்; அதற்கு அவர்கள்: மூத்தவன்தான் என்றார்கள்"–மத்தேயு 21:28–31. (1)

மலைப்பிரசங்கத்தின்போது "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத். 7:21) என்று கிறிஸ்து கூறினார். உண்மையின் பரீட்சை வார்த்தைகளினாலல்லாமல் கிரியைகளினால்தான் நிர்ணயம் செய்யப்படுகிறது. கிறிஸ்து மற்றவர்களைவிட நீங்கள் விசேஷித்துப் பேசுகிறது என்ன? என்று கேட்காமல் "நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன?" (மத்தேயு 5:47) என்று கேட்கிறார். கிறிஸ்துவின் வார்த்தைகள் அனைத்தும் அர்த்தம் நிறைந்தவைகளாக இருக்கின்றன. "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்"–யோவான் 13:17. வார்த்தைகளுடன் அதற்கேற்ற பொருத்தமான கிரியைகள் பின்தொடராவிட்டால், அவைகளால் எந்த பயனுமில்லை. இரு மகன்களின் உவமை இதனையே நமக்குக் கற்றுத்தருகிறது. (2)

மரிப்பதற்கு முன்பு கடைசிமுறையாக கிறிஸ்து எருசலேமிற்கு வந்தபோது, இந்த உவமையைக் கூறினார். தேவாலயத்தில் விற்றவர்களையும்

வாங்கியவர்களையும் அவர் விரட்டியிருந்தார். தேவவல்லமையோடு கடும் வார்த்தைகளால் அவர்களுடைய இதயத்தைத் தொடும்படி பேசினார். மனதிலே திகைப்பும் பயங்கரமும் நிறைந்து எந்த சாக்குப்போக்கும் எதிர்ப்பும் தெரிவிக்காமல், அவரது கட்டளைக்கு அவர்கள் கீழ்ப்படிந்தார்கள். (3)

திகைப்பிலிருந்து மீண்ட பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் தேவாலயம் திரும்பியபோது, நோயாளிகளையும் மரிக்கும் தருணத்தில் உள்ளவர்களையும் கிறிஸ்து குணமாக்குவதைப் பார்த்தார்கள். துதியின் கீதத்தையும் ஆனந்தக் களிகூருதலின் சத்தத்தையும் அவர்கள் கேட்டார்கள். சரீர சுகம்பெற்ற அனைத்துக் குழந்தைகளும் குருத்தோலைகளை அசைத்து தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்று பாட, குணமாக்கும் மாபெரும் வைத்தியரை சிறுகுழந்தைகள் தங்களது மழலை மொழியால் துதித்துக் கொண்டிருந்தார்கள். குணமாக்குதலினால் ஏற்பட்ட அற்புதக்காட்சிகள் தப்பெண்ணத்தையும் பொறாமையையும் மேற்கொள்ளும் அளவு ஆசாரியர் களுக்கும் அதிபதிகளுக்கும் போதுமானதாக இருக்கவில்லை. (4)

மறுநாள் கிறிஸ்து தேவாலயத்தில் பிரசங்கித்துக்கொண்டிருந்தபோது பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அவரிடத்தில் வந்து: "நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்கு கொடுத்தவர் யார்" என்று கேட்டார்கள். (5)

பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் கிறிஸ்துவின் வல்லமையைக் குறித்த மறுக்க இயலாத ஆதாரத்தை ஏற்கெனவே கண்டிருந்தனர். தேவாலயத்தை அவர் சுத்திகரித்தபோது, பரலோக அதிகாரம் அவரது முகத்தில் பளிச்சிடுவதை அவர்கள் கண்டார்கள். அவர் வாயிலிருந்து அதிகாரம் நிறைந்த வார்த்தைகள் வெளிப்பட்டபோது, அவர்களால் அவருக்கு எதிர்பேச இயலவில்லை. மீண்டும் தனது அற்புதமான குணமளிக்கும் செயல்களினால் அவர்களது கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். மறுக்க இயலாத வகையில் தமது அதிகாரத்துக்கான ஆதாரத்தை அவர் அவர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பித்தார். ஆனால் அது அவர்கள் விரும்பியிருந்த ஆதாரம் அல்ல. அவருடைய வார்த்தைகளைத் தவறாகப் பொருத்திக்காட்டி, அவருக்கு எதிராக மற்றவர்களைக் கலகத்திற்குத் தூண்டிவிட, கிறிஸ்து தம்மை மேசியாவாக தமது வாயாலேயே அறிவிக்கவேண்டுமென்று அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். அவருடைய செல்வாக்கை அழித்து, அவரைக் கொல்ல விரும்பினர். (6)

தம்மில் தேவனையும் அல்லது தமது கிரியைகளில் தெய்வீக குணத்தையும் அவர்கள் உணராதபோது, தாம்தான் கிறிஸ்து என்று அவர் கொடுக்கிற அவரது சொந்த சாட்சியையும் அவர்கள் நம்பமாட்டார்கள்

என்று இயேசு அறிந்திருந்தார். அவர்மீது சுமத்தவேண்டுமென்று அவர்கள் நம்பியிருந்த காரியத்தை அவர் தமது பதிலாலே தவிர்த்து, அந்தக் கண்டனத்தை அவர்கள்மீதே திருப்புகிறார். "நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன், அதை எனக்குச் சொல்லுவீர்களானால், நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லுவேன். யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ?" என்று வினவினார். (7)

இந்தக் கேள்வியால் குழப்பமடைந்த ஆசாரியர்களும் அதிகாரிகளும், "தேவனால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசிக்கவில்லை என்று நம்மைக் கேட்பார்; மனுஷரால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், ஜனங்களுக்குப் பயப்படுகிறோம், எல்லாரும் யோவானைத் தீர்க்கதரிசியென்று எண்ணுகிறார்களே என்று, தங்களுக்குள்ளே ஆலோசனைபண்ணி, இயேசுவுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்குத் தெரியாது என்றார்கள். அப்பொழுது அவர்: நானும் இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேன்" என்றார். (8)

எங்களுக்குத் தெரியாதென்ற அவர்களது பதில் உண்மைக்குப் புறம்பானது. தங்களது நிலைமையை விளங்கிக்கொண்ட ஆசாரியர்கள் தங்களை மறைத்துக்கொள்ளும்படி பொய்யுரைத்தனர். எந்த ஒருவருடைய அதிகாரத்தை இப்பொழுது அவர்கள் கேள்விகேட்டுக்கொண்டிருந்தார்களோ அந்த ஒருவருடைய சாட்சியைக் கூறுவதற்காக யோவான் ஸ்நானன் வந்திருந்தான். அவரைச் சுட்டிக்காட்டி: "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று அவன் கூறியிருந்தான். யோவான் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அதன் பின்னர் கிறிஸ்து ஜெபித்துக்கொண்டிருந்தபோது வானங்கள் திறக்கப்பட்டது; தேவனுடைய ஆவியானவர் புறாவைப்போல வந்து அவர்மீது அமர்ந்தார். வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது"—மத். 3:16,17. (9)

மேசியாவைக்குறித்த தீர்க்கதரிசனங்களை யோவான் தெளிவுபட ஜனங்களுக்கு எடுத்துக்கூறியதை நினைவுகூர்ந்தும், இயேசு ஞானஸ்நானம் எடுத்தபோது நடைபெற்ற காட்சியை நினைவுகூர்ந்தும், யோவான் கொடுத்த ஞானஸ்நானம் தேவனால் உண்டாயிருந்ததென்று கூற ஆசாரியர்களும் அதிபதிகளும் துணியவில்லை. யோவான் ஒரு தீர்க்கதரிசி என்று நம்பினாலும், அவ்வாறு ஒத்துக்கொள்வார்களேயானால், நாசரேத் ஊரைச் சேர்ந்த இயேசு தேவனுடைய குமாரனென்று அவன் கொடுத்த சாட்சியை எப்படி அவர்களால்

மறுக்கமுடியும்? அதே வேளையில், அவன் கொடுத்த ஞானஸ்நானம் மனுஷரால் உண்டாயிற்றென்று அவர்களால் கூறமுடியவில்லை. ஏனெனில், ஜனங்கள் யோவானை ஒரு தீர்க்கதரிசியென்று நம்பினர். ஆகவே அவர்கள்: "எங்களுக்குத் தெரியாது" என்றார்கள். (10)

அந்தச் சந்தர்ப்பத்திலே இரு குமாரர்களுடைய தகப்பனாரைப்பற்றிய உவமையை கிறிஸ்து அவர்களுக்குச் சொன்னார். தகப்பன் தன்னுடைய மூத்த குமாரனிடத்தில் வந்து: "மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலை செய்" என்றான். மகன் பிரதியுத்தரமாக: "மாட்டேன்" என்று உடனே பதிலுரைத்தான். அவன் கீழ்ப்படிய மறுத்து, தன் பொல்லாங்கான வழிகளில் அல்லது தோழமைகளோடும் தொடர்ந்து ஜீவித்தான். ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டு, தகப்பன் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தான். பின்பு தகப்பன் தன் இளைய மகனிடம் சென்று: "மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலை செய்" என்று அதே கட்டளையைக் கொடுத்தான். அந்த மகன் "போகிறேன் ஐயா," என்று சொல்லியும் போகவில்லை. (11)

இந்த உவமையில் வரும் தகப்பன் தேவனுக்கு நிழலாகவும், திராட்சத் தோட்டம் சபைக்கு நிழலாகவும் இருக்கிறது. இரு மகன்கள் இரு வகுப்பு மக்களைக் குறிக்கிறார்கள். வெளியரங்கமாக மீறி, தேவபக்தி அற்றவர்களாக, கட்டுப்பாடென்ற நுகத்திற்கு உட்பட மறுத்து, தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய மனமில்லாதவர்களாக ஜீவித்த ஜனங்களின் பிரதிநிதியாக மூத்தமகன் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறான். ஆனால் இவர்களில் அநேகர் பின்னர் மனந்திரும்பி, தேவனுடைய அழைப்பிற்கு கீழ்ப்படிந்தனர். "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத்தேயு 3:2) என்று யோவான் ஸ்நானன் சுவிசேஷ அழைப்பைக் கொடுத்தபோது, அவர்கள் மனந்திரும்பி தங்கள் பாவங்களை அறிக்கைசெய்தனர். (12)

"போகிறேன் ஐயா" என்று சொல்லியும் போகாமலிருந்த மகனிடத்தில் பரிசேயர்களின் குணம் வெளிப்பட்டது. இந்த மகனைப்போன்று யூதத் தலைவர்கள் சுயதிருப்தியுடையவர்களாயும் மனந்திரும்பாதவர்களாயும் இருந்தனர். யூத தேசத்தாரின் மார்க்கசம்பந்தமான ஒரு ஜீவியம் மாய்மாலமாக மாறியிருந்தது. தேவனுடைய குரல் சீனாய் மலையில் தொனித்தபோது, ஜனங்களனைவரும் அதற்குக் கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணினார்கள். அவர்கள் "போகிறேன் ஐயா" என்று சொல்லியும் போகவில்லை. கிறிஸ்து நேர்முகமாக அவர்களிடம் சென்று, பிரமாணத்தின் கொள்கைகளை அவர்களுக்கு விளக்கிச்சொன்னபோது, அவரைப் புறக்கணித்தனர். கிறிஸ்து தமது அதிகாரத்தைக்குறித்தும், தெய்வீக வல்லமையைக்குறித்தும்

ஏராளமான ஆதாரங்களை யூதத் தலைவர்களுக்குக் கொடுத்திருந்தார். அவர்கள் அதை மனதிலே சரியென்று ஏற்றுக்கொண்டபோதிலும், ஆதாரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். கீழ்ப்படிதலுக்கு நேராக வழிநடத்தும் ஆவி அவர்களிடம் இல்லையென்பதால் அவர்கள் தொடர்ந்து அவிசுவாசத்தில் இருந்தார்களென்பதை "உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள்… மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" (மத்தேயு 15:6,9) என்று அவர்களைக்குறித்து கிறிஸ்து கூறினார். (13)

கிறிஸ்து தமக்கு முன்பாக நின்றுகொண்டிருந்த வேதபாரகர்களுக்கும் பரிசேயர்களுக்கும், ஆசாரியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இரு மகன்கள் பற்றிய உவமையைக் கூறியபின்னர், அவர்களைப் பார்த்து:"இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன்" என்று கேள்வி ஒன்றை எழுப்பினார். தங்களையும் மறந்தவர்களாக பரிசேயர்கள்: "மூத்தவன்தான்" என்று பதில் கூறினார்கள். தங்களுக்கு எதிராக கிறிஸ்து கூறவிருக்கும் காரியங்களை சற்றும் அறியாதவர்களாக, இந்தப் பதிலை அவருக்குக் கூறினார்கள். அப்பொழுது கிறிஸ்துவின் உதடுகளினின்று கண்டிப்பின் வார்த்தைகள் வெளிவந்தது. "ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும் நீங்கள் அவனை விசுவாசிக்க வில்லை; ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை" என்றார். (14)

யோவான் ஸ்நானன் சத்தியத்தை பிரசங்கித்தபோது, பாவிகள் உணர்த்தப்பட்டு மனந்திரும்பினர். சுயநீதிகொண்டவர்களாக அன்பின் எச்சரிப்பை ஏற்க மறுத்தவர்களுக்கு முன்பாக இந்த ஜனங்கள் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பார்கள். ஆயக்காரர்களும் வேசிகளும் சத்தியத்தின் வழியை அறியாதவர்களாயிருந்தனர். ஆனால் கல்வியறிவுகொண்ட இந்த மனிதர்களோ சத்தியத்தை நன்கு அறிந்திருந்தனர். ஆயினும், தேவனுடைய பரதீசிற்கு கொண்டுசெல்லும் பாதையில் நடக்க மறுத்தனர். நித்தியஜீவனுக்காக ஜீவநற்கந்தமாக இருப்பதற்குப் பதிலாக, மரணத்திற்குக் கொண்டு செல்லும் மரணவாசனையாக சத்தியம் மாறிவிட்டது. தங்களுடைய பாவநிலையை அருவருத்து வெறுத்த பகிரங்கமான பாவிகள்கூட, யோவானின் கையிலே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். ஆனால்

இந்தப் போதகர்களோ மாய்மாலக்காரர்களாக இருந்தனர். சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்கு அவர்களுடைய பிடிவாதமான இருதயங்களே அவர்களுக்குத் தடையாக இருந்தன. தேவ ஆவியின் உணர்த்துதலை அவர்கள் எதிர்த்தனர். தேவனுடைய கற்பனைகளுக்கும் செவிசாய்க்க மறுத்தனர். கிறிஸ்து அவர்களைப் பார்த்து: நீங்கள் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று கூறாமல், அதில் பிரவேசிப்பதற்கு—அவர்கள் சந்திக்கும் தடைகளுக்கு அவர்களே காரணமென்பதை எடுத்துக் காண்பித்தார். யூதத் தலைவர்களுக்கு வாசல் இன்னமும் திறந்தே இருந்தது. அழைப்பு இன்னமும் அவர்களுக்கு விடுக்கப்பட்டது. அவர்கள் உணர்வடைந்து மனந்திரும்பவேண்டுமென்று கிறிஸ்து ஏக்கத்தோடிருந்தார். (15)

இஸ்ரவேலின் ஆசாரியர்களும் மூப்பர்களும் மதச் சடங்குகளை நிறைவேற்றுவதில் தங்கள் ஜீவியநாட்களைக் கழித்தனர். சடங்குகளுக்கும் உலகப்பிரகாரமான வாழ்க்கைக்கும் சம்பந்தமே கிடையாதென்று கருதினர். அவர்களது ஜீவியங்கள் முற்றிலுமாக சமயப்பற்றார்வம் வாய்ந்ததாக இருக்கவேண்டுமெனக் கருதப்பட்டது. ஆனால் பக்திமிக்கவர்களென்றும் சமயப்பற்றார்வம் மிக்கவர்கள் என்றும் மனிதர்களால் கருதப்படவேண்டு மென்று, அவர்கள் காணும்படியாக தங்களது சடங்காச்சாரங்களை நிறைவேற்றிவந்தார்கள். தேவனுக்குக் கீழ்ப்படிவதாகச் சொல்லிக்கொண்டு, அவருக்குக் கீழ்ப்படிய மறுத்தனர். எந்த சத்தியத்தைப் போதிப்பதாகச் சொல்லிக்கொண்டார்களோ அந்த சத்தியத்தின்படி அவர்கள் செய்யவில்லை. (16)

மேன்மையான தீர்க்கதரிசிகளின் பட்டியலில் யோவான் ஸ்நானனும் ஒருவனென்று கூறி, அவன் தேவனால் அனுப்பப்பட்ட தூதன் என்பதற்காக போதிய சான்றையும் தம்முடைய பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்களுக்கு கிறிஸ்து எடுத்துக் காண்பித்தார். அவனுடைய வார்த்தைகள் வனாந்தரத்தில் வல்லமையோடு தொனித்தது. ஆசாரியர்கள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் நிலவிய பாவங்களை கண்டிப்போடு தயக்கமின்றி கடிந்துகொண்டான். மேலும் தேவனுடைய ராஜ்யத்தின் ஊழியங்களைப்பற்றி அவர்களுக்கு வற்புறுத்திக் கூறினான். தங்களுக்கு நியமிக்கப்பட்ட வேலையைச் செய்யாமல், அதை மறுத்து, பிதாவின் அதிகாரத்தைப் புறக்கணித்த அவர்களது பாவத்தை அவர்களுக்குச் சுட்டிக்காட்டினான். பாவத்துடன் சமரசம்செய்துகொள்ளாததினால், பலர் தங்கள் அநீதியான வாழ்வைவிட்டுத் திரும்பினர். யூத இனத் தலைவர்களின் போதனைகள் உண்மையானதாக இருந்திருப்பின், அவர்கள் யோவானின் சாட்சியை ஏற்று, கிறிஸ்துவை மேசியாவாக அங்கீகரித்திருப்பார்கள்; ஆனால் மனந்திரும்புதலுக்கேற்ற

நீதிக்குரிய கனிகள் அவர்களிடம் காணப்படவில்லை. அவர்கள் வெறுத்து ஒதுக்கிய ஜனங்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க ஆயத்தமாகக் காணப்பட்டார்கள். (17)

உவமையில் வரும் மகன், “போகிறேன் ஐயா” என்று கூறியதி னிமித்தம் உண்மையும் கீழ்ப்படிதலும் உள்ளவன்போல் தன்னைக் காட்டிக் கொண்டான். ஆனால் காலம் அவனது வேஷத்தை வெளிப்படுத்திற்று; அதுபோல் பரிசேயர்களும் தங்கள் பரிசுத்தத்தைக்குறித்துப் பெருமை பாராட்டியபோதிலும், பரிசோதனையின்போது அவர்களது குறை வெளிப்பட்டது. தங்களது ஆர்வத்தின்படி அவ்வாறு செய்யவேண்டியதிருக்க அவர்களே பிரமாணத்தின் கோரிக்கைகளை மிகவும் கடினமுள்ளவைகளாக ஆக்கிவிட்டார்கள். அந்தக் கட்டளைகளுக்கான கீழ்ப்படிதல் அவர்களிடத்தில் எதிர்பார்க்கப்பட்டபோது, தங்கள் தந்திரமான சாதுர்யமான சொல்திறனால் தேவ கற்பனையின் வல்லமையை மறுத்தனர். இவர்களைக்குறித்து கிறிஸ்து: “அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்” (மத்தேயு 23:3) என்று கூறினார். இவர்கள் தேவனையும் மனிதனையும் மெய்யாக நேசிக்க வில்லை. இவ்வுலகத்தை ஆசீர்வதிக்கும்பொருட்டு தமது உடன் ஊழியர்களாக இருக்கும்படி தேவன் இவர்களை அழைத்தார். வெளியரங்கமாக இவர்கள் அழைப்பை ஏற்றனர்; ஆனால் செயலில் அவருக்குக் கீழ்ப்படிய மறுத்தனர். தங்கள் சுயபுத்தியின்மீது சார்ந்து, தங்களுடைய நற்கிரியைகளைக்குறித்து பெருமைபாராட்டி, தேவனுடைய கட்டளைகளை புறம்பே வைத்தனர். தேவன் நியமித்திருந்த பணியைச் செய்ய மறுத்தனர். கர்த்தருக்கு எதிராக அவர்கள் காட்டிய மீறுதலினால் அந்தக் கீழ்ப்படியாத தேசத்தோடு கொண்டிருந்த உறவைத் துண்டித்துக்கொள்ள அவர் ஆயத்தமாகிவிட்டார். (18)

இத்தகைய சுயநீதியைப் பற்றியிருப்பவர்கள் இந்த அபாயகரமான வஞ்சனையைப் பிடித்துக்கொண்டிருப்பதால் ஏற்படும் விளைவுகளைச் சந்திக்கும்படி விட்டுவிடப்படுவார்கள். பலர் இன்று தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதாகக் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் மற்றவர்களிடத்திற்குப் பாய்ந்தோடத்தக்கதான தேவ அன்பு அவர்களது இதயங்களில் காணப்படவில்லை. உலகை மீட்கும்படியாக கிறிஸ்து அவர்களை தம்முடன் இணைந்து பணியாற்றும்படி அழைக்கிறார். ஆனால் அவர்களோ “போகிறேன் ஐயா” என்று சொல்வதோடு திருப்தி யடைந்துவிடுகிறார்கள். அவர்கள் போகிறதில்லை. தேவனுடைய பணியைச் செய்பவர்களோடு இவர்கள் ஒத்துழைக்கிறதில்லை; இவர்கள் சோம்பேறிகளாக இருக்கின்றனர். கீழ்ப்படியாத மகனைப்போல் தேவனிடம்

பொய் வாக்குறுதிகளை கொடுக்கின்றனர். சபையின் பக்திவிநயமான உடன்படிக்கையை தங்கள்மீது ஏற்றுக்கொள்வதின்மூலம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய பணியைச் செய்வதாக வாக்குக் கொடுத்தும் அதை நிறைவேற்றாது விட்டுவிடுகிறார்கள். தாங்கள் தேவபுத்திரரென்று உரிமைகோருகிறார்கள். எனினும், தங்கள் ஜீவியத்திலும் குணத்திலும் அந்த உறவை மறுதலிக்கிறார்கள். தேவசித்தத்திற்கு அவர்கள் தங்களை ஒப்புக்கொடுப்பதில்லை. அவர்கள் பொய் ஜீவியம் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். (19)

கீழ்ப்படிதலின் வாக்குறுதியை நிறைவேற்றுவதுபோல் காண்பிக் கிறார்கள். ஆனால் அதில் எந்தவிதமான தியாகமும் காணப்படுவதில்லை. சுயத்தை வெறுத்தல், சுயத்தைத் தியாகம்செய்தல், சிலுவையைச் சுமத்தல் ஆகியவைகளைச் சந்திக்க நேரும்போது பின்வாங்கிவிடுகின்றார்கள். கடமை குறித்த உணர்வு அவர்களைவிட்டுவிலகி, தேவப்பிரமாணங்களை மீறுவதை ஒரு பழக்கமாக்கிவிடுகின்றனர். தேவனுடைய வார்த்தைகளை அவர்கள் காதுகள் கேட்டும், அவைகளின் ஆவிக்குரிய போதனைகளை புரிந்துகொள்ளும் திறன் அவர்களைவிட்டு விலகிவிடுகிறது. இருதயம் கடினப்பட்டு, மனசாட்சி மழுங்கிவிடுகிறது. கிறிஸ்துவுக்கு எதிராக திட்டமான ஒரு எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படையாகக் காட்டாதிருப்பதினால், நீங்கள் சேவை செய்துகொண்டிருப்பதாக நினைத்துக்கொள்ளவேண்டாம். அப்படி நாம் நினைத்தால், நமது சொந்த ஆத்துமாக்களை நாமே வஞ்சிக்கிறவர்களாக இருப்போம். தேவன் நமக்கு வழங்கியிருக்கும் நேரத்தைக்கொண்டு, பொருட்களைக்கொண்டு, ஈவுகளைக்கொண்டு, அவருக்குச் சேவைசெய்ய மறுக்கும்போது, நாம் அவருக்கு விரோதமாகச் செயல்படுகிறோம். (20)

கிறிஸ்தவர்களென்று தங்களை அழைத்துக்கொள்பவர்களுடைய கவனமற்ற—தூக்கம் நிறைந்த—சோம்பல் குணத்தை ஆயுதங்களாகப் பயன்படுத்தி, சாத்தான் அநேக கர்த்தருடைய பிள்ளைகளை தன்னிடமாகச் சேர்க்கிறான். கிறிஸ்துவிற்காக எந்த வேலையையும் செய்யாமல் இருக்கும்போதே, தாங்கள் அவரது பக்கத்தில் இருப்பதாக அநேகர் எண்ணிக்கொள்ளுகிறார்கள். இத்தகைய மக்கள், திட்டமிட்டு தளத்தை ஆக்கிரமித்து பல அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும்படி சாத்தானை அனுமதிக்கிறார்கள். எஜமானருக்காக கடின உழைப்பாளிகளாக இருக்க தவறிவிட்டதினாலும், செய்யப்பட்டிருக்க வேண்டிய கடமைகளை செய்யாமல் விட்டுவிட்டதினாலும், பேசப்பட்டிருக்கவேண்டிய வார்த்தைகளை பேசாமல் இருந்துவிட்டதினாலும் இவர்கள் அவருக்கு விரோதமாகச் செயல்படுகிறார்கள். இறுதியில் எந்த ஆத்துமாக்களை கிறிஸ்துவிற்காக ஆதயாம்செய்திருக்க

முடியுமோ அந்த ஆத்துமாக்களை சாத்தான் அடக்கியாளும்படி அனுமதித்து விடுகிறார்கள். (21)

சோம்பலுக்கும், சுறுசுறுப்பின்மைக்கும், இடமளிக்கின்ற நாம் ஒருபோதும் இரட்சிக்கப்படமுடியாது. உண்மையாகவே மனந்திரும்பிய ஒரு நபர் செயலற்ற—பயனற்ற வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருப்பதென்ற காரியம் இருக்கவே முடியாது. நாம் ஏதோ ஒரு வகையில் சறுக்கி மெல்ல மெல்ல பரலோகம் சென்று அடைந்துவிடமுடியாது. சோம்பேறி அதில் பிரவேசிக்க இயலாது. பரலோகத்திற்குள் பிரவேசிக்க நாம் தீவிரமாக முயற்சிசெய்யாவிடில், அங்கு பிரவேசிப்பதற்காக பிரமாணங்களில் என்ன அடங்கியிருக்கிறதென்பதை ஊக்கத்தோடு கற்றுக்கொள்ள வகைதேடாவிடில், அந்த இராஜ்யத்தில் பங்கடைய நாம் தகுதியற்றவர்களாகிவிடுவோம். பூலோகத்தில் தேவனோடு ஒத்துழைக்காதவர்கள் பரலோகத்திலும் அவரோடு ஒத்துழைக்கமாட்டார்கள். இத்தகையோரை பரலோகம் அழைத்துச்செல்வது பாதுகாப்பான காரியமல்ல. (22)

தேவனுடைய வார்த்தையை அறிந்து அதற்குக் கீழ்ப்படிய மறுப்பவர்களைக் காட்டிலும், ஆயக்காரர்களும் பாவிகளும் பரலோகத்திற்குள் பிரவேசிக்க அதிக நம்பிக்கையுண்டு. தன் பாவத்தை மறைக்க இயலாது என்பதை உணர்ந்து, ஆவி, ஆத்துமா, சரீரத்தைப் பாவம் கறைபடுத்திக் கொண்டிருக்கிறதென்பதை உணர்பவன், தன் நிலைகுறித்து அதிர்வு கொண்டு, பரலோக இராஜ்யத்தினின்று நித்தியமாகப் பிரிக்கப்பட்டுவிடுவோமோ என்று அச்சம்கொள்வான். தன் அவல நிலையை உணர்ந்து, பாவத்தைப் போக்கும் மாபெரும் மருத்துவரிடம் குணமாக்குதலைப் பெற்றுக்கொள்பவனாக, கிறிஸ்துவை நோக்கிச் செல்வான். அவரும், “என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை” (யோவான் 6:37) என்று கூறி, அவனைச் சேர்த்துக்கொள்ளுவார். இத்தகைய ஆத்துமாக்களைத் தமது திராட்சத் தோட்டத்தில் பணியாற்ற கர்த்தர் பயன்படுத்துகிறார். (23)

தகப்பனாரின் கட்டளையை சிறிது நேரம் ஏற்க மறுத்த மகனை கிறிஸ்து ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லை. அதேசமயம் அவனைப் பாராட்டவுமில்லை; கீழப்படிய மறுத்த முதலாவது மகன்போன்று ஜீவிப்பவர்கள் தங்கள் நிலைகுறித்து பெருமிதங்கொள்ள வாய்ப்பில்லை. அவர்களது வெளிப்படையான போக்கு நற்குணமாகக் கருதப்படுவதில்லை. சத்தியத்தாலும், பரிசுத்தத்தாலும் பரிசுத்தமாக்கப்பட்டிருப்பவர்கள் மாத்திரமே கிறிஸ்துவைக்குறித்து தைரியமாகச் சாட்சிபகர முடியும். ஆனால் பாவியால் இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும்போது, அது நிந்திப்பதுபோன்றும் எதிர்த்துநிற்பதுபோன்றும் தேவதூஷணம் செய்யும் அளவிற்கு அணுகுவது

போன்றும் அமைந்துவிடுகிறது. ஒரு மனிதன் மாய்மாலக்காரனாக இல்லையென்ற உண்மை அவனில் பாவமில்லையென்று எந்தவிதத்திலும் குறைத்துக்காட்டாது. பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வரும் வேண்டுகோள்கள் நமது இருதயத்தைத் தொடும்போது, தாமதமின்றி அதற்குச் செவிசாய்ப்பதில் மாத்திரமே நமது ஒரே பாதுகாப்பு இருக்கிறது. "நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலை செய்" என்று அழைப்பு வரும்போது, நாம் உடனே அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். கீழ்ப்படியாமை ஆபத்தை விளைவிக்கும். "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (எபிரெயர் 4:7). மீண்டும் இந்த அழைப்பை நீங்கள் ஒருபோதும் கேட்கமுடியாமல் போகலாம். (24)

ஒரு காலக்கட்டம் வரை நெஞ்சார நேசித்துச் செய்த பாவங்களை மெல்ல மெல்ல—படிப்படியாக—சுலபமாக—விட்டுவிடலாம் என்று எவரும் வீண்பெருமை பேசவேண்டாம். அது அவ்வாறில்லை. மனதார நேசிக்கப்பட்ட ஒவ்வொரு பாவமும் குணத்தைப் பெலவீனப்படுத்தி பழக்கத்தை வலுவடையச் செய்கிறது. சரீரத்தில், மனதில், ஒழுக்கத்தில் சீர்குலைவே அதின் விளைவு. நீங்கள் செய்த தவறுக்காக மனம் வருந்தி சரியான பாதையில் செல்லத் தீர்மானிக்கலாம். ஆனால் பாவக்காரியங்களில் பழக்கப்பட்டுவிட்ட உங்கள் மனம் நல்லது எது, தீயது எது என்பதைப் பகுத்தறியும் தன்மையை இழந்து கடினமாகிவிடுகிறது. தவறாக அமைந்துவிட்ட பழக்கங்களின்மூலமாக, சாத்தான் உங்களை மீண்டும் மீண்டும் தாக்குவான். (25)

"நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலை செய்" என்ற கட்டளையில் ஒவ்வொருவரின் இதயத்தின் நேர்மையும் பரிசோதிக்கப் படுகிறது. நமது கிரியைகளும் வார்த்தைகளும் ஒன்றாக இணைந்து செல்லுமா? அழைக்கப்பட்ட ஒரு நபர் திராட்சத்தோட்டதின் எஜமானனுக்காக தமக்கிருக்கும் அனைத்து அறிவையும் பயன்படுத்தி, உத்தமமாக தன்னல மற்ற நிலையில் உழைப்பாரா? (26)

அப்போஸ்தலனாகிய பேதுரு நாம் பின்பற்றவேண்டிய காரியங்களை நமக்கு வகுத்துத் தந்திருக்கிறார். "தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத்தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே

நமக்கு அருளப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்"–2 பேதுரு 1:5–7. (27)

நீங்கள் உங்கள் ஆத்துமாவாகிய திராட்சத்தோட்டத்தை உண்மையும் உத்தமமுமாக பண்படுத்துவீர்களாகில், தேவன் உங்களை தமது சக ஊழியக்காரனாக ஏற்றுக்கொள்வார். நீங்கள் உங்களுக்காக மாத்திரமல்லாது பிறருக்காகவும் உழைக்க கர்த்தர் உங்களை அழைக்கிறார். சபையை திராட்சத்தோட்டத்தோடு ஒப்பிடுவதின்மூலம் நாம் நமக்காகவும் நமது சுற்றுப்புறத்தாருக்காகவும் மாத்திரமே பணிபுரியவேண்டுமென்று கிறிஸ்து கூறுகிறதில்லை. கர்த்தரின் திராட்சத்தோட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும். உலகின் அனைத்துப் பாகங்களுக்கும் அது பரவவேண்டுமென்று அவர் விரும்புகிறார். நாம் இப்படிச்செய்யும்போது, நாம் கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தை விரிவுபடுத்தலாம். நமது ஜீவியத்தில் விசுவாசம், அன்பு, பொறுமை ஆகியவைகளுக்கான சான்றினைக் காண தேவன் விழிப்போடு காத்துக்கொண்டிருக்கிறார். தேவனிடமிருந்து கிருபையையும் போதனையையும் பெறும்போது, அந்த அருமையான செடிகளை எப்படிப் பராமரிக்கவேண்டுமென்ற அறிவை நாம் மற்றவர்களுக்கும் பகிர்ந்தளிக்கவேண்டும். எந்த ஏதேன் தோட்டத்திலிருந்து மீறுதலினாலே ஆதாமும் ஏவாளும் விரட்டப்பட்டார்களோ அந்தப் பரலோகத்திற்குள் நாம் பிரவேசிக்கத்தக்கதாக தேவனுடைய திராட்சத்தோட்டமாகிய இந்த பூமியில் வேலைசெய்வதற்காக திறமையான ஊழியர்களாக மாறுவதற்கு ஆவிக்குரிய ஒவ்வொரு அனுகூலத்யையும் பயன்படுத்துகிறோமா என்பதைக் காண அவர் நம்மை நோக்கிப்பார்க்கிறார். அந்த அருமையான திராட்சைச்செடிகளை எப்படிப் பராமரிப்பது என்ற அறிவை நாம் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவேண்டும். (28)

தேவன் தாம் படைத்த ஜனங்கள் அனைவருக்கும் தகப்பன் என்ற ஸ்தானத்திலிருக்கிறார். நாம் விசுவாசமுள்ளவர்களாக ஊழியம் செய்யவேண்டுமென்று நமது தகப்பன் எதிர்பார்க்கிறார். கிறிஸ்துவின் ஜீவியத்தை எண்ணிப் பாருங்கள். மானிட இனத்தின் தலைவராக நின்று தமது பிதாவிற்கு சேவை செய்கிறார். ஒவ்வொரு மகனும் எப்படியிருக்கலாம், எப்படி இருக்கவேண்டுமென்று அவர் ஒரு முன்மாதிரியாக இருக்கிறார். தேவனிடம் கிறிஸ்து காட்டிய கீழ்ப்படிதலை, அவர் மானிடரிடமிருந்து இன்று எதிர்பார்க்கிறார். அவர் தமது பிதாவை விருப்பத்துடனும் அன்புடனும் சுதந்தரத்தோடும்

சேவித்தார். "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" (சங். 40:8) என்றார். தாம் நிறைவேற்றும்படியாக வந்த பணியை நிறைவேற்றுவதற்கு அவர் எந்த ஒரு தியாகத்தையும் பெரிதாகவோ எந்த ஒரு உழைப்பையும் கடினமாகவோ கருதவில்லை. "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா?" (லூக்கா 2:49) என்று பன்னிரண்டு வயதாயிருக்கும்போது தமது பெற்றோரைப் பார்த்துக் கேட்டார். அவர் பிதாவிடமிருந்து அழைப்பைப் பெற்றதும் தமது பணியைத் துவக்கினார். "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" (யோவான் 4:34) என்றார். இவ்வண்ணமாகவே, நாமும் தேவனுக்கு ஊழியஞ்செய்யவேண்டும். கீழ்ப்படிதலின் மிக உயர்ந்த படித்தரம்வரை செயல்படுபவரே தேவனுக்கு சேவைசெய்கிறார். தேவனுடைய குமாரர்களும் குமாரத்திகளுமாக இருக்கப்போகும் அனைவரும் தேவனோடும் கிறிஸ்துவோடும் பரலோகத் தூதர்களோடும் தாங்களும் ஊழியர்களாக இருக்கிறார்களென்பதை நிரூபிக்க வேண்டும். ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் கொடுக்கப்பட்ட பரீட்சை இதுவே. தமக்கு உரிமையாக ஊழியம் செய்பவர்களைக்குறித்து கர்த்தர்: "என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களா யிருப்பார்கள்... ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ் செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்" (மல்கியா 3:17) என்கிறார். (29)

தேவன் தமது நிகழ்ச்சிகளைச் செயல்படுத்துவதற்கான மாபெரும் நோக்கம், மனிதரை ஈடுபடுத்தி, அவர்களது குணத்தை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுக்கவேண்டுமென்பதேயாகும். இப்படிச் செய்வதின்மூலம் அவர்கள் தமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறார்களா இல்லையா என்பதை அவர் சோதித்தறிகிறார். நற்கிரியைகளின்மூலமாக நாம் தேவ அன்பை விலைக்கு வாங்க இயலாது. ஆனால் அவைகளின்மூலமாக, நாம் அவரது அன்பைப் பெற்றிருக்கிறோமென்பதை வெளிப்படுத்துகிறோம். நாம் நமது சித்தத்தை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும்போது, அவருடைய அன்பைப் பெற வேண்டுமென்பதற்காக அவருக்கு ஊழியம் செய்யமாட்டோம். அவருடைய அன்பு அனைவருக்கும் இலவச ஈவாகக் கிடைக்கிறது. நாம் அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதின்மூலமாக, அவர்மீது நமக்கிருக்கும் அன்பை வெளிப்படுத்துகிறோம். (30)

இன்று இவ்வுலகத்தில் இரு வகுப்பார் மாத்திரமே வாழ்ந்துகொண் டிருக்கிறார்கள். ஒரு பிரிவினர் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களாகவும்

மறு பிரிவினர் அதற்குக் கீழ்ப்படியாதவர்களாகவும் நியாயத்தீர்ப்புநாளில் கண்டறியப்படுவார்கள். கற்பனைகளுக்கு உத்தமமாக கீழ்ப்படிகிறோமா அல்லது கீழ்ப்படியவில்லையா என்பதை நிரூபிக்க கிறிஸ்து நமக்கு ஒரு பரீட்சையைக் கொடுத்திருக்கிறார். "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்… என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்… என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது" (யோவா. 14:15-24). "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண் டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்"–யோவா.15:10. (31)

★

# 23

# கர்த்தருடைய திராட்சைத்தோட்டம்!

**(மூலநூல் : பக்கங்கள் 284–306)**
**மத்தேயு 21:33–44**

### யூத தேசம்

இரு மகன்கள் குறித்த உவமை முடிந்ததும் திராட்சைத்தோட்டத்து உவமையை கிறிஸ்து கூறினார். முதல் உவமையின்மூலம் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தைக்குறித்து யூத போதகர்களுக்கு எடுத்துரைத்திருந்தார். தேவன் இஸ்ரவேலர்மீது பொழிந்த ஏராளமான ஆசீர்வாதங்களின்நிமித்தம் அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிய கடன்பட்டிருக்கிறார்கள் என்பதை வலியுறுத்த இரண்டாவது உவமையைக் கூறினார். தேவநோக்கத்தின் மகிமையை அவர்களுக்கு முன்பாக எடுத்துவைத்து, கீழ்ப்படிதல்மூலமாக அவர்கள் ஏராளமான நன்மைகளை அனுபவித்திருக்கக்கூடும் என்பதைத் தெளிவுபடுத்தினார். எதிர்காலத்தை மூடியிருக்கும் திரையை அகற்றி, யூத தேசத்தார் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றத் தவறியதால், அவருடைய ஆசீர்வாதத்தை இழந்து கீழ்ப்படியாமையினிமித்தமாக தங்கள்மீது வருவித்துக் கொள்ளவிருக்கும் அழிவை அவர்களுக்குக் காண்பித்தார். (1)

“வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன் இருந்தான், அவன் ஒரு திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி, அதைச் சுற்றிலும் வேலியடைத்து, அதில் ஒரு ஆலையை நாட்டி, கோபுரத்தையும் கட்டி, தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாகவிட்டு, புறதேசத்துக்குப் போயிருந்தான்.” (2)

இந்த திராட்சத்தோட்டத்தைக்குறித்து தீர்க்கதரிசி ஏசாயா மிக அழகாக வர்ணிக்கிறான். “இப்பொழுது நான் என் நேசரிடத்தில் அவருடைய திராட்சத்தோட்டத்தைக் குறித்து என் நேசருக்கேற்ற ஒரு பாட்டைப் பாடுவேன்; என் நேசருக்கு மகா செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சத்தோட்டம் உண்டு. அவர் அதை வேலியடைத்து, அதிலுள்ள கற்களைப் பொறுக்கி, அதிலே நற்குல திராட்சச்செடிகளை நட்டு, அதின் நடுவில் ஒரு கோபுரத்தைக்கட்டி,

அதில் ஆலையையும் உண்டுபண்ணி, அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று காத்திருந்தார்; அதுவோ கசப்பான பழங்களைத் தந்தது"– ஏசாயா 5:1,2. (3)

வீட்டெஜமான் வனாந்தரத்திலே நிலம் ஒன்றை தெரிவுசெய்து, அதை வேலியடைத்து, அதைச் சுத்தம்செய்து, பண்படுத்தி அதிலே நற்குலத் திராட்சச்செடிகளை நட்டான். அது ஒரு நல்ல அறுவடையைக் கொடுக்கும் என்று எதிர்பார்த்திருந்தான். இந்த நிலம் பண்படுத்தாமல் கிடக்கும் தரிசு நிலங்களைவிட மேன்மையானதாக அமைந்தது. பயிர்செய்ய முனைந்து கடுமையாக உழைத்து அதைப் பராமரித்ததின் பலன்களை அது வெளிப்படுத்தி தன்னைக் கனப்படுத்தவேண்டுமென்று அந்த விவசாயி எதிர்ப்பார்த்தான். அதுபோலவே தேவனும் இவ்வுலகம் கிறிஸ்துவால் பயிற்றுவிக்கப்பட—போதிக்கப்பட வேண்டுமென்று, ஒரு ஜனத்தை தமக்காகத் தெரிந்துகொண்டு, ஒரு கூட்ட மக்களைத் தெரிந்துகொண்டார். "சேனைகளின் கர்த்தருடைய திராட்சத்தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே; அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே" (ஏசா. 5:7) என்று தீர்க்கதரிசி கூறுகிறான். இந்த ஜனங்கள்மீது விசேஷ சலுகைகளையும் ஆசீர்வாதங்களையும் தேவன் பொழிந்தார். அவர்கள் கனிகொடுப்பதின்மூலமாக, தம்மைக் கனப்படுத்த வேண்டுமென்று எதிர்பார்த்தார். தமது ராஜ்யத்தின் கொள்கைகளை அவர்கள் உலகிற்கு வெளிப்படுத்தவேண்டுமென்று விரும்பினார். விழுந்துபோன இந்த துன்மார்க்க உலகத்தின் மத்தியில் அவர்கள் தேவனுடைய குணத்தைப் பிரதிபலிக்கவேண்டுமென்று விரும்பினார். (4)

அஞ்ஞான தேசத்தாரைப்போன்று அல்லாமல் கர்த்தரின் திராட்சைத் தோட்டமாக இருக்கின்ற அவர்கள் முற்றிலும் விசேஷித்த கனிகளை தரவேண்டுமென்று அவர் விரும்பினார். விக்கிரகாராதனைக் கூட்டத்தாராகிய ஜனங்கள் துன்மார்க்கமான கிரியைகளுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து ஜீவித்தார்கள். கலகம், குற்றம், பேராசை, ஒடுக்குதல் மற்றும் தீய பழக்கங்களில் அவர்கள் கட்டுப்பாடின்றி ஈடுபட்டனர். அக்கிரமம், சீரழிவு, துன்பம், ஆகியவையே கெட்டமரத்தின் கனிகளாக இருந்தன. தேவனால் நாட்டப்பட்ட திராட்சச்செடி கொடுக்கும் பழம் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. (5)

தேவன் தம்மை மோசேக்கு வெளிப்படுத்தியிருந்தபிரகாரமாக அவருடைய குணத்தை எடுத்துக்காட்டவேண்டிய சிறப்புரிமை யூத தேசத் தாருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. "உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்" என்று மோசே வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவனைப் பார்த்து: "என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு

முன்பாகக் கடந்துபோகப்பண்ணி, கர்த்தருடைய நாமத்தை உனக்கு முன்பாகக் கூறுவேன்" (யாத். 33:18,19) என்று வாக்குப்பண்ணினார். "கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்..." (யாத். 34:6,7) என்று கூறினார். (6)

தேவன் இத்தகைய கனியையே தமது மக்கள் கொடுக்கவேண்டு மென்றும், அவர்கள் குணத்தில் தூய்மையையும், வாழ்வில் பரிசுத்தத்தையும் இரக்கம், அன்பு, மனதுருக்கம் ஆகிய நற்குணங்களையும் வெளிப்படுத்தி, "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமா யிருக்கிறது" (சங்கீதம் 19:7) என்பதை மெய்ப்பிக்கவேண்டுமென்றும் அவர் விரும்புகிறார். (7)

யூத தேசத்தின்மூலமாக அனைத்து மக்களுக்கும் திரண்ட ஆசீர் வாதங்களை வழங்கவேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமாக இருந்தது. இஸ்ரவேலர்மூலமாக தேவனுடைய ஒளி முழு உலகிற்கும் பரவுவதற்கு அவர்கள் வழியை ஆயத்தம்செய்யவேண்டும். இவ்வுலகின் மக்கள் தீய பழக்கவழக்கங்களைப் பின்பற்றியதின்மூலமாக தேவனைக்குறித்த அறிவை இழந்துவிட்டனர். இருப்பினும் அவர்களை அழித்துவிடாமல் தமது கிருபையி னிமித்தம் விட்டுவைத்தார். இத்தகையோர் சபையின்வாயிலாகத் தம்மைக் குறித்து அறிந்துகொள்ள சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக்கொடுத்தார். தேவன் தமது மக்கள்மூலமாக வெளிப்படுத்திய கொள்கைகளினால் அவரது சாயலை மனிதனில் மீண்டும் கொண்டுவரவேண்டுமெனத் திட்டமிட்டார். இந்த நோக்கத்தை நிறைவேற்றும்வண்ணமாக ஆபிரகாமை அவனது விக்கிரகாராதனை செய்யும் உறவுக்காரர்களிடமிருந்து பிரிந்து, கானான் தேசத்தில் சென்று குடியேறுமாறு கட்டளையிட்டார். "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப் படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதி. 12:2) என்றார். (8)

ஆபிரகாமின் சந்ததியான யாக்கோபும் அவனுடைய பிள்ளைகளும் அவர்களுடைய பின்சந்ததியாரும் எகிப்துதேசத்திற்குக் கொண்டுவரப்பட்டனர். அநீதியும் பாவமும் நிறைந்த அந்த தேசத்தின் மத்தியிலே தேவராஜ்யத்தின் கொள்கைகளை அவர்களுக்கு கற்றுக்கொடுப்பதற்காக அவர்கள் அங்கே கொண்டுசெல்லப்பட்டனர். அஞ்ஞான தேசத்தார் மத்தியில் யோசேப்பு தன் உத்தமத்தை வெளிப்படுத்தினதோடு நில்லாமல், எகிப்திய மக்கள் அனைவரின் உயிரையும் பாதுகாக்கின்ற அற்புதமான பணியில் ஈடுபட்டு,

கிறிஸ்துவின் குணத்தைத் தன் வாழ்வில் பிரதிபலித்தான். மோசேயும் இன்னும் பலரும் தேவனுக்கு சாட்சிகளாக ஜீவித்தார்கள். (9)

இஸ்ரவேலரை எகிப்திலிருந்து மீட்டபோது, கர்த்தர் மீண்டும் தமது வல்லமையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தினார். அடிமைத்தனத்திலிருந்து அவர்களை அற்புதமாக விடுதலைசெய்ததும், வனாந்திரப் பயணங்களில் அவர் நடந்துகொண்டவிதமும் அவர்களது நன்மைக்காக மாத்திரமல்ல. இக்காரியங்கள் அனைத்தும் சுற்றிலும் வாழ்ந்துகொண்டிருந்த மக்களுக்கு ஒரு கருத்தை விளக்கும் பாடமாக இருக்கவேண்டியதாயிருந்தது. மானிடரின் அனைத்து அதிகாரங்களுக்கும் மேன்மைகளுக்கும் மேலான ஒரு இறைவனாக கர்த்தர் தம்மை வெளிப்படுத்தினார். தமது மக்கள் சார்பில் அவர் நடப்பித்த அற்புதங்களும், அடையாளங்களும், இயற்கையும், இயற்கையை வழிபட்ட மாபெரும் மனிதர்கள்மீதும் அவருக்கிருக்கும் வல்லமையையும் கட்டுப்பாட்டையும் காட்டியது. பெருமைவாய்ந்த எகிப்து தேசத்தின் வழியாக தேவன் கடந்துசென்றதுபோல் கடைசிநாட்களில் இவ்வுலகத்தின் வழியாகவும் கடந்துசெல்வார். அக்கினியைக்கொண்டும், புயல், பூமியதிர்ச்சி, மரணம் ஆகியவைகளைக் கொண்டும் “இருக்கிறவராகவே இருக்கிறேன்” என்றவர் தமது ஜனத்தை மீட்டார். அடிமைத்தன தேசத்திலிருந்து அவர்களை வெளியே கொண்டுவந்தார். அவர்களை “கொள்ளிவாய்ச் சர்ப்பங்களும் தேள்களும், தண்ணீரில்லாத வறட்சியுமுள்ள பயங்கரமான பெரிய வனாந்தரவழியாய்” (உபாகமம் 8:15) அழைத்துச் சென்றார். பாறையான கன்மலையிலிருந்து தண்ணீரைப் புறப்படப்பண்ணி, “வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார்” (சங்கீதம் 78:24). “கர்த்தருடைய ஜனமே அவருடைய பங்கு; யாக்கோபு அவருடைய சுதந்தரவீதம். பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தரவெளியிலும் அவர் அவனைக் கண்டுபிடித்தார். அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனைத் தமது கண்மணியைப்போலக் காத்தருளினார். கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டுபோகிறதுபோல, கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்; அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை” (உபாகமம் 32:9–12) என்று மோசே கூறினான். உன்னதமானவரின் நிழலிலே அவர்கள் தங்கும்படியாக இவ்விதமாக அவரே அவர்களைத் தம்மிடத்திற்கு வழிநடத்தினார். (10)

இஸ்ரவேல் மக்களின் வனாந்தர யாத்திரையிலே கிறிஸ்துவே அவர்களுக்குத் தலைவராயிருந்தார். பகலிலே மேகஸ்தம்பமாகவும் இரவிலே அக்கினிஸ்தம்பமாகவும் இருந்து அவர்களை வழிநடத்தினார். தேவன் இஸ்ர

வேலரைத் தமது சொந்த ஜனமாகவும் கர்த்தருடைய திராட்சைத்தோட்ட மாகவும் தெரிந்துகொண்டாரென்பதை, ஏற்க மறுத்த மற்ற தேசத்தினர் காணும் வகையில், அவர்கள் வனாந்தர யாத்திரையில் சந்தித்த ஆபத்துகளிலிருந்து அவர்களை விலக்கி மீட்டு, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கு அவர்களைக் கொண்டுவந்து சேர்த்தார். (11)

இந்த ஜனங்களுக்கு தேவன் தமது பிரமாணங்களைக் கொடுத்தார். அவருடைய பிரமாணத்தின் கொள்கைகள், நித்திய நியமங்களான சத்தியம், நீதி, தூய்மை, பரிசுத்தம் ஆகியவைகளைக்கொண்டு அவர்கள் வேலி யடைக்கப்பட்டிருந்தனர். இந்த நியமங்களுக்கு அவர்கள் கீழ்ப்படியும்போது, பாவக் கிரியைகளினால் அழித்துவிடாதபடிக்கு அது அவர்களைப் பாதுகாக்கும். திராட்சத்தோட்டத்தின் மத்தியில் கோபுரம் இருந்ததுபோல, தேவன் தமது ஜனங்களுக்கு மத்தியில் தமது பரிசுத்த ஆலயத்தை வைத்தார். (12)

கிறிஸ்துவே அவர்களுக்குப் போதகராயிருந்தார். வனாந்தரத்தில் அவர்களுடன் இருந்ததுபோலவே, இன்னமும் அவர்களது ஆசிரியராகவும், வழிகாட்டியாகவும் இருக்கவேண்டியது இருந்தது. ஆசரிப்புக்கூடாரத்திலும் ஆலயத்திலும் கிருபாசனத்திற்கு மேலாக பரிசுத்த ஷெக்கினாவிலேயும் அவருடைய மகிமை தங்கியிருந்தது. அவர்கள் சார்பாக அவர் தமது அன்பு, பொறுமை, ஆகியவைகளின் ஐசுவரியங்களை அவர்களுக்குத் தொடர்ந்து வெளிப்படுத்திக்கொண்டேயிருந்தார். (13)

தேவன் இஸ்ரவேல் மக்களை தமது நாமத்தின் மகிமைக்காகவும் புகழ்ச்சிக்காகவும் வைக்க விரும்பினார். அனைத்து ஆவிக்குரிய நன்மை களும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்களை தமது பிரதிநிதிகளாக ஆக்குவதற்கு ஏற்ற குணத்தை உருவாக்க அனுகூலமான எதையும் அவர்களிடமிருந்து விலக்கிவைக்கவில்லை. (14)

தேவனுடைய பிரமாணத்திற்கு அவர்கள் கீழ்ப்படிவதினால் இந்த உலகத்தின் தேசங்களுக்கு முன்பாக, அவர்கள் செழுமையின் அற்புதங்களாக மாறமுடியும். அவர்களுக்கு ஞானத்தையும் நுணுக்கமான கலைநயம் வாய்ந்த சகல வேலைகளைச்செய்யும் திறமைகளையும் கொடுக்கின்ற அவர், அவருடைய பிரமாணங்களுக்கு அவர்கள் கீழ்ப்படிவதினால், தொடர்ந்து அவர்களது ஆசிரியராக இருந்து அவர்களை உயர்த்தி மேன்மைப் படுத்துவார். அதற்குக் கீழ்ப்படிவதின்மூலம் மற்ற தேசத்தவரை தாக்கிய வியாதிகளிலிருந்து அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ளலாம். மேலும், அறிவாற்றலையும் கொடுத்து அவர்களை ஆசீர்வதிப்பார். அவர்களது அனைத்து செல்வச்செழுமையிலும் தேவனுடைய மகிமையும் ராஜரீகமும்

வல்லமையும் வெளிப்படவேண்டும். ஆசாரியர்களும் இளவரசர்களும் வாழும் ராஜ்யமாக அவர்கள் இருப்பார்கள். உலகின் மகாமேன்மையான தேசமாக உருவெடுப்பதற்குத் தேவையான சகல வசதிகளையும் தேவன் அதற்கு வழங்கியிருந்தார். (15)

மிகவும் திட்டமான முறையிலே மோசேயின்மூலமாக தேவனுடைய நோக்கத்தை கிறிஸ்து அவர்கள் முன்பாக எடுத்துவைத்தார். அவர்களது வளமான வாழ்விற்காக நிபந்தனைகளையும் தெளிவாக எடுத்துக் காட்டினார். "நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படித் தெரிந்துகொண்டார்.... ஆகையால் உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன்..., ஆகையால் நீ செய்யும்படி நான் இன்று உனக்குக் கட்டளையிடுகிற கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்வாயாக. இந்த நியாயங்களை நீங்கள் கேட்டு, கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களானால், அப்பொழுது உன் தேவனாகிய கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையையும் கிருபையையும் உனக்காகக் காத்து, உன்மேல் அன்புவைத்து, உன்னை ஆசீர்வதித்து, உனக்குக் கொடுப்பேன் என்று உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் உன்னைப் பெருகப்பண்ணி, உன் கர்ப்பக்கனியையும், உன் நிலத்தின் கனிகளாகிய உன் தானியத்தையும், உன் திராட்சரசத்தையும், உன் எண்ணெயையும், உன் மாடுகளின் பலனையும், உன் ஆட்டுமந்தைகளையும் ஆசீர்வதிப்பார். சகல ஜனங்களைப்பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்... கர்த்தர் சகல நோய்களையும் உன்னைவிட்டு விலக்குவார்; உனக்குத் தெரிந்திருக்கிற எகிப்தியரின் கொடிய ரோகங்களில் ஒன்றும் உன்மேல் வரப்பண்ணாமல், உன்னைப் பகைக்கிற யாவர்மேலும் அவைகளை வரப்பண்ணுவார்"– உபாகமம் 7:6,9,11–15. (16)

தமது கற்பனைகளைக் கைக்கொள்ளும் மக்களுக்கு தேவன் உச்சித மான கோதுமையையும் கன்மலையின் தேனையும் வாக்குப்பண்ணினார். நீடித்த நாட்களால் அவர்களைத் திருப்தியாக்கி, தமது இரட்சிப்பை அவர் களுக்குக் காண்பித்தார். (17)

தேவனுக்குக் கீழ்ப்படியாததின்மூலம் ஆதாமும் ஏவாளும் ஏதேனை இழந்தனர். பாவத்தினிமித்தம் முழு உலகமும் சபிக்கப்பட்டது. ஆனால்

தேவனுடைய மக்கள் அவருக்குச் செவிசாய்த்தால், அவர்களுடைய நிலம் அழகும் செழிப்பும் பெறும். நிலத்தைப் பண்படுத்துவதில் தேவனே அவர்களுக்கு ஆலோசனைகள் கொடுத்திருந்தார். நிலம் அதின் பழைய வளப்பமான நிலையை மீண்டும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவர்கள் தேவனோடு ஒத்துழைக்கவேண்டும். இவ்விதமாக முழு தேசமும் தேவனுடைய கட்டுப்பாட் டிற்குள் இருந்து, பிறதேசத்தவர்களுக்கு ஒரு ஆவிக்குரிய சத்தியத்தைக் காட்டும் பொருட்பாடமாக அமைந்திருக்கும். இயற்கையின் விதிகளுக்குக் கட்டுப்படும்போது பூமி தனது பொக்கிஷங்களை வாரி வழங்குவதுபோல்— அதேபோன்று, அவருடைய சன்மார்க்கப் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியும் போது, மக்கள் தேவசாயலைப் பிரதிபலித்துக்காட்டுவார்கள். ஜீவனுள்ள தேவனைத் தொழுது சேவிப்பவர்களது மேன்மையை அஞ்ஞானிகளும்கூடப் புரிந்துகொள்வார்கள். "நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளும்படி பிரவேசிக்கும் தேசத்தில் நீங்கள் கைக்கொள்ளும்பொருட்டு, என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே, நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன். ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்குமுன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது?"—உபாகமம் 4:5–8. (18)

தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்குச் சுதந்திரமாகக் கொடுத்த நிலப் பரப்பு அனைத்தையும் ஆக்கிரமிக்குமாறு அழைக்கப்பட்டனர். மெய்தேவனை தொழுது சேவிப்பதைப் புறக்கணித்துப்போட்ட அந்த மக்களது சொத்துக்கள் பறிக்கப்படவேண்டும். இஸ்ரவேல்மூலமாக தேவனுடைய குணம் வெளிப் படுத்தப்பட்டு, மக்கள் தமதண்டை இழுத்துக்கொள்ளப்படவேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமாக இருந்தது. முழுஉலகிற்கும் சுவிசேஷ அழைப்பு கொடுக்கப்படவேண்டியதாயிருந்தது. பலிமுறை ஆராதனையின் போதனைகள் மூலமாக அனைத்துநாட்டு மக்களுக்குமுன்பாகவும் கிறிஸ்து உயர்த்திக் காட்டப்படவேண்டும். அவரை நோக்கிப்பார்க்கும் அனைவரும் வாழவேண்டும். கானானியப் பெண்ணாகிய ராகாபைப்போலவும் மோவாபியப் பெண்ணாகிய ரூத்தைப்போலவும் புறஜாதியார் அனைவரும் விக்கிரகாராதனையை விட்டு விட்டு உண்மையான தெய்வத்தைத் தொழுதுகொள்வதற்குத் திரும்பி,

அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களோடு தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும். இஸ்ரவேல் மக்கள் பெருகப்பெருக தங்கள் எல்லைகளை விரிவுபடுத்தி, முழு உலகமும் தேவனை அறிந்துகொள்வதற்கு உதவ வேண்டுமென்று கர்த்தர் விரும்பினார். (19)

உலகின் அனைத்து ஜனங்களையும் தமது இரக்கத்தின் ஆளுகைக்குள் கொண்டுவர தேவன் விரும்பினார். இந்த பூமி சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் நிரம்பவேண்டுமென அவர் வாஞ்சித்தார். மனிதன் மகிழ்வுடன் இருக்கும்படியாக அவனைச் சிருஷ்டித்தார். மனித இருதயங்களை பரலோக சமாதானத்தினால் நிரப்பவேண்டுமென்று அவர் ஏக்கம்கொண்டிருக் கிறார். பரலோகக் குடும்பத்தின் நிழலாக பூலோகக் குடும்பங்கள் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். (20)

ஆனால் இஸ்ரவேலர் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற வில்லை. “நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச் செடியாக நாட்டினேன்; நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன?” (எரேமியா 2:21) என்று கர்த்தர் கூறுகிறார். “இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி, அது தனக்குத்தானே கனி கொடுக்கிறது”—ஓசியா 10:1. “எருசலேமின் குடிகளே, யூதாவின் மனுஷரே, எனக்கும் என் திராட்சத்தோட்டத்துக்கும் நியாயந்தீருங்கள். நான் என் திராட்சத்தோட்டத்திற்காகச் செய்யாத எந்த வேலையை அதற்கு இனிச் செய்யலாம்? அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று நான் காத்திருக்க, அது கசப்பான பழங்களைத் தந்ததென்ன? இப்போதும் நான் என் திராட்சத்தோட்டத்துக்குச் செய்வதை உங்களுக்கு அறிவிப்பேன்; அதின் வேலியை எடுத்துப்போடுவேன், அது மேய்ந்துபோடப்படும்; அதின் அடைப்பைத் தகர்ப்பேன், அது மிதியுண்டுபோம். அதைப் பாழாக்கிவிடுவேன்; அதின் கிளை நறுக்கப்படாமலும், களை கொத்திஎடுக்கப்படாமலும் போவதினால், முட்செடியும் நெரிஞ்சிலும் முளைக்கும்; அதின்மேல் மழை பெய்யாதபடிக்கு மேகங்களுக்கும் கட்டளையிடுவேன் என்கிறார். சேனைகளின் கர்த்தருடைய திராட்சத்தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே; அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே; அவர் நியாயத்துக்குக் காத்திருந்தார், இதோ, கொடுமை; நீதிக்குக் காத்திருந்தார், இதோ, முறைப்பாடு”—ஏசாயா 5:3–7. (21)

கர்த்தருக்கு உண்மையற்று ஜீவிப்பதின் விளைவை மோசேமூலமாக தேவன் ஜனங்களுக்குத் தெரியப்படுத்தினார். அவருடைய உடன்படிக்கையை கைக்கொள்ள மறுப்பதின்மூலம் அவர்கள் தங்கள் ஜீவனை அவரிடமிருந்து துண்டித்து, அவரிடமிருந்து தங்களுக்கு கிடைக்கவிருக்கும் ஆசீர்வாதங்களை

நிறுத்திவிடுகிறார்கள். "உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. நீ புசித்துத் திர்ப்தியாகி, நல்ல வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருக்கும்போதும், உன் ஆடுமாடுகள் திரட்சியாகி, உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும்போதும், உன் இருதயம் மேட்டிமையடையாமலும்,... என் சாமார்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாமலும்... உன் தேவனாகிய கர்த்தரை நீ மறந்து, வேறே தேவர்களைப் பின்பற்றி அவர்களைச் சேவித்து, அவர்களைப் பணிந்துகொள்வாயானால், நிச்சயமாய் அழிந்துபோவீர்கள் என்று இன்று உங்களுக்குச் சாட்சியாய் அறிவிக்கிறேன். உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு நீங்கள் கீழ்ப்படியாமற்போவதினால், கர்த்தர் உங்களுக்கு முன்பாக அழித்த ஜாதிகளைப் போல நீங்களும் அழிவீர்கள்"–உபாகமம் 8:11–14,17,19,20. (22)

இந்த எச்சரிக்கைக்கு யூத ஜனங்கள் செவிசாய்க்கவில்லை. அவர்கள் தேவனை மறந்து அவரது பிரதிநிதிகளென்று அழைக்கப்படும் அந்த மேலான சிறப்புரிமையை காணத் தவறிவிட்டார்கள். அவர்கள் பெற்ற ஆசீர்வாதங்கள் இந்த உலகிற்கு எந்த ஆசீர்வாதத்தையும் கொண்டுவரவில்லை. அவர்கள் பெற்றிருந்த ஆசீர்வாதங்கள் அனைத்தையும் தங்கள் சொந்த மகிமைக்காக தங்களுடையதாக்கிக்கொண்டார்கள். அவர்களிடமிருந்து அவர் எதிர்பார்த்த சேவையை அவருக்கு அளிக்க மறுத்துவிட்டார்கள். மார்க்க சம்பந்தமான ஆலோசனையையும் ஒரு பரிசுத்த முன்மாதிரியையும் சகமனிதர்களுக்குமுன் எடுத்துக்காட்டாகவைத்து வாழத் தவறிவிட்டார்கள். ஜலப்பிரளயத்திற்கு முன்பாக வாழ்ந்த குடிமக்களைப்போன்று அவர்களுடைய இதயத்தின் நினைவுகள் அனைத்தும் நித்தமும் பொல்லாததாக இருந்தது. அவர்கள் தேவனுடைய குணத்தைத் தவறாகச் சித்தரித்து, அவருடைய நாமத்தை கனவீனம்பண்ணி, அவருடைய வாசஸ்தலத்தை மாசுபடுத்தி, வெறுமனே "கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம் இதுவே" (எரே. 7:4) என்று கூறினார்கள். அதேசமயத்தில், தேவனுடைய குணத்தைத் தவறாக எடுத்துக்காட்டி, அவருடைய நாமத்தை கனவீனப்படுத்தி, அவரது ஆசரிப்புக்கூடாரத்தைத் தீட்டுப்படுத்திவிட்டார்கள். (23)

கர்த்தரின் திராட்சத்தோட்டத்தைக் கவனித்துவந்த தோட்டக்காரர்கள் மேல் அவர் வைத்த நம்பிக்கைக்கு அவர்கள் உண்மையற்றவர்களாக இருந்தார்கள். ஆசாரியர்களும் போதகர்களும் ஜனங்களுக்குஉண்மையாக

உபதேசிக்கவில்லை. தேவன் நல்லவர் என்பதையும், இரக்கமுள்ளவரென்பதையும், அன்பிற்கும் ஆராதனைக்கும் அவர் பாத்திரமானவரென்பதையும் ஜனங்களுக்கு அவர்கள் எடுத்துக்கூறவில்லை. இந்த தோட்டக்காரர்கள் சுயமகிமையை அடைந்துகொள்ளவே வகைதேடினர். திராட்சத்தோட்டத்தின் கனிகளை தங்களுடையதாக்கிக்கொள்ள விரும்பினர். அதாவது கவனத்தை தங்கள்பால் ஈர்த்து, தேவனுக்குச் சொந்தமான கனத்தை தங்களுடையதாக ஆக்கிக்கொள்வதே அவர்களது முயற்சியாக இருந்தது. தேவனுக்குச் சொந்தமான கனத்தை அவர்கள் தங்களுக்கு எடுத்துக்கொள்ள முயன்றனர். (24)

இஸ்ரவேல் மக்களின் தலைவர்களது பாவம் சாதாரண ஒரு பாவியின் பாவத்தைப்போன்றதல்ல. இந்தத் தலைவர்கள் தேவனுக்குச் செய்யவேண்டிய மிகவும் பக்திவிநயமான கடமையை உடையவர்களாக இருந்தனர். கர்த்தர் இவ்விதமாய் கூறுகிறாரென்று போதிப்பதாக அவர்கள் வாக்குறுதிசெய்துகொண்டனர். மேலும் தங்களது அன்றாட நடைமுறை வாழ்க்கையிலே கண்டிப்பான கீழ்ப்படிதல் இருக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்தனர். அதைச் செய்வதற்குப்பதிலாக, வேதவாக்கியங்களை தவறாகப் திரித்துக்கொண்டிருந்தனர். சுமக்க இயலாத சுமைகளை மக்கள்மீது வைத்து, தேவையற்ற அநேக சடங்குமுறைகளையும் அமல்படுத்தினர். ரபிமார்கள் ஏற்படுத்திய விதிமுறைகளை ஜனங்களால் நிறைவேற்ற முடியவில்லை. எனவே மக்கள் தொடர்ந்து இளைப்பாறுதலின்றி வாழ்ந்தனர். மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பிரமாணங்களை அவர்களால் கைக்கொள்ள முடியாமல்போகவே, அவர்கள் தேவனுடைய பிரமாணங்களைக் கைக் கொள்ளுவதில் அக்கறையற்றவர்களானார்கள். (25)

தேவன்தாமே திராட்சத்தோட்டத்தின் உரிமையாளரென்று தமது மக்களுக்குப் போதித்திருந்தார். அவர்களிடம் இருக்கின்ற உடைமைகள் அனைத்தும் ஆண்டவருக்காகப் பயன்படுத்தத்தக்கதாக அவர்களிடம் பொறுப்பாக ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆசாரியர்களும், போதகர்களும் தேவனுடைய சொத்தைக் கையாளுவதுபோன்று, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பரிசுத்தமான பொறுப்பின் ஊழியத்தைச் செய்யவில்லை. அவரது ஊழியத்தின் முன்னேற்றத்திற்காக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பொருட்களையும் வாய்ப்புகளையும் கிரமமாகத் திருடிக்கொண்டிருந்தார்கள். அவர்களது பேராசையும், இச்சையும், அஞ்ஞானிகளும் அவர்களை அவமதிக்க ஏதுவுண்டாக்கியது. இவ்வாறு தேவனுடைய குணத்தையும் அவரது இராஜ்யத்தின் சட்டங்களையும் தவறான விளக்கம் கொடுக்க புறஜாதியாருக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. (26)

ஒரு தகப்பன் தன் பிள்ளைகளின் தவறுகளைப் பொறுத்துக்கொள்வது போல் தேவன் தமது ஜனங்களின் தவறுகளைப் பொறுத்துக்கொண்டார். சில சமயங்களில் இரக்கத்தைக் காண்பித்தும், சில சமயங்களில் இரக்கத்தை மறுத்தும், அவர்களோடு அவர் மன்றாடினார். பொறுமையோடு அவர்களது பாவங்களை அவர்களுக்குமுன்பாக எடுத்துவைத்து, மிகுந்த பொறுமையோடு அவர்கள் அதை ஒப்புக்கொள்வதற்காகக் காத்திருந்தார். தேவன் அவர்கள்மீது கொண்டுள்ள உரிமையை வற்புறுத்திக் கூறத்தக்கதாக தீர்க்கதரிசிகளையும் தாசர்களையும் அனுப்பினார். ஆனால் அவர்களோ அவர்களை வரவேற்பதற்குப்பதிலாக, எதிரிகளை நடத்துவது போன்று அவர்களை நடத்தினர். தோட்டக்காரர்கள் அவர்களை துன்பப்படுத்திக் கொலை செய்தனர். மற்றும் சில தூதுவர்களை தேவன் அனுப்பினார். முதலாவது அனுப்பப்பட்டவர்களை நடத்தினதுபோன்றே இவர்களையும் நடத்த, அந்தத் தோட்டக்காரரின் வெறுப்பு தீர்மானமாக அதிகரித்தது. (27)

இறுதி முயற்சியாக, தேவன் "என் குமாரனுக்கு அஞ்சுவார்கள்" என்று சொல்லி, தமது குமாரனை அனுப்பிவைத்தார். பழிவாங்கும் எண்ணம் அவர்கள் மனதில் நிலைகொண்டுவிட்டபடியால், அவனைக் கண்டதும் அவர்கள்: "இவன் சுதந்தரவாளி, இவனைக் கொன்று, இவன் சுதந்தரத்தைக் கட்டிக்கொள்வோம்." அவனைக் கொன்றபின்னர், திராட்சத்தோட்டத்தை மகிழ்ச்சியோடு நாம் அனுபவித்து, அதனின்று கிடைக்கும் கனிகளை நமது விருப்பம்போல் இனி பயன்படுத்துவோம் என்று கூறினார்கள். (28)

யூத ஆட்சியாளர்கள் தேவனை நேசிக்கவில்லை. ஆகவே அவரிடமிருந்து தங்களைத் துண்டித்துக்கொண்டு, அவர்களை தம்வசம் சேர்க்க அவர் எடுத்த நேசத்தொடர்பின் முயற்சிகள் அனைத்தையும் புறக்கணித்தனர். தேவனுடைய அன்பின் குமாரனாகிய கிறிஸ்து திராட்சத் தோட்டத்து எஜமானரின் உரிமைகளை வலியுறுத்திக் கூறவந்தார். ஆனால் தோட்டக்காரர்கள் அவரை ஏளனம்செய்து, இந்த மனிதன் எங்கள்மீது ஆளுகைசெய்ய விடமாட்டோமென்று கூறினார்கள். கிறிஸ்துவினுடைய குணத்தின் மேன்மையைக்கண்டு பொறாமைகொண்டார்கள். அவருடைய உபதேசம் அவர்களுடையதைக்காட்டிலும் மிகவும் மேன்மையுள்ளதாக இருந்ததால், அவருடைய வெற்றியின் நிச்சயத்தை உணர்ந்து அதற்கு அஞ்சினார்கள். அவர் அவர்களுடைய மாய்மாலத்தை வெளிப்படுத்திக் கடிந்துகொண்டார். இது அவர்களிடத்திலே கடுமையான வெறுப்பைக் கிளர்ந்தெழச் செய்தது. தங்களால் அமைதிப்படுத்தக்கூடாத அவரது கண்டனங்களால் கடும்வேதனை அடைந்தனர். கிறிஸ்துவிடம் தொடர்ந்து காணப்பட்ட நீதியின் உயர்வான படித்தரத்தை அவர்கள் வெறுத்தனர்.

அவருடைய உபதேசம் தங்கள் சுயநலத்தை வெளிப்படுத்திவிடுமென்ற அச்சத்தினால் அவரைக் கொல்லத் தீர்மானித்தனர். அவரது நேர்மை, பயபக்தி மற்றும் அவர் செய்த அனைத்திலும் வெளிப்பட்ட மிக உயர்வான ஆவிக்குரிய நிலையில் அவர் காட்டிய முன்மாதிரி ஆகியவற்றை வெறுத்தனர். அவரது முழு வாழ்க்கையுமே அவர்களது சுயநலத்திற்கு ஒரு கடிந்துரையாக இருந்தது. இறுதிப் பரீட்சை வந்தபோது—அதாவது, நித்தியஜீவனுக்கான கீழ்ப்படிதல் அல்லது நித்திய மரணத்திற்கான கீழ்ப்படியாமையென்ற ஒரு பரீட்சை வந்தபோது, இஸ்ரவேலரின் பரிசுத்தரை அவர்கள் புறக்கணித்துவிட்டனர். கிறிஸ்துவா அல்லது பரபாசா என்று தெரிந்துகொள்ளத்தக்கதாக அவர்களிடம் கேட்கப்பட்டபோது: "பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும்" என்று அவர்கள் சத்தமிட்டார்கள் (லூக்கா 23:18). "கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்னசெய்யவேண்டும்" என்று பிலாத்து கேட்டபோது, "அவனைச் சிலுவையில் அறையவேண்டும்" என்று கூறினார்கள் (மத்தேயு 27:22). "உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா" என்று பிலாத்து கேள்வி எழுப்பியபோது: "இராயனே யல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை" என்று ஆசாரியர்களும் அதிபதிகளும் கூறினார்கள் (யோவான் 19:15). "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்று பிலாத்து கூறி, தனது கைகளைக் கழுவியபோது, ஆசாரியர்களும் அறிவற்ற திரள்கூட்ட மக்களோடுகூடச் சேர்ந்து உணர்ச்சிவசப்பட்டவர்களாக: "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று உரத்த குரலில் சத்தமிட்டார்கள் (மத்தேயு 27:24,25). (29)

இவ்விதமாக, யூத இனத்தலைவர்கள் கிறிஸ்துவைக்குறித்து முடிவு செய்தார்கள். சிங்காசனத்தில் அமர்ந்திருந்தவர் கரத்தில் யோவான் கண்ட—ஒரு மனிதனும் திறக்க இயலாத புஸ்தகத்தில் இந்த முடிவு பதிவுசெய்யப்பட்டது. யூதா கோத்திரத்தின் சிங்கமாகிய கிறிஸ்து இந்தப் புஸ்தகத்தின் முத்திரையை உடைக்கும் நாளில், அனைத்துப் பழிவாங்கும் தன்மையோடும் இதற்கான முடிவு காணப்படும். (30)

யூத ஜனங்கள் தாங்கள் பரலோகத்தின் அன்பிற்குப் பாத்திரமான வர்களென்ற கருத்தை நெஞ்சாரப் பேணிவந்தனர். அவர்கள் எப்பொழுதுமே தாங்கள்தான் தேவனுடைய சபையென்று உயர்த்தப்பட விரும்பினர். தாங்கள் ஆபிரகாமின் புத்திரரென்று மார்தட்டிக்கொண்டனர். செழுமையின் அடிப்படை அவ்வளவு உறுதியாக அவர்களுக்குக் காணப்பட்டதால், அவர்களது உடைமைகளை அவர்களிடமிருந்து பறித்துக்கொள்வதுபற்றி பூலோகத்

திற்கும் பரலோகத்திற்கும் அறைகூவல் விடுத்தனர். தங்களது உண்மையற்ற ஜீவியங்களின்மூலமாக, அவர்கள் பரலோகத்தின் கண்டனத்திற்கும் தேவனை விட்டுப் பிரிந்துசெல்வதற்கும் தங்களை ஆயத்தம்செய்துகொண்டிருந்தனர். (31)

திராட்சத்தோட்டத்தைப்பற்றிய உவமையிலே, ஆசாரியர்களுக்கு முன்பாக அவர்களது துன்மார்க்கத்தின் உச்சக்கட்டமான செயலை சித்தரித்துக் காட்டியபின்னர்: "திராட்சத் தோட்டத்தின் எஜமான் வரும்போது, அந்தத் தோட்டக்காரரை என்ன செய்வான்" என்ற கேள்வியைக் கேட்டார். உவமையை கவனித்துக் கேட்ட ஆசாரியர்கள் உவமைக்கும் தங்களுக்கும் உள்ள சம்பந்தத்தை அறிந்துகொள்ளாதவர்களாக, ஜனங்களுடன் சேர்ந்து: "அந்தக் கொடியரைக் கொடுமையாய் அழித்து, ஏற்ற காலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத்தக்க வேறே தோட்டக்காரரிடத்தில் திராட்சத்தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுப்பான்" என்றார்கள். (32)

தங்களையும் அறியாமல் கவனக்குறைவோடு தங்களுக்கு வரப் போகின்ற அழிவைக்குறித்து தாங்களே தீர்ப்புக்கூறிவிட்டனர். இயேசு ஆராயும் கண்களோடு உற்றுப்பார்த்து அவர்களுடைய இருதயங்களின் இரகசியங்களை வாசித்து அறிந்தாரென்பதை அவர்கள் அறிந்துகொண்டனர். அவருடைய தெய்வீகம் சந்தேகமின்றி தெளிவான வல்லமையோடு அவர்களுக்கு முன்பாகப் பளிச்சிட்டது. அந்தத் தோட்டக்காரர்போல் தாங்கள் இருந்ததைக் கண்ட அவர்கள், தாங்களாகவே, "அப்படியாகாதிருப்பதாக" என்றார்கள். (33)

இயேசு அவர்களை நோக்கி: பக்திவிநயத்தோடும் வருத்தத்தோடும் "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக் கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்க வில்லையா?" என்று கேட்டார். "ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களி டத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற மக்களுக்குக் கொடுக்கப்படும். இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்; இது எவன்மேல் விழுமோ அது அவனை நசுக்கிப்போடும்" என்று கூறினார். (34)

யூதர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்தால், அவர்கள் தேசத்தின் அழிவை கிறிஸ்து தடுத்திருப்பார். ஆனால் அவர்களிடமிருந்த பொறாமையும், எரிச்சலும் அவர்களைப் பிடிவாதமுள்ளவர்களாக மாற்றியது. நசரேயனாகிய இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று உறுதிபூண்டனர். இவ்வுலகின் வெளிச்சத்தை அவர்கள் புறக்கணித்ததின்மூலம் நள்ளிரவின்

இருளைப்போன்ற காரிருள் அந்த நாளிலிருந்து அவர்களின் வாழ்வை சூழ்ந்துகொண்டது. யூத தேசத்தின்மீது முன்னுரைக்கப்பட்ட நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்தது. அவர்களது கட்டுப்படுத்த இயலாத வெறியுணர்வுகள் அவர்களது அழிவைத் தீவிரப்படுத்த, கோபத்தின் உக்கிரத்தில் அவர்கள் ஒருவரை ஒருவர் அழித்தனர். அவர்களது பெருமையும் அவர்களது கலகக் குணமும் ரோம ஆக்கிரமிப்பாளர்களின் கோபத்தைக் கிளறியது. எருசலேம் நகரம் அழிக்கப்பட்டது; தேவாலயம் இடிக்கப்பட்டது; அந்த இடம் உழவுண்ட நிலம்போல் காட்சியளித்தது. யூதமக்கள் மிகவும் பயங்கரமான முறையில் மரணத்தைச் சந்தித்தனர். இலட்சக்கணக்கான மக்கள் புறஜாதியார்களின் நாடுகளிலே அடிமைகளாக வேலைசெய்வதற்காக விற்கப்பட்டனர். (35)

தேவனுடைய நோக்கத்தை யூதர்கள் நிறைவேற்றத் தவறியதால், அவர்களிடமிருந்த திராட்சத்தோட்டம் பறிக்கப்பட்டது. அவர்களால் தவறாகப் பயன்படுத்தப்பட்ட சிறப்புரிமைகளும் அவமதித்துத் தள்ளிவிடப்பட்ட ஊழியமும் மற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (36)

**இந்த உவமையும் இன்றைய சபையும்!**

திராட்சைத்தோட்டத்து உவமையின்மூலம் கிறிஸ்து யூதமக்களுக்கு மாத்திரமல்ல நிகழ்கால சபையிலுள்ள நமக்கும் ஒரு அருமையான பாடத்தை வைத்திருக்கிறார். இந்தத் தலைமுறையிலுள்ள சபைக்கு தேவன் பல விசேஷித்த சலுகைகளையும் ஆசீர்வாதங்களையும் வழங்கியிருப்பதினால், அதனிடமிருந்து அதற்கேற்ற பிரதிபலனை அவர் எதிர்பார்க்கிறார். (37)

நாம் விலைமிகுந்த கிரயத்தினால் மீட்கப்பட்டிருக்கிறோம். இந்தக் கிரயத்தின் மேன்மையை நாம் விளங்கிக்கொண்டால் மாத்திரமே, அதினால் ஏற்படும் பலன்களை எண்ணிப்பார்க்கமுடியும். தேவகுமாரனுடைய இரத்தத்தினாலும், கண்ணீரினாலும் நனைக்கப்பட்ட இப்பூமியிலிருந்துதான் பரலோகத்திற்கான அருமையான கனிகள் (ஆத்துமாக்கள்) கொண்டுவரப்பட வேண்டும். தேவனுடைய மக்கள் அவருடைய வார்த்தையிலுள்ள சத்தியங்களின் மகிமையையும் மேன்மையையும் மகத்துவத்தையும் தங்கள் ஜீவியத்தின் வாயிலாக மற்றவர்களுக்கு வெளிப்படுத்தக் கடன்பட்டிருக்கிறார்கள். தமது மக்களின் மூலமாக தனது குணத்தையும் தமது ராஜ்யத்தின் கொள்கைகளையும் மற்றவர்களுக்கு கிறிஸ்து வெளிப்படுத்த விரும்புகிறார். (38)

சாத்தான் தேவனுடைய கிரியைகளுக்கு எதிராகச் செயல்பட வகை தேடுகிறான். அவனது கொள்கைகளை மனிதர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றுதொடர்ந்துவற்புறுத்துகிறான்.தேவனால்தெரிந்துகொள்ளப்பட்டவர்களை ஒரு வஞ்சிக்கப்பட்ட கூட்டமென்று எடுத்துக்காட்டுகிறான். அவன் சகோதரரைக்

குற்றப்படுத்துகிறவனாக இருக்கிறான். அவனது குற்றப்படுத்தும் வல்லமை நீதியாய் கிரியைசெய்யும் மக்களுக்கு எதிராகச் செலுத்தப்படுகிறது. சரியான கொள்கைகளுக்கு கீழ்ப்படிதலின்மூலம் கிடைக்கும் ஆசீர்வாதங்களை முன்வைத்து, தமது மக்கள் சாத்தானின் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதை நிரூபிக்கவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். (39)

இந்தக் கொள்கைகளை அவருடைய சேவையில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனும், குடும்பமும், சபையும் தங்கள் நடத்தையில் வெளிப்படுத்தவேண்டும். தேவபிள்ளைகள் செய்வது அனைத்தும் உலகிற்கு அடையாளமாகவும் எடுத்துக்காட்டாகவும் இருக்கவேண்டும். இரட்சிக்கும் வல்லமையைப் பெற்றிருக்கும் சுவிசேஷ சத்தியங்களுக்கு வழிநடத்தும் மாதிரிப்படிவங்களாக அவை அமையவேண்டும். மனுக்குலத்தைக்குறித்த தேவனுடைய மாபெரும் நோக்கம் நிறைவேறும்படியாக இவை அனைத்தும் ஏதுகரங்களாகச் செயல்பட வேண்டும். (40)

யூதத் தலைவர்கள் தங்களது அழகுமிக்க தேவலாயத்தைக் குறித்தும், மார்க்கச்சடங்குகள்குறித்தும் பெருமைபாராட்டி, நீதியையும் இரக்கத்தையும் தேவ அன்பையும் காண்பிக்கத் தவறினர். கவர்ச்சி மிகுந்த தேவாலயமும், அவர்களுடைய ஆராதனையின் ஆடம்பரமும் தேவன்வசம் அவர்களைச் சேர்க்கவில்லை. ஏனெனில், அவருடைய பார்வையில் மதிப்புவாய்ந்ததாக இருந்ததை அதை அவர்கள் செய்யவில்லை. நொறுங்குண்ட ஆவியுடன் தாழ்மையான காணிக்கையை அவர்கள் அவருக்குச் செலுத்தவில்லை. தேவனுடைய இராஜ்யத்தின் முக்கியமான கொள்கைகள் விட்டுவிடப்படும்போது, சடங்காச்சாரங்கள் எண்ணிக்கையில் மிகுந்து வரம்புமீறி தாராளமாகச் செய்யப்படுகின்றன. குணம் முதிர்ச்சி அடைவதை அலட்சியப்படுத்தி, ஆத்தும அலங்கரிப்பு விடப்பட்டு, எளிமையான தேவபக்தி எண்ணப்படாமல் போகும்போது, தாழ்மையையும் தூய வாழ்வையும் புறக்கணித்து, பெருமையையும் பகட்டையும் வெளிப்படுத்த விரும்புகிறவர்களுக்கு மாத்திரமே அலங்காரமான வேலைப்பாடுகள் நிறைந்த பிரம்மாண்டமான ஆலயக்கட்டிடங்களும், கவர்ச்சிகர ஆச்சார முறைமைகளும் தேவைப்படும். இவை அனைத்தையும்கொண்டு தேவனைக் கனப்படுத்த இயலாது. சடங்காச்சாரங்களும், போலியான பகட்டும், கவர்ச்சிமிக்க காட்சிகளடங்கிய நவநாகரீக மார்க்கமும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதல்ல. இத்தகைய ஆராதனைகள் பரலோகத் தூதுவர்களிடமிருந்து எந்தப் பதிலையும் கொண்டுவருவதில்லை. இத்தகைய ஆராதனைகளுக்குப் பரலோகத்தின் தேவன் எந்த அங்கீகாரத்தையும் வழங்குவதுமில்லை. (41)

தேவனுடைய பார்வையில் சபை மிகவும் விலையேறப்பெற்றதாக இருக்கிறது. வெளிப்பிரகாரமான அனுகூலங்களுக்காக அல்ல; உலகினின்று வேறுபடுத்திக்காட்டும் உண்மையான பயபக்திக்காகமாத்திரமே தேவன் அதை மதிக்கின்றார். சபை அங்கத்தினர்கள் கிறிஸ்துவைக்குறித்த அறிவைப் பெருக்கி, ஆவிக்குரிய அனுபவங்களில் வளர்ச்சியைக் காண்பிப்பதை வைத்தே அவர் சபையின் வளர்ச்சியை மதிப்பீடுசெய்கிறார். (42)

பரிசுத்தத்தையும் சுயநலமின்மையையும் தமது திராட்சைத் தோட்டத்திலிருந்து கனிகளாகப் பெற்றுக்கொள்ள கிறிஸ்து பசியோடிருக்கிறார். அன்பு, தயையாகிய கொள்கைகளுக்காக எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக இருப்பவர்களிடத்தில் உள்ளத்தின் மற்றும் குணத்தின் அழகு வெளிப்படவேண்டும். அனைத்து கலையழகும் இதற்கு ஒப்பிடத்தக்கதல்ல. ஒரு விசுவாசியினுடைய ஆத்துமாவை கிருபை சூழ்ந்துகொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவர் மனதிலும் இதயத்திலும் கிரியை செய்கிறார். அப்பொழுது அந்த நபர் ஜீவனுக்கேற்ற ஜீவ வாசனையாக மாற்றப்பட, அதின் பயனாக தேவன் அவன் ஊழியத்தை ஆசீர்வதிக்கும்படி உதவிசெய்கிறார். (43)

ஒரு சபையானது அந்த நாட்டிலே மிகவும் எளிய நிலையில் இருக்கலாம். வெளிப்படையான எந்தக் கவர்ச்சியுமில்லாமல் இருக்கலாம். ஆனால் அந்த அங்கத்தினர்கள் கிறிஸ்துவின் குணத்தின் கொள்கைகளை உடையவர்களாக இருப்பார்களேயானால், அவர்களது ஆத்துமாக்களிலே அவரது சந்தோஷத்தைப் பெற்றவர்களாக இருப்பார்கள். பரிசுத்த தூதர்களும்கூட அவர்கள் ஆராதனையில் கலந்துகொள்வார்கள். துதியும் ஸ்தோத்திரமும் நன்றியுள்ள இருதயங்களிலிருந்து தேவனுக்கு உகந்த வாசனையாக எழும்பும். (44)

கர்த்தர் நல்லவரென்றும் அவர் வல்லமையுள்ளவரென்றும் நாம் பிறரிடம் எடுத்துக்கூறவேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவரைத் துதித்து நன்றிகூறும்போது, நாம் அவரை கனப்படுத்துகிறோம். “ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்” (சங். 50:23) என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தினூடாகப் பயணித்தபோது, பரிசுத்த பாடல்களால் தேவனைத் துதித்தார்கள். கர்த்தருடைய பிரமாணங்களையும் வாக்குத்தத்தங்களையும் பாடல்களாக இயற்றி—இசையமைத்து தங்கள் வனாந்தர யாத்திரை முழுவதிலும் அவைகளைப் பாடினார்கள். கானானிலே அவர்களது பரிசுத்தவிழா கொண்டாட்டங்களிலே ஒருவரையொருவர் சந்தித்தபோது, தேவனுடைய அற்புதமான கிரியைகளை நினைவுகூர்ந்து, நன்றியால் நிறைந்து, அவரை ஸ்தோத்தரிப்பது அவர்கள்

கடமையாயிருந்தது. தேவன் தமது ஜனங்களின் வாழ்வு முழுவதும் ஒரு துதியின் வாழ்வாக அமையவேண்டுமென்று விரும்புகிறார். இவ்விதமாக பூமியில் அவருடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் அவருடைய இரட்சணியமும் விளங்கவேண்டுமென்று விரும்புகிறார். (சங்கீதம் 67:1). (45)

இந்தப் பணியை இப்பொழுது நாம் செய்யக் கடமைப் பட்டுள்ளோம். இவ்வுலகின் ஜனங்கள் பொய்யான தேவர்களை வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தவறான தொழுகையைவிட்டுத் திரும்பும்படியாக, அவர்களது விக்கிரக வழிபாட்டைக்குறித்துக் கண்டனம் செய்யாமல், மெய் தேவனை அவர்கள் காணச் செய்தல்வேண்டும். தேவன் நல்லவர் என்பதை அனைவரும் அறியச்செய்யவேண்டும். “நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்”—ஏசா. 43:12. (46)

மீட்பின் மாபெரும் திட்டத்தை நாம் புரிந்துகொண்டு, தேவன் அளித்தி ருக்கும் மேலான—சிறப்பான சலுகைகளைப் புரிந்துகொண்டு, அவருக்கு முன்பாக கீழ்ப்படிந்து நன்றியுள்ள இதயத்தோடு நடந்து கொள்ளவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். புதிய வாழ்வைப் பெற்றவர்களாக ஒவ்வொருநாளும் மகிழ்ச்சியோடு அவரைச் சேவிக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். நம்முடைய பெயர்கள் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் எழுதப் பட்டிருக்கிறபடியினாலும், நம்முடைய சுமைகளைச் சுமக்கிற தேவனாக அவர் இருக்கிறபடியினாலும், நம்முடைய இதயங்கள் நன்றியினால் நிரம்பி வழிவதைப் பார்க்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். நாம் கர்த்தருடைய சுதந்தரமாக இருப்பதினாலும், கிறிஸ்துவினுடைய நீதியே அவரது அதிசீக்கிர வருகைபற்றிய பாக்கியமான நம்பிக்கையாக நமக்கு இருப்பதினாலும், களிகூரவேண்டுமென்று அவர் நம்மை வேண்டிக்கொள்கிறார். (47)

ஜெபம்செய்வது போன்றே முழு இருதயத்தோடும் உண்மையோடும் தேவனைத் துதிப்பது நமது கடமையாயிருக்கிறது. விழுந்துபோன மனுக்குலத்திற்காக தேவன் காட்டும் அதிசயமான அன்பை நாம் பாராட்டு கிறோமென்றும், அவரது எல்லையற்ற நிறைவினின்று ஏராளமான—மிகவும் ஏராளமான ஆசீர்வாதங்களை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்பதுபற்றியும், நாம் இந்த உலகத்திற்கும் பரலோகத்தில் உள்ள அனைத்து அறிவுஜீவிகளுக்கும் காட்டவேண்டும். நாம் இப்பொழுது செய்துகொண்டிருப்பதற்கும் மேலாக நமது அனுபவத்தின் மிகச் சிறந்த பகுதிகளைக்குறித்து பேசவேண்டியது அவசியமாகும். பரிசுத்த ஆவியின் சிறப்பான ஒரு பொழிவை நாம் பெற்றுக்கொண்ட பிறகு, அவர் தமது பிள்ளைகளின் சார்பில் செய்கின்ற அதிசயமான கிரியைகளையும் அவர்

கொடுத்த நன்மைகளையும் மீண்டும் மீண்டும் நாம் நினைவுகூருவதினால், கர்த்தரில் நாம் கொண்டிருக்கும் மகிழ்ச்சியும் அவரது சேவையில் நாம் காட்டும் திறமையும் ஏராளமாகப் பெருக்கமடையும். (48)

மேற்கூறப்பட்ட காரியங்களை நாம் செய்யும்போது, சாத்தானின் வல்லமையை நாம் முறியடிக்கிறோம். இவை முறுமுறுக்கின்ற குற்றம்சாட்டு கின்ற ஆவியை அகற்றுகிறது. சோதனைக்காரன் முற்றிலும் பலம் இழந்துவிடு கிறான். பூலோகத்தில் வாசஞ்செய்கின்ற மக்கள் பரலோக மாளிகைகளில் வாசஞ்செய்வதற்குத் தகுதியான நற்பண்புகளை இக்காரியங்கள் வளர்க்கின்றன. (49)

இப்படிப்பட்ட ஒரு சாட்சியின் ஜீவியம் மற்றவர்கள்மீது மிகுந்த செல் வாக்கை ஏற்படுத்தும். கிறிஸ்துவிற்கு ஆத்துமாக்களை ஆதாயம்செய்வதில் இதைவிடச் சிறந்தவழி வேறு கிடையாது. (50)

அவரது நாமத்தின் மகிமையை மேலும் உயர்த்துவதற்காக, நமது அனைத்து வல்லமையையும் ஒருங்கிணைத்து, தெளிவான சேவையின்மூலம் நாம் அவரைத் துதிக்கவேண்டும். நாம் மற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக தேவன் நமக்கு அவரது ஈவுகளை பகிர்ந்தளிக்கிறார். இவ்வாறு நாம் கொடுப்பதின்மூலம் அவரது குணத்தை உலகிற்குத் தெரியச் செய்கிறோம். யூத வாழ்வாதார முறைமைக்கடியில் காணிக்கைகளும் பலிகளும் தேவனுடைய தொழுகையில் முக்கிய பங்குவகித்தது. ஆசரிப்புக்கூடார வேலைக்காக இஸ்ரவேலர் தங்கள் வருமானத்திலிருந்து தசமபாகம் (வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு) செலுத்தினர். இது தவிர, பாவநிவாரண பலிகளையும், மனப்பூர்வமான காணிக்கைகளையும், ஸ்தோத்திர காணிக்கைகளையும் கொண்டுவந்தனர். இவைகளைக் கொண்டே கர்த்தருடைய ஊழியம் அப்போது நடைபெற்றது. தேவன் ஆதிஇஸ்ரவேலர்களிடமிருந்து எதிர்பார்த்தது போன்றே இன்று நம்மிடமும் எதிர்பார்க்கிறார். ஆத்துமாக்களை இரட்சிப்பிற்குள்ளாக நடத்தும் மாபெரும் பணி தொடர்ந்து எடுத்துச்செல்லப்படவேண்டும். தசமபாகம் நன்கொடைகள் மற்றும் காணிக்கைகள்மூலமாக சுவிசேஷ வேலைக்கு முன்னேற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுவிசேஷ ஊழியமானது இவ்வாறு தாங்கப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தசமபாகத்தை தேவன் தம்முடையதென உரிமைகொண்டாடுகிறார். தேவனுடைய ஊழியத்தின் முன்னேற்றத்திற்காக தசமபாகம் பரிசுத்த வைப்புநிதியாகக் கருதப்பட்டு, அவரது பண்டசாலையிலே வைக்கப்படவேண்டும். அவர் மனப்பூர்வமான காணிக்கைகளையும் ஸ்தோத்திர காணிக்கைகளையும் நம்மிடம் எதிர்பார்க்கிறார். இந்தக் காணிக்கைகள் அனைத்தும் உலகெங்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதற்குப் பயன்படுத்தப்படும். (51)

தேவனுக்குச் சேவைசெய்வதென்பது தனியாள் ஊழியத்தையும் உள்ளடக்கியதாயிருக்கிறது. உலகை இரட்சிப்பதற்கு தனியாள் ஊழிய முயற்சிமூலம் அவருடன் இணைந்து செயல்பட விரும்பும் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்து கொடுக்கும் கட்டளை: "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15) என்பதே. தங்கள் ஜீவனை கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்துள்ள அனைவரும் உடன் சகோதரர்களின் இரட்சிப்பிற்காக சேவைசெய்தல் அவசியம். அவர்களுடைய இதயங்கள் கிறிஸ்துவின் இதயத்தோடு இணைந்திருக்கும், அழிந்துபோகிற ஆத்துமாக்கள்மீது அவருக்கிருந்த பரிவு இவர்களிடமும் காணப்படும். ஊழியத்தில் ஈடுபடுகிற அனைவரும் ஒரே இடத்தை நிரப்பமுடியாது; ஆனால் அனைவருக்கும் அதில் ஒரு இடமுண்டு; ஒரு வேலையுமுண்டு. (52)

பண்டைக்காலங்களில் தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களைத் தெரிந்துகொண்டார். மேலும் மோசேயை அவனது சாந்த குணத்திற்காகவும் ஞானத்திற்காகவும், யோசுவாவை அவனது பல்வேறுபட்ட திறமைக்காகவும் தெரிந்துகொண்டார். இவர்கள் அனைவருமே தேவனுடைய சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மிரியாமின் இசை, தெபோராளின் பக்தி, தைரியம், ரூத் மாமியாரிடத்தில் காட்டிய பாசம், சாமுவேலிடம் காணப்பட்ட கீழ்ப்படிதல், உண்மை, எலியாவின் உறுதியான விசுவாசம், எலிசாவின் மென்மையான அடக்கியாளும் செல்வாக்கு ஆகிய இவையனைத்தும் தேவைப்பட்டது. எனவே, இப்பொழுது யார்மீதெல்லாம் தேவனுடைய ஆசீர்வாதங்கள், பொழியப்பட்டிருக்கின்றனவோ அவர்கள் உண்மையான ஊழியத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும். அவரால் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு ஈவும் அவரது இராஜ்யத்தின் முன்னேற்றத்திற்காகவும் அவரது நாமத்தின் மகிமைக்காகவும் பயன்படுத்தப்படவேண்டும். (53)

கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட அனைவரும் சுவிசேஷத்தின் சத்தியத்தை அதின் இரட்சிக்கும் வல்லமையுடன் வாழ்வில் நடைமுறைப்படுத்திக் காட்டவேண்டும். ஒரு காரியத்தின் நிறைவேறுதலுக்கான முன்னேற்பாட்டைச் செய்யாமல், தேவன் எதையும் நம்மிடத்தில் கேட்பதில்லை. கிறிஸ்துவினுடைய கிருபையின்மூலமாக தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறவைகள் அனைத்தையும் நாம் நிறைவேற்றமுடியும். பரலோகத்தின் செல்வங்கள் அனைத்தையும் தேவன் தமது மக்கள்மூலம் வெளிப்படுத்துகிறார். "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்"–யோவான் 15:8. (54)

இவ்வுலகம் முழுவதையும் தேவன் தமது திராட்சத்தோட்டமென உரிமைகோருகிறார். இப்பொழுது இந்த உலகம் அபகரிக்கிறவனுடைய

கரங்களில் இருந்தாலும், அது தேவனுக்குச் சொந்தமானது. அதை அவர் சிருஷ்டித்ததுபோலவே மீட்டுமிருக்கிறார். உலகை மீட்பதற்கு அவர் தம்மையே பலியாகத் தந்தார். “தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை… தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” (யோவான் 3:16). கிறிஸ்துவாகிய ஈவின் மூலமாகத்தான் மற்ற ஈவுகள் மனிதருக்கு வழங்கப்படு கிறது. அனுதினமும் முழு உலகமும் தேவனிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெறுகிறது. நன்றியற்ற மனித இனத்தின்மீது அவர் பொழியும் ஒவ்வொரு சொட்டு மழையும், ஒவ்வொரு ஒளிக்கதிரும், ஒவ்வொரு இலையும், பூவும், கனியும் தேவனுடைய நீடியபொறுமையையும் அவருடைய மகா அன்பையும் சாட்சியாகக் காண்பிக்கிறது. (55)

தயாளமாக வழங்குபவருக்கு (அந்த தேவனுக்கு) நாம் பதிலாக என்னத்தைத் திரும்பக் கொடுக்கிறோம்? தேவன் கோரும் உரிமைகளை மனிதர் எவ்வாறு கையாளுகின்றனர்? பெரும்பான்மையான ஜனங்கள் யாருக்குச் சேவை செய்கிறார்கள்? அவர்கள் உலகப்பொருளை சேவித்துக்கொண்டிருக்கிறார்கள். செல்வம், அந்தஸ்து, உலக இன்பம் ஆகியவையே அவர்கள் இலட்சியமாயிருக்கிறது. மனிதனை மாத்திரமல்ல தேவனுடையதையும் கொள்ளையடித்து செல்வத்தைச் சேர்க்கிறார்கள். தேவன் வழங்கியிருக்கும் ஆசீர்வாதங்களை தங்கள் சுயநலத்தைத் திருப்திப்படுத்த பயன்படுத்துகிறார்கள். தாங்கள் கையகப்படுத்தக்கூடிய அனைத்தையும்கொண்டு தங்கள் பேராசையையும் சுயநல இன்பத்தையும் நிறைவேற்றிக்கொள்ளுகிறார்கள். (56)

இஸ்ரவேல் ஜனங்களுக்கு அழிவைத் தேடித்தந்த பாவமே இன்றைய உலகிலும் நிலவுகிறது. இஸ்ரவேலர் தேவனுக்கு நன்றியற்றவர்களாக, அவர் வழங்கிய ஆசீர்வாதங்களையும் தருணங்களையும் அலட்சியம் செய்தவர்களாக, தேவனுடைய ஈவுகளை சுயநலத்திற்குப் பயன்படுத்தி, அவருடைய உக்கிரமான கோபத்திற்கு ஆளானார்கள். இத்தகையப் பாவங்களே இன்றைய உலகிற்கும் அழிவைக் கொண்டுவருகிறது. (57)

ஒலிவமலையில் நின்று தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட எருசலேம் நகரைப்பார்த்து கிறிஸ்து கண்ணீர் சிந்தியபோது, அவர் அந்த நகருக்காக மாத்திரம் அழவில்லை. எருசலேம் நகரின் அழிவை முன்னரே கண்ணோக்கிய அவர், இவ்வுலகின் அழிவும் அவ்வண்ணமாகவே இருக்குமென்பதை நினைத்து கண்ணீர் சிந்தினார். (58)

“உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது”—லூக்கா 19:42. “இந்த

நாளிலாகிலும்" என்று இயேசு கூறுகிறார். அந்த நாள் அதின் முடிவை நெருங்கிக்கொண்டிருக்கிறது. கிருபையின் மற்றும் சலுகையின் காலக்கட்டம் ஏறக்குறைய முடிவை நெருங்கிவிட்டது. பழிதீர்க்கும் செயலின் மேகங்கள் பரவ ஆரம்பித்துள்ளது. தேவனுடைய கிருபையைப் புறக்கணித்தவர்கள் தப்ப இயலாத அழிவைச் சடுதியில் சந்திப்பார்கள். (59)

ஆயினும், இவ்வுலகம் ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறது. உலக மக்கள் தங்களுக்கு வரப்போகும் தண்டனையின் காலத்தை அறியாதிருக் கிறார்கள். (60)

இந்த ஆபத்தான சூழலில் கர்த்தருடைய சபை எங்கே இருக்கிற தென்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? அதின் அங்கத்தினர்கள் தேவன் அவர்களிடம் எதிர்பார்ப்பதைச் சந்திக்கிறார்களா? அவருடைய கட்டளையை நிறைவேற்றி, அவருடைய குணத்தை உலகிற்குப் பிரதிபலிக்கிறார்களா? தங்கள் சக மனிதர்கள் இரக்கம் கலந்த கடைசி எச்சரிப்பின் தூதிற்குச் செவிசாய்க்கும்படியாக அவர்களைத் தூண்டுகிறார்களா? (61)

மனுஷர் ஆபத்தைச் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். திரளானோர் அழிந்துகொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் பின்னடியார்களென்று தங்களை அழைத்துக்கொள்பவர்களில் மிகக் குறைவான எண்ணிக்கையிலிருக்கும் மக்களே ஆத்துமாக்களைக்குறித்த பாரங்கொண்டிருக்கிறார்கள். ஏன் இத்தகைய நிலை நிலவுகிறது? இவ்வுலகின் முடிவு தராசிலே ஊசலாடிக்கொண் டிருக்கிறது. ஆனால் இக்காரியம் மானிடருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அந்த மாபெரும் சத்தியத்தை விசுவாசிக்கிறதாக உரிமைகோரும் மக்களைக் கூட சிறிதளவும் அசைக்கவில்லை. கிறிஸ்து தமது பரலோகவீட்டைவிட்டு மானுடத்தை தொடத்தக்கதாக, தெய்வீகத்தினிடத்தில் மானுடம் இழுக்கப்படத் தக்கதாக மானிட அவதாரமெடுத்தார். அவ்வாறு மானிட அவதாரத்தை எடுக்கத்தக்கதாக அவரை வழிநடத்திய அன்பு மனிதனிடத்தில் மிகவும் குறைந்து காணப்படுகிறது. தேவனுடைய ஜனங்களோ மதிமயங்கி முடங்கிப்போன நிலையிலே காணப்படுகிறார்கள். இது இந்த வேளைக்கான கடமையைப் புரிந்துகொள்ளக்கூடாதபடி அவர்களைத் தடை செய்கிறது. (62)

இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்தபோது தேசம் முழுவதையும் கைப்பற்றாமல் விட்டுவிட்டதின்மூலம், தேவ நோக்கத்தை நிறைவேற்றத் தவறிவிட்டார்கள். ஓரளவு வெற்றியைப் பெற்றுக்கொண்ட உடனேயே, தங்களது வெற்றிகளின் பயன்களை அனுபவித்து மகிழத்தக்க தாக, நிலையான வாழ்க்கை முறையை ஆரம்பித்துவிட்டனர். அவிசுவாசத் தினாலும் மெத்தனப்போக்கினாலும், புதிய இடங்களைக் கைப்பற்றி

முன்னேறிச் செல்வதற்குப் பதிலாக, ஏற்கெனவே வெற்றிகொண்டிருந்த பகுதிகளில் கூடிவாழ ஆரம்பித்துவிட்டனர். இவ்விதமாக, அவர்கள் தேவனை விட்டு விலக ஆரம்பித்துவிட்டனர். அவருடைய நோக்கத்தை அவர்கள் நிறைவேற்றத் தவறியதின்மூலம் அவர் அவர்களுக்கு வாக்குப்பண்ணியிருந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற முடியாதபடிச் செய்துவிட்டனர். இன்றைய சபையும் இதே காரியத்தையே செய்துகொண்டிருக்கவில்லையா? முழு உலகிற்கும் சுவிசேஷம் அவசியமாகத் தேவைப்படும் இந்நாட்களில், கிறிஸ்தவர்களென்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் சபைகளில்கூடி, சுவிசேஷத்தின் நன்மைகளை தாங்கள் மாத்திரம் அனுபவித்துச் செல்கின்றனர். எல்லையை விரிவுபடுத்தி சுவிசேஷம் சென்றடையாத பகுதிகளுக்கு இரட்சிப்பின் தூதைக் கொண்டுசெல்லவேண்டுமென்ற அவசியத்தை உணராதிருக்கிறார்கள். “நீங்கள் உலகெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்” (மாற்கு 16:15) என்ற கிறிஸ்துவின் கட்டளையை அவர்கள் நிறைவேற்ற மறுக்கின்றனர். யூத சபையைவிட இக்காலத்து சபை குறைவான குற்ற உணர்வோடு காணப்படுகின்றதா? (63)

கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களைக்குறித்த விசாரணை பரலோக நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகிறது. தேவனுக்குச் செய்யும் சேவையில் உற்சாகமற்று குளிர்ந்துபோன அவர்களது நிலையும், முயற்சிகளில் ஆற்றல் குன்றி தளர்ந்துபோயிருக்கும் தன்மையும், அவர்கள் உண்மையற்றவர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. இப்பொழுது அவர்களால் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் வேலையே அவர்களால் சிறந்த முறையில் செய்யப்படக் கூடியதென்று எண்ணுவார்களானால், ஆக்கினை அவர்கள்மீது வராது. இருப்பினும், மனமுவந்து இதயத்தின் ஆழத்திலிருந்து சந்தோஷத்தோடு ஊழியம் செய்வார்களேயாகில், இதைவிட, மேன்மையான காரியங்களை தேவனுக்காக நடப்பிக்கலாம். சிலுவையைச் சுமப்பதிலும், சுயத்தை வெறுப்பதிலும் தேவனுடைய ஜனங்கள் வெகுவாகப் பின்தங்கிவிட்டார்கள் என்பதை அவர்களும் அறிந்திருக்கிறார்கள்; உலக ஜனங்களும் அறிந்திருக்கிறார்கள். பரலோக புஸ்தகங்களில் தங்களது பெயர்கள் எழுதப்பெற்றிருக்கும் அநேகர், தங்கள் பெயர்களுக்கு எதிராக, தேவனுடைய ஆசீர்வாதங்கள் பூமியில் பெருக உழைத்தவர்களென்று எழுதப்பெற்றிருப்பதற்குப் பதிலாக, அதை அனுபவித்தவர்களென்று எழுதப்பெற்றிருப்பார்கள். கிறிஸ்துவின் பெயரைக் கொண்டிருக்கும் அநேகரால், அவரது மகிமை மங்கலாக்கப்பட்டு, அவரது அழகு திரையிடப் பட்டு, அவரது மேன்மை வெளிப்படுத்தப்படாமல் மறைக்கப்படுகிறது. (64)

சபைப் பதிவேடுகளில் அநேக பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் கிறிஸ்துவின் ஆளுகைக்கடியில் இல்லை. அவரது போதனைக்கு அவர்கள் செவிசாய்ப்பதுமில்லை. அவரது பணியைச் செய்வது மில்லை. இத்தகையோர் சத்துருவின் கட்டுப்பாட்டுக்கடியில் இருக்கிறார்கள். அவர்கள் உருப்படியான எந்த நன்மையும் செய்கிறதில்லை. மதிப்பிட்டு அறியமுடியாத அளவிற்கு தீமைகளையே செய்துகொண்டிருக்கிறார்கள். ஏனெனில் அவர்களது செல்வாக்கு ஜீவனுக்கேற்ற ஜீவவாசனையாக இராமல், மரணத்திற்கேற்ற மரணவாசனையாக இருக்கிறது. (65)

“இவைகளை விசாரியாதிருப்பேனோ?” (எரே. 5:9) என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேலர்கள் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றத் தவறியதினிமித்தம் அவர் அவர்களை ஒதுக்கிவிட்டு, பிற ஜனங்களுக்கு அழைப்பை விடுத்தார். இவர்களும் இஸ்ரவேல் ஜனங்களைப்போலவே ஜீவிப்பார்களாகில், இதேமுறையில் புறக்கணிக்கப்படமாட்டார்களா? (66)

திராட்சத்தோட்டத்து உவமையில் கிறிஸ்து தோட்டக்காரர்களை குற்றவாளிகளாகத் தீர்த்தார். அவர்கள்தான் தோட்டத்தின் கனிகளை எஜமானுக்குத் தர மறுத்தனர். யூத தேசத்தில் ஆசாரியர்களும், போதகர்களும் ஜனங்களைத் தவறான பாதையில் நடத்தி, அவர் உரிமைகோரியபடி தேவனுக்கு ஆராதனை செய்வதை மறுத்துப்போட்டனர். தேசத்தை கிறிஸ்துவைவிட்டு திரும்பச் செய்தவர்கள் இவர்களே. (67)

மனிதப் பாரம்பரியம் கலவாத தேவனுடைய பிரமாணம் கீழ்ப்படிதலின் அளவுகோலாக இருப்பதாக கிறிஸ்து ஜனங்களுக்கு உபதேசித்தார். இது ரபிமார்களின் எதிர்ப்பைக் கிளறியது. அவர்கள் மனித உபதேசங்களை தேவனுடைய வார்த்தைக்கும் மேலாக உயர்த்தி, ஜனங்களை தேவனுடைய நியமங்களைவிட்டு திரும்பச் செய்தனர். மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பிரமாணங்களை ஒதுக்கிவிட்டு, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதை அவர்கள் விரும்பவில்லை. மனித விவேகத்தின்மீதுகொண்ட பெருமையையும், மனிதரால் வரும் புகழ்ச்சியையும் சத்தியத்திற்காக தியாகம் செய்ய விரும்பவில்லை. தேவன் மக்களிடம் என்ன எதிர்பார்க்கிறாரென்பதை கிறிஸ்து விளக்கியபோது, தங்களுக்கும் ஜனங்களுக்கும் இடையே அவர் குறுக்கிடக்கூடாதபடி ஆசாரியர்களும் மூப்பர்களும் அவருடைய உரிமையை மறுத்தனர். அவருடைய கடிந்துகொள்ளுதல்களையும் எச்சரிப்புகளையும் ஏற்க மறுத்து, ஜனங்களை அவருக்கு விரோதமாகத் தூண்டிவிட்டு, அவரைக் கொலைசெய்வதற்கு அவர்கள் எத்தனித்தனர். (68)

கிறிஸ்து புறக்கணிக்கப்பட்டதற்கும், அதன்பிறகு நடைபெற்ற சம்பவங் களுக்கும் பொறுப்பாளிகள் அவர்களே. ஒரு தேசம் பாவத்தில் மூழ்கி

அழிவைச் சந்தித்ததற்கு அதின் மார்க்கத் தலைவர்களே காரணிகளானார்கள். (69)

நம்முடைய நாட்களிலுங்கூட இத்தகைய செல்வாக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கவில்லையா? கர்த்தருடைய திராட்சைத்தோட்டத்தின் ஊழியக் காரரில் அநேகர் யூதத் தலைவர்களின் வழிமுறையைப் பின்பற்றிக்கொண் டிருக்கவில்லையா? தேவனுடைய தெளிவான கோரிக்கைகளுக்குச் செவிசாய்ப்பதினின்று அநேகரை மார்க்கசம்பந்தமான போதகர்கள் திசைதிருப்பவில்லையா? தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியுமாறு ஜனங்களுக்குப் போதியாமல், அவைகளை மீறும்படியாக அவர்களுக்குப் போதிக்கவில்லையா? சபைகளின் பிரசங்கபீடத்திலிருந்து, தேவனுடைய பிரமாணம் இந்நாட்களில் மனுஷரைக் கட்டுப்படுத்துவதில்லையென்று பிரசங்கிக்கப்படுகிறது. மனிதப் பாரம்பரியங்களும், நியமங்களும், பழக்கவழக்கங்களும் உயர்த்தப்படுகின்றன. பெருமைக்கும் சுயத்தைப் பூர்த்திசெய்வதற்கும் முக்கியத்துவமளித்து, தேவனுடைய ஈவுகள் பேணிவளர்க்கப்பட்டு, பெருமையும் சுயதிருப்தியும் நிறைந்து, தேவனுடைய கோரிக்கைகள் அசட்டைசெய்யப்படுகின்றன. (70)

தேவனுடைய பிரமாணத்தை ஒதுக்கிவைப்பதின்மூலம் தாங்கள் என்ன செய்கிறோமென்பதை மனுஷர் அறியாதிருக்கிறார்கள். தேவனுடைய பிரமாணம் அவருடைய குணத்தின் மறுபடிவமாக இருக்கிறது. அவருடைய இராஜ்யத்தின் கொள்கைகளை அது உள்ளடக்கியுள்ளது. இந்த நியமங்களுக்குக் கீழ்ப்படிய மறுக்கும் எந்த ஒரு மனிதனும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் தன்னை வந்து சேராதபடிக்கு தனக்குத்தானே தடையை உண்டுபண்ணிக்கொள்கிறான். (71)

தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதினால்மாத்திரமே இஸ்ரவேலருக்குமுன் வைக்கப்பட்டிருக்கும் மகிமையான சாத்தியக்கூறுகளை செயல்படுத்தமுடியும். நம்முடைய மனம், ஆத்துமா, சரீரம் முழுமையான ஆசீர்வாதத்தைப் பெறுவது, நம்முடைய குணம் மேம்பாடு அடைவது, நம்முடைய வீடும் நிலமும் ஆசீர்வதிக்கப்படுவது, இம்மைக்குரிய மற்றும் மறுமைக்குரிய ஆசீர்வாதங்களைப் பெறுவது ஆகிய அனைத்தும் கீழ்ப்படிதலின்மூலமாக மாத்திரமே சாத்தியமாகும். (72)

ஆவிக்குரிய வாழ்வில் எப்படியோ அப்படியே இயற்கை சார்ந்த உலகிலும் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதே கனிகொடுப்பதற்கான நிபந்தனையாகும். தேவனுடைய பிரமாணத்தைப் புறக்கணிக்க வேண்டுமென்று மக்கள் ஜனங்களுக்குப் போதனைசெய்யும்போது, அவருடைய நாமத்திற்காக கனிகொடுக்காதபடி அவர்களைத் தடைசெய்கின்றனர். கர்த்தருடைய

திராட்சத்தோட்டம் கனிகொடாதபடி செய்ததற்கான குற்றம் அவர்களைச் சாரும். (73)

தேவனுடைய ஊழியக்காரர்கள் எஜமானனுடைய கட்டளையை ஏற்று இந்நாட்களில் நம்மைச் சந்திக்க வருகிறார்கள். கிறிஸ்து செய்ததுபோலவே, தேவனுடைய வார்த்தைக்கு நாம் கீழ்ப்படிய வேண்டுமென்று வற்புறுத்துகி றார்கள். திராட்சத்தோட்டத்தின் கனிகள்—அதாவது அன்பு, தாழ்மை, தற்தியாகமுள்ள சேவை போன்ற கனிகள் நம்மிலே காணப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார்கள். இதைக் கேட்கும் தோட்டக்காரர்கள் யூதத் தலைவர்களைப்போன்றே திராட்சத்தோட்டத்தில் பணிபுரிபவர்களில் அநேகர் கோபமூட்டப்படவில்லையா? தேவனுடைய பிரமாணத்தின் உரிமைகோருதல் ஜனங்களுக்குமுன்பாக வைக்கப்படும்போது, அதைப் புறக்கணிக்கும்படி மனிதர்களை வழிநடத்த, இத்தகைய போதகர்கள் தங்களது செல்வாக்கைப் பயன்படுத்துவதில்லையா? தேவன் இத்தகைய போதகர்களை உண்மையற்ற ஊழியக்காரர்கள் என்று அழைக்கிறார். (74)

ஆதி இஸ்ரவேலருக்கு தேவன் கொடுத்த கட்டளை இன்றைய சபைக்கும் அதின் தலைவர்களுக்கும் ஒரு பக்திவிநயமான எச்சரிப்பாக இருக்கிறது. இஸ்ரவேலரைக்குறித்து கர்த்தர்: "என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்; அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள்" (ஓசியா 8:12) என்கிறார். ஆசாரியர்களையும்போதகர்களையும் பார்த்து: "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்" (ஓசியா 4:6) என்கிறார். (75)

தேவனிடமிருந்து வரும் எச்சரிப்புகளுக்கு நாம் செவிசாய்க்காமல் இருக்கலாமா? அவருக்குச் சேவைசெய்யும்படியாக அவர் நமக்கு வழங்கும் தருணங்களை முன்னேற்றுவிக்காமல் இருக்கலாமா? இவ்வுலகத்தின் கேலியும், பகுத்தறிவின் பெருமையும், மானிடப் பழக்கவழக்கங்களுக்கும் பாரம் பரியங்களுக்கும் ஒத்துப்போகுதலும், கிறிஸ்துவிற்குச் சேவைசெய்யாதபடி தங்களை கிறிஸ்துவின் பின்னடியார்களென்று சொல்லிக்கொள்பவர்களைத் தடுக்கமுடியுமா? யூதத் தலைவர்கள் கிறிஸ்துவைப் புறக்கணித்துப்போட்ட தைப்போல இவர்களும் தேவனுடைய வார்த்தைகளைப் புறக்கணித்துவிடு வார்களா? இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தின் பலன் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ளது. இன்றைய சபை எச்சரிப்பை எடுத்துக்கொள்ளுமா? (76)

“சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருந்தாயானால், நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே… அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப்போடப்பட்டன, நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. சுபாவக்கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு”—ரோமர் 11:17–21. (77) ★

# 24

# கல்யாண வஸ்திரம் இல்லாதவன்...!

**(மூலநூல் : பக்கங்கள் 307–319)**
**மத்தேயு 22:1–14**

திருமணவஸ்திரம்குறித்த உவமை மாபெரும்விளைவுகளைக்குறித்த ஒரு பாடத்தை நமக்கு முன்னால் எடுத்து வைக்கிறது. தெய்வீகத்திற்கும் மனுஷீகத்திற்கும் உள்ள ஐக்கியத்தையே திருமணம் சுட்டிக்காட்டுகிறது. திருமண வஸ்திரம் குணத்திற்கு அடையாளமாக இருக்கிறது. அதை அணிந்திருக்கிறவர்கள் மாத்திரமே விருந்தில் கலந்துகொள்வதற்குத் தகுதியுள்ளவர்களாகக் கருதப்படுவர். (1)

இந்த உவமையில், மாபெரும் இரவு விருந்தில் காணப்பட்டதுபோல, சுவிசேஷ அழைப்பு விடுக்கப்படுவதையும், அதை யூத ஜனங்கள் புறக்கணிப் பதையும், பின்பு இரக்கம்கலந்த அழைப்பு புறஜாதியினருக்குக் கொடுக்கப்படு வதையும் நாம் காண்கிறோம். மேலும், அந்த அழைப்பை மறுத்துப் போட்டவர்களுக்கு வரப்போகின்ற மிகப்பெரும் அவமதிப்பையும் மிகவும் பயங்கரமான தண்டனையையும் இந்த உவமை எடுத்துக்காட்டுகிறது. விருந்தில் கலந்துகொள்வதற்கு அழைப்பு இராஜாவிடமிருந்து வருகிறது. கட்டளை பிறப்பிப்பதற்கு அதிகாரம் கொண்டவரிடமிருந்து அது வருகிறது. அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளுகிறவன் கனத்தைப்பெறுகிறான். இருப்பினும், இந்த மேன்மை மதித்து, பாராட்டப்படவில்லை. இராஜாவின் அதிகாரம் அவமதிக்கப்படுகிறது. வீட்டெஜமானனின் அழைப்பு அலட்சியத்தோடு கருதப்பட்டது. இராஜாவின் அழைப்போவெனில் அவமதிப்பிலும் கொலையிலும் முடிவடைந்தது. அவர்கள் அந்த ஊழியர்களை இகழ்ந்து துன்புறுத்தி கொலைசெய்தனர். (2)

தனது அழைப்பு அவமதிக்கப்பட்டதை அறிந்த அந்த வீட்டெஜமான், அழைக்கப்பட்டவர்கள் அபாத்திரராகப்போனபடியால், அவர்களில் ஒருவனும்

தனது விருந்தை ருசிப்பதில்லையென்று ஆணையிட்டான். மேலும் ராஜாவிற்கு அதிக அவமதிப்பை ஏற்படுத்தியவர்களை அவரது பிரசன்னத்தினின்று அகற்றி, பந்தியைவிட்டு விரட்டும்படியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது; அதுமட்டுமின்றி, அவன் "தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான்" (மத்தேயு 22:7). (3)

இந்த இரண்டு உவமைகளிலும் விருந்தினர்களுக்கு விருந்து கொடுக்கப்படுகிறது. ஆனால் இரண்டாவது உவமையோ விருந்துக்கு வருகிற அனைவரும் செய்யவேண்டிய ஆயத்தம் ஒன்று இருக்கிறதென்று காட்டுகிறது. இந்த ஆயத்தத்தை அலட்சியம்செய்பவர்கள் அங்கிருந்து துரத்தப்பட்டார்கள். "விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு: சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள்" (மத்தேயு 22:11–13) என்றான். (4)

விருந்திற்கான அழைப்பு கிறிஸ்துவின் சீடர்களால் விடுக்கப்பட்டது. தேவனுடைய இராஜ்யம் சமீபித்திருக்கிறபடியால், மக்கள் மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டுமென்ற அழைப்பை கர்த்தர் முதலாவது பன்னிரண்டு சீஷர்கள்மூலமாகவும், பின்பு எழுபது நபர்கள்மூலமாகவும் விடுத்தார். ஆனால் அழைப்பிற்கு மக்கள் செவிசாய்க்கவில்லை. விருந்திற்கு அழைக்கப்பட்டவர்கள் அதில் கலந்துகொள்ளவில்லை. அப்பொழுது வேறு ஊழியக்காரரும் அழைக்கப்பட்டு, "நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, கலியாணத்திற்கு வாருங்கள்" என்று அழைத்தனர். கிறிஸ்து சிலுவையிலறையப்பட்ட பின்னர் இந்த அழைப்பு யூத தேசத்தாருக்கு விடுக்கப்பட்டது. தங்களை தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட விசேஷித்த மக்களென்று கூறி உரிமைபாராட்டிக் கொண்டிருந்த யூதர்கள், பரிசுத்த ஆவியின் வல்லமையோடு வழங்கப்பட்ட சுவிசேஷத்தைப் புறக்கணித்தனர். பலர் மிகவும் இகழ்ச்சியான முறையில் இக்காரியத்தைச் செய்தனர். இரட்சிப்பைக்குறித்தும் மகிமையின் கர்த்தரை புறக்கணித்தவர்களுக்கு அவர் வழங்கும் மன்னிப்பைக்குறித்தும் கேள்விப்பட்ட சிலர் கடும் எரிச்சல்கொண்டு, அதைக் கூறியறிவித்தவர்களுக்கு எதிராகச் செயல்படத் துவங்கினர். அப்பொழுது கர்த்தருடைய பிள்ளைகளுக்கு "மிகுந்த துன்பம் உண்டாயிற்று" (அப். 8:1). பல ஆண்களும் பெண்களும்

சிறையில் அடைக்கப்பட்டனர். ஸ்தேவான், யாக்கோபு போன்ற கர்த்தருடைய ஊழியர்கள் கொலைசெய்யப்பட்டனர். (5)

இவ்வண்ணமாக யூத ஜனங்கள் தேவனுடைய இரக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தனர். இதன் விளைவு எவ்வண்ணமாக இருக்கும் என்பதை உவமையின்மூலமாக கிறிஸ்து முன்னறிவித்தார். “ராஜா அதைக் கேள்விப் பட்டு, கோபமடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலை பாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான்.” எருசலேம் நகரம் அழிக்கப்பட்டு, யூதர்கள் சிதறடிக்கப்பட்டதின்மூலம் அவர்களைக்குறித்து உரைக்கப்பட்ட நியாயத்தீர்ப்பு நிறைவேறியது. (6)

விருந்தில் கலந்துகொள்ள அழைக்கப்பட்ட மூன்றாவது அழைப்பு, சுவிசேஷம் புறஜாதிகளுக்கு வழங்கப்படுவதைக் குறிக்கிறது. ராஜா தன் ஊழியக்காரரை நோக்கி: “கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரமாய்ப் போனார்கள். ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக்கொண்டு வாருங்கள்” என்றான். (7)

ராஜாவின் ஊழியக்காரர் புறப்பட்டு: “வழிச்சந்திகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள்.” அது நல்லோரும் தீயோரும் கலந்திருந்த ஒரு கூட்டமாயிருந்தது. விருந்தில் கலந்துகொள்ள மறுத்தவர்களைப்போன்றே அதில் கலந்துகொண்ட சிலர் விருந்தளித்தவர்மீது எவ்வித மரியாதையையும் காட்டாதவர்களாயிருந்தனர். முதலாவது எந்த வகுப்பாருக்கு அழைப்புவிடுக்கப்பட்டதோ அந்த வகுப்பார் வரவில்லை. இராஜாவின் விருந்தில் கலந்துகொள்வதற்காக உலக ஆதாயங்களைத் தியாகம்செய்ய வேண்டுமோவென்று அவர்கள் எண்ணினர். அழைப்பை ஏற்றுக்கொண்டவர்களிலும் சிலர் தாங்கள் மாத்திரமே நன்மையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று எண்ணினர். அவர்கள் திருப்தியாக உணவருந்தினரேயொழிய இராஜாவை கனப்படுத்த விரும்பவில்லை. (8)

விருந்தினரைப் பார்க்க ராஜா வந்தபோது, அவர்கள் அனைவருடைய உண்மையான குணமும் வெளிப்பட்டது. விருந்தில் கலந்துகொண்ட ஒவ்வொருவனுக்கும் கல்யாணவஸ்திரம் வழங்கப்பட்டது; அந்த வஸ்திரம் இராஜாவின் அன்பளிப்பாக இருந்தது. அந்த உடையை அணிவதின்மூலம் விருந்தினர் விருந்தளிப்பவருக்குத் தங்கள் மரியாதையைத் தெரிவித்தனர். ஆனால் விருந்தில் கலந்துகொண்டவர்களில் ஒருவன் சாதாரண குடிமகனின் ஆடையோடு வந்திருந்தான். இராஜாவைச் சந்திப்பதற்குத் தேவையான ஆயத்தத்தை அவன் செய்யமறுத்து, தனக்கு வழங்கப்பட்ட விலைமதிப்புமிக்க

ஆடையை அணியாமல் அலட்சியம் செய்தான். இவ்வண்ணமாக அவன் ராஜாவை அவமரியாதை செய்தான். இராஜா அவனை நோக்கி: “நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய்” என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான். அவன் தனக்குத்தானே கண்டனம் செய்தவனாகயிருந்தான். அப்பொழுது ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: “இவனைக் கையுங்காலும் கட்டிக்கொண்டுபோய் புறம்பான இருளிலே போடுங்கள்” என்றான். (9)

இராஜா தன் விருந்தினர்களை ஆய்வுசெய்தது நியாயத்தீர்ப்புக்கு ஒப்பாக இருக்கிறது. சுவிசேஷ விருந்தில் பங்கெடுக்கும் விருந்தாளிகள் தேவனுக்குச் சேவைசெய்பவர்களாகவும் ஜீவபுஸ்தகத்தில் தங்கள் பெயர்கள் எழுதப்பெற்றிருக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். தங்களை கிறிஸ்தவர்களென்று கூறிக்கொள்ளும் அனைவரும் மெய்யான சீஷர்களாக இருப்பதில்லை. நீதிமானுடைய சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு யாருக்கெல்லாம் தகுதியுள்ளது என்பது இறுதியாக பலன் அளிக்கப் படுவதற்குமுன் முடிவு செய்யப்படும். “அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது” (வெளி. 22:12) என்று கிறிஸ்து கூறியிருப்பதினால், இந்த முடிவு அவர் மேகங்கள்மீது இரண்டாம் முறையாக வருமுன்னர் எடுக்கப்படும். அவருடைய வருகைக்குமுன்னர், ஒவ்வொரு மனிதனின் தன்மையும் தீர்மானிக்கப்பட்டு விடும். கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொரு நபருக்கும் அவரவரது கிரியைகளுக்குத்தக்கதாக வெகுமதி பகிர்ந்தளிக்கப்படும். (10)

மக்கள் பூலோகத்தில் ஜீவித்துக்கொண்டிருக்கும் இந்நாட்களிலே நுட்ப நியாயவிசாரணை பரலோக நீதிமன்றத்திலே நடைபெற்று வருகிறது. அவரைப் பின்பற்றுகிற அனைவரது ஜீவியங்களையும் தேவன் ஆய்வு செய்கிறார். பரலோகப் புஸ்தகங்களில் காணப்படும் குறிப்புகளின்படி ஒவ்வொரு மனிதனும் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கப்படுகிறான். ஒவ்வொரு மனிதனின் முடிவும் நித்தியமாகத் தீர்மானிக்கப்படுகிறது. (11)

உவமையில் கூறப்பட்டுள்ள கலியாண வஸ்திரம் கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுகிறவர்களிடம் காணப்படும் தூய்மையான, கறையற்ற குணத்தைக் குறிக்கிறது. “கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல்” “சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது” (எபே. 5:27). வேதவாக்கியத்தின்படி அந்த மெல்லிய வஸ்திரம் என்பது “பரிசுத்தவான்களுடைய நீதிகளே” (வெளி. 19:8) என்று சபையைக்குறித்து எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவினுடைய நீதியும் அவருடைய சொந்தமான பழுதற்ற குணமும் விசுவாசத்தின்

மூலமாக அவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் வழங்கப்படுகிறது. (12)

மாசற்ற நிலை எனப்படும் வெண் வஸ்திரத்தை, நமது ஆதி பெற்றோர், தேவன் அவர்களை ஏதேனில் வைத்திருந்தபோது அணிந்திருந்தனர். தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றவாறு பூரண இசைவோடு அவர்கள் வாழ்ந்தனர். அவர்களது உள்ளான பாசத்தின் அனைத்து வல்லமையோடும் பரலோகப் பிதாவை நேசித்தனர். தங்கள் முழு பெலத்தோடு பரலோகத்தின் தேவனை நேசித்தனர். ஒரு அழகான மென்மையான ஒளி— அதாவது தேவனுடைய ஒளி பரிசுத்த தம்பதிகளை போர்த்தி இருந்தது. பரலோகத்தின் மாசற்ற தன்மையின் ஆவிக்குரிய ஆடைகளின் ஒரு அடையாளமாக இந்த ஒளியின் ஆடை இருந்தது. அவர்கள் தேவனுக்கு உண்மையாக இருந்திருப்பார்களே யாகில், அந்த ஒளி அவர்களை எப்பொழுதும் சூழ்ந்துகொண்டிருந்திருக்கும். ஆனால் பாவம் பிரவேசித்தபோது, தேவனுடன் அவர்களுக்கிருந்த தொடர்பு அறுந்து, அவர்களைச்சுற்றிப் பிரகாசித்த ஒளி அவர்களைவிட்டு நீங்கிற்று. பரலோக வஸ்திரம் தங்களைவிட்டு நீங்கியவுடன், அவர்கள் தாங்கள் நிர்வாணிகளாகி வெட்கப்பட்ட நிலையில், பரலோக ஆடைகளுக்குப் பதிலாக தங்களை மூடிக்கொள்வதற்கு அத்தி இலைகளை சேர்த்துத் தைத்து ஆடைகளை உருவாக்க முயற்சித்தனர். (13)

ஆதாம்—ஏவாள் ஆகியோரின் கீழ்ப்படியாமையின் நாட்களிலிருந்து தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறவர்கள் இதையே செய்துவருகின்றனர். மீறுதலால் ஏற்பட்ட நிர்வாணத்தை மறைக்க அத்தியிலைகளை சேர்த்து தைத்துவருகின்றனர். அவர்களது சொந்தக் கிரியைகளின்மூலமாக தங்களது பாவங்களை மூடவும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான பிள்ளை களாக தங்களை ஆக்கிக்கொள்ளவும் முயற்சிசெய்துவருகிறார்கள். (14)

ஆனால், இதை அவர்கள் ஒருபோதும் செய்ய இயலாது. தேவன் வழங்கியிருந்த மாசற்ற நிலை எனப்படும் காணாமற்போன அந்த வஸ்திரத் திற்குப் பதிலாக, மனிதன் தனது சூழ்ச்சியினால் எந்த ஆடையையும் அணிவிக்க முடியாது. ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்திலே கிறிஸ்துவுடனும் தேவதூதர்களுடனும் பங்கெடுக்க அமரப்போகிற எந்த ஒரு மனிதனும் அத்தியிலை வஸ்திரத்தையோ இவ்வுலகியல் சார்ந்த குடிமகனின் வஸ்திரத்தையோ அணிந்துகொள்ளமுடியாது. (15)

கிறிஸ்து வழங்கும் வஸ்திரத்தை அணிந்திருப்பவர்கள் மாத்திரமே தேவனுடைய சமூகத்திற்கு முன்பாக நிற்கமுடியும். அவரது சொந்த நீதி யென்னும் ஆடையை கிறிஸ்து ஒவ்வொரு மனந்திரும்புகின்ற, விசுவாசிக் கின்ற ஆத்துமாவிற்கும் அணிவிக்கின்றார். “உன் நிர்வாணமாகிய அவலட்

சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங் களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும் உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்" (வெளி. 3:18) என்று அவர் கூறுகின்றார். (16)

பரலோகத் தறியிலே உருவாக்கப்படும் தூய்மையான அந்த ஆடையில் மானிட சூழ்ச்சியால் உருவாக்கப்பட்ட ஒரு நூல்கூட இருப்பதில்லை. கிறிஸ்து மானிடனாக இருந்தபோது பூரண குணத்தை வெளிப்படுத்தினார். அத்தகைய பூரணகுணத்தை நமக்குப் பகிர்ந்தளிக்க அவர் விரும்புகிறார். "எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது" (ஏசா. 63:6) என்று ஏசாயாவில் வாசிக்கிறோம். நாமாகவே செய்யக்கூடிய எந்த ஒரு காரியமும் பாவத்தினால் தீட்டுப்படுகிறது. "நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க" மனுஷகுமாரன் வெளிப்பட்டார். "நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" (1 யோவா. 3:5,4) என்று வேதாகமம் கூறுகிறது.ஆனால் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு கோரிக்கைக்கும் கீழ்ப்படிந்திருந்தார். "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" (சங்கீதம் 40:8) என்று அவர் தம்மைக்குறித்துக் கூறியிருக்கிறார். இந்த பூமியில் அவர் வாழ்ந்தபோது, தமது சீஷர்களைப் பார்த்து: "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" (யோவான் 15:10) என்றார். அவர் தமது முழுமையான கீழ்ப்படிதலினாலே ஒவ்வொரு மானிடனும் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வது சாத்தியமென்பதை வாழ்ந்துகாட்டினார். நம்மை நாமே கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கும்போது, நம்முடைய இதயம் அவருடைய இதயத்தோடு இணைந்து, நமது சித்தம் அவருடைய சித்தத்தோடு கலந்து, நம்முடைய மனம் அவருடைய மனமாக மாறி, நம்முடைய சிந்தை அனைத்தும் அவருடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படும். அவரது வாழ்க்கையைப்போல நாம் வாழ்வோம். இப்படி நாம் செய்யும்போது, அவருடைய நீதியின் வஸ்திரத்தை அணிந்துகொள்ளுகிறோம். பின்பு கர்த்தர் நம்மைப் பார்க்கும்போது, அத்தியிலை வஸ்திரம் தரித்தவர் களாகக் காணாமல், பாவத்தின் நிர்வாணத்தையும் அருவருப்பான தோற்றத் தையும் காணாமல், யெகோவாவின் (தேவனின்) பிரமாணங்களுக்கு ஏற்ற பூரணமான கீழ்ப்படிதலின்மூலம் தமது சொந்த நீதியின் வஸ்திரத்தை அணிந்திருப்பவர்களாகக் காண்கிறார். (17)

கலியாண விருந்தில் கலந்துகொண்ட விருந்தினரை ராஜா கூர்ந்து கவனித்து மேற்பார்வையிட்டார். அவரது கோரிக்கைகளுக்குக் கீழ்ப்படிந்து கலியாண வஸ்திரத்தை தரித்திருந்தவர்கள்மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்

பட்டார்கள். சுவிசேஷ விருந்தில் கலந்துகொள்ளும் விருந்தினர்களுக்கும் இதே பரீட்சை அளிக்கப்படுகிறது. இராஜாதிராஜா நடத்தப்போகும் அந்த நுணுக்கமான ஆய்விலே அனைவரும் தேர்ச்சிபெறவேண்டும். கிறிஸ்துவினுடைய நீதியின் வஸ்திரத்தை அணிந்திருப்பவர்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். (18)

நீதி என்பது சரியான காரியத்தைச் செய்வதாகும். அவனவனுடைய கிரியைகளின்படியே ஒவ்வொரு மனிதனும் நியாயந்தீர்க்கப்படுவான். நம்முடைய குணம் நம்முடைய செயற்பாடுகளில் வெளிப்படுகிறது. நம்முடைய விசுவாசம் உண்மையானதுதானா என்பதை நம்முடைய கிரியைகள் வெளிப்படுத்துகிறது. (19)

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒரு வஞ்சகர் அல்லவென்றும் வேதாகம மார்க்கம் தந்திரமாக புனையப்பட்ட ஒரு கட்டுக்கதை அல்லவென்றும் நாம் விசுவாசித்தால் மட்டும் போதாது. மனிதர் இரட்சிக்கப்படும்பொருட்டாக வானத்தின்கீழே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் இல்லையென்ற விசுவாசமுங்கூட இருக்கலாம். இருப்பினும், விசுவாசத்தின்மூலமாக அவரை நாம் நமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமலிருக்கலாம். சத்தியத்தை விசுவாசித்தால்மட்டும் போதாது. கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைத்து, அதை அறிக்கைசெய்து நமது பெயர்களை சபை ஆவணங்களிலே சேர்த்தால்மாத்திரம் போதாது. “அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்; அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்.”“அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்”–1 யோவா. 3:24; 2:3. மனந்திரும்பியதற்கான மெய்யான ஆதாரம் இதுவே. நமது சமயநம்பிக்கையைக்குறித்து எதைவேண்டுமானாலும் நாம் சொல்லலாம். ஆனால் கிறிஸ்து நமது நீதியின் கிரியைகளின்மூலமாக வெளிப்படுத்தப்படாவிட்டால் எந்த பயனும் கிடையாது. (20)

சத்தியம் நமது இருதயத்திலே ஊன்றப்படவேண்டும். அது நமது மனதைக் கட்டுப்படுத்தி, உணர்வுகளை ஒழுங்குபடுத்த வேண்டும். நமது குணம் முற்றிலுமாக தெய்வீக வார்த்தைகளால் முத்திரையிடப்படவேண்டும். தேவனுடைய வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும், எழுத்தின் உறுப்பும் நமது அன்றாட செயல்முறைக்குக் கொண்டுவரப்படவேண்டும். (21)

தெய்வீக சாயலுக்குப் பங்காளியாக மாறுகிறவன் தேவனுடைய மாபெரும் நீதியின் படித்தரத்திற்கு, அதாவது அவருடைய பரிசுத்த பிரமாணத்திற்கு இசைந்துபோகிறவனாக இருப்பான். இந்தச் சட்டத்தை வைத்துத்தான்

தேவன் மக்களது செய்கைகளை அளந்துபார்க்கிறார். நியாயத்தீர்ப்பிலே இதுவே குணத்திற்கான பரீட்சையாக இருக்கும். (22)

கிறிஸ்து தமது மரணத்தின்மூலமாக நியாயப்பிரமாணத்தை ரத்து செய்துவிட்டதாக பலர் கருதுகின்றனர். ஆனால் அப்படிச் சொல்வதின்மூலம் அவர்கள் கிறிஸ்துவின் வார்த்தைக்கு முரணாகப் பேசுகிறார்கள். "நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்... வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது" (மத்தேயு 5:17,18) என்று கிறிஸ்து கூறுகிறார். மனிதன் நியாயப்பிரமாணத்தை மீறியதற்குப் பரிகாரம் செய்யவே கிறிஸ்து தமது ஜீவனைக் கொடுத்தார். நியாயப்பிரமாணத்தை ஒதுக்கிவைக்கவோ அல்லது அதை மாற்றவோ கூடுமானால், கிறிஸ்து மரித்திருக்கவேண்டிய அவசியமில்லை. கிறிஸ்து தமது ஜீவியநாட்களிலே தேவனுடைய பிரமாணத்தை கனப்படுத்தினார். தமது மரணத்தின்மூலமாக அதை நிலைப்படுத்தினார். தேவனுடைய பிரமாணத்தை அழிக்கும்படியாக அல்ல, மேலும் இழிவான படித்தரத்தை உருவாக்குவதற்காகவும் அல்ல; நீதி தொடர்ந்து நிலைநிறுத்தப்படவேண்டும். பிரமாணம் உறுதியாக என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்படியாக அது மாற்றப்படக்கூடாததென்று காட்டவேண்டும். இதற்காகவே அவர் தமது ஜீவனை ஒரு தியாகபலியாக ஒப்புக்கொடுத்தார். (23)

தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளுவது கூடாத காரிய மென்று சாத்தான் கூறிவந்திருக்கிறான். நம்முடைய சொந்த பலத்தைப் பயன்படுத்தி அவைகளைக் கைக்கொள்ளுவது இயலாது. ஆனால் கிறிஸ்து மனிதனாக வெளிப்பட்டபோது, பிரமாணங்களை பூரணமாகக் கைக்கொண்டதின்மூலம், மனுஷீகமும் தெய்வீகமும் இணையும்போது தேவனுடைய ஒவ்வொரு பிரமாணங்களையும் கைக்கொள்ளுவது எளிது என்பதை நிரூபித்திருக்கிறார். (24)

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனு டைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (யோவான் 1:12). இந்த வல்லமை மனிதனிடம் இல்லை. அது தேவனுடைய வல்லமை. ஒரு நபர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுகிறபோது, கிறிஸ்துவைப்போன்று ஜீவிப்பதற்கான வல்லமையைப் பெற்றுக்கொள்ளுகிறார். (25)

தேவன் தமது பிள்ளைகளிடத்தில் பரிபூரணத்தை வேண்டுகிறார். அவருடைய பிரமாணம் அவருடைய குணத்தின் மறுபடிவமாக இருக்கிறது.

அனைத்து குணத்திற்கும் அதுவே படித்தரமாகும். தேவனுடைய ராஜ்யத்தில் பங்கடைபவர்கள் ஒரே மாதிரியான குணமுடையவர்களாகக் காணப்படும்படி யாகவும், அதில் எந்தத் தவறும் இருக்கக்கூடாதென்பதற்காகவும் இந்த மாபெரும் படித்தரம் அனைவருக்கும் முன்பாக வைக்கப்படுகிறது. தேவனுடைய பிரமாணத்தின் பூரண வெளிப்பாடாக கிறிஸ்து இவ்வுலகில் ஜீவித்தார். தேவனுடைய பிள்ளைகளாகத் தங்களை அழைத்துக்கொள்பவர்கள் கிறிஸ்துவின் குணத்தை அணிந்துகொள்ளும்போது, தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவர். அவர்கள் பரலோகக் குடும்பத்தின் ஒரு அங்கமாக இருப்பார்களென்று அவர்களை அவர் நம்பலாம். கிறிஸ்துவின் நீதியென்னும் மகிமையான உடையைத் தரித்திருக்கும் அவர்களுக்கு இராஜாவின் விருந்திலே ஒரு இடம் கிடைக்கும். கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட திரள்கூட்டத்தினரோடு கலந்துகொள்ளும் உரிமை அவர்களுக்கு வழங்கப்படுகிறது. (26)

திருமண வஸ்திரமின்றி விருந்திற்கு வந்த அந்த மனிதன் இன்றைய நமது உலகில் அநேகருடைய நிலைமையைச் சுட்டிக்காட்டுகிறான். அவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்; சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களையும் சலுகைகளையும் உரிமைகோருகிறார்கள். எனினும், குணமாறுதல் தேவையில்லையென்று உணருகிறார்கள். அவர்கள் பாவத்திற்கான உண்மையான மனந்திரும்புதலை ஒருபோதும் உணர்ந்த தில்லை. கிறிஸ்து தங்களுக்குத் தேவையென்பதையும், அவர்மீது விசுவாசம் வைப்பது அவசியம் என்பதையும் அவர்கள் உணர்கிறதில்லை. தீமை செய்வதற்கான பரம்பரை குணங்களை அல்லது தாங்களாகவே வளர்த்துக்கொண்ட குணங்களை அவர்கள் மேற்கொள்ளவில்லை. எனினும் தாங்கள் நல்லவர்களாகவே இருப்பதாக நினைத்து, கிறிஸ்துவின்மீது நம்பிக்கைவைப்பதற்குப் பதிலாக தங்களது சொந்தத் தகுதிகளையே சார்ந்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் வசனத்தைக் கேட்பவர்களாக மாத்திரமே அந்த விருந்தில் கலந்துகொள்கிறார்கள். கிறிஸ்துவின் நீதியென்னும் வஸ்திரத்தை அவர்கள் தரித்துக்கொள்ளவில்லை. (27)

தங்களை கிறிஸ்தவர்களாகக் கூறிக்கொள்ளும் அநேகர் சாதாரண மானிட நன்னடத்தையாளர்களாகவே இருக்கின்றனர். கிறிஸ்துவைக் கனப்படுத்தி, அவரை உலகிற்கு அறிமுகம்செய்ய உதவுவதற்காக அருளப்பட்ட பரிசுத்த ஆவியை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. பரிசுத்த ஆவியானவரின் கிரியை அவர்களுக்கு விளங்காத ஒரு விசித்திரமான செயலாக இருக்கிறது. திருவசனம் போதிக்கிறபடி அவர்கள் நடந்துகொள்ளுகிறதில்லை. கிறிஸ்துவோடு இருப்பவர்களை உலகத்தோடிருப்பவர்களினின்று வேறுபடுத்தி

பிரித்துக்காட்டும் பரலோகக் கொள்கைகள் ஏறக்குறைய காணப்படக்கூடாத நிலையை அடைந்துவிட்டது. கிறிஸ்துவின் பின்னடியார்களென்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் விலகியிருக்கின்ற தனிச்சிறப்புள்ள தன்மைவாய்ந்த மக்களாகக் காணப்படவில்லை. இந்த இரு பிரிவினரையும் வேறுபடுத்திக் காண்பித்த கோடு மறைந்துவிட்டது. ஜனங்கள் தங்களை உலகிற்கும் அதின் பழக்கவழக்கங்களுக்கும் அதின் செயல்களுக்கும் அதின் தன்னலங்களுக்கும் கீழ்ப்படுத்தியிருக்கிறார்கள். உலகம் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து சபையை நெருங்கிவருவதற்குப்பதிலாக, சபை பிரமாணத்தை மீறி உலகத்தோடு ஒத்துப்போய்விட்டது. அனுதினமும் சபை உலகத்தின் வழியிலே திரும்பிக்கொண்டிருக்கிறது. (28)

கிறிஸ்துவின் மரணத்தின்மூலம் இரட்சிக்கப்பட எதிர்பார்த்துக்கொண் டிருக்கிற அனைவரும் அவரைப்போன்று சுயத்தைத் தியாகஞ்செய்து ஜீவிப்பதற்கு முன்வருவதில்லை. இலவசமாகக் கிடைக்கின்ற அவருடைய கிருபையின் ஐசுவரியங்களை அவர்கள் புகழ்ந்துபேசி, தங்களை நீதிமான்கள்போன்று, அதற்கேற்ற தோற்றத்தில் காட்டி—மறைக்க முயற்சித்து, தங்களது குணங்களில் காணப்படுகின்ற குறைகளை மறைத்துக்கொள்ளலாம் என்று நம்புகிறார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சி அனைத்தும் தேவனுடைய நாளில் தோல்வியைச் சந்திக்கும். (29)

பேணிவளர்த்துக்கொண்டிருக்கிற எந்த ஒரு பாவத்தையும் கிறிஸ்துவின் நீதி மூடிமறைக்காது. ஒரு மனிதன் தனது இதயத்திலே பிரமாணத்தை மீறுகிறவனாக இருக்கலாம். எனினும், தனது மீறுதலுக்கான செயல்களை அவன் வெளிப்படையாக காட்டாமலிருப்பதினால் அவன் மிகவும் நேர்மையான மனிதனாக உலகத்தாரால் கருதப்படலாம். ஆனால் தேவனுடைய பிரமாணம் இதயத்தின் இரகசியங்களை உற்றுநோக்கிப்பார்க்கிறது. ஒவ்வொரு செய லிற்கும் பின்னால் இருக்கின்ற நோக்கத்தை வைத்து ஜனங்கள் நியாயந் தீர்க்கப்படுவார்கள். தேவனுடைய பிரமாணத்திற்கு ஏற்றவாறு காணப்படும் செயல்கள் மாத்திரமே நியாயத்தீர்ப்பில் நிலைநிற்கும். (30)

தேவன் அன்பாக இருக்கிறார். கிறிஸ்துவாகிய ஈவை நமக்கு வழங்கி, அந்த அன்பை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். “தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” (யோவான் 3:16). அவரால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்ட மனிதனுக்கு எதையும் அவர் தடைசெய்ய வில்லை. சத்துரு நம்மை துரத்திவிடாதபடி நாம் அவரிடமிருந்து வல்லமை யையும் திறனையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக பரலோகம் முழுவதையும்

நமக்காக கொடுத்திருக்கிறார். ஆனால் தேவனுடைய அன்பு, பாவத்தைச் சகித்துக்கொள்ளும்படி அவரை வழிநடத்தாது. சாத்தானின் பாவத்தை அவர் பொறுத்துக்கொள்ளவில்லை. எந்த மனிதனின் பாவத்தையும் அவர் விசாரியாமல், தண்டியாமல் விடுவதில்லை. நமது பாவங்களுக்கு அவர் உடந்தையாக இருக்கமாட்டார். நமது குணங்களிலுள்ள குறைகளை கவனிக்கத் தவறமாட்டார். நாம் அவைகளை அவருடைய நாமத்தினால் மேற்கொள்ள வேண்டுமென்று நம்மிடம் அவர் எதிர்பார்க்கிறார். (31)

கிறிஸ்துவின் நீதியாகிய ஈவைப் புறக்கணிப்பவர்கள், எத்தகைய குணநலன்கள் தங்களை தேவனுடைய குமாரர்களாகவும் குமாரத்திகளா கவும் இருப்பதற்காக உருவாக்குமோ, அத்தகைய குணநலன்களைப் புறக்கணிக்கிறார்கள். எதுமாத்திரமே அந்த கலியாண விருந்திலே ஒரு இடத்தைப் பெறும்படியான தகுதியை அவர்களுக்குக் கொடுக்குமோ, அதை அவர்கள் புறக்கணித்துவிடுகிறார்கள். (32)

உவமையில் வரும் ராஜா கலியாண வஸ்திரம் தரித்திராதவனைப் பார்த்து: "நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான்." இதுபோலவே, நியாயத்தீர்ப்பின் நாளிலும் நடைபெறும். குணத்தில் காணப்படும் குறைகளை மனுஷர் கண்டுகொள்ளாது தற்போது விட்டுவிடலாம். ஆனால் நியாயத்தீர்ப்பு நாளிலே போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமிராது. (33)

கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ப வர்கள் மிகவும் சிறப்பான சலுகைகளை அனுபவிக்கும்படி இந்தத் தலை முறையிலே உயர்த்தப்பட்டு இருக்கிறார்கள். நம்முடைய கர்த்தரைக்குறித்து அதிகப்படியான வெளிச்சம் தொடர்ந்து நமக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆதிநாட்களில் தேவனுடைய ஜனங்கள் அனுபவித்துவந்த சலுகைகளைக் காட்டிலும் நாம் அதிக சலுகைகளை அனுபவித்துவருகிறோம். இஸ்ரவேல ருக்கு வழங்கப்பட்ட அந்த மாபெரும் வெளிச்சத்தை மாத்திரம் நாம் பெறாமல், கிறிஸ்துமூலமாக நமக்குக் கிடைக்கும் இரட்சிப்பைக்குறித்தும் கூடுதலான ஆதாரத்தைப் பெற்றிருக்கிறோம். யூதர்களுக்கு மாதிரியாகவும் அடையாளமாகவும் திகழ்ந்தவை நமக்கு நிஜமானவையாகத் திகழ்கின்றன. அவர்கள் கைவசம் பழைய ஏற்பாடு வரலாறு மாத்திரமே இருந்தது. நாமோ பழைய ஏற்பாட்டைமாத்திரமல்ல புதிய ஏற்பாட்டையும் பெற்றிருக்கிறோம். இந்த உலகிற்குவந்து சிலுவையிலே அறையுண்டு, பின்பு உயிர்த்தெழுந்து திறவுண்ட யோசேப்பினுடைய கல்லறைக்கு மேலாக நின்று, "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று முழங்கிய கிறிஸ்து நமது இரட்சகராயிருக்கிறாரென்ற நிச்சயமும் நமக்கிருக்கிறது. கிறிஸ்துவைக்குறித்த

அறிவையும் அவருடைய அன்பையும் நாம் புரிந்துகொள்ளும்போது, தேவனுடைய இராஜ்யம் நம் மத்தியில் ஸ்தாபிக்கப்படுகிறது. பிரசங்கங்களின்மூலமாகவும், பாடல்களின்மூலமாகவும் கிறிஸ்து நமக்கு வெளிப்படுத்தப்படுகிறார். மிகுந்த ஐஸ்வரியத்திலே ஆவிக்குரிய விருந்தொன்று நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. கணிக்கமுடியாத ஒரு விலைக்கிரயம் கொடுக்கப்பட்டு, அந்த கலியாணவஸ்திரம் ஒவ்வொரு நபருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. கிறிஸ்துவின் நீதியும், விசுவாசத்தின்மூலமாக நீதிமான்களாக்கப்படுவதும், தேவனுடைய வார்த்தையிலுள்ள மகாமேன்மையும் அருமையான வாக்குத்தத்தங்களும், பரிசுத்த ஆவியானவரின் தேற்றலும், கிறிஸ்துமூலமாக பிதாவின் சமூகத்தில் பிரவேசிப்பதும், நித்திய ஜீவனைப்பெற்று தேவனுடைய ராஜ்யத்தில் சேர்வதைக்குறித்த மிகவும் உறுதியான நிச்சயமாகிய இந்த ஆசீர்வாதங்கள் அனைத்தையும் தேவனுடைய தாசர்கள்மூலமாக அவர் நமக்கு வழங்குகிறார். அந்த மாபெரும் பரலோக விருந்திலே நமக்கு அனைத்தையும் வழங்கியிருக்கிறார். இதைத்தவிர வேறு எந்தக் காரியத்தை தேவன் நமக்காகச் செய்யக்கூடும்? (34)

பணிவிடை செய்யும் தூதர்களால்: நாங்கள் செய்யவேண்டுமென்று எங்களுக்குக் கட்டளையிட்ட ஊழியத்தை நாங்கள் செய்துமுடித்துவிட்டோம். பொல்லாத தூதர்களின் சேனையை நாங்கள் பின்வாங்கச்செய்தோம். தேவனுடைய அன்பு கிறிஸ்துமூலமாக எவ்விதம் வெளியாக்கப்பட்டுள்ளது என்பதை ஜனங்கள் புரிந்துகொள்ளும்படியாக, அவர்களுடைய ஆத்துமாக்களிலே வெளிச்சத்தை அனுப்பி, கிறிஸ்துவின் சிலுவையை பார்க்கத்தக்கதாக அவர்களை கவர்ந்திழுத்தோம். தேவனுடைய குமாரன் சிலுவையில் அறையப்படுவதற்குக் காரணமாயிருந்தது அவர்களது பாவமேயென்பதை உணர்ந்தபோது, அவர்களுடைய இதயங்கள் வெகுவாக அசைக்கப்பட்டன. தாங்கள் குற்றவாளிகள் என்பதையும், மனந்திரும்புதலுக்காக தாங்கள் எடுக்கவேண்டிய முயற்சிகளையும், சுவிசேஷத்தின் வல்லமையையும் உணர்ந்தார்கள். தேவனுடைய அன்பின் இனிமையை அவர்கள் உணர்ந்தபோது, அவர்களுடைய இதயங்கள் மென்மையாயின. கிறிஸ்துவினுடைய குணத்தின் அழகை அவர்கள் கண்டனர். அநேகருக்கு இந்தக் காரியங்கள் அனைத்தும் பயனற்றதாகவே இருந்தது. அவர்கள் தங்களது பழக்கவழக்கங்களையும் குணங்களையும் ஒப்படைக்கவில்லை. பரலோக ஆடையைத் தரித்துக்கொள்ளத்தக்கதாக, இந்த பூலோக ஆடையைக் களைந்துபோட அவர்கள் விரும்பவில்லை. அவர்களின் இதயங்களிலே பேராசை குடிகொண்டிருந்தது. தேவனை நேசிப்பதைப்பார்க்கிலும் அவர்கள் உலகத்தின் தோழமைகளை அதிகமாக நேசித்தார்கள் என்று பரலோகத்தில் கூறப்படுகிறது. (35)

இறுதித் தீர்மானத்தை எடுக்கின்ற அந்த நாளானது பயபக்தியோடு கூடிய அச்சமிகுந்த நாளாக இருக்கும். தனது தீர்க்கதரிசன கண்ணோட்டத்திலே அப்போஸ்தலனாகிய யோவான்: "பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை. மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்" (வெளி. 20:11,12) என்று விவரிக்கிறார். (36)

மனிதன் அந்த நித்தியத்திலே முகமுகமாய் நிற்கும்போது, அந்த நியாயத்தீர்ப்பின் நாளிலே சென்றகால நினைவுகள் அவனுக்கு துக்கத்தையே கொடுக்கக்கூடியதாக இருக்கும். கடந்தகால வாழ்வின் நிகழ்வுகள், முன்பாக வந்துநிற்கும். இவ்வுலகின் இன்பங்களும், ஐசுவரியங்களும், மேன்மைகளும் அவ்வளவு முக்கியமானவைகளாகக் காணப்படாது. தாங்கள் அவமதித்த நீதிமாத்திரமே மதிப்புள்ளதென்று மனிதர்கள் காண்பார்கள். சாத்தானின் வஞ்சிக்கும் கவர்ச்சிகளுக்கடியிலே தங்களது குணங்களை வடிவமைத்துக்கொண்டதைக் காண்பார்கள். தாங்கள் தெரிந்துகொண்ட ஆடைகள் முதல்முதலாக மருளவிழுந்துபோன அந்த மகா சத்துருவின் (சாத்தானின்) அடையாளச் சின்னமாக இருப்பதைக் காண்பார்கள். தாங்கள் தெரிந்துகொண்டதின் விளைவுகளை அப்பொழுது அவர்கள் காண்பார்கள். தேவனுடைய கட்டளைகளை மீறுவது என்பதின் பொருள் என்ன என்பதைக்குறித்த அறிவை உடையவர்களாக இருப்பார்கள். (37)

நித்தியத்திற்கு ஆயத்தப்படுவதற்காக எதிர்காலத்தில் அவர்களுக்கு ஒரு தவணையின் காலம் இருக்காது. இந்த வாழ்வின்போது நாம் கிறிஸ்துவினுடைய நீதியின் வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். தம்முடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிபவர்களுக்கு கிறிஸ்து ஆயத்தம்செய்துள்ள வாசஸ்தலங்களில் பிரவேசிப்பதற்கு ஏற்ற குணங்களை உருவாக்குவதற்கு அளிக்கப்பட்டிருக்கும் ஒரே சந்தர்ப்பம் இதுவேயாகும். (38)

நமது தவணையின் காலத்தின் நாட்கள் துரிதமாக முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. முடிவு சமீபமாயிருக்கிறது. "உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" (லூக்கா 21:34) என்று

நாம் எச்சரிக்கப்படுகிறோம். ராஜாவின் விருந்திலே நீங்கள் கலியாண வஸ்திரமின்றிக் காணப்படாதபடிக்கு ஜாக்கிரதையாயிருங்கள். (39)

"நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்." "தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக் கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்" –மத்தேயு 24:44; வெளி. 16:15. (40) ★

25

# தாலந்துகள்!

**(மூலநூல் : பக்கங்கள் 325–365)**
**மத்தேயு 25:13–30**

கிறிஸ்து ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், தமது சீடர்களிடம் தமது இரண்டாம் வருகையைக்குறித்துப் பேசினார். அவருடைய வருகை நெருங்கும்போது சில திட்டமான அடையாளங்கள் காணப்படும் என்பதைக் குறிப்பிட்டு, அவர்கள் விழிப்போடு ஆயத்தமாக இருக்கவேண்டு மென்று கூறினார். "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" (மத். 24:44) என்று அவர்களை அவர் மீண்டும் எச்சரித்தார். அவரது வருகையைக்குறித்து விழிப்போடிருத்தல் என்பதின் பொருள் என்னவென்பதை அவர் காட்டினார். சோம்பலோடு காத்திருக்காமல் கடுமையான உழைப்பில் நேரம் செலவிட வேண்டும். இந்தப் பாடத்தையே தாலந்துகள்பற்றிய உவமையின் வாயிலாக அவர் நமக்குக் கற்றுக்கொடுத்தார். (1)

"அன்றியும், பரலோகராஜ்யம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது. அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான்." (2)

புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற மனுஷன் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகிறான். இந்த உவமையை அவர் ஜனங்களுக்கு வழங்குகையில் அவர் இவ்வுலகைவிட்டு பரலோகம் செல்வதற்கான நேரம் நெருங்கியிருந்தது. உவமையில் வரும் ஊழியக்காரர்கள் அல்லது அடிமைகள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களைக் குறிக்கிறது. நாம் நம்முடையவர்கள் அல்ல. "நாம் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டுள்ளோம்" (1 கொரி. 6:20). "அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்...

கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்கள்" (1 பேதுரு 1:18,19). "பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக் கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்"–2 கொரி. 5:15. (3)

விலைமதிப்பிடமுடியாத கிரயத்திற்கு அனைத்து மனிதரும் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் வடிவிலே பரலோகத்தின் பொக்கிஷம் அனைத்தையும் பூமிக்கு வழங்கி, நமது சிந்தையையும், மனதையும், ஆத்துமா வையும், உணர்வையும் தேவன் கிரயத்திற்குக்கொண்டிருக்கிறார். விசுவாசி களானாலும் அவிசுவாசிகளானாலும் எல்லா மனுஷரும் கர்த்தருக்குச் சொந்த மானவர்கள். அனைவரும் அவருக்குச் சேவைசெய்யும்படியாக அழைக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த உரிமையை எவ்வாறு பெற்றுக்கொண்டார்களோ அதற்கேற்றபடி அந்த மகா நியாயத்தீர்ப்பின் நாளிலே ஒவ்வொரு மனிதனும் அவரிடத்திலே கணக்கு ஒப்புவிக்கவேண்டும். (4)

தங்கள்மீது தேவனுக்கு இருக்கும் உரிமையை அநேகர் விளங்கிக் கொள்ளவில்லை. கிறிஸ்துவின் சேவையை ஏற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே இந்த உவமையிலே அவரது சொந்த ஊழியக்காரர்களாகச் சுட்டிக்காட்டப்படுகிறார்கள். (5)

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் அவருக்குச் சேவைசெய்யும்படியாக மீட்கப்பட்டிருக்கிறார்கள். அவருக்கு ஊழியம் செய்வதே நமது வாழ்வின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டுமென்று கிறிஸ்து கற்றுக்கொடுக்கிறார். கிறிஸ்துதாமே ஒரு ஊழியராக இருந்தார். அவர் தமது பின்னடியார்கள் அனைவருக்கும் சேவையின் பிரமாணத்தைக் கொடுக்கிறார்—அதாவது தேவனுக்கும் உடன்மனிதனுக்கும் சேவைசெய்ய வேண்டுமென்று கூறுகிறார். நம்முடைய வாழ்வைக்குறித்து நாம் இதுவரை அறிந்திராத ஒரு மேன்மையான கருத்தை கிறிஸ்து இந்த உவமையின் வாயிலாக உலகிற்கு வழங்குகிறார். பிறருக்குப் பணிவிடைசெய்து ஜீவிக்கும்போது, நாம் கிறிஸ்துவுடன் இணைக்கப்படுகிறோம். சேவையின் பிரமாணம் நம்மை தேவனோடும் நமது உடன் மனிதர்களோடும் இணைத்துக்கட்டுகிறது. (6)

கிறிஸ்து தமது "ஆஸ்திகளை" தமது சேவைக்குப் பயன்படுத்து வதற்காக தமது ஊழியக்காரர்களிடம் வழங்குகிறார். "அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக" அவர் கொடுக்கிறார். பரலோகத்தின் நித்திய திட்டத்திலே ஒவ்வொரு நபருக்கும் ஒரு இடமுண்டு. ஆத்துமாக்களை இரட்சிப்பதில் கிறிஸ்துவுடன் சேர்ந்து ஒவ்வொருவரும் பணியாற்றவேண்டும். தேவனுக்காக ஊழியம் செய்வதற்கு இந்த பூமியிலே ஒரு சிறப்பான இடம்

குறிப்பிட்டுக் கொடுக்கப்பட்டிருப்பதைவிட, பரலோக வாசஸ்தலங்களிலே நமக்காக ஓரிடம் மிக நிச்சயத்தோடு ஆயத்தம்பண்ணப்படவில்லை. (7)

## பரிசுத்த ஆவியின் வரங்கள்

கிறிஸ்து தமது சபைக்கு ஒப்படைத்திருக்கும் தாலந்துகள், பரிசுத்த ஆவியினால் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்ற ஈவுகளையும் ஆசீர்வாதங்களையும் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகிறது. "எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்"–1 கொரி. 12:8–11. அனைவருக்கும் ஒரேமாதிரியான வரம் வழங்கப்படவில்லை. ஆனால் எஜமானரின் ஊழியக்காரனுக்கு ஆவியானவரின் வரம் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. (8)

கிறிஸ்து தமது சீஷர்களைவிட்டு பரமேறுவதற்கு முன்னர் "அவர்கள் மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" (யோவான் 20:22) என்று சொன்னார். "என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன்" (லூக்கா 24:49) என்று மீண்டும் அவர்களிடம் கூறினார். ஆனால் அவர் பரமேறும்வரை ஈவானது முழுமையாகப் பெற்றுக்கொள்ளப்படவில்லை. அப்பொழுது ஒரு சிறப்பான கருத்தோடு பரலோகத்தின் சிறப்பிற்குரிய ஆசீர்வாதம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கு வழங்கப்பட்டது. "ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார். கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது"–எபே. 4:8,7. "இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படி அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்" (1 கொரி. 12:11). கிறிஸ்துவின்மூலமாக அனைத்து வரங்களும் நம்முடையதாயிருக்கிறது. ஆனால் தேவனுடைய ஆவியானவரை எவ்வளவு ஏற்றுக்கொண்டிருக்கிறோமோ அதைச் சார்ந்தே அந்த வரங்கள் நம்முடையதாகமுடியும். (9)

பரிசுத்த ஆவியானவரின் வாக்குத்தத்தம் எவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டு பாராட்டப்படவேண்டுமோ அவ்வாறு செய்யப்படவில்லை. அதின் நிறைவேறுதலை எவ்வளவு மெய்யானதாக ஆக்கிக்கொள்ளவேண்டுமோ அவ்வாறு ஆக்கிக்கொள்ளவில்லை. சுவிசேஷ ஊழியம் வல்லமையின்றி காணப்படுவதற்கு ஆவியின் வரம் இல்லாமையே காரணம். கல்வி, ஞானம், தாலந்துகள், பேச்சாற்றல் மற்றும் ஒவ்வொரு இயற்கையான அல்லது பெற்றுக் கொண்ட நன்மைகளையும் உடையவர்களாக நாம் இருக்கலாம். ஆனால் தேவனுடைய ஆவியானவரின் பிரசன்னமின்றி ஒரு இதயத்தைத் தொடவோ அல்லது ஒரு பாவியை கிறிஸ்துவண்டை வழிநடத்தவோ இயலாது. அதேநேரம், அவர்கள் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருப்பார்களேயானால், ஆவியின் ஈவுகள் அவர்களுடையதாக இருந்தால், அவரது எளிய அறிவுகுறைந்த சீடனுக்குக்கூட அநேகரது இதயங்களைத் தொடக்கூடிய வல்லமை இருக்குமென்பதைக் காணலாம். இந்த அண்டசராசரத்திலே உயர்ந்த செல்வாக்கின் வெளிப்பாட்டினுடைய வாய்க்கால்களாக தேவன் அவர்களை உருவாக்குவார். (10)

## மற்றும் பல தாலந்துகள்

ஆவியானவரின் சிறப்பான வரங்கள் மாத்திரமே இந்த தாலந்துகளென்று இந்த உவமையில் குறிப்பிடப்படவில்லை. பிறப்பிலேயே பெற்றிருந்த அல்லது பின்னர் வளர்த்துக்கொண்ட மற்றும் இயற்கையான அல்லது ஆவிக்குரிய சம்பந்தமுள்ளவை எதுவானாலும் அனைத்து ஈவுகளையும் அருட்கொடைகளையும் இது உள்ளடக்கியதாக இருக்கிறது. கிறிஸ்துவின் சேவைக்காக தாலந்துகள் அனைத்தும் பயன்படுத்தப்படவேண்டும். (நாம் என்னவாக இருக்கின்றோமோ, நமக்கு என்னென்ன உடைமைகள் இருக்கின்றனவோ, அவை அனைத்தையும் அவருக்கு நாம் ஒப்புக்கொடுக்கிறோம்). இந்த ஈவுகளை அவர் தூய்மைப்படுத்தி மேன்மைப்படுத்தி நமது உடன்மனிதர்களை ஆசீர்வதிக்கவும் அவரது நாமத்தின் மகிமைக்காகவும் பயன்படுத்தவும் நம்மிடமே திரும்பவும் கொடுக்கிறார். (11)

“அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக” (மத்தேயு 25:15) தேவன் ஒவ்வொருவருக்கும் தாலந்துகளைக் கொடுக்கிறார். மனம்போனபடி தாலந்துகள் பகிர்ந்து அளிக்கப்படுவதில்லை. ஐந்து தாலந்துகளை உபயோகிக்கும் திறமையுள்ளவன் ஐந்தைப் பெறுகிறான். இரண்டுமாத்திரமே விருத்தி செய்யக்கூடியவன் இரண்டு தாலந்துகளைப் பெற்றுக்கொள்கிறான். ஒன்றை மாத்திரமே ஞானமாகப் பயன்படுத்தக்கூடியவன் ஒரு தாலந்தைப் பெற்றுக் கொள்கிறான். ஏராளமான ஈவுகளைப் பெற்றவர்களாக இல்லையேயென்று எவரும் புலம்ப அவசியமில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் பகிர்ந்தளித்தவர்

நம்பிக்கையோடு கொடுக்கப்பட்ட ஒவ்வொரு தாலந்தும், அது பெரிதானாலும் சிறிதானாலும் விருத்திசெய்யப்பட்டபோது கனப்படுத்தப்படுகிறார். அந்த ஐந்து தாலந்துகளை விருத்திசெய்து, ஐந்து தாலந்துகளைப் பெறுகிறவன் அவைகளுக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். அதுபோலவே, அந்த ஒரு தாலந்தையும் விருத்திசெய்யவேண்டும். ஒரு தாலந்தைப் பெற்றவனும் கணக்குக் கொடுக்க வேண்டும். "இல்லாததின்படியல்லாமல் அவனவனிடம் உள்ளதின்படியே" (2 கொரிந்தியர் 8:12) தேவன் எதிர்பார்க்கிறார். (12)

"ஐந்து தாலந்தை வாங்கினவன் போய், அவைகளைக் கொண்டு வியாபாரம்பண்ணி, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான். அப்படியே இரண்டு தாலந்தை வாங்கினவனும், வேறு இரண்டு தாலந்தைச் சம்பா தித்தான்" என்று அந்த உவமையில் கூறப்பட்டுள்ளது. (13)

நமக்கு வழங்கப்பட்டுள்ள தாலந்துகள் எவ்வளவு குறைவாகயிருப் பினும் அவைகளை நாம் பயன்படுத்தவேண்டும். நான் எவ்வளவு பெற்றுக் கொண்டிருக்கிறேன்? என்ற கேள்வியில் நாம் அதிக அக்கறை காட்டுகிறவர் களாக இராமல், என்னிடம் இருக்கும் தாலந்தை வைத்து நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன்? என்பதே எனது கேள்வியாக இருக்கவேண்டும். கொடுக்கப்பட்டுள்ள தாலந்துகளை வளர்த்துக்கொள்வதின்மூலமாக, தேவனுக்கும் சக மனிதருக்கும் ஊழியம் செய்வதே நமது முதல் கடமையாகும். மற்றவர்களுக்குப் பயனுள்ளவர்களாக இருப்பதிலும், சொந்தத் திறமையிலும், அனுதினமும் வளர்ந்துவராத ஒருவர், வாழ்வின் நோக்கத்தையே நிறைவேற்றாதவராகக் காணப்படுகிறார். கிறிஸ்துவிலே விசுவாசமுள்ளவர்களாக நாம் அறிக்கைசெய்யும்போது, எஜமானருக்கு ஊழியக்காரர்களாக இருப்பதற்கு நம்மால் செய்யக்கூடிய அனைத்துக் காரியங்களையும் செய்வதாக வாக்குறுதி எடுத்துக்கொள்கிறோம். நமது தகுதிக்கேற்ற ஆற்றலுடன் ஏராளமான நன்மைகளைச் செய்வதற்காக மிகவும் உயர்ந்த நிறைவான அளவிற்கு நமது திறமையை ஒவ்வொருவரும் வளர்த்துக்கொள்ள வேண்டும். (14)

ஒரு மாபெரும் பணியை கர்த்தர் நிறைவேற்றக் காத்திருக்கிறார். இம்மையில் தமக்கு அதிக விசுவாசத்தோடும் விருப்பத்தோடும் ஊழியஞ் செய்பவர்களுக்கு மறுமையில் அவர் ஏராளமான ஆசீர்வாதங்களை வழங்கக் காத்திருக்கிறார். கர்த்தர் தமக்கு சொந்தமாக பிள்ளைகளைத் தெரிந்தெடுத்து ஒவ்வொருநாளும் வித்தியாசமான சூழ்நிலையிலே அவரது செயல்முறைத் திட்டத்தில் பயிற்சிகொடுக்கிறார். அவரது திட்டத்தை செயல்படுத்தும்படி உண்மையான இதயத்தோடு செய்யப்படும் ஒவ்வொரு பெருமுயற்சியிலும் ஈடுபடத்தக்கதாக, அவர் தமது முகவர்களைத்

தெரிந்தெடுக்கிறார். பூரணமானவர்கள் என்றெண்ணி அவர்களைத் தெரிந்தெடுக்காமல், தம்மோடு தொடர்புகொள்வதின்மூலமாக அவர்கள் பூரணத்துவத்தை பெற்றுக்கொள்ளலாம் என்று அவ்வாறு செய்கிறார். (15)

மிக உயர்வான குறிக்கோளோடு வேலைசெய்யவேண்டுமென்று உறுதியான தீர்மானம்செய்பவர்களை மாத்திரமே தேவன் ஏற்றுக்கொள்வார். ஒவ்வொரு மானிட முகவரும் மிகவும் சிறப்பானமுறையில் காரியங்களைச் செய்யவேண்டுமென்ற கடமைக்கடியில் தேவனால் வைக்கப்படுகிறார். ஒழுக்கத்தில் பூரணத்துவம் அனைவரிடத்திலும் எதிர்பார்க்கப்படுகிறது. மரபுவழியாக வந்த அல்லது வளர்த்துக்கொண்ட தவறுசெய்யும் இயல்புகளுக்கு இணைந்துசெல்லுவதற்காக நீதியின் படித்தரத்தை ஒருபோதும் தாழ்த்திவிடக் கூடாது. பூரணமற்ற குணம் பாவமென்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். நீதியான அனைத்து குணநலன்களும் தேவனிடம் பூரணமாக, இசைவான முழுமையாக வாசஞ்செய்கிறது; கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் இத்தகைய குணநலன்களை உடைமையாகப் பெற்றுக்கொள்கின்ற சிறப்பான சலுகையைப் பெற்றிருக்கிறார். (16)

தேவனுக்கு உடன் ஊழியர்களாக இருக்க விரும்புபவர்கள் தங்கள் மனதின் தன்மையையும் தங்கள் சரீர அவயவங்கள் ஒவ்வொன்றையும் பூரணப்படுத்த முயற்சிக்கவேண்டும். ஒவ்வொரு கடமையையும் செயலாற்று வதற்கு சரீரத்தின், மனதின், ஒழுக்கநிலையின் வல்லமைகளை ஆயத்தம் செய்வதே உண்மையான கல்வியாகும். தெய்வீக சேவைக்காக உடல், மனம், ஆத்துமா ஆகிவைகளுக்குப் பயிற்சிகொடுக்க வேண்டும். இதுவே நித்தியத்திற்கும் நிலைக்கும் கல்வி. (17)

நடைமுறையிலுள்ள ஒவ்வொரு துறையிலும் காரியங்களை நிறை வேற்றும் ஆற்றல், மற்றும் திறமையில் வளர்ச்சி ஆகியவை ஒவ்வொரு கிறிஸ்தவனிடத்திலும் இருக்கவேண்டுமென்று தேவன் கோரிக்கை விடுக்கிறார். நமது மனப்பூர்வமான சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக, கிறிஸ்து தமது சொந்த இரத்தத்தையே நமக்காகச் சிந்தி, பாடனுபவித்து கிரயத்தைச் செலுத்தியிருக்கிறார். நாம் எவ்விதமாக பணியில் ஈடுபடவேண்டுமென்பதற்கும் எத்தகைய ஆவியோடு வேலைசெய்யவேண்டுமென்பதற்கும் நமக்கு ஒரு முன்மாதிரியைக் காட்டவே கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார். அவரது ஊழியத்தை எத்தகைய சிறந்தமுறையில் முன்னேற்றுவித்து, உலகிலே அவரது நாமத்தை மகிமைப்படுத்தி, கனத்தால் அவரை முடிசூட்டி, “தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி”

(யோவான் 3:16)—அந்த மாபெரும் அன்போடும், பக்தியோடும் இருப்பது எப்படியென்பதை நாம் கற்றுக்கொள்ளவேண்டுமென்று விரும்புகிறார். (18)

குணத்தில் பூரணத்துவத்தை அடைவது ஒரு இலகுவான காரியமென்று கிறிஸ்து நமக்கு எந்த உறுதிமொழியையும் கூறவில்லை. ஒரு மேன்மையான முழுநிறைவான குணம் மரபுவழியாக (பரம்பரையாக) பெற்றுக்கொள்ளப்படுவதில்லை. தற்செயலாக நாம் அதைப் பெற்றுவிட முடியாது. கிறிஸ்துவின் கிருபையினாலும் அவரது புண்ணியங்களின்மூலமாயும் அத்துடன் இணைந்த தனி மனித முயற்சியினாலும் ஒரு மேன்மையான குணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். தேவன் நமக்கு தாலந்துகளையும், மன வலிமையையும் கொடுக்கிறார்; நாம் குணத்தை அமைக்கிறோம். சுயத்தோடு கடுமையான—தீவிரமான போராட்டங்களை நடத்துவதின்மூலம் குணம் அமைக்கப்படுகிறது. மரபுவழித் தொடர்பின்மூலம் பரம்பரையாக வந்துகொண்டிருக்கும் மனப்பாங்குகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராட வேண்டும். நம்மை நாம் உன்னிப்பாகக் கவனித்து, நமது குணங்களை நுணுக்கமாக ஆராய்ந்து, குற்றங்களைக் கண்டறியவேண்டும். ஒரு பாதகமான குணம்கூட திருத்தப்படாமல் விட்டுவைக்கப்பட அனுமதிக்கக்கூடாது. (19)

என்னுடைய குணத்தில் காணப்படும் குறைகளை என்னால் சரி செய்ய இயலாதென்று எவரும் கூறவேண்டாம். இத்தகைய தீர்மானத்திற்கு வருவீர்களானால் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதில் நிச்சயமாகத் தோற்றுப்போவீர்கள். முடியாதென்பது உங்களது சுயசித்தத்தில் தான் இருக்கிறது. நீங்கள் சித்தம்கொள்ளாவிட்டால் உங்களால் தவறுகளை மேற்கொள்ளமுடியாது. தேவனுடைய கட்டுப்பாட்டிற்கு அடங்கிப்போவதற்கு விருப்பமற்ற மற்றும் பரிசுத்தமாக்கப்படாத இதயத்தினால் ஏற்படும் சீர்குலைவினால்தான் உண்மையான சிக்கல் உருவாகுகிறது. (20)

மிக மேன்மையான ஊழியத்தைச் செய்வதற்கு தேவனால் தகுதிப் படுத்தப்பட்டிருக்கும் அநேகர் சிறிதளவே செயல்களைச் செய்துமுடிக்கிறார்கள். ஏனெனில், அவர்கள் பெரிய அளவிற்கு முயற்சிசெய்கிறதில்லை. இவ்வுலகில் வாழ்வதற்கு தங்களுக்கு எத்தகைய திட்டமான ஒரு இலக்கும் இல்லாதவர்களைப்போலவும், முயன்று அடைவதற்கு தங்களுக்கு எத்தகைய படித்தரமும் இல்லாதது போலவும் ஆயிரக்கணக்கான மக்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்தி, கடந்துசென்றுகொண்டிருக்கிறார்கள். இத்தகையோர் தங்கள் கிரியைகளுக்கு ஏற்றவிதத்தில் தக்கபலனைப் பெறுவார்கள். (21)

நீங்கள் முயன்று அடையவேண்டுமென்று உங்களுக்காக நீங்களாகவே நியமித்துக்கொள்கின்ற படித்தரத்திற்கும் மேலாக ஒருபோதும் உயரமுடியாதென்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். எனவே

நீங்கள் அடையவேண்டிய குணக்கட்டுமானத்தின் தரத்தை உயர்ந்ததாகவே வைத்துக்கொள்ளுங்கள். படிப்படியாக முயற்சிப்பது வேதனை தரக்கூடியதாக இருப்பினும், சுயமறுப்பு மற்றும் தியாகம் ஆகியவைகளின்மூலம் முன்னேற்ற மென்ற அந்த ஏணியின் முழு உயரத்திற்கும் ஏறிச்செல்லுங்கள். எதுவும் உங்களைத் தடைசெய்யாமலிருக்கட்டும். வரையறுக்கப்பட்ட கால எல்லை எந்தவொரு மனிதனைச் சுற்றிலும் அதின் வலையை பலமாகப் பின்னிவிட வில்லை. எனவே எந்த நபரும் நிச்சயமற்ற—உதவியற்ற நிலையிலிருக்க அவசியமில்லை. நமக்கு எதிராக வரும் சூழ்நிலைகளை மேற்கொள்ளத் தக்கதாக திடமான ஒரு தீர்மானத்தை நம்மில் உருவாக்க வேண்டும். உடைத்துத் தள்ளப்படும் ஒரு தடை, முன்னேறிச் செல்வதற்கான மாபெரும் திறமையையும் தைரியத்தையும் நமக்களிக்கிறது. சரியான பாதையில் திடமான தீர்மானத்தோடு செல்லுங்கள். சூழ்நிலைகள் உங்களது உதவியாளர்களாக இருக்கும்; இடையூறு விளைவிப்பவைகளாக இருக்காது. (22)

எஜமானரின் மகிமைக்காக குணத்தின் ஒவ்வொரு அழகான தன்மையையும் மேம்படுத்துவதற்குப் பேராவல் உடையவர்களாயிருங்கள். நம்முடைய குண முன்னேற்றத்தின் ஒவ்வொரு நிலையிலும் நாம் தேவனைப் பிரியப்படுத்தவேண்டும். சீரழிந்த காலக்கட்டத்தில் வாழ்ந்தபோதிலும், ஏனோக்கு தேவனைப் பிரியப்படுத்தினார். நீங்களும் இதைச் செய்யமுடியும். நமது நாட்களிலும் அநேக ஏனோக்குகள் ஜீவிக்கிறார்கள். (23)

எத்தகைய சோதனையும் சீர்குலைக்கமுடியாத, உத்தம வாழ்வு வாழ்ந்த அரசியல் மேதையான தானியேலைப் போல நில்லுங்கள். நமது பாவங்களைத் தொலைப்பதற்காக நம்மை நேசித்து தமது உயிரையே தந்த அவரை நாம் ஏமாற்றக்கூடாது. “என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது” (யோவான் 15:5) என்று இயேசு கூறுகிறார். இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் தவறுகள் செய்துவிட்டாலும், அந்தத் தவறுகளை தொலைதூரத்தினின்று வரும் எச்சரிப்பின் விளக்குகளாகக் கருதுவீர்களானால், நிச்சயமாக ஒரு வெற்றியைப் பெற்றுக்கொள்வீர்கள். இவ்வாறு, தோல்வியை வெற்றியாக மாற்றி, சத்துருவை ஏமாறச் செய்து, இரட்சகராகிய கிறிஸ்துவை கனப்படுத்துவீர்கள். (24)

தெய்வீக சாயலுக்கு ஏற்றபடி உருவாக்கப்பட்ட குணம்தான் நாம் இவ்வுலகிலிருந்து பரலோகத்திற்கு எடுத்துச்செல்லுகின்ற ஒரே பொக்கிஷம். கிறிஸ்துவின் போதனைகளின்படி இவ்வுலகில் ஜீவிப்பவர்கள் தங்கள் அடைந்த தெய்வீகத் திறனையும் பரலோக வாசஸ்தலங்களுக்கு எடுத்துச்செல்வார்கள். பரலோகத்தில் நமது திறன்களைத் தொடர்ந்து முன்னேற்றுவிக்கவேண்டும்.

இந்த வாழ்க்கையில் நமது குணத்தை முன்னேற்றமடையச்செய்வது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது! (25)

செயலில் பூரணத்தைக் கொண்டுவரக்கூடிய பூரணகுணத்தை தீர்மானமான விசுவாசத்துடன் தேடுகிற மானிடப் பிரதிநிதிகளோடு பரலோக அறிவுஜீவிகள் சேர்ந்து பணியாற்றுகிறார்கள். இந்த ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரிடமும்: "நான் உனக்கு உதவிசெய்வதற்காக உனது வலதுகரத்தண்டை நிற்கிறேன்" என்று கிறிஸ்து கூறுகிறார். (26)

மனிதனுடைய சித்தம் தேவசித்தத்தோடு ஒத்துழைக்கும்போது, அது சர்வவல்லமையுடையதாக மாறுகிறது. அவருடைய கட்டளைப்படி நாம் என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளைச் செய்துமுடிப்பதற்கு அவர் வல்லமை கொடுக்கிறார். அவருடைய கட்டளைகள் அனைத்தும் செயலூக்கம் கொடுக்கக்கூடியவைகளாகவே இருக்கின்றன. (27)

## மனதின் திறமைகள்

மனதின் திறன்களை மனிதன் பழக்குவிக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தமது ஊழியர்கள் உலகத்தினரைவிட அதிக அறிவாற்றல் உள்ளவர்களாகவும் தெளிவாகப் புரிந்துகொள்ளும் சக்தியுடையவர்களாகவும் இருக்கவேண்டுமென்று அவர் திட்டமிடுகிறார். திறமையுள்ளவர்களாயும் நன்றாகக் காரியங்களை அறிந்தவர்களாயும் இருப்பதற்குப் பதிலாக, எத்தகைய அக்கறையுமின்றி கவனமில்லாதவர்களாக இருப்பவர்களிடம் அவர் சலிப்புடையவராக இருக்கிறார். நாம் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும், முழு மனதோடும் தம்மில் அன்புகூரவேண்டுமென்று கர்த்தர் நம்மை வேண்டுகிறார். நாம் முழுமனதோடு நம்மைப் படைத்தவரை அறியவும் நேசிக்கவும்தக்கதாக நமது அறிவுத்திறனை அதின் முழுமையான செயலாற்றலுக்கு முன்னேற்றுவிக்கும்படியான கடமையை இது நம்மீது வைக்கிறது. (28)

பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்படும்போது, எவ்வளவு முழுமையாக அறிவு பண்படுத்தப்படுகிறதோ, அவ்வளவு வல்லமையாக தேவனுடைய வேலையில் அதை உபயோகப்படுத்தமுடியும். தேவனுக்குத் தன்னை அர்ப்பணித்த, மற்றவர்களை ஆசீர்வதிக்கவேண்டுமென்ற குணமுள்ள, ஒரு படிப்பறிவற்ற மனிதனையுங்கூட தேவனால் தம்முடைய சேவைக்குப் பயன்படுத்தமுடியும்; அவன் பயன்படுத்தப்படுகிறான். ஆனால் அதே அர்ப்பணிப்பின் ஆவியோடுகூட முழுமையான கல்வியின் நன்மைகளைப் பெற்றிருப்பவர்கள், கிறிஸ்துவிற்காக மிக அதிகமான விரிவான ஊழியத்தில் ஈடுபடமுடியும். இவர்கள் சாதகமான வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். (29)

பிறரிடம் நமது அறிவைப் பகிர்ந்துகொள்ளும் எண்ணத்தோடு, முடிந்தளவு அனைத்துக் கல்வியையும் நாம் முயன்று பெற்றுக்கொள்ளவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். அவர்கள் தேவனுக்காக உழைக்கவோ அல்லது பேசவோ எங்கு எப்படி அழைக்கப்படுவார்கள் என்பதை எவரும் அறிய முடியாது. நமது பரமபிதா ஒருவரே மனுஷரை எவ்வாறாக பயன்படுத்த இயலும் என்பதை அறிவார். நம்முடைய பலமற்ற விசுவாசம் புரிந்துகொள்ளாத அநேக வாய்ப்புகள் நமக்குமுன் இருக்கின்றன. அவசியப்பட்டால், அவருடைய வார்த்தையின் சத்தியத்தை, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தும்விதத்தில், உலகின் பெரிய அதிகாரிகளுக்கு முன்பாகவும் கொடுக்கும் விதத்தில் நமது மனங்கள் பயிற்றுவிக்கப்படவேண்டும். தேவனுக்கென்று உழைப்பதற்கேதுவாக, அறிவுப்பூர்வமாக நம்மைத் தகுதிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பத்தைக்கூட நாம் நழுவவிட்டு விடக்கூடாது. (30)

கல்வியறிவை அவசியமாகப் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலையிலிருக்கும் வாலிபர்கள், அதை முயன்று பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஒரு திடமான, தீர்மானத்தோடு செயல்படவேண்டும். ஒரு வழி திறக்கும் என்று காத்திராமல், நீங்களே அதை உருவாக்கிக்கொள்ளவேண்டும். வாய்ப்பது சிறிய பணியாக இருந்தாலும் அதை பலமாகப் பற்றிப்பிடித்துக்கொள்ள வேண்டும். சிக்கனத்தைக் கடைபிடிக்கவேண்டும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் பொருளாதார ஆசீர்வாதத்தைக்கொண்டு நாம் உணவிற்கும் பொழுதுபோக்கிற்கும் மாத்திரமே செலவுசெய்தல் கூடாது. தேவன் எவ்வளவு திறமையுள்ளவர்களாகவும், பயனுள்ளவர்களாகவும் இருக்கவேண்டுமென்று உங்களை அழைத்திருக்கிறாரோ அத்தகைய நிலைக்குத் தகுதியுடையவர்களாக வேண்டுமென்று திடமாகத் தீர்மானஞ்செய்யுங்கள். நீங்கள் எதைச்செய்ய வேண்டுமென்று பொறுப்பேற்றுக்கொண்டாலும் அந்தக் காரியத்தில் முழுமையான அறிவை மேம்படுத்துவதற்கு உங்களுக்கு எட்டக்கூடியவிதத்தில் கிடைக்கின்ற அனைத்து அனுகூலங்களையும் முயன்று பெற்றுக்கொள்ளுங்கள். புத்தகப் படிப்போடு கைத்தொழிலையும் சேர்த்து உண்மையான ஊக்கமான முயற்சியோடும் விழிப்புணர்வோடும் ஜெபத்தோடும், பரத்தினின்றுவரும் ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். இது பலதரப்பட்ட முழுமையான கல்வியை உங்களுக்கு வழங்கும். இவ்வாறு குணத்தில் மேம்பட்டவர்களாகி, மற்றவர்களின் உள்ளங்களின்மீது ஒரு சிறந்த செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளமுடியும். இதன் பயனாக அவர்களை நீதியுள்ள பரிசுத்தமான பாதையில் வழிநடத்தும்படி உங்களுக்கு இந்தக் காரியம் வல்லமையைக் கொடுக்கும். (31)

நமக்கு சொந்தமாகக் கிடைக்கும் சந்தர்ப்பங்களிலும் சிறப்புரிமைகளிலும் விழிப்புணர்வோடு இருந்திருப்போமானால், சுயகல்வி என்னும் பணியிலே மிகவும் ஏராளமான காரியங்களைச் சாதித்திருக்கலாம். மெய்யான கல்வி, கல்லூரிகள் வழங்கும் கல்வியைக்காட்டிலும் மேன்மையானது. அறிவியல் சம்பந்தமான கல்வியை நாம் அலட்சியப்படுத்தக்கூடாது. ஆனால் அதேசமயத்தில், தேவனோடுகொள்ளும் ஒரு உயிராற்றல் நிறைந்த தொடர்பின்மூலம் ஒரு மேலான—மிகவும் உயர்ந்த பயிற்சியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். பரிசுத்த வேதாகமத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, பரம ஆசிரியருடன் (கிறிஸ்துவுடன்) நாம் தொடர்புகொள்ள வேண்டும். தெய்வீக சத்தியத்தைத் தேடி, ஆராய்வதிலே வாழ்வின் கடினமான பிரச்சனைகளோடு போராடத்தக்கதாக மனம் பயிற்சியைப் பெற்று ஒரு ஒழுங்கான கட்டுப்பாட்டிற்குள் வரட்டும். (32)

தங்களது உடன்மனிதர்களை ஆசீர்வதிக்கவேண்டுமென்று அதற்காக அறிவைப் பெற்றுக்கொள்ள பசியோடிருப்பவர்கள், தாங்களும் தேவனிடமிருந்து தங்களுக்காக ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். அவரது வசனத்தை ஆராய்ந்து கற்பதின்மூலம் அவர்களது மனதின் வல்லமைகள் ஊக்கமான செயல்முறைகளில் ஈடுபடும்வண்ணம் விழிப்படைகிறது. மனதின் திறன்கள் முன்னேற்றமடைந்து பெருகி, உள்ளம் சக்தியையும், திறமையையும் பெற்றுக்கொள்கிறது. (33)

தேவனுடைய ஊழியக்காரனாக இருக்கவேண்டுமென்று வாஞ்சிக்கின்ற ஒவ்வொருவரும் சுயக்கட்டுப்பாட்டை செயற்படுத்தவேண்டும். சுயக் கட்டுப்பாட்டை பயிற்சியில் வைத்திருப்பவர்கள் பேச்சாற்றல் உள்ளவர்களைப் பார்க்கிலும் அல்லது மிகவும் சிறப்பான தாலந்துகளைப் பெற்றிருப்பவர்களைப் பார்க்கிலும் காரியங்களைச் சாதிக்கமுடியும். சுயக்கட்டுப்பாடுடைய ஒரு சாதாரண மனிதன், மிகவும் சிறப்பான உயர்கல்வி கற்ற மனிதனைப் பார்க்கிலும், மாபெரும் சிறப்பான தாலந்துகளை பெற்றிருப்பவர்களைக் காட்டிலும், மிகவும் உயர்ந்த மேன்மையான காரியங்களைச் சாதிக்கமுடியும். (34)

## பேச்சு

பேச்சாற்றல் என்னும் தாலந்து தளரா முயற்சியோடு வளர்க்கப்பட வேண்டும். நாம் தேவனிடமிருந்து பெற்றிருக்கும் அனைத்து ஆசீர்வாதங்களிலும் இதைவிட மேலான ஆசீர்வாதம் எதுவுமில்லை. பிறரை நம்பச்செய்வதற்கும், இணங்கச்செய்வதற்கும், தேவனிடம் விண்ணப்பிப்பதற்கும், அவரைத் துதிப்பதற்கும், மீட்பரின் அன்பைப் பிறரிடம் எடுத்துக்கூறுவதற்கும் பேச்சைப் பயன்படுத்துகிறோம். நன்மை விளைவதற்காக, மிகவும் திறமையான

விதத்தில் பேச்சாற்றலை முன்னேற்றுவிக்க பயிற்சி கொடுப்பது எவ்வளவு முக்கியம்! (35)

அறிவுத்திறனுடைய, கிறிஸ்தவ செயல்முறையில் சுறுசுறுப்பாய் ஈடுபடுகின்ற நபர்கள்கூட குரலைச் சரியான விதத்தில் பயன்படுத்துவதை மிகவும் அலட்சியம் செய்கிறார்கள். அநேகர் மிகவும் தாழ்வான குரலில் அல்லது மிகவும் விரைவானமுறையில் வாசித்து அல்லது பேசி, மற்றவர்கள் அதைப் புரிந்துகொள்ள முடியாதபடி செய்துவிடுகிறார்கள்; மற்றும் சிலர் உச்சத்தொனியிலும் கீச்சிட்ட குரலிலும் பேசி, கேட்பவர்களை சலிப்படையச் செய்கிறார்கள். வேதாகமப்பகுதியை வாசிக்கும்போதும், பாடல்களை அறிவிக்கும்போதும், அறிக்கைகளையும் மற்றும் பலரால் எழுதப்பட்ட கருத்துக்களையும் பொதுக்கூட்டங்களில் சமர்ப்பிக்கும்போதும் சொல்லப்பட்ட செய்திகளின் ஆற்றலும், வேகமும் மனதில் ஆழ்ந்து பதிக்கப்படவேண்டிய கருத்துக்களும் சில சமயங்களில், அவை வாசிக்கப்படுகின்றவிதத்தினால், சரியாகப் புரிந்துகொள்ளப்படாமல் வீணடிக்கப்பட்டுவிடுகிறது. (36)

இத்தகைய தவறானது திருத்தப்படமுடியும். திருத்தப்பட்டாகவேண்டும். இதைக்குறித்து வேதாகமம் நமக்கு அறிவுரை வழங்குகிறது. எஸ்றாவின் நாட்களில் லேவியர் வேதாகமத்தை ஜனங்களுக்கு எவ்விதம் வாசித்தனரென்று வேதாகமம் நமக்கு பின்வருமாறு தெரிவிக்கிறது: “அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைத் தீர்க்கமாக வாசித்து, அர்த்தஞ்சொல்லி, வாசித்ததை அவர்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்”– நெகேமியா 8:8. (37)

அறிவுத்திறமையோடு வாசிக்கும் வல்லமையை பெற்றுக்கொள்ளுவதற்கும் ஒரு நிறைவான, தெளிவான, முழுமையான குரலில், எளிதில் விளங்கக்கூடியவண்ணம் கருத்துக்களை ஆழ்ந்து பதியவைக்கத்தக்க தன்மையில் பேசுவதற்கும் வேண்டிய திறமையை தளரா ஊக்கமுள்ள முயற்சியோடு அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு செய்வதின்மூலம் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகிய நாம் மிகவும் அதிகமாக நமது திறமையை பெருக்கிக்கொள்ளலாம். (38)

ஆராய்ந்துமுடியாத கிறிஸ்துவின் ஐசுவரியங்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் அழைக்கப்பட்டிருக்கிறான். ஆகவே ஒவ்வொருவரும் பேச்சாற்றலில் பூரணத்துவத்தைப் பெற்றுக்கொள்ள வகைதேடவேண்டும். சிறப்பாக அமைந்திருக்கிறதென்று கேட்பவர்கள் கருதும்வண்ணம் தேவனுடைய வார்த்தையானது வழங்கப்படவேண்டும். தமது ஊழியர்கள் பண்புநயமற்றவிதத்தில் இருக்கவேண்டுமென்று தேவன் திட்டமிடுகிறதில்லை. பரலோகத்தின் வல்லமை ஊழியக்காரன்மூலமாக

இவ்வுலகிற்குப் பாய்ந்துவரும்போது, அந்த ஊழியக்காரன் அதின் மதிப்பைக் குறைப்பதோ அல்லது தரங்கெடச்செய்வதோ அவரது சித்தமல்ல. (39)

நமக்கு நல்ல பூரணமான மாதிரியாகத் திகழும் கர்த்தராகிய இயேசுவை நாம் நோக்கிப் பார்க்கவேண்டும். பரிசுத்த ஆவியானவரின் உதவிக்காக நாம் ஜெபித்து, அவருடைய பெலத்தினாலே பூரணமான ஊழியத்தைச் செய்வதற்காக நமது உடலின் ஒவ்வொரு உறுப்பிற்கும் பயிற்சிகொடுக்க நாம் வகைதேடவேண்டும். (40)

பொதுநல ஊழியத்திற்காக அழைக்கப்பட்டவர்களின் காரியத்தில் இந்தக் காரியம் மிகவும் சிறப்பான முறையில் உண்மையாகக் காணப்படுகிறது. ஜனங்களைச் சந்திக்கும் ஒவ்வொரு ஊழியரும், போதகரும் தாங்கள் நித்தியத்திற்கடுத்த காரியங்களை ஜனங்களுக்கு வழங்குகிறோமென்பதை மனதில் கொள்ளவேண்டும். அவர்கள் வழங்கும் சத்தியம் அந்த மாபெரும் இறுதி நாளில் ஜனங்களை நியாயம்விசாரிக்கும். சில ஆத்துமாக்களைப் பொருத்தமட்டில் அவர்களுக்கு தேவசெய்தியைக் கொடுக்கின்ற நபர் செய்தியைக் கொடுக்கின்றவிதத்திலே, அதைக் கேட்பவர்கள் ஏற்றுக்கொள்வதும் அல்லது புறக்கணிப்பதும் தீர்மானிக்கப்படுகிறது. எனவே, ஜனங்கள் புரிந்துகொள்ளும் விதத்திலும், அவர்களுடைய இதயத்தில் பதியத்தக்கதாகவும் வார்த்தை வழங்கப்படட்டும். செய்தியானது மெதுவாகவும், அதாவது படிப்படியாகவும் மிகத்தெளிவாகவும் பக்திவிநயத்தோடும் கொடுக்கப்படவேண்டும். மேலும் செய்தியின் முக்கியத்துவத்திற்கேற்றபடி உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் கொடுக்கப்படவேண்டும். (41)

சரியான பண்புநயம் மற்றும் பேச்சாற்றலின் வல்லமை கிறிஸ்தவ ஊழியத்தின் ஒவ்வொரு துறையிலும் செயல்புரிகிறது. மேலும் நமது குடும்ப வாழ்க்கையிலும் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் அனைத்து உறவுகளிலும் இந்தக் காரியம் ஊடுருவிச்செல்கிறது. மகிழ்ச்சியூட்டும் தொனியில் நாம் பேசப் பழகிக்கொள்ளவேண்டும். தூய்மையான, திருத்தமான மொழியைப் பயன்படுத்தி, அன்பான மரியாதையான வார்த்தைகளை உபயோகிக்கவேண்டும். இனிய அன்புள்ள வார்த்தைகள் ஆத்துமாவில் பனித்துளியைப்போன்று படர்ந்து, மென்மையான மழைபோல் பொழிகின்றது. “இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல” கிறிஸ்துவின் உதடுகளிலிருந்து அருள் பொழிந்ததாக வேதாகமம் தெரிவிக்கிறது. (சங். 45:2; ஏசா. 50:4). “கேட்கிறவர்களுக்கு பிரயோஜனமுண்டாகும்படி” நம்முடைய “வசனம் கிருபை பொருந்தினதாயும்” இருக்க வேண்டும் (கொலோ. 4:6, எபே. 4:29) என்று கர்த்தர் நமக்குக் கட்டளையிடுகிறார். (42)

மற்றவர்களை திருத்தவும் அல்லது சீர்திருத்தம்செய்யவும் வகை தேடும்போது, நமது வார்த்தைகளில் நாம் கவனமாக இருக்கவேண்டும். பயன்படுத்தப்படும் வார்த்தைகள் மரணத்துக்கேதுவான மரண வாசனையாகவும் அல்லது ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருக்கின்றன. பிறரைக் கண்டிக்கும்போதோ அல்லது ஆலோசனை கூறும்போதோ கூர்மையான, கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். இந்த வார்த்தைகள் காயப்பட்ட ஆத்துமாவைக் குணமாக்குவதற்கு ஏற்றதாக அமையவில்லை. இத்தகைய மதியற்ற வார்த்தைகளால் மனம் புண்படுத்தப்படுகிறது. பெரும்பாலும் தவறிழைத்தவர்கள் கலகம்செய்யும்படி தூண்டப்படுகிறார்கள். சத்தியத்தின் கொள்கைகளை ஆதரித்து பரிந்துரைக்கும் அனைவரும் பரலோ கத்தின் அன்பின் தைலத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாகும். எந்தச் சூழ்நிலையிலும் கடிந்துகொள்ளுதல் அன்பின் வார்த்தைகளைக் கொண்டே செய்யப்படல்வேண்டும். அப்பொழுது நமது வார்த்தைகள் ஜனங்களைச் சீர்படுத்துமேயல்லாமல் எரிச்சலடையச்செய்யாது. பரிசுத்த ஆவியானவர் மூலமாக நமக்கு வல்லமையையும் பெலத்தையும் கிறிஸ்து அருளுவார். இது அவரது ஊழியமாகும். (43)

நன்கு ஆலோசிக்காமல் ஒரு வார்த்தைகூட பேசப்படக்கூடாது. தீய காரியங்களைப்பற்றிய பேச்சுக்கள், மற்றும் அற்பமான கேலிப்பேச்சுகளில் ஈடுபடுதல், அதிருப்தியோடு அலட்டுகின்ற பேச்சுக்கள், தூய்மையற்ற ஆலோசனைகள் ஆகியவை கிறிஸ்துவின் பின்னடியார்களின் வாயினின்று ஒருபோதும் வெளிவராது. "கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்" (எபே. 4:29) என்று அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதுகின்றார். கேடான உரையாடல் இழிந்த வெறுக்கத்தக்க வார்த்தைகளைமட்டும் குறிக்கவில்லை. பரிசுத்தக் கொள்கைகளுக்கும் சுத்தமான தூய்மைகெடாத மார்க்கத்திற்கும் எதிரிடையாக இருக்கும் அனைத்தையும் இது குறிக்கிறது. அசுத்தமான சாடை வார்த்தைகளையும் தீமையின் ஒளிவுமறைவான பசப்பு வார்த்தை களையும் இது உள்ளடக்கியிருக்கிறது. இந்தப் பழக்கம் உடனுக்குடன் எதிர்க்கப்படாவிட்டால், மாபெரும் பாவத்திற்கு வழிநடத்திவிடும். (44)

ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பமும் ஒவ்வொரு தனிமனிதனும் தீய உரையாடலைத் தவிர்ப்பது தலையாய கடமையாயிருக்கிறது. முட்டாள் தனமாக பேசுபவர்கள் மத்தியில் நாம் இருக்க நேரிட்டால், முடிந்த அளவு பேச்சைத் திசைதிருப்புவது நமது கடமையாகும். தேவகிருபையின் உதவியினால் பயனுள்ள வழியிலே உரையாடலை திசைதிருப்பத்தக்கதாக அமைதியாக சில வார்த்தைகளை அப்படியே விட்டுவிடவேண்டும்; அல்லது உரையாடலுக்காகப் புதிய தலைப்பை அறிமுகம் செய்யவேண்டும். (45)

சரியானமுறையில் பேசும் பழக்கத்தை உருவாக்குவதற்காக பிள்ளைகளுக்குப் பயிற்சிகொடுப்பதும் பெற்றோரின் பணியாகும். குடும்பவாழ்வே இத்தகைய பண்பாட்டை உருவாக்க மிகச் சிறந்த பள்ளியாக இருக்கிறது. குழந்தைப் பருவத்திலிருந்தே தங்கள் பெற்றோரிடமும் மற்றவரிடமும் மரியாதையுடனும் அன்புடனும் பேசத்தக்கதாக அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். மென்மையான, உண்மையான, தூய்மையான வார்த்தைகள்மட்டுமே அவர்களின் உதடுகளினின்று வெளிவரத்தக்கதாக அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்படவேண்டும். கிறிஸ்துவின் பள்ளியிலே பெற்றோர்கள் தாமே ஒவ்வொருநாளும் கற்றுக்கொள்பவர்களாக இருக்க வேண்டும். நல்லொழுக்கப் போதனையின்மூலமாகவும், தங்களது முன்மாதிரியின்படியேயும் "குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தை" (தீத்து 2:8) பயன்படுத்தும்படி பெற்றோர் தங்களது பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். இது அவர்களது முக்கியத்துவம்வாய்ந்த மிகவும் பொறுப்புள்ள கடமைகளில் ஒன்றாக இருக்கிறது. (46)

கிறிஸ்துவின் பின்னடியார்களாகிய நாம், கிறிஸ்தவ வாழ்க்கையிலே ஒருவருக்கொருவர் உதவிசெய்து, உற்சாகமூட்டத்தக்கதான வார்த்தைகளை பயன்படுத்தவேண்டும். நாம் செய்வதைவிட மிகவும் அதிகமாக நமது அனுபவத்தின் அருமையான அத்தியாயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வது அவசியமாகும். நாம் தேவனுடைய அன்பின் இரக்கத்தையும், கருணையையும் நமது மீட்பரின் ஈடு இணையற்ற அன்பின் ஆழத்தையும் குறித்துப் பேச வேண்டும். துதியின் வார்த்தைகளாகவும் நன்றிசெலுத்தும் வார்த்தைகளாகவும் நமது வார்த்தைகள் இருக்கவேண்டும். நமது உள்ளமும் இதயமும் தேவ அன்பினால் நிறைந்திருக்குமானால், அக்காரியம் நமது உரையாடலின் மூலமாக வெளிப்படும். நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் நிறைந்து காணப்படும் ஆசீர்வாதங்களை பிறரிடம் பகிர்ந்துகொள்வது கடினமான ஒரு காரியமில்லை. உயரிய சிந்தனைகளும், உன்னத வாஞ்சைகளும், சத்தியத்தைக்குறித்த தெளிவான அறிவும், தன்னலமற்ற நோக்கங்களும், பரிசுத்தமடையவேண்டுமென்ற வாஞ்சையும் ஆகியவை இதயமாகிய பொக்கிஷத்தின் குணத்தை வெளிப்படுத்துகின்ற வார்த்தைகளிலே அதின் கனிகளாகக் (பலன்கள்) காணப்படும். இவ்வாறு நமது பேச்சின்மூலமாக கிறிஸ்து வெளிப்படும்போது, அவருக்காக ஆத்துமாக்களை ஆதாயம்செய்யும் வல்லமை அதற்கு (பேச்சுக்கு) இருக்கும். (47)

கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு நாம் அவரை அறிமுகம் செய்ய வேண்டும். கிறிஸ்து எதைச் செய்தாரோ அதையே நாமும் செய்யவேண்டும். அவர் ஜெபாலயத்தில் இருந்தபோதும், வழியருகே இருந்தபோதும்,

பரிசேயனுடைய பந்தியில் கலந்துகொண்டபோதும், நிலத்தினின்று சற்று தூரத்திலிருந்த படகில் அமர்ந்திருந்தபோதும், அல்லது ஆயக்காரனின் மேஜைக்கு அருகில் நின்றபோதும், எங்கிருந்தாலும் மேலான வாழ்வுகுறித்த காரியங்களையே மனிதர்களிடம் பேசினார். இயற்கையில் காணப்பட்டவை அன்றாட வாழ்வின் சம்பவங்கள் ஆகிய அனைத்துமே சத்தியத்தின் வார்த்தைகளை வைத்து அவரால் கட்டப்பட்டிருந்தன. அவர் வியாதியஸ்தரை குணமாக்கி, துயரப்படுகிறவர்களை ஆறுதல்படுத்தி, அவர்களுடைய பிள்ளை களை மார்போடணைத்து ஆசீர்வதித்ததினால் அவரது பிரசங்கத்தைக்கேட்ட இதயங்கள் அவர்பால் கவர்ந்திழுக்கப்பட்டன. அவர் வாயைத் திறந்து பேசியபோது, அவர்களது முழுக்கவனமும் அவர்மீது ஒருமுகப்படுத்தப்பட்டி ருந்தது. ஒவ்வொரு வார்த்தையும் ஆத்துமாக்களுக்கு ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாக இருந்தது. (48)

இவ்வாறே நாமும் செய்யவேண்டும். எங்கிருந்தாலும் இரட்சகரைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவதற்கான சந்தர்ப்பங்களுக்காக நாம் விழிப்போடு காத்திருக்கவேண்டும். நன்மைசெய்வதில் கிறிஸ்துவின் முன்மாதிரியை நாம் பின்பற்றுவோமானால், அவருக்கு எப்படி இதயங்கள் திறக்கப்பட்டனவோ அதுபோன்று நமக்கும் திறக்கும். திடீரென்று எதையும் செய்யாமல், தெய்வீக அன்பினால் பிறந்த சாமர்த்தியத்தால் காரியங்களைச் செய்யவேண்டும். "பதினாயிரம்பேரிலும் சிறந்தவராகவும் முற்றிலும் அழகானவராகவும்" இருக்கும் அந்த அருமை இரட்சகரை, நாம் மற்றவர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கவேண்டும் (உன்னதப்பாட்டு 5:10,16). நமது பேச்சுத் தாலந்தை நாம் பயன்படுத்துவதற்கான மிக உன்னதமான பணி இதுவேயாகும். கிறிஸ்துவை பாவமன்னிப்பைக் கொடுக்கும் இரட்சகராக உலகிற்கு அறிமுகஞ்செய்யவே இந்தத் தாலந்து நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (49)

## செல்வாக்கு

கிறிஸ்துவின் ஜீவியம் என்றும் விரிந்துபரந்திருக்கும் எல்லையற்ற ஒரு செல்வாக்காக இருந்தது. இந்த செல்வாக்கு தேவனோடும் முழு மானிடக் குடும்பத்தோடும் அவரை இணைத்து கட்டிவைத்திருந்தது. கிறிஸ்துவின்மூலமாக தேவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கும் செல்வாக்கு அவன் தனக்காக வாழ்வதை இயலாத காரியமாகச் செய்துவிடுகிறது. தேவனுடைய அந்த மாபெரும் முழுமையின் ஒரு பகுதியாக, நாம் ஒவ்வொரு வரும் நமது உடன் மனிதர்களுடன் தொடர்புகொண்டிருக்கின்றோம். உடன் மனிதர்களைவிட்டு எவராலும் தனித்து வாழமுடியாது. ஒவ்வொரு வருடைய சுகசௌகரியமான வாழ்க்கையும் மற்றவர்களைத் தொடுகிறது. மற்றவர்களுடைய வாழ்விற்கு நாம் அவசியமானவர்களென்றும், அவர்களது

மகிழ்ச்சியை மேம்படுத்த நாம் வகைதேடவேண்டுமென்றும், ஒவ்வொருவரும் எண்ணவேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. (50)

ஒவ்வொரு ஆத்துமாவும் அதற்கேயுரிய சூழ்நிலையால் வளைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலை ஒருவேளை விசுவாசத்தின் ஜீவன் கொடுக்கும் வல்லமையாலும், தைரியம், நம்பிக்கை, மற்றும் அன்பெனும் இனிய நறுமணத்தாலும் நிரப்பப்பட்டிருக்கலாம். அல்லது அதிருப்தி, தன்னலம் ஆகிய இருளினாலும், நெஞ்சாரப்பேணி நடப்பிக்கின்ற சாவுக்கேதுவான கறையென்னும் பாவத்தாலும் நிறைந்து கனத்து, குளிர்ந்துபோயிருக்கலாம். சுற்றியிருக்கும் சூழ்நிலையினால், தொடர்புகொள்ளும் ஒவ்வொருவர் மூலமாகவும் நாம் அறிந்தோ அறியாமலோ பாதிக்கப்படுகிறோம். (51)

இந்தப் பொறுப்பினின்று நாம் நம்மை விடுவித்துக்கொள்ள இயலாது. நமது வார்த்தைகள், நமது செயல்கள், நமது உடை, நடவடிக்கைகள், பாவனைகள், நமது முகபாவங்கள் ஆகியவைகளுக்கும் மற்றவர்களை பாதிக்கக்கூடிய செல்வாக்குண்டு. இவ்வாறு மனதில் பதியும் எண்ணங்களில் எந்த மனிதனும் அளவிடமுடியாத அளவிற்கு நன்மையான அல்லது தீமையான விளைவுகளை ஏற்படுத்தலாம். ஒவ்வொரு கணநேரதூண்டுதல் தெரிவிக்கும் செய்தியும் விதைக்கப்பட்ட விதையாக, அதற்கேயுரிய அறுவடையைக் கொண்டுவரும். நீண்ட சங்கிலிபோன்ற மானிட சம்பவங்களால் இது ஒரு கண்ணியாக இருக்கிறது. இது எம்மட்டும் விரிந்துசெல்லுமென்று நமக்குத் தெரியாது. நல்ல கொள்கைகளை மேம்படுத்துவதில் நமது முன்மாதிரியில் மற்றவர்களுக்கு உதவிசெய்யும்போது, நற்காரியங்களை செய்வதற்கான வல்லமையை நாம் அவர்களுக்குக் கொடுக்கிறோம். அவர்கள் தங்கள் பங்கிற்கு அதே செல்வாக்கை மற்றவர்கள்மீதும், இவ்வாறு செல்வாக்கை பெற்றவர்கள் இன்னும் வேறு பலர்மீதும் வைக்கிறார்கள். இவ்வாறு நாம் அறியாமலேயே நம் செல்வாக்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைகிறது. (52)

ஒரு கூழாங்கல்லை எடுத்து ஏரியின்மீது எறியுங்கள். ஒரு அலை உருவாகின்றது; மற்றுமொரு அலையும், பின்னர் மற்றுமொரு அலையும் உருவாகின்றது. அந்த அலைகள் அதிகரிக்கும்போது, வட்டமானது கரையைத் தொடும்வரை விரிவடைகிறது. நமது செல்வாக்கும் இப்படியே வேலைசெய்கிறது. நமது அறிவிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அப்பால் மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தையோ அல்லது சாபத்தையோ அது கொண்டுவருகிறது. (53)

நமது குணம் சக்திவாய்ந்ததாக இருக்கிறது. ஒரு உண்மையான—சுயநலமற்ற—தேவபயமுள்ள—வாழ்க்கையின் அமைதியான சாட்சி ஏறக்

குறைய தடுக்கமுடியாத ஒரு செல்வாக்கை உடையதாக இருக்கிறது. நாம் கிறிஸ்துவின் குணத்தை நமது வாழ்வில் வெளிப்படுத்துவதின்மூலம், பிற ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் வேலையில் அவரோடு ஒத்துழைக்கிறோம். அவரது குணத்தை நமது வாழ்க்கையில் வெளிப்படுத்துவதின்மூலமாக மாத்திரமே நாம் அவரோடு ஒத்துழைக்கமுடியும். நமது செல்வாக்கின் எல்லை எவ்வளவு விரிவாக இருக்கின்றதோ அதற்கேற்றபடி அதிகமான நன்மைகளை நாம் செய்யலாம். தேவனுக்குச் சேவைசெய்கிறோமென்று கூறுபவர்கள் கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றும்போது, தங்களது அன்றாட வாழ்விலே பிரமாணத்தின் கொள்கைகளை செயற்படுத்தும்போது, தேவனை மிகவும் அதிகமாக நேசிக்கிறார்களென்றும், தங்களது அண்டை அயலகத்தாரை தங்களைப்போலவே நேசிக்கிறார்களென்றும், அவர்களது ஒவ்வொரு செயலும் சாட்சிபகருமானால், அப்பொழுது உலகத்தையே அசைக்கும் வல்லமையை சபை பெற்றிருக்கும். (54)

நமது செல்வாக்கு பிறர்மீது தீமையையும் ஏற்படுத்தும் சக்தி கொண்டதென்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. தன் சொந்த ஆத்துமாவை இழப்பது ஒரு பயங்கரமான காரியம். ஆனால் பிறர் தங்களது ஆத்துமாக்களை இழப்பதற்கு நாம் காரணமாக இருத்தல் அதைவிட மிகவும் பயங்கரமானது. நமது செல்வாக்கு மரணத்திற்கேதுவான மரணவாசனையாக இருக்கிறதென்ற காரியத்தை நினைக்கவே பயங்கரமாக இருக்கிறது; எனினும் இது சாத்தியமே. கிறிஸ்துவோடு சேர்க்கிறதாக கூறும் பலர் சிதறடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் சபை மிகவும் பெலவீனமாயிருக்கிறது. அநேகர் பிறரைப்பற்றி விமர்சனம் செய்வதிலும் குற்றம்கண்டுபிடிப்பதிலும் தாராளமாக ஈடுபடுகிறார்கள். சந்தேகத்திற்கும், பொறாமைக்கும், அதிருப்திக்கும் இடமளித்து, சாத்தானின் கருவிகளாக மாறிவிடுகிறார்கள். தாங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதை உணரும் முன்னரே, சாத்தான் தனது நோக்கத்தை அவர்களில் நிறைவேற்றிவிடுகிறான். தீய எண்ணப்பதிவுகள் ஏற்பட்டாயிற்று; நிழல் அங்கே படிந்துவிட்டது. சாத்தானின் அம்புகள் அடையவேண்டிய இலக்கை அடைந்துவிட்டன. கிறிஸ்துவை ஏற்கக்கூடியவர்களை அவநம்பிக்கை, அவிசுவாசம், வெளிப்படையான துரோகம் ஆகியவை இறுகப்பற்றிகொண்டுவிட்டது. இந்தச்சமயத்தில் நம்பிக்கையின்மைக்கு நேராக தாங்கள் விரட்டினார்கள், இப்பொழுது கண்டனத்திற்கும், கெஞ்சுதலுக்கும் எதிராக கடினப்பட்டுப்போய்விட்டதைப் பார்த்து சாத்தானின் ஊழியக்காரர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மேலும், அந்த ஆத்துமாக்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது தாங்கள் உண்மையாகவும் நீதியாயும் இருப்பதாக தங்களைப் புகழ்ந்துகொள்கிறார்கள். வேதனைக்குரிய நிலையில் குணக்கேட

டைந்து பாழாகிப்போன இந்த ஆத்துமாக்கள், தங்களது கடிவாளமற்ற சொந்த நாவினால் செய்த வேலையினால்தான் இத்தகைய நிலைக்கு வந்துவிட்டோமென்பதை உணருவதில்லை. அவர்களது தீய செல்வாக்கினால் தான், சோதிக்கப்பட்ட இந்த ஆத்துமாக்கள் விழுந்துவிட்டார்கள். (55)

கிறிஸ்தவர்களென்று தங்களை அழைத்துக்கொண்டவர்களிடத்தில் காணப்பட்ட அற்பமான குணம், சுயநலத்திலே தோய்ந்துகிடந்த நிலை, அக்கறையற்ற அலட்சியம் ஆகியவைகளே ஜீவபாதையில் செல்லாதபடிக்கு அநேகரை திசைதிருப்பிவிட்டது. தங்களது செல்வாக்கின் விளைவுகளை தேவனுடைய நீதிமன்றத்தில் சந்திக்கப் பயப்படுகிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள். (56)

தேவன் நமக்களித்திருக்கும் "செல்வாக்கு" எனப்படும் அருட்கொடையை தேவனுடைய கிருபையினால் மாத்திரமே நாம் சரியானவிதத்தில் பயன்படுத்தமுடியும். பிறர்மீது நன்மைக்கேதுவான செல்வாக்கை ஏற்படுத்தும்படியாக நம்மிலே ஒன்றும் இல்லை. நமது உதவியற்ற நிலையையும், தெய்வீகவல்லமை நமக்குத் தேவையென்பதையும் நாம் நன்றாகப் புரிந்துகொண்டோமேயானால், நம்மிலே நாம் நம்பிக்கைவைக்கமாட்டோம். எத்தகைய விளைவுகளை ஒரு நாள், ஒரு மணிநேரம், ஒரு கணநேரம் தீர்மானிக்குமென்பது நமக்குத் தெரியாது. நாம் ஒவ்வொரு தினத்தைத் துவக்கும்போதும் பரலோகப் பிதாவிற்கு நம்மை ஒப்புக்கொடுத்தே துவக்கவேண்டும். நம்மைக் கண்காணிக்கும்படியாக, தூதர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களது பாதுகாவலுக்கடியில் நாம் நம்மை வைக்கும்போது, ஆபத்து வரும் ஒவ்வொரு முறையும் தூதர்கள் நமது வலதுபக்கத்திலே நிற்பார்கள். நாம் அறியாத நிலையில் ஒரு தவறான செல்வாக்கைப் பயன்படுத்தும் ஆபத்தில் இருக்கும்போது, தூதர்கள் நமக்கருகில் இருந்து சரியான வழியைத் தெரிந்துகொள்ளுமாறு நம்மைத் தூண்டுவார்கள். சரியான வார்த்தைகளை நமக்காகத் தெரிவுசெய்து கொடுப்பார்கள். நமது செயல்களில் அவர்களது செல்வாக்கைப் பயன்படுத்துவார்கள். இவ்வாறு, நமது செல்வாக்கு அமைதியாக அறியாத நிலையிலிருக்கும். ஆனாலும் கிறிஸ்துவண்டைக்கும் பரலோகத்திற்கும் மக்களை ஈர்ப்பதற்கு மாபெரும் வல்லமையாகச் செயல்படும். (57)

## நேரம்

காலம் நம்முடைய தேவனுக்குச் சொந்தமாயிருக்கிறது. ஒவ்வொரு விநாடியும் அவருடையதாயிருக்கிறது. நாம் காலத்தை அவருடைய நாமத்தின் மகிமைக்கென மேம்படுத்த பக்திவிநயமான கடமைக்கடியில் இருக்கிறோம்.

நமது நேரத்தை எப்படிச் செலவிடுகிறோம் என்பதைக்குறித்து கண்டிப்பான கணக்கைக் கொடுக்குமாறு ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். அவர் கொடுத்திருக்கும் வேறு எந்தத் தாலந்தைக்குறித்தும் இவ்வாறு அவர் கேட்பதில்லை. (58)

காலத்தின் மதிப்பு நமது கணிப்பிற்கும் அப்பாற்பட்டது. கிறிஸ்து ஒவ்வொரு வினாடியையும் விலைமதிப்புள்ளதாக கருதினார். நாமும் அவ்வித மாகவே கருதவேண்டும். நமது வாழ்வு மிகவும் குறுகியதாயிருக்கிறபடியினால், நாம் வாழ்வையும் காலத்தையும் அசட்டைசெய்தல் கூடாது. நித்தியத் திற்கென்று ஆயத்தப்படுவதற்கு ஒருசில நாட்களே நமக்குத் தவணையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வீணடிப்பதற்கோ தன்னலமிகுந்த இன்பங்களில் திளைத்திருப்பதற்கோ பாவத்தில் உழன்றுகிடப்பதற்கோ நமக்கு நேர மில்லை. வருங்காலத்தில் பெறப்போகும் நித்திய வாழ்விற்காக நமது குணங் களை உருவாக்குவதற்கு இதுவே காலமாகும். நம்மை ஆராய்ந்து தீர்மா னிக்கவிருக்கும் நியாயத்தீர்ப்பிற்கு இப்பொழுதே நாம் ஆயத்தமாகவேண்டும். (59)

மனித குடும்பம் பூமியில் ஸ்தாபிக்கப்பட்ட சில காலத்திற்குள்ளாகவே மரணம் அவர்களைச் சந்தித்தது. நித்தியவாழ்வுகுறித்த ஒரு மெய்யான அறிவைப் பெற்றுக்கொள்ளாவிடில், இந்த உலகில் நடைபெற்ற அயராத உழைப்பு இறுதியில் ஒன்றுமில்லாமையில் முடிவடைந்துவிடுகிறது. காலத்தை தனது வேலைநாளென்று எண்ணிப் பாராட்டுகிற ஒரு மனிதன் ஒரு அழகான மாளிகைக்கும் நித்திய வாழ்விற்கும் தான் தகுதியுள்ளவனென்று நிரூபிக் கிறான். அவன் இந்த உலகத்தில் பிறந்தது நல்லது. (60)

காலத்தை மீட்டெடுக்கவேண்டும் என்று நாம் எச்சரிக்கப்படுகிறோம். வீணடிக்கப்பட்ட நேரத்தை மீண்டும் ஒருபோதும் பெற்றுக்கொள்ளமுடியாது. ஒரு கண நேரத்தைக்கூட நாம் திரும்பப் பெற்றுக்கொள்ள இயலாது. அவரது மாபெரும் மீட்பின் திட்டத்திலே தேவனோடு உடன்ஊழியர்களாக இருப்பதால் மாத்திரமே இனி மீந்திருக்கும் காலத்தை மிகச் சிறப்பானமுறையில் பயன் படுத்தி, நமது காலத்தை மீட்டுக்கொள்ளமுடியும். (61)

இதைச்செய்யும் மனிதனுடைய குணத்திலே ஒரு மாற்றம் காணப்படும். அவன் தேவனுடைய குமாரனாகவும், ராஜகுடும்பத்தின் அங்கத்தினராகவும், பரலோக இராஜாவின் ஒரு பிள்ளையாகவும் மாறுகிறான். தூதர்களின் நண்பனாகவும் தகுதிப்படுத்தப்படுகிறான். (62)

நமது சக மனிதரின் இரட்சிப்பிற்காக நாம் பணியாற்ற வேண்டிய நேரம் இதுவே. சிலர் ஊழியத்திற்காகப் பணம் கொடுத்துவிட்டால்போதும்; அதுவே

அவர்கள் செய்யவேண்டிய காரியமென்று எண்ணிவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் தனியாக ஊழியம்செய்யக்கூடிய அந்த அருமையான நேரம் மேம் படுத்தப்படாமல் கடந்துசென்றுவிடுகிறது. ஆரோக்கியமும், பெலனுமுடைய அனைவரும் தேவனுக்கு சுறுசுறுப்பாக சேவைசெய்யவேண்டியது அவர்களது கடமையும் சிறப்புரிமையுமாக இருக்கிறது. கிறிஸ்துவுக்கு ஆத்துமாக்களை ஆதாயம்செய்ய அனைவரும் ஊழியம்செய்தல் அவசியம். நன்கொடை கொடுப்பது ஒருபோதும் இந்த ஊழியத்திற்கு ஈடாகாது. (63)

ஒவ்வொரு விநாடியும் நித்திய வாழ்வுகுறித்த முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களை சுமந்துகொண்டிருக்கிறது. நொடிப்பொழுதில் நுட்பமாக வேலை செய்யும் மனிதர்களாக, அதாவது கொடுக்கப்படும் அறிவிப்பைக் கேட்டு, உடனே சேவைசெய்ய ஆயத்தமாக இருக்கவேண்டும். நித்திய ஜீவனுக்கான வசனத்தை அதற்காக தேவையோடு காத்திருக்கும் ஆத்துமா விற்கு உடனே கொடுப்பதற்கான சந்தர்ப்பம் இப்பொழுது நம்முடையதாக இருக்கலாம். இனி ஒருபோதும் இத்தகைய சந்தர்ப்பம் கிடைக்காமல் போகலாம். தேவன் அவனைப் பார்த்து: “உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும்” (லூக்கா 12:20) என்று கூறலாம். நியாயத்தீர்ப்பின் அந்த மகாநாளிலே நமது கணக்கை நாம் எப்படி தேவனிடத்தில் ஒப்படைப்போம். (64)

நித்தியவாழ்வு சம்பந்தப்பட்ட காரியங்களோடு ஒப்பிடும்போது, இந்த உலகியியல்சார்ந்த கவலை, மனப்பாரம், பரபரப்பு ஆகியவைகள் உடற்பயிற்சிக்காக காலால் மிதித்து இயக்கப்படும் சுழல் இயந்திரம்போல (Treadmill) இருக்கிறது. ஆகையால் இந்த உலகம்சார்ந்த—இம்மைக்குரிய காரியங்களில் மூழ்கி மிகவும் பக்திவிநயத்திற்குரிய நமது வாழ்வை கெடுத்துப்போடக் கூடாது. எனினும், தேவன் இவ்வுலக வாழ்க்கையின் காரியங்களில் அவருக்குச் சேவை செய்யவேண்டுமென்று நம்மை அழைத்திருக்கிறார். பக்திசெலுத்துவது உண்மையான மார்க்கத்தின் ஒரு பகுதியாக இருப்பதுபோன்று, இந்த ஊழியத்திற்கு கடுமையான உழைப்பு தேவை. வேதாகமம் சோம்பேறித்தனத்திற்கு எந்த ஆதரவும் கொடுக்கிறதில்லை. நமது உலகத்தைப் பாதித்திருக்கும் மாபெரும் சாபம் சோம்பேறித்தனமே. உண்மையில் மனந்திரும்பிய ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கடுமையாக வேலைசெய்யும் ஊழியக்காரனாகவோ அல்லது ஊழியக்காரியாகவோ இருப்பார்கள். (65)

நமது மனதைப் பண்படுத்துவதிலும் அறிவைச் சேர்த்துக்கொள்வதிலும் நாம் அடையும் வெற்றி, நமது நேரத்தில் சரியான முறையில் வேண்டிய மாறுதல்களைச் செய்து, முன்னேற்றுவிப்பதில்தான் இருக்கிறது. ஏழ்மையும்

தாழ்குடிப்பிறப்பும் சாதகமற்ற சூழ்நிலைகளும் அறிவுவளர்ச்சியைத் தடுக்க வேண்டியதில்லை. அத்தகைய நொடிப்பொழுதுகள் பத்திரமாகப் பொக்கிஷம் போன்று பாதுகாக்கப்படவேண்டும். இங்குமங்குமாக சில நொடிப்பொழு துகள் குறிக்கோளற்ற உரையாடலிலே வீணாக்கப்பட்டுவிடும். பெரும்பாலும் காலையில் பலமணிநேரங்கள் படுக்கையிலேயே வீணடிக்கப்படுகிறது. இரயிலில், பேருந்துகளில் பயணிக்கின்ற நேரம், புகைவண்டி நிலையத்தில் காத்துக்கிடக்கும் நேரம், ஆகாரத்திற்காகக் காத்திருக்கும் நேரம், குறிப்பிட்ட நபரைச் சந்திப்பதற்காக தீர்மானிக்கப்பட்ட நேரத்தை கடைபிடிக்காமல் பிந்திவிட்ட நபர்களோடு காத்திருப்பதில் வீணாகும் நேரம் ஆகியவைகளைச் சந்திப்பதற்காக கையில் வாசிப்பதற்கு ஒரு புத்தகத்தை வைத்திருந்தால் விட்டுவிட்டு கிடைக்கின்ற மணித்துளிகளைப் படிப்பதிலும், வாசிப்பதிலும், கவனமாக சிந்திப்பதிலும், முடிக்கமுடியாமல் வைத்திருக்கும் காரியங்களை செய்துமுடிப்பதிலும் செலவிடலாம். ஒரு உறுதியான நோக்கம், விடாப்பிடியாகத் தொடர்ந்து கடினமாக உழைத்தல், நேரத்தை சிக்கனமாகச் செலவிடல், ஆகியவை மனுஷருக்கு அறிவையும் மன ஒழுங்கையும் வழங்கி, பயனுள்ள எந்த வேலைக்கும் அவர்களைத் தகுதிப்படுத்தும். (66)

ஒழுங்கு, முற்றுமுழுக்க—தெளிவாக ஒரு காரியத்தை அறிந்து கொள்ளுதல், வேகமாக வேலைகளைச் செய்துமுடித்தல் ஆகிய பழக்கங்களைப் பெற்றுக்கொள்வது ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாக இருக்கிறது. எத்தகைய வேலையாயினும், அதை நேரம்தாழ்த்தி செய்வதற்கு சாக்குப்போக்கு கூறமுடியாது. ஒருவர் எப்போதுமே வேலையில் ஈடுபட்டிருந்தும், அந்த வேலை ஒருபோதும் முடிக்கப்படாமலிருந்தால், அதற்குக் காரணம் அவரது மனமும் இதயமும் ஒன்றாக இணைந்து அந்த வேலையில் ஈடுபட வில்லை என்பதாகும். மெதுவாகவும் பிரயோஜனமின்றியும் வேலைசெய்கிறவர் இவை சரிசெய்யப்படவேண்டிய தவறுகள் என்பதை உணரவேண்டும். சிறப்பான பயன்களைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நேரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை திட்டமிடுவதில் மனதைச் செயல்படுத்துவது அவசியம். சாமர்த்தியத்தாலும், ஒழுக்கமுறையைப் பின்பற்றுவதாலும் மற்றவர்கள் பத்து மணிநேரம் எடுத்துச் செய்கின்ற வேலையை சிலர் ஐந்து மணிநேரத்தில் செய்துமுடிப்பார்கள். வீட்டுவேலையில் ஈடுபட்டிருக்கும் சிலர் எப்பொழுதும் வேலைசெய்துகொண்டே இருப்பார்கள். வேலை அதிகமாக இருக்கிறதென்பது அதற்கான காரணமல்ல. நேரத்தை மிச்சப்படுத்துவதற்காக அதற்கேற்றபடி அவர்கள் திட்டமிட்டு வேலைசெய்கிறதில்லை. மெதுவாக—காலத்தைக் கடத்தியே வேலைசெய்பவர்கள் கொஞ்சமாக இருக்கும் வேலையை அதிகப்படுத்திவிடுகிறார்கள். காரியத்தைத் தீர்மானிக்கும் அனைவரும் இத்தகைய குழப்பமுள்ள—தாமதிக்கின்ற பழக்கவழக்கங்களை

விட்டுவிடுவார்கள். பணிசெய்வதில் அவர்களுக்கு ஒரு திட்டமான குறிக்கோள் இருக்கவேண்டும். கொடுக்கப்பட்ட பணியைச் செய்வதற்கு எவ்வளவு நேரமாகுமென்பதைத் திட்டமிடவேண்டும். அதன்பின்னர், அந்த கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் அந்த வேலையை நிறைவேற்ற அனைத்து முயற்சிகளும் செய்யவேண்டும். பயிற்றுவிக்கப்பட்ட மனது, கைகளை சாதுரியமாக்கும். (67)

தங்களைச் சீர்திருத்த தீர்மானிக்காதிருப்பதால், தவறான முறைகளில் காரியங்களைச் செய்வது இயல்பாகிவிடுகிறது. தங்களது ஆற்றல்களை பண்படுத்துவதின்வாயிலாக மிகச்சிறந்த சேவைசெய்வதற்கான திறனைப் பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் எங்கும் எல்லா இடத்திலும் தாங்கள் அவசியப்படுவதை காண்பார்கள். அவர்களது அத்தனை தகுதிக்கும் ஏற்ப அவர்கள் பாராட்டப்படுவார்கள். (68)

பிள்ளைகளாலும் வாலிபர்களாலும் நேரம் வீணாக்கப்படுகிறது. வீணாக்கப்படும் இந்த நேரம் வீட்டுவேலைகளைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படலாம். இவ்வாறு பெற்றோர்களிடத்தில் தங்களுக்கு அன்போடுகூடிய அக்கறை இருக்கிறதென்பதைக் காட்டலாம். மற்றவர்கள் சுமக்கவேண்டியிருக்கிற பொறுப்புகளை வாலிபர்கள் தங்களது உறுதியான இளந்தோள்களிலே சுமக்கலாம். (69)

கிறிஸ்து தமது ஆரம்பகால ஆண்டுகளிலிருந்து ஊக்கமுள்ள சுறுசுறுப்பான செயல்களில் ஈடுபட்ட ஒரு வாழ்க்கையை வாழ்ந்துவந்தார். தம்முடைய சந்தோஷத்திற்காக அவர் வாழவில்லை. எல்லையற்ற பரம்பொருளாகிய தேவனுடைய குமாரனாக இருந்தபோதிலும், தமது தகப்பனாகிய யோசேப்புவினுடைய தச்சுத்தொழிலில் அவர் ஈடுபட்டார். அவர் செய்த தொழில் அர்த்தம்மிகுந்ததாயிருந்தது. மனிதனுடைய குணத்தை மேம்படுத்துபவராக அவர் இவ்வுலகிற்கு வந்தார். அவர் ஆற்றியபணி அனைத்தும் பூரணமானதாக இருந்தது. எப்படி தமது தெய்வீக வல்லமையால் குணங்களில் மாற்றங்களைக் கொண்டுவந்தாரோ அதேபோன்று உலகியல் சார்ந்த அவரது அனைத்துப் பணிகளிலேயும் பூரணத்துவத்தைக் கொண்டு வந்தார். அவரே நமது மாதிரியாயிருக்கிறார். (70)

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நேரத்தின் மதிப்பையும் அதை எவ்விதமாக சரியானவிதத்தில் உபபோகிக்கவேண்டும் என்பதையும் கற்றுக்கொடுக்கவேண்டும். அவர்கள் செய்யும் பணி தேவ நாமத்திற்கு மகிமையையும் மனுக்குலத்திற்கு ஆசீர்வாதத்தையும் கொண்டுவரவேண்டும். தங்களது இளமைப்பருவத்திலேயே அவர்கள் தேவனுடைய ஊழியர்களாக இருக்கமுடியும். (71)

பெற்றோர் எந்த ஒரு பணியையும் செய்ய அனுமதிக்காது தங்கள் பிள்ளைகளை வளர்ப்பார்களேயாயின், அதைவிடப் பெரிய பாவம் வேறொன்றுமிராது. இப்படிப்பட்ட பிள்ளைகள் சீக்கிரத்திலேயே சோம்பலை நேசிக்கப்பழகி, பிற்காலத்தில் குறிக்கோளற்ற—பயனற்ற ஆண்களும் பெண்களுமாக வளர்ந்துவிடுகிறார்கள். உழைத்துச் சம்பாதிக்கும் வயதை அவர்கள் எட்டும்போது, அவர்கள் சோம்பலுள்ளவர்களாக சலிப்போடு வேலைசெய்வார்கள். எனினும், அவர்கள் உத்தமமாக வேலை செய்பவர் களுக்குக் கொடுக்கப்படும் அதிகச் சம்பளத்தை எதிர்பார்ப்பார்கள். உண்மையான உக்கிராணக்காரர்களாயிருக்க வேண்டுமென்ற காரியத்தை தெளிவாக உணர்கிறவர்களுக்கும் இவர்களுக்குமிடையே ஒரு மாபெரும் வித்தியாசத்தை நாம் காணலாம். (72)

உலகியல்சார்ந்த வேலையிலே சோம்பேறித்தனத்தோடும், அக்கறை யற்ற பழக்கவழக்கங்களோடும் ஈடுபடும்போது, அதேகுணம் மார்க்கசம்பந்த மான வாழ்விலும் கொண்டுவரப்பட்டு, தேவனுக்காக எத்தகைய திறமையான சேவையையும் செய்வதற்கு தகுதியற்றவராக ஆக்கிவிடுகிறது. அஜாக்கிரதை ஆவிக்குரிய ஜீவியத்தில் பிரவேசிக்கும்போது, தேவனுக்கு திறமையுடன் ஊழியஞ்செய்வதை தடைசெய்துவிடுகிறது. உண்மையான உழைப்பினிமித்தம் உலகிற்கு ஆசீர்வாதமாகத் திகழவேண்டிய பலர் சோம்பலினால் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்கிறார்கள். வேலையின்மையும் திட நோக்கமின்மையும் அவர்களை ஓராயிரம் சோதனைகளுக்கு அழைத்துச் செல்லும்படியாக கதவைத் திறந்துவிட்டிருக்கிறது. தீய நண்பர்களும், கேடான பழக்கங்களும் மனதையும் ஆத்துமாவையும் கெடுத்து, இவ்வுலக வாழ்வையும் நித்திய வாழ்வையும் அழித்துவிடுகிறது. (73)

எந்தத் துறையைச் சார்ந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலும்: “அசதியா யிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்.” “எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.” “செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்” (ரோமர் 12:11; கொலோ. 3:24; பிர. 9:10) என்று தேவனுடைய வசனம் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. (74)

### ஆரோக்கியம்

ஆரோக்கியமாக இருத்தல் ஒரு ஆசீர்வாதமாகும். எனினும், இதன் மதிப்பை எவரும் பாராட்டுகிறதில்லை. நமது உடலின், மனதின், ஆற்றல்களின் திறமை பெருமளவிற்கு நமது ஆரோக்கியத்தையே சார்ந்திருக்கிறது.

நமது உந்துவேக ஆற்றல்களும், உணர்வுகளும் நமது உடலில் ஆசனம் போட்டு அமர்ந்திருக்கிறது. நமது தாலந்துகள் மிகவும் உயர்ந்த அளவில் பயன்படுத்தப்படத்தக்கதாக நமது சரீரம் மிகச்சிறந்த நிலையில் இருக்க வேண்டும். மேலும் மிகமேலான ஆவிக்குரிய செல்வாக்கிற்கடியில் இருக்கவேண்டும். (75)

உடல்பலத்தை குறைக்கின்ற எதுவும் மனதை வலுவிழக்கச் செய்கின்றது. சரியானதற்கும் தவறானதற்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டறியக் கூடாதபடி மனதின் செயல்படும் திறன் குன்றிப்போய்விடுகிறது. நன்மையானது எதுவென்று தெரிவுசெய்யும் செயல்திறன் நமக்குக் குறைந்துவிடுகிறது. சரியானது இதுதான் என்று அறிந்த காரியத்தையும் செய்யக்கூடாதபடி நமது தீர்மானிக்கும் திறன் குறைந்துவிடுகிறது. (76)

நமது உடலின் சக்தியை தவறாகப் பயன்படுத்தும்போது, தேவ மகிமைக்காக பயன்படுத்தவேண்டிய நமது ஜீவியக்காலம் குறைகிறது. செய்வதற்காக நமக்கு தேவன் கொடுத்திருக்கும் வேலையை நிறை வேற்றுவதற்கு அது நம்மைத் தகுதியற்றவர்களாக்கிவிடுகிறது. தவறான பழக்கவழக்கங்களுக்கு ஆளாவதை அனுமதித்ததினாலும், இரவில் நெடுநேரம் விழித்திருப்பதினாலும், ஆரோக்கியத்தைப் பாதிக்கும் அளவிற்கு இன்சுவை நுகர்ச்சிகளில் நாட்டங்கொண்டு திருப்தியடைவதாலும், தளர்ந்த நலிந்துபோன உடலுக்கு நாம் அடித்தளம் போடுகின்றோம். உடற்பயிற்சியை அலட்சியம்செய்து உள்ளத்திற்கோ அல்லது உடலுக்கோ அதிக வேலையைக் கொடுத்து, நரம்புமண்டலத்தை சமநிலை இழக்கச்செய்துவிடுகிறோம். இயற்கையின் பிரமாணங்களை புறக்கணித்து, ஆயுள் நாட்களை குறைத்து தேவனுக்குச்செய்யும் சேவைக்கு தங்களை தகுதியற்றவர்களாகச் செய்பவர்கள் தேவனுக்கு நேராக கொள்ளையடித்தவர்கள் என்ற குற்றத்தைச் சுமக்கிறார்கள். அவர்கள் தங்கள் உடன் மனிதர்களையும் கொள்ளையடித்தவர்களாகிறார்கள். தேவன் அவர்களை அனுப்பியிருக்கிற—மற்றவர்களை ஆசீர்வதிக்கும் வேலை அவர்களது சொந்த வழிமுறைகளினாலே குறைக்கப்பட்டுப் போயிற்று. ஒரு குறுகிய காலத்தில் செய்திருக்கக்கூடியதற்கும் தங்களைத் தகுதியற்றவர்களாக்கிக்கொண்டார்கள். நமது தீய பழக்கவழக்கங்களால் உலகிற்குச் செய்யப்பட வேண்டிய நன்மையை நாம் வழங்காமலிருக்கும் போது, ஆண்டவர் நம்மை குற்றவாளிகளாகத் தீர்க்கிறார். (77)

இயற்கையின் பிரமாணத்தை மீறுவது சன்மார்க்கப் பிரமாணத்தை மீறுவதாகும். இயற்கையின் பிரமாணத்தையும் சன்மார்க்கப் பிரமாணத்தையும் ஆக்கியவர் தேவனே. மனிதனிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றபடி,

அவனது உடலின் ஒவ்வொரு நரம்பிலும், ஒவ்வொரு தசையிலும், ஒவ்வொரு ஆற்றலிலும் அவர் தமது சொந்த விரலால் எழுதிய பிரமாணம் இருக்கின்றது. நமது உடலில் எந்தப் பகுதி தவறாகப் பயன்படுத்தப்பட்டாலும், அது அந்தப் பிரமாணத்தை மீறினதாகக் கருதப்படும். (78)

கர்த்தருடைய வேலையைச் செய்வதற்குத் தேவையான நிலையில் தங்கள் சரீரத்தை வைத்துக்கொள்வதற்கேதுவாக அனைவரும் உடல் அமைப்பைப்பற்றின நல்ல அறிவுகொண்டவர்களாக இருக்கவேண்டும். மானுடத்தின்மூலமாக தெய்வீகத்தன்மை அதின் முழுநிறைவிலே வெளிப் படும்படி இந்த உடல்சார்ந்த வாழ்க்கை கவனமாகப் பாதுகாக்கப்பட்டு மேம்படுத்தப்படவேண்டும். இந்த மானிட உடலுக்கும் ஆவிக்குரிய வாழ்க்கைக்குமுள்ள தொடர்பு கற்றுக்கொள்ளவேண்டிய கல்வியில் மிகவும் முக்கியமான ஒரு பகுதியாகும். இதற்கான முக்கிய கவனம் வீட்டிலும் பள்ளியிலும் கொடுக்கப்படவேண்டும். ஒவ்வொருவரும் தங்களது உடலின் கட்டமைப்புபற்றியும், இயற்கை வாழ்வை அடக்கியாளும் பிரமாணங்கள் பற்றியும் நன்றாகத் தெரிந்துவைத்திருக்கவேண்டியது அவசியம். தனது உடல்குறித்த பிரமாணங்கள்பற்றி மனதார அறியாதிருந்து, அறியாமலேயே பிரமாணங்களை மீறுகிறவர் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார். வாழ்க்கைக்கும் உடல் நலத்திற்கும் சிறந்த சாதகமான தொடர்புகளில் அனைவரும் தங்களை வைத்துக்கொள்ளவேண்டும். தேவனுடைய கட்டுப்பாட்டிற்கடியில் இருக்கும் ஒரு உள்ளத்தின் கட்டுப்பாட்டிற்கடியில் நமது பழக்கவழக்கங்கள் கொண்டுவரப்பட வேண்டும். (79)

அப்போஸ்தலனாகிய பவுல்: "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1 கொரிந்தியர் 6:19,20) என்கிறார். (80)

## உடல் வலிமை

நாம் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும் மட்டுமல்ல, முழுப் பலத்தோடும் தேவனில் அன்புகூரவேண்டும். உடலின் சக்திகளை அறிவுப்பூர்வமாகப் பயன்படுத்துவதை இது முழுவதுமாக தன்ன கத்தே கொண்டுள்ளது. (81)

கிறிஸ்து இம்மைக்குரிய காரியங்களிலும் ஆவிக்குரிய காரியங்க ளிலும் ஒரு உண்மையான ஊழியக்காரராக இருந்தார். அவரது அனைத்து

ஊழியங்களிலும் அவரது பிதாவின் சித்தத்தைச் செய்யவேண்டுமென்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டிருந்தார். இம்மைக்குரிய காரியங்களும் மறுமைக்குரிய காரியங்களும் மிக நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கின்றன. இவை கிறிஸ்துவின் மிகவும் நேரடியான மேற்பார்வைக்கடியில் இருக்கின்றன. இதை அநேகர் சரியாக உணர்ந்திருக்கவில்லை. பூமிக்குரிய முதலாம் ஆசரிப்புக்கூடாரத்தை கிறிஸ்துவே திட்டமிட்டு சீரமைத்திருந்தார். சாலொமோன் கட்டிய ஆலயத்திற்கான ஒவ்வொரு குறிப்பையும் அவர் கொடுத்தார். பூலோகத்திலே நாசரேத் ஊரிலே ஒரு தச்சனாக வேலைசெய்த கிறிஸ்துவே தமது நாமம் கனப்படுத்தப்படத்தக்கதாக பரிசுத்த ஆலயம் எப்படி கட்டப்படவேண்டுமென்று திட்டமிட்டுக் கொடுத்த பரலோக கட்டிடக்கலை நிபுணர் ஆவார். (82)

கிறிஸ்துவே, தேர்ச்சித்திறன்வாய்ந்த அழகான வேலைப்பாடுகள் நிறைந்த ஆசரிப்புக்கூடாரத்தை கட்டுவதற்கான ஞானத்தை அதைக் கட்டியவர்களுக்கு கொடுத்தவர். "நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து, விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலை செய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரைவெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திரவேலைகளைச் செய்கிறதற்கும், மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவஆவியினால் நிரப்பினேன். மேலும், தாண் கோத்திரத்திலுள்ள அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாபையும் அவனோடே துணையாகக் கூட்டினதுமன்றி, ஞான இருதயமுள்ள யாவருடைய இருதயத்திலும் ஞானத்தை அருளினேன்; நான் உனக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் செய்வார்கள்" (யாத். 31:2–6) என்று கூறினார். (83)

ஒவ்வொரு துறைசார்ந்த அவரது ஊழியர்களும் தாங்கள் உடைமை யாகப் பெற்றிருக்கும் அனைத்தையும் கொடுத்தவர் அவரேயென்றெண்ணி, தம்மை நோக்கிப்பார்க்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆலோச னையில் ஆச்சரியமானவரும் செயலில் மகத்துவமானவருமாக இருக்கிற அவரிலே அனைத்துச் சரியான கண்டுபிடிப்புகளுக்கும் மேம்பாடு தரும் திருத்தங்களுக்குமான ஒரு வள ஆதாரம் இருக்கிறது. ஒரு மருத்துவரின் கைத்திறம்வாய்ந்த தொடுதலும், நரம்புகள் தசைகள் ஆகியவைகளின் மீதுள்ள அவரது ஆற்றலும், உடலின் மென்மையான உறுப்புகளைப்பற்றி அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவும், வியாதியினால் துன்பப்படுகிறவர்

களுக்குப் பயன்படத்தத்தக்கதாக தெய்வீக வல்லமையால் அவருக்குக் கொடுக்கப்பட்ட ஞானமாகும். தச்சன் சுத்தியலைப் பயன்படுத்தும் திறமையும், வேலைசெய்வதற்காக தடித்த இரும்புத் தகட்டை பலத்தோடு உருவாக்கும்படி கொல்லனுக்குக் கொடுக்கப்பட்ட திறமையும் தேவனிடமிருந்து வருகிறது. மனிதரிடம் தாலந்துகளைக் காக்கும் பொறுப்பை நம்பிக்கையோடு ஒப்படைத் திருக்கிறார். அதற்கான ஆலோசனையைப் பெறுவதற்காக அவர்கள் அவரை நோக்கிப்பார்க்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார். நாம் எதைச் செய்தாலும், வைக்கப்பட்டிருக்கிற எந்தத் துறையில் பணியாற்றினாலும், நிறைவான வேலையைச் செய்வதற்காக நமது மனங்களை அடக்கியாள அவர் விரும்புகிறார். (84)

மார்க்கமும் பணியும் இரு தனி காரியங்களாயிராமல் இரண்டும் ஒன்றா யிருக்கின்றன. நாம் செய்வதற்கும் சொல்வதற்கும் இடையில் வேதாகம மார்க்கம் பின்னிப்பிணைந்திருக்கவேண்டும். நாம் பெறும் இம்மைக்குரிய ஆவிக்குரிய வெற்றிகளோடு தெய்வீக மற்றும் மானுட செயல்துணைகள் இணைந்திருக்கவேண்டும். இயந்திரநுட்பம்சார்ந்த, வேளாண்வேலைசார்ந்த, வியாபாரம் மற்றும் அறிவியல்சார்ந்த கடும் முயற்சிகளில் அனைத்து மானுட தொழில்களிலும் மேற்கூறப்பட்ட அனைத்தும் இணைந்திருக்க வேண்டும். கிறிஸ்தவ செயல்பாடுகள் சம்பந்தப்பட்ட அனைத்துக் காரியங்களிலும் கண்டிப்பாக ஒத்துழைப்பு இருக்கவேண்டும். (85)

எந்தெந்தக் கொள்கைகளில் மாத்திரமே இத்தகைய ஒத்துழைப்பு சாத்தியமென்பதை தேவன் கூறியறிவித்திருக்கிறார். அவரோடு இணைந்து வேலைசெய்யும் அனைவருக்கும் அவரது மகிமையே நோக்கமாக இருக்கவேண்டும். அவரது சித்தத்திற்கு ஏற்றவாறும், அவர்மீது கொண்டிருக்கும் அன்பினாலும் நமது அனைத்து வேலைகளும் செய்யப்படவேண்டும். (86)

ஒரு கட்டிடத்தை கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தாலும் அல்லது ஒரு மார்க்க சம்பந்தமான ஆராதனையில் ஈடுபட்டிருந்தாலும், எதுவானாலும் தேவனுடைய சித்தத்தின்படி செய்வதே மிகவும் முக்கியமாகும். தங்களது குணக்கட்டுமானத்திலே அந்தப் பணியாளர்கள் சரியான கொள்கைகளைக் கொண்டிருப்பார்களேயானால், அவர்கள் கட்டுகின்ற ஒவ்வொரு கட்டுமானப் பணியிலும் கிருபையிலும் அறிவிலும் மேம்பாடடைவார்கள். (87)

ஒரு ஜீவனுள்ள—சுட்டெரிக்கும் தியாகபலியாக பலிபீடத்திலே சுயம் வைக்கப்படாவிட்டால், மாபெரும் தாலந்துகளானாலும் மிகவும் பகட்டார்வ மான சேவையானாலும் அதை தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார். வேரானது பரிசுத்தமாக இருக்கவேண்டும்; இல்லாவிடில் தேவனால் எந்தக் கனியும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. (88)

கர்த்தர் தானியேலையும் யோசேப்பையும் கூர்மதிவாய்ந்த மேலாளர்களாக்கி இருந்தார். அவர்கள்மூலமாக அவரால் வேலைசெய்ய முடிந்தது; ஏனெனில், அவர்கள் தங்களது சொந்த நாட்டங்களைத் திருப்திசெய்வதற்காக வாழாமல், தேவனைப் பிரியப்படுத்தவே வாழ்ந்தார்கள். (89)

தானியேலின் காரியத்தில் நமக்கு ஒரு பாடம் இருக்கிறது. தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒரு நபர் கூர்மதிவாய்ந்த செயல்நுட்பம் உள்ளவராக இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. அவர் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் தேவனால் போதிக்கப்பட முடியும். தானியேல் பாபிலோன் அரசின் பிரதான மந்திரியாக இருக்கும் போது, பரலோக அருளொளியைப் பெற்றுக்கொண்டிருக்கும் தேவனுடைய தீர்க்கதரிசியாகவுமிருந்தார். உலகப்பற்றுடைய பேராவல்கொண்ட அரசியல் மேதைகள் புல்லைப்போன்றும் புல்லின் பூவைப்போன்றும், வாடிப்போகிறவர்களாக இருக்கிறார்களென்று வேத வசனத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறார்கள். எனினும், தேவன் தமது சேவையில், அறிவுள்ள மனிதர்கள், பல்வகைசார்ந்த துறைகளிலும் தகுதிபெற்றவர்களாக வேண்டுமென்று விரும்புகிறார். தங்களது தொழில்துறை நடவடிக்கைகளில் சத்தியத்தின் மிகமேன்மையான கொள்கைகளை பின்னிப்பிணைந்து வைத்திருக்கும் தொழில் முனைவோரே இன்றையத் தேவையாகும். முழுநிறைவான படிப்பாலும் பயிற்சியாலும் அவர்களது தாலந்துகள் பூரணப்படவேண்டும். ஞானமும் திறமையும் உள்ளவர்களாக எந்தத் துறைசார்ந்த பணியில் ஈடுபட்டிருப்பவர்களானாலும் அவர்கள் தங்களுக்கான சந்தர்ப்பங்களை மேம்படுத்தவேண்டியது அவசியமென எண்ணுவார்களேயானால், அவர்களே இந்த உலகத்தில் தேவ இராஜ்யத்தைக் கட்டுவதற்காக தங்களது திறமைகளைப் பயன்படுத்திக்கொண்டிருப்பவர்களாவர். தனது அனைத்து அரசாங்க அலுவல்களிலும் நடவடிக்கைகளிலும் மிக மிக நுட்பமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபோதிலும், ஒரு தவறோ அல்லது பிழையோ தானியேலில் கண்டுபிடிக்கப்படவில்லை. ஒவ்வொரு தொழில் அதிபருக்கும் அவன் ஒரு முன்மாதிரியாக இருக்கிறான். மூளையின்—எலும்பின்—தசையின்—இதயத்தின்—ஜீவனின் பலமனைத்தையும் தேவனுடைய சேவைக்கு அர்ப்பணிக்கும் ஒரு மனிதனால் எப்படிப்பட்ட காரியங்கள் சாதிக்கப்படமுடியுமென்பதை தானியேலின் வரலாறு காட்டுகிறது. (90)

### பணம்

தேவன் மனிதரிடத்தில் பொருளையும் நம்பி ஒப்படைக்கின்றார். செல்வத்தைச் சேர்ப்பதற்கான ஆற்றலை அவர்களுக்குத் தருகிறார். புத்துணர்வு ஊட்டும் மழையினால் நீர்ப்பாய்ச்சுகிறார். பூமிக்கு வெப்பத்தைக்

கொடுக்கின்ற இயற்கையில் தாவரங்களை விழிப்படையச்செய்கின்ற— செழித்து வளரச்செய்து கனிகொடுக்கச்செய்கின்ற சூரிய ஒளியை அவர் நமக்குத் தருகிறார். பின்னர் அவருக்குச் சொந்தமானதை அவரிடம் திரும்பக் கொடுக்கும்படி கேட்கிறார். (91)

நம்மை நாமே மகிமைப்படுத்தி கனப்படுத்திக்கொள்ளும்படியாக பணம் நமக்கு அளிக்கப்படவில்லை. உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக நாம் அதைப் பயன்படுத்தவேண்டும். சிலர் தங்களுடைய சொத்தின் ஒரு பகுதிமாத்திரமே கர்த்தருக்குரியது என்று நினைக்கிறார்கள். ஊழியத்திற் கென்றும் தர்ம காரியங்களுக்கென்றும் ஒரு பகுதியை ஒதுக்கிவைத்துவிட்டு, மீதமுள்ள தொகையை தங்களுக்கு எது தகுதியானதென்று அவர்கள் காண் கிறார்களோ அதற்காகப் பயன்படுத்தப்படும்படி, அந்தப் பணம் தங்களுக்கே சொந்தமானதென்று கருதுகிறார்கள். இந்த எண்ணம் மிகவும் தவறானது. நம்முடையவைகள் அனைத்தும் கர்த்தருடையவைகளாக இருப்பதினால், நாம் அவைகளை எவ்விதமாகப் பயன்படுத்துகிறோம் என்பதுகுறித்து அவரிடம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பைசாவிலும் நாம் மிகமிக அதிகமாக தேவனை நேசிக்கிறோமா என்பதும், நம்மைப்போல நமது அண்டை அயலகத்தாரையும் நேசிக்கிறோமா என்பதும் காணப்படும். (92)

பணத்திற்கான மதிப்பு அதிகம்; ஏனெனில் பணத்தினால் ஏராளமான நன்மைகளைச் செய்யமுடியும். தேவனுடைய பிள்ளைகள் கையில் அது பசியாக இருப்பவர்களுக்கு உணவாகவும், தாகமாக இருப்பவர்களுக்கு பானமாகவும், உடையின்றித் தவிப்பவர்களுக்கு ஆடையாகவும் செயல்படு கிறது. ஒடுக்கப்படுவோர்களுக்கு அது ஒரு பாதுகாப்பு. நோயுற்றோருக்கு உதவிசெய்யக்கூடிய ஒரு வழிமுறையாக இருக்கிறது. வாழ்வின் தேவைகளை வழங்கவும் மற்றவர்களை ஆசீர்வதிக்கவும் தேவனுடைய ஊழியத்தை முன் னேற்றுவிக்கவும் பயன்படுத்தப்பட்டால் மாத்திரமே பணம் ஒரு நன்மையான தாக இருக்கும்; இல்லாவிடில், அதற்கு மணலைவிட மேலாக எந்த மதிப்பும் கிடையாது. (93)

குவித்துவைக்கப்பட்டிருக்கும் செல்வம் வெறுமனே பயனற்றதாக மாத்திரம் இல்லாமல், அது ஒரு சாபமாகவும் இருக்கிறது. பரலோகப் பொக்கிஷத்தின்மீது வைக்கப்பட்ட வாஞ்சையைப் பறித்துக்கொள்வதினால் இந்த வாழ்க்கையிலே ஆத்துமாவிற்கு அது ஒரு கண்ணியாக இருக்கிறது. தேவனுடைய அந்த மகாநாளிலே பயன்படுத்தப்படாத தாலந்துகளுக்கும் அலட்சியஞ்செய்யப்பட்ட சந்தர்ப்பங்களுக்கும் அது ஒரு சாட்சியாக நின்று, அதை உடைமையாகப் பெற்றிருந்தவர்களைக்

கண்டனஞ்செய்யும். “ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசிநாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில்பட்டது” (யாக்கோபு 5:1–4) என்று வேதாகமம் கூறுகிறது. (94)

நம்மிடமுள்ள பணத்தை மட்டுக்குமிஞ்சி அல்லது அக்கறையற்ற விதத்திலும் பயன்படுத்துவதை கிறிஸ்து ஒப்புக்கொள்வதில்லை. சிக்கனத்தைக் குறித்து, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: “ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள்” (யோவான் 6:12) என்றது அவர் கொடுத்த பாடமாக இருந்தது. தன்வசம் கொடுக்கப்பட்டுள்ள பணத்தை தேவனால் கொடுக்கப்பட்ட தாலந்து என்று நன்றாக உணர்ந்திருப்பவர் அதைச் சிக்கனமாகச் செலவிடுவார். மேலும் மற்றவர்களுக்குக் கொடுக்கத்தக்கதாக அதை சேமித்துவைப்பது தனது கடமை என்றும் உணர்ந்து செயல்படுவார். (95)

எவ்வளவு அதிகமாக ஆடம்பரத்திற்கும் சுயத்தில் திளைக்கும் இன்பங்களுக்கும் பொருளைச் செலவிடுகிறோமோ அவ்வளவு குறைவாக பசியுள்ளவனுக்கு உணவளிப்பதிலும் உடையற்றவர்களுக்கு உடுத்துவிப்பதிலும் நாம் செலவிடவேண்டியதாயிருக்கும். தேவையற்ற விதத்தில் ஒவ்வொரு பைசாவும் செலவிடப்படும்போது, நன்மை செய்வதற்கான சந்தர்ப்பத்தை செலவிடுபவர் இழந்துபோகநேரிடுகிறது. அவரால் ஒப்படைக்கப்பட்ட தாலந்துகளை மேம்படுத்துவதின்மூலம், அவருக்குச் செலுத்தப்படவேண்டிய கனத்தையும் மகிமையையும் அவருக்குச் செலுத்தாதபடி நாம் திருடிக் கொள்கிறோம். (96)

## இரக்கம் நிறைந்த உணர்வுகளும் உள்ளான அன்பும்!

இரக்கம் நிறைந்த பாச உணர்வுகள், தாராளமாக கொடுக்கவேண்டுமென்ற எண்ணங்கள், ஆவிக்குரிய காரியங்களை துரிதமாகப் புரிந்துகொள்ளும் ஆற்றல்கள் ஆகியவை அருமையான தாலந்துகளாகும். இத்தகைய தாலந்துகளை உடைமையாகக் கொண்டவர்களை ஒரு கனமான பொறுப்பிற்கடியில் இக்காரியம் வைக்கிறது. இவையனைத்தையும் நாம் தேவனுக்குச்

சேவைசெய்வதில் பயன்படுத்தவேண்டும். ஆனால் அநேகர் இங்கு தவறுகின்றனர். இத்தகைய குணங்களை உடையவர்கள் அத்துடன் திருப்தியடைந்தவர்களாக, இவைகளையும் மற்றவர்களுக்கான சுறுசுறுப்பான சேவையில் கொண்டுவரத் தவறிவிடுகிறார்கள். தருணங்களும் சூழ்நிலைகளும் தங்களுக்குச் சாதகமாக அமைந்திருந்தால், பெரும் நற்கிரியைகளைச் செய்திருப்போமென்று தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்கிறார்கள். அவர்கள் சந்தர்ப்பத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். தேவையில் இருப்பவனுக்கு ஒரு அற்ப காசையும் கொடுக்கவிரும்பாத, இரங்கத்தக்க நிலையிலிருக்கும் கருமியின் கஞ்சத்தனத்தை அவர்கள் நிந்திக்கிறார்கள். அவன் சுயத்திற்காகவே வாழ்கிறானென்றும் அவனது தாலந்துகளை அவன் தவறாகப் பயன்படுத்தியதற்கு அவனே பொறுப்பாளி என்றும் காண்கிறார்கள். தங்களுக்கும் குறுகிய மனமுடைய மற்றவர்களுக்குமுள்ள வேறுபாட்டை மனநிறைவோடு தெளிவாக எடுத்துக்கூறி, அத்தகைய அற்ப மனமுடைய அண்டை அயலகத்தாரைவிட தங்களது சொந்த நிலைமை மிகமிகச் சாதகமான நிலையில் இருக்கிறதென்று எண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களையே ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். பயன்படுத்தாத குணங்களை வெறுமனே கொண்டிருப்பது அவர்களது பொறுப்பை மேலும் அதிகரித்துவிடுகிறது. தாராளமான உள்ளன்பு உடையவர்களாக இருப்பவர்கள் அதை தங்களது நண்பர்கள்மீது மட்டுமல்லாமல், உதவி தேவைப்பட்ட அனைவர்மீதும் பொழியவேண்டுமென்ற காரியத்தில் தேவனுக்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். சமுதாயக் கூட்டுறவுகளினின்று கிடைக்கும் அனுகூலங்களும் தாலந்துகளே. நமது செல்வாக்கு எட்டுமளவிற்கு வருகின்ற அனைவருடைய நன்மைக்காகவும் அவைகள் பயன்படுத்தப்படவேண்டும். ஒரு சிலருக்கு மாத்திரமே இரக்கத்தைக் காட்டுகிற அன்பு அன்பல்ல. அது தன்னலம். அது ஆத்துமாக்களின் நன்மைக்காகவோ, தேவமகிமைக்காகவோ எந்த வகையிலும் கிரியைசெய்கிறதில்லை. எஜமானர் கொடுத்த தாலந்துகளை மேம்படுத்தாமல் அப்படியே விட்டுவிடுகின்றனர். இவர்கள் யாரை இகழ்ச்சியாக நினைக்கிறார்களோ அவர்களைவிட (இவர்கள்) பெரிய குற்றவாளிகளாகக் கருதப்படுவார்கள். அவர்களிடத்தில் "நீங்கள் உங்களது எஜமானரின் சித்தத்தை அறிந்திருந்தீர்கள், ஆனால் அதின்படி செய்யவில்லை" என்று கூறப்படும். (97)

### பயன்படுத்தப்படும்போது தாலந்துகள் பன்மடங்கு பெருகும்!

தாலந்துகள் பயன்படுத்தப்படும்போது பன்மடங்காகப் பெருக்கமடைகின்றன. வெற்றி என்பது தற்செயலான நிகழ்வோ அல்லது மாற்றமுடியாத முடிவின் விளைவோ அல்ல. தேவனுடைய அருட்செயலின் சிறந்த பயனா

கவும், விசுவாசம், சரியாக காரியத்தைப் புரிந்துகொண்டு செயல்படும்தன்மை, நேர்மை மற்றும் அயராத முயற்சி ஆகியவைகளுக்குக் கிடைக்கும் பரிசாகவும் அது இருக்கிறது. நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஈவையும் பயன்படுத்தவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். அவ்வாறு செய்வோமானால், பயன்படுத்தத்தக்கதான மிகவும் மேன்மையான ஈவுகளை நாம் பெற்றுக்கொள்வோம். நம்மில் குறைவுபடுகின்ற தகுதிகளை இயற்கைக்கும் அப்பாற்பட்ட முறையில் அவர் நமக்கு வழங்குகிறதில்லை. நமக்குக் கொடுக்கப்பட்ட தாலந்துகளை நாம் பயன்படுத்தும்போது, நம்முடைய ஒவ்வொரு ஆற்றலையும் பலப்படுத்தி பெருகச்செய்யத்தக்கதாக அவர் நம்மோடு கிரியைசெய்வார். எஜமானரின் சேவைக்காக ஊக்கத்தோடும் முழு இதயத்தோடும் செய்யப்படும் தியாகத்தின்மூலம் நமது ஆற்றல்கள் பெருகும். பரிசுத்த ஆவியானவர் கிரியையை நடப்பிப்பதற்கான உபகரணங்களாக நாம் நம்மை ஒப்புக்கொடுக்கும்போது, நம்மிலே கிரியைசெய்கின்ற தேவ கிருபையானது பழைய நாட்டங்களை வெறுக்கவும், பழைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஆற்றலோடு செயல்படும் மனப்பாங்குகளை மேற்கொள்ளவும், நல்ல பழக்க வழக்கங்களை அமைத்துக்கொள்ளவும் உதவிசெய்கிறது. நெஞ்சார நேசித்து, ஆவியானவரின் உந்துதலுக்கு நாம் கீழ்ப்படியும்போது, அவரது வல்லமையை அதிகமதிகமாகப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நமது இதயங்கள் விரிவடைகின்றன. செயலற்றிருக்கும் திறன்கள் விழிப்படைகின்றன. முடங்கிப்போன சக்திகள் புத்துயிர் அடைகின்றன. (98)

தேவனுடைய அழைப்பிற்கு கீழ்ப்படியும் ஒரு தாழ்மையான ஊழியன் தெய்வீக உதவியை நிச்சயம் பெறுவான். ஒரு மாபெரும் பரிசுத்த பொறுப்பை ஏற்றுக்கொள்வதெனப்படும் அந்தக் காரியமே குணத்தை மேம்படுத்த உதவி செய்யக்கூடியதாக இருக்கிறது. அது மனது மற்றும் ஆவிக்குரிய திறன்களை செயல்படச் செய்து, மனதையும் இதயத்தையும் பெலப்படுத்தி, சுத்திகரிக்கிறது. தேவனுடைய வல்லமையில் விசுவாசம் வைப்பதின்மூலமாக ஒரு பலவீனமான மனிதன் எப்படி பலமுள்ளவனாக மாறமுடியுமென்றும், அவனுடைய முயற்சிகள் எவ்வளவு திட்டமானதாக இருக்கமுடியும் என்றும், எத்தகைய மாபெரும் பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் காணும்போது, அது நம்மை ஆச்சரியத்திற்குள்ளாக்குகிறது. வெகு சொற்பமான அறிவோடு தாழ்மையுடன் ஆரம்பிக்கின்ற மனிதன் தனக்குத் தெரிந்தவற்றை மற்றவர்களுக்குக் கூறுகின்றான். அதே சமயத்தில், மேலும் அதிகமான அறிவைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவன் கடுமையாக உழைக்கின்றபடியால், பரலோகத்தின் அனைத்து பொக்கிஷங்களும் அவனுக்காகக் காத்திருப்பதைக் காண்கிறான். வெளிச்சத்தைப் பகிர்ந்துகொள்ளத்தக்கதாக எவ்வளவிற்கு அதிகமாக நாடுகின்றானோ

அவ்வளவிற்கதிகமான வெளிச்சத்தை அவன் பெற்றுக்கொள்வான். எவ்வளவிற்கதிகமாக மற்றவர்களுக்கு தேவனுடைய வசனத்தை ஆத்துமாக்களின்பேரில் கொண்ட அன்போடு விளக்கிக்கூற முயற்சிக்கிறாரோ அவ்வளவிற்கதிகமாக அந்த வசனங்களை அவர்தாமே மிகமிக தெளிவாகப் பெற்றுக்கொள்வார். எவ்வளவிற்கதிகமாக நமது அறிவை பயன்படுத்தி நமது வல்லமைகளை பயிற்சியுடன் கையாளுகின்றோமோ அவ்வளவிற்கதிகமாக நாம் அறிவும், வல்லமையும் உடையவர்களாக மாறுவோம். (99)

கிறிஸ்துவுக்காக நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் நமக்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுத்தரும். நம்வசம் உள்ள பொருளை அவருடைய மகிமைக்காக நாம் பயன்படுத்தும்போது, அவர் மேலும் அதிகமாக நம்மை ஆசீர்வதிப்பார். நமது ஜெபங்களிலே ஆத்தும பாரம் கொண்டவர்களாக கிறிஸ்துவிற்காக மற்றவர்களை நாம் ஆதாயம்செய்ய நாடும்போது, நமது சொந்த இதயங்களே தேவனுடைய கிருபையின் உயிர்த்துடிப்பின் செல்வாக்கினால் மலர்ச்சியடையும். நமது சொந்த—உள்ளான இதயத்தின் பாசங்கள் தணியாமல், தெய்வீக ஆர்வத்தோடு ஒளிரும். நமது முழு கிறிஸ்தவ ஜீவியமும் ஒரு மெய்யான இயல்போடு மிகவும் ஊக்கமானதாகவும் ஜெபம் நிறைந்ததாகவும் மாறிவிடும். (100)

பரலோகத்தில் ஒரு மனிதனுடைய மதிப்பு அவன் இதயம் எந்த அளவிற்கு தேவனைப்பற்றி அறிந்திருக்கிறது என்பதைவைத்து நிர்ணயிக்கப் படுகிறது. தேவனை அறியும் இந்த அறிவே அனைத்து வல்லமைகளும் பாய்ந்து வெளிவரக்கூடிய ஒரு ஊற்றாக இருக்கிறது. மனிதனின் ஒவ்வொரு திறனும் தெய்வீக உள்ளத்தின் திறனாக இருக்கவேண்டுமென்பதற்காக தேவன் மனிதனைப் படைத்தார். தெய்வீக உள்ளத்தோடு மானிட உள்ளம் இணைந்து வரவேண்டுமென்று ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறார். நாம் பரலோகக் காரியங்களைப்பற்றி ஏராளமான அறிவைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று, கிறிஸ்துவின் கிருபையை உலகிற்கு வெளிப்படுத்தத்தக்கதாக, அவரோடு தோழமைகொள்ளும் சிறப்புரிமையை அவர் நமக்கு வழங்குகிறார். (101)

கிறிஸ்துவை நோக்கிப்பார்ப்பதினால், அவரது கருத்துக்களை மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் பெற்றுக்கொள்வோம். இவ்வாறு அவரையே நோக்கிப்பார்ப்பதினால் நமது குணங்களில் மாறுதலைப் பெறுகிறோம். சக மனிதர்களை நேசித்து, அவர்களுக்கு நன்மை உண்டாகும்படி அவர்களை நடத்துவது, நமது இயல்பான உள்ளுணர்வாக மாறிவிடும். தெய்வீக குணத்திற்கு இசைவாகவே நமது குணத்தை முன்னேற்றமடையச்செய்துகொள்ள முடியும். அவரது சாயலில் நாம் வளரும்போது, தேவனை அறிந்துகொள்ளும் திறனில் நாம் பெருகி வளர ஆரம்பிக்கின்றோம். பரலோகத்தோடு அதிகமதிக

மான கூட்டுறவிற்குள் நாம் பிரவேசிக்கின்றோம். நித்தியத்தைப்பற்றிய அறிவு, ஞானம் ஆகிய திரண்ட ஐசுவரியத்தைப் பெற்றுக்கொள்ளும் வல்லமையில் தொடர்ந்து பெருக ஆரம்பிக்கின்றோம். (102)

## ஒரு தாலந்து

"ஒரு தாலந்தை வாங்கினவனோ, போய், நிலத்தைத் தோண்டி, தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்துவைத்தான்"—மத்தேயு 25:18. (103)

மிகச் சிறிய தாலந்தைப் பெற்ற நபர் தனது தாலந்தை மேம்படுத்தாமல் விட்டுவிட்டார். யாரெல்லாம் ஆண்டவர் தங்களுக்கு அளித்திருக்கும் தாலந்துகள் மிகக் குறைவானதே என்றெண்ணி, தேவனுக்குச் சேவை செய்யாமல் சாக்குபோக்கு சொல்லி தங்களை விலக்கிக்கொள்கிறார்களோ, அவர்களுக்கு இதில் ஒரு எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாபெரும் செயல் களை தாங்கள் செய்யக்கூடுமானால் அதை எவ்வளவு மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வார்கள்! சிறிய காரியங்களில்மாத்திரமே தாங்கள் ஏதாவது செய்யக் கூடும் என்பதினால், தாங்கள் எதுவும் செய்யாமலிருப்பதே சரியென்றெண்ணி, தாங்களே தங்களை நியாயப்படுத்திக்கொள்கிறார்கள். இதிலே அவர்கள் தவறு செய்கிறார்கள். ஆண்டவர் தமது ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் செயலில் மக்களின் குணத்தைப் பரீட்சித்துப் பார்க்கிறார். தனது தாலந்தை மேம்படுத்தாமல் அலட்சியம்காட்டிய நபர், தான் ஒரு உண்மையற்ற ஊழியக் காரனென்பதை நிரூபித்துவிட்டார். இந்த நபர் ஐந்து தாலந்துகளைப் பெற்றி ருந்தாலும், பெற்ற ஒரு தாலந்தை புதைத்துவைத்ததுபோலவே இவற்றையும் புதைத்துவைத்திருப்பார். ஒரு தாலந்தை பயன்படுத்தாமல் விட்டுவிட்ட செய லானது, அவன் பரலோகத்தின் ஈவுகளை அவமதித்துவிட்டான் என்பதையே காட்டுகிறது. (104)

"கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ள வனாயிருக்கிறான்" (லூக்கா 16:10). சிறிய காரியங்களின் முக்கியத்துவம் அவைகள் சிறியவைகளாக இருப்பதால் பெரும்பாலும் குறைவாகவே மதிப்பீடு செய்யப்படுகின்றது. வாழ்வின் இயல்பான ஒழுக்கநிலையை இத்தகைய சிறிய காரியங்களே பெரும்பாலும் சீராக அமைத்துக்கொடுக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையில் உண்மையிலேயே இவை இன்றியமையாத காரியங்களாகும். சின்னச் சின்ன காரியங்களின் முக்கியத்துவத்தை நாம் குறைத்து மதிப்பீடுசெய்யும்போது, நமது குணத்தைக் கட்டும் காரியம் முழுவதுமே பல இடர்களால் நிறைந்திருக்கும். (105)

"கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனா யிருக்கிறான்." மிகச் சிறிய கடமைகளில்கூட உண்மையற்றவர்களாக

இருப்பதினால், மனிதன் தன்னைப் படைத்தவருக்கு ஆற்றவேண்டிய சேவையில் அவரை வஞ்சித்துவிடுகிறான். இத்தகைய உண்மையற்ற நிலை அந்த நபர்மீதே எதிர்விளைவுகளை ஏற்படுத்திவிடுகிறது. தேவனுக்கு தங்கு தடையற்ற விதத்தில் ஒப்படைப்பதின்மூலமாக பெற்றுக்கொள்ளப்படுகின்ற கிருபையையும் வல்லமையையும் குணத்தின் ஆற்றலையும் பெற்றுக்கொள்ள அந்த நபர் தவறிவிடுகிறார். கிறிஸ்துவைவிட்டு விலகி வாழ்வதின்மூலம் சாத்தானின் சோதனைகளுக்கு இலக்காகிறார். எனவே அவர் தனது எஜமானருக்கு (ஆண்டவருக்கு) செய்யும் ஊழியத்தில் தவறுகள் செய்கின்றார். சிறிய காரியங்களில் சரியான கொள்கைகளின்படி வழிநடத்தப்படாததால் தான், சிறப்பான ஊழியமென்று கருதுகின்ற மாபெரும் காரியங்களில் தேவனுக்குக் கீழ்ப்படியத் தவறிவிடுகிறார். வாழ்வின் சின்னஞ்சிறு நுணுக்கமான விவரங்களில் பங்கெடுக்கும் காரியங்களில் தொடர்ந்து ஈடுபடுகின்ற தவறுகள் முக்கியமான நடவடிக்கைகளிலும் நுழைந்துவிடுகின்றன. எந்தக் கொள்கைகளுக்கு அந்த நபர் தன்னைப் பழக்கப்படுத்திக்கொண்டிருக்கிறாரோ அதின்படி செயல்படுகிறார். இவ்வாறு செயல்கள் தொடர்ச்சியாகச் செய்யப்படும் போது, அவை பழக்கமாக மாறுகின்றன. பழக்கங்கள் இறுதியில் குணமாக அமைந்துவிடுகிறது. உருவாக்கப்பட்ட இந்த குணத்தை வைத்தே நமது நித்தியத்திற்கான இறுதி முடிவு தீர்மானிக்கப்படுகிறது. (106)

சின்னஞ்சிறு காரியங்களிலே உண்மையாக இருப்பதினால் மாத்திரமே மிகப்பெரும் பொறுப்புகளுக்கடியில் உண்மையாக உத்தமமாக நடக்கும்படியாக ஆத்துமா பயிற்சியைப் பெற்றுக்கொள்கிறது. உண்மையான மார்க்கத்தின் கொள்கைகளை அஞ்ஞான மனிதரும் அறிந்துகொள்ளத்தக்கதாக பாபிலோனின் மாபெரும் மனிதர்களோடு தானியேலும் அவரது நண்பர்களும் தொடர்புகொள்ளும்படி ஆண்டவர் செய்தார். விக்கிரக வணக்கம் நிறைந்த நாட்டினருக்கு மத்தியிலே தேவனுடைய குணத்தை எடுத்துக்காட்டுபவராக தானியேல் இருந்தார். மாபெரும் நம்பிக்கைக்கும் மேன்மைக்கும் தகுதியான ஒரு பதவிக்கும் அவர் எவ்வாறு ஏற்றவராக இருக்க முடிந்தது? சின்னஞ்சிறு காரியங்களில் அவர் உத்தமமாக இருந்தது அவரது முழு வாழ்க்கைக்குமே மெருகூட்டி, அழகுடன் பரிணமிக்கச்செய்தது. சின்னஞ்சிறு கடமைகளிலே தானியேல் தேவனை மகிமைப்படுத்தினான். தேவன் அவனோடு ஒத்துழைத்தார். தானியேலுக்கும் அவருடைய நண்பர்களுக்கும்: “தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்” (தானியேல் 1:17). (107)

பாபிலோனிலே சாட்சியாகத் திகழும்படியாக கர்த்தர் தானியேலை அழைத்ததுபோல, இந்நாட்களிலே இவ்வுலகில் அவருக்குச் சாட்சிகளாக

விளங்கும்படியாக நம்மை அழைக்கிறார். வாழ்வின் மிகச் சிறிய காரியங்களில் மட்டுமல்ல, மாபெரும் காரியங்களிலும் அவரது இராஜ்யத்தின் கொள்கை களை மனிதருக்கு நாம் வெளிப்படுத்தவேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார். (108)

கிறிஸ்து மனிதனாக பூமியில் வாழ்ந்த காலத்தில், சின்னஞ்சிறு காரியங்களில் அதிகக் கவனம் செலுத்தப்படவேண்டுமென்ற பாடத்தை மக்களுக்குக் கற்றுக்கொடுத்தார். மாபெரும் மீட்பின் ஊழியம் அவரது ஆத்துமாவின்மீது தொடர்ந்து அழுத்திக்கொண்டிருந்தது. அவர் மக்களுக்குப் போதிக்கும்போதும் அவர்களது நோய்களை குணமாக்கும்போதும் அவரது மனதின் உடலின் அனைத்து சக்திகளும் அவற்றின் உச்சக்கட்ட நிலைவரை பயன்படுத்தப்பட்டது. எனினும் வாழ்க்கையில் மற்றும் இயற்கையில் காணப்படும் மிகச் சாதாரணமான காரியங்களிலும் கவனம் செலுத்தினார். இயற்கையில் காணப்பட்ட சிறிய பொருட்களைவைத்து, தேவனுடைய ராஜ்யத்தின் பெரிய சத்தியங்களை ஜனங்களுக்கு விளக்கிக் காண்பித்தார். மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள தமது ஊழியர்களின் அன்றாடத் தேவைகளை அவர் புறக்கணித்துப்போடவில்லை. அவருடைய செவி தேவையின்நிமித்தம் வந்த ஒவ்வொரு வேண்டுதலையும் கேட்டது. கூட்டத்தில் வியாதியின் பிடியினால் வேதனையில் இருந்த பெண்ணின் தொடுதலை அறியுமளவிற்கு அவர் விழிப்போடிருந்தார். யவீருவினுடைய மகளை உயிருடன் எழுப்பிய பின்னர், அவளுக்கு உண்பதற்கு ஏதாவது கொடுக்கவேண்டுமென்று அவள் பெற்றோருக்கு அவர் நினைவூட்டினார். தமக்கேயுரிய மாபெரும் வல்லமையைக்கொண்டு, அவர் கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்திருக்கையில், தமது உடலைச் சுற்றிவைத்திருந்த கல்லறைத் துணிகளை எடுத்து மடித்து அதற்குரிய இடத்தில் வைக்கிற செயலை அவர் அற்பமான வேலையாகக் கருதவில்லை. (109)

கிறிஸ்தவர்களாகிய நாம் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக கிறிஸ்து வோடு இணைந்து உழைக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்த ஊழியத்தில் அவரோடு சேர்ந்து உழைக்க நாம் அவருடன் ஒரு உடன்படிக்கையில் பிரவேசித்திருக்கிறோம். இந்த ஊழியத்தை நாம் அலட்சியம் செய்வோமானால், அவரிடத்தில் விசுவாசமற்றவர்களாக இருக்கிறோமென்பதை நிரூபிக்கிறோம். இந்த ஊழியத்தை நாம் நிறைவேற்றத்தக்கதாக, அவரது மாதிரியைப் பின்பற்றி சின்னஞ்சிறு காரியங்களிலும் உண்மையாயும் உத்தமமாயும் மனச்சாட்சியோடுகூடிய கவனம் செலுத்துபவர்களாகவும் நாம் இருக்க வேண்டும். கிறிஸ்தவ முயற்சி மற்றும் செல்வாக்கு ஆகிய காரியங்கள் ஒவ்வொரு நடைமுறையிலும் வெற்றிபெற இதுவே இரகசியமாகும். (110)

அவர் அளிக்கவிரும்பும் திறனைப் பெற்றுக்கொண்டவர்களாக அவரை மகிமைப்படுத்தத்தக்கதாக ஏணியின் உச்சவளைவை அவரது மக்கள் எட்டிப்பிடிக்கவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். உலகத்தார் எந்தத் திட்டத்தின்படி நடக்கிறார்களோ அதைவிட மேலான சிறந்த திட்டங்களின்படி நாம் காரியங்களைச் செயல்படுத்துகிறோம் என்பதை வெளிப்படுத்துவதற்காக தேவனுடைய கிருபையால் அனைத்து ஏற்பாடுகளும் நமக்காகச் செய்யப்பட்டிருக்கின்றன. மானிட இதயங்களில் வேலை செய்யத்தக்கதாக தேவனிலும் அவருடைய வல்லமையிலும் நாம் நம்பிக்கை வைப்பதினால், நாம் நமது நுண்ணறிவிலும், புரிந்துகொள்ளும் ஆற்றலிலும், திறமையிலும், அறிவிலும் மேம்பாடுடையவர்கள் என்பதைக் காட்டவேண்டும். (111)

ஏராளமான ஈவுகளை அருட்கொடையாகப் பெற்றிராதவர்கள் சோர்வடையத் தேவையில்லை. அவர்கள் தங்களது குணங்களிலுள்ள பலவீனமான பகுதிகளை உத்தமமாகப் பாதுகாத்து, அவை பலமடையத் தக்கதாக தெய்வீக உதவியை நாடித்தேடி, அவைகளைப் பயன்படுத்தட்டும். வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் நேர்மையையும் உத்தமமான குணத்தையும் பின்னிப்பிணைந்து வைத்திருக்கவேண்டும். மேலும், ஊழியத்தை நிறைவேற்றத்தக்கவிதத்தில் எந்த குணநலன்கள் நம்மை ஊக்குவித்து உற்சாகப்படுத்துமோ அவைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். (112)

அலட்சியப்படுத்தும் பழக்கவழக்கங்கள் உறுதியுடன் மேற்கொள்ளப் படவேண்டும். மிகவும் கீழ்த்தரமான தவறுகளை செய்துவிட்டு மறந்துவிட்டோ மென்று சொல்லிவிட்டால் அதுவே போதுமான சாக்குப்போக்காக இருக்கு மென்று அநேகர் எண்ணுகின்றனர். மற்றவர்களைப்போலவே இவர்களும் அறிவுத்திறனை உடையவர்களாக இருக்கவில்லையா? அவர்களது உள்ளங்கள் நினைவாற்றல் உள்ளவைகளாக இருக்கத்தக்கதாக, அவைகளை ஒரு ஒழுக்க நியதிக்குள் கொண்டுவர வேண்டும். மறப்பது ஒரு பாவமாகும். அலட்சியம் செய்தலும் ஒரு பாவமாகும். அலட்சியம் செய்யும் பழக்கத்தை அமைத்துக்கொண்டுவிட்டீர்களேயாகில், உங்களது சொந்த ஆத்துமாவின் இரட்சிப்பையும் நீங்கள் அலட்சியம்செய்யும்படி நேர்ந்துவிடலாம். இறுதியில் தேவனுடைய இராஜ்யத்திற்கும் நீங்கள் ஆயத்தமற்றவர்களாக இருப்பதைக் காண்பீர்கள். (113)

சின்னக் காரியங்களிலும் மாபெரும் சத்தியங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அன்றாட வாழ்க்கையின் மிகச் சாதாரணமான காரியங்களிலும் நடைமுறைக்கேற்ற மார்க்கம் பயிற்சிக்குக் கொண்டுவரப்பட வேண்டும். கர்த்தரின் வசனத்திற்கு அப்படியே கீழ்ப்படிவது என்பதே எந்த மனிதனும் பெற்றுக்கொள்ளவேண்டிய மிகப் பெரிய தகுதியாகும். (114)

நேரடியான, மார்க்கசம்பந்தமான ஊழியத்தில் தொடர்பில்லாதவர்களாக இருப்பதால், தங்களது ஜீவியங்கள் பயனற்றவைகளாக இருக்கிறதென்று அநேகர் எண்ணுகின்றனர். மேலும் தேவனுடைய இராஜ்யத்திற்கான வேலையை ஊக்குவிப்பதற்காக தாங்கள் எதையும் செய்யவில்லையே என்றும் எண்ணுகின்றனர். இவ்வாறு நினைப்பது ஒரு தவறு. வேறு ஒருவரே கண்டிப்பாகச் செய்தாகவேண்டுமென்பதாக அவர்களது வேலை இருக்குமானால், தேவனுடைய மாபெரும் ஆலயப் பணியிலே தாங்கள் பயனற்றவர்களென்று தங்களையே குற்றஞ்சாட்டிக்கொண்டிருக்கக்கூடாது. மிகவும் தாழ்வானதென்று கருதப்படும் கடமைகளும் கண்டும் காணாததுபோல் விட்டுவிடப்படக்கூடாது. நேர்மையான எந்த ஊழியமும் ஆசீர்வாதம் நிறைந்ததே. அதில் உண்மையும் உத்தமமுமாக இருப்பது மேலான நம்பிக்கைக்குரிய காரியங்களில் பொறுப்பு எடுப்பதற்கு ஒரு பயிற்சியென்பதை நாம் பின்னர் காணலாம். (115)

நாம் செய்யும் எந்த ஊழியங்களானாலும் எவ்வளவு தாழ்ச்சியானதென்று கருதப்பட்டாலும், சுயத்தை முற்றிலுமாக ஒப்படைத்துச் செய்யப்படுமானால், அது ஒரு மாபெரும் சேவைபோன்று கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படும். உண்மைநிறைந்த இதயத்தோடும் ஆத்தும மகிழ்ச்சிப் பெருக்கோடும் கொடுக்கப்படும் எந்தக் காணிக்கையும் அற்பமானதல்ல. (116)

நாம் எங்கிருந்தாலும் சரி, நமக்கு முன்வைக்கப்படும் கடமையை செய்யவேண்டுமென்று கிறிஸ்து நம்மை வேண்டுகிறார். வீட்டிலிருக்கும்போது, நமது இல்லம் இன்பகரமானதாக இருப்பதற்கு மனப்பூர்வமாகவும் ஊக்கத்தோடும் முயற்சியெடுக்கவேண்டும். நீங்கள் ஒரு தாயாக இருப்பீர்களாகில், உங்கள் பிள்ளைகளை கிறிஸ்துவுக்கென்று பயிற்றுவிக்கவேண்டும். குடும்பத்தை நடத்துவது ஒரு போதகர் சபையை நடத்துவதுபோன்று ஒரு தெய்வீகப் பணியாயிருக்கிறது. உங்கள் பணி சமையல் செய்வதாக இருந்தால், மிகச்சிறந்த முறையில் சமையல் செய்ய வகைதேடுங்கள். ஆரோக்கியமான, ஊட்டச்சத்து நிறைந்த, ருசியுள்ள ஆகாரங்களை தயார்செய்யவேண்டும். மிகச்சிறந்த பொருட்களை கலந்து ஆகாரத்தைத் தயாரிக்க முயற்சிக்கும்போது உங்கள் உள்ளம் அசைபோடுவதற்கான சிறந்த சிந்தனைகளை அதற்கு வழங்கவேண்டுமென்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் பணி நிலத்தைப் பண்படுத்துவதானாலும் சரி, வியாபாரத்திலோ அல்லது வேறு எந்த வேலையில் ஈடுபடுவதாக இருந்தாலும் சரி, முழு மனதுடன் பணியில் ஈடுபட்டு வெற்றிகாண்பது உங்கள் கடமையாயிருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக மாறி, உங்கள் இடத்தில் அவர் இருந்தால் எப்படிச் செயல்படுவாரோ அதுபோலவே செயல்படவேண்டும். (117)

நம்வசம் இருக்கும் தாலந்து எவ்வளவு சிறியதானாலும் தேவனிடம் அதற்கான ஒரு இடமுண்டு. அந்த ஒரு தாலந்தை ஞானத்தோடு பயன் படுத்தும்போது, அதற்காக நியமிக்கப்பட்ட வேலையை அது நிறைவேற்றும். சிறிய கடமைகளில் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கும்போது, கூட்டிச் சேர்த்தல் என்ற திட்டத்தின்படி செயல்படவேண்டும். அப்பொழுது பெருக்கிக் கொடுத்தல் என்ற திட்டத்தின்படி தேவன் நமக்காகப் பணிபுரிவார். இந்தச் சிறிய காரியங்கள் அவருடைய ஊழியத்திலே மிகவும் விலையேறப்பெற்ற செல்வாக்குகளாக மாறுதலை அடையும். (118)

மிகச் சிறிய கடமைகள் செய்யப்படும்போது உயிரோட்டமுள்ள ஒரு விசுவாசம் பொன்னாலான சரிகைநூலைப்போல ஊடுருவிச் செல்லட்டும். அப்பொழுது அனுதினமும் செய்யப்படும் அனைத்து ஊழியமும் கிறிஸ்தவ வளர்ச்சியினை மேம்படுத்தும். அப்பொழுது இயேசுவையே தொடர்ந்து நோக்கிப்பார்த்திருப்போம். அவரிடத்தில் நாம் கொண்டிருக்கும் அன்பு நாம் பொறுப்பெடுத்துச் செய்யும் எல்லா நடவடிக்கைகளுக்கும் உயிர்த்துடிப்பின் சக்தியைக் கொடுக்கும். நமது தாலந்துகளைச் சரியானபடி செயல்படுத்தும்போது, நாம் பரலோகத்தோடு ஒரு பொற்சங்கிலிபோன்ற இணைப்பை ஏற்படுத்துகிறோம். இதுவே உண்மையான பரிசுத்தமாகுதலாகும். தேவனுடைய சித்தத்திற்கு பூரணமாகக் கீழ்ப்படிந்து அன்றாடக் கடமைகளை மகிழ்ச்சியோடு செய்வதில்தான் பரிசுத்தமாகுதல் அடங்கியிருக்கிறது. (119)

செய்யப்படுவதற்காக ஏதாவது மாபெரும் வேலை தங்களிடத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று அநேக கிறிஸ்தவர்கள் காத்துக்கொண் டிருக்கிறார்கள். தங்களது பேராவல்களை திருப்திசெய்வதற்கு ஏற்ற பெரிய இடத்தை அவர்களால் பெற்றுக்கொள்ள முடியாமல் போகும்போது, வாழ்வின் சாதாரணமான கடமைகளை உண்மையோடும் உத்தமத்தோடும் செய்யத் தவறிவிடுகிறார்கள். அவைகள் அவர்களுக்குச் சலிப்பாகத் தோன்றும். தாங்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்களென்பதைக் காட்டுவதற்காக ஒவ்வொருநாளும் வருகின்ற சந்தர்ப்பங்களை நழுவவிடுகிறார்கள். ஒரு மாபெரும் பணியைச் செய்யும் சந்தர்ப்பம் தங்களுக்குக் கிடைக்குமென்று அவர்கள் காத்திருக்கும்போது, நோக்கங்கள் நிறைவேற்றப்படாமலே—பணிகள் செய்துமுடிக்கப்படாமலே வாழ்க்கை கடந்துசென்றுவிடுகிறது. (120)

### திரும்பப் பெறப்பட்ட தாலந்துகள்!

“வெகுகாலமான பின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான்.” கர்த்தர் தமது

ஊழியக்காரர்களிடம் கணக்குக் கேட்கும்போது, அவர்கள் அளிக்கும் ஒவ்வொரு தாலந்தையும் அவர் நுணுக்கமாகப் பரிசீலனை செய்வார். செய்யப்பட்ட பணி, பணியாளரின் குணத்தை வெளிப்படுத்துகிறது. (121)

ஐந்து மற்றும் இரண்டு தாலந்துகளைப் பெற்றவர்கள் தங்கள் வசம் நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்பட்ட தாலந்துகளையும் அவைகளைக்கொண்டு தாங்கள் சம்பாதித்தவைகளையும் கர்த்தரிடம் ஒப்படைத்துவிடுகிறார்கள். இதைச் செய்வதின்மூலமாக அவர்கள் தங்களுக்காக எந்தவிதமான மதிப்பையும் உரிமைபாராட்டுகிறதில்லை. அவர்களது தாலந்துகள் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டவையாகும். அவர்கள் மற்ற வேறு தாலந்துகளையும் பெற்றுக்கொண்டார்கள். தாலந்துகளை சேமநல வைப்புநிதியாகப் போடாமல், எத்தகைய இலாபத்தையும் பெறமுடியாது. அவர்கள் தங்களது கடமையை மாத்திரமே செய்தார்களென்பதைக் காண்கிறார்கள். அந்த மூலதனம் கர்த்தருக்குச் சொந்தமானது. அதை மேம்படச்செய்வதும் அவருடைய வேலையே. மீட்பர் மாத்திரம் அவரது அன்பையும் கிருபையையும் அவர்களுக்கு வழங்காமல் இருந்திருந்தால், நித்தியத்தைப் பொறுத்தமட்டில் அவர்கள் அனைத்தையும் இழந்து நொடித்துப்போன நிலையிலேயேதான் இருந்திருப்பார்கள். (122)

எஜமானர் தாலந்துகளைப் பெற்றுக்கொள்ளும்போது, அதற்கான தகுதி அவர்களுக்கே உரியதென்பதைப்போன்று அவைகளை ஏற்றுக்கொண்டு வெகுமதியை வழங்குகிறார். அவரது முகத்தோற்றம் மகிழ்ச்சியாலும் திருப்தியாலும் நிறைந்திருக்கிறது. அவர்கள்மீது தமது ஆசீர்வாதங்களைப் பொழியும் வாய்ப்புக் கிடைத்ததால் அவர் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கிறார். ஒவ்வொரு சேவைக்கும், ஒவ்வொரு தியாகத்திற்கும் முதலீடுசெய்கின்றார். அவர்களுக்குத் தாம் கொடுக்கவேண்டியதை கடனென்று எண்ணாமல், அவரது இதயம் அன்பினாலும் கனிவுள்ள இரக்கத்தினாலும் நிரம்பிவழிகிறதினால் அவ்வாறு செய்கின்றார். (123)

“நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” என்றார். (124)

தேவனுக்கு உண்மையாகவும் உத்தமமாகவும் இருத்தல் அவருக்கு அன்புடன் சேவைசெய்தல் ஆகியவைகளே தெய்வீக அங்கீகாரத்தைப் பரிசாகப் பெறுகின்றது. மனிதரை தேவனிடத்திற்கு வழிநடத்தி மற்றவர்களுக்கு நன்மைசெய்யவைக்கிற பரிசுத்த ஆவியானவரின் ஒவ்வொரு தூண்டுதலும் பரலோகப் பதிவேடுகளில் குறிக்கப்பட்டிருக்கின்றன. தேவனுடைய நாளிலே,

எந்த ஊழியர்கள்மூலமாக அவர் கிரியைகளை நடப்பித்தாரோ அவர்கள் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொள்வார்கள். (125)

அவர்கள் தங்களது ஊழியத்தினிமித்தமாக மீட்கப்பட்டவர்களை அவருடைய இராஜ்யத்தில் காணும்போது, தங்களது ஆண்டவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பார்கள். பரலோகத்திலும் அவருடைய ஊழியத்தில் பங்குபெறும் சிறப்புரிமையைப் பெறுவார்கள். ஏனெனில், இவ்வுலகத்தில் குணத்திலும் பரிசுத்த சேவையிலும் எப்படி இருக்கின்றோமோ அதின் பிரதிபலிப்பாகவேதான் நாம் பரலோகத்திலும் இருப்போம். “அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்” (மத்தேயு 20:29) என்று கிறிஸ்து தம்மைக்குறித்துக் கூறுகிறார். பூமியில் அவரது ஊழியமாகிய இந்த வேலைதான் பரலோகத்திலும் அவரது வேலையாக இருக்கிறது. இந்த உலகில் நாம் கிறிஸ்துவோடு செய்யும் ஊழியத்திற்குக் கிடைக்கும் வெகுமதி, வரப்போகும் உலகில் அவரோடு மாபெரும் வல்லமையோடும் பரந்த அளவிலும் சிறப்புரிமைகளோடும் செய்யப்போகும் ஊழியமேயாகும். (126)

ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து: “ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன். ஆகையால், நான் பயந்து போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்; இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும்” என்றான். (127)

இவ்வாறு தேவன் கொடுக்கின்ற தாலந்துகளை மனிதர் அலட்சியம் செய்கின்றார்கள். தங்களை உற்றுநோக்கி வேவுபார்த்து தவறுகளைக் கண்டுபிடித்து தண்டனைகளை அனுப்புகின்ற கடுமைமிக்க—கொடூரமான தேவன் என்ற எண்ணத்தோடு அவரை நோக்கிப் பார்க்கிறார்கள். ஒருபோதும் கொடுக்காததை உரிமைகோரி அதிகாரத்துடன் கேட்கிறவரென்றும், விதைக்காத இடத்தில் அறுக்கிறவரென்றும் குற்றஞ்சாட்டுகிறார்கள். (128)

தேவன் ஒரு கடினமான எஜமானராக இருந்து, தங்களது உடைமைகளும் சேவையும் வேண்டுமென்று உரிமைகோருகிறாரென்று அநேகர் தங்களது இதயத்திலே தேவனைக் குற்றஞ்சாட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அவருக்குச் சொந்தமல்லாத எதையும் நாம் அவரிடத்தில் திரும்பக் கொண்டுவர இயலாது. “எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்” (1 நாளாகமம் 29:14) என்று தாவீது இராஜா கூறுகிறார். படைப்பினால் மட்டுமல்ல மீட்பினாலும் அனைத்தும் அவருக்கே சொந்தமானது. இந்த உலக வாழ்க்கையின்

அனைத்து ஆசீர்வாதங்களும் வரப்போகும் உலகின் அனைத்து ஆசீர்வாதங்களும் கல்வாரிச் சிலுவையின் முத்திரை போடப்பட்டு, நமக்கு வழங்கப்படுகிறது. எனவே, தேவனைக் கடினமனமுள்ள எஜமானரென்றும், விதைக்காத இடத்தில் அறுக்கிறவரென்றும் கூறுவது, ஒரு பொய்யான குற்றச்சாட்டாகவே இருக்கிறது. (129)

பொல்லாத அந்த ஊழியக்காரனின் குற்றச்சாட்டு அநீதியானதெனினும், அவனது குற்றச்சாட்டை மறுக்காமல், அவனது தளத்திலேயே அவனைச் சந்தித்து, அவனது நடவடிக்கை சாக்குப்போக்கு சொல்லக்கூடாததாக இருக்கிறதென்று அவனுக்கு அவர் எடுத்துக்காட்டினார். கொடுக்கப்பட்ட வாய்ப்புகளின்மூலமாக இலாபம் பெற்றுக்கொள்ள தாலந்தை வைத்திருந்தவர் அதை மேம்படுத்தி இருக்கலாம். "நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டு வைக்கவேண்டியதாயிருந்தது; அப்பொழுது, நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக்கொள்வேனே" என்றார். (130)

நமது பரலோகப் பரமபிதா நாம் வேலைசெய்வதற்கு கொடுத்திருக்கும் திறனுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ நம்மிடத்தில் கேட்பதில்லை. தமது ஊழியக்காரர் தாங்கமுடியாத எந்த பாரத்தையும் அவர்கள்மீது சுமத்துவதில்லை. "நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்" (சங்கீதம் 103:14). தெய்வீகக் கிருபையினால் நாம் என்ன செய்யமுடியுமோ அதை மாத்திரமே உரிமைகோரி கேட்கின்றார். (131)

"எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்" (லூக்கா 12:48). நம் ஒவ்வொருவரையும் தனித் தனியாக பொறுப்புள்ளவர்களாக்கி, காரியங்களைச் செய்வதற்கு நமக்களிக்கப்பட்டிருக்கும் திறமையினின்று ஒரு புள்ளியளவு குறைத்துச் செய்யப்பட்டாலும், அதற்கு அவர் கணக்குக் கேட்பார். சேவைக்கான அனைத்து சாதகமான காரியங்களையும் இம்மியும் பிசகாமல் நமது கர்த்தர் அளவிடுகிறார். மேம்படுத்தப்பட்ட திறமைகள் எவ்வாறு கணக்கிற்கு கொண்டுவரப்படுகின்றனவோ அதைப் போலவே, பயன்படுத்தப்படாத திறமைகளும் கணக்குக்குக் கொண்டுவரப்படுகின்றன. நமது தாலந்துகளை சரியாகப் பயன்படுத்துவதின்மூலமாக நாம் எப்படிப்பட்டவர்களாக மாறமுடியுமோ அதற்கு நம்மை பொறுப்பாளியாக்குகின்றார். நாம் நமது சக்திகளைப் பயன்படுத்தி தேவனை மகிமைப்படுத்தவில்லை. எனவே, நம்மால் காரியங்களைச் சாதிக்கமுடியவில்லை. எனவே, நாம் என்ன செய்திருக்கவேண்டுமென்ற காரியத்தின்படி நியாயந்தீர்க்கப்படுவோம். நாம் நமது ஆத்துமாக்களை இழந்துபோகாவிட்டாலும், நமது தாலந்துகளை

பயன்படுத்தாததினால் ஏற்படும் பலன்களை நித்தியத்தில் தெளிவாகப் புரிந்துகொள்வோம். பெற்றிருந்திருக்கக்கூடிய அனைத்து அறிவையும், திறமைகளையும் நாம் பெறாததினால், நித்தியக்கால முழுமைக்குமாக நமக்கு ஒரு இழப்பு ஏற்பட்டுவிடுகிறது. (132)

தேவனுக்கு நம்மை முற்றிலுமாக ஒப்படைக்கும்போது, நமது ஊழியத்தில் அவரது வழிகாட்டுதல்களை பின்பற்றும்போது, அதினால் சாதிக்கப்படவேண்டிய காரியங்களுக்கு அவர் தாமே பொறுப்பேற்றுக்கொள்கிறார். நமது நேர்மையான பெரும் முயற்சிகளுக்கான வெற்றிகுறித்து யூகித்துக் கொண்டிருக்கும்படி நம்மை விட்டுவிடமாட்டார். தோல்விகுறித்து ஒருமுறைகூட நாம் சிந்தித்துப் பார்க்கக்கூடாது. தோல்வியே அறியாத அந்த ஒருவரோடு (தேவனோடு) நாம் இணைந்து வேலைசெய்யவேண்டும். (133)

நமது சொந்த பெலவீனங்களைக்குறித்தும், இயலாமையைக்குறித்தும் நாம் பேசிக்கொண்டிருக்கக்கூடாது. தேவனை நாம் முற்றிலுமாக நம்பவில்லையென்பதற்கும் அவரது வசனத்தை மறுதலிப்பதற்கும் வெளிப்படையான ஒரு அடையாளமாக அது இருக்கிறது. நமது பாரங்களினால் நாம் முறுமுறுக்கும் போதும், செய்யவேண்டுமென்று அவர் நமக்குக் கொடுக்கும் பொறுப்புகளை மறுக்கும்போதும், அவர் ஒரு கடினமான எஜமானரென்றும் குறிப்பிட்ட அந்த வேலைக்கு வல்லமையைக் கொடுக்காமலேயே அதைச் செய்யும்படி நம்மைக் கேட்கிறாரென்றும் நாம் உண்மையிலேயே கூறுகின்றோம். (134)

சோம்பலான ஊழியக்காரனை வேறுவழியின்றி பெரும்பாலும் தாழ்மையுள்ளவனென்று கூறுகிறோம். ஆனால் தாழ்மை என்பது மிகமிக வித்தியாசமானது. நுண்ணறிவில் குள்ளர்களாக இருப்பது, ஆர்வத்தில் குறைவுபட்டவர்களாகவும் வாழ்க்கையில் கோழைத்தனம் மிகுந்தவர்களாகவும் வெற்றியுடன் நடத்திச்செல்ல முடியாதபடி தோல்வி அடைந்துவிடுவோமோ என்று எண்ணி பொறுப்புகளை வெறுத்து ஒதுக்குவதும் தாழ்மையைத் தரித்துக்கொள்ளுதல் என்பதின் பொருளல்ல. தேவனுடைய வல்லமையைச் சார்ந்து, அவரது நோக்கங்களை நிறைவேற்றுவதே மெய்யான தாழ்மையாகும். (135)

தேவன் யாரைவைத்துப் பணியாற்ற சித்தம்கொள்கிறாரோ அவரை வைத்து கிரியை செய்கிறார். சில சமயங்களிலே தம்முடைய மாபெரும் பணியைச் செய்வதற்கு தாழ்நிலையிலுள்ள நபர்களை தெரிவுசெய்கிறார். ஏனெனில் அவரது வல்லமை மனிதரின் பலவீனத்திலே வெளிப்படுத்தப்படுகிறது. நாம் நமக்கென்று ஒரு படித்தரத்தை வைத்திருக் கிறோம். அதைக்கொண்டு ஒன்றை மிகச்சிறந்தது அல்லது பெரியது என்றோ, அல்லது மற்றொன்றை மிகச்சிறியது அல்லது அற்பமானதென்றோ அறிவிக் கிறோம். நமது நியதியின்படி தேவன் மதிப்பீடு செய்கிறதில்லை. நமக்கு

மேன்மையாகத் தெரிவது தேவனுக்கும் மேன்மையானதாக இருக்கவேண்டு மென்றும், அல்லது நமக்கு அற்பமாகக் காணப்படுவது அவருக்கும் அற்ப மாகவே காணப்படவேண்டுமென்றும் நாம் அனுமானம் செய்யக்கூடாது. நமது தாலந்துகளைக்குறித்து தீர்ப்புச்சொல்வதோ நமக்கான பணியை நாம் தெரிந்துகொள்வதோ நம்மிடம் விட்டுவைக்கப்படவில்லை. தேவன் நியமிக்கும் பொறுப்புகளையே நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். அவருக்காக அக்காரியங்களை எடுத்துச்செய்யவேண்டும். எப்பொழுதும் அவரிடத்தில் இளைப்பாறுதலுக்காக செல்லவேண்டும். நமது வேலை எதுவாக இருந்தாலும், முழு இதயத்தோடும் உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் செய்யப்படுகின்ற வேலையால் தேவன் கனப்படுத்தப்படுகிறார். நன்றியுள்ள இதயத்தோடு கடமைகளை ஏற்றுக்கொண்டவர்களாக, அவரோடு உடன் ஊழியர்களாக இருப்பதற்கு நாம் தகுதியுடையவர்களாக எண்ணப்பட்டிருக்கிறோமென்று களிகூரும்போது, தேவன் மகிழ்ச்சியடைகிறார். (136)

## தாலந்து அகற்றப்பட்டது!

எஜமான் சோம்பியிருக்கும் ஊழியக்காரன்மீது: "அவனிடத்திலிருக்கிற தாலந்தை எடுத்து, பத்து தாலந்துள்ளவனிடத்தில் கொடுங்கள்" என்று தீர்ப்புக்கூறினான். உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனுக்கு கொடுக்கப் படும் வெகுமதியைப் போன்று இங்கு இறுதி நியாயத்தீர்ப்பிலே கொடுக்கப்படும் தண்டனையைப்பற்றி மாத்திரம் குறிப்பிடாமல், இவ்வுலகின் வாழ்க்கையிலே படிப்படியாக நடைமுறையிலே கொடுக்கப்படுகின்ற தண்டனைபற்றியும் இங்கு குறிப்பிடப்படுகிறது. பயன்படுத்தப்படாத ஒவ்வொரு வல்லமையும் பெலவீனமடைந்து சீர்கெட்டுப்போகும். இயற்கை உலகில் எப்படி இருக்கிறதோ அப்படியே ஆவிக்குரிய உலகிலும் இருக்கும். சுறுசுறுப்பாகச் செயலில் ஈடுபட்டிருப்பதே வாழ்வின் பிரமாணமாகும். சோம்பியிருத்தல் மரணமே. "ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது" (1 கொரி. 12:7). அளிக்கப்பட்டிருக்கும் ஈவுகளினால் மற்றவர்களை ஆசீர்வதிக்கும்போது, ஈவுகள் பெருக ஆரம்பிக்கும். சுயத்திற்கே சேவைசெய்து, தங்களைத்தாங்களே அடைத்துக்கொண்டு இருக்கும்போது குறைவுபட நேரிடும். கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும். தான் பெற்றுக்கொண்டதை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள மறுக்கிறவன், இறுதியில் மற்றவர்களுக்கு கொடுப்பதற்கு எதுவும் இல்லாமற்போகும் நிலையை அடைவான். நிச்சயமாக தன்னைக் குன்றிப்போகச்செய்கின்ற—இறுதியில் தனது ஆத்துமாவின் திறன்களையெல்லாம் அழித்துப்போடுகின்ற நடைமுறைக்குச் சம்மதித்துவிடுகிறான். (137)

சுயநலமான வாழ்க்கை வாழ்ந்துகொண்டே, தங்களுக்கு ஆதாயந் தரும் காரியங்களுக்காகச் சேவைசெய்துகொண்டே, ஆண்டவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசித்துவிடலாமென்று எவரும் உத்தேசம்செய்து கொண்டிருக்கவேண்டாம். தன்னலமற்ற அன்பின் மகிழ்ச்சியிலே அவர்களால் பங்கெடுக்கமுடியாது. பரலோகத்தை நிரப்பியிருக்கின்ற அந்த அன்பின் தூய்மையான சூழ்நிலையை அவர்களால் பாராட்டமுடியாது. தேவதூதர்களின் குரலும் அவர்களது சுரமண்டலங்களிலிருந்து எழும்பிவரும் இனிய கீதமும் அவர்களைத் திருப்திப்படுத்தாது. அவர்களது உள்ளங்களுக்கு பரலோகம் பற்றிய அறிவியல் புரியமுடியாத ஒரு புதிராகவே இருக்கும். (138)

அந்த நியாயத்தீர்ப்பின் மகாநாளிலே, கிறிஸ்துவிற்காக ஊழியம் செய்யாதவர்கள், எந்தப் பொறுப்பையும் ஏற்காமல் போகிற போக்கிலேயே போனவர்கள், தங்களைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தவர்கள், தங்களையே மகிழ்ச்சியால் நிறைத்து திருப்திப்படுத்திக்கொண்டிருந்தவர்கள் அனைவரும் பூமி அனைத்திற்கும் நியாயாதிபதியாக இருப்பவருக்கு முன்பாக தீமையைச் செய்தவர்களோடு நிறுத்தப்பட்டு, அதே கண்டனத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். (139)

கிறிஸ்தவர்களென்று தங்களை அழைத்துக்கொள்ளும் அநேகர் தேவன் விடுக்கும் கோரிக்கைகளை அசட்டைசெய்கிறார்கள். ஆனாலும் இதில் எந்தத் தவறும் இருப்பதாக உணருகிறதில்லை. தேவனைத் தூஷிப்பவர்கள், கொலைகாரர், விபசாரக்காரர் ஆகியோர் தண்டனைபெறுவது சரியே என்பதை அறிவார்கள். ஆனாலும் அவர்களைப்பொறுத்தமட்டில் மார்க்கசம்பந்தமான சேவைகள் அனைத்தையும் அனுபவிக்கிறார்கள். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதை கேட்க விரும்புவதால் தங்களை கிறிஸ்தவர்களென்று எண்ணிக்கொள்கிறார்கள். அவர்கள் தங்களது ஜீவியங்களை தங்களைப் பராமரிப்பதற்காகவே செலவிட்டிருந்தபோதிலும், அந்த உவமையில் உண்மையற்ற ஊழியக்காரனுக்கு கொடுக்கப்பட்ட "தாலந்தை எடுத்து, பத்துத் தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள்" என்ற எஜமானின் நியாயத்தீர்ப்பைக்கேட்டு அவன் அதிர்ச்சியடைந்ததுபோல அவர்களும் அதிர்ச்சியடைவார்கள். யூதர்களைப்போலவே, தங்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பதற்குப் பதிலாக, அந்த ஆசீர்வாதங்களினால் வரும் மகிழ்ச்சியைத் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். (140)

கிறிஸ்தவ ஊழியமென்னும் முயற்சியினின்று சாக்குப்போக்குச் சொல்லி தங்களை விலக்கிக்கொள்பவர்கள், தங்களால் அந்த ஊழியத்தைச் செய்ய இயலாதென்று வாதாடுகின்றார்கள். அவர்களை

அவ்வளவு திறமையற்றவர்களாகவா ஆண்டவர் படைத்துவிட்டார்? இல்லை! ஒருபோதும் அவர் அவ்வாறு படைக்கவில்லை! அவர்களது சுறுசுறுப்பற்ற வாழ்க்கைமுறையினாலும் மனதார இவ்வாறு செய்வதைத் தெரிந்துகொண்டு, அதையே தொடர்ந்து நிலைப்படுத்திக்கொண்டதாலும், இந்த இயலாமை அவர்களால் உருவாக்கப்பட்டதாகும். தாலந்தை அவனிடமிருந்து எடுத்துப்போடுங்களென்று கூறப்பட்ட தீர்ப்பின் விளைவுகளை தங்களது சொந்தக் குணங்களிலே புரிந்துகொண்டிருக்கிறார்கள். தாலந்துகளை தொடர்ந்து தவறாகப் பயன்படுத்திய காரியம், ஒரே வெளிச்சமாகிய பரிசுத்த ஆவியானவரை இறுதியில் அணைத்துப்போடும். “பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள்” என்று எஜமான் கூறிய தீர்ப்பு, நித்தியத்திற்காக தங்களுக்குத் தாங்களாகவே கொண்ட தெரிந்தெடுப்பின்மீது பரலோகத்தின் முத்திரையை வைக்கிறது. (141) ★

26

# நேர்மையற்ற உக்கிராணக்காரன்!

**(மூலநூல் : பக்கங்கள் 366–375)**

**லூக்கா 16:1–9**

உலகப்பற்றாசை மிகுந்திருந்த ஒரு காலத்தில் கிறிஸ்து இவ்வுல கிற்கு வந்தார். நித்தியத்திற்கடுத்த காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக் காமல், அழியப்போகிற காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். நித்திய வாழ்வை இவ்வுலகியல் சார்ந்த வாழ்விற்கும், எதிர்காலத்திற்கான காரியங்களை நிகழ்காலத்துக் காரியங்களுக்கும் மனிதர் கீழ்ப்படுத்தினார்கள். மெய்யான காரியங்களுக்குப் பதிலாக பொய்த்தோற்றமான காரியங்களையும் பொய்யான காரியங்களுக்குப் பதிலாக மெய்யான காரியங்களையும் வைத்து தவறுசெய்துகொண்டிருந்தார்கள். விசுவாசத்தின்மூலமாக காணவியலாத உலகத்தை அவர்களால் காணமுடியவில்லை. இந்த உலகம்சார்ந்த காரியங் களை மிகவும் கவர்ச்சியுடையதாகவும் முழுக்க முழுக்க சிந்தையை ஈர்க்கக் கூடியதாகவும் சாத்தான் அவர்களுக்கு முன்பாக வைத்தான். அவனது சோதனைகள் அவர்களது கவனத்தைக் கவர்ந்திழுத்தன. (1)

இந்த நடைமுறையை மாற்றியமைக்க கிறிஸ்து வந்தார். கவர்ந்தி ழுக்கப்பட்டு கண்ணியில் அகப்பட்டுக்கிடக்கும் மனிதரின் கட்டுண்ட மாயை நிலையை தகர்த்தெறிய வகைதேடினார். அவரது போதனையில் பரலோகத் திற்கடுத்த—மற்றும் இவ்வுலகத்திற்கடுத்த கோரிக்கைகளைச் சரிப்படுத்தி, அவர்களது சிந்தனைகளை நிகழ்காலத்தினின்று வருங்காலத்திற்குத் திருப்ப வகைதேடினார். அந்தக் காலத்திற்கு ஏற்ற நடைமுறைகளில் தொடர்ந்து செல்வதினின்று நித்தியத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி அவர்களை அவர் அழைத்தார். (2)

“ஐசுவரியவானாகிய ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான்; அவன் தன் எஜமானுடைய ஆஸ்திகளை அழித்துப்போடுகிற

தாக எஜமானுக்கு அறிவிக்கப்பட்டது.” இந்த ஊழியக்காரனின் பொறுப்பிலே எஜமான் தனது அனைத்து உடைமைகளையும் ஒப்படைத்திருந்தான். ஆனால் அந்த ஊழியக்காரன் உண்மையற்றவனாக இருந்தான். எஜமான், தான் தனது ஊழியக்காரனால் திட்டமிட்டுக் கொள்ளையடிக்கப்பட்டதை நன்றாகப் புரிந்துகொண்டான். இனி அவனை தனக்கு வேலைசெய்யும்படி அனுமதிக்கக்கூடாதென்று தீர்மானித்து, அவன் எழுதிவைத்திருந்த கணக்குகளைப் பரிசீலனை செய்யும்படி உத்தரவிட்டான். “உன்னைக்குறித்து நான் இப்படிக் கேள்விப்படுகிறதென்ன? உன் உக்கிராணக்கணக்கையொப்புவி, இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக்கூடாது” என்றான். (3)

தான் வேலையினின்று நீக்கப்படவிருக்கின்ற நிலையை உணர்ந்த உக்கிராணக்காரன், தனக்கு முன்பாக தான் தெரிந்துகொள்ளத்தக்கதாக மூன்று வழிகள் இருப்பதைக் கண்டான். அவன்போய் தனது வயிற்றுக்காக வேலைசெய்யவேண்டும் அல்லது பிச்சை எடுக்கவேண்டும் அல்லது பட்டினி கிடக்கவேண்டும். “நான் என்ன செய்வேன், என் எஜமான் உக்கிராண விசாரிப்பிலிருந்து என்னைத் தள்ளிப்போடுகிறானே; கொத்துகிறதற்கு எனக்குப் பெலனில்லை, இரக்கவும் வெட்கப்படுகிறேன். உக்கிராண விசாரிப்பைவிட்டு நான் தள்ளப்படும்போது, என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி செய்யவேண்டியது இன்னதென்று எனக்குத் தெரியவந்தது, என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு; தன் எஜமானிடத்தில் கடன்பட்டவர்களை ஒவ்வொருவனாக வரவழைத்து, முதலாவது வந்தவனை நோக்கி: நீ என் எஜமானிடத்தில் பட்ட கடன் எவ்வளவு என்றான். அவன்: நூறுகுடம் எண்ணெய் என்றான். அப்பொழுது உக்கிராணக்காரன் அவனை நோக்கி: நீ உன் சீட்டை வாங்கி, உட்கார்ந்து, ஐம்பது என்று சீக்கிரமாய் எழுது என்றான். பின்பு அவன் வேறொருவனை நோக்கி: நீ பட்ட கடன் எவ்வளவு என்றான். அவன்: நூறு கலம் கோதுமை என்றான். அப்பொழுது அவன்: நீ உன் சீட்டை வாங்கி, எண்பது என்று எழுது” என்றான். (4)

இந்த உண்மையற்ற உக்கிராணக்காரன் தனது நாணயமற்ற திட்டத்திற்கு மற்றவர்களையும் பங்குதாரர்களாக்கினான். அவர்களுக்கு இலாபம் கிடைக்கும்படியாக தனது எஜமானனை ஏமாற்றினான். அவனிடமிருந்து இலாபம் பெற்ற மற்றவர்கள் அந்த உக்கிராணக்காரனை தங்களது வீடுகளில் ஒரு நண்பனைப்போன்று ஏற்றுக்கொள்ளும்படியான ஒரு கடமைக்குள் வைக்கப்பட்டார்கள். (5)

“அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எஜமான் கண்டு, அவனை மெச்சிக்கொண்டான்.” இந்த உலகப்பிரகாரமான

எஜமான் தன்னை ஏமாற்றிப்போட்ட உக்கிராணக்காரனது கூர்மதியைக் கண்டு அவனைப் பாராட்டினான். ஆனால் அந்தப் பணக்கார எஜமானனின் பாராட்டுதல் தேவனுடைய பாராட்டுதல் அல்ல. (6)

அந்த அநீதியான உக்கிராணக்காரனை கிறிஸ்து பாராட்டவில்லை. அவர் கற்றுக்கொடுக்க விரும்பிய பாடத்தை விளக்கிக்காட்டுவதற்காக அந்தக் காலத்தில் அனைவருக்கும் தெரிந்திருந்த நிகழ்ச்சி ஒன்றை அவர் பயன்படுத்தினார். "நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்" என்று கூறினார். (7)

மீட்பர் ஆயக்காரரோடும், பாவிகளோடும் கலந்து உரையாடுவது குறித்து பரிசேயர்கள் அவரைக் கண்டித்தனர். எனினும் அவர்கள்மீது அவர் கொண்டிருந்த ஆர்வம் குறையவுமில்லை. அவர் அவர்களது இரட்சிப்பிற்காக எடுத்துக்கொண்டிருந்த முயற்சிகள் நிறுத்தப்படவுமில்லை. அவர் செய்துவந்த பணி அவர்களை இத்தகைய சோதனைக்கு கொண்டுவந்ததென்பதை அவர் அறிவார். தீமைக்கு இழுத்துச்செல்லப்படும் கவர்ச்சிகளால் அவர்கள் சூழப்பட்டிருந்தனர். முதலாவது எடுத்துவைக்கும் தவறான அடி இலகுவாகவும், அதினின்று உண்மையின்மைக்கும் அதிகமான குற்றங்களுக்கும் கீழேஇறங்குவது துரிதமாகவும் இருக்கும். அவர்களை மேலான நோக்கங்களுக்கும் மேன்மையான கொள்கைகளுக்கும் கொண்டுவர ஒவ்வொரு வழிவகைகளையும் பயன்படுத்த கிறிஸ்து தேடிக்கொண்டிருந்தார். அந்த உண்மையற்ற உக்கிராணக்காரனைப்பற்றிய கதையில் இந்த நோக்கத்தையே அவர் மனதில் வைத்துப் பேசினார். இந்த உவமையில் கூறி எடுத்துக்காட்டப்பட்டுள்ள இந்தச் சம்பவம்பற்றிய காரியம் ஆயக்காரர் மத்தியில் காணப்பட்டது. கிறிஸ்து கொடுத்த வர்ணனையில் தங்களது நடவடிக்கைகளைப்பற்றிக் கூறப்படுவதை அவர்கள் அறிந்துகொண்டனர். இந்த உவமையை அவர் கூறும்போது, அவர்களது கவனம் ஈர்த்து இழுக்கப்பட்டது. தங்களது நேர்மையற்ற பழக்கவழக்கங்களைப்பற்றி அவரால் கூறப்பட்ட சித்திரத்தினின்று அவர்களில் அநேகர் ஆவிக்குரிய ஒரு உண்மையைப்பற்றிய காரியத்தைக் கற்றுக்கொண்டனர். (8)

எப்படியாயினும் இந்த உவமை சீடர்களுக்கு நேரடியாகச் செல்லும்படி பேசப்பட்டது. அவர்களுக்கு முதலில் புளிப்புபற்றிய சத்தியம் கொடுக்கப்பட்டது; இவர்கள்மூலமாக இந்த சத்தியம் மற்றவர்களைச் சென்றடையவேண்டும். கிறிஸ்துவின் அநேக போதனைகளை சீடர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. பெரும்பாலும் அவர் கொடுத்த போதனைகளை

அவர்கள் மறந்துவிட்டதுபோலவே தோன்றியது. ஆனால் பரிசுத்த ஆவியானவரின் செல்வாக்கிற்கடியில் இந்த உவமைகள் பின்னர் மிகுந்த தெளிவுடன் அவர்களுக்குப் புதுப்பிக்கப்பட்டது. அதன்பின்னர் சீடர்கள்மூலமாக இந்த உண்மைகள் சபைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட புதிய விசுவாசிகளுக்கு மிகவும் தெளிவாகக் கூறப்பட்டது. (9)

மீட்பர் பரிசேயருக்கு போதித்துக்கொண்டிருந்தார். அவர் கொடுக்கும் வசனத்தின் கருத்துக்களிலிருக்கும் ஆழமான சத்தியங்களை அவர்கள் புரிந்துகொள்ளக்கூடுமென்ற தமது நம்பிக்கையை அவர் இன்னமும் விட்டுவிடவில்லை. (10)

அநேகர் தங்களது இதயங்களில் தாங்கள் குற்றவாளிகளென்று ஆழமாக உணர்த்தப்பட்டார்கள். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கடியில் சத்தியங்களைக் கேட்கும்போது, அநேகர் கிறிஸ்துவை ஏற்று சபையில் விசுவாசிகளாக மாறமுடியும். (11)

பரிசேயர்கள் கிறிஸ்துவை அவமதிப்பிற்குள்ளாக்க, அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் கலந்து உறவாடுகின்றாரென்று குற்றஞ்சாட்ட முயன்றார்கள். இப்பொழுது அந்த கடிந்துகொள்ளுதலை குற்றஞ்சாட்டுகிறவர்களின்மீதே அவர் திருப்பியனுப்பிவிட்டார். ஆயக்காரர்கள் மத்தியிலே நிகழ்ந்த ஒரு சம்பவத்தை பரிசேயர்களுக்கு முன்பாக எடுத்துக் காட்டினார். மேலும் அவர்களது நடவடிக்கைகளையும் சுட்டிக்காட்டி, தாங்கள் செய்யும் தவறுகளினின்று மீட்டுக்கொள்ளப்படுவதற்கான ஒரே வழியையும் பரிசேயர்களுக்கு எடுத்துக்கூறினார். அந்த உண்மையற்ற உக்கிராணக்காரனிடத்தில் அவனது எஜமானனுடைய பொருட்கள் தர்ம காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படவேண்டுமென்ற நோக்கத்தோடு நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஆனால் அவைகளை அவன் தனக்கென்று பயன்படுத்திக்கொண்டான். இஸ்ரவேலரும் அவ்வாறே செய்தார்கள். தேவன் ஆபிரகாமின் வித்தை தெரிந்துகொண்டார். ஓங்கிய புயத்தோடு எகிப்தின் அடிமைத்தனத்தினின்று அவர்களை விடுவித்தார். உலகம் அந்த பரிசுத்தமான சத்தியத்தால் ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்றும் அவர்கள் அந்த சத்தியம் வைக்கப்பட்டிருக்கும் பெட்டகமாக இருக்கவேண்டும் என்றும் அவர்களை வைத்திருந்தார். மற்றவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுப்பதற்காக ஜீவனுள்ள தேவனுடைய வாய்மொழியை அவர்களிடத்தில் ஒப்படைத்திருந்தார். ஆனால் அவரது உக்கிராணக்காரரோவெனில், தாங்கள் செல்வந்தராவதற்கும் மதிப்புடன் உயர்த்தப்படுவதற்கும் இந்த ஈவுகளைப் பயன்படுத்திக்கொண்டார்கள். (12)

சுயமுக்கியத்துவமும், சுயநீதியும் நிறைந்தவர்களான பரிசேயர்கள் தேவன் தமது மகிமைக்காகப் பயன்படுத்தப்படத்தக்கதாக இரவலாகக் கொடுக்கப்பட்டிருந்த பொருட்களை (சத்தியங்களை) தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். (13)

உவமையில் உள்ள ஊழியக்காரன் தனது எதிர்காலத்திற்காக எந்த ஏற்பாடும் செய்துவைக்கவில்லை. மற்றவர்களுக்கு நன்மை செய்வதற்காக நம்பிக்கையோடு அவனிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த பொருளை தனக்காகப் பயன்படுத்திக்கொண்டான். அவன் நிகழ்காலத்தைப்பற்றி மாத்திரமே சிந்தித்தவனாக இருந்தான். உக்கிராணத்துவ ஊழியம் அவனிடமிருந்து எடுக்கப்பட்டபின்னர் தன்னுடையது என்று உரிமைபாராட்டத் தக்கதாக அவனிடம் எந்தப் பொருளும் கிடையாது. ஆனாலும் அவனது எஜமானனின் பொருட்கள் அவனது கரங்களில்தான் இருந்தன. எதிர்காலத்தில் கஷ்டமான ஒரு நேரத்தைச் சந்திக்கவேண்டுமே என்றெண்ணி, அதற்கு எதிராக தன்னை பாதுகாத்துக்கொள்ள அந்தப் பொருட்களை பயன்படுத்தத் தீர்மானித்தான். இந்தத் திட்டத்தை நிறைவேற்றத்தக்கதாக, அவன் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்தியாகவேண்டும். எனவே, தனக்கான பொருட்களை சேர்த்துகொண்டிருப்பதற்குப்பதிலாக, அவன் மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க ஆரம்பிக்கவேண்டும். இவ்வாறு அவன் தனக்காக நண்பர்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். அவன் வேலையினின்று தள்ளப்படும்போது, அவர்கள் அவனை ஏற்றுக்கொள்வார்கள். இதேநிலையில் தான் பரிசேயர்கள் இருந்தார்கள். வெகுசீக்கிரத்தில் அவர்களிடமிருந்து உக்கிராணத்துவம் எடுத்துக்கொள்ளப்படும். அவர்களது எதிர்காலத்துக்காக ஏற்பாடு செய்துகொள்ளவேண்டுமென்று அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. மற்றவர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று வகைதேடும்போது தான், அவர்களும் நன்மையைப் பெற்றுக்கொள்வார்கள். நிகழ்கால வாழ்விலே தேவனுடைய ஈவுகளை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதில் மாத்திரமே, நித்தியத்திற்காகத் தங்களுக்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்துகொள்ளமுடியும். (14)

உவமையை கூறியபின்பு: “ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களா யிருக்கிறார்கள்” என்று கிறிஸ்து கூறினார். அதாவது, தேவனுடைய மக்களென்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் தேவனுக்குச் செய்யும் சேவையைவிட உலகப்பிரகாரமான ஞானமுள்ள மனிதர் தங்களுக்காக சேவைசெய்வதில், அதிக ஞானத்துடனும் உற்சாகத்துடனும் செயல்படுகின்றனர். கிறிஸ்து மானிட அவதாரத்தில் உலகில் வாழ்ந்த நாட்களிலும் அவ்வாறே இருந்தது.

இப்பொழுதும் அதேநிலைதான் இருக்கிறது. கிறிஸ்தவர்களென்று தங்களை அழைத்துக்கொள்ளும் அநேகரது வாழ்க்கையை நோக்கிப்பாருங்கள். கர்த்தர் அவர்களுக்கு திறமைகளையும் வல்லமைகளையும் செல்வாக்கையும் வழங்கியிருக்கிறார். இந்த மாபெரும் மீட்பின் திட்டத்தில், தம்மோடு அவர்கள் ஊழியர்களாக இருக்கத்தக்கதாக அவர்களிடத்தில் பணத்தையும் நம்பி ஒப்படைத்திருக்கிறார். அவர் கொடுக்கும் அனைத்து ஈவுகளும் மக்களை ஆசீர்வதிப்பதற்கும் தேவையிலிருப்போரது துன்பங்களையும் துயரங்களையும் துடைப்பதற்கும் பயன்படுத்தப்படவேண்டும். பசியால் வாடுபவர்களுக்கு உணவளித்து, உடையற்றோருக்கு உடை வழங்கி, விதவைகளையும் அநாதைப்பிள்ளைகளையும் பராமரித்து, இடர்பட்டோருக்கும் சமுதாயத்தில் நசுக்கப்பட்டோருக்கும் ஊழியம்செய்யவேண்டும். இவ்வுலகில் எங்கணும் துன்பதுயரங்கள் மிகுந்து காணப்படவேண்டுமென்று ஆண்டவர் ஒருபோதும் எண்ணங்கொண்டிருந்ததில்லை. வாழ்வின் இயல்பான தேவை களுக்குமேலாகவும் அதிகமாகவும் ஒரு மனிதரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருப் பதின் நோக்கம், அவன் மற்றவர்களை ஆசீர்வதிக்கவேண்டும்; மற்றவர்களுக்கு நன்மைசெய்யவேண்டும் என்பதற்காகவே. “உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள்” (லூக்கா 12:33) என்று கர்த்தர் சொல்லுகிறார். “தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக் கவும்” (1தீமோத்தேயு 6:18), “நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைக்கிறதும்... அக்கிர மத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும்,... பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப்போலாகும்” (ஏசாயா 58:6,7,10). “நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்” (மாற்கு 16:15). இவை அனைத்தும் கர்த்தருடைய கட்டளைகளாயிருக்கிறது. கிறிஸ்தவர்களென்று தங்களை அழைத்துக்கொண்டிருக்கும் மக்களில் அநேகர் இந்தப் பணியைச் செய்துகொண்டிருக்கிறார்களா? (15)

ஐயோ, தேவனுடைய ஈவுகளை எத்தனைபேர் தங்களுக்காக பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். எத்தனை பேர் வீட்டிற்குமேல் வீடு, நிலத்திற்குமேல் நிலமென்று சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். எத்தனைபேர்

தங்களது செல்வத்தை சிற்றின்பங்களுக்கும், இன்சுவை நுகர்ச்சிக்கும், ஆடம்பரமான வீடுகளுக்கும், வீட்டிற்கான தட்டுமுட்டு மற்றும் விலையுயர்ந்த இருக்கைகள், நவநாகரீக உடைகள் ஆகியவைகளுக்காகவும் செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய உடன்மனிதர்களோ துன்பத்திலும், குற்றவியல் நடவடிக்கைகளிலும் மற்றும் வியாதி, மரணம் ஆகியவைகளைச் சந்திக்கும்படியும் விட்டுவிடப்பட்டிருக்கிறார்கள். பெருந்திரளான மக்கள் ஒரு பரிவுள்ள பார்வை அல்லது வார்த்தையின்றி, கருணைச் செயல்கள் காட்டுவாரின்றி அழிந்துகொண்டிருக்கிறார்கள். (16)

தேவனைக் கொள்ளையிடும் குற்றவாளிகளாக அநேகர் இருக்கின் றனர். துன்பத்திலிருக்கும் மக்களுக்கு உதவிசெய்து, ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காக அவர்களுக்காகப் பாடுபடும்போது, அப்பணியின் மூலமாக அவரது மகிமைக்காக மீண்டும் அவரிடத்திற்கே பிரதிபலிப்பை ஏற்படுத்தவேண்டும். ஆனால் அவர்கள் தங்களிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கும் செல்வத்தை தன்னலத்திற்காக மட்டுமே பயன்படுத்தி, மகிமையின் ஆண்டவரைக் கொள்ளையடிக்கிறார்கள். அவர்களிடத்தில் நம்பிக்கையோடு ஒப்படைக்கப்பட்ட பொருட்களை மோசடி செய்துகொண்டிருக்கிறார்கள். “நான் நியாயத்தீர்ப்புச் செய்யும்படி உங்களிடத்தில் வந்து, எனக்குப் பயப்படாமல், விதவைகளும் திக்கற்ற பிள்ளைகளுமாகிய கூலிக்காரரின் கூலியை அபகரித்துக்கொள்ளுகிறவர்களுக்கும், பரதேசிக்கு அநியாயஞ் செய்கிறவர்களுக்கும் விரோதமாய்த் தீவிரமான சாட்சியாயிருப்பேன்... மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப் பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்” (மல்கியா 3:5,8,9). “ஐசுவரியவான்களே, கேளுங்கள்,... உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசிநாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்... பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்... இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில்பட்டது” (யாக். 5:1–3,5,4). (17)

ஒவ்வொருவரும் தங்களிடத்தில் நம்பிக்கையோடு ஒப்படைக்கப்பட்ட பொருட்களுக்கு கணக்குக் கொடுக்கவேண்டும். இறுதி நியாயத்தீர்ப்பு

நாளிலே மனிதரால் குவித்துவைக்கப்பட்டிருக்கும் செல்வம் அவர்களுக்குப் பயனற்றதாகயிருக்கும். தங்களுடையதென்று சொல்வதற்கு அவர்களிடத்தில் எதுவுமே இருக்காது. (18)

உலக பொக்கிஷங்களைச் சேர்த்துவைப்பதில் தங்களது வாழ் நாளைச் செலவிட்டுக்கொண்டிருக்கும் மக்கள், இந்த பூமிக்கான ஆதாரங் களை தனக்காகச் சேர்த்துக்கொண்டிருந்த அநீதியான உக்கிராணக் காரனைவிட, தங்களது நித்திய நல்வாழ்வுகுறித்த காரியத்தில் குறைந்த ஞானமுடையவர்களாகவும் போதிய சிந்திக்கும் திறனற்றவர்களாகவும் அக்கறையற்றவர்களாகவும், இருக்கிறார்கள். ஒளியின் பிள்ளைகளாக இருக்கிறோம் என்று தங்களைப்பற்றிக் கூறிக்கொண்டிருப்பவர்கள் இந்தத் தலைமுறையிலுள்ள உலகத்தின் பிள்ளைகளைவிட குறைந்த ஞானமுடையவர்களாகவே இருக்கின்றனர். நியாயத்தீர்ப்பின் அந்த மகா நாளைக்குறித்து ஏசாயா தீர்க்கன் கூறும்போது: “பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும் அந்நாளிலே, அவருடைய பயங் கரத்திற்கும், அவருடைய மகிமைப்பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் வெடிப்புகளிலும் குன்றுகளின் சந்துகளிலும் புகுந்துகொள்ளும்படிக்கு, மனுஷன் பணிந்துகொள்ளத் தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன் விக்கிரகங்களையும், மூஞ்சூறுகளுக்கும் துரிஞ்சில்களுக்கும் எறிந்துவிடுவான்” (ஏசாயா 2:20,21) என்கிறார். (19)

“நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்.” தேவனும் கிறிஸ்துவும் தேவதூதர்களும் நெருக்கப்படுகிறவர்களுக்கும் துன்ப துயரங்களிலும் பாவங்களிலும் இருப்பவர்களுக்கும் ஊழியஞ்செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஊழியத் திற்காக உங்களை தேவனிடம் அர்ப்பணியுங்கள். இந்த நோக்கத்திற்காக அவரது ஈவுகளைப் பயன்படுத்துங்கள். பரலோக ஜீவிகளோடு நீங்களும் பங்குதாரர்களாக ஈடுபடுங்கள். உங்களது இதயம் அவர்களது இதயங்களோடு இணைந்து, பரிவுடன் துடிக்கும் குணத்திலே அவர்களோடு நீங்கள் ஒன்றுபட்டுவிடுவீர்கள். நித்திய ஆசரிப்புக்கூடாரங்களிலே வாழ்பவர்கள் உங்களுக்கு அந்நியர்களாக இருக்கமாட்டார்கள். இந்த உலகின் காரியங்க ளெல்லாம் அழிந்து மறைந்துபோனபின், பரலோக வாசலண்டை நிற்கும் பரம கண்காணிப்பாளர்கள் உங்களுக்கு வரவேற்பளிப்பார்கள். (20)

மற்றவர்களை ஆசீர்வதிக்கத்தக்கதாக நீங்கள் பயன்படுத்தும் பொருட்கள் திரும்பவும் அதற்கான ஆதாயத்தைக் கொண்டுவரும். ஐசுவரியம்

சரியாகப் பயன்படுத்தப்படும்போது, அநேக நன்மையான காரியங்களை நிறைவேற்றிவைக்கும். கிறிஸ்துவிற்காக ஆத்துமாக்கள் ஆதாயம் செய்யப் படும். இந்த பூலோக வாழ்விற்காக கிறிஸ்து வைத்திருக்கும் திட்டத்தைப் பின்பற்றுபவர்கள் இந்த பூமியிலே யாருக்காக ஊழியம்செய்து தியாகத்தோடு தங்களை அர்ப்பணித்தார்களோ அவர்களை பரலோக மன்றங்களிலே காண்பார்கள். மீட்கப்பட்டவர்கள் தங்களது இரட்சிப்பிற்குக் காரணமாக இருந்தவர்களை நன்றியுடன் நினைவுகூருவார்கள். ஆத்தும ஆதாய ஊழியத்தில் உண்மையும் உத்தமமுமாக ஈடுபட்டவர்களுக்கு பரலோகம் ஒரு அருமையான இடமாக இருக்கும். (21)

இந்த உவமையின் பாடம் அனைவருக்கும் உரியதாயிருக்கிறது. கிறிஸ்துவின்மூலம் பெற்றுக்கொண்ட கிருபைக்கு நாம் கணக்கொப்புவிக்க வேண்டும். உலகப்பிரகாரமான காரியங்களில் மூழ்கி வாழ்க்கையை வீணடித்துவிடக் கூடாது. வாழ்க்கை மிகவும் பக்திவிநயமானது. காண இயலாததும் நித்தியத்திற்கடுத்ததுமான காரியங்களை நாம் பிறரிடம் பகிர்ந்துகொள்ளவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். (22)

ஒவ்வொரு வருடமும் இலட்சக்கணக்கில் மனிதர்கள் எச்சரிக்கப் படாமல், இரட்சிக்கப்படாமல், தங்களது வாழ்வை முடித்துக்கொண்டே இருக்கிறார்கள். வாழ்வின் பலதரப்பட்ட சந்தர்ப்பங்களிலே ஒவ்வொருமணி நேரமும் ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணும் வழிகள் நமக்கு முன்பாகத் திறந்திருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்ந்து வந்துபோய்க் கொண்டிருக்கின்றன. இவைகளில் அதிகமான சந்தர்ப்பங்களை நாம் பயன்படுத்திவிடவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நாட்களும், வாரங்களும், மாதங்களும் கடந்துசென்றுகொண்டே இருக்கின்றன. நாம் செய்கின்ற ஊழியத்தின் நேரத்திலே ஒருநாளும், ஒரு வாரமும், ஒரு மாதமும் குறைந்துகொண்டேபோகிறது. சொல்லப்போனால், இன்னும் சில ஆண்டுகளே நீடித்திருக்கும். எங்களால் பதில்கூறமுடியாதென்று நாம் மறுக்கக்கூடாத ஒரு குரல் நம்மை நோக்கி: “உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி” என்று கூறும். (கிறிஸ்து கூறுவார்). (23)

ஆழ்ந்து சிந்திக்கும்படி கிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார். அனைத்தையும் நேர்மையாகக் கணக்கிடுங்கள். ஒரு தராசில் இயேசுவை அமர்த்துவோம். அதின் பொருள் நித்திய பொக்கிஷம், நித்திய ஜீவன், சத்தியம், பரலோகம், மீட்கப்பட்ட ஆத்துமாக்களின்மூலமாக கிறிஸ்துவிலே நாம் கொள்ளும் சந்தோஷம் ஆகியவையாகும். அடுத்த தராசிலே உலகத்தினின்று கிடைக்கும் அனைத்து கவர்ச்சிகளையும்

வையுங்கள். ஒரு தராசிலே உங்களது சொந்த ஆத்துமாவின் இழப்பையும் நீங்கள் ஊழியம் செய்திருந்தால் வந்திருக்கக்கூடிய அனைத்து ஆத்துமாக் களின் இழப்பையும் வையுங்கள். காலத்திற்காகவும் நித்தியத்திற்காகவும் நிறுத்துப்பாருங்கள். இவ்வாறு நீங்கள் ஈடுபட்டிருக்கையில், கிறிஸ்து உங்களைப் பார்த்து: "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" (மாற்கு 8:36) என்று கேட்கிறார். (24)

நாம் இம்மைக்குரியதை விட்டுவிட்டு பரத்திற்குரியதை தெரிந்து கொள்ளவேண்டுமென்று தேவன் வாஞ்சிக்கிறார். பரலோகத்தில் முதலீடு செய்யும் சாத்தியக்கூறுகளை அவர் நமக்கு முன் திறந்துவைக்கிறார். நமது மேலான—உயர்வான நோக்கங்களுக்கு ஊக்கமளித்து உற்சாகமூட்டி அதிக விருப்பத்தோடு நாம் தெரிவுசெய்யும் காரியங்களுக்குப் பாதுகாப்பளிக்கிறார். "புருஷனைப் பசும்பொன்னிலும், மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூருவமாக்குவேன்" (ஏசாயா 13:12) என்று கர்த்தர் சொல்லுகிறார். இவ்வுலகின் ஐசுவரியங்கள் பூச்சியினாலும் துருவினாலும் கெடுத்துப்போடப் படும். பொக்கிஷம் அடித்துச் செல்லப்படும்போது, கிறிஸ்துவின் பின்னடி யார்கள் பரலோகப் பொக்கிஷத்தைக்குறித்தும் அழிந்துபோகாத ஐசுவரியங் களைக்குறித்தும் மகிழ்ச்சியடைந்து களிகூரலாம். (25)

இந்த உலகப்பிரகாரமான அனைத்து நட்புகளையும்விட கிறிஸ்துவால் மீட்கப்பட்டோருடைய நட்பே மிகச் சிறந்தது. பூமியிலே மிகவும் மேன்மையான ஒரு அரண்மனைக்கு உரிமையாளனாக இருப்பதைவிட, நமது ஆண்டவர் ஆயத்தம்பண்ணப்போயிருக்கின்ற மாளிகைகளுக்கு உரிமையாளராக இருப்பதே மிகவும் நல்லது. உலகப்பிரகாரமான அனைத்து புகழ்ச்சி நிறைந்த வார்த்தைகளைவிட மீட்பர் தனது உத்தமமான ஊழியக்காரர்களிடத்தில் கூறும்: "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" (மத்தேயு 25:34) என்ற இந்த வார்த்தைகளே மிகவும் மேலானது. (26)

தமது பொருட்களை வீணடித்து விரயம்பண்ணிப்போட்டவர்களுக்கு நிலையான பொக்கிஷத்தை அடைந்துகொள்ளும் சந்தர்ப்பத்தை கிறிஸ்து இன்னமும் வழங்குகிறார்: "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்." "...பழமையாய்ப்போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறது

மில்லை.” (லூக்கா 6:38; 12:33). “இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும்,... நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர் களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு”–1 தீமோ. 6:17–19. (27)

உங்களது சொத்து உங்களுக்கு முன்பாகப் பரலோகம் சென்றடை யட்டும். தேவனுடைய சிங்காசனத்திற்கடியில் உங்களது பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள். தேடிக்கண்டடையக்கூடாத ஐசுவரியங்களுக்கு உரிமை யாளராக இருப்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள். “நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்”–லூக்கா 16:9. (28) ★

# 27

# எனக்குப் பிறன் யார்?

**(மூலநூல் : பக்கங்கள் 376–389)**

**லூக்கா 10:25–37**

யூதர்கள் மத்தியிலே "எனக்குப் பிறன் யார்?" என்ற கேள்வி முடிவில்லாத தர்க்கங்களை உண்டுபண்ணிக்கொண்டிருந்தது. இந்தக் காரியத்தில் அஞ்ஞானிகள் மற்றும் சமாரியர்கள் போன்றோர்பற்றி அவர்களுக்கு எந்தவித சந்தேகமும் கிடையாது. யூதர்களால் இவர்கள் அந்நியரும் விரோதிகளுமாகக் கருதப்பட்டார்கள். ஆனால் அவர்களது சொந்த நாட்டு மக்கள் மற்றும் சமுதாயத்தில் வாழ்ந்துவந்த பலதரப்பட்ட வகுப்புகளைச் சார்ந்தவர்கள் மத்தியில் பிரிவினைக் கோட்டை எங்கு போடுவது என்று அறியாதிருந்தார்கள். மேலும் ஆசாரியன், போதகர், மூப்பர் போன்றோர் யாரைத் தங்களுக்கு பிறனாகக் கொள்ளவேண்டுமென்ற கேள்வியுமிருந்தது. தங்களைச் சுத்திகரித்து தூய்மையாக வைத்துக்கொள்ளும்படிக்கு தங்கள் ஜீவியங்களில் சடங்காச்சாரங்களையே அவர்கள் சுற்றிவந்துகொண்டிருந்தார்கள். மதியீனமான, சிந்தனையற்ற மக்கள்கூட்டத்தோடு தொடர்பு கொண்டால், அதனால் ஏற்படும் தீட்டை அகற்ற கடுமையாக முயற்சிகள் செய்யப்படவேண்டுமென்று கற்றுக்கொடுத்தார்கள். இப்படி "தீட்டாக" இருப்பவர்களை தங்களுக்குப் பிறன் என்று கருதுவதா? (1)

அவர்களது இந்தக் கேள்விகளுக்கு ஆண்டவர் நல்ல சமாரியன் பற்றிய உவமையிலே பதிலுரைத்தார். நாம் தொழுவதற்காகச் செல்லும் சபையையோ அல்லது நாம் சார்ந்திருக்கும் விசுவாசக் கூட்டத்தையோ மாத்திரம் "நமக்குப் பிறன்" என்ற கணக்கில் பொருள்கொள்ளக்கூடாதென்பதை எடுத்துக்காட்டினார். இதற்கு இனம், நிறம் அல்லது வகுப்பு வேறுபாடுகள் கிடையாது. எந்த ஒருவருக்கு நமது உதவி தேவைப்படுகிறதோ அவரே நமக்குப் பிறனாக இருக்கிறார். பகைவனால் காயப்படுத்தப்பட்டு புண்பட்டுக்கிடக்கிற ஒவ்வொரு ஆத்துமாவும் நமக்குப் பிறனாக இருக்கிறான்.

தேவனுடைய உடைமையாக இருக்கின்ற ஒவ்வொரு நபரும் நமக்குப் பிறனாக இருக்கிறான். (2)

நியாயசாஸ்திரி ஒருவன் ஆண்டவரிடத்தில் கேள்வி கேட்டபோது, அவனுக்குப் பதில்சொல்லும்விதமாக நல்ல சமாரியனைப்பற்றிய உவமையை கிறிஸ்து கூறினார். மீட்பர் போதித்துக்கொண்டிருக்கும்போது, "நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து, அவரைச் சோதிக்கும்படி: போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டான். கிறிஸ்துவிடம் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டுமென்று பரிசேயர்கள் நியாயசாஸ்திரியைத் தூண்டிவிட்டிருந்தார்கள். அவரது வார்த்தைகளின்மூலமாக அவரைக் கண்ணியில் அகப்படுத்திவிடலா மென்ற நம்பிக்கையோடு அவர் கூறப்போகும் பதிலை ஆவலோடு உன்னிப் பாகக் கவனித்தனர். ஆனால் மீட்பர் அவர்களோடு எந்தவிதமான தர்க்கத் திலும் ஈடுபடவில்லை. அந்தக் கேள்வியை கேட்டவனிடமிருந்து பதிலை வரவழைக்க விரும்பினார். "நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன?" என்றார். சீனாய் மலையிலிருந்து கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்திற்கு கிறிஸ்து போதிய முக்கித்துவம் அளிக்கவில்லையென்று யூதர்கள் தொடர்ந்து குற்றஞ்சாட்டிக்கொண்டிருந்தனர். ஆனால் அவரோ இரட்சிப்பைப் பெற தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளுவது அவசியம் என்பதை வலியுறுத்த இந்தக் கேள்வியைக் கேட்டார். (3)

நியாயசாஸ்திரி அவருக்குப் பிரதியுத்தரமாக: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்று எழுதியிருக்கிறது என்றான். அவர் அவனை நோக்கி: "நிதானமாய் உத்தரவு சொன்னாய்; அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்" என்றார். (4)

பரிசேயர்களது பணிபற்றியும் அவர்களது நிலைப்பாடுபற்றியும் அந்த நியாயசாஸ்திரிக்கு திருப்தி ஏற்படவில்லை. வேதவாக்கியங்களின் உண்மை யான பொருளைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற விருப்பத்தோடு அவை களைப் படித்துக்கொண்டிருந்தான். இந்தக் காரியத்தில் அந்த நியாய சாஸ்திரிக்கு உயிரோட்டமுள்ள ஒரு ஆர்வம் இருந்தது. நேர்மையான உள்ளத்தோடு "நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான். பிரமாணத்தின் கோரிக்கைகள் குறித்த காரியத்தில் பதில்கொடுக்கும்போது, அனைத்துச் சடங்காச்சார முறைமைகளையும் ஆச்சார சம்பந்தமான

கட்டளைகளையும் புறக்கணித்துப் போட்டான். இவைகளுக்கு அந்த நியாயசாஸ்திரி எந்த மதிப்பையும் கொடுக்கவில்லை. அனைத்துப் பிரமாணங்களும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிற இரண்டு பெரும் கொள்கைகளை அவன் எடுத்துக்கூறினான். அவனது இந்தப் பதிலுக்கு மீட்பர் கொடுத்த பாராட்டு போதகர்களோடு அவனை ஒரு சாதகமான சூழ்நிலையில் வைத்தது. பிரமாணத்தை விளக்கிக் கூறுபவரால் உயர்த்திக் கூறப்பட்டதற்கு கிறிஸ்து ஒப்புதல் அளித்ததற்காக பரிசேயர்களால் அவரை கண்டனஞ்செய்ய முடியவில்லை. (5)

“அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்” என்று கிறிஸ்து கூறினார். அவர் தமது போதனையிலே பிரமாணத்தை ஒரு தெய்வீகத் தொகுதியாகவே எப்பொழுதும் அவர்கள்முன் வைத்தார். ஒரு கற்பனையைக் கைக்கொண்டு இன்னொன்றை மீறுவது கூடாதகாரியமென்றும், ஒரே கொள்கையே அனைத்துப் பிரமாணங்களிலும் ஊடுருவிச்செல்கிறதென்றும் எடுத்துக்காட்டினார். முழுப் பிரமாணத்திற்கும் கீழ்ப்படிவதைவைத்துத்தான் ஒரு நபரின் இறுதி முடிவு தீர்மானிக்கப்படும். (6)

ஒருவரும் தனது சொந்த பலத்தினாலே பிரமாணத்திற்கு கீழ்ப்படிய முடியாதென்பதை கிறிஸ்து அறிந்திருந்தார். அந்த நியாயசாஸ்திரி சத்தியத்தைக் கண்டறியத்தக்கதாக, தெளிவான திறனாய்வுள்ள ஒரு ஆராய்ச்சிக்கு நடத்திச்செல்ல விரும்பினார். கிறிஸ்துவின் புண்ணியத்தையும் அவரது கிருபையையும் ஏற்றுக்கொள்வதின்மூலமாகவே பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியும். பாவத்திற்காக அவர் செய்த சித்தத்தின்மீது விசுவாசம் கொள்வதே விழுந்துபோன மனிதன் தேவனை முழுமனத்தோடு நேசிக்கவும் தன்னைப்போல பிறனை நேசிக்கவும் ஊக்குவிக்கிறது. (7)

அந்த நியாயசாஸ்திரி முதல் நான்கு கட்டளைகளை மட்டுமல்ல; அடுத்த ஆறு கட்டளைகளையும் கைக்கொள்ளவில்லை. உள்ளத்தை ஆராயும்வண்ணமாக கிறிஸ்து கூறிய வார்த்தைகளுக்கடியில் அவன் தான் ஒரு குற்றவாளியென்பதை உணர்ந்தான். ஆனால் தனது பாவங்களை அறிக்கைசெய்வதற்குப் பதிலாக சாக்குப்போக்கு சொல்லி தவிர்க்க முயற்சித்தான். சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுவதற்குப் பதிலாக, கட்டளைகளை நிறைவேற்றுவது எவ்வளவு கடினமானதென்று காட்டுவதற்கு அதிக முயற்சி எடுத்தான். தன்னை குற்றவாளியென்று காண்பிக்கப்பட்ட காரியத்தைத் தவிர்க்கவும், மக்களுடைய பார்வையில் தன்னுடைய நேர்மையை மெய்ப்பித்துக்காட்டவும் எண்ணினான். அவனது கேள்வி தேவையற்றது, ஏனென்றால் அவனால் அதற்குப் பதில்கொடுக்கவும் முடிந்தது என்பதை மீட்பரின் வார்த்தைகள் தெளிவாக எடுத்துக்காட்டின.

எனினும், "எனக்குப் பிறன் யார்?" என்று மற்றுமொரு கேள்வியையும் கேட்டான் அந்த நியாயசாஸ்திரி. (8)

மீண்டும் தர்க்கத்திற்குள் நுழைவதற்கு கிறிஸ்து மறுத்துவிட்டார். அந்தக் கேள்விக்குப் பதிலாக, அவரது பேச்சைக்கேட்ட அனைவரும் மறக்காமல் நினைவில் வைத்திருந்த ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறினார். "ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராகவிட்டுப்போனார்கள்"—லூக். 10:30. (9)

எருசேலமிலிருந்து எரிகோவிற்குப் பயணிக்கும் ஒருவர் யூதேயா வனாந்திரத்தின் ஒரு பகுதியைக் கடந்துசெல்ல வேண்டியதிருக்கும். அந்தப் பாதை கரடுமுரடான இடுக்கான மலைப்பகுதிக்கு இட்டுச்சென்றது. அந்த வழி, திருடர்கள் நிறைந்த—பெரும்பாலும் கலகங்களும் குழப்பங்களும் ஏற்படுகின்ற—அமளி நிறைந்த இடமாக இருந்தது. இங்குதான் அந்தப் பயணி தாக்கப்பட்டு, அவனிடமிருந்த விலைமதிப்புள்ள பொருட்களெல்லாம் பறிக்கப்பட்டு, அரை உயிரும் குறை உயிருமாய் வழியருகே கிடந்தான். இவ்வாறு அந்தப் பயணி கிடக்கும்போது, அந்த வழியாக ஒரு ஆசாரியன் வந்தான். காயப்பட்டு புண்பட்ட நிலையில் அவனது இரத்தத்திலே அவன் புரண்டுகிடப்பதைக் கண்டான். எந்த உதவியும் செய்யாமல், அவனைவிட்டு "பக்கமாய் விலகிப்போனான்." பின்னர் லேவியன் அந்தப் பக்கமாய் வந்தான்; என்ன சம்பவித்துள்ளது என்பதை அறியும் ஆர்வத்தோடு அங்கு நின்று துன்பம் அனுபவித்துக்கொண்டிருக்கும் அந்த மனிதனைப் பார்த்தான். அந்தச் சமயத்தில் தான் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி அவன் நன்றாக உணர்த்தப்பட்டான். ஆனால் அது அவனது மனதிற்குகந்த கடமை அல்ல. தான் அந்த வழியே வந்திருக்காவிட்டால், அந்தக் காயப்பட்ட மனிதனைப் பார்க்கவேண்டியதிருந்திருக்காது என்று எண்ணினான். இந்தக் காரியம் தன்னைச் சார்ந்ததல்ல என்றும் தனக்குத்தானே எண்ணியவனாக "பக்கமாய் விலகிப்போனான்." (10)

ஆனால் அதேவழியில் பயணித்துக்கொண்டிருந்த சமாரியன், காயப் பட்டுக் கிடப்பவனைப் பார்த்து, மற்றவர்கள் செய்யாமல் விட்டுவிட்டுப்போன அந்தப் பணியைச் செய்தான். மென்மையோடும் இரக்கத்தோடும் காயப்பட்டுக்கிடந்த அந்த மனிதனுக்குப் பணிவிடை செய்தான். "அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுய வாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை

எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன்" என்றான். ஆசாரியனும் லேவி யனும் தாங்கள் பயபக்தி உடையவர்களென்று வெளிப்படையாக தங்களைக் காட்டிக்கொண்டார்கள். ஆனால் சமாரியன் மட்டுமே உண்மையிலேயே மனந்திரும்பியவன் என்பதைக் காட்டினான். ஆசாரியனையும் லேவியனை யும்விட சமாரியனுக்கும் இந்த வேலை பிடித்தமான வேலையன்று; ஆனால் குணத்திலும் ஊழியத்திலும் அவன்தான் தேவனோடு இசைந்திருப்பவன் என்பதைக் காட்டினான். (11)

இந்தப் பாடத்தை ஆண்டவர் கொடுக்கும்போது, கிறிஸ்து பிரமா ணத்தின் கொள்கைகளை நேரடியாக மனதில் பதியும்வண்ணம் அவர்கள் முன் வைத்தார். அவரது போதனையைக் கேட்டுக்கொண்டு இருந்தவர்கள் அவைகளைக் கைக்கொள்ளத் தவறிவிட்டார்கள் என்பதைக் காட்டினார். அவரது வார்த்தைகள் மிகவும் உறுதியுடையதாயும் முனைப்போடு குறித்துக் காட்டக்கூடியதாகவும் இருந்ததால், அதைக் கேட்டுகொண்டிருந்தவர்களுக்கு குதர்க்கம்பண்ணுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல்போயிற்று. அவர் கொடுத்த பாடத்தில் நியாயசாஸ்திரிக்கும் குற்றம்கண்டுபிடிக்க வழியில்லாமல் போயிற்று. கிறிஸ்துவைப்பற்றி அவன் கொண்டிருந்த தப்பெண்ணம் அகன்று போய்விட்டது. ஆனால் சமாரியர்கள்குறித்து யூதர்கள் கொண்டிருந்த வெறுப் பைப் போதிய அளவில் அவனால் மேற்கொள்ளமுடியாமல் போயிற்று. எனவே, அந்த சமாரியன் பெயரைக் குறிப்பிட்டுச்சொல்லி, அவனது நற்கிரியையைப் பாராட்டமுடியாமற்போயிற்று. "இப்படியிருக்க, கள்ளர் கையில் அகப்பட்ட வனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாயிருக்கிறான்?" என்று கிறிஸ்து கேட்டபோது, அவன் சமாரியன் என்ற வார்த்தையை தவிர்த்து: "அவனுக்கு இரக்கஞ்செய்தவனே" என்றான்.(12)

"இயேசு அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படியே செய்" என்றார். தேவையிலிருப்போருக்கு அதே பரிவோடுகூடிய இரக்கத்தைக்காட்டுங்கள். அதின்மூலம் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொள்ளுகிறீர்க ளென்பதற்கான ஆதாரத்தை கொடுக்கமுடியும் என்றார். (13)

உண்மையான தொழுகையில் என்ன அடங்கியிருக்கிறது என்கிற மதசம்பந்தமான நம்பிக்கையே யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையிலான ஒரு மாபெரும் வித்தியாசமாக இருந்தது. பரிசேயர்கள் சமாரியர்களைப்பற்றி எந்தவிதமான நல்வார்த்தைகளையும் கூறுவதில்லை. அவர்கள்மீது தங்களது கசப்பு நிறைந்த சம்பவங்களையே கொட்டினார்கள். சமாரியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே நிலவிவந்த வெறுப்பு

அவ்வளவு கடுமையானதாக இருந்ததால் அந்த சமாரியப்பெண்ணிடம் கிறிஸ்து தாகத்திற்கு தண்ணீர் கேட்டது வழக்கத்திற்கு மாறான ஒரு வித்தியாசமான செயலாகத் தோன்றியது. "யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியினால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத் தா என்று எப்படிக் கேட்கலாம்" என்றாள். யூதர்கள் கிறிஸ்துவிற்கு எதிராக கொலை வெறியோடும் வெறுப்போடும் ஆலயத்தில் எழும்பி நின்று, அவர்மேல் கல்லெறிய முற்பட்டார்கள். அவருக்கு விரோதமாக தங்களது வெறுப்பைக் காட்டுவதற்கு "உன்னைச் சமாரியனென்றும், பிசாசுபிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதான்" (யோவான் 8:48) என்றார்கள். அவர்களது வெறுப்பைக் காட்ட இந்த வார்த்தைகளைத் தவிர வேறு எந்த சிறந்த வார்த்தையும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனினும், ஆசாரியனும் லேவியனும் ஆண்டவர் அவர்களுக்கு வற்புறுத்திக்கூறியிருந்த காரியத்தை அலட்சியம் செய்துவிட்டார்கள். அவர்களது சொந்த நாட்டைச்சேர்ந்த ஒரு மனிதனுக்கு அவர்களால் வெறுத்து அவமதிக்கப்பட்ட சமாரியன் பணிவிடை செய்யும்படியாக விட்டு விட்டார்கள். (14)

"உன்னைப்போல பிறனையும் நேசி" என்ற கட்டளையை சமாரியன் நிறைவேற்றினான். யாரால் பழித்துரைக்கப்பட்டானோ அவர்களைவிட அவன் அதிக நீதிமான் என்பதைக் காட்டினான். தனது உயிருக்கு ஆபத்து இருப்ப தையும் பொருட்படுத்தாமல் காயப்பட்டவனை தனது சொந்த சகோதரனைப் போல் நடத்தினான். இந்த சமாரியன் கிறிஸ்துவையே சுட்டிக்காட்டினான். நாம் காயப்பட்டு மரித்துக்கொண்டிருக்கும்போது, அவர் நம்மீது பரிவுகாட்டினார். அவர் நம்மை கடந்து பக்கவழியாகப் போகவில்லை. அழிந்துபோகத்தக்கதாக உதவியின்றியும் நம்பிக்கையின்றியும் விட்டுவிடவில்லை. பரலோகத் தூதர் சேனை அனைத்தாலும் நேசிக்கப்பட்ட அவர் அத்தகைய மகிழ்ச்சியான பரிசுத்தமான வீட்டில் தங்கியிருக்கவில்லை. நமது அத்தியாவசியமான தேவையை அவர் கண்டார். நமது காரியத்தைப் பொறுப்பேற்று அவரது ஆர்வமூட்டும் தொடர்பினை மானிடரோடு இணைத்துக்கொண்டார். தமது பகைவர்களை இரட்சிக்க அவர் மரித்தார். அவரைக் கொலைசெய்பவர்க ளுக்காக ஜெபித்தார். அவர் தமது முன் உதாரணத்தை சுட்டிக்காட்டியவராக: "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன் 'நான் உங்களில்' அன்பாக இருப்பதுபோல நீங்களும் அன்பாயிருங்கள்" (யோவான் 15:17,13:34) என்று கூறுகிறார். (15)

ஆசாரியனும் லேவியனும் ஆலயத்திற்கு தொழுவதற்காகச் சென்றார்கள். தேவன் தாமே இந்தச் சேவையை அவர்களுக்கு நியமித்திருந்தார். இந்த ஆராதனையில் பங்குகொள்வதென்பது ஒரு

மாபெரும் உயர்ந்த சிறப்புரிமையாகும். எனவே இவ்வாறாக தாங்கள் கனப்படுத்தப்பட்டிருக்க வழியருகே கிடக்கும் தங்களுக்குத் தெரியாத ஒரு நபருக்குப் பணிவிடைசெய்வது தங்களது மதிப்பிற்குக் குறைவான வேலையென்று எண்ணினார்கள். இவ்வாறு தேவன்தாமே ஒரு சகமனிதனை ஆசீர்வதிக்கத்தக்கதாக தமது ஊழியர்களுக்கு ஒரு சிறப்பான சந்தர்ப்பத்தை கொடுத்திருந்தார். அவர்களோ அதை அலட்சியஞ்செய்துவிட்டார்கள். (16)

இதேபோன்ற தவறை அநேகர் இன்றும் செய்துகொண்டிருக்கிறார்கள். தங்களது கடமைகளை தனிவேறுபட்ட இருவகுப்பாரிடையே பிரித்து வைத்திருந்தார்கள். ஒரு வகுப்பார் தேவனுடைய பிரமாணத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட காரியங்களை பின்பற்றும் கூட்டமாக எண்ணப்பட்டார்கள். அடுத்த வகுப்பார் சிறிய காரியங்களென்று கருதப்பட்ட—அதாவது: “உன்னைப்போல் பிறனையும் நேசி” என்பதுபோன்ற வசனத்தின்படி வாழுகின்ற கூட்டத்தாராக இருந்தபோதிலும், சமுதாயத்தால் மறக்கப்பட்ட நிலையிலேயே இருந்தனர். சிறிய காரியங்களில் ஒன்றான இக்காரியம் அவர்களால் புறக்கணிக்கப்பட்டது. இந்தக் குறிப்பிட்ட சூழ்நிலையின் பணி இஷ்டம்போல் மாறக்கூடிய அவர்களுடைய சலனபுத்திக்கும் நாட்டத்திற்கும், மனதில் ஏற்படும் திடீர் உணர்வுகளுக்கும் அடியில் தள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு குணம் கேடடைந்து, கிறிஸ்துவின் மார்க்கம் தவறாக எடுத்துக்காட்டப்பட்டது. (17)

துன்பத்திலிருக்கும் நபருக்குச் சேவைசெய்வது தங்களது மதிப்பிற்கு குறைவான செயலென்று அநேகர் அக்காலத்தில் எண்ணியிருந்தனர். தங்களது ஆத்துமாவாகிய ஆலயத்தை அழிந்துபோக விட்டுவிட்டவர்களை அலட்சியத்தோடும் அவமதிப்போடும் அநேகர் நோக்கிப்பார்த்தனர். வேறு சிலர் வித்தியாசமான நோக்கத்தோடு ஏழைகளை அலட்சியம் செய்தனர். ஏதோ மதிப்புவாய்ந்த ஆனால் இடர்மிகுந்த காரியங்களில் ஈடுபட்டு, அவரது ஊழியத்தை நிலைநிறுத்த வகைதேடிப் பணிபுரிவதாக நம்பி வேலைசெய்வதாக நினைத்துக்கொள்கிறார்கள். தாங்கள் மாபெரும் ஊழியத்தைச் செய்து வருகிறதாகவும் தேவையிலும் துன்பத்திலும் இருப்போரை கவனிக்க, அதற்காக சற்று நின்று தாமதித்து, உதவ தங்களுக்கு நேரமில்லையென்றும் எண்ணுகிறார்கள். மாபெரும் வேலையென்று உத்தேசித்துச் செய்கின்ற வேலையை முன்னேற்றுவிப்பதில் அவர்கள் ஏழைகளை ஒடுக்கவும் செய்யலாம். அப்படிப்பட்ட வேலைகளை இக்கட்டான கடினமான சூழ்நிலைகளில் வைத்து, அவர்களுக்கான உரிமைகளையும் பறித்துகொண்டு அல்லது அவர்களை அலட்சியமும் செய்யலாம். அவர்கள் தாங்கள் கிறிஸ்துவின் ஊழியத்தை முன்னேற்றுவிக்கிறோமென்று தங்களைப்பற்றி நினைத்துக்கொள்வதால், அனைத்தையும் சரியாகவே செய்வதாக எண்ணிக்கொள்கிறார்கள். (18)

அநேகர் தங்களது ஒரு சகோதரனையோ அல்லது அயலகத்தி லுள்ள ஒரு நபரையோ அவர்களது இன்னல் மிகுந்த சூழ்நிலையில் தன்னந் தனியே போராடும்படி விட்டுவிடுகிறார்கள். அவர்கள் தங்களை கிறிஸ்தவர்க ளென்று சொல்லிக்கொள்வதால், தங்களது இரக்கமற்ற சுயநலத்தின்மூலம் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறார்களென்று எண்ணும்படி வழி நடத்தப்படலாம். தேவனுடைய ஊழியக்காரர்களென்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் தங்களது ஊழியத்தில் ஆண்டவரோடு இணைந்து வேலை செய்யாததால், அவர்கள்மூலமாய் பாய்ந்துசெல்லவேண்டிய தேவ அன்பு அவனது சகமனிதர்களிடத்திற்குச் செல்லாதபடி பெருமளவில் தடைசெய்யப் பட்டுவிடுகிறது. மானிட உதடுகளிலிருந்தும் உள்ளங்களிலிருந்தும் தேவனி டத்திற்குச் செல்லவேண்டிய துதிகளும் நன்றியறிதலின் ஜெபங்களும் அவரிடத்திற்குச் செல்லாதபடி தடைசெய்யப்படுகிறது. அவரது பரிசுத்த நாமத்திற்குச் செலுத்தப்படவேண்டிய மகிமை செலுத்தப்படாமல் பறித்துக்கொள்ளப்படுகிறது. எந்த ஆத்துமாக்களுக்காக கிறிஸ்து மரித்தாரோ, எந்த ஆத்துமாக்கள் முடிவுறாத யுகங்கள் முழுவதும் தமது இராஜ்யத்தில் வாழத்தக்கதாக கொண்டுவரப்படவேண்டுமென்று ஏக்கமுடையவராக இருக்கிறாரோ, அந்த ஆத்துமாக்கள், அவரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டுவிடுகிறார்கள். (19)

தெய்வீக சத்தியம் மிகக்குறைவாகவே அதின் செல்வாக்கை உலகத்தின்மீது செலுத்தமுடிகிறது. நான் இந்தக் குறிப்பிட்ட மார்க்கத்தைச் சேர்ந்தவனென்று சொல்லிக்கொள்ளும் காரியம் வெறுமனே மிகுந்து காணப்படுகிறது. ஆனால் அதற்கு எந்தவிதமான மதிப்போ செல்வாக்கோ கிடையாது. நாம் கிறிஸ்துவின் பின்னடியார்களென்று உரிமை கோரலாம். தேவனுடைய வார்த்தையிலுள்ள ஒவ்வொரு சத்தியத்தையும் விசுவாசிக்கிறோ மென்று கூறிக்கொள்ளலாம்; ஆனால் இந்த விசுவாசம் அன்றாட வாழ்க்கைக் கான நடைமுறையில் எடுத்துச்செல்லப்படாவிட்டால், நமது அண்டை அயலகத்தாருக்கு எந்தவிதமான பயனுமில்லை. நமது சமய நம்பிக்கைபற்றி நாம் கூறும் காரியங்கள் விண்ணைப்போன்று உயர்ந்து காணப்படலாம். உண்மையிலேயே நாம் கிறிஸ்தவர்களாக இராவிட்டால், இக்காரியம் நம்மையும் இரட்சிக்காது; நமது சகமனிதர்களையும் இரட்சிக்காது. நாம் நம்மைப்பற்றியும் நமது விசுவாசத்தைப்பற்றியும் கூறும் காரியங்களைவிட, ஒரு சரியான முன்மாதிரியான வாழ்க்கை வாழ்ந்தால்தான், இந்த உலகத்திற்கு அது ஏராளமான பயன்களை வழங்கக்கூடும். (20)

எத்தகைய தன்னலமான நடவடிக்கைகளினாலும் கிறிஸ்துவின் ஊழியம் நடைபெறமுடியாது. ஒடுக்கப்பட்டவர்களுக்கும் ஏழைகளுக்குமாகச்

செய்யப்படும் ஊழியமே அவரது ஊழியம். கிறிஸ்துவின் பின்னடியார்களென்று சொல்லிக்கொள்வோரது இதயங்களிலே கிறிஸ்துவின் மென்மையான பரிவுள்ள உணர்வு தேவையாக இருக்கிறது. (அதாவது அவரது இதயங்களிலே கிறிஸ்து காட்டுவதுபோன்ற போதிய பரிவுணர்வும் இரக்கமுமில்லை). ஆத்துமாக்களை மிகவும் அதிகமாக மதித்து, அவர்களது இரட்சிப்பிற்காக தமது சொந்த ஜீவனையே கொடுக்கும் அளவிற்கு அத்தகைய ஆழ்ந்த அன்பு தேவைப்படுகிறது. இந்த ஆத்துமாக்கள் மிகவும் அருமையானவர்கள். நாம் தேவனுக்குக் கொண்டுவரும் எந்த காணிக்கையையும்விட இவர்கள் மிகமிக மேன்மையும் அருமையுமானவர்கள். தோற்றத்தில் மாபெரும் ஊழியம் போன்று தெரியும் ஊழியத்திற்காக அனைத்து சக்திகளையும் ஒருங்கிணைத்து உழைப்பதும், அதே சமயத்தில் தேவையிலிருப்போரை அலட்சியம் செய்வது அல்லது அந்நியர்களுக்கு அவர்களது உரிமைக்கேற்றதான காரியங்களைக் கொடாமல் திருப்பி அனுப்புவது ஆகியவையும் ஆண்டவரது ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவையாக இருப்பதில்லை. (21)

பரிசுத்த ஆவியானவரின் கிரியையினால் ஆத்துமா பரிசுத்தமாக்கப்படுதலே கிறிஸ்துவின் சாயலை உருவாக்குவதாகும். சுவிசேஷமார்க்கம் என்பதின் பொருள் கிறிஸ்து நமது ஜீவியத்தில் உயிரோட்டமுள்ள ஒரு கொள்கையைச் செயற்படுத்துகின்ற அடிப்படையாக இருப்பதேயாகும். அதாவது, கிறிஸ்துவின் கிருபை குணத்தில் வெளிப்பட்டு, நற்காரியங்கள் செயல்படுத்தப்பட்டிருப்பதாகும். அன்றாட நடைமுறை வாழ்க்கையின் செயல்களினின்று சுவிசேஷத்தின் கொள்கைகளை பிரிக்கமுடியாது. கிறிஸ்தவ அனுபவம் ஊழியமாகிய ஒவ்வொரு வழியிலும் கிறிஸ்துவின் ஜீவியத்தை எடுத்துக்காட்டுவதாக அமையவேண்டும். (22)

கடவுள்பற்று என்பதின் அடிப்படையே அன்புதான். எத்தகைய ஊழியமானாலும்சரி அதைச் செய்யும் நபர் அவரைப்போன்று சகமனிதனிடத்தில் தன்னலமற்ற அன்புகாட்டாவிடில், தேவனிடத்தில் தூய்மையான அன்பு செலுத்தவில்லையென்பதே அதின் பொருள். மற்றவர்களை நேசிக்க முயற்சிசெய்வதின்மூலமாக இந்த ஆவியை நாம் ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாது. இதயத்திலே கிறிஸ்துவின் அன்பு நிலைத்திருப்பதே தேவையான ஒன்றாகும். சுயம் கிறிஸ்துவிலே இரண்டறக் கலந்துவிடும்போது, அன்பின் ஊற்று இதயத்தினின்று பெருக்கெடுத்து வெளிவரும். மற்றவர்களை ஆசீர்வதிக்கவேண்டும், அவர்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்ற தூண்டுதல் உள்ளேயிருந்து தொடர்ந்து வெளிவரும்போது, பரலோக ஒளி இதயத்தை நிரப்பி, முகத்தில் வெளிப்படும்போது, கிறிஸ்தவ குணமானது நிறைவடைகின்றது அல்லது முழுமையை எட்டுகின்றது. (23)

கிறிஸ்து வாசஞ்செய்கின்ற இதயத்திலே அன்பிற்குப் பஞ்சம் இருக்கவே இருக்காது. தேவன் நம்மை முந்திநேசித்த காரணத்தினால் நாம் அவரை நேசிப்போமானால், கிறிஸ்து யாருக்காகவெல்லாம் மரித்தாரோ அவர்கள் அனைவரையும் நேசிப்போம். மானுடத்தை தொடர்புகொள்ளாமல், தெய்வீ கத்தை நாம் தொடர்புகொள்ளமுடியாது. ஏனெனில், இந்த அண்டசராசரத்தின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் அவரிலே தெய்வீகமும் மானுடமும் இணைந்தி ருக்கிறது. கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டு இருப்போமானால், அன்பெனும் பொற்சங்கிலியால் நமது உடன் மனிதர்களோடு இணைக்கப்பட்டிருப்போம். அப்பொழுது கிறிஸ்து காட்டும் பரிவும் கருணையும் நமது வாழ்வில் வெளிப் படையாகத் தெரியும். தேவையிலும் தரித்திரத்திலும் இருப்பவர்கள் நம்மிடம் கொண்டுவரப்படவேண்டுமென்று காத்துக்கொண்டிருக்கமாட்டோம். மற்றவர் களது வாழ்வின் துயரங்களை நாம் உணர்ந்துகொள்ளத்தக்கதாக நம்மை யாரும் கெஞ்சவேண்டிய அவசியமிருக்காது. கிறிஸ்து நன்மை செய்பவராக எங்கணும் சுற்றித்திரிந்தார். அதேபோன்று தேவையிலிருப்போருக்கும் இன்னல் அனுபவிப்பவர்களுக்கும் ஊழியம் செய்வது கிறிஸ்துவைப்போலவே நமக்கும் இயல்பாக அமைந்திருக்கும். (24)

எங்கெல்லாம் அன்பு, பரிவு ஆகியவைகளின் உந்துதல் உணரப்படு கிறதோ, எங்கெல்லாம் மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்கும் உயர்த்துவதற்கும் இதயம் விரைந்து செல்கிறதோ அங்கு தேவனுடைய ஆவியானவர் கிரியை செய்வது வெளிப்படையாகத் தெரியும். அஞ்ஞான இருளின் ஆழத்தில் மூழ்கியிருந்து, எழுதப்பட்ட தேவனுடைய பிரமாணத்தைப்பற்றி எந்த அறிவுமில்லாத, கிறிஸ்து என்ற பெயரைக்கூட ஒருபோதும் கேட்டிராத மக்கள் ஆண்டவரது ஊழியக்காரர்களுக்கு அன்புகாட்டி, தங்களது உயிருக்கு ஆபத்துவரக்கூடுமென்ற நிலையிலுங்கூட காப்பாற்றியிருக்கிறார்கள். ஒரு தெய்வீக வல்லமை செயல்படுவதை அவர்களது செயல்கள் காட்டுகின்றன. காட்டுமிராண்டியின் இதயத்திலும் கிறிஸ்துவின் கிருபையை நாட்டிவைத்து, அவனது இயல்பான குணத்திற்கும் அவன் பெற்றிருந்த போதனைக்கும் எதிராக, அவனது அனுதாப உணர்வுகளைத் தூண்டி எழுப்பிவிட்டிருக்கிறது. “உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற... அந்த மெய்யான ஒளி” (யோவா. 1:9) அவர்களுடைய இதயங்களைப் பிரகாசம் அடையச்செய்தது. இந்த ஒளியின்மீது கவனம்செலுத்தப்பட்டால், அது அந்த நபரை தேவனுடைய இராஜ்யத்திற்கு வழிநடத்தும். (25)

விழுந்துபோனவர்களை தூக்கியெடுத்து உயர்த்துவதிலும் துயர் அனுபவிப்பவர்களுக்கு ஆறுதல் அளிப்பதிலும்தான் பரலோகத்தின் மகிமை காணப்படுகிறது. எந்த மானிட இதயங்களிலெல்லாம் கிறிஸ்து வாசம்செய்து

கொண்டிருக்கிறாரோ அங்கு அவர்களும் இதேவழியில் வெளிப்படுவர். எங்கெல்லாம் இது கிரியை செய்கின்றதோ அங்கு கிறிஸ்துவின் மார்க்கம் ஆசீர்வதிக்கும். எங்கெல்லாம் இது கிரியை செய்கின்றதோ அங்கு பிரகாசம் நிறைந்திருக்கும். (26)

நாடு, இனம், ஜாதி ஆகியவைகளால் காணப்படும் வேறுபாடுகளை தேவன் அங்கீகரிப்பதில்லை. மனுக்குலத்தைப் படைத்தவர் அவரே. படைப்பிலே அனைத்து மனிதர்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மீட்பினால் அனைவரும் ஒன்றாக இணைகிறார்கள். பிரிக்கும் ஒவ்வொரு சுவரையும் உடைக்கவே கிறிஸ்து வந்தார். ஒவ்வொரு ஆத்துமாவிலும் நேரடியாக, தாராளமாக தேவனோடு தொடர்பு இருக்கத்தக்கதாக ஆலயத்தில் மூடப்பட்டிருந்த அனைத்து அறைகளையும் திறந்துவைக்க வந்தார். அவரது அன்பு எங்கணும் ஊடுருவிச்செல்லுமளவிற்கு மிகவும் அகலமானது, மிகவும் ஆழமானது, மிகவும் அதிகமாக நிரம்பி இருக்கக்கூடியதாக இருக்கிறது. சாத்தானின் வஞ்சகங்களால் ஏமாற்றப்பட்டு, அவனது வளையத்திற்குள் இறங்கும் நிலையிலிருக்கும் ஆத்துமாக்களை அவரது அன்பு தூக்கியெடுக்கிறது. வாக்குத்தத்தம் என்னும் வானவில்லால் சூழப்பட்டிருக்கும் அவரது சிங்காசனத்திற்கருகில் அவர்களைக் கொண்டுவந்து நிறுத்துகிறது. (27)

கிறிஸ்துவிலே யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை. (கலா. 3:28). அனைவரும் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். (எபே. 2:13). மார்க்கசம்பந்தமாக விசுவாசக் கோட்பாடுகள் எப்படிப்பட்ட வித்தியாசத்தோடு இருந்தாலும், துன்பப்படும் மானிடர்களிடமிருந்து எழுகின்ற கூக்குரல் கேட்கப்படவேண்டும். அதற்கான காரியங்கள் செய்யப்பட வேண்டும். மார்க்கசம்பந்தமான காரியங்களிலிருக்கும் வித்தியாசங்களால் கசப்பான எண்ணங்கள் எங்கு நின்றுநிலைத்திருக்கிறதோ அங்கு தனிப்பட்ட சேவையின் மூலமாக ஏராளமான நன்மைகள் செய்யப்படலாம். அன்பின் ஊழியத்தால் தப்பெண்ணங்கள் உடைத்தெறியப்பட்டு, தேவனுக்காக ஆத்துமாக்கள் ஆதாயம்செய்யப்படலாம். (28)

மற்றவர்கள் அனுபவிக்கின்ற துன்பங்கள், துயரங்கள், பிரச்சனைகள் ஆகியவைகளை எதிர்பார்த்து (உதவவேண்டுமென்ற நோக்கத்தோடு) காத்திருக்க வேண்டும். உயர்ந்தவர்களானாலும் தாழ்ந்தவர்களானாலும் ஏழையானாலும் செல்வந்தனானாலும் அவர்களது இன்பதுன்பங்களில் நாம் பங்கெடுக்க வேண்டும். “இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்” (மத்தேயு 10:8) என்று கிறிஸ்து கூறுகிறார். நம்மைச்

சுற்றிலும், நமது பரிவுள்ள வார்த்தைகளும் உதவும் கரங்களும் தேவைப்படுகின்ற அநேக எளிய—இன்னல் அனுபவிக்கின்ற ஆத்துமாக்கள் இருக்கிறார்கள். ஆறுதலுடன் உதவியையும் கொடுக்கவேண்டிய அநேக விதவைகள் இருக்கின்றார்கள். இயேசுவின் பின்னடியார்கள் தாங்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளத்தக்க அடைக்கலப் பொருளைப்போன்று ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய அநாதைப் பிள்ளைகள் இருக்கிறார்கள்; பெரும்பாலும் அலட்சியத்தோடு நாம் கடந்து சென்றுகொண்டிருக்கிறோம். அவர்கள் கந்தையுடுத்திய நிலையில், கரடுமுரடாகவும் எந்த வழியிலும் கவர்ச்சியற்றவர்களாகவும் பார்வைக்குக் காணப்படலாம். எனினும், அவர்கள் தேவனுடைய உடைமையாக இருக்கிறார்கள். அவர்களும் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நம்மைப்போல அவர்களும் தேவனுடைய பார்வையிலே மிகவும் அருமையானவர்களாக இருக்கிறார்கள். அவரது உக்கிராணக்காரர்களாக இருக்கும் கிறிஸ்தவர்கள் அவர்களுக்குப் பொறுப்பாளியாக இருக்கிறார்கள். அவர்களுடைய ஆத்துமாக்களை உன் கையில் கேட்பேன் என்று இயேசு கூறுகிறார். (29)

பாவமே அனைத்துத் தீமைகளிலும் மிகவும் கடுமையானது. பாவிக்கு உதவிசெய்யவேண்டியது நமது கடமையாகும். ஆனால் எல்லோரையும் இதேவழியில் நாம் எட்டிவிடமுடியாது. ஆத்துமப் பசியை மறைத்துக்கொண்டிருக்கும் அநேகர் இருக்கிறார்கள். இவர்களுக்கு மென்மையான வார்த்தைகளும் அன்புடன் அவர்களை நினைவுகூருவதும் அதிகமாக உதவி செய்யும். மிகப்பெரும் தேவையிலிருக்கும் மக்களும் இருக்கிறார்கள். எனினும் அதைக்குறித்து அறியாதிருக்கிறார்கள். ஆத்துமாவின் பயங்கர தரித்திரநிலையை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்கிறதில்லை. திரளான மக்கள் பாவத்தில் மிகவும் அதிகமாக மூழ்கியிருக்கிறார்கள். நித்தியத்தின் மேன்மையான நிலைபற்றிய உணர்வை அவர்கள் இழந்துவிட்டார்கள். தேவனைப்போன்ற தன்மையையும் இழந்துவிட்டார்கள். தாங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமா—வேண்டாமா என்பதை அவர்களால் சரியாக அறிந்துகொள்ள இயலவில்லை. அவர்களுக்கு தேவனிடத்தில் விசுவாசம் கிடையாது. மனிதனிடத்திலும் நம்பிக்கை இல்லை. தன்னலமற்ற இரக்கத்தின் செயல்களால் மாத்திரமே இப்படிப்பட்ட அநேகருக்கருகில் நெருங்கிவர முடியும். இவர்களது உடல்சம்பந்தமான தேவைகள் முதலில் சந்திக்கப்பட வேண்டும். அவர்கள் சரீரங்களை சுத்தப்படுத்தி, உணவுகொடுத்து, நல்ல உடையைக்கொடுங்கள். உங்களது தன்னலமற்ற அன்பிற்கான ஆதாரத்தை அவர்கள் உங்களில் காணும்போது, கிறிஸ்துவின் அன்பை விசுவாசிப்பது அவர்களுக்கு எளிதாக இருக்கும். (30)

அநேகர் தவறுசெய்கிறார்கள். தங்களது வெட்கக்கேடான காரியங்களையும் மதியீனத்தையும் உணருகிறார்கள். ஏறக்குறைய நம்பிக்கையற்ற நிலைக்குத் தள்ளப்படும்வரை தங்களது தவறுகளையும் பிழைகளையும் நோக்கிப்பார்க்கிறார்கள். இத்தகைய ஆத்துமாக்களை நாம் அலட்சியம் செய்யக்கூடாது. ஆற்று நீரில் ஒருவர் எதிர்நீச்சலடித்துக்கொண்டிருக்கும் போது, நீரோட்டத்தின் அனைத்து பலமும் அவரை பின்னுக்குத் தள்ளுகிறது. மூழ்கிக்கொண்டிருந்த பேதுருவிற்கு மூத்த சகோதரனின் (கிறிஸ்து) கரம் நீட்டப்பட்டதுபோன்று, இவருக்கும் உதவிக்கரம் நீட்டப்படட்டும். அவருடன் நம்பிக்கையூட்டும் வார்த்தைகளைப் பேசுங்கள். நம்பிக்கையை அவர்களில் நிலைப்படுத்தி, அன்பை விழிப்படையச் செய்யுங்கள். உங்களுக்கு ஒரு சகோதரனின் அன்பு எப்படித் தேவையாக இருந்ததோ அதுபோன்று தனது குணத்திலே வியாதிப்பட்டுக்கிடக்கிற உன் சகோதரனுக்கு நீங்கள் தேவை. முன்பு தன்னைப்போல பெலவீனமாயிருந்த சகோதரனின் அனுபவமும் பரிவுகாட்டி உதவிசெய்கின்ற நபரும் அவருக்குத் தேவை. நமது சொந்த பெலவீனத்தைக்குறித்த அறிவு, வேறு ஒருவர் கசப்பான அனுபவத்தைக் கடந்துசெல்லும்போது, அவருக்கு உதவிக்கரம் நீட்டுவதுபோன்று தேவையாக இருக்கிறது. நாம் எதைக்கொண்டு தேவனால் தேற்றப்படுகிறோமோ அதே தேறுதலை துன்பத்திலிருக்கும் ஆத்துமாவிற்கும் பகிர்ந்தளிக்க வகைதேடாமல், ஒருபோதும் நாம் அவரைக் கடந்துசெல்லக்கூடாது. (31)

கிறிஸ்துவோடு நாம் கொள்ளும் தோழமையே—ஜீவனுள்ள மீட்பருடன் நாம் கொள்ளும் தனிப்பட்ட உறவே, கீழ்த்தரமான இயல்பின்மீது வெற்றியடைய மனதையும் இதயத்தையும் ஆத்துமாவையும் பெலப்படுத்துகிறது. சர்வவல்லவரது கரம் ஒன்று தாங்கிப்பிடிக்க இருக்கிறதென்றும், கிறிஸ்துவிலிருக்கும் முழுமையான மானுடம் பரிவுகாட்டுகிறதென்றும், திரிந்து அலைந்துகொண்டிருக்கும் அந்த நபருக்குச் சொல்லுங்கள். இரக்கமில்லாத, உதவிக்கான கூக்குரலைக் கேட்கமாட்டாத சட்டங்களையும் வல்லமைகளையும் நம்புவது போதாது. பற்றிக்கொள்ள ஏற்கும் தன்மையுள்ள கரம் அவனுக்குத் தேவை; நம்புவதற்கு இரக்கம் நிறைந்த இதயம் அவனுக்கு அவசியம். எப்பொழுதும் அவனுக்கு அருகில் இருக்கிற, எப்போதும் இரக்கத்தோடு அவனைப் பார்த்துக்கொண்டிருக்கிற தெய்வீகப் பிரசன்னத்தைக்குறித்த சிந்தனையில் அவன் மனதைச் செலுத்தவேண்டியது அவசியம். பாவத்தைக் கண்டு எப்பொழுதும் துக்கமடைகிற ஒரு தகப்பனின் இதயத்தை, இன்னும் அவனிடம் நீட்டப்பட்டிருக்கிற ஒரு தகப்பனின் கரத்தை, "அவன் என் பெலனைப் பற்றிக்கொண்டு என்னோடே ஒப்புரவாகட்டும்; அவன் என்னோடே ஒப்புரவாவான்" (ஏசாயா 27:5) என்று சொல்லுகிற ஒரு தகப்பனின் குரலை நினைத்துப்பார்க்க அவனை அழையுங்கள். (32)

இந்த வேலையைச் செய்யும்போது, மானிடக் கண்களால் காணக் கூடாத உதவியாளர்கள் (தூதர்கள்) உங்களோடிருக்கிறார்கள். காயப்பட்ட அந்நியனை பராமரித்த சமாரியனுக்கருகில் பரலோகத்தின் தூதர்கள் இருந் தார்கள். யாரெல்லாம் தங்களது உடன் மனிதர்களுக்கு சேவைசெய்வதின் மூலம் தேவனுடைய ஊழியத்தைச் செய்கிறார்களோ, அவர்கள் அனைவ ருக்கும் அருகில் பரலோக மன்றங்களில் உள்ள தூதர்கள் நிற்கிறார்கள். கிறிஸ்துதாமே உங்களுக்கு தமது ஒத்துழைப்பைக் கொடுக்கிறார். அவரே மீட்டளிக்கிறவராக இருக்கிறார். அவரது மேற்பார்வைக்கடியில் நீங்கள் ஊழியஞ்செய்யும்போது மாபெரும் பயன்களைக் காணமுடியும். (33)

தேவனுடைய இந்த ஊழியத்திலே எவ்வளவு உண்மையும் உத்தம முமாக இருக்கிறீர்களோ அதைப்பொறுத்துதான் மற்றவர்களது நல்வாழ்வு அமையும். உங்களது நித்தியவாழ்வும் அதையே சார்ந்திருக்கிறது. கிறிஸ்து பிதாவோடு ஒன்றாக இருப்பதுபோன்று நாமும் அவரோடு ஒன்றாக இருக்கத்தக்கதாக அவரோடு தோழமைகொள்ள விரும்பும் யாவ ரையும் உயர்த்தும்படி கிறிஸ்து வகைதேடிக்கொண்டிருக்கிறார். நமது தன்னலத் தினின்று நம்மை வெளியே அழைக்கும்படி, பேரிடர்களையும் துன்பங்களையும் சந்திக்க நம்மை அனுமதிக்கின்றார். கருணை, மென்மையோடுகூடிய பரிவு, அன்பு ஆகிய அவரது குணத்தின் தன்மைகள் நம்மிலே பெருகும்படி விரும்புகிறார். இத்தகைய ஊழியத்தை ஏற்றுக்கொள்வதினால் அவரது பள்ளியில் நம்மை வைக்கிறோம். அதின்மூலமாக தேவனுடைய பரலோக மன்றங்களுக்குச் செல்வதற்கு தகுதிப்படுத்தப்படுகிறோம். இதைப் புறக் கணிக்கும்போது, அவரது போதனையைப் புறக்கணிக்கிறோம். அவர் சமூகத் தினின்று நித்தியத்திற்கும் விலக்கப்படுவதைத் தெரிந்துகொள்கிறோம். (34)

“நீ ...என் காவலைக் காத்தால், இங்கே நிற்கிறவர்களுக்குள்ளே உலாவுகிறதற்கு இடம் நான் உனக்குக் கட்டளையிடுவேன்” (சகரியா 3:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். பரலோகத் தூதர்களோடு இணைந்து இவ்வுலகில் வேலைசெய்யும்போது, பரலோகத்தில் அவர்களது தோழமையைப் பெற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறோம். “இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு” (எபிரெயர் 1:14) அனுப்பப்பட்ட பணிவிடையின் ஆவிகளாயிருக்கிற தேவதூதர்கள் “ஊழியங்கொள்ள வராமல், ஊழியஞ்செய்ய வந்தவர்களாக” (மத்தேயு 20:28) பூமியில் வாழ்ந்த அனைவரையும் வரவேற்பார்கள். இத்தகைய ஆசீர்வாதமான தோழமையின் கூட்டுறவிலே, “எனக்குப் பிறன் யார்?” என்ற கேள்வியிலே பொதிந்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்தையும் நித்திய மகிழ்ச்சிக்கேதுவாக நாம் கற்றுக்கொள்வோம். (35) ★

# 28

# கிருபையின் பரிசு!

**(மூலநூல் : பக்கங்கள் 390–404)**

**மத்தேயு 19:16–30, 20:1–16; மாற்கு 10:17–31; லூக்கா 18:18–30**

தேவன் வழங்கும் இலவசமான கிருபையென்ற சத்தியம் ஏறக்குறைய யூதர்களால் முற்றிலுமாக மறக்கப்பட்டுப்போய்விட்டது. தேவனுடைய ஆதரவை முயற்சிசெய்து சம்பாதித்துக்கொள்ளவேண்டுமென்று யூத இனப் போதகர்கள் கற்றுக்கொடுத்தார்கள். நீதிமான்களுக்கான வெகுமதியைத் தங்களது சுய கிரியைகளினாலே பெற்றுக்கொள்ளலாம் என்று அவர்கள் நம்பினார்கள். எனவே, பேராவலோடு கைப்பற்றிக்கொள்கின்ற—பணத்தையே நாடுகின்ற ஆவியினால் உந்தப்பட்ட நிலையில் அவர்களது தொழுகை அமைந்திருந்தது. இத்தகைய குணத்தினின்று கிறிஸ்துவின் சீடர்களும்கூட முற்றிலுமாக விடுபட்டிருக்கவில்லை. மீட்பர் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தேடிக் கண்டுபிடித்து, அவர்களது தவறுகளை அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். வேலைசெய்பவர்களைப்பற்றிய உவமையைக் கூறுவதற்குச் சற்றுமுன்னர் நிகழ்ந்த ஒரு சம்பவம் சரியான கொள்கைகளை அவர்கள் முன்வைப்பதற்கு ஏற்ற வழியை அவருக்குத் திறந்து கொடுத்தது. (1)

அவர் வழியிலே நடந்துசெல்லும்போது, ஒரு வாலிபன் ஓடிவந்து பயபக்தியோடு அவர்முன் முழங்கால்படியிட்டு: “நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும்?” என்று கேட்டான். (2)

அந்த வாலிபன் வெறுமனே மதிப்புவாய்ந்த போதகரென்று மாத்திரம் கிறிஸ்துவைப்பற்றி எண்ணியவனாக, அவரிலே தேவகுமாரன் இருப்பதை விளங்கிக்கொள்ளாமல், மேற்கூறப்பட்டவாறு கிறிஸ்துவை அழைத்தான். மீட்பர் அவனை நோக்கி: “நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர்தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே” என்றார். எந்த காரணத்தின்பேரில் நீ என்னை நல்லவனென்று கூறுகிறாய்? தேவன் ஒருவரே நல்லவர். நீ என்னை அப்படிப்பட்டவராகக் காண்பாயானால், அவருடைய குமாரனாகவும் பிரதிநிதியாகவும் என்னை ஏற்றுக்கொள்ளவேண்டும். (3)

"நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள்" என்றார். தேவனுடைய குணம் அவரது பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனோடு இசைந்திருக்கவேண்டுமானால் அவரது பிரமாணத்தின் கொள்கைகள் உங்களது ஒவ்வொரு செயலுக்கும் இயக்குவிசையாக இருக்கவேண்டும். (4)

பிரமாணத்தின் கோரிக்கைகளை கிறிஸ்து குறைத்து மதிப்பீடுசெய்கிற தில்லை. எவ்விதத்திலும் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாத அளவிற்கு பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதே நித்தியவாழ்விற்கு கொண்டுசெல்லும் நிபந்தனையாக இருக்கிறதென்ற விளக்கத்தை முன்வைத்தார். இதே நிபந்தனையே விழுகைக்குமுன்பாக ஆதாமிடமும் கோரப்பட்டது. விழுகைக்குமுன் பாவமில்லாத ஏதேனில் ஆண்டவர் மனிதனிடத்தில் எதிர்பார்த்த பூரண கீழ்ப்படிதலையும் கறைபடியாத நீதியையும் கொஞ்சமும் குறையாமல் இன்றும் எதிர்பார்க்கிறார். பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிற தேவப்பிரமாணத்தோடு இசைந்திருக்க வேண்டுமென்று ஏதேனில் வேண்டப்பட்ட அதே விஸ்தாரத்தில் (அளவில்) கிருபையின் உடன்படிக்கைக்குக்கீழ் வேண்டப்படுவதும் இருக்கிறது. (5)

"கற்பனைகளைக் கைக்கொள்" என்று கிறிஸ்து கூறியபோது, "எவைகளை" என்று அந்த வாலிபன் கேட்டான். ஏதோ சடங்காச்சாரக் கொள்கைபற்றியே கூறப்படுகிறதென்று அவன் உத்தேசித்தான். ஆனால் கிறிஸ்து சீனாய் மலையினின்று கொடுக்கப்பட்ட பிரமாணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அவர் பத்து பிரமாணங்களிலுள்ள இரண்டாவது கற்பலகையிலிருந்துவரும் கற்பனைகளைக் குறிப்பிட்டு அனைத்துக் கட்டளைகளையும் ஒரே கட்டளையாகிய "உன்னைப்போல் பிறனையும் நேசி" என்ற தொகுப்பில் வைத்தார். (6)

அப்பொழுது அந்த வாலிபன் தயக்கமின்றி அவரை நோக்கி: "இவை களையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன். இன்னும் என்னிடத்தில் என்ன குறை உண்டு" என்றான். பிரமாணத்தைப்பற்றி அந்த வாலிபன் கூறிய கருத்து புறம்பான செயல் சார்ந்ததாயும் ஆழமற்றதாயும் இருந்தது. மானிட படித்தரத்தின்படி, பிழையற்ற ஒரு குணத்தை அவன் பாதுகாத்திருந்தான். பெருமளவிற்கு அவன் வெளிப்புற வாழ்க்கை குற்றமற்றதாக இருந்தது. அவனது கீழ்ப்படிதல் குறையற்றிருந்ததாக அவன் உண்மையிலேயே நினைத்தான். என்றாலும் தேவனுக்கும் அவனது ஆத்துமாவுக்குமிடையில் எல்லாமே சரியாக இல்லை என்ற ஒரு அந்தரங்க பயம் அவனுக்கிருந்தது. இந்த பயம் "இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன" என்று கேட்கும்படி அவனைத் தூண்டியது. (7)

கிறிஸ்து அவனை நோக்கி: "நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்." (8)

சுயத்தை நேசிப்பவர் பிரமாணத்தை மீறுபவராக இருக்கிறார். இதை அவர் அந்த வாலிபனுக்கு விளக்கிக்காட்ட விரும்பினார். அவனது இதயத்தின் தன்னலத்தை வெளிப்படுத்திக் காட்டத்தக்கதான ஒரு பரீட்சையை அவனுக்குமுன் வைத்தார். அவனது குணத்திலுள்ள கேடடைந்த பகுதியை அவனுக்குக் காட்டினார், இதைவிட இன்னும் அதிகமாக அறிவுறுத்தப்படுவது தேவையில்லாமல் போயிற்று. அவனது ஆத்துமாவில் அவன் ஒரு விக்கிரகத்தைப் பேணி சீராட்டி வைத்திருந்தான். உலகம் அவனுக்குத் தேவனாக இருந்தது. பத்துக்கட்டளைகளையும் கைக்கொள்வதாக அவன் கூறிக்கொண்டிருந்தான். ஆனால் அந்த பத்துக்கட்டளைகளுக்கும் ஜீவனாகவும் ஆவியாகவும் இருந்த அந்த முக்கிய கொள்கையின்றி அவன் வாழ்ந்துவந்தான். தேவனிடத்திலோ மனிதனிடத்திலோ உண்மையான அன்பு இல்லாதவனாயிருந்தான். ஆனால் அதுதான் பரலோக இராஜ்யத்திற்குச் செல்ல அவனுக்குத் தேவையான தகுதியாக இருந்தது. சுயத்தின்மேலும் உலக ஆதாயத்தின்மேலும் கொண்டிருந்த நேசம் பரலோகத்தின் கொள்கைகளுக்கு அவன் இசைவாக இல்லை என்பதைக் காட்டியது. (9)

இந்த வாலிபன் இயேசுவண்டை வந்தபோது, அவனது நேர்மையும் உற்சாகம் நிறைந்த ஊக்கமும் மீட்பரின் இதயத்தைக் கவர்ந்தது. இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்தார். இந்த வாலிபனில் நீதியை பிரசங்கிப்பவராக ஊழியஞ்செய்யக்கூடிய ஒருவனை அவர் கண்டார். ஆண்டவர் தம்மைப் பின்பற்றிவந்த ஏழை மீனவர்களை எப்படி உடனே ஏற்றுக்கொண்டாரோ அப்படியே இந்த மேன்மையான தாலந்துகள் உள்ள வாலிபனையும் ஏற்றுக்கொண்டிருந்திருப்பார். இந்த வாலிபன் தனது திறமையை ஆத்தும ஆதாய ஊழியத்திற்காக ஒப்படைத்திருந்திருப்பானானால், அவன் கிறிஸ்துவிற்காகக் கடுமையாக உழைக்கின்ற வெற்றியுள்ள ஊழியக்காரனாக மாறி வாழ்ந்திருப்பான். (10)

ஆனால் முதலாவது அவன் சீடத்துவத்திற்கான நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டாக வேண்டும். தேவனுக்கு தட்டுத்தடங்கலின்றி தன்னை முற்றிலுமாக ஒப்புக்கொடுத்தாகவேண்டும். மீட்பர் அழைத்ததும் யோவான், பேதுரு, மத்தேயு மற்றும் அவரது தோழர்கள் "எல்லாவற்றையும் விட்டு,

எழுந்து அவருக்குப் பின்சென்றார்கள்" (லூக்கா 5:28). இந்த பணக்கார வாலிபனிடமும் அதேவிதமான அர்ப்பணிப்பு எதிர்பார்க்கப்பட்டது. இந்தக் காரியத்தில் தாம் செய்த தியாகத்தைவிட மேலான எந்த தியாகத்தையும் கிறிஸ்து கேட்கவில்லை. "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே"–2 கொரி. 8:9. கிறிஸ்து நடந்த வழியைப் பின்பற்றுவதுதான் இந்த வாலிபன் செய்யவேண்டியதாக இருந்தது. (11)

கிறிஸ்து அந்த வாலிபனை நோக்கிப்பார்த்து, அவனது ஆத்துமா விற்காக ஏங்கினார். மனிதருக்கு ஆசீர்வாதத்தை வழங்கும் ஒரு தூதுவனாக அவனை அனுப்பவேண்டுமென்று அவர் வாஞ்சித்தார். தன்னை அர்ப்பணிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்ட அந்த இடத்திலேயே கிறிஸ்து அவனோடு தோழமைகொள்ளும் சிறப்புரிமையை அவனுக்கு வழங்கினார். "என்னைப் பின்பற்றி வா" என்று அவர் அவனுக்கு அழைப்பு விடுத்தார். அவர் வழங்கிய இந்தச் சிறப்புரிமை பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரால் ஒரு மகிழ்ச்சியான அனுபவமாகக் கருதப்பட்டது. அந்த வாலிபனும் கிறிஸ்துவை வியப்புடனும் மகிழ்ச்சியுடனும் நோக்கிப்பார்த்தான். அவனது இதயம் மீட்பர்பால் கவர்ந்திழுக்கப்பட்டது. ஆனால் தன்னை தியாகம் செய்யவேண்டுமென்று மீட்பர் கூறிய கொள்கையை ஏற்றுக்கொள்ள அவன் ஆயத்தமாயிருக்கவில்லை. இயேசுவிற்குப் பதிலாக தனது ஐசுவரியத்தைத் தெரிந்துகொண்டான். அவன் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ள விரும்பி னான். உண்மையிலேயே ஜீவனாக இருக்கின்ற அந்த தன்னலமற்ற அன்பை தனது ஆத்துமாவிற்குள் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. ஒரு துக்கமுள்ள இதயத்தோடு அவன் இயேசுவைவிட்டுப் பிரிந்துசென்றான். (12)

அந்த வாலிபன் அவரைவிட்டுச் சென்றபிறகு, "ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று" தமது சீடர்களிடத்தில் இயேசு கூறினார். இந்த வார்த்தைகளைக் கேட்ட சீடர்கள் திகைத்தனர். செல்வந்தர்கள் பரலோகத்தால் விரும்பப்படத்தக்கவர்களாக இருப்பதாக அவர்கள் போதிக்கப்பட்டிருந்தனர். மேசியாவின் இராஜ்யத்திலே இந்த உலகியல் சார்ந்த அதிகாரங்களையும் ஐஸ்வரியங்களையும் தாங்கள் பெற்றுக்கொள்ளப்போவதாக நம்பிக்கை கொண்டிருந்தனர். செல்வந்தர்களே பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கக்கூடாமல் போய்விட்டால் மற்றவர் களுக்கு என்ன நம்பிக்கை இருக்கிறதென்ற கேள்வி அவர்கள் உள்ளத்தில் எழுந்தது. (13)

"இயேசு பின்னும் அவர்களை நோக்கி: பிள்ளைகளே, ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்

கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது! ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" என்றார். அப்பொழுது சீடர்கள் மேலும் அதிகமாக ஆச்சரியப்பட்டார்கள். இந்த பக்திவிநயமான எச்சரிக்கையில் தாங்களும் சேர்க்கப்பட்டுள்ளோம் என்பதை அவர்கள் நன்றாக உணர்ந்தார்கள். அதிகாரத்தின்மீதும் ஆஸ்திகளின்மீதும் அவர்களிடமிருந்த இரகசிய வாஞ்சை இரட்சகரின் வார்த்தைகளின்மூலம் வெளிப்படுத்தப்பட்டது. அவர்கள் சந்தேகத்துடன் தங்களைப்பற்றியே சந்தேக உணர்வோடு: "அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடும்?" என்று ஆச்சரியப்பட்டார்கள். (14)

"இயேசு அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான், தேவனால் இதுகூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும்" என்றார். (15)

ஒரு செல்வந்தன் இத்தகைய நிலையில் பரலோகத்திற்குள் பிரவேசிக்க இயலாது. ஒளியின் நாட்டிலே அந்த பரிசுத்தவான்களின் சுதந்தரத்திலே இந்த உலகத்திலே அவன் பெற்றிருக்கும் செல்வம் எந்த உரிமையையும் அவனுக்கு வழங்காது. தகுதியற்றவர்களுக்கு கிறிஸ்து வழங்கும் கிருபையினால் மாத்திரமே எந்த மனிதனும் தேவ பட்டணத்திற்குள் நுழையும் உரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும். (16)

"நீங்கள் உங்களுடையவர்களல்ல; கிரயத்திற்குக் கொள்ளப்பட்டிருக்கிறீர்கள்" (1 கொரி. 6:19,20) என்ற பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகள் ஏழைகளுக்கு மட்டுமல்லாது எவ்வளவும் குறையாதவிதத்தில் பணக்காரருக்கும் பொருந்தும். மனிதர் இதை விசுவாசிப்பார்களேயானால், தொலைந்துபோனவர்களை இரட்சிப்பதற்கும், ஏழைகளையும் துன்பப்படுபவர்களை ஆறுதற்படுத்துவதற்கும், தேவன் நடத்துவதுபோல உபயோகமாகும்படி அவர்களது உடைமைகள் பொதுசொத்தாகக் கருதப்படும். மனிதனால் இது கூடாது; ஏனெனில் அவனது இதயம் இவ்வுலகத்தின் பொக்கிஷத்தைப் பற்றிப்பிடித்துக்கொண்டிருக்கிறது. உலகப்பிரகாரமான சேவையில் ஒரு நபரின் ஆத்துமா கட்டப்பட்டிருக்குமானால், மானிடத் தேவையின் கூக்குரல் அவர் செவியில் விழுவதில்லை. ஆனால் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை; கிறிஸ்துவின் ஈடு இணையற்ற அன்பைப் பார்ப்பதின்மூலம் தன்னலமுள்ள இதயம் உருகி அடங்கிவிடுகிறது. பரிசேயனாகிய சவுலைப்போல (பவுலார்) "ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" (பிலிப்பியர் 3:7,8) என்று அந்தப் பணக்கார வாலிபனும் கூறும்படி வழிநடத்தப்படுவான்.

பின்பு அவர்கள் எதையும் தங்களுக்குச் சொந்தமானதென்று எண்ணமாட் டார்கள். தேவனுடைய பலவகையான கிருபைகளுக்கும் உக்கிராணக்காரர் களாக தாங்கள் இருக்கிறோம் என்றும், அவருக்காக அனைத்து மனிதர்க ளுக்கும் தாங்கள் ஊழியக்காரர்களாக இருக்கிறோம் என்றும் எண்ணுவதில் மகிழ்ச்சியடைவார்கள். (17)

மீட்பரின் வார்த்தைகளால் உருவாக்கப்பட்ட இரகசிய எண்ணத் தினால், புது நம்பிக்கையோடு முதன்முதலாக கருத்தை வெளிட்டவர் பேதுருவே. பேதுருவும் அவனது சகோதரர்களும் (உடனிருக்கும் சீடர் களும்) கிறிஸ்துவிற்காக எதையெல்லாம் விட்டுவிட்டார்களோ அக்காரியங் களை மனநிறைவோடு பேதுரு நினைத்துக்கொண்டார். பேதுரு ஆண்டவரை நோக்கி: "நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின் பற்றினோமே" என்றான். அந்தப் பணக்கார வாலிபனுக்கு நிபந்தனையோடு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை நினைத்தவனாய் தானும் தனது தோழர்களும் தாங்கள் செய்த தியாகங்களுக்காக எத்தகைய வெகுமதியைப் பெற்றுக்கொள்வார்களென்று பேதுரு இப்பொழுது ஆண்டவரைக் கேட்டான். (18)

மீட்பரின் பதில் அந்த கலிலேயரின் இதயத்தில் எழுச்சியூட்டியது. அவர்களது மிக உயர்ந்த கனவுகளை நிறைவேற்றிய மேன்மைகளை அது படம்பிடித்துக் காட்டியது. "மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்க ளையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளை யாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளு வான்" என்றார். (19)

ஆனால் "எங்களுக்கு என்ன கிடைக்கும்?" என்ற பேதுருவின் கேள்வி வெளிப்படுத்திய அவனது குணம் திருத்தப்படாவிட்டால், அது கிறிஸ்துவின் தூதுவர்களாக இருப்பதற்கு சீடர்களைத் தகுதியற்றவர்களாக்கி விடும்; ஏனெனில் அது கூலிக்காரனது குணமாகக் காணப்படும். சீடர்கள் இயேசுவின் அன்பினால் கவர்ந்திழுக்கப்பட்டிருந்தார்கள். எனினும் பரிசேயத்துவத்தினின்று முற்றிலுமாக விடுதலை பெறவில்லை. தங்களது உழைப்பிற்கு ஏற்ற விகிதத்தில் தகுதியான வெகுமதியைப் பெற்றுக்கொள்ள

வேண்டுமென்ற குணத்தை அவர்கள் பேணி வளர்த்துவந்தனர். அவர்களில் யாராவது ஒரு சீடன் தவறும்போது மற்ற அனைவரும் தாங்கள் அவனைவிட மேம்பட்டவர்களென்ற எண்ணத்தில் திளைத்தார்கள். (20)

சுவிசேஷத்தின் கொள்கைகள்பற்றிய காரியத்தில் சீடர்கள் அக்கரை யற்றவர்களாகிவிடக்கூடாது என்பதற்காகவே கிறிஸ்து ஒரு உவமையை எடுத்துக் கூறினார். அந்த உவமையில், தேவன் தமது ஊழியக்காரனிடம் எப்படிப்பட்ட தன்மையுடன் நடந்துகொள்கிறார் என்றும், அவர்கள் எத்தகைய ஆவியோடு அவருக்காக உழைக்க வேண்டுமென்று விரும்புகிறாரென்றும் விளக்கிக் காட்டினார். (21)

“பரலோகராஜ்யம் வீட்டெஜமானாகிய ஒரு மனுஷனுக்கு ஒப்பா யிருக்கிறது: அவன் தன் திராட்சத்தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்பட்டான்” என்றார். வேலைதேடுவோர் சந்தைவெளிகளில் நின்றுகொண்டிருப்பதும், எஜமானர்கள் வேலைக்காக அங்கு ஆட்களை தேடிச்செல்வதும் வழக்கமாக இருந்தது. உவமையில் கூறப்பட்டுள்ள மனிதன் வேலைக்கு ஆட்களை கண்டுபிடித்து கொண்டு வரத்தக்கதாக வித்தியாசமான மணிநேரங்களில் போய்—வந்ததாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறான். விடியற்காலையிலே வேலைக்காக கூலி ஒப்பந்தம் செய்துகொண்டவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு சம்மதித் தார்கள். பின்பு வேலைக்கு வந்தவர்கள் தங்களுக்கு வரவேண்டிய கூலியை எஜமானனின் விருப்பத்திற்கு விட்டுவிட்டார்கள். (22)

“சாயங்காலத்தில், திராட்சத்தோட்டத்துக்கு வந்த எஜமான் தன் காரியக்காரனை நோக்கி: நீ வேலையாட்களை அழைத்து, பிந்திவந்த வர்கள் தொடங்கி முந்திவந்தவர்கள்வரைக்கும் அவர்களுக்குக் கூலி கொடு என்றான். அப்பொழுது பதினோராம்மணி வேளையில் வேலையமர்த்தப் பட்டவர்கள் வந்து ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். முந்தி அமர்த்தப்பட்டவர்கள் வந்து, தங்களுக்கு அதிகக் கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள், அவர்களும் ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள்.” (23)

தனது திராட்சைத்தோட்டத்தில் வேலைசெய்தவர்களிடம் வீட்டெஜ மான் நடந்துகொண்டவிதம் தேவன் மானிடக் குடும்பத்தோடு எப்படி நடந்துகொள்கிறாரென்பதையே சுட்டிக்காட்டுகிறது. மனிதரிடையே நிலவு கின்ற பழக்கத்திற்கு மாறாக இது இருக்கிறது. உலகப்பிரகாரமான அலுவல்களிலே, நிறைவேற்றப்பட்ட வேலைக்குத்தக்கதாக ஊதியம் வழங்கப்படுகிறது. உழைப்பவர் தான் செய்த வேலைக்குச் சரியாக

கூலிகொடுக்கப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். உவமையிலே கிறிஸ்து இந்த உலகத்தைச் சாராத தமது இராஜ்யத்தின் கொள்கைகளை விளக்கிக்காட்டுகிறார். மானிடப் படித்தரத்தின்படி அவர் தம்மை கட்டுப்படுத்திக் கொண்டிருக்கவில்லை. "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" (ஏசாயா 55:8,9) என்று ஆண்டவர் கூறுகிறார். (24)

இந்த உவமையிலே முதலில் வந்த வேலையாட்கள் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு வேலைசெய்வதாக ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள். அதே தொகையை பெற்றுக்கொண்டார்கள். அதிகமாக எதையும் பெற்றுக்கொள்ள வில்லை. பின்னர் வேலைக்கு அமர்த்திக்கொள்ளப்பட்டவர்கள் தங்களது எஜமானின் வாக்கை நம்பினார்கள். "நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேன்" என்ற வீட்டெஜமானனின் வாக்குத்தத்தத்தை நம்பி பணியில் சேர்ந்தார்கள். தங்களது சம்பளம்குறித்து எந்தக் கேள்வியும் கேட்காமல் எஜமான்மீது நம்பிக்கைவைத்திருந்ததைக் காட்டினார்கள். எஜமானனின் நீதியிலும் நேர்மையிலும் நம்பிக்கைவைத்திருந்தார்கள். அவர்கள் எவ்வளவு வேலைசெய்தார்களென்பதற்கு ஏற்றார்போலன்றி, எஜமானனின் தாராள நோக்கத்திற்கு ஏற்றபடி ஊதியத்தைப் பெற்றுக்கொண்டார்கள். எனவே, அவபக்தி உள்ளவர்களையும் நியாயந்தீர்க்கும் தேவன் நாம் அவரை உறுதியாக நம்பவேண்டுமென்று வாஞ்சிக்கிறார். நமது தகுதிக்கேற்றபடி அவர் நமக்கு வெகுமதி கொடுக்காமல் "தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே" தமது சொந்த நோக்கத்தின்படி வழங்குகிறார் (எபே. 3:9). "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின் படியே... நம்மை இரட்சித்தார்" (தீத்து 3:5). "நாம் வேண்டிக்கொள்ளுகிற தற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்" (எபேசியர் 3:20) அவர் தம்மீது நம்பிக்கை வைக்கிறவர்களுக்கு வழங்குவார். (25)

எவ்வளவு வேலை செய்திருக்கிறோமென்பதின்படியல்ல அல்லது அதினால் ஏற்படும் விளைவுகளை நேரடியாக காண்பதைப் பொறுத்தல்ல. எத்தகைய ஆவியோடு வேலைசெய்கிறோமென்பதே அதின் மதிப்பை தேவனிடத்தில் எடுத்துக்காட்டுகிறது. பதினோராம் மணி வேளையில் திராட்சத் தோட்டத்திற்கு வேலைக்கு வந்தவர்கள் தங்களுக்கு வேலைசெய்வதற்கான ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டதற்காக நன்றியுள்ளவர்களாக இருந்தார்கள்.

தங்களை ஏற்றுக்கொண்ட அவர்பால் நன்றியால் நிரம்பியவர்களாகக் காணப்பட்டார்கள். நாளின் இறுதியிலே வீட்டெஜமான் முழுநாளின் வேலைக்கான ஊதியத்தை அவர்களுக்கு வழங்கியபோது, அவர்கள் மிகவும் அதிகமாக ஆச்சரியமடைந்தனர். இத்தகைய கூலியைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக தாங்கள் உழைக்கவில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். தங்களுக்கு வேலைகொடுக்கும் எஜமானரின் முகத்தில் காணப் பட்ட இரக்கத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். தங்களது எஜமானரின் நற்குணத்தையும் தங்களுக்கு அவர் அளித்த தாராளமான ஊதியத்தையும் அவர்கள் ஒருபோதும் மறக்கவில்லை. தனது தகுதியின்மையைப்பற்றி உணர்ந்து பதினோராம் மணிவேளையிலே எஜமானரின் திராட்சத் தோட்டத்திற்குள் பிரவேசிக்கும் பாவியின் நிலையும் இவ்வாறே இருக்கும். அவன் வேலைசெய்த நேரம் மிகவும் குறுகியதாக இருப்பதினால் கொடுக்கப்பட்ட ஊதியத்திற்கு அவன் தகுதியற்றவனென்பதை உணருகி றான். ஆனால் தேவன் தன்னையும் ஏற்றுக்கொண்டாரே என்ற காரணத்தினால் மகிழ்ச்சியால் நிறைந்து காணப்படுகிறான். மிகவும் தாழ்மை யுள்ளவனாக—உறுதியான நம்பிக்கையின் ஆவியோடு—கிறிஸ்துவோடு ஊழியனாகச் செயல்படுதவற்குக் கிடைத்த அந்த சிறப்புரிமைக்காக—நன்றியுள்ள இதயத்தோடு காணப்படுகிறான். (26)

நமக்கு கிடைத்த அளவு எப்படிப்பட்டதென்ற கேள்வியின்றி, அவரிலே நாம் இளைப்பாறவேண்டுமென்று ஆண்டவர் விரும்புகின்றார். ஆத்துமாவிலே கிறிஸ்து தங்கி வாழும்போது, வெகுமதியைப்பற்றிய எண்ணம் மேலோங்கி நிற்காது. அதுவே நமது சேவையை இயங்கச்செய்யும் நோக்கமாக இருக்காது. நமக்குக் கிடைக்கும் பலனுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டியது ஒருவிதத்தில் உண்மைதான். அவரால் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களை நாம் பாராட்டவேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஆனால் வெகுமதிக்காக ஆவலோடு காத்திருப்பதைவிட, ஆதாயத்தை பொருட்படுத்தாமல் சரியானதை செய்வதற்கு ஆவலாக இருக்கவேண்டும். தேவனிடம் அன்பாயிருப்பதும் மனிதரிடம் அன்பாயிருப்பதும் தான் நமது நோக்கமாக இருக்கவேண்டும். (27)

முதல் அழைப்பு கேட்டும், ஆண்டவரின் திராட்சத்தோட்டத்திற்குள் பிரவேசிப்பதை அலட்சியம் செய்தவர்களை உவமை மன்னிக்கவில்லை. பதினோராம் மணிவேளையிலே சந்தைவெளிக்குச் சென்று வேலை செய்யாமல் நிற்கின்ற சில மனிதரைப் பார்த்த வீட்டெஜமான்: "நீங்கள் பகல் முழுவதும் சும்மா நிற்கிறதென்ன" என்று கேட்டான். "அதற்கு அவர்கள் ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை" என்றார்கள். நாளின் பிற்பகுதியில்

அழைக்கப்பட்ட எவரும் காலையில் அங்கு நின்றுகொண்டிருக்கவில்லை. அவர்கள் அழைப்பை மறுக்கவில்லை. முதலில் மறுத்து, பின்னர் அதற்காக மனம் வருந்துபவர்கள் மனம் வருந்துவது நல்லதுதான்; ஆனால் இரக்கத்தின் முதல் அழைப்புக்கு பொறுப்பற்றவிதமாக நடந்துகொள்வது பாதுகாப்பானது அல்ல. (28)

திராட்சைத்தோட்டத்தில் வேலை செய்தவர்கள். "ஆளுக்கு ஒவ்வொரு பணம்" பெற்றுக்கொண்டார்கள். அந்த நாளின் அதிகாலையிலே வேலைக்கு வந்தவர்கள் வருத்தமடைந்தார்கள். அவர்கள் பன்னிரெண்டு மணிநேரம் வேலைசெய்யவில்லையா? நாளின் குளிர்ச்சியான வேளையில் ஒரேஒரு மணிநேரம் வேலை பார்த்தவர்கள், இவர்களைவிட அதிகமாக வாங்கவேண்டியது சரிதானா? என்று விவாதித்தார்கள். "பிந்திவந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேரமாத்திரம் வேலைசெய்தார்கள்; பகலின் கஷ்டத் தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே" என்று முறுமுறுத்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு அவன் பிரதியுத்தரமாக: "சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ்செய்யவில்லை; நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா? உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டு போ, உனக்குக் கொடுத்ததுபோலப் பிந்தி வந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். என்னுடையதை என் இஷ்டப்படிச் செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனாயிருக்கலாமா" என்றான். (29)

"இவ்விதமாக, பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தி னோராயும் இருப்பார்கள்; அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்" என்றார். (30)

இந்த உவமையிலே முதலாவது குழுவில் வந்த வேலையாட்கள் தங்களது சேவைகளினால் மற்றவர்களைவிட தங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டுமென்று உரிமைகோருபவர்களைச் சுட்டிக்காட்டுகிறார்கள். தங்களைத் தாங்களே பாராட்டியவர்களாக அதே ஆவியில் வேலையைச் செய்கிறார்கள். இந்தச் சேவையில் சுயவெறுப்பையும் தியாகத்தையும் அவர்கள் கொண்டுவருவதில்லை. தங்களது வாழ்நாள் முழுவதும் தேவனையே சேவிப்பதாகச் சொல்லிக்கொண்டிருந்திருக்கலாம். துன்பங்களையும் தனிமையையும் பாடுகளையும் அனுபவிப்பதில் இவர்கள் முன்னணியில் இருந்திருக்கலாம். எனவே தாங்கள் ஒரு மாபெரும் வெகு மதியைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியுடையவர்களென்று தங்களைப்பற்றி எண்ணலாம். கிறிஸ்துவிற்கு ஒரு ஊழியக்காரனாக இருக்கின்ற சிறப்புரிமை யைவிட வெகுமதிபற்றியே அதிகமாக இவர்கள் நினைக்கிறார்கள்.

அவர்களது கருத்தின்படி அவர்கள் செய்த ஊழியங்களுக்காகவும் தியாகங்களுக்காகவும் மற்றவர்களைவிட தாங்கள் மேன்மைபெறுவதற்குத் தகுதியுள்ளவர்களென்று எண்ணுகிறார்கள். ஆனால் இப்படி அவர்கள் உரிமைகோருவது மற்றவர்களால் அங்கீகரிக்கப்படாததால், அவர்கள் வருத்தமடைகின்றனர். அவர்கள் தங்களது ஊழியங்களில் ஒரு அன்பான—உறுதியான நம்பிக்கையுடைய ஆவியோடிருந்திருப்பார்களேயானால், தொடர்ந்து முதன்மையாக இருந்திருப்பார்கள். அவர்களது குறைகூறுகின்ற—குற்றஞ்சாட்டுகின்ற போக்கு கிறிஸ்துவைப் போலல்லாத குணமாக இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட காரியங்கள் அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரவான்களல்ல என்பதை நிரூபிக்கின்றது. அது சுய முன்னேற்றத்திற்கான அவர்களது ஆசையையும் தேவன்மீது அவர்கள் கொண்டிருக்கும் அவநம்பிக்கையையும் அவர்கள் சகோதரர்கள்மீது கொண்டிருக்கும் பொறாமையுள்ள, காழ்ப்புணர்வுள்ள ஆவியையும் வெளிப்படுத்துகிறது. தேவனுடைய நன்மைசெய்கின்ற தாராள குணம் முறுமுறுப்பதற்கான சந்தர்ப்பமாக மாத்திரமே அமைந்துவிடுகிறது. இவ்வாறு தங்களது ஆத்துமாக்களுக்கும் தேவனுக்குமிடையில் எவ்விதத் தொடர்பும் இல்லையென அவர்கள் காட்டுகிறார்கள். ஊழியக்காரர்களின் தலைமை யாளராக இருக்கும் அவரோடு இணைந்து ஊழியம்செய்யும் மகிழ்ச்சியை அவர்கள் அறியாதவர்களாக இருக்கிறார்கள். குறுகலான—தன்னையே பராமரித்துக்கொள்ளும் குணத்தைவிட தேவனுக்கு மிகவும் வெறுப்பானது வேறு எதுவுமே கிடையாது. இத்தகைய குணங்களை வெளிப்படுத்தும் எவரோடும் அவர் ஊழியஞ்செய்ய முடியாது. அவரது ஆவியானவர் செய்யும் கிரியைகளுக்கு அவர்கள் உணர்வற்றவர்களாகவே இருக்கிறார்கள். (31)

தேவனுடைய திராட்சைத்தோட்டத்தில் வேலைசெய்வதற்காக முதலாவது யூதர்கள் அழைக்கப்பட்டார்கள். அதினால் அவர்கள் பெருமையும் சுயநீதியும் உடையவர்களானார்கள். அவர்களது நீண்டகால சேவை மற்றவர்களைவிட மிகப்பெரிய வெகுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதியை தங்களுக்குக் கொடுக்குமென்று கருதினார்கள். தேவனுடைய காரியங்களில் புறஜாதியாரும் சமமான சிறப்புரிமைகளைப் பெற்றுக்கொள்ளத் தக்கதாக அனுமதிக்கப்படுவார்களென்ற செய்தியைப்போன்று அவர்களுக்கு எரிச்சலூட்டும் காரியம் வேறு எதுவுமில்லை. (32)

தம்மைப் பின்பற்றும்படியாக முதலாவது அழைக்கப்பட்ட சீடர்கள் இதேபோன்ற தீய உணர்வை தங்களது இதயத்திலே பேணிவளர்த்துவிடக் கூடாது என்று கிறிஸ்து அவர்களை எச்சரித்தார். சுயநீதியென்னும் ஆவியே சபையின் சாபமாகிய பலவீனமென்பதாக அவர் கண்டார். தேவனுடைய

இராஜ்யத்தில் ஓர் இடத்தை சம்பாதித்துக்கொள்ள தாங்கள் ஏதாவது செய்யக்கூடுமென்று மனிதர் நினைக்கலாம். முன்னேற்றத்திற்கான சில காரியங்களைச் செய்தபின்னர் ஆண்டவர் வந்து நமக்கு உதவிசெய்வாரென்று மனதில் கற்பனைசெய்துகொள்வார்கள். இதில் சுயத்திற்கு ஏராளமான இடமும் இயேசுவிற்கு சிறிதளவு இடமுமாத்திரமே இருக்கும். வளர்ச்சிக்கான சிறிதளவு காரியங்களைச் செய்துவிட்ட பின்னர், அநேகர் பெருமை மிகுந்து தாங்கள் மற்றவர்களைவிட உயர்ந்தவர்களென்று எண்ணிக்கொள்கிறார்கள். முகஸ்துதிக்காக ஆவலுடன் காத்திருந்து, மற்றவர்களால் மிகவும் முக்கியமானவர்களென்று கருதப்படாவிட்டால் பொறாமைகொள்வார்கள். இத்தகைய ஆபத்திற்கெதிராக கிறிஸ்து தமது சீடர்களைப் பாதுகாக்க விரும்பினார். (33)

நமது தகுதியைப்பற்றி நம்மை நாமே புகழ்ந்துகொள்வதனைத்தும் பொருத்தமற்ற செயலாகும். "ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மை பாராட்டவேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மை பாராட்டவேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மை பாராட்டவேண்டாம்; மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"—எரேமியா 9:23,24. (34)

எந்த மனிதனும் தன்னைப் புகழ்ந்துகொள்ளாதபடிக்கு வெகுமதி யானது கிரியைகளினால் கிடைப்பதல்ல. அது கிருபையினாலே கிடைப்ப தாகும். "அப்படியானால், நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் மாம்சத் தின்படி என்னத்தைக் கண்டடைந்தான் என்று சொல்லுவோம்? ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில் மேன்மைபாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு; ஆகிலும் தேவனுக்குமுன்பாக மேன்மைபாராட்ட ஏதுவில்லை. வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது. கிரியைசெய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும். ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமா னாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்"—ரோமர் 4:1–5. எனவே, ஒருவரும் தன்னை மகிமைப்படுத்திக்கொள்ளத் தேவையில்லை. எவரும் மற்றவரைவிட மேலான சிறப்புரிமை பெற்றவரல்ல. நான் பெற்றுக்கொள்ள வேண்டிய வெகுமதியென்று எவரும் உரிமைபாராட்ட முடியாது. (35)

அந்த மாபெரும் நித்திய வெகுமதியை முதலாவது வந்தவரும் கடைசியில் வந்தவரும் பங்கிட்டுக்கொள்வார்கள். முதலாவது வந்தவர் கடைசியில் வந்தவரை மகிழ்ச்சியோடு வரவேற்கவேண்டும். ஒருவருக்குக் கிடைக்கும் வெகுமதிபற்றி மற்றவர் காழ்ப்புணர்வு கொள்ளும்போது, தான் கிருபையினால் மாத்திரம் இரட்சிக்கப்பட்டதை மறந்துவிடுகிறான். வேலையாட்கள்பற்றிய இந்த உவமை அனைத்து வகையான பொறா மைகளையும் சந்தேகத்தையும் கடிந்துகொள்கிறது. அன்பு சத்தியத்திலே களிகூருகிறது. பொறாமையோடுகூடிய ஒப்பிடுதல்களை உருவாக்குவதில்லை. அன்பை உடைமையாக வைத்திருப்பவன் கிறிஸ்துவின் அழகின் இனிமை யையும் தனது சொந்தக் குணத்தின் பூரணமற்ற நிலையையும் ஒப்பீடு செய்கிறான். (36)

இந்த உவமை அனைத்து வேலையாட்களுக்கும் ஒரு எச்சரிப்பைக் கொடுக்கிறது. அவர்களது சேவை எவ்வளவு நீண்ட காலத்திற்குரியதாக இருந்தாலும், அவர்களது உழைப்புகள் எவ்வளவு ஏராளமாக இருந்தாலும், தங்களது சகோதரர்களிடத்தில் அன்புசெலுத்தாமல் தேவனுக்கு முன்பாக தாழ்மைப்படுபவர்களானால் அவர்கள் எதற்கும் பயனற்றவர்களாகிறார்கள். சுயம் அரியணையில் அமர்த்தப்பட்டிருக்கும்போது, அங்கு மார்க்கமிருக்காது. ஒருவன் சுயத்தைத் தனது மகிமையாக்கிக்கொள்வானேயானால், கிறிஸ்துவின் சேவையிலே எந்தக் கிருபைமாத்திரம் அவனை திறமை உடையவனாகச் செய்யுமோ, அந்தக் கிருபையின்றி தரித்திரனாக தன்னைக் காண்பான். எப்பொழுதுதெல்லாம் பெருமையும் சுயத்தில் தன்னிறைவுகொள்ளுதலும் மனதில் மகிழ்ச்சியோடு அனுபவிக்கப்படுகிறதோ, அங்கு ஊழியம் பாழடைந்துவிடுகிறது. (37)

எவ்வளவு நீண்டநேரம் நாம் வேலைசெய்கிறோமென்பதல்ல; விருப்பத்தோடும் உத்தம விசுவாசத்தோடும் செய்யப்படும் வேலையே தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உகந்ததாக இருக்கிறது. நமது அனைத்து வேலைகளிலும் நாம் நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுப்பது அவசியமாக வேண்டப்படுகிறது. சுயநல நோக்கத்தினால் செய்யப்பட்டு, கேடடைந்த மாபெரும் வேலையைவிட, உண்மையோடும் உத்தமத்தோடும் சுயத்தை மறந்த நிலையில் செய்யப்படுகின்ற சிறிய கடமை தேவனுக்கு மிகவும் பிரியமானது. எந்த அளவிற்கு இயேசுவின் ஆவியை மனதார பேணிவைத்திருக்கிறோம்—எவ்வளவு அதிகமாக நமது பணி கிறிஸ்துவின் சாயலை வெளிப்படுத்துகிறது என்பதைக் காண்பதற்கு ஆண்டவர் உற்று நோக்குகிறார். நாம் செய்கின்ற வேலையின் அளவைவிட, எவ்வளவு அன்போடும்—உண்மையோடும்—உத்தமத்தோடும் அந்த வேலையைச்

செய்கிறோம் என்கிற காரியத்தையே அதிக மதிப்புடையதாகக் கருதுகிறார். (38)

சுயம் செத்துப்போய், யார் மேன்மைசெலுத்துவது எனப்படும் பூசல் அப்புறப்படுத்தப்பட்டு, இதயம் நன்றியால் நிறையப்பட்டு, வாழ்க்கையை அன்பு நறுமணம் உடையதாகச் செய்யும்போது மாத்திரமே கிறிஸ்து ஆத்துமாவில் வாசஞ்செய்வார். பிறகு நாம் தேவனோடு உடன் ஊழியர்களாக அங்கீகரிக்கப்படுவோம். (39)

வேலை எவ்வளவு கடினமாக இருப்பினும், உண்மையான ஊழியக் காரன் அதை ஒரு அடிமை வேலையைப்போன்று எண்ணமாட்டான். இத்த கையோர் தத்தம்செய்யவும் தத்தம்செய்துவிடப்படவும் ஆயத்தமாக இருக்கி றார்கள். ஆனால் அது ஒரு மகிழ்ச்சியான இதயத்தோடு செய்யப்பட்ட உற்சாகமான வேலையாக இருக்கிறது. தேவன்மீதுள்ள சந்தோஷம் இயேசுகிறிஸ்துவின்மூலமாக வெளிப்படுகிறது. கிறிஸ்துவிற்கு முன்பாக வைக்கப்பட்ட மகிழ்ச்சியே அவர்களது மகிழ்ச்சியாகும். "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது"—யோவான் 4:34. அவர்கள் மகிமையின் கர்த்தரோடு இணைந்து வேலைசெய்கிறார்கள். இந்த எண்ணம் அனைத்து கடுமையான வேலையையும் இனிமையுடையதாக மாற்றுகிறது. சித்தத்திற்கு வலிமையூட்டுகிறது. என்னதான் சம்பவித்தாலும் ஆவிக்கு ஊக்கமளித்து உரமூட்டுகிறது. தன்னலமற்ற இதயத்தோடு உழைத்து, கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுப்பதின்மூலமாக, மேம்பாடடைந்து அவரது பரிவின் குணத்திலே பங்குகொண்டவர்களாக, அவரோடு இணைந்து ஊழியம்செய்து, அவரது மகிழ்ச்சியின் அலையைப் பெருகும்படிச்செய்து, உயர்த்தப்பட்டிருக்கும் அவரது நாமத்திற்கு கனத்தையும் துதியையும் கொண்டுவருகிறார்கள். (40)

ஆண்டவருக்காகச் செய்யப்படும் அனைத்து உண்மையான ஊழியத் தின் ஆவியும் இப்படித்தான் இருக்கும். இத்தகைய ஆவி குறைவுபடுகிற தினால், முதலாவது இருப்பவர்கள்போலக் காணப்படுபவர்கள் கடைசிக்கு வந்துவிடுகிறார்கள். ஆனால் மேற்கூறப்பட்ட ஆவியையுடையவர்கள் கடை சியில்வைத்து எண்ணப்பட்டாலும் முதலிடத்தை அடைந்துவிடுவார்கள். (41)

அநேகர் கிறிஸ்துவிற்கென்று தங்களை ஒப்படைத்திருக்கிறார்கள். எனினும், ஒரு மாபெரும் ஊழியத்தையோ அல்லது அவரது சேவைக்காக பெருமளவில் தியாகங்களைச் செய்யவோ அவர்கள் எவ்வித சந்தர்ப்பங் களையும் காண்கிறதில்லை. தேவனால் மிகவும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதான இரத்தசாட்சியின் தற்தியாகமோ அல்லது வேறுநாடுகளுக்கு

இறைப்பணியாளர்களாகச் சென்று, தினமும் ஆபத்தையும் மரணத்தையும் சந்திக்கும் நிலையிலிருந்து, பரலோகப் பதிவேடுகளில் மிகவும் உயர்வாக வைத்தெண்ணப்படும் நிலையில் இருப்பவர்களைப்போன்றோ இருக்கவேண்டியதில்லையென்ற நினைவில் இவர்கள் ஆறுதல் பெறலாம். அனுதினமும் சுயத்தைச் சரணடையச்செய்து, நோக்கத்தில் உண்மையோடும் சிந்தனையில் தூய்மையோடும் இருந்து, மற்றவர்கள் உங்களை கோபமூட்டி எரிச்சலடையச் செய்யும்போதும் சாந்தகுணத்தைக் காத்துக்கொண்டவர்களாக விசுவாசத்திலும் பயபக்தியிலும் நிலைத்து, சிறிய காரியத்திலும் உண்மையாக இருந்து, குடும்பவாழ்க்கையில் கிறிஸ்துவின் குணத்தை எடுத்துக்காட்டி, தனிப்பட்ட வாழ்க்கையில் இவ்வாறு வாழ்பவரே உண்மையான கிறிஸ்தவனாக இருக்கிறார். உலகப் பிரசித்திபெற்ற இறைப்பணியாளர் அல்லது இரத்தசாட்சியைவிட, இப்படிப்பட்டவரே தேவனுடைய பார்வையில் மிகவும் அருமையானவர். (42)

ஆ! குணத்தை அளக்க தேவனும் மனிதனும் உபயோகிக்கும் படித்தரம் எவ்வளவு வித்தியாசப்படுகிறது? இவ்வுலகமும் ஏன் நெருங்கிய நண்பர்களுங்கூட ஒருபோதும் அறியமுடியாத சோதனைகள்—அதாவது குடும்பத்தில் சந்திக்கப்படுகின்ற—இதயத்திற்கு வருகின்ற எத்தனை சோதனைகள் எதிர்க்கப்படவேண்டியதிருக்கிறதென்பதை தேவன் காண்கிறார். ஆத்துமா தனது சொந்த பெலவீனத்தை உணர்ந்து, எவ்வளவு தாழ்த்துகிறதென்பதை அவர் காண்கிறார். ஒரு தீய சிந்தனைக்காகக்கூட, அதற்காக ஏற்படும் உண்மையான மனந்திரும்புதலை அவர் காண்கிறார். தமது சேவையிலே முழு இதயத்தோடும் ஈடுபடுவதைக் காண்கிறார். சுயத்தோடு மணிக்கணக்காகப் போராடின கடினமான போராட்டத்தையும், அந்தப் போராட்டத்தில் எப்படி வெற்றி பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும் காண்கிறார். தேவனும் தூதர்களும் இவையனைத்தையும் காண்கிறார்கள். கர்த்தருக்குப் பயந்து அவரது நாமத்தை சிந்திக்கிறவர்களுக்காக ஞாபகப்புத்தகம் ஒன்று தேவனுக்கு முன்பாக எழுதப்படுகிறது. ஒரு வெற்றியின் இரகசியத்தை நமது கல்வியிலோ நமது நல்வாய்ப்பு நிலையிலோ நமது எண்ணிக்கையிலோ நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் தாலந்துகளிலோ அல்லது நமது சித்தத்திலோ கண்டறியப்படுவதில்லை. நமது தகுதியின்மையை உணர்ந்தவர்களாக நாம் கிறிஸ்துவை தியானிக்க வேண்டும். பலம் அனைத்திற்கும் பலமாக இருப்பரவராகிய, அனைத்து சிந்தனைகளுக்கும் சிந்தனையாக இருப்பவராகிய, அவர்மூலமாக விருப்பமுள்ளவர்களும் கீழ்ப்படிதல் உள்ளவர்களும் வெற்றி மேல் வெற்றியைப் பெற்றுக்கொள்வார்கள். நமது சேவை எவ்வளவு சிறியதாக இருந்தாலும், நமது ஊழியம் எவ்வளவு தாழ்ச்சியாக இருந்தாலும், எளிய

விசுவாசத்தோடு அவரைப் பின்பற்றினால், வெகுமதியைக்குறித்து நாம் ஏமாற்றமடைய வேண்டியதில்லை. மாபெரும் மனிதர்களும் மிகப்பெரும் ஞானிகளும் சம்பாதிக்க முடியாததை மிகவும் பலவீனமாக, மிகத் தாழ்மை யான நபர் பெற்றுக்கொள்வார். சுயத்தை உயர்த்துபவர்களுக்காக பரலோகத் தின் பொற்கதவுகள் திறக்கிறதில்லை. பெருமையின் ஆவியுடையவர்களுக்கு அந்தக் கதவுகள் திறக்கப்படமாட்டாது. ஆனால் ஒரு சிறுபிள்ளையின் நடுங்கும் தொடுதலுக்கும் அந்த நித்தியக் கதவுகள் விரிவாகத் திறக்கும். எளிய விசுவாசத்திலும் அன்பிலும் பணியாற்றியவர்களுக்கு, கிருபையின் ஊதியம் பாக்கியமானதாக அமைந்திருக்கும். (43) ★

# 29

# மணவாளனைச் சந்திக்க ஆயத்தமாகுதல்!

**(மூலநூல் : பக்கங்கள் 405–421)**
**மத்தேயு 25:1–13**

கிறிஸ்து தம்முடைய சீஷர்களுடன் ஒலிவமலையின்மீது அமர்ந்திருக்கிறார். சூரியன் மலைகளுக்குப்பின்பாக மறைந்துவிட்டது. மாலைநேரத்து நிழல்களால் வானங்களில் திரைபோடப்பட்டிருந்தது. நேர் எதிரில் ஒரு வீடு காணப்பட்டது. மகிழ்ச்சி நிறைந்த ஏதோ ஒரு வைபவத்திற்காக அந்த வீடு ஒளிமயமாகக் காட்சியளித்துக்கொண்டிருந்தது. அந்த வீட்டின் திறப்பான பகுதிகளினின்று ஒளி வீசிக்கொண்டிருந்தது. ஒரு திருமண ஊர்வலம் சீக்கிரத்தில் வரப்போவதைக் காட்டும்வண்ணமாக, அதை எதிர்பார்த்து ஒரு மக்கள் கூட்டம் காத்திருந்தது. கிழக்கத்திய நாடுகளில் பலபகுதிகளில் திருமணவிழாவின் நடைமுறைகள் பொதுவாக மாலைவேளைகளில்தான் ஏற்படுத்தப்பட்டிருந்தன. மணவாளன் புறப்பட்டுப்போய் மணவாட்டியை தனது வீட்டிற்கு அழைத்து வருவார். கைப்பந்தங்களின் ஒளிமூலமாக மணப்பெண் சார்ந்த கூட்டம் அவளுடைய தகப்பனாரின் இல்லத்தினின்று மணமகனின் இல்லம் நோக்கி ஊர்வலமாக நகர்ந்துசெல்லும். அழைக்கப்பட்டுள்ள விருந்தினருக்கு அங்கு ஒரு சிறப்பான விருந்தளிக்கப்படும். கிறிஸ்து தமக்கு எதிராக நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்த அந்தக் காட்சியிலே மணமகள் சார்ந்தகூட்டம் வருவதைப் பார்த்து, அந்த ஊர்வலத்தோடு இணைந்துகொள்ளும்படி ஒரு மக்கள் கூட்டம் காத்துநின்றது. (1)

மணவாட்டியின் இல்லத்தருகில் வெண்ணுடை தரித்த பத்துக்கன்னியர்கள் தாமதித்து நின்றுகொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் பொருத்தப்பட்ட ஒரு விளக்கையும் எண்ணெய்க்காக ஒரு சிறிய பாத்திரத்தையும் கையில் வைத்திருந்தனர். மணவாளனின் வருகைக்காக அனைவரும் ஆவலோடு காத்துநின்றனர். ஆனால் அங்கு ஒரு தாமதம் ஏற்பட்டுவிட்டது. ஒவ்வொரு

மணிவேளையும் கடந்துசென்றுகொண்டிருந்தது. காத்திருந்தவர்கள் களைப் படைந்து நித்திரைமயக்கத்தில் ஆழ்ந்துவிட்டனர். நடு இராத்திரியிலே “இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள்” என்கிற சத்தம் உண்டாயிற்று. தூங்கிக்கொண்டிருந்தவர்கள் திடீரென விழிப் படைந்து குதித்து எழும்புகின்றனர். தீப்பந்தகளின் பிரகாசத்தோடும் இன்னிசை முழக்கத்தோடும் ஊர்வலம் நகர்ந்துசெல்வதைக் காண்கின்றனர். மணவாள னின் சத்தத்தையும் மணவாட்டியின் சத்தத்தையும் அவர்கள் கேட்கின்றனர். பத்துக்கன்னியர்களும் துரிதமாகச் செல்லத்தக்கதாக விளக்குகளை அவசர அவசரமாக கையில் எடுத்து தூண்டிவிட முயற்சிக்கின்றனர். ஆனால் ஐந்து கன்னியர்கள் தங்களது பாத்திரங்களில் எண்ணெய் நிரப்பும் வேலையை அலட்சியம் செய்திருந்தனர். இவ்வளவு நீண்டநேரத்திற்கு தாமதம் ஏற்படு மென அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் இந்த நெருக்கடி நேரத்துக் காக ஆயத்தமாகவில்லை. எனவே மிகுந்த மனத்துயரோடு ஞானமுள்ள தங்களது தோழியர்களை நோக்கி: “உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்து போகிறதே” என்று கெஞ்சினார்கள். ஆனால் காத்திருந்த அந்த ஐந்து கன்னியர்களும் பாத்திரங்களிலுள்ள எண்ணெயை புதிதாகத் தூண்டிவிடப்பட்ட விளக்குகளில் ஊற்றி காலிசெய்துவிட்டிருந்தனர். கொடுப்பதற்கு எண்ணெய் இல்லாதிருந்த தால் அவர்களை நோக்கி: “எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராத படி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக்கொள் ளுங்கள்” என்றார்கள். (2)

அவர்கள் எண்ணெய் வாங்கச் சென்றிருந்தபோது, ஊர்வலம் வந்தது. அவர்களை விட்டுச்சென்றுவிட்டது. ஏற்றப்பட்ட விளக்குகளை ஏந்திய ஐந்து கன்னிகைகளும் ஊர்வலக்கூட்டத்தோடு சேர்ந்து வீட்டினுள் பிரவேசித்து விட்டனர். கதவும் அடைக்கப்பட்டது. புத்தியில்லாத கன்னியர்கள் விருந்து சாலையை நெருங்கியபோது எதிர்பாராதவிதத்தில் அவர்களது வேண்டு கோள் மறுக்கப்பட்டது. அந்த விருந்திற்கான எஜமான் அவர்கள் நோக்கி: “உங்களை அறியேன்” என்று கூறினார். அந்த இரவின் இருளிலே தெருவில் அவர்கள் தனித்து நின்றுகொண்டிருக்கும்படியாகக் கைவிடப்பட்டார்கள். (3)

மணவாளனின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்த அந்த திருமண வைபவக்கூட்டத்தை நோக்கிப்பார்த்தவராக அமர்ந்திருந்த இயேசு தமது சீடர்களுக்கு அந்த பத்து கன்னியர்களின் கதையைக் கூறினார். அந்தக் கன்னிகைகளின் அனுபவத்தின்மூலமாக தமது இரண்டாம் வருகைக்குச் சற்றுமுன்னர் சபையின் அனுபவம் எப்படியிருக்குமென்பதை அவர்களுக்கு விளக்கிக்காட்டினார். (4)

காத்திருக்கும் இந்த இரண்டு வகுப்பாரும் கர்த்தரின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோமென்று சொல்லிக்கொண்டிருக்கிற வகுப்பாரைச் சுட்டிக்காட்டுகிறார்கள். அவர்கள் தாங்கள் தூய்மையான விசுவாசம் உடைய வர்களென்று சொல்லிக்கொள்வதால் கன்னியர்களென்று அழைக்கப்படுகிறார் கள். விளக்குகளின்மூலமாக தேவனுடைய வசனம் சுட்டிக்காட்டப்படுகிறது. "உம்முடைய வசனம் கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமு மாயிருக்கிறது" (சங்கீதம் 119:105) என்று சங்கீதக்காரன் கூறுகிறான். எண்ணெய் பரிசுத்த ஆவியானவரைக் காட்டும் அடையாளமாக இருக்கிறது. சகரியாவின் தீர்க்கதரிசனத்தில் பரிசுத்த ஆவியானவர் பின்வரும் வசனங்களி னாலே எடுத்துக்காட்டப்படுகிறார். "என்னோடே பேசின தூதன் திரும்பிவந்து நித்திரைபண்ணுகிற ஒருவனை எழுப்புவதுபோல் என்னை எழுப்பி: நீ காண்கிறது என்னவென்று கேட்டார்; அதற்கு நான்: இதோ, முழுவதும் பொன்னினால் செய்யப்பட்ட குத்துவிளக்கைக் காண்கிறேன்; அதின் உச்சியில் அதின் கிண்ணமும், அதின்மேல் அதின் ஏழு அகல்களும், அதின் உச்சியில் இருக்கிற அகல்களுக்குப்போகிற ஏழு குழாய்களும் இருக்கிறது. அதின் அருகில் கிண்ணத்திற்கு வலதுபுறமாக ஒன்றும், அதற்கு இடதுபுறமாக ஒன்றும், ஆக இரண்டு ஒலிவமரங்கள் இருக்கிறது என்றேன். நான் என்னோடே பேசின தூதனை நோக்கி: ஆண்டவனே, இவைகள் என்னவென்று கேட்டேன்... அப்பொழுது அவர்: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்... பின்பு நான் அவரை நோக்கி: குத்துவிளக்குக்கு வலதுபுறமாகவும் அதற்கு இடதுபுறமாகவும் இருக்கிற இந்த இரண்டு ஒலிவமரங்கள் என்னவென்று கேட்டேன். மறுபடியும் நான் அவரை நோக்கி: இரண்டு பொற்குழாய்களின் வழியாய்த் தொங்கி, பொன்னிறமான எண்ணெயைத் தங்களிலிருந்து இறங்கப்பண்ணுகிறவைகளாகிய ஒலிவமரங்களின் இரண்டு கிளைகள் என்னவென்று கேட்டேன்... அப்பொழுது அவர்: இவைகள் இரண்டும் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் என்றார்"–சகரியா 4:1–14. (5)

இரண்டு ஒலிவமரங்களினின்று பொன்னிறமான எண்ணெய் இரண்டு பொற்குழாய்களின் வழியாகக் குத்துவிளக்கின் உச்சியிலுள்ள கிண்ணத்திற் குள் இறங்கியது. அதன்பின்னர் அங்கிருந்து ஆசரிப்புக்கூடாரத்திற்கு வெளிச் சத்தைக் கொடுக்கின்ற அந்த பென்னிறமான விளக்குகளுக்குச் சென்றது. அதேபோன்று, தேவனுடைய பிரசன்னத்தில் நின்றுகொண்டிருக்கும் பரிசுத்த வான்களின்மூலமாக, அவரது சேவைக்கு தங்களை அர்ப்பணித்திருக்கும் மானிடப் பிரதிநிதிகளுக்கு அவரது பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகிறார்.

அந்த பரலோகக் கிருபையை தேவனுடைய மக்களுக்கு பகிர்ந்தளிப்பதே அபிஷேகம் செய்யப்பட்ட அந்த இருவரின் பணியாகும். அந்த பரலோக கிருபை மாத்திரமே அவருடைய வசனத்தை கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாக ஆக்கமுடியும். "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"–சகரியா 4:6. (6)

உவமையிலே கூறப்பட்ட பத்துக்கன்னிகைகள் அனைவருமே மணவாளனைச் சந்திக்கச் சென்றார்கள். அனைவரிடமும் விளக்குகளும் எண்ணெய்க்கான பாத்திரங்களும் இருந்தன. அந்த இரு பிரிவைச் சேர்ந்தவர்களுக்கிடையே எந்தவித வித்தியாசமும் குறிப்பிட்ட காலம்வரை காணப்படாமலிருந்தது. கிறிஸ்துவின் வருகைக்குச் சற்றுமுன்வரை வாழ்கின்ற சபையும் அவ்வாறே இருக்கும். அனைவருக்கும் வேதவாக்கியங்களைப்பற்றி ஒரு அறிவு இருக்கிறது. கிறிஸ்து வெகு சீக்கிரத்தில் வரப்போகிறாரென்ற தூதை அனைவரும் கேட்டு, அவருடைய வருகையை நம்பிக்கையோடு எதிர்பார்த்து இருக்கின்றார்கள். உவமையில் எவ்வாறு கூறப்பட்டிருக்கிறதோ அப்படியே இப்பொழுதும் இருக்கிறது. ஒரு காத்திருக்கின்ற நேரம் குறுக்கிடுகின்றது. "இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள்" என்ற சத்தம் உண்டாகும்போது, அநேகர் ஆயத்தமின்றி இருந்தனர். தங்களது விளக்குகளோடு வைத்திருந்த பாத்திரங்களில் எண்ணெய் இல்லை. அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறாதவர்களாக இருந்தனர். (7)

தேவ ஆவியானவர் இல்லாமல் அவரது வசனத்தைப்பற்றிய அறிவு இருந்து பயனில்லை. பரிசுத்த ஆவியானவரின்றி வெறுமனே சத்தியத்தைப் பற்றிய அறிவு ஆத்துமாவை ஊக்குவிக்க முடியாது. இதயத்தை பரிசுத்தம் பண்ணமுடியாது. வேதாகமத்திலுள்ள கட்டளைகள் மற்றும் வாக்குத் தத்தங்களை ஒருவர் மிகவும் நன்றாக அறிந்திருக்கலாம். தேவனுடைய ஆவியானவர் சத்தியத்தை நன்றாக இதயத்தில் நிலைப்படுத்தினாலொழிய, குணத்தில் எந்தவித மாறுதலையும் அவர் அடையமுடியாது. பரிசுத்த ஆவியானவரின் அறிவுறுத்தல் இல்லாவிடில், மனிதர் பிழையையும் சத்தியத்தையும் சரியாகப் பிரித்தறிய முடியாது. எனவே, சாத்தானின் ஆதிக்கமுடைய சோதனைகளுக்கடியில் விழுந்துவிடுவார்கள். (8)

புத்தியில்லாத கன்னிகைகள்மூலமாக எடுத்துக்காட்டப்படும் வகுப்பார் மாய்மாலக்காரர்கள் அல்ல. சத்தியத்தின்மீது அவர்களுக்கு ஒரு மதிப்பு உண்டு. அந்த சத்தியத்தை போதித்திருக்கிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் செயற்பாட்டிற்கு அவர்கள் தங்களை அர்ப்பணிக்கவில்லை.

கன்மலையாகிய கிறிஸ்துவின்மீது, அவர்களது பழைய தன்மைகள் விழவில்லை. பாறைபோன்ற நிலம்போல, திருவசனத்தைக் கேட்கின்ற வகுப்பாராகவே இவர்கள் எடுத்துக்காட்டப்படுகிறார்கள். உடனடியாக வசனத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் அதின் கொள்கைகளை தங்களுடையதாக்கிக்கொள்ளத் தவறிவிடுகிறார்கள். அதின் செல்வாக்கு நிலைத்திருக்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் மனிதனின் இதயத்தில் கிரியை செய்கிறார். அவனது வாஞ்சைக்கும் இசைவிற்கும் ஏற்றபடி அவனிலே ஒரு புதிய தன்மையைப் பதியவைத்து நிலைப்படுத்துகிறார். புத்தியில்லாத கன்னியர்கள்மூலமாக எடுத்துக்காட்டப்படும் வகுப்பார் ஒரு மேலோட்டமான செயற்பாட்டினாலேயே திருப்தியடைந்துவிடுகிறார்கள். தேவனை அவர்கள் அறியவில்லை. அவரது குணத்தை அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. அவரோடு உறவுவைத்துக்கொள்கிறதில்லை. எனவே, எப்படி உறுதியாக நம்பிக்கைவைப்பது, எப்படி அவரை நோக்கிப்பார்த்து வாழ்வதென்பதும் அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் தேவனுக்குச் செய்யும் சேவை மிகவும் சீர்கேடடைந்து ஒரு அமைப்பிற்குள் அடங்கிவிடுகிறது. “ஜனங்கள் கூடிவருகிற வழக்கத்தின்படி உன்னிடத்தில் வந்து, உனக்கு முன்பாக என் ஜனங்கள்போல் உட்கார்ந்து, உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள்; ஆனாலும் அவர்கள் அவைகளின்படி செய்கிறதில்லை; அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள், அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப்போகிறது”—எசே. 33:31. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குச் சற்றுமுன்னர் வாழ்ந்திருக்கும் மக்களுடைய தனிப்பட்ட குணங்களும் இப்படித்தான் இருக்குமென்று அப்போஸ் தலனாகிய பவுல் சுட்டிக்காட்டுகிறார். “மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரி யராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில் லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோ ரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பலனை மறுதலிக்கிறவர் களாயும் இருப்பார்கள்”—2 தீமோத்தேயு 3:1–5. (9)

மேற்கூறப்பட்ட இந்த வகுப்பாரே ஆபத்து நெருங்கிவரும்போது சமாதானம், சௌக்கியமென்று கதறுபவர்களாகக் காணப்படுவார்கள். இவர்கள் ஆபத்தைப்பற்றி எண்ணாமல் பாதுகாப்பு என்று கூறி இதயங்களை

தாலாட்டி, தூங்கவைக்கிறார்கள். அவர்களது மயக்க நிலையில் திடீர் அதிர்ச்சியடையும்போது, தங்களது கைவிடப்பட்டநிலையைச் சரியாகப் புரிந்துகொண்டு, தங்களது குறைவைச் சரிப்படுத்தும்படி மற்றவர்களிடம் கெஞ்சுகிறார்கள். ஆவிக்குரிய காரியங்களில் ஒருவரது குறைவை மற்ற எந்த மனிதராலும் சரிப்படுத்த முடியாது. தேவனுடைய கிருபை ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் இலவசமாக வழங்கப்பட்டிருக்கிறது. "தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்" (வெளி. 22:17) என்ற நற்செய்தியின் தூது கூறி அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் குணமானது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாற்றப்படக்கூடாத ஒன்றாகும். எந்த மனிதனும் வேறு ஒரு மனிதனுக்காக விசுவாசிக்க முடியாது. ஒருவர் வேறு ஒரு மனிதருக்காக பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளமுடியாது. பரிசுத்த ஆவியானவரின் செயற்பாட்டினால் உருவாகும் பலனாகிய அந்தக் குணத்தை எந்த ஒரு மனிதனும் வேறு ஒரு மனிதனுக்குப் பகிர்ந்தளிக்க முடியாது. "நோவாவும் தானியேலும் யோபும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்களேயல்லாமல், குமாரனையாகிலும், குமாரத்தியையாகிலும் தப்புவிக்கமாட்டார்கள் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்பதைக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்"—எசே. 14:20. (10)

இந்த நெருக்கடியான நேரத்தில்தான் குணம் வெளிப்படுத்தப் படுகிறது. "நடு இராத்திரியிலே இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள்" என்ற அந்த ஆர்வமுள்ள குரல், கேட்கப்படும்பொழுது, தூங்குகின்ற கன்னிகைகள் தங்களது நித்திரை மயக்கத்தினின்று எழுப்பப்படுகிறார்கள். அந்தச் சம்பவத்திற்காக யார் ஆயத்தஞ்செய்திருக்கிறார்களென்பது அங்கு காணப்படுகிறது. எதுவும் தெரிந்திராத நிலையில் இரண்டு வகுப்பாரும் விழித்தெழுகிறார்கள். ஆனால் அதில் ஒரு வகுப்பார் அந்த திடீர் நெருக்கடி நிலைக்கு ஆயத்தமின்றிக் காணப்படுகிறார்கள். இப்பொழுது திடீரென்று எதிர்பார்த்திராத ஒரு இக்கட்டு ஏற்படுகின்றது. இந்தச் சம்பவம் ஆத்துமாவை மரணத்தோடு முகமுகமாகக் கொண்டுவருகிறது. இக்காரியம் தேவனுடைய வாக்குத்தத்தங்களிலே உண்மையான விசுவாசம் இருக்கிறதா என்பதைக் காட்டுகிறது. ஆத்துமா கிருபையினால் தாங்கி நடத்தப்படுகிறதாவென்பதை இந்தக் காரியம் காட்டுகிறது. மானிடருக்காகக் கொடுக்கப்படும் இறுதித் தவணையின் போது மாபெரும் இறுதிச் சோதனை சம்பவிக்கிறது. ஆனால் இச்சமயத்தில் ஆத்துமாவின் தேவை சரிசெய்யப்படுவதற்கு பிந்திவிட்ட நேரமாகும். (11)

இந்த பூமியின் வரலாற்றின் அந்திப்பொழுதிலே, இந்த பத்துக்கன்னிகைகளும் கவனித்துப்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். எல்லாருமே தங்களை கிறிஸ்தவர்களென்று அழைத்துக்கொண்டு இருக்கிறார்கள். எல்லாருக்குமே ஒரு அழைப்பு இருக்கின்றது. ஒரு பெயர் இருக்கின்றது; ஒரு விளக்கு இருக்கிறது; அனைவருமே கிறிஸ்துவின் சேவையைச் செய்துகொண்டிருப்பதாகக் கூறிக்கொள்கிறார்கள். புறத்தோற்றத்தின்படி அனைவருமே கிறிஸ்துவின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருப்பதுபோன்று காணப்படுகிறார்கள். ஆனால் இதில் ஐந்துபேர் ஆயத்தமாக இருக்கவில்லை. விருந்துசாலைக்கு வெளியே இந்த ஐந்து கன்னிகைகளும் அதிர்ச்சியிலும் குழப்பத்திலும் ஆழ்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். (12)

கடைசி நாளில் அநேகர் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் பிரவேசிக்க அனுமதிகோரி, "உம்முடைய சமுகத்தில் போஜனபானம்பண்ணினோமே," "கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். "ஆனாலும் அவர்: நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்களெல்லாரும் என்னைவிட்டு அகன்றுபோங்கள்" (லூக்கா 13:26,27; மத்தேயு 7:22) என்று பதிலுரைப்பார். இந்த பூலோக வாழ்விலே அவர்கள் கிறிஸ்துவோடு தோழமை உறவிற்குள் பிரவேசிக்கவில்லை. எனவே, பரலோகத்தின் மொழியை அவர்கள் அறியவில்லை. ஆகவே அதின் மகிழ்ச்சிக்கு அவர்கள் அந்நியராகிவிட்டனர். "மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்"–1 கொரிந்தியர் 2:11. (13)

மானிட செவிகளில் விழுகின்ற அழிவின் வார்த்தைகளில் மிகவும் துக்ககரமான வார்த்தை "நான் உங்களை அறியேன்" என்பதாகும். நீங்கள் அலட்சியம்செய்துபோட்ட பரிசுத்த ஆவியானவரின் தோழமையின் கூட்டுறவு மாத்திரமே அந்த கல்யாண விருந்தின் மகிழ்ச்சி நிறைந்த கூட்டத்திலே உங்களை இணைந்திருக்க செய்யும். அந்த நிகழ்ச்சியிலே நீங்கள் பங்குபெற முடியாது. அதின் ஒளி குருடாகிப்போன கண்களிலும் அதின் இனிய கீதத்தொனி செவிடாகிப்போன காதுகளிலும் விழும். அதின் அன்பும் மகிழ்ச்சியும் இந்த உலக நேசத்தால் மரத்துப்போன இதயத்திலே எந்தவிதமான மகிழ்ச்சியின் நாதத்தையும் விழிப்படையச்செய்யமுடியாது. பரலோகத்தில் தோழமையின் உறவிற்கு உங்களது சொந்தத் தகுதியற்ற நிலையே அதினின்று உங்களைப் புறம்பே நிறுத்திவிடும். (14)

அந்த நடுராத்திரியின் சத்தம் கேட்கப்படும்போது விழிப்படைந்து, ஆண்டவரைச் சந்திக்க நாம் ஆயத்தமாக இருக்க முடியாது. “இதோ, மணவாளன் வருகிறார்” என்ற சத்தம் கேட்டபின் எழும்பி, காலியான விளக்குகளை எடுத்து நிறைத்துக்கொள்ள முடியாது. இவ்வுலக வாழ்க்கையில் கிறிஸ்துவை நம்முடன் வைக்காமல் வெளியே வைத்துவிட்டு, பரலோகத்தில் அவரோடு தோழமையின் உறவுகொள்ள நாம் தகுதிப்படுத்தப்பட முடியாது. (15)

உவமையிலே புத்தியுள்ள கன்னிகைகள் தங்களது விளக்குகளோடு பாத்திரங்களில் எண்ணெயையும் வைத்திருந்தார்கள். அந்த இரவில் விழித்து காத்துக்கொண்டிருந்த நேரம்முழுவதும் மங்காமல் அவர்களது விளக்கு எரிந்துகொண்டிருந்தது. மணவாளனுக்காக கொடுக்கப்படும் மேன்மைக்கேற்ற படி, ஒளியை அதிகப்படியாக பெருக்கிக்காட்ட உதவியாக இருந்த அந்த விளக்கு இருளிலே பிரகாசித்து, அந்த மணவாளனின் வீட்டிற்கும் கல்யாண விருந்திற்கும் செல்லக்கூடிய பாதையை ஒளியூட்டி, பிரகாசமடையச்செய்ய உதவியது. (16)

அதேபோன்று, கிறிஸ்துவின் பின்னடியார்கள் இந்த உலகில் இருளுக்கு மத்தியில் ஒளியைப் பரப்புபவர்களாக இருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவரின்மூலமாக தேவனுடைய வசனம் அதைப் பெற்றுக்கொள்பவரின் வாழ்க்கையை மாற்றுகின்ற வல்லமையுடையதாக இருப்பதினால் அது வெளிச்சமாக இருக்கிறது. அவரது வார்த்தைகளின் கொள்கைகள் அவர்களது இருதயங்களில் பதிக்கப்படும்பொழுது, பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய பண்புகளை மனிதர்களுக்குள் முன்னேற்றமடைய செய்கிறார். அவரது மகிமையின் ஒளி அதாவது அவரது குணம் அவரது பின்னடியார்களிடத்தில் பிரகாசிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தேவனை மகிமைப்படுத்தவேண்டும். மணவாளனின் வீட்டிற்கும் தேவபட்டணத்திற்கும் ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணவிருந்திற்கும் செல்லும் பாதையை பிரகாசிக்கச்செய்யவேண்டும். (17)

மணவாளனின் வருகை இருண்ட மணிவேளையான நள்ளிரவில் இருந்தது. அதேபோன்று, இந்த உலகில் இருண்ட காலக்கட்டத்தின்போது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நடைபெறும். நோவா, லோத்து ஆகியோர் வாழ்ந்த நாட்களைப்போலவே மனுஷகுமாரன் இரண்டாம் முறையாக பூமிக்குத் திரும்பிவரும் காலத்தின் நிலையும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. வேதவாக்கியங்கள் இந்தக் காலத்தைப்பற்றி குறிப்பிட்டுக்காட்டும்போது, “கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும்” சாத்தான் செயல்படுவான் என்று கூறுகிறது (2 தெச.

2:10). துரிதமாகப் பெருகிவரும் தவறுகள் மலிந்த இருண்ட காலங்கள் முரண்பட்ட சமயக் கருத்துகள் ஆகியவை இந்த கடைசிநாட்களில் காணப் படும். வஞ்சகங்களின்மூலமாக சாத்தானின் செயல்பாடுகள் மிகத்தெளிவாக வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன. சாத்தான் உலகையே சிறைப்படுத்தி அழைத்துச்செல்வதுமட்டுமல்லாமல், நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வின் சபைகளென்று அழைக்கப்பட்டு நடைபெற்றுவரும் சபைகளில் தனது வஞ்சகத்தால் பாவங்களை நிரப்பிக்கொண்டிருக்கிறான். இந்த மாபெரும் மருளவிழுகை நள்ளிரவின் இருளைப்போல, கனத்த இருளின்மூலம் மயிரால் பின்னப்பட்ட இரட்டுத்துணி எப்படி இருக்குமோ அப்படியே அந்த இருளும் ஒளிஊடுருவ முடியாததாக இருக்கும். தேவமக்களுக்கு சத்தியத்தி னிமித்தம் கடுஞ்சோதனையின் இரவாகவும் அழுகையின் இரவாகவும் சத்தி யத்திற்காக துன்பம் அனுபவிக்கும் இரவாகவும் இருக்கும். ஆனால் அந்த இரவின் இருளினின்று தேவனுடைய வெளிச்சம் பிரகாசிக்கும். (18)

அவர் "இருளிலிருந்து வெளிச்சத்தைப்" பிரகாசிக்கச் செய்கிற தேவன் (2 கொரிந்தியர் 4:6). "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமை யுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். தேவன் வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று"–ஆதி.1:2,3. அதுபோலவே ஆவிக்குரிய இருள் ஏற்படும் அந்த இரவிலே, தேவன் "வெளிச்சம் உண்டாகக்கடவது" என்பார். "எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது" (ஏசாயா 60:1) என்று அவர் தமது ஜனங்களிடம் கூறுவார். (19)

"இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்"–ஏசாயா 60:2. தேவனைப்பற்றிய தவறான எண்ணம் என்னும் இருள் உலகம் முழுவதையும் மூடிக்கொண்டிருக்கும் நேரமிது. தேவனுடைய குணத்தைப்பற்றிய அறிவை மனிதர் இழந்துகொண்டிருக்கும் காலம். தேவ னுடைய குணத்தைப்பற்றி அறியும் அறிவு தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, தவறாகப் பொருள் விளக்கம் கொடுக்கப்படுகிறது. இச்சமயத்தில் தேவனிட மிருந்து வந்த தூது உரத்தகுரலில் கூறியறிவிக்கப்படவேண்டும். அந்தத் தூது அறிவின் செல்வாக்கில் வெளிச்சமளிக்கக்கூடியதாகவும், மீட்பின் வல்லமையை உடையதாகவும் இருக்கும். அவரது குணம் அனைவருக்கும் தெரியப்படுத்தப்படவேண்டும். உலகின் இருளுக்கு மத்தியில் அவரது மகிமையின் வெளிச்சமும் அவரது நற்குணத்தின் இரக்கத்தின், சத்தியத்தின் வெளிச்சமும் பிரகாசிக்க வேண்டும். (20)

இந்த வேலையைக்குறித்து ஏசாயா தீர்க்கன்: "சீயோன் என்னும் சுவிசேஷகியே, நீ உயர்ந்த பர்வதத்தில் ஏறு; எருசலேம் என்னும் சுவிசேஷகியே, நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு, பயப்படாமல் சத்தமிட்டு, யூதா பட்டணங்களை நோக்கி: இதோ, உங்கள் தேவன் என்று கூறி, இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார்; இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது" (ஏசாயா 40:9,10) என்று விவரித்துக் கூறுகிறார். (21)

மணவாளன் வருகைக்காக காத்திருப்பவர்கள் "இதோ உங்கள் தேவன்" என்று கூறுகிறார்கள். இரக்க ஒளியின் கடைசிக் கதிர்கள்—கிருபையின் கடைசித் தூது இந்த உலகத்திற்குக் கொடுக்கப்படவேண்டும். அது அவரது அன்பின் குணத்தை வெளிப்படுத்துவதாகும். தேவனுடைய பிள்ளைகள் அவரது மகிமையை வெளிப்படுத்தவேண்டும். தங்களது சொந்த வாழ்க்கையிலும், குணத்திலும் தேவனுடைய கிருபை அவர்களுக்குச் செய்த காரியத்தை வெளிப்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். (22)

நீதியின் சூரியனின் ஒளி நல்ல செயல்களிலும் அதாவது சத்திய வார்த்தைகளிலும் பரிசுத்த செயல்களிலும் பிரகாசிக்க வேண்டும். (23)

பிதாவின் மகிமையை மேம்படுத்துபவராக கிறிஸ்து இந்த உலகில் ஒளியாக வந்தார். பிதாவை மனிதருக்குக் காட்டுவதற்காக அவர் வந்தார். "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்"—அப். 10:38. நாசரேத்திலிருந்த தேவாலயத்திலிருந்து "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" (லூக்கா 4:18,19) என்று நாசரேத்திலுள்ள ஜெப ஆலயத்திலிருந்து கூறினார். இதே பணியைத்தான் அவர் தம்முடைய சீடர்களைச் செய்யுமாறு பணித்தார். "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்... இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்றார்—மத்தேயு 5:14,16. (24)

இதைக்குறித்து ஏசாயா: “பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக் கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்” (ஏசாயா 58:8) என்று கூறுகிறார். (25)

இவ்வாறு ஆவிக்குரிய இருளென்று கருதப்பட்ட அந்த இரவில் தேவனுடைய மகிமை கீழேவிழுந்துகிடப்பவர்களை தூக்கிவிடுவதிலும், துக்கித்து இருப்போரை ஆறுதல்படுத்துவதிலும் பிரகாசிக்க வேண்டும். (26)

நம்மைச் சுற்றிலும் உலகில் நடைபெறும் துக்க சம்பவங்களின் புலம்பல்கள் கேட்கப்படுகின்றன. எங்கணும் தேவையிலிருப்போரையும் துன்பம் அனுபவிப்பவர்களையும் காண்கிறோம். வாழ்வில் சந்திக்கும் இன்னல்கள் வேதனைகள் ஆகியவற்றினின்று விடுதலை வழங்கி, மக்களைக் கனிவுடன் நடத்துவதும் உதவிசெய்வதுமே நமது வேலையாகும். (27)

வெறுமென பிரசங்கம் செய்வதைவிட, செயல்முறையில் மக்களுக்கு உதவும்போது அது அதிக பயனளிக்கக்கூடியதாக இருக்கிறது. பசியிலிருப்போ ருக்கு ஆகாரத்தையும் உடை இல்லாதவர்களுக்கு உடையையும் வீடற்றவர் களுக்கு தங்கும் இடத்தையும் நாம் கொடுக்கவேண்டும். நாம் இதைவிட இன்னும் அதிகமாகச் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆத்துமாவின் தேவைகளை கிறிஸ்துவின் அன்புமாத்திரமே திருப்திப்படுத்த முடியும். கிறிஸ்து நம்மிலே தங்கியிருப்பாரேயானால், நமது இதயங்கள் தெய்வீகப் பரிவின் உணர்வினால் நிரம்பி இருக்கும். கிறிஸ்து காட்டுவது போன்ற ஆர்வத்தோடுகூடிய அடைக்கப்பட்ட ஊற்றானது திறக்கப்படும். (28)

தேவையிலிருப்போருக்கு நாம் உதவிகள் செய்யவேண்டும் என்று மாத்திரம் நம்மிடம் தேவன் கேட்காமல், முகமலர்ச்சியோடு அவர்களிடம் நம்பிக்கையூட்டும் வார்த்தைகளைப்பேசி, அன்புடன் அவர்களது கரங்களைப் பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்கிறார். கிறிஸ்து நோயுற்றோரை குணமாக்கும்போது, அவர்கள்மீது தமது கரங்களை வைத்து குணமாக்கினார். யாருக்கு நன்மை வழங்கவிரும்புகின்றோமோ அவர்களுக்கருகில் மிக நெருக்கமாக அணுகி, அவர்களைத் தொடவேண்டும். (29)

நம்பிக்கையிழந்துவிட்ட அநேகர் நமது சமுதாயத்தில் இருக்கின்றனர். அவர்களுக்கு புத்துணர்வையும் மறுமலர்ச்சியையும் மீண்டும் கொடுங்கள்.

அநேகர் தங்களது தைரியத்தை இழந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் மகிழ்ச்சியின் உற்சாகமான வார்த்தைகளைப் பேசுங்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள். ஜீவ அப்பத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற தேவையில் இருப்போரும் இருக்கிறார்கள். தேவனுடைய வசனத்தை எடுத்து அவர்களுக்கு வாசியுங்கள். ஆத்தும நோயுற்ற அநேகர் இருக்கிறார்கள். எந்த உலகப்பிரகாரமான நோவகற்றும் தைலமும் அவர்களைக் குணமாக்க முடியாது. எந்த மருத்துவமும் சுகப்படுத்த முடியாது. (30)

வெளிச்சம் ஒரு ஆசீர்வாதமாக இருக்கின்றது. அது அண்டசராசரம் முழுவதற்கும் ஆசீர்வாதமாக இருக்கிறது. நன்றிகெட்ட—பரிசுத்தமற்ற—சீர்குலைந்துபோன இந்த உலகத்தின்மீது அதின் அளவற்ற செல்வங்கள் பொழிந்துகொண்டே இருக்கின்றது. அதேபோன்று, நீதியின் சூரியனாகிய இயேசுவின் வெளிச்சமும் இவ்வுலகத்தின்மீது பொழிந்துகொண்டே இருக்கிறது. பாவ இருளினாலும் துக்கத்தினாலும் வேதனையாலும் போர்த்தப்பட்டு பொதிந்துவைக்கப்பட்டிருப்பது போன்றிருக்கும் இந்த உலகமானது தேவனின் அன்பைக்குறித்த அறிவினால் வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். உட்பிரிவுகளோ, அந்தஸ்தோ அல்லது ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கோ பரலோக சிங்காசனத்தினின்று பிரகாசிக்கும் ஒளி விலக்கிவைக்கப்படக்கூடாது. (31)

நம்பிக்கையின் இரக்கத்தின் தூது, இந்த பூமியின் கடையாந்திர மட்டும் எடுத்துச்செல்லப்பட வேண்டும். யாரெல்லாம் இந்தக் காரியத்தை செய்யவேண்டுமென சித்தம்கொள்கிறார்களோ அவர்களெல்லாம் தேவனுடைய வல்லமையைப் பற்றிப்பிடித்தவர்களாக அவரோடு சமாதானம் செய்துகொள்ள விரும்புவார்கள். சமாதானம் செய்துகொள்ளலாம். அஞ்ஞானத்தில் இருப்பவனும் இனி ஒருபோதும் நள்ளிரவில் காணப்படும் இருளுக்கு ஒத்த இருளில் இருக்கத் தேவையில்லை. நீதியின் சூரியனாகிய இயேசுவின் பிரகாசிக்கும் கதிர்களுக்கு முன்பாக அந்த இருள் கண்ணிற்குத் தெரியாமல் மறைந்துபோகும். நரகத்தின் வல்லமை மேற்கொள்ளப்பட்டாயிற்று. (32)

எந்த மனிதனும் தனக்குத்தானே பெற்றுக்கொள்ளாத ஒன்றை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்கமுடியாது. தேவனுடைய செயல்பாட்டிலே மானிடர் எதையும் புதிதாகப் பிறப்பிக்கமுடியாது. எந்த மனிதனும் தனது சொந்த முயற்சியினாலே தன்னை தேவனுக்காக ஒளியை எடுத்துச்செல்பவனாக ஆக்கிக்கொள்ள முடியாது. பொற்கிண்ணத்தின் வழியாக ஆசரிப்புக்கூடாரத்தின் விளக்குகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டு, தொடர்ந்து பிரகாசமான ஒளிமிகுந்த வெளிச்சத்தைக் கொடுக்கத்தக்கதாக பரலோகத் தூதுவர்களால் பொன்னிறமான எண்ணெயானது பொன்னாலான குழாய்களினூடே பாய்ந்து

செல்லும்படியாக ஊற்றப்படவேண்டும். தேவனுடைய அன்பானது தொடர்ந்து மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுவருகிறபடியினால், அந்த வெளிச்சத்தை மற்ற வர்களுக்குப் பகிர்ந்தளிக்க அவனுக்கு உதவிசெய்கிறது. தேவனோடு விசுவா சத்தினால் இணைக்கப்பட்டிருக்கும் அனைவருடைய இதயங்களிலும் அன்பின் பொன்னிறமான எண்ணெய் தாராளமாகப் பாய்ந்தோடி, நற்கிரியைகளைச் செய்து இதயப்பூர்வமாக தேவனுக்கு உண்மையான சேவை செய்வதிலே மீண்டும் பிரகாசிக்க முடியும். (33)

பரிசுத்த ஆவியானவரின் மாபெரும் அளவற்ற ஈவில்தான் பரலோ கத்தின் வாய்ப்புவளங்கள் அனைத்தும் அடங்கியிருக்கிறது. அவரது கிருபை யின் ஐசுவரியங்கள் பூமியைநோக்கி மனிதனிடத்திற்கு பாய்ந்து வராததற்குக் காரணம், தேவன் தமது பங்கிற்கு ஒரு தடைவரம்பை ஏற்படுத்திவைத்துள்ளார் என்பதினால் அல்ல. ஆவியானவரை பெற்றுக்கொள்ளவேண்டுமென்று அனைவரும் விருப்பத்தோடிருந்தால், அனைவருமே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவார்கள். (34)

ஒவ்வொருவரும் ஒரு ஜீவனுள்ள வாய்க்காலாகயிருந்து கிறிஸ்துவின் ஆராய்ந்துமுடியாத ஐசுவரியங்களையும் அவரது கிருபையின் பொக்கிஷங் களையும் மக்களுக்கு தேவன் அளிப்பதற்கான ஒரு ஜீவனுள்ள வாய்க்காலாக இருப்பது ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் சிறப்புரிமை யாகும். அவரது ஆவியானவரையும் அவரது குணத்தையும் உலகிற்கு எடுத்துக்காட்டத்தக்க முகவர்களாக மக்கள் இருக்கவேண்டுமென்பதைவிட தேவன் வேறு எதையும் அதிகமாக வாஞ்சிக்கிறதில்லை. மீட்பரின் அன்பை மானிடர்மூலமாக வெளிப்படுத்துவதைத்தவிர வேறு எதுவும் இந்த உலகத் திற்குத் தேவையாக இல்லை. மானிட இதயங்களுக்கு மகிழ்ச்சியாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்கத்தக்கதாக பரிசுத்த தைலத்தை பாய்ச்சும் வாய்க் கால்களாக இருக்கக்கூடிய மானிடர்களுக்காக பரலோகம் முழுவதும் காத்துக்கொண்டிருக்கிறது. (35)

மாற்றங்களுக்கு உட்பட்ட ஒரு சபையாக உலகின் ஒளியான கிறிஸ்து வினால் ஒளியூட்டப்பட்டு, இம்மானுவேலின் மகிமையையுடைய சபையாக இருக்கும்படி அதற்கான எல்லா முன்னேற்பாடுகளையும் கிறிஸ்து செய்திருக் கிறார். ஒவ்வொரு ளகிறிஸ்தவனும் ஒளியின்—சமாதானத்தின்—ஆவிக்குரிய ஒரு சூழ்நிலையில் சூழப்பட்டிருக்க வேண்டுமென்பதே அவருடைய நோக்க மாக இருக்கிறது. நமது வாழ்க்கையில் ஆண்டவருக்கே உரிய மகிழ்ச்சியை நாம் வெளிப்படுத்தவேண்டுமென்று அவர் விரும்புகிறார். (36)

பரலோக அன்பு பொங்கிவழிவதின்மூலமாக ஆவியானவர் தங்கி நிலைத்திருக்கிறார் என்பது தெரியவருகிறது. தங்களை அர்ப்பணித்துக்

கொண்ட மானிடப் பிரதிநிதிகளின்மூலமாக மற்றவர்களுக்கு வழங்கப்படத்தக்க தாக தெய்வீக நிறைவு பாய்ந்தோடுகிறது. (37)

“நீதியின் சூரியனுடைய செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக் கிறது” (மல்கியா 4:2). இயேசுவின் உண்மையான ஒவ்வொரு சீடனிடமிருந் தும் ஜீவனுக்கும் தைரியத்திற்கும் உதவிக்கரமாக விளங்குவதற்கும், குணமாகுதல் ஏற்படுவதற்கும் இத்தகைய செல்வாக்கானது எங்கணும் பரவ வேண்டும். (38)

கிறிஸ்துவின் மார்க்கமென்றால் அதின் பொருள் பாவங்களை மன்னிப் பது என்ற காரியத்தைவிட மிகவும் அதிகமானது. அதின் பொருள் நமது பாவங்களை முற்றிலுமாக எடுத்துப்போட்டு, அந்த வெற்றிடத்தை பரிசுத்த ஆவியானவரின் கிருபைகளால் நிறைப்பது என்பதாகும். இதின் பொருள் தெய்வீக ஒளியூட்டுதல் மற்றும் தேவனில் களிகூருதல் என்பதாகும். இதன் பொருள் இதயத்திலுள்ள சுயம் முற்றிலும் எடுத்து வெளியேற்றப்படும். அந்த இதயம் கிறிஸ்துவின் நிலையான பிரசன்னத்தால் ஆசீர்வதிக்கப்பட்டி ருத்தல் என்பதாகும். கிறிஸ்து ஆத்துமாவில் ஆட்சிசெய்யும்போது, அங்கு தூய்மையும் பாவத்தினின்று விடுதலையும் காணப்படும். சுவிசேஷத்திட்டத்தின் மகிமையும் நிறைவும் முழுமையும் வாழ்க்கையில் நிறைவேறும். மீட்பரை ஏற்றுக்கொள்ளும் செயல் பூரண சமாதானத்தையும் அன்பையும் பூரண நிச்சயத்தின் மின்னொளியையும் கொண்டுவருகிறது. கிறிஸ்துவின் குணத்தின் அழகும் நறுமணமும் வாழ்க்கையில் வெளிப்படும்போது, அதின்மூலம், தேவன் தமது மகனை இந்த உலகத்திற்கு நிச்சயமாகவே ஒரு மீட்பராக இருக்கும்படி அனுப்பினாரென்பதற்குச் சான்றாக இருக்கிறது. (39)

கிறிஸ்து தமது பின்னடியார்களிடம் பிரகாசிக்கட்டுமென்று கூறினார். நீங்கள் கிறிஸ்துவின் கிருபையைப் பெற்றவர்களாக இருந்தீர்களேயானால், உங்களிலே அந்த வெளிச்சம் இருக்கும். தடைகளை அகற்றுங்கள். ஆண்ட வரின் மகிமை வெளிப்படையாகக் காணப்படும். ஒளியானது ஊடுருவிப் பிரகாசித்து, இருளை மறைந்துபோகச் செய்துவிடும். உங்களது செல்வாக் கிற்கு உட்பட்ட வட்டாரத்தில் உங்களால் பிரகாசிக்காமல் இருக்கமுடியாது. (40)

மானிடவடிவிலே ஆண்டவர் தமது சொந்த மகிமையை வெளிப்படுத் தும்போது, மானிடருக்கு வெகு அருகில் பரலோகத்தைக் கொண்டுவந்து விடுகிறது. இவ்வாறு ஆலயத்தின் உட்புறத்தை அலங்கரிக்கின்ற அழகானது ஆண்டவர் வாசஞ்செய்கின்ற ஒவ்வொரு ஆத்துமாவிலும் காணப்படும். இதயத் தில் நிலைத்திருக்கும் கிறிஸ்துவின் மகிமையால் மனிதர்கள் கவர்ந்திழுக்கப் படுவார்கள். இவ்வாறு, தேவனுக்காக ஆதாயஞ்செய்யப்பட்ட அநேக ஆத்து

மாக்களிடமிருந்து, தொடர்ந்து வெளிப்படும் துதிகளிலும் நன்றிகூறுதல்களிலும் வெளிப்படும் மகிமையானது, மாபெரும் கொடையாளராகிய ஆண்டவரிடத் திற்கே மீண்டும் பாய்ந்தோடும். (41)

"எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது"—ஏசாயா 60:1. மணவாளனைச் சந்திப்பதற்காகச் செல்லும் மக்களுக்கு இந்தத் தூது கொடுக்கப்படுகிறது. கிறிஸ்து மகா மகிமையோடும் மிகுந்த வல்லமையோடும் வருகின்றார். சகல பரிசுத்த தூதர்களோடும் வருகின்றார். உலகம் முழுவதும் இருளில் மூழ்கிக்கிடக்கும் போது பரிசுத்தவான்கள் வாழ்கின்ற ஒவ்வொரு இடத்திலும் வெளிச்சம் இருக்கும். அவரது இரண்டாம் வருகையின்போது காணப்படும் முதல் வெளிச் சத்தை அவர்களே காண்பார்கள். துன்மார்க்கர் அவரது பிரசன்னத்தினின்று விரைந்து ஓடும்போது, கிறிஸ்துவின் பின்னடியார்கள் களிகூருவார்கள். முற்பிதாவாகிய யோபு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை நோக்கிப் பார்த்தவராக: "அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்" (யோபு 19:27) என்று கூறினார். கிறிஸ்து தமது உண்மையான பின்னடியார்களுக்கு அனுதின தோழனாகவும் மிகவும் பழகிய நண்பனாகவும் இருந்திருக்கிறார். மிகவும் நெருக்கமான தொடர்புடையவர்களாக நிலையான தோழமையோடு அவருடன் வாழ்ந்து வந்தார்கள். கர்த்தரின் மகிமை அவர்கள்மீது உதித்திருந்தது. இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தேவனுடைய மகிமையின் அறிவைப்பற்றிய வெளிச்சமானது அவர்களிலே பிரதிபலிக்கிறது. மங்கிப்போகாத மாபெரும் வெளிச்சத்தின் கதிர்களில் இராஜாவை அவரது மகிமையிலும் இராஜரீகத்திலும் கண்டு இப்பொழுது களிகூருகிறார்கள். பரலோகத்திலுள்ள மக்களோடு அவர்கள் தோழமையோடு வாழ்வதற்கு ஆயத்தப்பட்டிருக்கிறார்கள். ஏனெனில், பரலோகத்தை தங்களது இதயங்களிலே உடையவர்களாக இருக்கிறார்கள். (42)

நீதியின் சூரியனின் பிரகாசமான கதிர்கள் அவர்கள்மீது பிரகாசித்துக் கொண்டிருக்க, அவர்கள் தங்களது தலைகளை உயர்த்தியவர்களாக, தங்களது மீட்பு சமீபமென்ற காரியத்தில் களிகூர்ந்தவர்களாக: "இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்" (ஏசாயா 25:9) என்று கூறியவர்களாக, மணவாளனைச் சந்திக்கப் புறப்பட்டுப்போகிறார்கள். (43)

"அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தமுண்டாகி: அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர்

ராஜ்யபாரம்பண்ணுகிறார். நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்... பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியானவரின் கலியாணவிருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது" என்றான். "ஆட்டுக் குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்ட வர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமா யிருக்கிறார்கள் என்றான்"—வெளிப்படுத்தல் 19:6–9; 17:14. (44) ★